கோஸ்வாமி துளசிதாஸரின்

# ராமசரித மானஸம்

அல்லது

# மானஸ ராமாயணம்

மொழி பெயர்ப்பும், கருத்துக்களுடனும்,
மனோபாவத்துடனும்

## லங்கா காண்டம்

(படங்களுடன்)

பிரசுரகர்த்தர் :

S. ஜகந்நாராயணன்
25, லேடி ஹார்டிஞ் ரோடு,
புது டில்லி-1.

*First Edition—May 1971*

மத்திய அரசாங்கத்தாரால் பொருளுதவி செய்யப்பட்டது

விலை ரூ.

---

காபிகள் கிடைக்குமிடம் :

மதராஸ்: S. ஜகந்நாராயணன்,
C-588, Ashok Nagar, Madras-33.

புது டில்லி :
S. ஜகந்நாராயணன்,
25, லேடி ஹார்டிஞ்ச் ரோடு,
புது டில்லி-1.

Rathnam Press, Madras-1.

# மதிப்புரை

"ராமனில் எத்தனை ராமன்" என்றவாறு, ராமாயணத்திலும் தான் எத்தனை ராமாயணம். துளசிதாஸரின் மானஸ ராமாயணம் வால்மீகி ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது. துளசி என்ற பெயரே புனிதமானது. அவருடைய ராமாயணமும் அவ்வாறே. விஷ்ணுவினுடைய அவதாரங்களில் ராமாவதாரம் முக்கியமானது. ராமனைவிட ராமநாமம் ஜபித்தல் சிலாக்கிய மானது. அதே போல, ராமனுடைய திருவடிகள் அவருடைய பாதுகைகள் புனிதமானவை. அவருடைய பாத தூளியினால் அகல்யை சாப விமோசனம் ஏற்பட்டது. ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகர், அவருடைய "பாதுகா ஸகஸ்ரத்தில்" பகவா னுடைய பாதுகைகளைப் பற்றி வெகு நுட்பமாக விமரிசை செய்துள்ளார். ராமராஜ்யத்தில் ஒரு சமயம் ஏதாவது கெடுதல் நேரிட்டது உண்டு. பாதுகா ராஜ்யத்தில் கிடையவே கிடை யாது. ஸ்வாமி தேசிகன் அவருடைய "ஹம்ஸ ஸந்தேசத்தில் சொல்லியபடி, ராமனுடைய அவதாரம் "மானயன் மானு ஷத்வம்" என்று சொல்லியபடி, மனிதவர்க்கத்தை கௌர விக்கத்தான்." ஸ்ரீ ராமனை பகவானாகவும் மஹா வீரனாகவும், சிறப்புக்குரிய சகோதரனாகவும் பலவாறு போற்றி வருகிறோம். இப்படி துளஸிதாசருடைய ராமாயணத்தை தெள்ளிய தமிழில் நமக்கு உதவியிருக்கும் நமது நண்பர் ஸ்ரீமான் ஜகந்நாராயணன் அவர்கள் பெரிய கைங்கர்யத்தில் ஈடுபட்டு திறமையுடன் முடித்திருக்கிறார். அவருக்கு பல்லாண்டு கூறுவோமாக.

மதராஸ்
செப்டம்பர் 28, 1971

வீ. வீ. ராமதுரை.
அட்வகேட், மதராஸ்.

# ஸ ம ர் ப் ப ண ம்

நாராயணம் நமஸ்கிருத்ய நரம் சைவ நரோத்தமம்
தேவீம் ஸரஸ்வதீம் வியாஸம் ததோ ஜயமுதீரயேத்.

ராம சரித மானஸம் எனப்படும் கோஸ்வாமி துளசி தாஸரின் மானஸ ராமாயணத்தின் ஏழு சோபானங்களில் ஆரு வது சோபானமான லங்கா காண்டத்தின் மொழிபெயர்ப்பை (கருத்துக்களுடன்) இப்புத்தகத்தில் ஸமர்ப்பித்துள்ளேன். லங்கா காண்டத்தில் பிரபு ஸ்ரீராமசந்திரன் லக்ஷ்மணனுடனும் வானர சைன்யங்களுடனும் கடலில் ஸேதுவை பந்தனம் செய்து, லங்கைக்குச் சென்று, ராவண, கும்பகர்ண, இந்திர ஜித் ராக்ஷஸாதிகளை வதம் செய்து, சீதையை மீட்ட வரலாறு கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தில் துளசிதாஸரின் ராமாயணத்தின் மொழி பெயர்ப்பு செய்யுட்களின் நம்பர்களால் வரிசையாகக் கொடுக் கப்பட்டிருக்கிறது. அந்த மொழிபெயர்ப்பில் போடப்பட்டி ருக்கும் பிராக்கட்டுக்களிலுள்ள வசனங்களும் தியானங்களும் எனது கருத்துக்களையும், மனோபாவத்தையும் விமர்சனம் செய்கின்றன.

லங்கா காண்டத்தில் ஸ்ரீராமன் லங்கைக்குச் செல்கிறான் என்பது ஒருபுறமிருக்கட்டும்; ராவணனுடைய மனோபாவங்கள் தான் என்ன? ராமனை பரமாத்மாகவறிந்த ஒரு சேதனன், விதியின் கொடுமையினால் பிறர்களுக்கு அபகாரம் செய்யும் ராக்ஷஸப் பிறவியை எடுத்து, குறுகிய காலத்தில் ராமனால் பரிகிரஹிக்கப் படவேண்டும் என்கிற நோக்கம் கொண்ட வனாக, விதியினால் வஞ்சிக்கப் பட்டாலும், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளாத வகையில், பகவானை அந்தர்யாமியாக எவ்விதம் பூஜை செய்து ஆராதனை செய்வானோ, அந்த மனோ பாவத்தினால், நான் யேறிட்டுக் கொண்டு, தியானத்தையும்,

மனோபாவத்தையும் கருத்துக்களையும், விளக்கி யிருக்கிறேன். பகவான் சம்புவினால் அனுக்ரஹிக்கப்பட்ட சேதனன் பிராட்டி யின் கடாக்ஷத்தையும், பிராட்டியின் அந்தரங்க புருஷகாரத் தினால் விபரீத புத்தியை அடைந்த ராவணனுக்கும், பதிவ்ரதா தர்மத்தின் உச்ச நிலையை அடைந்த மந்தோதரிக்கும், ராமனும் சீதையும் தாழ்ந்து போன ஜீவர்களையும் கரை யேற்றிவைக்கும் வள்ளல்கள், உதாரமனம் படைத்தவர்கள் என்று ஸ்வீகரித்துக் கொண்டு, தியானத்தையும் மனோபாவத்தையும் கருத்துக்களுட னும், இதர ராமாயணங்களையும் ஒட்டியும், இதர பிரமாணங்களை யும் தழுவி எழுதியிருக்கிறேன், எனது தோஷங்கள் பலவிருப்பி னும் என்னை மன நிறைவுடன் அனுக்ரஹிக்கும்படி தாழ்மை யுடன் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தை மேல் பார்த்து இலக்கியப் பிழைகளை திருத்திக்கொடுத்து தவிய எனது நண்பரும், புதுடில்லி தயால் சிங்காலேஜின் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீமான் R. பார்த்தசாரதி அவர்களுக்கு நான் மிக்கக் கடமைப் பட்டுள்ளேன். அதே மாதிரி, மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மேற்பார் வையாளரும், ஆக்ரா பல் கழகம் ஹிந்தி, தமிழ் பேராசிரியர் ஸ்ரீமான் Dr A. N. ராஜகோபாலன் அவர்களுக்கும், அவர்களு டைய சிறந்த மனப்பான்மையினால் யேற்பட்ட புத்தி ஆலோ சனைகளுக்கும், கருத்துக்களுக்கும், நான் மிக்கக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இப் புத்தகம் வெளிவருவதற்கு மத்திய அரசாங்கத்தினர், சிக்ஷா நிலையம் (Ministry of Education) எனக்குப் பண உதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கும் நான் நன்றி செலுத் தக் கடமைப் பட்டவனாக விருக்கிறேன். முக்கியமாக எனது நண்பர்களான ஸ்ரீமான் N. S. பட்னாகர் அவர்களுக்கும், ஸ்ரீமான் D.N. சாக்ஸீனா அவர்களுக்கும் மற்றுமுள்ள நண்பர் களுக்கும் நான் மிக்க நன்றியைச் செலுத்துகிறேன்.

ராம சரிதமானஸ மென்கிற மானஸ ராமாயணத்தின் ஏழு காண்டங்களையும் சரிவர நான் எழுதிமுடிப்பதற்கு உதவியவர்

எனது மனைவி திருமதி ராஜலக்ஷ்மி ஜகந்நாராயணன் அவர்கள். அவர்களின் மன அன்பினால், எழுதுவதற்குப் போதுமான அவகாசம் கொடுத்து, எனது முயற்சியில் உழைப்புடன் பூர்ணமாக ஈடுபட்டு, எனக்கு மிக்க உதவி செய்துள்ளனர். அவர்கள் சமீப காலத்தில் காலமானபோதிலும், அவர்களுடைய நல் நினைவாகவும் சீதா ராமார்ப்பணமாகச் செய்திருக்கும் இந்தச் சிறிய நூலை டில்லி நகரிலுள்ள தமிழர்களும், மற்றைய பிரதேசங்களிலுமுள்ள எங்களது தமிழ் அன்பர்களும் மன நிறைவுடன் வரவேற்று என்னை ஆசீர்வதிக்கக் கோருகிறேன். வாசகதோஷங்கள் பல விருப்பினும் என்னை மன்னிக்கும்படி தாழ்மையுடன் நான் அடிக்கடி அவர்களைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்தை அச்சிட்டு, எனக்குக் குறித்த காலத்தில் பிரதிகளை அளித்த M/s ரத்னம் ப்ரஸ், G. T. மதராஸ்-1. அவர்களுக்கு நான் மிக்க நன்றி செலுத்துகிறேன். இப் புத்தகத்தில் காணப்படும் படங்களை எனக்கு இலவசமாகக் கொடுத்து உதவியவர்கள் டில்லியிலிருக்கும் ஸ்ரீமத் ராமசரித மானஸ சதுஸ்ஸதி, அதாவது கோஸ்வாமி ஸ்ரீ துளசிதாஸரின் நான்காவது நூற்றாண்டு நினைவுச் செயலாளர்களின் ராஷ்டிரீய கேந்திரம். அதன் காரியதரிசியாக விருக்கும் ஸ்ரீமான் ரத்னகர் பாண்டே அவாகளுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

விரோதிக்ருது வருஷம்<br>ஆடி மாதம் 23ம் வ<br>ஆகஸ்டு 8, 1971.

*சீனிவாஸ ஜகந்நாராயணன்*<br>25, லேடி ஹார்டிஞ்ச் ரோடு,<br>புதுடில்லி–1.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| லங்கா காண்டம் | ... | 1—457 |



ஸ்ரீராமச்சந்திரன் சீதையுடன் ராஜ சிம்மாஸனத்தில் ஏறி உட்கார ஸகலரும் ஜய மங்கள கோஷங்கள் செய்தனர். முதன் முதலாக வஸிஷ்டர் ராஜதிலகத்தை அவர்களுக்கு அணிவித்தார். அவருக்குப் பின்பு ஸகல பிராம்மண ஸ்ரேஷ்டர்களும் வஸிஷ்டரின் ஆக்ஞைப்படி ராஜ திலகத்தை அணிவித்தார்கள். ஸகல மாதாக்களும் சீதா ராம தம்பதிகளுக்கு மங்கள ஆரத்திகளை எடுத்தார்கள்.

கோஸ்வாமி துளசிதாஸரால் இயற்றப்பட்ட

# ராமசரித மானஸம்

அல்லது

# மானஸ ராமாயணம்

என்கிற

# ராம தர்சனம்

# லங்கா காண்டம்

[*தியானம்*

சரணாகதவத்ஸலா, மஹாநாராயணா, மஹாலக்ஷ்மி சமேத நாராயணா, ரெங்கநாயகிஸமேத ரெங்கநாயகா, ஸ்ரீரங்கநாதரே சரணம் சரணம். அம்மா, உன்னையன்றி நான் யாரிடம் புகல் செய்வேன்! வரகோதண்ட பிரசண்டஹஸ்தனான ஸ்ரீலக்ஷ்மண ராமனைப்பார்ப்பதற்கே மிக்க பயங்கரமாக விருக்கிறது. உன்னை நினைத்து மீட்க வந்த இந்த ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் உன்னிடம் தாஸனாக விருக்க விரும்பும் என்னிடம் ஏன் இந்த கோபம்? அம்மா, நீயே அவர்களுக்குப் பதில் சொல். தாய்முலைப் பாலை விட்டு விட்டு, நான் கடைப்பால் சாப்பிடுவேனா? இந்த ராமன் ஸாம தான பேத தண்டத்தோடு வருகிறான அம்மா. எனக்கு இந்த உபாயங்கள் எதற்கு? பெருமாளுடைய சங்கல்பமாகிற நீயல்லவோ என்னையும், ஸகல ஜீவர்களையும் உன் நாயகனையும்ப்ரேரணை செய்யும், கருத வரம தரும் பெரிய நாயகி, உன்னை பரம்என்று நான் நம்பினேன். அன்று பார்த்தனுக்கும் விபீஷணனுக்கும் உகந்த சரணாகதவத்ஸலன், எவ்வளவு ஆபத்துக்கள் இருந்தபோதிலும், ராவணனுடைய சக்தி ஆயுதத்

குறிப்பு:—இந்த புஸ்தகத்தில் துளசிதாஸரின் ராமசரிதமானஸ ராமாயணத்தின் மொழிப்பெயர்ப்பு செய்யுட்களின் நம்பரில் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிராக்கட் செய்திருக்கிற தியானமும் மொழி பெயர்ப்பில் பிராக்கட்டுகளில் போடப்பட்டிருக்கும் வசனங்களும் என் மனோபாவத்தையும் துளசிதாஸரின் கருத்துக்களையும் விமர்சனம் செய்கின்றன. (மொத்தம் 804 ஸ்லோகங்கள்—ஆசிரியர்.

தின் வீச்சுதலிலிருந்து விடுவிக்கத்தோர் தட்டின் முன்பும், விபீஷணன் முன்பும் தனது விசாலமான மார்பை நீட்டினர்களே, கிருஷ்ணன் ராமன், அது போல உன்னே நம்பி வாழும் எனக்கு இந்த ராமகோபம், லஷ்மணகோபம், ஸ்ரீராமனுடைய கோதண்டம் தான் என்ன செய்யும்? அம்மா நீயே சொல். இந்த ராமன் வில் வித்தையிலோ, ராஜநீதியிலோ சதுரனுக விருந்து போகட்டுமே. நீ எனக்கு பரம சாம்பவை. விபீஷணனுக்கு லங்கையைக் கொடுக்கட்டும், எனக்கும் அயோத்தியும் வேண்டாம். நீ மாததிரம் என்னிடம் ஸன்முகனுக இருந்துவிடு. நீ மாந்திரம் என் ஹிதத்தை நாடு. ரகுவிரன் ரணதீரனுக விருந்து விட்டு போகட்டும். ராவணன்கும்பகர்ணன் இந்திரஜித் போன்ற மலேகளுக்கு அவன் இந்திரனுகவே விருந்து போகட்டும். பரசுராமரே ராமனே தரிசித்துவிட்டு, மதம் அழிந்தாரே. எனக்கு ஆவது என்ன? ஹேசீதே, உனதுஸங்கல்பம் அல்லவோ ஸ்ரீராமனுடைய தயை. நீயோ வெட்கத்தைவிட்டு ஸ்ரீராமபாதத்தின் துளசியை உபாஸிக்கிருய். அவ்விதம் இருக்கும்போது, நான் உன் மாதிரியாகவோ, [கோபிகைகள் மாதிரியாகவோ,] அந்த திவ்ய சீதாராம சரணங்களேப் பக்தியுடன் வலம் வரும் சுகசௌனக நாரதாதிகள் மாதிரி வண்டுகள்போல பிரதக்ஷணம் செய்யும் பரமயோகேந்திரர்கள் முன்பு எம்மாத்திரம்? என்னேத்தவிர தீனன் என்று இரக்கம் காட்டும் உனக்கும் அவனுக்கும் அல்லவோ உத்தம ஸ்லோகர்கள் என்கிற பெயர் தரும். ஹே மனஸே, முகுந்த சரணுரவிந்தங்களின தூதுவனுக என்னிடம் வருவாயா? அல்லது பகவத் சேஷத்வம், பாகவத சேஷத்வம் ஆகிய இரண்டையும் சேர்த்து அனுபவித்த பெரியாழ்வார், பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்து இந்த வடிவழகினுல் ' என்னுடைய ஸ்வரூப நிலேயாகிற பகவத் பாகவத சேஷத்வங்கள் ஒருககாலும் அழியாது; உன் சேவடி திருக்காப்பு என்கிற பக்தி விஷயமும்; மங்கையும் பல்லாண்டு சுடராழியும் பல்லாண்டு, அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு என்று பாகவத விஷயத்திற்கும் மங்களாசாஸனம் செய்தாரே, அந்த உபய சேஷத்வமும எனது ஸ்வரூபத்தை தளிர்த்துச்செழிக்கச் செய்கிறதே ஒழிய, உங்கள் இருவர்களிடமும் பயமுள்ளவர்களாக நிலேக்கசெய்கிறதோ, இல்லே; ஹிரண்ய கசிபையோ ராவணனேயோ, வதம் செய்யுங்கள்.

ஆனால் பிற்பாடு அதை நீங்கள் சிந்தித்துப்பார்த்த பின்பு மனம் சாந்தமடைந்தீர்களா? ஒருக்காலும் உறங்காத உமது திருவுள்ளம் எதுவோ அதன்படி நடங்கள். ஹே அந்தரியாமியே, நானு பிறந்தது முதல் அல்லது பிறக்கும் முன்பும் என்னைக் காப்பாற்றிக் கொண்டேன். நம்மாழ்வார் சொன்னரே, 'தனக்கேயாகவெனைக் கொள்ளுமிதே' என்கிறபடி உமது பலனுக்காக அல்லவா என்னை அடிமை கொள்ளவேண்டும். இதுதானே நான் வேண்டும் பயன், மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான் வாழிமனை மேகைவிடேல் உடலும் உயிரும் மங்க லொட்டே பிரான் பிராட்டி நீங்கள் அன்றே? மங்க லொட்டுள் மாமாயை திருமாலிருஞ் சோலைமேய, தங்கள் கோளேயான நீயாகியென்னை யளித்தானே, பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம் பூதம் இங்கிவ்வுயிரேய் ப்ரகிருதி மானங்கார மனங்களே என்று நம்மாழ்வார் சொல்லியபடி, அடியேனுடைய இந்த சரீரம், இந்திரியங்கள், கர்மவினைகள், பிராணன் எல்லாம் நீங்களே. உமக்கு என்னிடம் வெறுப்பு உண்டாக வேண்டுமா? அல்லது உங்களுக்கு என்னிடம் அன்பு உண்டாக வேண்டுமோ, எது சித்தமோ அதைச்செய்யுங்கள். நிர்பரம், நிர்பயம் கொண்ட எனக்கு, பிரகிருதியாகிற இருபத்துநான்காங் தத்வத்திலிருந்து விடுபட்ட எனக்கு உங்கள் திருவடிகளையே பரம பலமாகக் கொடுங்கள். உங்கள் ஸம்பந்தத்தை நித்யமாக வகித்து ஜீவிக்க அனுக்ரஹம் செய்யுங்கள். வியாஸ மார்க்கண்டேய தியாக ராஜாதிகள்போல உங்களிடம் அனுகூலனாக என்னை சிந்தியுங்கள். துளசிதாஸர் கம்பரைப்போல எனக்கு ஆத்மஸம்பந்தத்தைக் கொடுங்கள். மானஸம் விஷ்ணுசிந்தனம் செய்கிற எனக்கு ஆர்த்தோ வா, யதி திருப்தோவா என்கிற உமது வசனப்படி நான் விரோதியாக விருந்தாலும் பிராணனை விட்டாவது ரக்ஷிக்கத் தகுந்தவன் என்று சரணாகத தர்மத்தினால் பிரஹ்லாதன் விபீஷணன் பாண்டவர்களைககாப்பாற்றின மாதிரி ஹே சீதா, ஹே ராமா, முகுந்த நாராயணா, ஜகந்நாதரே, தாயே, உமாமஹேஸ்வரர்களின் கிருபையை அடைந்த எனக்கு, சீதா ராம பதங்களே தஞ்சம் என்று புகல் கொண்ட எனக்கு ரக்ஷையைத்தரவேண்டும். பெரியாழ்வார் நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.]

## ஸ்ரீ ராமசரிதமானஸம்—ஆருவது சோபானம்
## லங்கா காண்டம் ஆரம்பம்

சீதாராமா, உன்னை சிவபார்வதி தம்பதிகளை முன்னிட்டு சரணமடைகிறேன். இந்த சிவபார்வதி தம்பதிகள் காமத்தை வென்று உங்களது திருவடிகளையே பரமார்த்தம் என்று நம்பி வாழ்கிறார்கள். ஹேராமா, உங்களை நினைத்தால் எங்களது கர்மகதிகள் விலகி நாங்கள் பவஸாகரத்திலிருந்து மீட்கப் படுகிறோம். ஜனனமரணம் ஏற்படினும், உங்களது சகாயத் தினால், அபயமுத்ரையினால், நாங்கள் சாந்தர்களாக, நாராயண பரர்களாக வாழ்கின்றோம். ஏன் தெரியுமா? எங்கள் மானம், அபிமானம், சொந்த கௌரவம் ஆகியவைகள் எல்லாம் நீங்கள் தானே. அதனால் காலரூபியான எங்கள் ஸ்வஅபிமானத்திற்கும் யானைகள் போலவிருக்கும் மதத்திற்கும் தாங்கள் சிம்மஸ்வரூபி யாக வல்லவோ இருக்கிறீர்கள். உங்களை வெறும் சரீரத் தோடோ, கர்ம கதியினாலோ அடைந்திலோம். அதே போல ஞானத்தோடு மட்டும் அடைந்திலோம். (ஏனெனின் பிராணி கள் பழைய வாசனையை விடாது. குலிங்கபக்ஷி 'துணிவான செயலைச்செய்யாதே' என்று பிறருக்குச் சொல்லி, தான் சிங்கத்தின் வாயில் உள்ள உணவைப் பக்ஷிக்கு மாப்போலே, சொல்வது செய்வது விருத்தமின்றி,) உமது பாத சரணங்களே தஞ்சம். உங்களுடைய சங்கல்பமே நாங்கள் வாழும்வழி என்கிற நிர்பரன் நிர்பயம் கொண்ட பிரபன்னனுடைய வழியை ஸந்தேக மற அறிந்தோம். அதைப்பார்ப்பதாலும் அடைவதிலும் ஸந் தேகமற்ற பரமஞானத்தையும் அடைந்தோம் சரணமடைந்த வர்களைக்காப்பாற்றும் யோகேந்திரரே, உம்முடைய கல்யாண குண விசேஷங்களை யாராவது கணக்கிடமுடியுமா? ஹேகல் யாண குணங்களின் ராசிக்கூட்டமே, மஹோததி போல விளங் கும் ஸதய ஸங்கல்பராமா, (ஆஸ்ரிதவாதஸல்யராமா, ஆபத் ஸகா, மஹா கருணாம்புதே,) நீர் அபராஜிதர். அஜிதை என் னும் ஸ்ரீவைகுண்டததிறகுப்பதி. உம்முடைய ஸங்கல்பத்தை யாரும் மீற முடியாது.) ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிற குணங்கள் யாவும் பற்றப்படாத நிர்குணர். நீர் பக்தர்களுக்கு மாத்திரம் வசப்படுபவர். உமக்கு விகாரங்கள் கிடையாது. (உம்மை

1. ராமம் காமாரி ஸேவ்யம் பவபய ஹரணம் காலமத்தேப
ஸிம்ஹம்
யோகீந்தரம் ஞானகம்யம் குணநிதிமஜிதம் நிர்குணம்
நிர்விகாரம்
மாயாதீதம் ஸுரேசம் கல்வத நிரதம் பிரும்ம வ்ருந்தைக
தேவம்
வந்தே கந்தாவதாதம் ஸரஸிஜ நயனம் தேவ முர்வீச
ரூபம்.

2. சங்கேந்த்வாபமதீவஸுந்தரதனும் சார்தூல
சர்மாம்பரம்
காலவ்யால கரால பூஷணதரம்
கங்கா சசாங்கப்ரியம்
காசீசம் கலி கல்மஷௌத சமனம் கல்யாண கல்ப
த்ருமம்
நௌமீட்யம் கிரிஜா பதிம் குணநிதிம் கந்தர்ப்பஹம்
சங்கரம்.

3. யோ ததாதி ஸதாம் சம்பு: கைவல்ய மபி
துர்லபம்
கலானும் தண்டக்ருத்யோ அஸௌ சங்கர:
சம் தனோது மே.

4. லவ் நிமேஷ பரமாணு ஜுக பர்ஷ கலப ஸர
சண்ட.
பஜஸி நமன தேஹி ராம் கோ காலு ஜாஸு
கோதண்ட.

க்ஷிக்கும்படி பிரார்த்திப்பவர்களை, தோஷங்கள் இருப்பினும் அவைகளைப்பாராமல், வரைமீறி அனுக்ரஹம் செய்பவர்.) உம்மால் மாயை ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால், நீர் மாயைக்கும் பரமானவர். தேவகாரியங்களைச் செய்து முடிப்ப வரும் தேவர்களுக்குப் பதியுமாகிற ஸுரேசர். ஸாதுக்களை ஹிம்சிக்கும் துஷ்டர்களை சிக்ஷிக்கும் பிரபு. பிராம்மணர் களாலும் ரிஷிகளாலும் ஆராதிக்கப்படும் பரமகுஹ்யமான ஸ்வாமி. நீலமேகஸ்யாமளவர்ணம், ஸரஸிஜ நயனும், சுபேக்ஷ ணர் என்று சொல்லுவதற்கு தகுந்தபடி உம்மை தரிசிப்பது, உம்மால் கடாக்ஷிக்கப்படுவது, பரம மங்களகரமல்லவா? உம் முடைய பரம சௌந்தர்யமான ப்ருத்வீபதியான மஹாராஜ ரூபத்தை நான் எப்போது காண்பேன்? எப்பொழுதும் உம்மை வந்தனம் செயயும் பாக்யம் எனக்குக் கிடைக்க வேண்டும். ஸ்வாமி, உமது மங்கள விக்ரஹத்தை அடிக்கடி நான் நமஸ்கரிக்கிறேன். (1)

ஹே சங்கரபார்வதி தம்பதிகளே, சங்கரபகவானே, உம் முடைய சரீரம் வெண்மையான சங்குபோல தோஷமில்லாதது. சந்திரனைப் போல அதிகுளிர்ச்சியைத்தருவது. உம்முடைய அழகான சரீரத்தின் காந்தியோமிகமிக பிரஸித்தமாயிருக்கிறது. ஹே சங்கரபார்வதி தம்பதிகளே, நீங்கள் புலியின் சர்மத்தை ஆடையாக உடுத்திக்கொண்டு, காலத்தைப் போல பயங்கர மாகத் தோற்றம் கொண்ட சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்து கொண்டிருக்கிறீர்கள். (கைகளிலோ தம்புராவையும் பத்ம மலரையும் அணிந்துகொண்டிருக்கிறீர்கள்.) உங்கள் மனது கங்கையினிடமும் சந்திரகலையிடமும் இயற்கையான பிரியத் துடன் இருக்கிறது. அதனால் அவைகளை தரித்துக்கொண்டிருக் கிறீர்கள். ஹே காசீஈஸ்வரர்களே, என் மனத்தில் கலியினால் ஏற்படும் கல்மஷங்களை நாசம் செய்யும். நீங்கள் அல்லவா எனக்கு கல்யாண கல்பதரு. கிரிஜாபதி, உம்முடைய ஆஸ்ரித வாத்ஸல்யம், சௌலப்யம், சௌசீல்யகுண விசேஷங்களை என் னால் வர்ணிக்கக்கூடுமா? காமதேவனை எரித்த காமாந்தகரே, கந்தர்ப்பகோடி லாவாண்யங்கள் கொண்ட உமாசங்கரரே, உங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். உங்களுடைய கிருபை, அனுக்ரஹம் என்னிடம் ஸதா இருக்கவேண்டும். (2)

ஹே பிரபு சம்போ, உமது மனம் குளிர்ந்து விட்டால் எனக்கும் ஸத்புருஷர்களுக்கும் கிடைக்க அரியதான கைவல்ய மோக்ஷமாகிற உங்களுடைய சேர்க்கை ஆனந்தத்தை வெகு சுலபமாக அளிகிறீர்கள். உம்மை நாங்கள் அவமதித்தால், எங்களை நன்ருக சிக்ஷிக்கிறீர்கள். ஹே சங்கரபகவானே, தாஸன் என்று சொல்லி உம்மிடம் வந்திருக்கும் எனக்கும் சதா மங்களங்களையும் கல்யாணயோக க்ஷேமங்களையும் விருத்தி செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறேன். (3)

காலத்தின் ஸ்வரூபங்களாகிற விநாடி, நிமிஷம் பரமாணு, மணி, தினம், (பக்ஷம், மாதம், ருது) வருஷம், யுகம், கல்பம் ஆகியவைகள் என் பிரபு ஸ்ரீராமனுக்கு பிரசண்டமான பாணங்கள். காலமே தனுஷ்ஷாக அவரிட மிருக்கிறது. அப்பேற்பட்ட காலாத்மன் என்று சொல்லப்படும் சிறந்த ஸ்ரீராமனை, கோதண்டராமனை, ஹேமனஸே, நீ ஏன் பஜிக்க மாட்டேன்கிருய்? உனக்கு அவருடைய மகிமை இன்னமுமா தெரியவில்லை? (4)

ஸமுத்திர ராஜனின் வசனங்களைக் கேட்ட பிரபு ராமன் தனது மந்திரிகளை அழைத்துச் சொன்னுர். "காலதாமதம் ஏன் செய்கிறீர்கள்? சீக்கிரம் சமுத்திரத்தின் மீது ஸேதுபந்தனம் செய்யுங்கள். சேனைகள் போவதற்கு யோக்யமான பாதையைத் தயார் செய்யுங்கள்." (5)

அப்பொழுது ஜாம்பவான் அஞ்சலி செய்துகொண்டு சொன்னுர். "பானு குலத்தின் த்வஜம் போன்றவரே, உமது கீர்த்தி பிரபாவங்கள் அமிதமானவை. ஸ்வாமி, நான் சொல்வதைக் கேளுங்கள். ஸேது என்கிற நாம தேயம் தங்களுக்கு அல்லவா ஏற்பட்டது. உம்முடைய நாம ரூபத்தை நாங்கள் பஜித்து சம்சாரமாகிற கடலை சுலபமாகத் தாண்டிவிடு கிறோம்." (மனுஷ்யர்கள் உம்மை தர்மஸேதுவாக்ருதி, தங்கள் தாபங்களை நீக்குவதற்காக கடல் போன்ற ஸம்சாரத்தில் தங்களையே ஸேதுவாக அடைகிருர்கள். ஹே ஆஸ்ரிதவாத் ஸல்யரே, ஐஸ்வர்யத்தையும் மோக்ஷத்தையும் கொடுத்து எல்லோரையும் தாங்கும் தர்ம ஸேதுவே, நீங்கள் அல்லவோ எங்களுக்குக் கிடைக்கவேண்டிய ஸேது. உம்மைப் பரமார்த்த மாக அடைவது அல்லவோ மிகக் கடினம்.) (6)

"அவ்வித மிருக்கும்போது மிக்க ஸர்வசாதாரணமான இந்த ஜலத்திரள் எம்மாத்திரம்? இதைப் பந்தனம் செய்வதற்கு அதிக நேரம் பிடிக்காது" என்று ஜாம்பவான் சொல்லுவதைக் கேட்ட பவனகுமாரனாகிற என் பிரபு ஆஞ்சநேயர் சொன்னார். "பிரபு, உம்முடைய பிரதாபங்கள் இந்த சமுத்திரத்தில் இருக்கும் வடவாக்னியைப்போல தீவிரமான தேஜஸ் உள்ளன. அந்த பிரபாவமகிமைகளால் இந்தபயோ நிதி முதன் முதலாகவே வற்றப்பட்டு விட்டிருக்கிறதே, ஸ்வாமி." (7)

[*தியானம்*

ஹே சீதாராமா, நாராயணா, நான்உங்களை ஸ்ரீ குரு சரணங்களை அடிபணிந்து, அந்த சரோஜ மகரந்த சுகந்த பொடிகளை பஸ்மமாகவும், ஊர்த்வ புண்டரங்களாகவும் தரித்து, நிஜமான மனத்துடன், என் குலதைவத்தை சாக்ஷாத்கரித்து, நமஸ்கரிப்பதுபோல, உங்கள் சரணங்களை நான் அடைகிறேன். ஹேரகு வீரா, விமல யசஸ்ஸுடன் விளங்கும் ஆஞ்சநேயா, சீதா மூர்த்தியே, நான் இரக்கைகளுடன் பறந்து வேகமாக வரும் கருத்மானுக்கு எவ்விதம் உகந்தவனாக ஆவேனோ; எவ்விதம் ஆஞ்சநேய சுக்ரீவ ஜாம்பவ அங்கதாதி வானரங்கள் ஸ்ரீ ராமனுக்கு உகந்தவர்கள் ஆவார்களோ, அதுபோல சீதே உனக்கு நான் ஆகவேண்டும். (ராம கைங்கரியம் செய்யும் வானரர்களுடன் கூடிய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் உனது கைங்கர்யத்தைத்தானே செய்தார்கள்.) நீயோ அயோத்தியில் உள்ள பரத கைங்கர்யத்தைப் பார்த்துப் பிரமிக்கிறாய். உமாசம்புவேர தியாகராஜாதிகள் போன்ற பக்தர்களால் சுத்தமனஸ்ஸுடன் செய்யப்படும் ஜபம், தவம், கோபுரதர்சனம், பதினாறு பிரதக்ஷணம், சிவலிங்க அபிஷேகம், ருத்ரம் சமகம் ஆகியவைகளால் செய்யப்படும் சிவ ஆராதனத்தைப் பார்த்தவண்ண மிருக்கிறார்கள். நான் தங்கத் தாமரைபோன்ற உனது ஸ்வர்ண விக்ரஹத்தின் பாதபிருந்தங்களை உமாமஹேஸ்வரர்கள் தரிப்பதுபோல, உனது பாதங்களை என் மனதில் தரித்துக்கொண்டு, பலம், புத்தியுடன் சிறந்து விளங்கும் ஆஞ்சநேயரைப் புரமாக வைத்து, ஹேசீதே, என் காமாக்ஷியே, காமகலையில் நிபுணையே, உன் பாதங்களை பரமாக வந்து அடைகிறேன். சந்திரனை வெல்லும் ஜிதபங்கஜ

முகத்தை நான் எப்போது காண்பேன்? ஹே பாலேந்துவதனு, புல்லலோசனங்களுடன் ஆனந்த ரஸமாக ராமன் உன்னைத் தழுவும்போது நீ மனம் உவந்து அவனுக்கு அளிக்கும் இன்ப போகத்தை அந்த ஸ்ருங்காரராமன் ஸ்வீகரிப்பானே, அந்த அனுபவ ராமனிடம், உன் பாதங்களையே என் வரதானமாகக் கேட்கிறேன் என்று சொல்வாயா. ராமா சீதா, ஜய ஹனுமாரே, ஜய சுக்ரீவ வானராதி விபீஷணர்களே, உங்களுக்குக் கிடைத்த கைங்கரிய பாக்கியம், மஹா பாக்யம் அல்லவோ: விதுரரும் மாலாகாரரும் கிருஷ்ணாவதாரத்தின் கூனியும், வானராதிகளும் எல்லோரும் அனன்ய பிரயோசனமாக சீதா ராமனுடன் ஐக்ய மாவதற்கே கைங்கர்யம் செய்தார்கள். கைங்கர்யம் என்னும் பாக்யம் யாருக்கு உதயமாகிறது? முதலில் பகவானுடைய சங்கல்பம் வேண்டும். அதன் பின்பு சேதனன் ஆசார்யன் மூலம் பரதனைப்போல ஸ்வரூப ஞானத்தை அடையவேண்டும். ஸ்வரூபஞானம் அடைந்த பின்பு அந்த ஸ்வரூபம் நிலை பெற்று உஜ்ஜீவிக்கவேண்டும். அதற்கு ஸித்த உபாயமான சீதா ராம சரணங்களே பரமார்த்தம் என்று கருதிய பரதனுடைய பிரவிருத்தியைப்போல, ஸர்வேஸ்வரர்களையே உபாயமாக ஸ்வீகரிக்கவேண்டும். ஹே சீதே, அதன் பின்பு உன்னை அண்டி, உன்னுடைய பகவத் பிரஸாதம் பெற்று, ஸம்சார தாபங்களை அறுக்கும் உனது கிருபையை அடையவேண்டும். ஹே சீதே, பரிபூர்ணே, சிவே, பாஹி என்று என்னால் சொல்லப்படும், ஆராதிக்கப்படும் காமாக்ஷியே, உனது பிரஸாதத்தால் பகவத் திருவடிகளை நான் அடையவேண்டும். அதுவும் நிலைத்து நிற்க அந்த ப்ராப்ய அனுபவதசையில், கைங்கர்ய ருசி அதிகரித்து, பெருவிடாயனுக்கு குடித்தண்ணீர் ஆராதாப்போலே, உங்களை அனுபவித்த அளவில் திருப்தியேற்படாமல், கருடன் விஷ்வக் ஸேனர், அனந்தன் திருமாமகள் போல, பகவானுடைய ரூபநாம ஜபங்களைச் செய்து, தாஸ உள்ளத்துடன் பாகவதர்களை அடிப் பணிந்து, அந்த அனுபவதசையில் ஆனந்தங்களைப் பிரகடனப் படுத்தி, மீண்டும் அதே ஸ்வரூபத்துடன் "கேவலம் மதீய யைவ தயயா, மத்ப்ரஸாதலப்த மச்சரணர விந்த யுகளைகாந்தி காத்யந்திக பரபக்தி, பரஞான பரமபக்தியுடன், மதேகானுபவத் துடன் பரிபூர்ணமாக, "நித்யகிங்கரோபவ" என்கிற ராமானுஜ

ருடைய வசனங்களால், கைங்கர்ய ஆசையை வர்த்தித்து, அவனுடைய ஸ்வரூப ஞானத்துடன் பரமா பக்தி வடிவழகுடன் பிரகாசிக்கின்றது; அப்போது அவர்கள் பாகவத அபசாரப் படாமல், ஜய விஜயர்கள் அழிந்ததுபோல, பரமனுக்கு ஆப்தர் களான பாகவத அடியார்களிடமும் மித்ரபாவத்துடன் இருக்க வேண்டும். பாகவத அபசாரம் நேர்ந்திடில் எம்பெருமான் தண்டியாமல் விடமாட்டார்; "ஈஸ்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில் களெல்லாம் பாகவத அபசாரம் பொறாமை யினாலே" என்று நஞ்சீயர் அருளிச்செய்தபடி; பிரஹ்லாதன், விபிஷணன், மஹரிஷிகள் முதலான பாகவதர்களிடம் காட்டிய அபசாரங்களால், ஹிரண்யன், ராவணன் முதலியவர்களின் வதம் பகவானுடைய கையால் தொட்டு, "இவர்களை நாம் ஸங்கல்பமாத்திரம் அழிப்பது போராது, கை தொட்டு சித்ரவதை பண்ணவேணும் என்கிற எண்ணத்தினால் ஏற்பட்டது" என்று நம்பிவாழவேண்டும். அப்பேற்பட்ட மனம் புத்தியுடன், ஹே, பிராட்டி, அதுளிதபலம் கொண்ட ராமா, உங்களுக்கு "தாமர்கள்" என்று சொல்லப்படும் கைங்கர்ய பக்தகோடிகளை, கருடன் சிறிய திருவடி, அனந்தன், விஷ்வக்ஸேனன், சுக்ரீவ வானராதிகளை நான் சீதா ராமனிடமுள்ள பரதனுடைய அன்பு மனத்துடன் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ஹே உமா சம்போ, ராமேஸ்வரர்களே, நீங்கள்தான் என்னை ஆதரிக்க வேண்டும். பராசரர் அன்று சொன்ன பிரகாரம் கர்மம் என்றும் நசிக்காது. நல்ல கர்மம் நல்வினையையும் தீய கருமம் தீவினை யையும் கொடுக்கும் என்று சொன்னாரே, அவரை முன்னிட்டு சீதா ராமா, உங்களை நான் சரணம் அடைகிறேன். உங்களுடைய ஸங்கல்பம் என்னிடம் கிருபையுடன் இருக்கவேண்டும். ஆஞ்ச நேயா, உமது தயை எனக்கு எப்போது கிடைக்கும்?)

"ஸ்வாமி, தங்களுடைய சத்ருக்களின் ஸ்திரிபந்து ஜனங் களின் அழுதலாகிற பெரிய கண்ணீர்களின் தாரை பிரவாஹத் தால் இந்தப் பெரிய ஸமுத்திரம் மீண்டும் நிறம்பப்படும். அதனால், ஸ்வாமி, இந்தப்பெரிய சமுத்திரம் உப்பு ஜலமாக மாறிவிடும்," என்று ஹனுமார் சொல்ல இதர வானராதிகள் "இது என்ன சாஹஸமானவார்த்தைகள்," அதி அலங்கார மாகவும் ஸத்யமுள்ளதாகவும், (இராமனிடம் கைங்கர்ய ருசியினால்

அதிகமாக அனுபவ ஆனந்தத்தை வெட்கமின்றி பிரகடனப் படுத்துவது போலவும், அதனால் கைங்கர்யம் மட்டுமின்றி, கைங்கர்ய ஆனந்தமும் நிலைத்து நிற்கும் பாக்யம் கொண்ட அனந்த கருடவிஷ்வக்ஸேனாதிகளைப்போல,) பரம பாக்யம் அடையப்பெற்ற சிறிய திருவடியின் வசனங்கள் ஸ்ரீராமனுடைய திருவுள்ளத்திற்கு ஏற்றபடியிருந்தன. சகல வானரர்களும் முதித மனத்துடன் லக்ஷ்மணசகிதம் இருக்கும் ஸ்ரீராமனைப் பார்த்தார்கள். ஸ்ரீராமனும் அவர்களைக் கடாக்ஷித்தார். அதனால் வானரங்கள் பரமப்ரீதி உடையவர்களாக ஆனார்கள். (8)

உடனே ஜாம்பவான் நளன் நீலன் என்கிற சகோதரர்களை அழைத்தார். அவர்களிடம் எல்லாவற்றையும் சொன்னார். 'நளனே, நீலா, ஸ்ரீராமனை மனதில் தரித்துக்கொண்டு அவருடைய பிரதாபங்களை நீங்கள் புகழ்ந்து கொண்டு, ஸேதுவை பந்தனம் செய்யுங்கள். உங்களுக்குச் சிரமம் ஒன்று ஏற்படாது.'' (9)

அதன் பிறகு இதர வானரர்களை ஜாம்பவான் அழைத்து அவர்களிடம் சொன்னார். 'வானரர்களே, எல்லோரும் பரம வினயத்துடன் நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய ஹ்ருதயத்தில் ராமசரணங்களைத் தரியுங்கள். சந்தோஷத்துடன் கரடிகளும் வானரர்களும் இந்தப்பெரிய கைங்கரியத்தில் மனம் ஈடுபாடுகொண்டு, இனிதாக விளையாட்டைப்போலே இதை முடித்துவையுங்கள்.'' (10)

உடனேயே அந்த வானரவீரர்கள் தாவி ஓடினார்கள். விருக்ஷங்களையும் பர்வதங்களையும் பெயர்த்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு கல்லையும், விருக்ஷத்தையும் சமுத்திரத்தில் பதிக்கும்போது, 'ஜயரகுவீர்,' 'ஜயரகுவீர்,' என்று அந்த ராம பிரதாபங்களை உதவிக்கு அழைப்பது போலச் சொல்லிக்கொண்டு, ஸேதுவுக்கு அடித்தளம் பாவினார்கள். (மஹாபாக்யசாலிகள், அவர்களுடைய ராமசேது இன்றும் என்றும் எனக்கும் மற்றவர்களுக்கும் கலங்கரைதீபம் போல அல்லவா விளங்குகிறது.] (11)

பெரியபெரிய பாறைகள் மலைகளின் உச்சிகளிலிருந்து கொணர்ந்து வரப்பட்டன. அவர்கள் கொண்டுவந்த சாகஸமான செயல், லீலைமாதிரி விளையாட்டாக விருந்தது. ராம

பலம், லக்ஷ்மண உள்ளம் கொண்ட வீரர்கள் தாங்கள்கொண்டு வந்த விருக்ஷங்களேயும் பாறைகளேயும் நளன் நீலனிடம் ஸமர்ப்பித்தார்கள். அந்த மஹானுபாவர்கள் (அஸ்வினி குமாரர்களேப்போல காரியத்தைச் செய்வதில் ஸாமர்த்திய முள்ளவர்களாக) அழகான ஸேதுவை, (என் தர்மஸேதுவை, ராமேஸ்வர கங்கையை,) புனித சீதாராம சரணங்களேப் பதிப்பதற்காக நிர்மாணித்தார்கள். (அப்பேற்பட்ட நளன் நீலனே உமா மஹேஸ்வரர்களேப்பணியும் நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். எனக்குக் கண்கள் கொடுக்கும் அஸ்வினிதேவர்கள் அல்லவா அவர்கள்.] (12)

[தியானம்

ராமா, சீதா, மஹாலக்ஷ்மியே, நாராயணா, உங்கள் திருவடிகளே சரணம். சீதையையும் ராமனேயும் சேர்த்து வைத்த ஜகத்ஸேதுவே சரணம். ஜயஹனுமான், ஞானகுண ஸாகரம், ஜயகபீஸ, உமக்கு ராமதாஸர்கள் என்று சொல்லப்படும் சாதுக்கள் உயிர் ஸ்தானமாக விளங்குகிறார்கள். ராம தூதன் என்று உம்மை அழைத்துக்கொள்வதில் உமக்கு மஹா பிரியம். நீர் வாயுஸுதனுக விருக்கிறபடியால் சலனமும் கதியும் பலமும் தங்கு தடையின்றி அமிதமாக விளங்குகிறது. ஹே அஞ்சனபுத்ர, பவனஸுத, மஹாவீரா, உம்முடைய விகரமம்வஜ்ரத்தைவிட மிகமிகப்பெரியது. நீர்மனம் வைத்தால் குமதி படைத்தவர்களே ஸுமதியாகச் செய்கிறீர். உம்முடைய சரணங்கள் எனக்கு சம்சாரத்தில் ஜகத்ஸேதுவாக விளங்குகின்றது. உம்முடைய காதுகளின் குண்டலங்கள், அழகான கேசபாசங்கள், வஜ்ரம் போன்ற கைகள், அர்ஜுனனுடைய தேரின்மேல் பிரகாசித்துக்கொண்டிருந்த உமது வானரகொடி ஆகியயாவையும் எனக்கு சங்கர பார்வதிகளேப் பார்த்தால் என்ன சந்தோஷம் ஏற்படுமோ, அது போல உமது தர்சனத்தால் சந்தோஷத்தைத் தருகிறது. பிரபு, கேஸரி நந்தனு, உம்முடைய தேஜஸ்பிரதாபங்கள் ஜகம் முழுவதும் வந்தனம் செய்யப்பட்டும் ஸர்வ ஸம்மதமாக விளங்குகிறது. உம்முடைய ஞான ஐஸ்வர்யங்கள் பாண்டித்யங்கள், கெட்டிக்காரத்தனம், சீதா ராமர்களிடமும், அவர்களே அண்டின பரமபாகவதர்களிடமும்

கீர்காண்பிக்கும் அன்பு, பேரானந்தம், கருணை, மிக மிக பிரஸித்தம். ஹே ஆஞ்சநேயா, உம்முடைய பீமரூபம், உம்முடைய சேஷ்டிதங்களாகிற நீர் சஞ்சீவியைக் கொணர்ந்தது ராமலக்ஷமணர்களை ஸேதுவில் நடக்கும் போது நீர் தோளில் தூக்கிச்சென்றது, மிகமிக அற்புதமாக விருக்கிறது. ரகுவீரன், ரகுபதி, ஜானகி, ப்ரியபரத லக்ஷ்மணன் சதருக்னன் என்று பெயர்களைச் சொன்னவுடனேயே, உம்மை அறியாமல் ஆனந்த சந்தோஷமடைகிறீரே, அது உம்முடைய தாஸ உள்ளத்தைத் தானே காண்பிக்கிறது. உம்முடைய கீர்த்தி பிரபாவங்களை ஸனகாதிகள் பிரும்மாதி முனீஸ்வரர்கள், நாரதர் சாரதா, ஆதிசேஷன், குஹன், யமன், குபேரன், இந்திரன், வருணன் ஆகிய திகபாலர்கள் எப்பொழுதும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஹே சுக்ரீவமந்திரி, உமது அரசனுக்கு பயத்தைத்தெளிவித்து அவனுக்கு ராமசரணங்களில் பற்றுதல் ஏற்படக்காரணமாகவிருந்த ஹே ஹே துவே, துளசிதாஸரைப் போலவும், கம்பரைப் போலவும் என்னையும் சீதாராம சரணங்களில் ஒரு துளசி தளமாக நீ அர்ச்சிக்க மாட்டாயா? என்னிடம் கருணை செய்யமாட்டாயா? எல்லோரும் உம்மை பரம உபகாரி என்றும் ராம பக்தர்களுக்கு ராஜபாதையைக்காண்பிக்கும் மார்க்கதரிசி என்றும், லங்கேஸ்வரனை விபீஷணனுக்கும் லீலையாக உமது பாகவத உள்ளத்தைக் காண்பித்த கிருபாளு என்றும் நான் அறிவேன். மஹாவீரா, உம்மைப் புகழ்வதால், பூதபிசாச பயம் கிடையாது. உம் நாமத்தை ஜபிப்பதால் ரோகங்கள்வராது. சகலபீடைகளும் உடனேயே அழிந்துவிடும். ஸங்கடமோசன ஹனுமான், கஷ்டங்களும் ஆபத்துக்களும் விலகும். பரஸித்தி உடனேயே ஸம்பவிக்கும். ஸாதுக்களின் சேர்க்கையை அடைவிக்கும். ராமரஸாயனம் உம்முடைய அனுக்ரஹத்தால் குடிக்கலாம். ஹேரகுபதி ஜானகிதாஸா, எனது ஜன்மதுக்கங்களைப் போக்கும் ஔஷதியே, பலவீரா, ஹனுமான், கோஸாயி கிருபை செய்யும். ஹேகுருதேவ், உம்மை ஆயிரம் தடவைகள் பிரதக்ஷணம் செய்து நமஸ்கரிக்கிறேன். உம்முடைய ஸ்வரூபம் என் மனத்தை விட்டு அகலாமலிருக்கும்படி பக்தி வினயத்துடன் பிரார்த்திக்கிறேன். கௌரீஸா, துளசிதாஸப்பிரியா, கம்பரின் அண்ணலே, என் ஹ்ருதயநாதா, என் பாவங்களையும்

பயங்களையும் போக்குவீராக. மங்களமூர்த்தி, ராமலக்ஷ்மண சீதாஸஹிதம் என் ஹ்ருதயத்தில் வசிப்பீராக. உமாமஹேஸ்வரர்களின் ஐக்யஸ்வரூபமே, ஸர்வரூபதியே, வாரும் என்னிடம் தயையுடன் வாரும். ராமசீதா ஸேதுவே, என்னிடம் பூர்ண கிருபையுடன் வாரும்.]

வானரங்கள் பெரிய பெரிய விருக்ஷங்கள் மலை பர்வதங்களின் கற்களைக்கொணர்ந்து, நளன் நீலனிடம் ஸமர்ப்பிக்க, அவர்கள் ராமசீதா லக்ஷ்மண ஆஞ்சநேய உள்ளத்துடன் ஸேதுவைக்கட்ட ஆரம்பித்தனர். அவர்கள் அதைச் சீக்கிரமாகவே முடித்து விட்டார்கள். அந்த ஸேதுவை நிர்மாணம் செய்த அவர்களுடைய அழகான வேலைத்திறத்தையும் அதிசீக்கிரமாகவே செய்து முடித்ததையும் பார்த்தார் கிருபாஸிந்து ஸ்ரீராமன். அவருக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. உத்தமமானதும் மனத்திற்குப் பிடித்தமான வசனங்களை அந்தப் பிரபு சொன்னர். (13)

("இந்த தரணியாகிற பூமி உத்தமமான வாசஸ்தலம். இதனுடைய மகிமைகள் ஆனந்தமாகவும் விவரிக்க முடியாதபடி காலவரையிலும் அளவுவரையிலும் அதிகிரமித்து பரிமளத்துடனிருக்கின்றன. நான் இந்த அழகான பூமி பிரதேசத்தில் இந்த உத்தமமான ஸ்தலத்தில், ராமேஸ்வரத்தில், என் ஹ்ருதயத்தில பரமகல்பதருவைப்போல விளங்கும் உமாமஹேஸ்வரர்களின் (ஐக்யரூபமாகிறதும், காடோபகூட ஸ்தலிங்கத்தை என் சம்பு பெருமானை, எனக்கு ஸ்வாமியாகவும் தாஸனுகவும், மித்திரனுகவும் அருள்வள்ளலாகவும் ஸர்வமாகவும் விளங்கும்) ராமலிங்க ஈஸ்வரரை, இந்த புண்ணியபூமியில் என்றும் அழியாதபடி ஸர்வகாலத்திலும் உபயோகப்படும்படி பிரதிஷ்டை செய்து ஸ்தாபிக்கிறேன். இது என்னுடைய ஹ்ருதயத்திற்குகந்த மஹாஸங்கல்பம்." (14)

ஸ்ரீராமசந்திரனுடைய புனிதமான வசனங்களைக்கேட்டு சுக்ரீவமஹாராஜா அநேக தூதாகளை அனுப்பி, பரமஸ்ரேஷ்ட முனீஸ்வரர்களை, (வசிஷ்ட வாமதேவ கௌதம விஸ்வாமித்திர மார்கண்டேய, வ்யாஸ, சுக அகஸ்திய, அத்ரி போன்ற ஸப்த ரிஷிகளை) அழைத்துவர தூதாகளை அனுப்பி வைத்தான். அவாகளுடைய அனுகரஹத்தினுல் சிவலிங்கத்தைப் பிரபு

பிரதிஷ்டை செய்தார். வினயபூர்வமாக பூஜைசெய்தார். அதன் பிறகு நிர்மால்யத்தை ஸ்வீகரித்துக்கொண்டு பிரபு மிக்க கருணையுடன் அருள்வாக்கு செய்தார். "எனக்கு பகவான் சிவனைப்போல ஸமமான பிரியன், ஹிதகாரி ஒருவரும் இல்லை." (15)

"எவர்கள் சிவத்ரோஹிகளோ, அவர்கள் எனக்கும் பரம த்ரோஹிகளாக ஆவார்கள். அவர்கள் எதைச்செய்த போதிலும் நான் அவர்களால் ஸ்வப்னத்தில்கூட அடையப்படமாட்டேன். உமாசங்கரர்களைப் பராங்முகர்களாகப் பார்க்கும் விமுகர்களிடம் நான் அவர்களின் பக்திக்கு கட்டுப்பட்டவனாக, ஒருக்காலும் விளங்கமாட்டேன். அவர்கள் அல்ப புத்தி உடையவர்கள். அவர்கள் நரகம் செல்லுவதற்குத் தகுந்தவர்கள். அவர்கள் மஹா மூர்க்கர்கள்." (16)

"ஆனால் எவர்களுக்கு சங்கரர் பார்வதி மஹாபிரியமோ, எனக்கு அவர்கள் சத்ருக்களாக இருக்க விரும்பினாலும் கூட, அவர்களுக்கும் நல்ல கதியை நான் கொடுப்பேன். சிவனுக்குத் த்ரோஹம் செய்து கொண்டு, என்தாஸர்களாக வாழவிரும்பும் மனுஷ்யர்களுக்கு கல்ப காலந்தோறும் பயங்கரமான நரகத்தைத் தான் கொடுப்பேன்." (நான் என்னை அவமதித்தவனை மன்னிப்பேன். ஆனால் உமாமஹேஸ்வரர்களை அவமதித்த வர்களை ஒருக்காலும் மன்னிக்கமாட்டேன். அவர்களுக்குக் கொடும் நரகவாசத்தைத்தான் நான் அளிப்பேன்." (17)

"எவர்கள் என்னால் நிர்மாணம் செய்யப்பட்ட ராமேஸ்வர லிங்கத்தை, ராமலிங்கஸ்வாமியை தரிசனம் செய்கிறார்களோ, அவர்கள் சரீரம் போன பின்பு, என் உலகமாகிற வைகுண்டத்தை அடைகிறார்கள். எந்த மஹானுபாவர்கள் கங்கா ஜலததைக் கொண்டு வந்து இந்த ராமலிங்கமூர்த்திக்கு அபிஷேகம் செய் கிறார்களோ, அந்த மஹனீயர்களுக்கு என்னுடைய ஸாயுஜ் யத்தை நான் அளிக்கிறேன்." (18)

[தியானம்

ஹே உமாதலக்ஷ்மி, சீதே, நீ எவ்விதம் ராமநாமரூபத்தில் மறைந்து கொண்டு சீதாராம பக்தர்களை கடாக்ஷிக்கிறாயோ, அது போல பகவான் சம்புவம் பஞ்சதசாக்ஷரி மந்திரததில்

புகுந்து அரூபியாகி, என்னைப்போன்ற ஸ்ரீவித்யா உபாஸகர்களை அருள் செய்கிறார். இந்த ராம சீதா ஸம்பந்தம், உமாசங்கர ஸம்பந்தம் பெற்ற ராம, பஞ்சதசாக்ஷர மந்திரங்கள் ஒன்றாக ஒன்று இணைந்து நாதஉபாஸகர்களான சுக்ரர் ஆஞ்சநேயர், தியாகராஜர் துளசிதாஸர், ஸ்யாமா சாஸ்திரி, முத்துஸ்வாமி தீக்ஷிதர் போன்றவர்களின் மதுரமான சங்கீதமும், ஸ்வரமும், ஸ்ருதியும், பாவமும், ராகமும், சாக்ஷித்யமும் பக்த ஹ்ருதயமும், பக்தஸல்லாபர்களான என்நாத ஸௌந்தரியை, வரலக்ஷ்மியை, மத்யமும் பஞ்சமும் ஷட்ஜத்தை அனுசரித்து, ஒட்டி நடப்பது போல அணைத்து இருக்கிறது. உமா, உன் கையில் வர பத்மமும், சம்புவின் கையில் தம்புராவும், விருஷபமாகிற நந்தியின் ஆச்சர்யமான இன்பசுகமும், தீனஜனரக்ஷண நிபுணர்களான உங்களை ராமேஸ்வரத்தில் பகவத் ஸம்பந்தம், பாகவத ஸம்பந்தத்திற்கு உதவும் மஹாப்பேருகிய ஆசார்ய ஸம்பந்தத்தைப் போல அல்லவா விளங்குகிறது. ஒருவனுக்கு பகவத் ஸம்பந்தம் கிடைத்துவிடும்; ஆனால் அதை நிலைதது நிறுத்துவதற்கு ஆசார்ய ஸம்பந்தம் மிக்க அவசியம். ஆசார்யன் பரம காருணிகன்தான். அவர் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ப, நிர்ஹேதுகமாக, "ஐயோ, பகவானால் தள்ளப்பட்ட இவனைப் பொருளாக்கவேண்டும்," என்று திருவுள்ளம் பற்றியிருக்கும் உத்தாரகம் என்கிற விரதம் "இவன் நம்முடையவன், நம்மையன்றி யாரிடம் இவன் புகல் கொள்வான்? என்று சொல்லுமாப் போலே, ஆசார்யன், மற்ற உபாயமின்றித்தவிக்கும் சேதனனைக் கட்டி அணைக்கிறான். நெடுநாளாக, நான் எனக்கு நிர்வாஹகன் என்று துரபிமானத்தினால் ஈஸ்வர அபிமானத்தை அழித்துக்கொண்ட சமயத்தில், ஆசார்ய ஸம்பந்தத்தைத் தவிர உஜ்ஜீவிக்க உபாயம் ஒன்றும் இல்லை என்று நம்பிள்ளை திருவடிகளிலே ஸகல சாஸ்திர தாத்பர்யங்களைக் கெட்ட வடக்குத் திருவீதிப்பிள்ளை பலகாலும் எனக்கும் என்னைப் போன்ற வைஷ்ணவ தாஸர்களுக்கும் சொல்லியிருக்கிறார். அதே போல, ஆசார்யனை உபேக்ஷித்து, பரத்வத்தையும். வ்யூஹத்தையும் விபவத்தையும் அர்ச்சையையும் அந்தர்யாமியையும் விரும்பக்கூடாது. மகத்துவமான அந்த ஆசார்ய ஸம்பந்ததனை நிலைநிறுத்துவது பாகவத ஸம்பந்தம் ஒன்று தான். வளருவ

தொரு கொடியை கொள் கொம்பிலே சேர்க்கும் போது, சுள்ளிக்கால் அவஸ்யமாவது போலே, கோல் தேடியோடுங் கொழுந்து போல அந்த சேதனன் ஆசார்யன் திருவடிகளை அன்வயிக்கும் போது, அந்த ஆசார்ய ஸம்பந்தத்தை பெற வைப்பது பாகவத ஸம்பந்தம் அன்றோ? அந்த பாகவத ஸம்பந்தத்தாலே, ஆசார்ய பிராட்டியாகிற பகவத் ஸம்பந்தத்தை நிலைக்கச் செய்யலாம். நிதய ஸாமகானம் கேட்கப்படுமிடமாகிற பரம பதத்தில், ஹாவ்ஹாவ் என்று ஸாமகானம் கேட்கப்படும் சமயமும், அதே மாதிரி அந்த ராமேஸ்வர தீர்த்தத்திலும், இன்னும் பாகவத ஆசார்ய பகவத் ஸம்பந்தத்தைப் பெற வைக்கும் புண்ணியஸ்தலங்கள் தீர்த்தங்கள் ஆகிய எல்லாப் ப்ராப்ய ஸ்தலங்களிலும் ஆசார்யனே உபேயமாக விளங்குகிறான். ராமனையும் சீதையையும் நமஸ்கரித்த பரதன் ஆசார்யனுகிற திருவடிகளைப்பற்றி, அந்த உபேயத்தால் ஒரு பக்கம் கௌசல்யாதி பக்தர்களையும், பாகவத ஸ்ரேஷ்டர்களையும், மற்றொரு பக்கம் சீதாராம லக்ஷ்மணனையும் நினைத்து ஜீவிக்கச் செய்தான் அன்றோ: இந்த ஆசார்ய அபிமானம் என்று சொல்லப்படும் குருபாதுகைகள் அவனுக்கும் கௌஸல்யாதி பாகவத உள்ளங்களுக்கும், அயோத்யாவாஸிகளுக்கும் உத்தாரகமாகவும் உபேயாமகவும் விளங்கினதன்றோ! அந்த பாதனுக்கும் கௌஸல்யையின் பக்தி உள்ளம் வளரும் கொடியை கொள் கொம்பிலே சேர்க்கும்போது சுள்ளிக்கால் எவ்விதம் உதவுபோ, அது போல கௌஸல்யையும் அயோத்யா வாசிகளும் உதவினார்கள். ஆசார்யனே இந்த சேதனனுக்கு ஞானமும் அனுஷ்டானமுமாகிற உபாய உபேயமாக விளங்குகிறான். அவனே இவனைப் பாதகங்களிலிருந்து விலக்குகிறான். இவ்விதம் பகவத் பாகவத ஆசார்ய அபிமதங்கள் இணைந்து சேர்ந்து வாழும் சுத்தமதுரமானஸ்வர ஸ்ருதிலயம் பாவம் கொண்ட ஸாஹித்யத்துடன் இணைந்துபோவது போலவும், சகல ஸ்வரங்களும் பஞ்சமும் மத்யமும் ஷட்ஜத்தைத் தழுவி வாழ்வது போல வல்லவா, இந்த சம்பு, உமை நந்தியுடன் கூடிய மஹேஸ்வரர் லிங்கரூபமாகவும், பஞ்சதசாக்ஷரி ராம மந்திரங்களின் ஸ்வரூபமாகவும் விளங்குகிறார்கள் அன்றோ. ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப, அகலகில்லேனிறையு

மென்றலர்மேல் மங்கை யுறைமார்பா, கோலத்திருமா மகளொடுன்னைக் கூடாதே சாலப்பல நாளடியேனின்னம் தளர்வேனே, என்கிறபடி பெரிய பிராட்டியின் விலக்ஷணமான ஶ்ருணோதி, ஶ்ராவயதி, ஶ்ரீயதே, ஶ்ரயதே, ஶ்ரயந்தீ, ஶ்ரியமாஶ் ச ஶ்ருணோதி ஶ்ருண்வதீமபி என்கிற ஸ்ரீ சப்தங்களினால் அறியப்படும் அந்த சேஷ சேஷி பாவத்துடன் சம்பு ஆசார்யனாகவும், கணவனாயும் சரீரமாயும், ஆத்மாவாயும், பகவானாகவும் 'ஸ்வ: ஸ்வ:' பெற்று, ஸமரஸ பரானந்த பரயோ: என்று சொல்லும்படி ஸமரஸப்பட்ட என் ஆசார்யர் ஆனந்த பைரவர் ஆனந்த பைரவி என்கிற உமா மஹேஸ்வர்களை, ராமசீதாவை, லக்ஷ்மிநாராயணரை, ராமலிங்க ஸ்வாமியை, ராமேஸ்வரத்தை, ரங்கதாமை பிராட்டி பகவான் ஆகிற இருவர்களுக்கும் ஸமமாக நிலைபெற்றுள்ளது என்று நான் அறிகிறேன். அன்று துளசிதாஸர் கௌஸல்யை வஸிஷ்டர் அயோத்தி மாஜனங்களின் வார்த்தைகளைக் கேட்டும் பகவத் சம்பந்தம் நிலைக்க, பாகவத ஆசார்ய ஸம்பந்தம் எவ்விதம் அவஸ்யமாகக் கருதினாரோ, அதிலும் ஆசார்ய ஸம்பந்தமே உபேயமாக எவ்விதம் வைஷ்ணவர்களுக்கு விளங்குகிறதோ, அதுபோல அல்லவா ஸச்சிதானந்த மயமான சிவனும் சக்தியும் ஸமத்வம் பெற்று ராமலிங்கமாக நிற்கிறார்கள். பூஜையிலும் ஸமம்; அதிஷ்டான ஸாம்யம; நிருத்யம் முதலியவற்றில் ஸாம்யம்; சிவசிவா, பைரவர் பைரவி முதலிய நாமங்களால் நாம ஸாம்யம், சிவப்பு நிறம், முக்கண், சந்திரன் இவைகளால் ரூப ஸாம்யம்; கருணை தயை, ஸ்ருஷ்டி ஸம்ஹார விவகாரங்கள் ஆகியவைகளிலும் ஸமரஸம்பரானந்தம். இவைகளுக்கு இருப்பிடமான உமாமஹேஸ்வரர்களே, என் சீதாராமா, ரங்கதயிதே, காமாக்ஷி ஏகாம்பரேஸ்வரரே, வரலக்ஷ்மி வரதனே, உங்களை நான் அடிக்கடி ஆசார்யர்மூலம் சரணம் அடைகிறேன். தாயே, அபிமுக்யனாக வந்திருக்கிறேன். ஸ்வாமி, ரக்ஷிக்கவேண்டும். ராமேஸ்வரரே, பர்வதநாயகியே, ஸம்ரக்ஷிக்கவேண்டும்.]

"எந்த மஹானுபாவன் தனது அபிமானத்தை விட்டு கபடமின்றி நிஷ்காம புத்தியுடன் ராமேஸ்வரரைப் பூஜை செய்கிறானோ, அந்த மஹாத்மாவினிடம் உமா சங்கரர் பிரஸன்னமடைந்து, அவனுக்கு என்னிடம் அத்யந்த பக்தியை அளிக்கிறார்கள். எந்த புண்ணியவான் என்னால் நிர்மாணம் செய்யப்

பட்டுள்ள இந்த ஸேதுவை தர்சனம் செய்கிருனே, அவன் ஒரு வித பரிஸ்ரமமின்றி பவஸாகரத்தை தாண்டிவிடு கிறன்.'' (19)

ராமனுடைய புனிதமானதும் ஸத்யமான வசனங்கள் எல்லோருக்கும் பிரியமாகவும் ஸர்வ ஸம்மதமாகவும் இருந்தன. அதன் பிறகு மஹா முனிவர்கள் சந்தோஷம் கொண்டு தங்கள் ஆஸ்ரமத்திற்குத் திரும்பினர்கள். சம்பு பகவான், (என்தாய்) உமையிடம் சொன்னர்; ''கிரிஜா, ரகுபதிக்கு மனம் பிடித்து விட்டால் அவர் எதைத்தான் செய்யமாட்டார்? அவரை அண்டி வசிக்கும் சரணுகதர்களின் யோக க்ஷேமத்தை அவர் அல்லவோ வகிக்கிறர். அவருடைய ரீதியே என்னைப் போனறவர்களே ஆச்சர்யப்படும் படிக்கும், அதிப்ரீதியை வளர்த்துக் கொண்டு போவதற்கும் ஹேதுவாக விருக்கிறது. ஆச்சரிடம்.'' (ஸ்வாமி, உமா மஹேஸ்வரர்களே, துளசிதாஸருடைய தாஸனுகிற நான் உங்களை ஸர்வ பாவத்துடன் வணங்குகிறேன். ஹே பிரபோ, எங்களிடம் கருணையுடன் ஸதா இருக்க வேண்டும். தர்மஸேதுவே, விருஷபகொடி யோனே, மஹாலக்ஷ்மி அம்மா, உமா, சீதா, மஹேஸ்வரரே, கிருபை செய்ய வேண்டும்.) (20)

மஹாகாரிய சாமர்த்தியமுள்ள நளனும் நீலனும் அழகாக ஸேதுவை நிர்ணயித்தார்கள். ராமசந்திரனுடைய பரம கிருபையினல் அந்த மஹானுபாவர்களுடைய சுபமான கீர்த்தி பிரபாவங்கள் உலகம் முழுவதிலும் பரவின. (அப்பேறபட்ட அஸ்வினி குமாரர்களை நான் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன்.) ''எங்கேயாவது ஸ்வாமி, கற்கள் ஜலததில் மிதக்குமா? கற்களின் ஸ்வபாவம் தாங்களும் அமிழ்ந்து போவதுமன்றி, அவைகளுடன் கூடவிருக்கும் பொருள்களையும் ஜலத்தில் அமிழ்த்தி விடுகின்றது. ஆனல் இந்த ராமஸேதுவோ தானும் மிதந்து கொண்டு, தன்னை நம்பினவர்களையும் ஓடம் போல அக்கரை கொண்டு சேர்க்கின்றது. இதைவிட ஆச்சரியம், அஹங்கார புத்தியுள்ள ராவணனுக்கும் புரியும்படி இருக்கும் மஹா சாமர்த்தியம் என் பிரபு சீதாராமனுகிற ஸ்ரீராமனல் தான் முடியும்? இதைவிட ஆச்சர்யம், ஸாவஸ்வாமித்வம் கொண்ட மஹத்தான காரியம் யாது இருக்க முடியும்? (அன்று

கிருஷ்ணவதாரத்தில் அர்ஜுனன் என்கிற கன்றுக்குக் கீதை யென்கிற ஸுதாவை நமக்குப் பயன் படுவதின் பொருட்டு, நமக்கு அளித்தான். இன்றோ அந்த சீதையைத் தேடிப்போன ராமன் ஸேதுவை நமக்கு அளித்தான். இதைத்தானே என் குருநாதர் தியாகராஜர் புகழ்ந்து, "ராமா, உனக்கு ஸமமான தெய்வம் யார் இருக்கக்கூடும்" என்று சொல்லி மகிழ்கிறார்.] (21)

இந்த பாறைகளின் ஸ்தம்பனத்தை ஜலத்தில் நிறுத்திக் காட்டின மஹாபிரபு, மஹாகார்யம செய்த என் ராமனை நான் எவ்விதம் புகழ்வேன்? [அந்த சீதாராமன் என்னையும் எங்களையும் காப்பாற்ற மாட்டாரா?] அவருடைய சங்கல்பத்தைத் தவிர இதில் என்ன விசேஷமிருக்கிறது? பாறைகளின் குணங்களோ அல்லது வானரங்களின் ஸாமர்த்தியமோ அல்லது வருண னுடைய பிரதாபங்களோ ஸேதுவை இந்த ஜலநிதியில என்றும் அழியாதபடி மிதக்கச் செய்யவில்லை. ராம கிருபாளுவின் திருவுள்ளம் தான் அந்தப்பாறைகளை மிதக்கச் செய்து, [ஸம்சார தாபங்களில் வாடும் நமக்கு] அக்கரை சேர்க்கும் ஓடம் போல ரக்ஷித்து உதவுகிறது. [ஹே தர்ம ஸேதுவே, ஜகத் ஸேதுவே, எங்களிடமும் கருணையைக்காட்டு.] (22)

ஸ்ரீரகுவீரனுடைய வீர்ய பிரபாவத்தினால் கற்கள் சமுத்திரத்தில் மிதக்கின்றன. ஹேமனஸே, அப்பேற்பட்ட பரம உதார மனமுள்ள ஸ்ரீசீதா நாயகனாகிற ராமனை விட்டு விட்டு, மந்த புத்தியை அடைந்து, வேறு எவர்களை பிரபுவாகவும், அண்ணலாகவும் ஏன் பஜிக்கிறாய்? (நாராயணா, உம்முடைய பிரபாவங்கள் அனந்தம். அன்று சிறு பிள்ளையாக விருக்கும் போது கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தாய். இன்றோ, ராமஸேதுவை எனக்குக் காண்பித்துக் கொடுத்தாய். எனக்கு என் ஸ்வாமி தன்னைத்தானே காட்டிக் கொடுத்தாரே, இதை விட பரம உபகாரம் இனி நான் எதை அவரிடமிருந்து வேண்டப்போகிறேன?) (23)

அதுமாத்திரமா, இந்த நளன் நீலன் ஆகிய இவர்களால் நிர்மாணம் செய்யப்பட்ட ஸேது மஹாபலத்துடன அழியாத படிக்கும் (திருவிக்ரம ராமனின் பாதங்களையும் தாங்குவதற்கும் அனந்தனாகிற லக்ஷ்மணனுடைய வீரியத்தையும் தாங்கு

வதற்கும்) மிக்க பலமுள்ளதாக விருந்தது. அதிக திருடமாகவும், அதுனித பலத்துடனுமிருந்தது. கிருபாநிதி பகவான் ராமன் இதைப்பார்த்தார். மனத்தில் சந்தோஷம் கொண்டார். சீதையைக்கூட ஒரு கணம் மறந்தார். அந்த வானரசேனைகள் ஸேதுவின் மேல் நடந்து செல்லும் காக்ஷிகளையும், அந்த கரடி சைன்யங்களின் வீரகர்ஜனைகளையும் யாரால் வர்ணிக்க முடியும்? அந்த யுத்த வீரர்களின் ஸமுதாயம் சுத்த வீரத்துடன் விளங்கியது. (24)

கிருபாளு, உதாரகுணஹ்ருதயன். வஞ்சகமில்லாத மஹாத்மா. கருணையையும் அருளையும் கவசமாகக் கொண்ட பரந்தாமன், என் ரகுராய ஸேது பந்தனக்கரையில் ஏறி அந்த ஸமுத்திரத்தின் பரந்த விஸ்தீர்ணத்தை அளவிடக்காண்பதற்கு அருள் நோக்குடன் தனது அரவிந்தாக்ஷங்களால் கடாக்ஷித்தார். அந்த அழகை நான் எவ்விதம் வர்ணிக்கமுடியும்? அந்த திவ்ய காக்ஷியைப் பார்க்க வந்த மஹாபாக்யமுள்ள ஜலஜந்துக்களை அல்லவா நாம் கேட்கவேண்டும்? அவைகள் எல்லாம் ஆவலுடன் ராமனுடைய திருஷ்டி பதத்திற்கு வந்தன. மேலே மிதந்து கொண்டு ராமனையும் லக்ஷ்மணனையும் பார்க்க நாடி வந்தன. கிருபாளுவான அவர் அவைகளைப் பார்த்தார். (25)

அநேக விதமான முதலைகள், திமிங்கிலங்கள், மீன்கள், நாகங்கள், பார்ப்பதற்குப் பயங்கரமான ரூபங்களுடனும் அநேகம் நூறு ஆயிரம் யோசனைகள் நீளம், அகலம் பரிமாணம் கொண்ட விசாலமான தேகங்களுடன் காக்ஷி அளித்தன. இவைகளையும் முழுங்கிவிட சாமர்த்தியம் கொண்ட பெரிய ஜலஜந்துக்களும் காணப்பட்டன. அவைகளும் திமிதிமி திமிதிமி திமிங்கிலங்களைப் போல எங்கே நம்மை சாப்பிடக்கூடிய பிராணிகள் வந்து விடப் போகின்றனவோ என்கிற பயத்துடன் இருந்தன. அப்பேற்பட்ட ஜந்துக்கள் யாவற்றையும் என் பிரபு ராமன் கருணையுடன் பார்த்துக் கடாக்ஷித்தார். (26)

*[தியானம்*

ராமா, ஜகந்நாதா, சீதாலக்ஷ்மி, நாராயணா, சரணம் சரணம். நீங்கள் தானே பத்து உபநிஷத்துக்களின் ஸாரமான பொருள். நற்செய்கையாலும், சிந்தனைகளாலும், பாபத்தைக்

கழித்துக்கொண்டு, உங்களுடைய பாதார விந்தங்களில் பழுதில்லா கைங்கரியம் செய்து கொண்டு வாழும் வகையை விளக்குவதே ஈஸாவாஸ்யம். பரபிரும்மமாகிற உங்களுடைய அனுக்ரஹ திருவுள்ளப் பிரகாரம் நடப்பதும், அந்த திருவுள்ள அனுக்ரஹம் இல்லாவிடில் அணுவையும் தூக்கவோ அசைக்கவோ முடியாது. பிரும்மஞானமாகிற உங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை அறிந்து அதையே, உயர்ந்த புருஷார்த்தம், அதை உம்மால் தான் அடைய முடியும், என்று எடுத்துக் காட்டுகிறதே அதுதான் கேநோபநிஷத்து. சேஷசேஷி பாவம் என்று சொல்லப்படும் ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தம் அனுதியானது, அந்த ஸ்வரூபம் லாபம் ஏற்பட்டுத்தான் பரமாத்மாவாகிய உங்களை அடைய முடியும், அப்பேற்பட்ட விஷயங்களை நிதாரணம் செய்வது கடோபநிஷத்து. பிரஜைகளின் ஸ்ருஷ்டி ஸ்திதி, ஸ்வரூபஸ்திதியைப்பற்றி வினுவிடை ரூபமாக விளக்குவது நான்காவதாகிற ப்ரஸ்னோபநிஷத். பிரும்ம வித்யையை "ஓராண்" வழியாக தொடர்புடன் சங்கிலித் தொடர்போல் வரும் குருசிஷ்ய பரம்பரையால், பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய பிரஸீத மத்வ்ருத்தம சிந்தயித்வா என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியும், பசுர்மனுஷ்ய பக்ஷிவாயேச வைஷ்ணவ ஸம் ச்ரயா, தேனைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம் என்கிறபடி பௌராணிக ஸ்லோகத்தின் படிக்கும் உபதேசம் பெற்ற பிரும்மத்தின் ஸர்வக்ஞத்வத்தையும் ஸர்வ சக்தித்வத்தையும், மற்ற இதர விஷயங்களிலும் தெளிவு பெற்று, பரமபுருஷனுகிற உங்களைக்கருதி சீதாராமா, லக்ஷ்மி நாராயணு, நித்ய கர்மானுஷ்டானங்கள் செய்து, ஜனார்த்தன அச்யுதப்ரீயதாம் என்று அனுஸந்தித்து, சிறந்ததொரு ஸாம்யமாகிற "மோக்ஷம்" என்று சொல்லப்படும் நாராயணபதத்தை நித்யமான பலனுக அனுபவிக்கும் பிரகாரத்தை மூன்று வித பிரிவாக விளக்கித்தருவதே ஐந்தாவதான முண்டகோபநிஷத் (முண்டகம் என்றால் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டது என்று பொருள்.) ஹே பிரபோ, சீதாபதி, நாராயண லக்ஷ்மி, பிரணவத்தின் அக்ஷரங்களைப் பிரித்து, ஏகாக்ஷரமான உபாஸனத்தை அடைந்து, பாஞ்சராத்திர மூர்த்திகளான வாஸுதேவ ஸங்கர்ஷண பிரத்யும்ன

அநிருத்த மூர்த்திகளை நாரதாதிகள் விவரணம் செய்தது மாதிரி, உம்முடைய சதுர்மூர்த்திகளை விவரணம் செய்வதுதானே, ஆருவதான மாண்டூக்ய உபநிஷத். பஞ்சகால ப்ரிகிரியை, நித்யகர்மானுஷ்டானம் போன்ற வைஷ்ணவ தர்ம அனுஷ்டானங்கள், உம்மையேத் தியானிக்கும் தபஸ், உங்களுடைய கைங்கர்ய ருசியில் வர்த்திக்கும் ஆசை, அந்த ஆசையினால் ஸர்வ காமங்களையும் உங்களாக, பரமார்த்தமாக ஸ்வீகரித்து, தியாகராஜ துளசிதாஸ பிரஹ்லாதாதி துருவன் மார்ககண்டேய வியாஸ சுகபராசர, நாரதாதிகள் ஸனகாதிகள்,' வால்மீகிமஹரிஷி ஆகிய பக்த கோடிகள் சீதாராம பிருமத்துடனே சேர்ந்து ஆனந்தம் அனுபவம் அடைந்தார்களே, அதுபோல அப்பிரும்மமாகிற உங்களிடம் என்னென்றும் சேவகமே ஏற்றிப் பறைகொள்ளெனும்படி பரமதத்வம், பாமஹிதம், பரமபுருஷார்த்தம் இவறறை கலக்கமின்றி அறிந்து அடைந்து, நாராயணோ பரோதேவ: நாராயண பரபிரும்மம், த்யானம் நாராயணோ பர: நாராயண தத்வம்பர: இவற்றை தெளிவிப்பதே தைத்திரீயம். ராமா சீதாபதே, லக்ஷ்மி, நாராயணா, உங்களுடைய ரூபம், உங்களுடைய ஞானஸ்வரூபம், ஆனநத ஸ்வரூபம், தாமரை இதழ்போன்ற கண்களை, விசாலமான செவ்வரியோடு அரவிந்த நிபேக்ஷணம் மாதிரிபிருக்கும் லோசனங்களை பக்தவௌஸல்ய, வாத்ஸல்யாதி குணங்களை வர்ஷிக்கும் அம்ருதமய திருஷ்டிகள், ஸ்ரீராமனுடைய திருவுள்ளம் "இப்போது அநுகூலமானது," என்று சொல்லும்படி கல்யாணகுணங்கள், தர்மங்களின் ஸூக்ஷ்மத்தை அறிந்த ஸர்வக்ஞத்வம், சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவன், என்கிற ஸத்ய பாராக்ரமர், மஹா கீர்த்திமான், மஹாபரிசுத்தன், ஆஸ்ரயம் செய்தவர்களுக்கு தனது இன்பத்தைத்தரும் உதாரன், ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் இணைபிரியாது இருக்கும் மஹா அனுக்ரஹ நாராயணன், இவன், அவன, அது இது, என்று ஸர்வ பிராணிகளுக்கும் அபயம் கொடுக்கும் நீலவரதன, "வா, ஓடிவா, என் கால்களை சிக்கனப்பிடி" என்று என்னையும் என் போன்றவர்களையும், அழைக்கும் வேங்கட முடியன், ரங்கநாயகன், தன்னைப்பற்றின பக்தர்களை ஸ்ரேஷ்டமாகக் கருதும் ஸ்ரீரங்கநாதன், வேதங்களாலும் பிருத போன்ற மஹரிஷிகளாலும் புகழப்பட்டு, பிரயாசையுடன் தேடப்படும் காவேரி

ரங்கன், தன்னை அடைந்தவர்களின் விரோதிகளை களைபவன், அவனுடைய தர்மத்தை தானும் சீதையும், பரதனும் யாவரும் உள்பட ஆசரணைசெய்து நன்ருக நிலைநிறுத்துபவன், தன்னைப் பற்றினவரை தர்மத்தில் ருசிபிறக்கச் செய்பவன், மஹாதன்வா, ரணவித்யையில் தீரன், சரணுகத சாஸ்திரத்தின் மர்மங்களை அறிந்தவன், பந்து ஜனப்பிரியன், பிரியதர்சனன், பூர்வபாஷணன், மிருதுபாஷணன், ரிஷிகன், பெரியோர்களின் வசனங்களின்படி அடங்கி நிற்பவன், பார்க்கப் பார்க்கப் பிரியன், ஸ்ரீவிஷ்ணுவைப் போன்றவன், சந்திரன் போன்ற பிரிய தர்சனன், பொறுமையில் பூமியைப் போலவும், கோபத்தில் காலாக்னி போலவும், தைர்யத்தில் ஹிமவான் போலவும், கம்பீரத்தில் ஸமுத்திரம் போலவும், ஸதயத்தில் தர்ம விக்ரஹவான் போன்ற ஸமஸ்த கல்யாண குணவிபவங்கள் கொண்ட ஸகுண பிரும்மத்தை நன்குவிளக்கி, வாக்கு பிராணன கண் மனம் காது போன்று ஐந்து பூதங்களின் அம்சங்களைப் பரமாத்மாவை அடையும் ஒரு ரதமாக (ஸாதனமாக) ரூபிப்பது; பரமாத்மா தான் அந்தர்யாமியாகவும் நிஷ்காம்ய கர்மாவான ஸாத்விக தியாகத்தை போதிப்பதே ஐதரேய உபநிஷத். எம்பெருமானைப் பெற பல வழிகளை பிரபாடகம் செய்து வினவி, புனர் ஜன்மம் இல்லாத அர்ச்சராதி மார்க்கத்தை புததலைப்பெற ஆதரவாக அமைந்திருப்பது ஒன்பதாவதான சாந்தோக்ய உபநிஷத். கர்மமே செய்து காலத்தைக் கழிப்பவர்களுக்கு கராவலம்பனம் செய்து கை கொடுத்து, அவரது கர்மங்களை அடியோடு மாற்றி, அவர்களை நம்மாழ்வார் போன்ற பிரும்ம ஞானத்தில் நிலைக்க நிற்கச் செய்து, பிராம்மணங்கள் என்று சொல்லப்படும் உட்பிரிவுகள் நிறைந்து பெருமை பெற்றிருப்பதே பத்தாவதான பிருஹதாரண்ய உபநிஷத். இவ்விதம் சாரீரக சாஸ்திரமாகிற பிரும்ம ஸூத்ரத்தைப் பின்பற்றின பத்து உபநிஷத்துக்களின் உட்கருத்தை பிரகடனப் படுத்தும் என் கோதண்டராமா, நீ தானே ஸகல மந்திரங்களுக்கும் ஸாரம். உம்முடைய பரிபூர்ண கல்யாண குணவிபவங்களைப் பின் தொடர்ந்து தானே, இந்த தச உபநிஷத்துக்களும் நாரதவாக்யம் மாதிரி, அர்த்தபுஷ்டியாக விளங்குகிறது. ஹே சீதாபதி, என் ராமா, நாராயணு, உமது பரதத்வத்தை நினைக்கிறவன் எல்லாப் பாபங்களையும் தீயினல்

பட்ட பஞ்சு போல எரிந்து போகுமே, அது போல எரிந்து விடுகிறான். அதனால் ஆத்மா ராமர்களான முனி ஜனங்கள் ராஜரிஷி ஜனகர், மஹரிஷி வியாஸர், ஞானவிருத்தர்களான பீஷ்மர் வால்மீகி போன்றவர்கள் உம்மை ஒரு தடவை தரிசனம் செய்துவிட்டு தங்கள் கண் இமைகளைக் கொட்ட மன விருப்ப மில்லாதவர்களாக உம்மையே விஸ்மயமாகப் பார்த்துக் கொண்டு தங்களையும் மறந்து ஆனந்த பாஷ்பம் விடுகிறார்கள். உமக்குத் தகுந்த தேவதையோ, மனிஷனோ, ஞானியோ, வள்ளலோ, அபராதியை க்ஷமிக்கும் ஜிதக்ரோதனை, யார் இருக்க முடியும்? ஆஞ்சநேயா, உமா மஹேஸ்வரரே, ராமா னுஜா, எனக்கு எவ்வளவு நாள் சீதாராமனை என்னிடமிருந்து பிரித்து வைக்கப் போகிறீர்கள்? எனக்கு எப்போது அவர்க ளுடைய தர்சனம் கிடைக்கும்? நாரதரே, பீஷ்மரே, வால்மீ கியே, வேதவியாஸரே, கிருபை செய்யும். ராமானுஜா சரணம் சரணம்.]

அந்த ஜந்துக்கள் எல்லாம் இயற்கையான விரோதத்தை மறந்து, பிரபுவை தரிசனம் செய்தன. மஹத்தான சந்தோ ஷத்தை அடைந்தன. தரிசனம் செய்த பின்பும் அவைகள் தங்களை மறந்து நின்று கொண்டிருந்தன. அவைகளுடைய மஹத்தான ஆனந்தப் பெருக்கை யாரால் வர்ணிக்க முடியும்? அவைகள் எல்லாம் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத் தைப் பார்த்து, ஆனந்த சந்தோஷத்தை அடைந்தன. (26)

பிரபுவின் உத்தரவைப் பெற்று ஸகல வானர சைன்யங் களும் புறப்பட்டன. அவைகளின எண்ணிக்கைகளை யாரால் வர்ணிக்க முடியும்? (27)

சேதுபந்தனத்தின்மீது ஒரே கும்பலாகவிருந்தது. வழி யில்லாமல் சில வானரங்கள் ஆகாசத்தில் கிளம்பி அக்கரை போய் சேர்ந்தனர். இன்னும் சில வீரர்கள் ஜல ஜந்துகளின் மீது ஏறி அக்கரை போய்ச் சேர்ந்தார்கள். (28)

இந்தக் காக்ஷியைக் கண்ட பிரபு கிருபாளுராகாய், லக்ஷ் மணன ஆகிய இருவர்களும் பரம சந்தோஷத்தை அடைந் தார்கள். சேனைகளுடன் பிரபு ரகுவீரன் சுகமாக அக்கரை போய் சேர்ந்தார். வானர வீரர்களின் சேனைத் தலைவர்களின் கூட்டங்கள் யாவராலும் வர்ணிக்க முடியாதபடி யிருந்தன. (29)

அக் கரையில் பிரபு கூடாரம் அமைத்துத் தங்கினார். வான ரர்களை அழைத்து "நீங்கள் எல்லோரும் கந்தமூல பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டு, உங்களுடைய சிரமத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்று ஆக்ஞை தந்தார். பிரபுவின் ஆக்ஞை யைப் பெற்ற கரடிகளும், வானரங்களும் சந்தோஷத்துடன் ஓடி னார்கள். (30)

[*தியானம்*

நாராயணா, லக்ஷ்மிநாதா, சீதாராமா, நீங்கள்தான் விஸ்வ சம்பு, நீங்கள்தான் விஸ்வ நாராயணன். நாரதரால் தேடப் பட்ட ஸாத்வதாம்பதி; வேத வியாஸரால் புகழப்பட்ட ஆதி பிதாமஹரே, சுக பிரும்மத்தால் போற்றப்பட்ட ஹரிபக வானே. ஹே பானு, என் மித்ரரே, உம்முடைய பெருமைகளை யும் உமது குலத்தின் பெருமைகளையும் நான் எவ்விதம் வர்ணிப்பேன்? ரகுகுலம், கங்கையை பூமியில் அவதரிக்கச் செய்த சகரனுடைய குடும்பம், ராக்ஷஸர்களைக் கொன்ற ரகு வீரனுடைய குலம்; தர்மவானாகிறவனும், தானம் செய்வதில் நிபுணனுமான இக்ஷ்வாகுலின் குலம். அடே அப்பா, என்ன பெருமை. ரங்கநாதனை ஆராதித்த இக்ஷ்வாகுவின் ஸம்பந்தம் பெற்ற ரகுகுல உத்தம சீதாராமா, என் ஸ்ரீதரா, உன் குலத்தை நான் அச்சுத குலம் என்று சொல்லவா அல்லது திராவிட வேதம் என்று சொல்லவா, பராங்குச கோத்ரம் என்று சொல்லவா, ராமானுஜ ஸூத்ரம் என்று அழைக்கவா, பரகால காரிகை என்று கூப்பிடவா, சொல் அப்பா. பரந்தாமா, சீதே, உன்னைத்தானே அஞ்சுகுடி ஆத்ம பந்து, ஒட்டவுணர்ந்தவள், உனக்கு உற்றார் உறவினர்கள் யாவரும் என்றும், உன் கணவன் தெய்வ நாயகன் என்றும், நீதான் அம்மா, என் தாயே, வானமாமலை ஜீயரின் வர மங்கை என்றும் நான் சொல்லலாமா? பாகவத அபிமானம் என்று சொல்லி வர்த்திக்கும் பிராம்மண உத்தமர்கள் உங்களது கைங்கர்யத் தையே பரம போக்யமாகக் கொண்டவர்கள். என் பிரபு. தேவ நாயகா, சரணமடைந்த தருமனுக்காக தூது சென்ற கிருஷ்ணா, திருவரங்கத்தில் ஆழியும் சங்கமும் ஏந்திச் சிரித்த முகத்துடன் வரவேற்கும் ஸ்ரீரங்க நாயகி ஸமேத ரங்கராஜா, நீ ஸமுத்திரத்தைக் கடந்து கரை சேர்ந்துவிட்டாய். என்

மஹாலக்ஷ்மியின் சமீபத்தை அடைந்துவிட்டாய். அன்று பிள்ளை திருநாரையூர் அரையர் சொன்னரே, "ஸுக்ருதம் என்று சொல்வதும் அந்த எம்பெருமானையே;" அதுபோல ஞானமோ, அக்ஞானமோ முயற்சியினலோ, யாத்ருச்சிகமோ எது ஏற்பட்டாலும், ஸ்வாமி தெய்வநாயகா, உம்முடைய திருவுள்ள ஸுஹ்ருதம் ஏற்பட்டால் அதுவே புருஷார்த்த ஹேதுவாகிறது. ராவணனைக் கொல்ல மாத்திரம் வந்தீரோ, இல்லை, ராவணவதம் முடிந்தபின்பு சீதையை ஸ்வீகரிக்கும்போது அவளைக் கடிந்த தீவினைச் சொற்களைச் சொல்லுவதற்காகவோ லங்கைக்கு அவதரித்தீரோ அல்லது விபீஷண பட்டாபிஷேகத்திற்காகவோ அல்லது மிஞ்சியுள்ள ராக்ஷஸ ராக்ஷஸிகளை ரக்ஷணம் செய்வதற்காகவா அல்லது தேவ காரியத்தின் மிகுதியான "நானே ஸ்ருஷ்டித்தவன்; நானே கடாக்ஷ ஹேது; நானே க்ருஷி பலம்; நானே கர்மம்; நானே அனுக்ரஹம் செய்பவன்;" என்று சொல்லுவதற்கா? எனக்கு ஒன்றும் புரியவில்லை. நாரதரின் ஒன்றிரண்டு வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வருகிறது. ஸர்வேஸ்வரனுடைய சக்தி இருவகைப்பட்டது. நிக்ரஹ சக்தியாலே ஜீவாத்மாவானவன் ஸ்வஸ்வரூபாதிகளை மறந்து ஸம்சாரியாகவிருந்த சேதனன் மோக்ஷத்தை அடைய பகவானே ஸுஹ்ருதமாகவும், ஹேதுவாகவும் இருக்கிருனே அதே பகவான் அனுக்ரஹ சக்தியாலே விபீஷணனையும் சங்கா பிரியனன குபேரனையும் ராக்ஷஸ ராக்ஷஸிகளையும் "யதாஹி மோக்ஷகா; பாங்தே" என்கிறபடி, வழிபோக்கனின் மூட்டை திருடர்களால் கவரப்படும் சமயம் வழிப்போக்கன் ஆவிர்பவித்து, தனது மூட்டையை ஸ்வீகரிப்பது போலவும், திருடர்களை விரட்டுவது போலவும், எம்பெருமானுடைய அனுக்ரஹ சக்தி இவர்கள் பக்கலிலே ஆவிர்பவித்தது. இந்த ஆத்மாக்களை தன் வழியே இழுப்பது போலவும் புண்ய பாவங்கள் விலகி, இந்த பாகவத உத்தமர்கள் சம்சாரத்தினின்று விடுபட்டு பரமபதத்தை அடைவதுபோலிருக்கிறது. ஆனல் இந்த பகவானுடைய நடத்தையும் சீதையினிடம் சொல்லிய வார்த்தைகளும் யாருக்குப் பயன்பட்டது? சீதைக்குமல்ல, உனக்குமல்ல. நீ சொல்லிய வார்த்தைகளும், அவள் தீக்குளித்தலும் உங்கள் இருவர்களையும் என்னைப் போன்றவர்

களுக்கு "அறியேன் மற்றருள் என்னையாளும் பிரானர் வெறிதே யருள் செய்வார் செய்வார்கட்கு கந்து, சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும், தன் நெறியா வயிற்றில் கொண்டு நின்றொழிந்தாயே," என்கிறபடி பகவான் பிராட்டியின் நிர் ஹேதுக கிருபையாகவும், எம்பெருமான் தானே யாரை நிக்ரஹம் செய்யவேண்டும், யாரை அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்கிற ஸங்கல்பமும் எம்பெருமானுக்கு உரிய ஸர்வ ஸ்வதந்த்ரத்தையும் பிராட்டிக்குரிய அனன்யார்ஹ சேஷத்வத்தையும் இவர்கள் பரஸ்பரம் கொண்ட இணைபிரியாத காதலை பிரும்ம ருத்ராதிகள் பார்த்து வியக்கும்படி நடந்த அதி மானுஷ்ய செயல்களும் அவைகளைக் காரணமாகக் கொண்ட பகவத் கிருபையும் அன்றோ? ஆகையினால் நிக்ரஹ சக்தி பேறு கொண்ட ராவணனும், அனுக்ரஹ சக்தியினால் லாப மடைந்த விபீஷண குபேரனும் ராக்ஷஸ ராக்ஷஸிகளும் பகவத் கிருபையை அடைந்த என்போன்றவர்களும் எம்பெருமானையும் பிராட்டியையும் பரம ஸுஹ்ருதம் என்று பேரிட்டுக் கொள்ள லாமே, அப்பேறபட்ட லங்கா விஜய ராமசீதா, என் விஷயத்தில் உங்கள் தயை எப்போது பிறக்கும்?]

"பகவானுடைய சாஸனம், வானராதிகள் ஆகார நிமித்தம் ஓடி அலைந்தார்கள். இந்த சமயத்தில் நாம் இவர் களுக்கு உதவவேண்டும்" என்று நினைத்த விருக்ஷங்கள் ருதுக் களின் வரையை மீறி நடந்து, புஷ்பங்களுடனும் தேன் சொரியும் பந்தல்களுடனும் ருகியுள்ள பழங்களுடனும், (பாகதத உள்ளம் போல சந்தோஷத்துடனும்) பூத்துத் தொங்கின. மதுரமான பழங்க்ள் விருக்ஷங்களில் தோன்ற, வானரங்கள் லங்கையில் சந்தோஷமடைந்தவர்களாக பழங்களைத் தின்று சாப்பிட அலைந் தார்கள். (31)

எங்கு எங்கு ராக்ஷஸர்கள் காணப்பட்டார்களோ அங்கு இந்த வானரங்கள் அவர்களைப் பரிகாசம் செய்துகொண்டு, அவாகளுக்கு முன் நாட்டியம் ஆடி, பகவானுடைய சுயசஸ்ஸைக் கானம் செய்தன. அவர்களால் ஏதாவது உபத்ரவம் நேரிட்டால், அவர்களின் காதுகளையும் மூக்குக் களையும் பற்களால் கடித்துத் துன்புறுத்தின. (32)

எவர்களுடைய காதுகளும் மூக்குக்களும் அறுபட்டனவோ,

அவர்கள் ராவணனை அணுகி, எல்லாவற்றையும் அழுது கொண்டு சொன்னார்கள். பகவான் ஸேதுவைக் கடந்து லங்கைக்கு விஜயம் செயது விட்டார்; அவருடன் லக்ஷ்மணன் வானராதிகள் வந்துவிட்டார்கள் என்று காதுகளால் கேட்ட வுடனே, ராவணன் மிக்க பயத்துடன் வார்த்தைகளைச் சொன் னான். (33)

"நீங்கள் சொல்வது நிஜம்தானா? ராமன் ஸேதுவை அணை கட்டி லங்கைக்கு வந்து விட்டானா? அவன் அலைகளை அமைதியாக நிறுத்தி, ஜலத்திரள்களை ஸ்தம்பனம் செய்து, கடலைப் பந்தனம் செயது, மஹாசமுத்திரத்தை ஹூங்காரத் தினால் அடக்கி, அவனுடைய சபல மனத்தை ஆண்டு, அவனை யும் கைங்கர்யம் செய்யச் சொல்லி, ஆழமான மடுக்களை உடைய அவனுடைய உதரத்தையும் முதுகுப் புறத்தையும் நிலை நிறுத்தி, அதன்மேல் வந்து வடியும் நதி பிரவாஹங்களின் நீரையும் அடக்கித் தேக்கி, அவைகளின் உவர்ப்பு தண்ணீர் களையும் அலைகளையும் மாற்றி, மஹாசமுத்திரத்தின் ஆழமான அமைதியைப்போல, செய்தல்லவா, ஸமுத்திர பந்தனம் என்கிற ஸேதுவை அணை கட்டுதல் செய்யவேண்டும். இந்த ராமன் இவ்வளவையும் செய்துவிட்டு அந்த ஸேதுவினால் லங்கைக்கு விஜயம் செய்து விட்டானா? நீங்கள் சொல்வது நிஜம்தானா?" என்று கேட்டான் ராவணன். (34)

"சரி, இவர்களிடம் நாம் நம் மனதை தெரியப்படுத்த வேண்டாம்" என்று தனக்குள் யோசித்தவனாக, ராவணன் தனது பயத்தை அடக்கிக்கொண்டு, வெளிப்புறத்தில் சிரித்துக் கொண்டு, சந்தோஷிப்பவனாக, ஒன்றும் பேசாமல், தனது அந்தப்புரத்திற்குச் சென்றான். அந்த சமயம் மயனுடைய புத்ரியும், ராவணனுடைய பட்டமஹிஷியுமான மந்தோதரி, ஸ்ரீராமசந்திரன் சேதுவை விளையாட்டாக அணை கட்டி, லங்கைக்கு விஜயம் செய்துவிட்டார் என்கிற செய்தியைக் கேட்டாள். (36)

உடனே அவள் தன் பதி ராவணனிடம் சென்று காலில் விழுந்து நமஸ்கரித்து, அஞ்சலி பந்தத்துடன் வார்த்தைகளைச் சொன்னாள். அவளுடைய மனோஹரமான வாணியினால் அந்தப்புரத்திலிருக்கும் ராவணனை ஆறுதல் செய்து, ஸ்ரீராம

னுடைய பரத்வத்தையும், சௌலப்யத்தையும் விவரித்துச் சொன்னாள். "ஸ்வாமி, நாதரே, என் வார்த்தைகளைக் கேளுங்கள். பகவானிடம் த்வேஷம் வேண்டாம். (எனக்குத் தெரியும். என் தங்கை ஸ்வயம் பிரபை சொல்லியிருக்கிறாள். ஸ்ரீராமன் புருஷோத்தமரான நாராயணர். அவரிடம் அன்பு கொள்ளுங்கள்.) (36)

"ஸ்வாமி, ராஜ நீதிப்படி தாங்கள் எந்த சத்ருக்களை புத்தியினாலோ, படை பலத்தாலோ ஜயிக்க முடியும் என்று நிச்சயம் செய்துவிட்ட பின்பு, அவர்களுடன் சண்டை செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் ரகுபதியினிடம் விரோதம காட்டுவது நீதி அல்ல. உமக்கும் ரகுபதிக்கும் உள்ள வித்யாஸம் ரகுபதியாகிற சூரியனுக்கும் மின்மினிப் பூச்சிபோல விருக்கும் தங்களுக்கும் உள்ளதாகவிருக்கிறது." (37)

"ஸ்வாமி, உமக்கு இன்னமும் தெரியவில்லையா? ஏன் இந்த பிடிவாதம்? இந்த ஆதிவராஹராமனே தைத்யர்களான மதுகைடபர்களைக் கொன்ற நாராயணனாகிற மதுசூதனர். இந்த ராமனே பிரஹ்லாதனுக்குத் துன்பம் அளித்த ஹிரண்ய கசிபைக் கொன்றவன். இந்த மஹானுபாவனே வாமன ரூபத்தில் பலிச்சக்கிரவர்த்தியை அடக்கி, நாகபாசத்தால் கட்டி, அவனுடைய அஹங்காரத்தைப் போக்கி, அருள் செய்தவன். பிரபு, ஸஹஸ்ர பாஹுக்களைக் கொண்ட கார்த்திய வீர்யார்ஜுனனைக் கொன்ற பரசுராமரும் இவன்தான் ஸ்வாமி. ஒவ்வொரு சமயத்திலும் பூமியின் பாரத்தைப் போக்கி, ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காக அவதரிப்பவன். (அப்பேற்பட்ட கிருபாளு, இப்போது ப்ருதிவியின் பாரத்தைப் போக்குவதற்காக ஸ்ரீராம அவதாரம் எடுத்து, உமக்கும் எனக்கும் அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று அவதரித்திருக்கிறார்.) அவரிடம் விரோதம் காட்டவேண்டாம்." (38)

"பரம அனுக்ரஹமும் செய்பவரும், பகவத் கிருபை என்கிற நிக்ரஹ அனுக்ரஹ சக்திகள் கொண்ட ஸர்வேஸ்வரனிடம் நாம் எதற்கு விரோதம் செய்யவேண்டும்? அவர் அல்லவோ, காலத்தையும் கர்மத்தையும், ஸகல ஜீவாத்மாக்களையும் ஸ்ருஷ்டித்து நடத்துகிறவன்." (39)

"ஐயா, ஸ்வாமி, அந்த தயாளுவை நமஸ்கரியுங்கள்.

ஸ்ரீராமசரணங்களை அடிப்பணிந்து ("ஹேபகவானே, வைத்தேன் மதியான் எனதுள்ளத் தகத்தே" என்று சொல்லி,) சீதையாகிற ஜானகியை அவருடைய கமலபாதங்களில் ஸமர்ப்பித்து, நம் புத்ரனாகிற இந்திரஜித்தினிடம் ராஜ்யத்தை ஒப்பித்துவிட்டு, வனத்தில் சென்று வானபிரஸ்தர்களாக ஸ்ரீரகுநாதனை (சுடர்ப் பாம்பணை நம்பரனைத் திருமாலை, சன்மம் விட தேய்ந்தற நோக்கும் தன் கண்கள் சிவந்தே என்கிறபடி) பகவான் நாராயணனுடைய மோக்ஷபதத்தை ஆஸ்ரயித்து, அவர்களுடைய அருளால் அடைவோம்." (40)

"நாதரே, இந்த ரகுராய் உம்மிடம் சண்டை போடுவதற்கு வரவில்லை. உம்மை தன் வழியில் பற்றிக்கொள்ள வந்த கிருபாளு. தீனதயாளன், அவன் வேண்டுவது நாம் அத் வேஷம் (வெறுப்பு) கொள்ளாமல் இருப்பதும்; ஆபி முக்யமாக நாம் அவனிடம் இருப்பதையும்தான். நாம் அவனை ஒருக்கால் சரணம் என்று சொல்லி அடைந்து விட்டால், அவன் நமது வசப்படுகிறான். ஸ்வாமி, கொடும் நெஞ்சுள்ள புலி கூட சரணமடைந்த மனிதனை விழுங்குகின்றதில்லை. தாங்கள் ஜன்மம் எடுத்ததற்கு இதுவரை பல அரிய காரியங்களைச் செய்து புகழ் பெற்றிருக்கிறீர். தாங்கள் தேவர்களையும், அசுரர்களையும், ராக்ஷஸர்களையும், சராசரங்களையும் ஸகலரையும் ஜயித்து விட்டீர். இனி உம்மால் ஆகவேண்டியது இந்த சம்சாரத்தில் ஒன்றுமில்லை." (41)

"தசானனரே, ஸாதுக்களால் சொல்லப்படும் வார்த்தைகள் உமக்குத் தெரிந்திருக்கும். வயது காலத்தில் ராஜ்யத்தைத் துறநதுவிட்டு வான பிரஸ்தர்களாக ஆகி வனம் சென்று பகவானைப் பஜிக்கவேண்டும் என்கிற வசனங்களை தாங்கள் கேட்டிருப்பீர்கள். ஸ்வாமி, இப்போது தங்களுடைய மனது இந்தக் காரியத்தில் ஈடுபாடு அடைய வேண்டும். ஆகவே ஸ்ருஷ்டியை ஏற்படுத்தியவனும், போஷிப்பவனும், அழிக்கிறவனுமாகிய நாராயணனை நாம் பஜிக்கவேண்டும்." (42)

"நாதா, இந்த ரகுவீரன் விஷய போகங்களில் ஆசையையும், மமகாராதிகளையும் துறந்து சரணம் என்று சொல்லி வந்தவர்களையும் ரக்ஷிப்பவன். இவரை அடைவதற்கு ஸ்ரேஷ்டமான முனிவர்கள் கடும் தபஸ் செய்கிறார்கள். மஹாராஜர்கள்

ராஜ்யத்தைவிட்டு, வைராகிகளாக மாறி இவரை அடை கிறார்கள். [ராமன் தெய்வநாயகன்; சீதை ஸ்ரீ வர மங்கை. இவர்கள் விஷயத்தில் நாம் செய்யவேண்டியது. ("ப்ராப்ய ப்ரதிபந்தங்களைச் சொல்லி ப்ராப்ய ப்ரதி நிவிருத்தியைச் சொல்லி, நிர்பரத்வம் அனுஸந்தானம் செய்து, சரண்ய ருசி உள்ளவர்களாக, ப்ராபக ஸ்வரூப நிருபணம் செய்து,) ஈஸ்வர அபிமானிகளாக் நாம் வாழ வேண்டும். "ஏஹோபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்கிறபடிக்கும், என்று நாம் இவர்களை அழுக்கு கழற்றின ஆபரணத்தைப்போலே அங்கீகரிப்பது என்கிற அபிப் பிராயத்திலே இருக்கும் ஸ்ரீ சீதாராமனிடம் "ஸ்வாமி, தாங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்; கருணையுள்ளவர்; ஸம்சார தந்திரத்தை நடத்துபவர்; நீர்தான் ஸர்வேஸ்வரர். நீர்தான் என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்கிற பிரார்த்தனையை எதிர் பார்க்கும் அபிமுக்யனாக நம்மிடம் எதிர்பார்க்கிறான்.] அப் பேற்பட்ட சரணாகத வத்ஸல ஸ்ரீ சீதாராமனை நாம் பஜனை செய்வோம்." ("மாம் ஏகம் சரணம் வ்ரஜ," என்று சொல் லிய பிரான் இன்று நம் முன் "அஹம் ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி," என்கிற பதத்தாலே காட்டப்படும் ஸாக்ஷாத் உபாயமாக விளங்குகிறான். ஏஷ நாராயண: ஸ்ரீமான், ஸர்வ சேஷித்வமும், ஸர்வேஸ்வரத்வமும், ஸர்வ ரக்ஷகத்வமும், ஸ்ரீயப்பதித்வமும் கொண்ட நாராயணத்வத்தைக் கொண்டவர் பரத்வ சௌலப்யாதிகளால் விளங்கும் பிரபு, ஸர்வக்ஞன், தானே நமக்காக லங்கையில் ஆவிர்பவித்து, சுபாஸ்ரயமாக விளங்குகிறான். அன்பரே, மத்த: பரதரம் நான்யது," என்று சொன்ன பிரான் இன்று நமக்கு முன்பு ஸமுத்திர பந்தனம் செய்து, லங்கையில் திவ்ய மங்கள விக்ரஹ விசேஷத்துடன் ஆவிர்பவித்திருக்கிறான். இவனுடைய கருணையைக் கண்ட வர்கள் பல விதமாகச் சொல்லியிருக்கிறார்கள். பராசரர் "ஹே பிரபோ, தேவாதி தேவனே, நான் உன்னை அர்ச்சிப் பதற்கோ, துதிப்பதற்கோ சக்தியற்றவன். நீ கருணை ஒன்றி னாலே மனத்தில்கொண்டு என்னை அருள் புரிய வேண்டும். கிருபாமாத்ர மனோவிருத்தி: ப்ரஸீதமே; பெரியாழ்வார் "நின் னருளே புரிந்திருந்தேன் இனியென் திருக்குறிப்பே, திருவேங் கடமுடையானே, உமது திருவருளைத்தான் நான் விரும்பு

கிறேன்;'' என்று சொன்னபடிக்கும்; திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் ஸாதித்தபடி ''அணியார் பொழில் சூழ் அரங்கப்பா, துணியேனினி நின்னருளல்லதெனக்கு, மணியே, மணி மாணிக்கமே, மதுசூதா, பணியாயெனக்குய்யும் வகை பரஞ்சோதி'' என்கிறபடிக்கும்; நமக்கு உங்கள் கிருபைதான் வேணடும்.) (ஹே பிரபு உங்களுடைய பாதமலரடிகளை ஜனகர், பெரியாழ்வார், க்ஷீராப்தி போன்ற மஹா ஸ்ரேஷ்டர்கள் அடிக்கடி ஸாதனம் செய்து, தங்கள் சொத்து, ராஜ்யங்கள் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு, பரம வைராக்யம் கொண்ட மனத்தினர்களாகப் போனார்களே,) அந்த மனப் பான்மையுடன், ஸ்வாமி, நாங்கள் உங்களை ஆஸ்ரயித்திருக் கிறோம்; உங்கள் ரக்ஷகத்தை வேண்டுகிறோம், என்று நம்மிடம் இந்த ராமன் எதிர்பார்க்கிறான்.'' (43)

''ஹே பிரபோ, இந்த ராமன் ஸாதாரண கோஸல நாட்டு அரசர் என்று எண்ணிவிட வேண்டாம். ரகு குலத்திற்கே பிராதான்யமாகவுள்ள கருணை என்னும் குணத்துடன், ரகுராய், நம்மிடம் பரிவு கொண்டு அயோத்தியை விட்டு எழுந்தருளி, கால் நடையாக தயை பூர்ணராக நம்மிடம் வந்திருக்கிறான். என் வார்த்தையைக் கேட்டு நடப்பீராகில் தாங்கள் மூன்று உலகங்களிலும் என்றும் அழியாத புகழை, அத்யந்த பவித்திர சுந்தரப் புகழை, எக்காலத்திலும் அடையலாம்,'' என்று மந் தோதரி ராவணனிடம் பிரார்த்தித்துக் கொண்டாள். (44)

[*தியானம்**

நான்கு கைகளில் சங்கைத் தரித்திருக்கும் நாராயணா, உன் ஸ்வரூபம்தான் என்ன? மீண்டும் கேட்க விரும்புகிறேன். நாராயணம், கனஸ்யாமம் சது: சங்கம் நமாமி அஹம் என்று சொல்லக்கூடிய ஸ்வரூபமா? ஸாம ஜ வர கமன, ஸாது ஹத் ஸாரஸ ஜ்ஜன பரிபாலனத்வமா? என்னைப் போன்ற அஹங்காரம் கொண்ட ராவணாதிகளையும், சிசுபாலர்களையும் ஹடம் செய்யும் மோஹனகர ரூபமா? இல்லை, தியாகராஜாதிகளைப்போல மஹா பாகவத் சிரோண்மணிகளை வசப்படுத்தும் நாதா சல தீபமா? உன்னுடைய குண விபவங்களை அறிய முடியாதவன் உன் ஸ்வரூபத்தை அறிய முடியுமா? ''த்வாம் அஹமிதி ஸதா பாவ

* குறிப்பு: கேசவ நாமத்தின் விமர்சனம்.

யதி," "ஹே அம்பிகே, உன்னை நான் ஆத்மாவாக நினைத்திருக்கிறேன்." என்று பரமசிவன் நினைக்கிறாரே, அதுபோல சீதையை ஸர்வ சாதாரணமான ராவணனும் நினைத்தானே? ராமன் என்கிற மஹா ஸம்வர்த்தாக்னியாகிற ஊழித் தீயானது ஏன் ராவணனை அழித்தது? ஆனால் சம்புவை ஆலகால விஷத்திலிருந்தும், கங்காவதாரத்தின் சமயமும் அந்த ஊழித் தீயாகிற நீ அவருக்கு மங்கள ஹாரத்தியாகி விட்டாயே. உனது உடம்பிலிருந்து உண்டான சேனைகள் உன்னை எவ்வித மனோபாவனையால் அடைந்து அனுபவிக்கிறார்களோ, அதுபோல நீயும் வசப்படுகிறாய். நாராயண ப்ரியே, சீதே, நாராயண சப்தத்திற்கு ஜீவர்களின் ஸமுதாயமாகிற நாரம் என்கிறபடி ஜீவர்களின் அயனகதி, ஆஸ்ரயமான பரமபுருஷன், ஸ்ரீ விஷ்ணு, ஹரி; ஸாக்ஷாத் என்று சொல்லும்படி இந்த ஜீவன் பகவானாகிற விஷ்ணுவுக்கு அயன நிவாஸ ஸ்தானம் ஆகிறான். ஜடசேதனர்களின் ரூபமாகிற இந்த ஜகத்பூர்ண ரூபமாக விஷ்ணுவினால் ஸர்வ வ்யாப்தகனாகப் பிரகாசிக்கிறான். இதனால் ஜகத்தும் பகவான் நாராயணரால் நித்ய விராஜமான் என்றும் அழைக்கப்படுகிறான். அதே மாதிரி கல்ப முடிவில் ஸம்பூர்ண ஜகத்தும் தங்கள் ஸ்வரூபத்தைவிட்டு பகவானாகிற தாமோதரனிடம் லயமடைகிறது. மீண்டும் ஸ்ருஷ்டி காலத்தில் கேசவராகி, ஸம்சார ஸ்ருஷ்டியைப் படைத்து, ஸம்பூர்ண சராசரங்களும், ஜகத்தும் "நார" என்கிற சப்தத்தினால் உத்தம ஸங்கமான பகவானை அடைந்திருப்பதால் நாராயணன் என்று பிரபு அழைக்கப்படுகிறார். அவரே பிதாமஹர். அவரையே நன்மையை விரும்பும் மனிதன மிக்க சிரமத்துடன் பூஜிக்க வேண்டும். அப்பேற்பட்ட பிரபுவை நாரதர் பீஷ்மர் ஸஹாதேவன் சொல்லியபடி "தாமரை இதழ்போன்ற கண்களை உடைய கண்ணபிரானை எந்த மனிதர்கள் பூஜியார்களோ, அவர்களை உயிரோடு இறந்தவர்கள் என்று அறிய வேண்டும்; அவர்களிடம் ஒருக்காலும் ஸம்பாஷணை செய்யலாகாது. இந்த புருஷ ஸ்ரேஷ்டா எவன் எவனை எடுத்துவிடக் கருதுகிறானோ, அவர்களுக்கு எல்லாம் இந்த சிசுபாலனின் புத்தியைப்போல புத்தி உடனே கெடும்; யுதிஷ்டிரா, மூன்று லோகங்களிலும் உள்ள ஸ்வேதஜம், அண்டஜம், உத்பிஜம், ஜராயுஜம், தேவர், மனிதர்,

திரியக், ஸ்தாவரம ஆகிய நால்வகை பிராணிகளின் உற்பத்திக்கும் நாசத்துக்கும் நாராயணனே காரணம்'' என்று பீஷ்மர் சொன்னார். அதுபோல ராவணனுடைய மதியும் கெட்டது. குஹப் பெருமான் சொன்னபடி ஸதாசார்ய கடாக்ஷமும் அவனுக்குக் கிடைக்கப் பெறவில்லை. துளசிதாஸர், கம்பர் சொன்னபடி பாகவத அபசாரத்தையும் லோக அபசாரத்தையும் ஹிரண்ய கசிப்பைப்போல் அதிகம் பெற்றுவிட்டான். பிறந்த இடத்திற்கும் துரோஹம் நினைத்தான். ஸ்ரீ ராமன், கிருஷ்ணன் சிசுபாலனின் நூறு அபராதங்களைப் பொறுத்தது மாதிரி, ராவணனையும் சில காலம் பொறுத்துப் பார்த்தார். தேகத்தை ஆத்மாவாகவும், ஆத்மாவை தேகமாகவும் பார்த்த அவனுடைய விபரீத புத்தி அவனையும் அவனது அஹங்காரத்தையும் அழித்தது. சீதையும் ராமனும் அயோத்தியை விட்டு லங்கைக்கு எழுந்தருளியிருந்தும், லோபத்தினால், கருணையுடன் லங்கைக்கு விஜயம் செய்த ராமனை எதிர்கொண்டு, மாமணி மண்டபத்திற்கு தனது உள்ளத்து கோயிலுக்கு, அந்த மெய் பேரின்பத்துக்கு அடியரோடிருந்தமை என்று சொல்லி, இன்புறும் சந்தர்ப்பத்தை நழுவ விட்டான். அந்தோ! யார் என்ன குறை சொல்ல முடியும்? இதுவும் அவனது திருவுள்ளமே.]

பரம பாகவதனாகிற விபீஷணன், அதன் பிறகு தர்மம் தாங்கிய சொந்த மனைவியாகிய மந்தோதரியின் ராவணனுக்கு சொல்லிய நீதி வசனங்கள் பலனை அளிக்காமல் வீணாய்ப் போய்விட்டன. மந்தோதரியின் கண்களிலிருந்து கருணை தாங்க முடியாமல் ஜலம் வழிந்து கொண்டிருந்தது. அவளால் இனி செய்யக்கூடியது ஒன்றுதான். ராவணனுடைய பாதங்களில் நமஸ்கரித்து, நடுங்கின தேக மனத்துடன் மீண்டும் அஞ்சலி பந்தத்துடன் சொன்னாள். "ஹே நாத, கால தாமதம் செய்யாதீர்கள். ரகுநாதனைப் பஜியுங்கள். அந்த பக்தியினால் நாம் இருவரும் (சிவசக்தியைப்போல, தேக ஆத்ம பாவத்தினால் கட்டப்பட்டு,) ஸதா வாஸம் செய்வோம். என்னுடைய பிரார்த்தனையை அங்கீகரியுங்கள், ஸ்வாமி." (45)

ராவணன் மயனுடைய பெண்ணாகிய மந்தோதரியை கைகளால் வாரி அணைத்து எழுப்பினான். அவளுடைய பயத்தைப் போக்குவதற்கு ராவணன் தன்னுடைய பலத்தையும்

நிஜமான எண்ணங்களையும், தனது அந்தரங்கமான பிரபுத்வங் களையும் சொல்லி, கடைசியாகச் சொன்னான். "பிரியே, வியர்த்தமாக, நீ பயப்படுகிறாய். நீயே சொல். என்னைப் போல, (ஜகத்தில் மஹாமோஹம் அடைந்து) என்னுடன் யார் சண்டை செய்ய வருவார்கள்?" (46)

"வருணன், குபேரன், வாயு, யமன் ஆகிய ஸகல திக்பாலர் களையும் காலனையும்கூட எனது புஜபல பராக்ரமத்தினால் வென்றிருக்கிறேன். தேவதைகள், தானவர்கள், மனுஷ்யர்கள், ஆகிய யாவர்களும் என்வசம் அடங்கியிருக்கிறார்கள். இவ்வித மிருககும்போது உனக்குப் பயம் ஏற்படுவதற்கு யாது ஹேது வாகவிருக்கிறது? சொல்." (47)

மந்தோதரி மீண்டும் ராமனுடைய விபரங்களைக் கூறி தனது மனத்தில் தோன்றியிருக்கும் பயத்தை வெளியிட்டாள். ஆனால் ராவணன் இதைக் கேட்டானா? ஒவ்வொன்றிற்கும் அவன் தக்க பதில் சொன்னான். அதன் பிறகு அவனிடமிருக்க மனம் கொள்ளாமல், ராவணன் சபைக்கு மீண்டும் போய் சிம்மாஸனத்தில் உட்கார்ந்தான். (அந்தர்யாமியை பூஜை செய்து ஆராதித்த) மந்தோதரியின் மனத்தில் மாத்திரம் தோன்றிய பயம் ராவணனுடைய பேச்சுக்களால் அடங்க வில்லை. தனது பதி காலத்தின் வசம் அடைந்து விட்டார் என்கிற எண்ணம் அவள் மனத்தில் எழுந்தது. அதனால் ஸ்வாமியாகிற ராவணன் தனது வார்த்தைகளை கேட்கவில்லை என்று நினைத்தாள். ஸ்வ அபிமானம் அதிகரித்திருப்பதையும் அவள் தன் பதியினிடம் கண்டாள். (48)

சபைக்குச் சென்று தனது மந்திரிகளை அழைத்து, "நாம் எவ்விதம் சத்ருவுடன் சண்டை செய்வோம்?" என்று ராவ ணன் கேட்டான். அவனுடைய மந்திரிகள் சொன்னார்கள் :— "காதரே, ராக்ஷஸாதிபரே, பிரபு, இந்த விஷயத்தைப் பற்றி ஏன் தாங்கள் எங்களிடம் அடிக்கடி வினவுகிறீர்கள்? கவலையை விடுங்கள்." (49)

"ஸ்வாமி, நீங்களே சொல்லுங்கள். இதில் பயப்படக் கூடியது என்ன இருக்கிறது? தங்களை இவ்விதம் கவலைக்குட் படுத்துவதற்கு இதில் என்ன கஷ்டம், இடைஞ்சலிருக்கிறது? இந்த வானரங்களையும் மனிதர்களான ராம லக்ஷமணர்களையும்

**கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை. நமக்குத் தகுதியான ஆகாரம் மனுஷ்யர்களும், கரடிகளும். வானரங்களும்தானே ?"** (50)

எல்லோருடைய வார்த்தைகளையும் கேட்டான் ராவணனுடைய புத்ரன் பிரஹஸ்தன். அவன் கைகளை கூப்பிக் கொண்டு, சொல்ல ஆரம்பித்தான். "பிரபு, ராஜநீதிக்கு விரோதமாக நடக்கவேண்டாம்; உமது மந்திரிகளால் சொல்லப் பட்ட வார்த்தைகள் புத்தியில்லாததும், அனுசிதமான வார்த் தைகளே." (51)

"இவர்கள் தங்களுக்கு ஹிதமான வார்த்தைகளைச் சொல்லி, உண்மையான நீதியை உங்களிடம் சொல்லாமல் மறைக்கிறார்கள். உங்கள் முகம் கோணாமல் எவ்விதமிருக்குமோ, அவ்விதம் தங்களுக்கு இவர்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். பிரபு, இவர்களுடைய வார்த்தைகளில் பூர்ண விஸ்வாசம் வைக்கவேண்டாம். சில நாட்களுக்கு முன் ஒரு வானரம் லங்கைக்கு வந்திருந்தது. அது செய்த அட்டஹாஸங்கள், அடே அப்பா, எவ்வளவு மஹத்தானவை. அவைகளை ஸ்மரித்தாலே அடி மனத்திலிருந்து பயம் வெளி வருகிறது." (52)

"அந்த சமயத்தில் இந்த வாய் வீச்சு வீரர்கள் எங்கிருந்தார்கள் ? அப்போது அவர்களுக்கு வானரத்தைச் சாப்பிட பசி ஏற்படவில்லையா ? அந்த வானரம் லங்கையைப் பூராவும் கொளுத்தினதே. அப்போது அவர்கள் அதைப் பிடித்து தின்று விட்டார்களா ? ஸ்வாமி, இந்த மந்திரிகள் தங்களுடைய காதுகளுக்கு சுகத்தைத் தரும் வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளின்படி நடந்தால் நமக்கு பரம துக்கங்களும் க்லேசங்களும்தான் ஏற்படும்." (53)

"ஒரு மனிதன் விளையாட்டாக மஹத்தான சமுத்திரத்தை அடக்கி அணைகட்டி ஸேனா சகிதமாக லங்கைக்கு விஜயம் செய்து. ஸுவேல பர்வதம் மேல் தங்கியிருக்கிறான். அப்பேற் பட்ட மனிதன் ஸர்வசாதாரண மனிதனாக இருக்கக்கூடுமா ? ஹே சகோதரர்களே, அவனை யாராவது சாப்பிடக்கூடுமா ? இவர்களுடைய வசனங்களை நம்பாதீர்கள். இவர்கள் தற்புகழ்ச் சிக்காரர்கள். **இவர்களின் வார்த்தைகளால் நாம் மோசம் ஆகி**

விடுவோம்.'' (54)

"அப்பா, தயவுசெய்து என் வசனங்களைக் கேளுங்கள். நான் யுத்தம் செய்வதற்கு கோழை உள்ளம் கொண்டவன் என்று நினைக்கவேண்டாம். ஆதரவுடன் நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். இவர்களின் பேச்சுக்களை நம்பி ஏமாற வேண்டாம். இந்த உலகில் இவர்களைப்போல கேட்ப தற்கும், சமயத்திற்குத் தகுந்தாற்போல சொல்லுவதற்கும் மனிதர்கள் எண்ணிக்கையில் கணக்கற்றவர்களாக இருக்கிறார் கள். முகத்தின் முன்பு இனிப்பு வார்த்தைகள் சொல்லுவார் கள். இவர்களைக் கேட்பவர்களின் மனம் அந்த வசனங்களால் பேதலித்துப் போய்விடும்.'' (55)

"பிரபோ, நான் சொல்லும் வார்த்தைகள் உங்களுக்கு கசப் பாகத்தானிருக்கும். ஆனால் என்னைப்போன்ற தூய மன முடையவர்கள் நமக்கு பரம ஹிதத்தை நினைப்பதால், கசப்பான வார்த்தைகளையும் பயப்படாமல் சொல்லுவார்கள். இதில் ராஜ நீதியையும் கவனியுங்கள் பிரபு. அதன் பிரகாரம் ஒரு தூதனை அனுப்பி அதன் பிறகு சீதையை ஸ்ரீராமனிடம் ஒப்பிவித்து, ஸ்ரீராமனிடம் பிரீதி உள்ளவனாக ஆகி, மித்ரனாக ஆகி விடுங்கள்.'' (56)

"இந்த ராமன் சீதையை அடைந்த பின்பு தனது தேசத் திற்குத் திரும்பிப் போகாமல் நம்மிடம் சண்டைக்கு வந்தால், நாம அவனுடன் சண்டை போடுவோம். அவன் சீதையை அடைந்துவிட்ட பின்பு நம்மிடம் சண்டை செய்ய முன்வர மாட்டான். யுத்தம நின்றுவிடும். அவ்விதமின்றி அவன் யுத்தத்திற்கு வந்தால் நாம அவனைப் பிடிவாதமாக ஜயித்து, அவனுக்குப் பாடம் கற்பிக்கலாம். அவனை வென்று புத்தி கற் பிக்கலாம்.'' (57)

"பிரபு, நான் சொல்வதில் தங்களுக்கு சம்மதம் இருக்கு மானால் இருவிதத்திலும் நாம சுத்தமான புகழை அடைவோம். சீதையை நியாயமாக ஒப்பிவித்தலால் யுத்தம் நிற்பதையும்; யுத்தம ஏற்படுமாயின் களங்கமில்லாத கீர்த்திகளையும் இரு விதத்திலும் லாபங்களை நாம் அடையலாம்.'' புத்ரனுடைய வார்த்தைகளைக் கேட்டான் தசகண்ட ராவணன். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. புத்ரனைப் பார்த்து அவன் சொன்

ஞன்: "அடே மதி கெட்டவனே, மூர்க்கனே, நீ யாரிடமிருந்து இந்த புத்தியைக் கற்றுக்கொண்டாய்?" (58)

[தியானம்*

பகவானே, நாராயணரே, வேதவியாஸரால் சுகருக்குச் சொல்லப்பட்ட ஆத்மாவே, மனிதனுக்கு புத்தியே ஆத்மா, புத்தியே ஆத்மாவுக்கு ஸாதனம். அது எப்பொழுது பதார்த்தத்தை நானாவிதமாகச் செய்கிறதோ, அப்பொழுது அது மனமாகிறது. இந்திரியங்கள் பலவனவாக விருப்பதால் புத்தியானது அடிக்கடி விகாரமடைகிறது. எவனுடைய புத்தி இயற்கையாகவே, ஹே கேசவரே, உம்மை அடைகிறதோ, மத்ஸயமானது ஜலத்தைக் காட்டிலும் வேறொன்றாகவும், ஜலத்துடன் சேர்ந்தே இருக்கிறது போல, ஹே ஸ்வாமி, நீர் புத்தியில் இருந்து விஷயங்களை அறிகிறீர். ஆனால் விஷயங்கள் ஆத்மாவை அறிகிறதில்லை. அத்திப்பழமும் கொசுவும், சேர்ந்தும் வேறாகயிருப்பது போலவும், ஈர்க்கும் முஞ்சமும் சேர்ந்து வேறாகயிருப்பது போலவும், சரீர ஆத்மாக்கள் சேர்ந்திருந்தாலும் ஒன்று மற்றொன்றில் இருப்பவைகளுமாக விருக்கின்றன. ஸ்வாமி, கேசவ மூர்த்தியே, தர்மருக்கு மஹாகிருபையினால் கிருஷ்ண வியாஸ நாரதஸந்நிதியில் "ஏகம் பரம்" என்று சந்தேகமின்றி பரம உதார ஹ்ருதயத்துடன் என் ஆசார்யர், கங்கா புத்ரன், சாந்தனவன், தகப்பனுக்காக கடும் விரதமாகிற பிரும்மசர்யத்தை ஏற்றுக்கொண்டவர், பரசுராமரின் சிஷ்யர், அர்ஜுனப் பிரியன், சாவித்ரி மந்திரத்தின் உபாஸகர், எனது ஹ்ருதய நிவாஸன், பரம காருணிகர், சிறந்த வில்லாளி, மஹா ஆசார்யர்களாலும், ரிஷிகளாலும் விரும்பப்படும் ஸ்ரேயசை உடையவர், பிஷ்மாசாரியார் உனைக் கேசவமூர்த்தியாக நான்கு கைகளிலும் சக்ராயுதத்தைத் தரித்து, பசுமையான பொன்மலை போல நின்று மங்காமல் விளையும் நாராயணம் ஹ்ருஷிகேசம், கோவிந்தம் அபராஜிதம் தத்வேன ஸ்ரோதுமிச்சாமி, பரத ஸ்ரேஷ்ட, கேசவம் என்று பிரார்த்தித்த யுதிஷ்டிரருக்கு பீஷ்மர் என்ன ஸாதித்தார்? கேசவரே, "நீரே மோக்ஷம்" என்று ஸாதித்தார். ஸம்சாரம் என்கிற மஹாரண்யத்தில் பரமார்த்தமான, பரம ஐஸ்வர்யமான மோக்ஷம் என்கிற பதம்,

* நாராயணனுடைய கேசவ நாமத்தின் விமர்சனம்.

பொருள் என்கிற பதத்தால் அறியப்படும் கேசவ தனம்; அதற்கு கேசவர் இந்த மோக்ஷமாகிற ஸம்சார பந்தங்களின் நிவிருத்தியாகச் சொல்லப்படுகிறுர். மரணம், வியாதி, கிழத் தனம், ஆசை இவைகளால் பீடிக்கப்படும் ஸம்சாரம் என்பதும் சக்கிரத்தின் ஸ்வரூபமாகச் சொல்லப்படுகிறது. அந்த ஸ்வரூ பத்தை நசிக்கச் செய்வது வைராக்யம்தான். வைராக்யமாகிற மோக்ஷத்தை அடைய வேண்டிய காரணத்திற்காக, ஜ்யோதி ரூபமான கேசவரை அடைய வேண்டும். கேசவரே மோக்ஷ ரூபி, அவரது அனுக்ரஹத்தால் துக்கமில்லாதவனுய், உலகங்களுக்கு கர்த்தாவும், ஞானிகளுக்கு உத்தம கதியாகவுமிருக்கிறவரும் பிரபுவான ஸ்ரீ விஷ்ணுபகவான் சிவந்த இரண்டு பாதங்களுடன் கருடனுடைய கால்பட்ட அடையாளத்தால் விளங்குபவரும், பொன் மாலை கட்டிய இடையுள்ளவராய் ஸ்ரீவத்ஸ மார்புடன், கம்பு க்ரீவத்துடன், புன்சிரிப்புள்ள முகத்துடன், வில்லைப்போல புருவங்களுடைய, நீண்ட அரவிந்தாக்ஷங்களுடன் நீலமணிக்கு ஒப்பாக, வரசந்தனுங்கதியாக, கருத்துச் சுருண்டு இணங்கி யிருக்கும் கூந்தலை உடைய கேசவமூர்த்தியாக, மும்மூர்த்திக ளின் ஏக ஸ்வரூபமாக என்முன், நாரதருக்கு முன் தோன்றிய படி, தோன்றுவாரா? என் குருர் குருவாகிற நாரதர் சாவித்திரி தேவியினுல் அருள் ஸாதிக்கப்படும்போது, அவளைச் சுற்றி வலம் வந்த ருக் யஜுர் ஸாம அதர்வண வேதங்கள் புருஷ ரூபமுள்ளதாக தலையில் மணிகளுடன் புள்ளி போட்ட மாதிரி பிரகாசிக்கும்போது, என்ன சொன்னுள்: "முனியே, உம்மால் காணப்பட்ட ஜ்யோதிஸ் பேரொளியாக காணப்பட்ட பரமாத்ம ஜ்யோதியென்று அறிஞர்களால் சொல்லப்படுகிறது. ரிஷியே அது என்னலும் அறியத்தக்கது" என்று சொல்லிவிட்டு அந்தர் தியானமானுள். அப்பேறபட்ட 'ஓம் போர் புவஸ்வ: தத்ஸ விதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீம ஹி தீயோ யோன ப்ரஜோதயாத்' என்கிற காயத்திரி மந்திரத்தினுல் சாவித்திரியை உபாஸித்து நாரதரால் தேடப்பட்ட கேசவமூர்த் தியை சரணமடைகிறேன். அவரே மோக்ஷ ரூபி, அவரே லக்ஷ்மியுடன் கூடிய விஷ்ணு. அச்சுதரான அவர் நாரதரைப் பார்த்துச் சொன்னுர். "வேதங்களின் தலையில் உம்மால் காணப்பட்ட அந்த உருவமுள்ள என்னை த்வந்தங்களினின்று

விலகியவர்களும், அஹங்காரமற்றவர்களும், பரிசுத்தர்களும், பரிசுத்தமான திருஷ்டி உள்ளவர்களுமான யோகிகளும், எப்பொழுதும் பார்க்கிறார்கள். எந்த யோகிகள் பிராகுருர்களில் சிறந்தவர்களோ, எவர்கள் என்னுடைய அவதாரங்கள் என்று நிச்சயிக்கப்பட்டவர்களோ, அவர்களுடைய அனுக்ரஹத்தை என்னுடைய அனுக்ரஹமாகத் தெரிந்து கொள்'' என்று சொன்னார். அப்பேற்பட்ட விஷ்ணுவின் அம்சமான அவதாரங்களில் சீதாராமனுகவும், கிருஷ்ணராகவும் எனக்குத் தோற்றமளிக்கும் கேசவ மூர்த்தியை நான் நாரதரை முன்னிட்டு சரணமடைகிறேன். அவரே ஏக சப்தத்தால் அறியப்படுகிறார். ராவணன் போன்றவர்களும் செய்ய முடியாத எந்த இஷ்ட பலத்திற்கு ஸாதனமான உபாயத்தாலே துக்கிக்கிறார்களோ, "ஐயோ, நாம் இந்த கேசவ மூர்த்தியை ஆராதியாமல் மோசம் போய்விட்டோமே,'' என்று வருந்துகிறார்களோ, அவர்களுக்கும் அந்த பரமாத்மாவே ஸ: अहम् அந்த ஸாதனம் நானேதான், என்று சக்கிரத்தையும் கோதண்டத்தையும் வைத்துக்கொண்ட கிருஷ்ண ராமன் சரம ஸ்லோகத்தின் சுருக்கமான பொருள் ஆகிறான் அன்றோ! அனுஷ்டிப்பதும் அனுஷ்டியாமையும் பிரபத்திக்கு அங்கமாக, அகிஞ்சனனுக, அசக்யமானவைகளை அனுஷ்டியாமலிருப்பதால் தீனனுக அல்லவோ கேசவமூர்த்தி விளங்குகிறான். அப்பேற்பட்ட மூர்த்தி, ராமனுகவும் கிருஷ்ணனுகவும் என் உள்ளத்தில் திகழும் ஹ்ருஷீகேசன, வியாஸ நாரதாதிகளுக்கு ஸத்யம் எனகிற ஆத்மாவின் அனுபவத்தையும் அநிருதம் என்னப்பட்ட விஷயங்களின் அனுபவத்தையும் விட்டுவிடு; ஒரு பயனுக்கு உபாயமாகச் சொல்லப்பட்ட கர்மத்தையும் செய்யக்கூடாது என்கிற நிஷித்த கர்மத்தையும் விட்டுவிடு. எந்த எண்ணத்தால் இவ்விரண்டையும் விடுகிறாயோ, அவ்வெண்ணத்தையும் நானே செய்தேன் எனகிற எண்ணத்தையும் விட்டுவிடு. த்யஜ தர்ம மதர்மஸ்ச, த்யஜ ஸத்யான்ருதே அபி; ஆத்மானுபவத்தையும் ஐஸ்வரியத்தையும் பிரயோசனமாகக் கோராதே கொள். தியாகத்தில காதருத்வமும் பராதீனமென்று அனுஸந்திக்கைக்காக, 'யேனத்யஜஸி தத்த்யஜ' எனகிறது வேதம். அப்பேற்பட்ட ஞானத்தினுல் பகவான் கேசவரை எனது மோக்ஷ மூர்த்தியாக நான் அடைகிறேன். சீதாராமா,

நீதான் தஞ்சம்.]

"இப்போது உன் மனதில் சந்தேகமோ, பயமோ நர்த்தன மாடுகிறதா? புதரா. எனது வம்சமாகிற மூங்கில் புதருக்கு விரோதியாக வளரும் முள் சப்பாத்தியைப்போல அல்லவா என் குலத்தில் வந்து பிறந்திருக்கிறாய். போ, என்முன் நில்லாதே," என்று ராவணன் கடிந்து சொன்னான். பிதாவின் அதி கடூரமான வசனங்களைக் கேட்ட பிரஹஸ்தன் வருத்தத்துடன் தன் வீடு சென்றான். அவனுக்கு பிதாவின் பௌருஷம் பிடிக்கவில்லை. "கோரமான விபத்தில் அகப்பட்டுக்கொள்ளப் போகிறாரே என் பிதா," என்று தனக்குள் வருத்தப்பட்டுக் கொண்டு சென்றான். (59)

"நான் ஹிதத்தைச் சொன்னால் என் பிதா ஏற்க வில்லை. காலத்தின் வசமடைந்த வியாதியஸ்தன் மருத்துவன் கொடுக்கும் மருந்தைச் சாப்பிடுவானோ?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அவன் வீடு சென்றான். ஸந்தியா சமயம் வந்து விட்டதை உணர்ந்த ராவணன் தனது இருபது புஜங் களின் வீர்யத்தைப் பார்த்தும் சிரித்துக்கொண்டும், தனது அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். (60)

லங்கையில் உயரமான ஒரு இடத்தில் ஒரு மாளிகை இருந்தது. அது ரொம்ப விசித்திரமான வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. ராவணன் அந்த மாளிகையின் உப் பரிகையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். கின்னரர்கள் அவனுடைய புகழ்களைப் பாட ஆரம்பித்தார்கள். (61)

அந்த சங்கீதத்திற்கு ஏற்ப ஜால்ரா தாளமும் ம்ருதங்க தாளமும் வீணை வாத்யத்தின் இசையும் கேட்கப்பட்டது. நிருத்ய சாஸ்திரத்தில் நிபுணர்களான அப்சரஸ்கள் நடனம் ஆடினார்கள். (62)

ராவணன் ஆயிரம் இந்திரர்களுக்குச் சமமாக ஏகபோக விலாஸங்களை அனுபவித்துக் கொண்டிருந்தான். இன்று மாத்திரமா? பல காலமாக அவன் அனுபவித்து வந்தான். அவ னுடைய பரம சத்ருவாகிற ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி அவனுடைய தலையில் ஏறி உட்கார்ந்தது மாதிரி, லங்கைக்கு வெளியே முகாம் போட்டிருந்தார். ஆனால் அவன் மனத்தில் லவலேசமும் பயமில்லாமல் சந்தோஷத்தில் மூழ்கியிருந்தான். (63)

இங்கே ஸுவேலே பர்வதத்தினடியில் வானர கரடி சைன் யங்கள் ஏகமாகக் கூடியிருந்தன. ஒரே இரைச்சலுடன் கூட்டம் கூட்டமாக அவர்களுடைய நடமாட்டங்களும் பேச்சுக்களும், யுத்த முஸ்தீப்புக்களும் நடந்து கொண்டிருந்தன. ஸுவேலே பர்வதத்தின் ஒரு சிகரம் மிக உன்னதமாக வளர்ந்திருந்தது. அந்த இடம் பரம ரம்யமாகவிருந்தது. விசேஷ அழகுகளுடன் அது விளங்கியது. (64)

அந்த அனுத்தமமான இடத்தில் என் பிரபு லக்ஷ்மணன் அதிகோமளமான விருக்ஷங்களின் இலைகளாலும் அழகான புஷ்பங்களாலும் ஒரு புஷபப் படுக்கையை தனது சொந்த கைகளினுல் தயாரித்து வைத்திருந்தான். அதன்மேல் மிக்க ம்ருதுவானதும் அழகானதுமான மான் தோல் ஒன்றை அவன் விரித்திருந்தான். அதன் மேல் உள்ள ஆசனத்தில் கிருபாளு கேசவமூர்த்தியான ஸ்ரீ ராமன் வீற்றிருந்தார். (65)

என் பிரபு ஸ்ரீராமமூர்த்தி, வானர ராஜனை சுக்ரீவ னுடைய துடையில் தனது சிரத்தை வைத்துக் கொண்டிருந் தார். அவருடைய இடது பக்கத்தில் கோதண்டமும் வலது புறத்தில் அம்பும் அம்புறுத்துணியும் வைக்கப்பட்டிருந்தன. பிரபு தன்னுடைய இரு கமல கரங்களால் ஒரு பாணத்தைப் பரி சீலித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது லங்கேசனுகிற விபீஷணன் பிரபுவின் காதுகளில் மாத்திரம் ஓதுவதுபோல ரஹஸ்யமாக ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். (66)

பரமபாக்யசாலிகளான அங்கதனும் ஹனுமாரும் அநேக பிரகாரங்களால் பிரபுவின் சரணகமலங்களைப் பிடித்துக் கொண்டு அவருடைய சிரமங்களைப் போக்கிக்கொண்டும், அவ ருடைய முகத்தைப் பார்த்தவண்ணமுமிருந்தார்கள். பிரபுவின் பின்புரத்தில் லக்ஷ்மணன் வீராஸனததுடன் கரங்களில் தனுஷ் பாணம் சகிதமாக யுத்த சந்நிதமாக உட்கார்ந்து கொண்டிருந் தான். [இதுதான் துளசிதாஸர் கண்ட காக்ஷி என்று பெரி யோர்கள் சொல்லுகிருர்கள். இந்தக் காக்ஷியைத்தான் தியாக ராஜரும், "கிரிபை" என்கிற பாட்டில் சொல்லியபடி, கண்டதாகச் சொல்லுகிருர்கள்.] [ஹே ராமா, லக்ஷ்மணு, உன் னுடைய தரிசனம் எனக்கு எப்போது கிடைக்கும்? தியாகராஜ துளசிதாஸரே, ஆஞ்சநேயா, கிருபை செய்யமாட்டீர்களா?

நீங்களே எனக்குச் சரணம். உங்கள் தயைதான் எனக்கு வேண்டும்.] [(67)

[*தியானம்*

மாதவா, நாராயணு, லக்ஷிமி பிரியா, லக்ஷிமி நரசிம்மா, மாதவன் என்று அழைக்கப்படும் உன் நாமத்தின் பெருமை யைப்பற்றி நீதானே எனக்குச் சொல்ல வேண்டும். பிரபோ, முதல் ஆசார்யனே, அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கை யுறை மார்பா, நிகரில் புகழா யுலக மூன்றுடையாய் என்னை யாள்வானே, ஹே திருவேங்கடத்தானே, புகல் ஒன்று மில்லா வடியே னுனனடிக்கீழ் அமர்ந்து, புகுந்தேனே என்கிற படியும், அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, என்று மங்களா சாஸனம் செய்யும் என் பூர்வாசிரியர்கள் எப்படி அப்பா, உங்களுடைய ஐக்ய மிதுனததைப் பார்த்துப் பார்த்து, இனபம் அனுபவித்தார்கள். அந்த பெண்பாலையாகிற சீதை ஆஞ்சநேயரிடம் ராம நாமம் பொறிக்கப்பட்ட அங்குலியத்தை சிம்சுபா விருக்ஷத்தினடியில் பெற்றபோது, அவளுடைய இன்ப ஆனந்தத்தை யாரால் வர் ணிக்க முடியும்? "சாருதத் வதனம் தஸ்யா: தாம்ர ஸுக்லா யதேக்ஷணம் அஸோபத விஸாலாக்ஷ்யா ராஹுமுக்த இவோடு ராட்' என்று அவள் அடைந்த இன்பம்; தம் மணிம் ஹ்ருதயே க்ருத்வா ப்ரருரோதஸ லக்ஷ்மண: என்று வால்மீகி பகவானல் சொல்லப்பட்டபடி தாசரத புத்ரனுகிற ஸ்ரீராமர் ஆஞ்சநேயரால் கொடுக்கப்பட்ட சூடாமணியை மார்பில் அணைத்துக்கொண்டு, யதைவ தேனு: ஸ்ரவதி ஸ்நேஹாத் வத்ஸஸ்ய வத்ஸலா, எப் படி கன்றினிடத்தில் ஆசை வைத்த பசுவானது ஸ்நேகத்தினல் கதறுமோ, அதுபோல காடோபகூடமான உங்களுடைய த்வய உருவத்தை நான் ஐக்ய போகமாக எவ்விதம் காணபேன்? பேரருளாளா, ரங்கபதே, ஸ்ரீ விபாவனரே, உமக்கு திருமா மகள் அசாதாரண விலக்ஷணமன்றோ? வலிமை பெற்ற கதைகளை நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டு, கரு மாணிக்கமுமீ, ஹரி மரகதமும் சேர்ந்த பொன்னொளி பெற்ற நாராயணனே, என் திருமாமகள் கேள்வனே, ரமா லோலனே, சங்கீத பிரியனே, நீங்கள்தானே என் காலத்தை உண்டு நிகரிலா புகழ் பெற்

* குறிப்பு: மாதவ நாமத்தின் விமர்சனம்.

நீர்கள்? என் ஆசார்யர் பராசரர் ஸ்ரீ : மஹா பாகா, ஸ்தோத்ர ஆராதன தோஷிதா, நமஸ்யே ஸர்வ லோகானும ஜனனீம் அப்ஜஸம்பவாம் ஸ்ரீயம் உன்னித்ர பத்மாக்ஷீம் விஷ்ணு வக்ஷஸ்தல ஸ்திதாம், த்வாம்ருதே தேவி ஸர்வ யக்ஞ மயம் வபு :, த்வம் மாதா ஸர்வ லோகானும் தேவ தேவோ ஹரி : பிதா என்று சொல்லியபடி சொல்லி ப்ரஸித, ப்ரஸித என்று கெஞ்சிக் கேட்கிறேமே, அப்பேற்பட்ட பிராட்டி எனக்கு கருணை செய்வாளா? பாண்டவர்களுக்கும் தேவர்களுக்கும் தூதாக நடந்து சென்ற கிருஷ்ண, ராமா, சீதே, ஓதுமுறைப்படி யேந்தி உரத்திலுமேலுகல்கிப் போதலர் மாதுடன் புந்தியி லன்பாற் புகுந்தளிக்கும் பெருமாட்டி, நீங்கள்தானே எனது குல தனம். ராமானுஜரும் தியாகராஜரும் நானும் ஸந்ததமும் பஜிக்கும் தெய்வங்கள் நீங்கள்தானே. ஆயிரம் பேரானே, பொன்முடியானே, சுடர்கொள் சுடராழியானே, இடர்கடியும் மாதா பிதாவாக வைத்தேனெனதுள்ளே யாதாகில் யாதேயின் என்று நம்மாழ்வாரும், ந தர்ம நிஷ்டோஸ்மி ந சாத்மவேதி, அகிஞ்சனன் பக்தியுமில்லாதவன், த்வச் சரணார விந்தே அகிஞ்சனே அனன்யகதி :, शरण्य த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே, ராகவா சீதா, புருஷோத்தமா, ஸர்வ உன்னதா' என்று ஆளவந்தாரும் தியாகராஜரும் கூறினர்களே, லங்கேசனுகிற விபீஷணனுக்கு அருள்செய்த ரங்கநாயகி ஸமேத ரங்கநாதா, ரங்கதாமே, ஸ்ரீ லோலுடா, தத் ப்ராப்த்யே ச தத் பாதாம்புஜ த்வய ப்ரபத்தே ரன்யத்ரமே கல்பகோடி ஸஹஸ் ரேணுபி ஸாதனமஸதீதி மன்வான :; உங்களுடைய இரண்டு திருவடித் தாமரைகளில் பிரபத்தியைச் செய்தாலன்றி வேறோர் உபாயம் ஆயிரம் கோடி கல்பகாலம சென்றாலும் எனக்கு இல்லையென்று எண்ணுகிற அடியேனுக்கு உமது திருவுள்ள சம்மதத்தை எப் போது தெரிவிப்பீர்கள்? எனது பரம குருவான வியாஸர் சௌனகர் பட்டர் முதலானவர்கள் வேறு உபாயம் இல் லாதவர்கள், பரிபூர்ண பகவதனுபவம் பெற மிக்க அவா உள் ளவர்களாக எம்பெருமானுடன் சேர்ந்து பிராட்டியையே உபாய மாகவும் உபேயமாகவும் (பலனுகவும்) ஆவார்கள் என்று சொல் லியும், எனக்கு வேதாந்த தேசிகர் "ஹேகமலே, இந்த சராசரங்களுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றைச்

செய்தல், தத்கல்யாணம் கிமபியமினும் ஏகலக்ஷ்யம் ஸமாதெள பூர்ணம் தேஜஸ் ஸ்புரதி பவதி பாத லாக்ஷார ஸாங்கம், இஷ்டப்படி தன் உடலாகிய உலகைப் படைத்துப் போஷித்தும், அழிப்பதும் யோக்யர்களால் தியானம் செய்யப்படுவதும், பரிபூர்ண தேஜோ மயமான பரபிரும்மத்தையே, பிராட்டி காட்டுகின்றனள்'' என்று சொன்னுரே, அப்பேற்பட்ட சுபாஸ்ரயமான உங்கள் இருவர்களுடைய பதாஸ்ரயங்களைப் பிடித்த எனக்கு, ஆஞ்சநேயர்போலவும், ராக்ஷஸிகள் தேவ மாதர்கள்போலவும், பட்டர் வேதாந்தாஸ் தத்தவ சிந்தாம் முரபி துரஸி யத்பாத சிஹ்ன நஸதரந்தி, வேதாந்தங்கள் முராரியின் மார்பில் பிராட்டியின் திருவடியடையாளங்களைக் கண்டு, தத்வ நிர்ணயம் செய்கின்றன என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின் பிரகாரம், ஸ்ரீபதித்வம், ஸ்வாமி நாராயணு, சீதாபதே, உமக்கு அசாதரணமான விலக்ஷணம் அன்றோ? பிருகுபதம் பதிந்த ஸ்ரீவத்ஸ மார்பா, ஸ்ரீதரா, என் சீதாபதி ராமா, எனக்குக் கருணை செய்யமாட்டாயா? என் பயங்களை ஒழித்து, காளிங்கனே விடுவித்தது மாதிரி ''வயம் ஸபதி ரங்கநாத த்வயா'', என்கிற ஸ்ரீரங்க பதத்தை தரமாட்டாயா? அன்று பொன் வாழை மரங்கள், யானைகளின் துதிக்கைகளைப் பேரல கரபோரு என்று சொல்லும படி துடைகளை உடைய பார்வதி, தன் பதியாகிய பரமேஸ்வரனை நமஸ்கரிக்கும்போது, காமேச ஜ்ஞாதஸெளபாக்ய மார்த்த வொரு த்வயான் விதா மாணிக்ய முகுடாசார, ஜானுத்வய விராஜிதா, என்கிறபடி, ஹே சீதே, ராமனுடைய வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கும்போது புண்டரீகாக்ஷனிடம் என்னைபபற்றிச் சொல்லி, இரண்டு கும்பங்கள் போலவிருக்கும் உன் ஸ்தனங்களால் அவனை அரவணைக்கும்போது, என் கஷ்டங்களையும் பாப பயங்களையும் ஜன்ம தாபங்களையும் சொல்லி, ஆனந்தம் என்று சொல்லப்படும் மாதவனுடைய பதங்களில் ஸ்திர நிலையை அருள மாட்டாயா? துளசிதாசரே, ஸுவேல பர்வதத்தில் சுக்ரீவ ஆஞ்சநேய ஸந்நிதியில் நீர் பார்த்த லக்ஷ்மண ராமர்களிடம் என்னை நிவேதனம் செய்வீரா, என்னிடம் தயவு செய்வீரா?)

இந்தவிதம் என் பிரபு ரங்கதாமன், ரகுநாதன் மஹா கிருபை செய்தார். அவருடைய சௌந்தர்ய ரூபம் மங்கள,

கல்யாண குணங்களின் ஸ்ரீரங்கதாம் (என்று சொல்லப்படும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின்) பூர்ண சந்திரனைப்போல நவயௌவன ரூபத்தில் (வில்வ நிலையே என்று சொல்லப்படும் சீதாதேவியின் தியானத்தில்) பகவான் கருணையுடன் அமர்ந்திருக்கும்போது, எந்த மஹா பாக்யவான்கள் அவரை சச்சிதானந்த ரூபமாகப் பார்த்தோர்களோ, (என் ஆசார்யரான துளசிதாசர் கண்டு எவ் விதம் பரவசமடைந்தாரோ,) அந்த பரம பாக்யமுள்ள மனிதர்கள் அல்லவோ ஜகத்தில் பரம லாபமடைந்தவர்கள். அவர்கள் அதையே ஸதா தியானம் செய்துக்கொண்டிருக்கிறார்கள். [அப் பேற்பட்ட நா ஸ்ரேஷ்டர்களை நான் தியானம் செய்து, அந்த பரம மங்கள மூர்த்தியான மாதவ ராமசந்திரனை நினைத்து நினைத்து சச்சிதானந்த மயமாக ஆகிறேன். பரம பாக்யசாலியான துளசிதாசர் ஆஞ்சநேயர், அங்கத ஸுக்ரீவாதிகள் எனக்கு ராமலக்ஷ்மண ரக்ஷணத்தை ஸதா கொடுக்கவேண்டும்.) (68)

கிழக்கு திசையை நோக்கிப் பார்த்தார் பிரபு. அப்போதுதான் உதித்துக்கொண்டு இருந்தான் பூர்ண சந்திரன். அதைப் பார்த்த பிரபு சொன்னார். "ஆஹா, [சிரவிஷ்டா நக்ஷத்திரத் துடன் கூடிய] பூர்ண சந்திரனைப் பாருங்கள். ராஜசிம்மத்திற்கு சமமான கம்பீரத்துடன் அவன் தோன்றுகிறான்." (69)

"கிழக்கு திசை ரூபமாகவிருக்கும் பர்வதத்தின் குகைக ளில் வசிப்பவையும் பரமபிரதாபத்துடன் கூடியதும், தேஜோ மயமாக விளங்குவதும், அமித பலத்தின் ராசிக் கூட்டமா யிருக்கும் சந்திர ரூபியாகிற ராஜ சிம்மம் காளராத்திரியின் கும்பிருட்டுக்களாயிருக்கிற மதம் பிடித்த யானைகளை மஸ்தகத் தில் அடித்து, நாசமாக்குவதுபோல நிர்பயத்துடன் ஆகாய வீதியில் சஞ்சரித்துக்கொண்டு எல்லோரையும் இன்புறுத்து கிறான். (70)

ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் முத்துக்களைப்போல சிதறி யிருக்கின்றன. ராத்திரி ரூபியாகவிருக்கும் ஸ்திரி சுந்தரமாக வும் ஸ்ருங்கார மயமாகவும் விளங்குகிறாள். பிரபு அத்யந்த சந்தோஷ மிகுதியினால் ஆனந்தமாகச் சொன்னார். "என் சகாக்களே, மித்ரர்களே, அந்த பூர்ண சந்திரனில் கருப்பாயிருக் கிற பிந்துக்கள் இருக்கின்றனவே, அவைகள் யாவை? உங்க ளுக்குத் தோன்றிய பிரகாரம், உங்கள் புத்திக்கு தகுந்தபடிச்

சொல்லுங்கள்." (71)

சுக்ரீவன் சொன்னான். "ரகுராய், கேளுங்கள். சந்திரமா பூமியின் நிழலை பிரதிபலிக்கிறான்." வேறொருவன் சொன்னான். "சந்திரனை ராகு ஒரு சமயத்தில் அடித்தான். அந்த காயம்தான் அவனுடைய ஹ்ருதயத்தில் அவ்விதமாகத் தோன்றுகிறது." (72)

இன்னொருவன் சொன்னான், "பிரும்மா காமதேவனின் பத்னியாகிற ரதியின் முகத்தைப் படைக்கும்போது, சந்திரனுடைய அழகியதும், அமிர்தமான ரஸத்துடன் கூடியதுமான ஸாரத்தை எடுத்துப் படைத்தார். அந்த அமிர்தமயமானதும், அழகு பொருந்திய ஸாரம் எடுக்கப்பட்டவுடன், அந்த இடம் த்வாரம் உள்ளதாகிவிட்டது. அந்த த்வாரம்தான் சந்திரனின் ஹ்ருதயத்தில் அடையாளமாகத் தோன்றுகிறது. அந்த த்வாரத்தின் சாயைதான் ஆகாசத்தில் கருப்பாகத் தோன்றுகிறது." (73)

பிரபு எல்லாப் பதில்களையும் கேட்டுச் சிரித்துக்கொண்டு சொன்னார். 'நீங்கள் சொல்வது எல்லாம் சரியல்ல. இந்த சந்திரன் விஷத்தின் மிக்கப் பிரியமான சஹோதரன் அன்றோ? அதனால் அதி பிரியம் அடைந்த சகோதரன் தனது ஹருதயத்தில் விஷத்திற்கு உத்தமமான அடைக்கல ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறான். விஷ யுக்தமான சந்திரன் தன்னுடைய கிரணங்களால் விஷத்தை வாரி இறைத்துக்கொண்டு, பிரியமனமில்லாத இளம் காதலர்களை அக்னியில் விரஹ ஸந்தாபங்களால் எரிக்கிறான், வாட்டுகிறான். [அவனுடைய விஷாக்னி என்னையும் சீதையையும் எரிக்கின்றது. நான் என்ன செய்வேன்?] [மாதவா, சீதாலோலா, ரங்கபதே, அலர்மேல் மங்கை உறை மார்பா, பெருந்தேவி நாச்சியாரே, நீங்கள்தான் என்னைக் கட்டிக் காக்க வேண்டும்.]

பிரபுவின் வார்த்தைகளைக் கேட்ட ஹனுமான் சொன்னார். "ஸ்வாமி, தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? சந்திரன் தங்களுடைய பிரியமான தாஸன் அல்லவோ? ஸ்வாமி, தங்களுடைய மிக்க மதுர லாவண்ய தேஜோமயமான சியாம சுந்தராங்கமூர்த்தி சந்திரனுடைய ஹ்ருதயத்தில் அடைபட்டிருக்கிறது. அந்த சுந்தரமான நீலமேக சியாமள சுபகாத்ரமான

தங்களது சரீரம் அல்லவோ, சந்திரனின் கருப்பு நிறமுள்ள கிருபையாக ஜகம் முழுவதும் பிரகாசிக்கிறது. [அப்பேற்பட்ட சியாமள ராமச்சந்திரமூர்த்தியை நான் ஹனுமாரை முன்னிட்டுக் கொண்டு அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். மாதவரே, சீதையுடன் கூடிய ராமா, லக்ஷ்மி நாராயணு, உமது கிருபையை அல்லவோ சந்திரன் ஸாதுக்களுக்கு வரிஷிக்கிருன். ஸ்வாமி, என்னிடம் தாங்கள் ஸதா தயையுடன் இருகக வேண்டும்.]

## நவாஹ பாராயணத்தின் ஏழாவது நிறுத்தம்.

[தியானம்

*ஸ்ரீ கோவிந்தரே, யச்ஞ ஸாதனரே, சீதாராமா, லக்ஷ்மி நாராயணு, உங்களுடைய திருவடிகளை பிருமாவையும் சாவித்திரியையும் புரம் வைத்து சரணமடைகிறேன். நீங்கள்தானே ஸர்வஸஹே என்கிற பூமியும், இந்திரனுல் துதிக்கப்பட்ட கோவிந்தனுகிற ராஜகோபாலன். பசுக்கள் என்று சொல்லப்படும் ஜீவர்களை மேய்க்கும் கோவிதாம்பதி. புண்ணியகோடி விமானத்தின் கீழ் நிற்கும் பேரருளாளன் நீர் அல்லவோ; உம்முடைய குளிர்ந்த சந்திரன் போன்றதும், என் வினை தீர்க்கும் முகத்தையும், நான்கு கைகளிலும் சார்ங்கம் என்கிற விற்களைத் தரிப்பவரும், என் கழுத்தில் கோவிந்தனுக வீற்றிருக்கும் உமது விபூதியை நான் எப்போது காண்பேன்? ஹே வனமாலி, மென்மையான சீதையுடன் ரமிக்கும் மாயமென்ன மாயமோ, மாதவா, வைகுந்தனே, நப்பின்னைக்குத் திறந்த உமது மணிக் கதவததை தாள்திறவாயோ? ஐஸ்வர்ய மதத்தில் மூழ்கிக் குற்றம் செய்தவனும், உமது பிரபாவத்தை அறியாதவனும், புத்தி யீனனுமான இந்திரனையும், ராவணுதிகளின் குற்றங்களையும் பொறுத்த பெருமானே, சாதாரண ஜீவனுகவிருக்கும் எனது குற்றங்களை மன்னித்து கெட்ட புத்திகளையும் எனக்கு உண்டாகாமல் அருள் செய்ய வேண்டும். அதோக்ஷஜரே, உலகத்தின் பாரத்தைக் கெடுக்கிறதாயும், தாங்களே உலகததிற்குப் பாரமாகவுமிருக்கிற லோக பாலர்களை சிக்ஷிப்பதற்காகவும், உமது பாத பஜனம் பண்ணும் பகதர்களுககு மங்களங்களை உண்டாக்கு

* கோவிந்த நாமத்தின் விமர்சனம்.

வதற்கும் நீர் அவதரிக்கிறீர். ஸம்சாரம் என்னும் வினையும் பூமியாகிற பிரகிருதிக்கு பலவித படைப்புக்களினால் வரையறையை உண்டுபண்ணும் கோஹிதரே, நீர்தான் தாசரதியாகவும், வாஸுதேவராகவும் அவதரித்தீர். ஹே கல்கிரூப, இந்திராதிகளுக்குக் குருவாகிற பிரஹஸ்பதியாகவும் அந்த பிரஹஸ்பதிக்கும் ஈஸ்வரனாகவும், எல்லோருக்கும் ஆத்மாவாகவும், பசுபதியாகவும் இருக்கிற உம்மை ஸுரபி, வத்ஸங்களை முன்னிட்டுக் கொண்டு சரணமடைகிறேன். கோவர்தனகிரிதாரி, பயமடைந்த விரஜையின் கோபர்களை "பயப்படாதீர்கள், காற்று, மழை, மின்னல், அக்னி போன்ற உத்பாதங்களிலிருந்து உங்களுக்கு ரக்ஷணம் என்னால் தீர்மானிக்கப்பட்டது" என்று சொல்லி ரக்ஷித்தீரே, அப்போது என் பரமாசார்யரான சுகரும், விரஜையின் ஸ்திரி புருஷர்களும், காமதேனுவும் என்ன சொன்னார்கள்? அதன்படி நான் உம்மை ஸ்துதி செய்கிறேன். ஹே மஹாயோகின், விஸ்வாத்மன், விஸ்வ ஸம்பவ, கோக்களுக்கு உத்தம கதியையும் ராதைக்கும் நிரந்தர ஸ்தானத்தையும், ஆண்டாளுக்கும் ஸந்த: பயோதி துஹிதஸ் ஸஹஜாம் விதுஸ்த்வாம் என்று தேசிகன் அருளிச் செய்தபடி, ஆண்டாளே ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள்; ஸ்ரீ மஹாலக்ஷ்மியே கோமாதாவாக அவதரிக்கிறாள். அந்த கோமாவாகிற சீதைக்கும் பதியாக ராஜகோபாலன் என்று நீ என்னால் அறியப்படுகிறாய். ஹே பிரபு, நீர்தானே, பரமம் ஏகம், கோவிப்ர தேவானாம் யேசஸாதவ: என்கிறபடி ஸாதுக்களுக்கும் அந்தணர்களுக்கும் தேவர்களுக்கும் கோக்களுக்கும் கோபர்களுக்கும் யோக க்ஷேமத்தைத் கொடுக்கும் கோவிந்தர். ஹே விஸ்வாத்மன், ஆதியக்ஞவராக புருஷா, அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம், என்று சொன்னாயே, யக்ஞவராகா, என்னை நீர் நினைப்பீரா? பூபாரத்திற்காக அவதரித்த விஸ்வாத்மன், கோவிந்தரே, பிரும்ம ருத்ர தேவாதிகளாலும் இந்திரனாலும் புகழப்படும் உம்மையே பிரும்மதேவா், சாவித்திரி ஆக்ஞையை வகித்த நான், எனக்கு இந்திரனாக அபிஷேகம் செய்து முடி சூட்டுகிறேன். ராஜகோபாலா, ஸ்ரீ வித்யாதர ஸாத்வதாம் பதே, தாஸரதி, உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் வேதங்களும் வேதாங்கங்களும் புகழும் வித்தனே, ஜகத் காரணபூதரே,

ப்ரதான புருஷேஸ்வரரே, ஹிரண்ய கர்ப்ப புருஷப்ரதானுவ்யக்த ரூபிணே, ஓம் நமோ பகவதே வாஸுதேவாய சுத்த ஞான ஸ்வ ரூபிணே, உனக்கு ஆயிரம் நமஸ்காரங்களை ஸப்த ரிஷிகள், ஸ்வாயம்பு மனுவை ஆதாரமாக வைத்து நமஸ்கரிக்கிறேன். கிருபை செய்யவேண்டும். என் உள்ளத்தில் புகுந்து, ஹரிஹரி என்று சொல்லும்படி குளிரவைக்க வேண்டும். ராம ராம, நாராயண நாராயண.]

வாயு குமாரனுகிற ஆஞ்சநேயருடைய வசனங்களைக் கேட்ட பிரபு மந்தஹாசம் செய்தார், பிரபு, (என் கோபாலர், கிருஷ்ணர், கண்ணன்) என்ன சொல்லுவார்? (ஹேராம், உம் முடைய பெருமைகள் உமக்கே தகும். உமக்கு விரோதம் பாராட்டுகிறவன் கூட உம்மைக் கண்டால் மனம் சந்தோஷ மடைவான். ஆஞ்சநேயரைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? கோக்களுக்கும் கோகுலத்திற்கும் பதியாகவிருந்த கிருஷ்ணன் இப்போது வானரர்களுக்கும் இந்திராதி தேவர்களுக்கும் பதியாக அல்லவோவிருக்கிருன். ராஜகோபாலர், கோவிந்தர், மஹா கிருபாளு நீதான்), பிரபு தெற்கு திக்கை நோக்கிக்கொண்டு மீண்டும் சொல்ல ஆரம்பித்தார். (76)

"விபீஷணு, தெற்கு திக்கை நோக்கிப் பார். மேகங்கள் கனசாரியாக சேர்ந்து விளங்குகின்றன. காற்று, வர்ஷம், மின்னல் ஆகியவைகள் பலமாக அடிக்கப் போகின்றன. மின்னல் அடிக்கடி தோன்றி மறைகிறது, மீண்டும் பிரகாசிக்கிறது. மேகங்கள் பயம் கொள்ளும்படி கர்ஜனை செய்கின்றன. அவைகளின் மதுரமான சேர்க்கைகளால் ஏற்படும் ஸ்வரங்கள் நாத வர்ஷம்போல என் காதுகளில் கர்ஜிக்கின்றன. இதன்பிறகு ஆலங் கட்டி மழையும் கடூரமாகப் பெய்யப் போகிறது." [கோவிந்தரே, நீர்தான் ஆதி பௌதிக, ஆதி ஆத்மிக, ஆதி தைவிக, தாபங்களிலிருந்து என்னை ரக்ஷிக்க வேண்டும்.] (77)

விபீஷணர் சொன்னுர். "கிருபாளு, கேளுங்கள் ஸ்வாமி, இவை மின்னலுமில்லை; கனமான மேகக் கூட்டங்களும் இல்லை. ஸ்வாமி, லங்கையின் மேல் உச்சியில் ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. அங்கே தசகண்ட ராவணன் நாத மயமாகவிருக்கும் சங்கீதம் நாட்டியம் ஆகியவைகளை ரசித்துக்கொண்டிருக்கிருன்." (78)

"ராவணனுடைய குடை மேகங்களுக்குச் சமமாக விசால மாயும், கருப்பாயும், பரந்து ஜ்வலிக்கிறது. குற்றமற்ற மந்தோ தரியின் காதுகளில் மகிமைகள் பொருந்திய (அதிதி தேவியின் குண்டலங்களைப்போல) குணடலங்கள் அலங்கரித்து பிரகாசிக் கின்றன. அவைகளின் ஒளி, மின்னலின் ஒளியையும் பழிக்கும் தேஜோமயமாக விருக்கிறது. அவைகள் தான் இவ்விதம் மின்னு கின்றன." (79)

" கோவிதாம்பதியே, ஸுரபூபதியே, கேளுங்கள். தாள மிருதங்கள் வாத்யங்கள் வாசிக்கப்படுகின்றன. அவைகளுடன் இணைத்து சங்கீதம், நாட்யம் மிக மதுரமாக நடந்துகொண் டிருக்கிறது. அவைகளின் சப்தங்கள்தான் மேக கர்ஜனைகள்போ லிருந்தாலும் மதுரமாகவும் கேட்கப்படுகின்றன. நாத த்வனி தான் மேக த்வனியாகக் கேட்கப்படுகிறது." பிரபு, இதைக் கேட் டதும் ராவணனுடைய அபிமானத்தையும்; உத்தம சாந்தியை யும் கண்டு ஆச்சர்யப்பட்டார். ஒரு பாணத்தை எடுத்து பிரபு கோதண்டத்தை வளைத்து, அதில் நாண் பூட்டி எய்தார். (80)

ராமனுடைய பிரசித்தி பெற்ற ஏக பாணம் ராவணனுடைய குடையையும் (சத்ரம்) முகுடத்தையும் மந்தோதரியின் கர்ண குண்டலங்களையும் அறுத்துக் கீழே தள்ளின. யாவரும் இதைப் பார்த்தார்கள். பூமியில் யாவும் கீழே தள்ளப்பட்டு விழுந்தன. அதன் காரணத்தை யார் அறிந்தார்கள்? யார் அறியக்கூடும்? (31)

இப்பேற்பட்ட சமத்காரம் வாய்ந்த ராமனுடைய பாணம் எல்லாவற்றையும் முடித்துவிட்டு, ஸ்ரீ ராமனுடைய அம்பூறாத் தூணியில் சத்தம் செய்யாமல் நுழைந்தது. சபையில் நடந்த துர்சம்பவத்தைப் பார்த்த ராவணனுடைய ஸபையினர்கள் பய பீதியுடன் ரஸ பங்கம் அடைந்தவர்களாக எழுந்தார்கள். (82)

[*தியானம்**

ரமா ஸேவித விஷ்ணோ:, அன்று பசுக்களிடம் சரண் புகுந்த லக்ஷ்மி என்ன சொன்னாள்? அதேமாதிரி லக்ஷ்மிதேவி அசுரர்களை விட்டுப் பிரியும் காரணத்தை இந்திரனிடம் சொல் லும்போது என்ன சொன்னாள்? அசுரர்கள் ஒரு காலத்தில்

* விஷ்ணு நாமத்தின் விளக்கம்.

தானமும், அத்யயனமும், யாகமும், பூஜையும், குருக்களிடம் விஸ்வாஸமும் செய்து வந்தார்கள். பொருமையில்லாதவர்களாகவும், உள்ளும் புறமும் சுத்தர்களாகவும், தயை விஷயத்தில் தம்மிடத்தில்போல எல்லா பிராணிகளிடத்திலும் இருந்தார்கள். ஸாதுக்களேயும், பெரியோர்களேயும் பூஜித்தார்கள். காலம் வேறுபடவும் அந்த அசுரர்கள் இவைகளைச் செய்யத் தவறினார்கள். அதனால் அதிருப்தி யடைந்த லக்ஷ்மி வாஸம் பண்ணுவதற்கு இந்திரனே வலிய வந்து அடைந்தாள். "நான் வசிக்கிற இடத்தில் என்னுடன் கூட இருப்பவர்களும், என்னிடம் ஸ்நேகமுள்ளவர்களும், என்னை அடுத்தவர்களும், எட்டாம் தேவியான ஜய லக்ஷ்மியுடன் கூடியவர்களுமான தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, ஸம்பத் லக்ஷ்மி, ஸந்தான லக்ஷ்மி, வீர்ய லக்ஷ்மி, வித்யா லக்ஷ்மி, மோக்ஷ லக்ஷ்மி என்று சொல்லப்படும் நாராயணரின் கைங்கர்ய லக்ஷ்மியும் வாஸம் செய்வார்கள். பாகாஸுரனே அடக்கிய இந்திரனே, ஆசை, சிரத்தை, தகுதி, க்ஷாந்தி, விஜிதி, ஸந்நதி, க்ஷமை இவ்வேழு லக்ஷ்மிகளுக்கும் முன் செல்லும் எட்டாவது லக்ஷ்மியாகிற விருத்தி எனகிற ஜயலக்ஷ்மி என்கிற எட்டு தேவிகளும் மஹா லக்ஷ்மியை அடைந்தவர்களாகவும், அந்த மஹாலக்ஷ்மியும் அசுரர்களை தியாஜ்யம் செய்துவிட்டு தர்மத்தில் உறுதியுள்ள மனத்துடன் இருக்கும் தேவர்களிடம் வசிப்போம்'' என்று வந்தாள். மஹாலக்ஷ்மி தேவேந்திரனால் மீண்டும் வினயத்துடன் கேட்கப்படும்போது, என தேவி, மீண்டும் சொன்னாள். "வாஸவனே, துஸ்ஸஹை என்றும், விதித்ஸை என்றும், பூதி என்றும், லக்ஷ்மி என்றும், ஸ்ரீ என்றும் என்னை சொல்வார்கள். ஸத்யத்திலும் தானத்திலும் தவத்திலும், விரதத்திலும், தர்மத்திலும், பராக்ரமத்திலும் நான் நிலைபெற்றவளாக இருக்கிறேன். பலியானவன் அவைகளிடமிருந்து விலகினவனானன். பிராம்மணர்களிடம் அசூயை கொண்டான. காலத்தால் கெடுக்கப்பட்டான். அஜாக்ரதையின்றி தவத்தாலும பராக்ரமத்தாலும் நான் தரிக்கத தக்கவளாக இருக்கிறேன்'' என்று லக்ஷ்மி சொன்னாள். அப்பொழுது மஹேந்திரன் அவளுடைய ஸ்திர நிலையின் ஸ்வபாவங்களைப் புரிந்துகொண்டு மீண்டும் என நன்மைக்காகவும் லோக ஹிதத்திறகாகவும் சொன்னான். "நாராயண பிரியே, எவர்கள் பூமியை

சுத்தி செய்துகொண்டு, பிறகு ஜலங்களால் பிராணிகளை திருப்தி செய்துவைத்து, அக்னி யாகம் செய்து வாழ்கிறார்களோ, அவர்களிடம் நீ உறுதியுடன் அசஞ்சல புத்தியுடன் வாழவேண்டும். உன்னை விரோதிப்பவன் எவனோ, அவனும் என் விரோதியாக ஆகிவிடுகிறான். எல்லோரும் கேட்கட்டும்," என்று சொன்னான். அப்பேற்பட்ட மஹாலக்ஷ்மியை மார்பில் தரிப்பவரும் கோக்களுக்குப் பிரியரும், தமது விபூதிகளாகிற சேதனு சேதனங்களில் அந்தர்யாமியாக பிரவேசித்திருப்பவரும், கடாக்ஷத்தை வர்ஷித்தும், மற்றும் பல உதவிகள் செய்தும், தமது உயர்வையும் மற்றவர்களின் தாழ்வையும் பாராமல் என்றும் அவர்களை விட்டுப் பிரியாமலிருக்கும் ஹரி; நாராயணோ விஷ்ணு; நாராயணாய வித்மஹெ, வாஸுதேவாய தீமஹி தன்னோ விஷ்ணு: பிரசோதயாத், என்று சொல்லக்கூடிய லக்ஷ்மி பதியாகிற விஷ்ணுவை என்று நான் காண்பேன்? சோலைகள் போலிருக்கும் பக்தர்களின் ஹ்ருதயத்தில் தாமரைத் தாதுபோன்ற நிரத்தை உடையவனும், ஸதாபஸ்யந்தி ஸுரய: என்கிறபடி ஒரு கணப்பொழுதும் கண்ணுறங்காது ஸேவித்துக் கொண்டிருக்கும் கருடன் அனந்தன் விஷ்வச் ஸேனாதிகளாகிற நித்ய ஸுரிகளால் சேவிக்கப்படும் பிரபு, எனது கற்பகச் சோலை, நான்கு கலப்பைகளைக் கைகளில் தரித்துக்கொண்டு, மஹாலக்ஷ்மியின் இஷ்டப்படி நடக்கும் உம்பர்கோமானை நான் எப்பொழுது பார்க்கப்போகிறேன்? எனது அம்பிகை, பாலாம்பிகை, வாக்பவ கூடங்களால் அர்ச்சிக்கப்படும் ஸ்ருங்கார ரஸமாகிற காமராஜ பீஜத்துடன் விளங்கும் பரதேவதை, ஸகலத்தையும் படைக்க வல்லமையுள்ள மேலான சக்தியுடன் கூடிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை, சீதாராமனை, லக்ஷ்மீபதியை, எவராலும் செய்ய முடியாத காரியங்களைச் செய்துகொண்டும், அதிவாத்ஸல்யத்தினால் மனுஷ்யனுடைய நிலைமையை அடைந்து எளியவர்களுக்கும் எளியவர்களாகவிருக்கும் யோகவிதாம் நேதா என்று சொல்லப்படும் ராமகிருஷ்ணாதிகளை நான் எப்போது தர்சிப்பேன்? சந்திரன் ஏகமாகததான் இருக்கிறேன். ஆனால் ஜலத்தின் திவிலைகளால் பலவாறு காணப்படுகிறான். ஒரே ஆகாயம் கடவாதி பேதங்களால் பலவாறாகத் தோன்றும். ஆத்மாவை மூடர்கள் அன்றோ பலவாக நினைக்கின்றனர். உல

களந்த பெருமானே, ஸர்வ அந்தர்யாமியே, எவர் பூமியிலுள்ள தூசிகளேயும் அளந்து, எவர் மேலே உள்ள தேவலோகத்தை கீழே விழாமல் அந்தரத்தில் நிற்கச் செய்து, மூன்று லோகங்களே யும் மூன்று அடிகளால் அளந்தாரோ, மஹான்களால் அனந்தர், அச்யுதர், விஷ்ணு: என்று போற்றப்படுகிருரோ, அப்பேற்பட்ட உத்தமனே, தர்ம ரக்ஷகனே, வள்ளல் பெரும் பசுக்கள் தனது நீங் காத செல்வம் என்று மஹாலக்ஷ்மியை எவ்விதம் சந்தோஷப் படுத்துமோ, அப்பேற்பட்ட லக்ஷ்மீபதியான ஸ்ரீவத்ஸ மார்பனே, எனது சாந்திக்காகவும், மங்களத்திற்காகவும் அடிக்கடி புகழ் கிறேன். ஹேகௌஸ்துப மணி அணிந்த விஷ்ணே, உமக்கு நாம ரூப வடிவமாகிற உலகம் ஒரு பாதம்; ஸத்சித் ஆனந்தம் ஆகியவை மற்ற மூன்று பாதங்கள். அப்பேற்பட்ட பாதோ அஸ்ய விஸ்வா பூதானி திரிபாதஸ்யாமிருதம் த்வி, திரி பாதார்த்வ உதைத் புருஷ: பாதோ அஸ்ய ஹரப வாத்புன: என்கிறபடி அந்த ஏக புருஷரான லக்ஷ்மீபதியை, புருஷோத்தம விஷ்ணுவை நான் அடிக்கடி சரணம் அடைந்து, எனது ரக்ஷணத்தை வேண்டுகிறேன். ஸ்வாமி, தாயே அம்பிகே, பர தேவதே, கிருபை செய்யவேண்டும்.]

பயமடைந்த ராக்ஷஸர்கள் சொல்லிக் கொண்டார்கள். "பூகம்பம் ஒன்றும் ஏற்படவில்லே; காற்றும் அதிகமாக வீச வில்லேயே. அஸ்திரமோ, சஸ்திரமோ நாம் கண்களால் ஒன் றும் பார்க்கவில்லேயே. ஆனுல் இந்த சத்ரம், முகுடம், காது ஒலேகள் விழக் காரணம் என்ன? பயங்கரமான சகுனங்கள் ஏற்படுகின்றனவே, நமக்கு யாது கெடுதல் ஏற்படப் போகி றதோ, தெரியவில்லேயே," என்று தங்கள் மனத்திற்குள் நினைத்துக் கொண்டார்கள். (83)

தசமுகன் பார்த்தான். சகல சபையினர்களும் பயமுற்று, நடுங்கி கலவரம் அடைந்ததைக் கண்டான். சமயத்திற்குத் தகுந்தாற்போல வசனங்களேச் சொன்னுன். ராவணன் சிரித் துக்கொண்டே சொன்னுன். "நான் எனது பத்துத் தலேகளேயும் யாகம் செய்வதற்காக அறுத்துத் தள்ளி எரிந்தபோது, அந்தச் செய்கை பரம அனுக்ரஹமாகவும், பரம சோபனமாகவும் நம் எல்லோருக்கும் விருந்ததே. இப்போது எனது மணிமுகுடம் கீழே தள்ளப்படும்போது, நாம் ஏன் வருந்த வேண்டும்? இதை

அபசகுனம் என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்.'' (84)

"நீங்கள் எல்லோரும் கவலையின்றி வீடு போய்ச் சேருங்கள். நடுநிசியாகி விட்டது. நீங்கள் தூக்கம் கொள்ளுங்கள்.'' சகலருக்கும் இது சரியென்று பட்டது. அவர்கள் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். எந்த நிமிஷத்திலிருந்து மந்தோதரியின் காது குண்டலங்கள் அறுந்து விழுந்தனவோ, அந்த நிமிஷத்திலிருந்து அவளுக்குப் பயம் ஏற்பட்டது. தனக்குள் யோசிக்க ஆரம்பித்தாள். (85)

கண்களில் ஜலம் தாரையாக விட்டுக்கொண்டு இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு அவள் ராவணனிடம் சொல்ல ஆரம்பித்தாள். "பிராணபதி, நான் வினயத்துடன் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். ஸ்ரீராமனிடம் நமக்கு விரோதம் வேண்டாம். அவரைச் சாதாரண மனிதன் என்கிற அபிப்ராயத்துடன் பிடிவாதத்தைக் கொள்ளவேண்டாம். அவர் மானிடர் போல நடிக்கிறார்." (86)

"ரகுவம்ச சிகாமணி, விஸ்வரூபனாகிற விஷ்ணுவேதான். உலகமெல்லாம் தமது உடம்பாக உடைய திருவிக்ரமர் விஸ்வ மூர்த்தி. அவருடைய ஆத்ம ஸ்வரூபம், திவ்ய மங்கள விக்ரஹம், கல்யாண குண விசேஷங்கள், மகிமைகள், யாவும் நிரம்பிய விஸ்வரூபர். யாவராலும் ஜயிக்கக் கூடாதவர். ஸ்வாமி, அவருடைய அங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு லோகம் இருக்கிறது என்று வேதங்கள் அவரைப்பற்றி கோஷிக்கின்றன." (ஸ்வரூபத்தாலும் சக்திகளாலும் யாவரையும் நடத்துபவர் அவரே, விராட்புருஷன்.) (87)

"பாதாள லோகம் அவருடைய சரணங்கள். பிரும்ம லோகம் அவருடைய சிரம். இவைகளுக்கு நடுவிலிருக்கும் தேகத்தின் பாகங்களில் மற்ற உலகங்கள் உறைந்து கிடக்கின்றன. (திரிபாதார்த்வ உதைத் புருஷ: முக்கால் பங்கு புருஷன் பிரகிருதி மண்டலத்திற்கு மேல் உறைகிறான்.) நாம் எல்லோரும் பயப்படுகிறோமே, எந்த காலதேவன் இருக்கிறானோ, அந்த காலதேவன் அவருடைய புருவ நெரிப்புக்களைக் கூட தாங்க மாட்டாதவன். சூரியன் அவருக்கு நேத்ரம். மேகங்கள் அவருடைய கேசங்கள்.'' (88)

*[தியானம்**

ஹே மதுசூதனரே, ஹயக்ரீவரே, புலன்கள் எனப்படும் நித்ய ஸூரிகளின் மதுக்கள் தம்மிடம் இடையூறில்லாமல் சேர்ந்திருக்கும்படி ஆகர்ஷண சக்தியை உடைய பரம புருஷரே, உம்மை வேதங்களின் காரியங்களுக்காக முயற்சிப்பவராகவும், ஈஸ்வரத் தன்மையினுல் ஏற்படும் பிருவிருத்தியினுலே அழகான நாஸிகைகளே உடைய சரீரத்துடன், சந்திரனுககு நிகரான காந்தியை உடையவராகவும், (ஹ்ரௌம் பீஜம து ஸமாக்யாதம், ஹ்ரீம் ஸக்திஸ் ஸமுதா ஹ்ருதா, ஓம் கீலகம் ஸமாக்யாதம் உச்சைருதி, கீலகம் ததா என்கிறபடி ஹ்ரௌம் பீஜம், ஹ்ரீம் சக்தி, ஓம் கீலகம் உறக்க உதகீலகம் என்று கூறப்படும்) மந்திர ஸ்வரூபியே, உமது தலே, மணி முகுடம், தாமரைத் தண்டுகள்போல கைகளே உடைய மஹாலக்ஷ்மியினுல் அம்ருத பிரவாஹத்தால் நனேக்கப்பட்டது. விராட்ரூபா, விரஜரே: விஸ்வதோமுகி, பராகாஸா, என்கிற மஹா சப்தங்களினுல் அறியப்படும் மஹாலக்ஷ்மியாகிற என் சித் சக்தியுடன் கூடியிருக்கும் பிரபோ, உம்முடைய சின் முத்ரை, அக்ஷமாலே, தாமரை, வேதங்கள், நான்கு உலக்கைகளே கரங்களில் கொண்டு, என்னேப்போன்ற பக்தர்களின் அஞுதியான கர்மங்களேப் போக்கும் மதுஸூதனராகிய உம்மை எப்போது நான் காண்பேன? மதுகைடவர்களேக் கொன்ற பிரபோ, பிரும்மாவினுல் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட பிரணவ ஸ்ரூபமே, வேத சிக்ஷையினுல் ஏற்பட்ட உத்கீத ஸ்வரத்தையும் உண்டுபண்ணிய பிரபோ, உம்முடைய அநிருத்த ஸ்வரூபம், ஹயசிரஸ் கொண்ட ஹயக்ரீவ ஸ்வரூபம், வெண்ணிறமுடையதாகவும் சந்திரனேப் போல சுத்தமான காந்தியை உடைத்ததாகவும், ஸர்ப்பத்தின் உடலால் நிறைந்ததும், ஜ்வாலேகளுடன் கூடிய உம்மை யோக நித்ரையில் பார்த்த மதுகைடபர்கள் "இவன் ஏன் போக சுகத்துடன் தூங்குகிருன்?" என்று கேட்டுக்கொண்டு உம்மை எழுப்பினுர்கள். உம்மிடமிருந்து, ரஜஸ் தமஸ் குணங்களால் வியாபிக்கப்பட்ட மதுகைடபர்கள் வதத்தை வேண்டினுர்கள். பிரும்மாவுக்குச் செய்யவேண்டிய மரியாதைக்காகவும், வேதங்களேக காப்பாற்ற நோக்கம் கொண்டதாலும், ஸ்வாமி, தாங்கள் அவர்களேச்

* மதுசூதன நாமத்தின் விமர்சனம்.

கொண்டீர். பிரவிருத்தி தர்மத்தின் பொருட்டு அநிருத்தஸ்வ ரூபியாகி, தாங்கள் ஹயக்ரீவராகி, பிரும்மாவுக்கு வேதங்களை உபதேசித்தீர். ஸ்ரீவத்ஸ மார்பும், வித்யா லக்ஷ்மியுடன் கூடிய தாங்கள் ஸ்ரீமானுகி, வேதங்களுக்கு இருப்பிடமாகச் சொல்லப் படுகிறீர். யோகமும், ஸாங்கியமும், மேலான பிரும்மமும் ஹவிஸ்ஸும், யாகங்களின் பயன்களை அளிக்கும் பிரபுவும் நீர் தானே. யக்ஞபதி, யக்ஞேசா, வேதங்கள், தாத்பர்யங்கள், யக்ஞம், தவம், மோக்ஷம் ஆகிய எல்லாம் நாராயண ஸ்வரூபம். ஸத்யமும் நாராயணரைப் பலனுகக் கொண்டது. மதுசூதனு, நாராயணு, உம்மை அறிந்தவர்கள் உம்மையே இந்த உலகில் உபாதானமாகவும், கர்த்தாவாகவும், தனித்தனியான அதிருஷ்ட மான காரணமாகவும், பலவித சேஷ்டையும், ஐந்தாவதான தெய்வமாகவும சொல்லுகிறுர்கள். ஹே ஹரிபகவானே, பரமசிவன், அகஸ்திய லோபா முத்ரை, வேதாந்த தேசிகர், ஆகியவர்கள் ஞானத்தையே வடிவாகக் கொண்டவர்கள். சித்தத்தை அடக்கின மஹரிஷிகள் உம்மை நித்யராகவும் குணப்ருக் விஸ்வத்ருக்காகவும் பார்க்கிறுர்கள். ஏகாந்திகளால் நீர் கல்யாண குணங்கள் நிறைந்த புருஷராகப் பார்க்கப்படு கிறீர். பிரபோ, ராமசீதா, நாராயணு, மஹாலக்ஷ்மி தாமா, உம்மையே கபிலராகவும் விரிஞ்சியாகவும் சொல்லுகிறுர்கள். சேதனன் மூலமாய் எல்லா உலகங்களையும் படைக்கிற பிரும்மா வும் நீர்தானே. மந்திர ஸ்வரூபமாகிற ஸ்ரீவித்யையும் நீர்தானே. நாதானந்த குருவும், சித் ஆனந்தா என்கிற தீக்ஷதரும், அவ ருடைய சிஷ்யனை ககனனந்தாவும் அவர்களின் தொடர்பைக் கொண்ட நாங்கள் உம்மை ஆதித்ய மண்டலத்தில் இருக்கும் ஸநாதனமான கபிலராகச் சொல்லுகிறோம். ஆயிரம் ஸாகைகள் கொண்ட ஸாமமும், உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஆரண் யகமும் நூற்றொரு சாகைகள் உள்ள அத்வரிய காண்டம் எனப்படும் யஜஸ்ஸும், இருபத்தோராயிரம் கணக்குள்ள ரிக் வேதமும், ஐந்து கல்பங்கள் உள்ள க்ருத்யைகள் என்கிற கிரந்தங்களால் விவரணம் செய்யப்படும் அதர்வ வேதமும் தாங்களேதான் ஸ்வாமி. நீர்தானே அக்ஷரங்களாயும், சப்த ஸ்வரூபங்களாகவும், கிரமங்களுமாக விருக்கிறீர். நீர் யாரை அசுர யோனிகளில் தள்ளுகிறீரோ, அவர்கள்தான் கெடுக்கப்படு

கிறார்கள். க்ஷேத்ரக்ஞரும் மமதையற்றவரும், நிஷ்களருமான ஹரிபகவான் ஏகாந்திகளினால் சுலபமாக அடையப்படுகிறார். ஸூக்ஷ்மமான ஸத்வ நிலையில் உள்ளவர்கள் அகங்காரமற்ற வைகாரிகர்களாகிறவர்களே, ஹே பகவானே, உம்மைப் பார்க்கிறார்கள். அப்பேறபட்ட ஸாத்வதாம்பதியான உம்மை நான் நாரதரையும் அகஸ்தியரையும் லோபாமுத்ரையையும் முன்னிட்டு சரணம் அடைகிறேன். ராமாசீதா சரணம்.]

"ஸ்வாமி, இந்த மதுசூதனப் பெருமானைப்பற்றிச் சொல்கிறேன் கேளும்: நாஸத்யன், தஸ்ரன் ஆகிற அஸ்வினி குமாரர்கள் அவருக்கு நாசிகையின் த்வாரங்கள். இரவும் பகலும் அவருடைய நிமிஷங்களாகிற கண் இமைகளின் கொட்டுதல். பத்து திசைகளும் அவருடைய காதுக்கள். வாயு பகவான் அவருடைய ஸ்வாசம். வேதங்கள் இவ்விதம் அவருடைய ஸ்வரூபங்களைக் கோஷிக்கின்றன. வேதங்களே அவருடைய மங்கள வாணி." (89)

"லோபம் அவருடைய கீழ் உதடு. பயங்கரமான யமராஜன் அவருடைய தந்தங்கள். மாயை அவருடைய சிரிப்பு. திக்பாலர்கள் அவருடைய பாஹுக்கள். அக்னி அவருடைய முகம். அம்புபதி என்று சொல்லப்படும் ஜலேஸ்வரனாகிற வருணன் அவருடைய நாக்கு. உத்பத்தி, காத்தல், பிரளயம், அவருடைய இச்சையின் சேஷ்டிதங்கள்." (90)

"பதினெட்டு வர்க்கங்களாகிற வனஸ்பதிகள் அவருடைய வயிற்றின் ரோமங்கள்; அவருடைய எலும்பு பர்வதங்கள்; நதிகள் அவருடைய ரத்த நாடிகள்; உதரம் ஸமுத்திரம்; நரகம் அவருடைய சிசுனம். இவ்விதம் என் பிரபு ரகுராமன் விஸ்வரூபன். ஜகம் முழுவதும் வியாபித்தும் உள்ளும் உறைந்திருக்கும் இவருடைய மகிமைகளை முழுவதும் யாவராலும் அறியக்கூடுமா?" (91)

"சிவபெருமானுடைய அஹங்காரம் பிரபுதான் ராமன். பிரும்மாவின் புத்தியும் இவரே. சந்திரமா இவருடைய மனஸ். மஹானாகிற விஷ்ணு இவருடைய ஸங்கல்பம். என் குலபதியே, பகவான் ராமசந்திரன் சராசர ரூபம் கொண்ட ஜகத்பதி, விளையாட்டாக மனித ரூபமெடுத்துக்கொண்டு அவரது பக்தர்களை அனுக்ரஹிக்க அவதரித்திருக்கிறார்." (92)

"பிராணபதி, கேளும். இவ்விதமான விராட் புருஷனாக நாம் ரகுவீரனை நினைக்கவேண்டும். ராமசந்திரனுடைய பாதங்களே நமக்கு உத்தம கதியைக் கொடுக்கும். அவருடைய பாதங்களை நாம் பஜிக்கலாம். அதனால் நமக்கு துர்கதி ஏற்படாமல் இருக்கும். தயவுசெய்து என் வார்த்தைகளைக் கேளுங்கள்." (93)

ராவணன் பத்னியின் வசனங்களைக் கேட்டான். அவனையுமறியாமல் அவனுக்குச் சிரிப்பு வந்தது. வாய்விட்டுப் பேச ஆரம்பித்தான். "ஆச்சர்யம். இவ்வுலகில் யாவரும் மஹா மோகத்திற்கு வசப்படாதவர்கள் இல்லை; இந்த சம்சாரத்தில் மஹா பலவான் அதுவல்லவோ? அதிலும் இவ்வுலகில் ஸ்வபாவமாக பயந்த உள்ளம் கொண்ட ஸ்திரி வர்க்கத்தில் சாதாரணமாகச் சொல்லப்படும் எட்டு அவகுணங்கள் ஸத்யமாக காணப்படுகின்றன." (94)

"ஸாஹஸம், பொய், சஞ்சல புத்தி, மாயாஜாலம், கோழைத்தனத்தால் ஏற்படும் பயம், அவிவேகம் (மூர்க்கத்தனமான பிடிவாதம்), சுத்தமில்லாமை, நிர்தயை ஆகிய எட்டு அவகுணங்கள் அவர்களிடம் காணபபடுகின்றன. மந்தோதரி, நம் சத்ருவின் விராட் ஸ்வரூபத்தையும் சொல்லிக் கானம் செய்து, ஆத்ம சந்தோஷத்தை அடைந்தாய். என்னை அவரிடம் பயம் கொள்ளும்படி சிக்ஷை தந்தாய்." (95)

[*தியானம்**

சீதாராமா, திருவிக்ரம நாராயணா, உன்னுடைய ஸ்வரூப குண பிரபாவங்கள், மகிமைகள் யாவரும் மலைத்துப் போகும்படி பரந்த ஸமுத்திரமாகவுள்ளது. அந்த மஹா சமுத்திரத்தில், க்ஷீராப்தியில் பரம கௌதூகலமாக விளங்குகிறாளே, என் புண்ய ராசி, மஹாலக்ஷ்மியாகிற சீதை இருக்கிறாளே, அவளுடைய பிரபாவங்களும் அனந்தமாகவிருக்கின்றன. உங்களுடைய ஜ்வலிக்கின்ற அக்னி போன்ற ரூபம், உம்முடைய திருக் கைகளில் நான்கு வாள்களை யேந்திக்கொண்டு அரக்கர்களின் திக்காகிய நைருதி திக்கில் நோக்கு கொண்டு, பக்தர்களை ஸம்ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தை யான் என்றாவது மறப்பேனா?

* திருவிக்ரமன் என்கிற நாமத்தின் விமர்சனம்.

லக்ஷ்மியே, நீ உன் இச்சையால் எம்பெருமானுக்கு சேஷபூதை யாகவிருக்கிருய். அதனுல் அவனுக்கும் ஏற்றம் கொடுக்கிருய். ஆகிலும் நீ அவனுக்கு அதீனமாக விருக்கிறபடியால், திரை லோக்ய லக்ஷ்மியாகிற நீ நாராயண ப்ரியை என்று சொல்லப் படுகிருய். பிரபு, நீர் திருவுக்கு திரு; தவ்ஸ்ரியா, உமக்குத் தகுந்தவளாயிருக்கிருள் லக்ஷ்மி; ஹே லக்ஷ்மி, உனக்கு புருஷகாரமும் உண்டு. பகவானைப்போல உன்னையும் உபாயமாக அடையும் ஸித்தோபாயமும் உண்டு. அதனுல் ஸர்வ லோக சரண்யனுன எம்பெருமான் கைவிடினும், ப்ரணி பாத ப்ரஸந் நாஹி மைதிலி ஜனகாத் மஜா, அலமேஷா பரித்ராதும், என் கிறபடி கருணையுடன் கூடிய நீ சரண்யாம், சரணம் அடைவ தற்குத் தகுந்தவளாயும், "த்வாம்" என்று தேசிகர் சொல்லிக் காட்டியபடி உபாயமாகவும், அசரண : வேறு உபாயம் இல்லாத எனக்கு ரக்ஷகம் என்கிற அதிகார பூர்த்தியைக் காட்டுகிறவ ளாகவும் தோன்றுகிருய். அதனுலேதான் ராமானுஜாதிகள் ஸுகஸ்ய ஸுகம் ஆஸ்பதம் ஸுசரிதஸ்ய துர்க்கம் மஹத், என்கிறபடி, "உங்களுடைய காவேரி ரங்க பதங்களே சுகத்தை அளிககிறதாயும் புண்யத்திற்குப் பெரியதான கோட்டைபோல விருக்கின்றது" என்று சொல்கிருர்கள். பகவானுக்கு ஆயிர நாமங்கள் கொண்டபடி திரைலோக்ய லக்ஷ்மி ஆகிய உனக் கும் ஆயிர மங்கள நாமாக்கள் இருக்கின்றன. நீங்கள் இருவர்களும் தர்மம் என்கிற விரதத்தை அனுஷ்டிக்கும்போது, எனது மனம் மார்க்கண்டேயாதிகளைப் போல சந்தோஷத்தை அனுபவிக்கிறது. பண்டிதர்கள் சராசரமான இந்த ஜகத்தை அக்னி ஸோமர்களுடைய ஸ்வரூபம் என்றும், அகனியும் ஸோம னும் ஒரே காரணத்தை உடையவர்களாயும், ஒரே கர்ப்பத்தில் பிறந்ததினுல் ஒருவரையொருவர் சந்தோஷிக்கச் செய் கிறவர்கள் என்றும் சொல்லுகிருர்கள். அவர்களே நீங்கள்; அதனுல் நீங்களே உலகங்களைத் தரிக்கிறவர்கள் என்று சொல்லப்படுகிறீர்கள். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் முகமாகவிருககும் கேசவமூர்த்தி நீஙகள்தானே. உமமுடைய ஸ்தூல ரூபமான விராட் ஸ்வரூபத்தையும், ஸுக்ஷ்ம ரூபமான அந்தர்யாமித்வத்தையும் அனுபவித்த மஹானு பாவர்களான யசோதை, கௌசல்யை, அர்ஜுனன், உதங்கர்,

திருதிராஷ்டிராதி சபையினர்கள் பரசுராமர், பலி, வாலி, மந்தோதரி போன்றவர்களும், தாரையும், வஸிஷ்டரும், ஜாம்பவானும், ஸஞ்சயனும், எல்லா பிராணிகளுக்கும் லய ஸ்தானமாகவும், பூமி ஆகாயம் ஆகிய எல்லாவற்றிலும் ஸர்வ வ்யாபகமாயும் அபராஜிதராயும், அதிக காந்தி தேஜஸ் உள்ளவ ராயும், பூதங்களில் பிரவேசித்து, அந்த ஜகத்தாயிருப்பதாலும் உம்மை விஷ்ணுவென்றும், வாஸுதேவன், நாராயணன் ஸங்கர்ஷணன் என்றும், பிருஸ்னிகர்ப்பர் என்றும் சொல்லு கிறார்கள். நீரே உலகங்களுக்கு ஆத்மா. நீரே சித் ரூபமும் அழிவற்றதும், ஜயிக்க முடியாதவராகவுமிருக்கிறீர். தவமும் யக்ஞமும் யாகம் செய்பவரும், புராண புருஷரும், விராட்டும், ஸ்வராட்டும் ஸாம்ராட்டுமாக விளங்கும் நீர் உற்பத்தி நாசங் களுக்கு காரணமாகவிருக்கும் அநிருத்த மூர்த்தியாகவிருக் கிறீர். கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும், கற்கும் கல்விக் கெல்லை யிலனே யென்னும் கற்கும் கல்வி யாவெனும் யானே யென்றும், காண்கின்ற நிலமெல்லாம் யானே என்றும், செய்கின்ற கிரிசையெல்லாம் யானே யென்றும், என்று சொல் லும்படிக்கும்; உற்றார்கள் எனக்கு இல்லையாருமென்றும்; கொடிய வினை யாதுமிலனே யென்னும், கொடிய வினை செய் வேனும் யானே யென்னும், கொடிய வினை தீர்ப்பேனும் யானே யென்றும், கொடியாணி லங்கை செற்றேனே யென்றும், கொடிய புள்ளுடைய வனேற்கொலோ என்று சொல்லும்படி எல்லாம் திரு விக்ரமமூர்த்தியாக, நீர் விளங்குகிறீர். உம்முடைய அச்யுத பாதங்களை ஆயிரம் தடவைகள் பிரதக்ஷணம் செய்து நமஸ் கரிக்கிறேன். நீர்தான் எங்களுக்கு உண்ணுஞ் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன். 'எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி, அடியார் தம் அடியாரடி யாரடியாரெங்கள் கோக்கள், அவர்க்கே குடிகளாய்ச் செல் லும் நல்ல கோட்பாடே, என்று சொல்லி ஆழ்வாராதிகளை முன் னிட்டு நல்ல பதம் அடைய சரணமடைகிறேன். பிரபோ, பூமியி லுள்ள தூசிகளை எண்ணி விடலாம். ஆனால் உமது மகிமை களை கணக்கெடுத்து வராதபடி அனந்தமாக விருக்கின்றன. ஓங்கி உலகளந்த உத்தமா, உன் அடிகளைப் போற்றி, என் றென்றும் உன் சேவகமே யேத்திப் பறை கொள்வான் இன்றி

யாம் வந்தோம் மிரங்கேலோ ரொம்பாவாய்; அபிமான பங்க மாய் உன் பள்ளிக்கட்டில் கீழ் நான் உட்கார்ந்திருக்கும்போது, கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே, செங்கண் சிறுச் சிறிதே யெம் மேல் விழியாவோ, திங்களும் ஆதித்திய னும் எழுந்தாற் போல அங்கணிரண்டு கொண்டெங்கள் மேல் நோக்குதியேல், எங்கள் மேற் சாபமிழிந்தேலோ ரொம்பாவாய், என்று அனுஸந்திககும் எனக்கு சினம் கொள்ளாமல் அருள் வாயா ?)

"பிரியே, சகல சராசரங்களும் ஸ்வபாவமாகவே எனக்கு அடங்கினவை. (உனக்கு பரா என்று சொல்லப்படும் அம்பி கையின் பிரஸாதம் இருக்கிறபடியால்,) எனக்கு விஸ்தாரமாக என் பெருமைகளாகிற ஸகலத்தையும் எடுத்துச் சொன்னாய். உன்னுடைய அருள் பிரஸாதத்தின் சாமர்த்தியத்தினால் நான் இன்று எல்லாவற்றையும் அறிந்தேன். பகவானைப் புகழ்வது போல என்னுடைய மகிமைகளை நீ வெகு சாமர்த்தியமாக என்னிடமே புகழ்கிறாய்." (96)

"மிருகலோசனி, உன் வசனங்கள் ரொம்ப மர்மமாகவும், ரஹஸ்யங்கள் நிறைந்த கூடமான வாக்கியங்களாகவுமிருக் கின்றன. நீ அவைகளைச் சொல்லும்போது, எனக்குச் சுகமும் ஆனந்தமாயும் பயத்தைப் போக்குவதாயுமிருக்கின்றன." மந்தோதரியும் தன் மனத்தில் எண்ண ஆரம்பித்தாள். "நம் பர்த்தா காலவசம் அடைந்து விட்டபடியால், அவருடைய புத்தி விபரீத ரீதியில் பிரமையின் வசமடைந்திருக்கிறது; அதனால் அவளுக்குப் பயங்கள் ஏற்பட்டு, தன் கணவன் சாக வேணடியதுதான்" என்று முடிவைத் தீர்மானம் செய்தாள். (97)

இந்தவிதம் தசகந்தன் ராவணன் நம் போன்றவர்களுக்கும் புரிபடாதபடி விநோதமாக தனி ப்ரிய பத்தினியாகிற மந்தோதரி யிடம் தர்க்கவாதம் செய்தான். அவன் அவ்விதம் வாதம் செய்யும்போது, இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. சூரியன் உதயமாகி விட்டான். ஸ்வபாவமாகவே பயமற்ற லங்காபதி இன்று மதத்தினால் குருடனாகி, தனக்கு ஹிதத்தைச் சொல் லிய மந்தோதரியை அலக்ஷ்யம் செய்துவிட்டு சபைக்குச் சென்றான். (98)

துளசிதாதர் சொல்கிறார்: "மேகங்கள் அம்ருதத்தை வர்ஷிக்கட்டுமே. தர்ப்பை போன்ற புற்கள் பூக்களையும் பழங்களையும் காய்க்கின்றனவோ? இல்லை. பிரும்மாவுக்குச் சமமான குருவும் ஞானியும் ஒருவனுக்கு யதேச்சையாகக் கிடைக்கட்டுமே. மூர்க்க ஹ்ருதயம் கொண்ட சேதனன் ஞானத்தை அடைவானோ? ஒருக்காலும் இல்லை." (99)

இங்கு பிராதக் காலையில் ஸ்ரீரகுநாதன் எழுந்திருந்தார். தனது மந்திரிகள், வானரர்களாகிய யாவருடைய குசலத்தையும் கேட்டு அறிந்து தெரிந்துகொண்டார். கிருபாளு, தீனதயாளு, பிரபு எல்லோரையும் பார்த்து "இப்போது நாம் என்ன செய்யலாம்? சீக்கிரம் சொல்லுங்கள்," என்று கேட்டார். அப்போது ஜாம்பவான் பிரபுவின் சரணங்களை நமஸ்கரித்து, வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தார். (100)

"பிரபோ, தாங்கள் திருவிக்ரமர். விஷ்ணுவாகிய தாங்கள் அந்தர்யாமி. அதனால் தாங்கள் ஸர்வதோ முகராகவும், ஸர்வ சக்ஷுவாகவும், ஸர்வக்ஞராகவும் இருக்கிறீர். ஸ்வாமி, தாங்களே ஆத்மாவானபடியால் புத்தி, பலம், தேஜஸ், தர்மானுஷ்டானம், கல்யாண குண ராசிகளாகிற ஸர்வ ஸ்வாமித்வம், ஸர்வ சேஷித்வம், சௌலப்யம், வாத்ஸல்யம் ஆகிய குணோத்தமராக தாங்கள் விளங்குகிறீர். இவ்விதம் பரத்வம் வாய்ந்ததும், எளிமை தாழ்மை பார்க்காமல், எங்களுக்குக் கௌரவம் அந்தஸ்து மரியாதைகளைக் கொடுப்பதற்காக தாங்கள் எங்களை நாம் இப்போது என்ன செய்யலாம்? என்று வினவுகிறீர்கள். பிரபோ, க்ஷமை கொண்டு, நான் சொல்வதை தயவு செய்து கேட்க வேண்டும். என் புத்திக்குத் தகுந்தபடி சொல்லுகிறேன். உமது மனத்திற்கும் அனுசரணையாக விருக்கும்படி நான் சொல்லுகிறேன். வாலியின் குமாரனை அங்கதனை ராவணனிடம் தூது அனுப்புங்கள்" என்று சொன்னார். (101)

எல்லோருடைய மனத்திலும் இது சரியான முறை,நீதிக்கு உட்பட்டதாகவிருக்கிறது என்று ஆலோசித்து இந்த யோசனையை ஸகலரும் ஸ்லாகித்தார்கள். கிருபாநிதான் பிரபு ராமன் அங்கதனை அழைத்துச் சொன்னார். "அங்கதா, நீ புத்தி, பலம், ராஜ குணங்கள் ஆகிய எல்லா ஸத்வ குணங்களுக்கு இருப்பிடம். என் பிள்ளாய், எனது காரியத்திற்காக நீ இலங்கைக்குப் போய்

ராவணனைச் சந்தித்து வா." (102)

"உனக்கு நான் புதிதாகச் சொல்லக்கூடியது ஒன்று மில்லை. எல்லாம் உனக்குத் தெரிந்திருக்கிறது. நீயோ பரம சதுரன்; காரிய சாமர்த்தியம் கொண்டவன். எனக்கு ஹிதமாக எதிரியின் மனத்தில் இருக்கும் எண்ணங்களையும் நீ அறிந்துகொண்டு வா. அவனிடம் பேச்சு வார்த்தைகளை நடத்தி, எது எனக்கு நல்லதோ, பின்னால் எது எனக்கு அப கீர்த்திகளை விளைவிக்காதோ, 'அப்பேற்பட்ட முறையில் நீ லங்காதிபதியான ராவணனிடம் சென்று வா." (103)

பிரபுவின் ஆக்ஞையை சிரம்மேல் தாங்கிக் கொண்டு, அங்கதன் ராமனை வணங்கிவிட்டு ராவணனிடம் சென்றான். அவன் செல்லுமுன், பிரபுவினிடம் சொன்னான். "பிரபோ, கிருபாளு, உம்முடைய கிருபை, உம்முடைய உள்ளம் யாரிடம் அனுகூலமாக விருக்கிறதோ, அந்த ராம கிருபையை மஹா தனமாகக் கொண்ட அந்த பாக்யவான் மஹா குண கோசம் என்று சொல்லும்படி ஸமுத்திரம்போல, பரந்த குண கீர்த் திகளை சுலபமாக அடைகிறான்." (ஸ்ரீ ராமா, உன்னை அங்கத னையும் ஜாம்பவானையும் புரம் வைத்து அநேக தடவைகள் நமஸ்கரிககிறேன். என்னிடமும் நீர் கிருபை செய்ய வேண் டும். (104)

[*தியானம்**

மஹா வேங்கடபதே, உபேந்திரரே, ஸுரேஸ்வரரே, ஸர்வ ஸஹாயரே, நீர் வாமனராகவும் மானிடராகவும் நடிப்பதைப் பார்த்து உம்முடைய திருவுள்ளத்தை அறிவது மிகக் கடினம் என்று நம்பினவர்களில் என்னைப் போன்றவர்கள் பிரபின்ன நிலையை அடைந்து விட்டால், நீர் மஹா ஸுலபராகவும் சுசீல ராகவும், விபுமீட்யனுகவும் விளங்குகிறீர். நீர் வாமன மூர்த்தி யாக விருக்கும்போதும், உம்முடைய அசாதாரண சின்னமாகிற ஸ்ரீவத்ஸம் என்கிற மருவை, அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கை யுறை மார்பா, திருவேங்கடத்தானே, 'லக்ஷ் மியை மான் தோலால் மூடிக்கொண்டு சென்றாய். "நான் கொடுப்பதற்காக வாக்களிததேன்" என்று பலிச் சக்கிரவர்த்தி

* வாமனன் என்கிற நாமத்தின் ஸ்துதி.

சொன்னனே." ["நமக்கு ஒன்றும் வேண்டாம். நாம் கொடுக்க வந்தோமேயன்றி, உம்மிடத்தில் கொள்ள வந்தோமில்லோம்; உமது பூர்வர்கள் தேடி வைத்த அர்த்தமிருக்கின்றது; அந்த நிதி கிடக்கிற இடமும் நான் அறிவேன்; அதனை நீர் கைக் கொள்ள வேண்டும்" என்று ஆளவந்தாரிடம் மணக்கால் நம்பி சொன்னரே.] அந்த பலி போன்ற அஹங்காரம் கொண்ட அசுரர்கள் ஆபத்திலும் தர்மத்தைக் கைவிடாமல்; "நஹி ஸத்யாத்பரோ அதர்ம," என்கிறபடி பொய் பேசுகிறதைவிட மேலான அதர்மம் இல்லை என்றும்; என்னை நம்பி வந்த பிராம்மணனை, உபேந்திரனை, நான் அதிருப்தியுடன் அனுப்பமாட்டேன்; இவர் உத்தம ஸ்லோகனை விஷ்ணுவாக விருந்தால், என்னை யுத்தத்தில் கொன்று ராஜ்யத்தை அபகரிப்பான்; நானே இவனுக்கு அபரிக்ரஹம் செய்வதால் அவன் திருவருளை சாஸ்வதமாகப் பெறுவேனே" என்று நினைத்தானே, சுக்ராசாரியாரின் சிஷ்யனன மாவலி சக்கிரவர்த்தி, அவனுக்கு கருடனல் அடையாளம் செய்யப்பட்ட பாதத்தை பாரிதோஷகமாய்க் கொடுத்தாய். ஹே கொண்டல்வண்ணு, உதித்த சூரியன்போல நிறம் கொண்ட உன்னுடைய தேஜஸ்ஸும், அடியார்களை ஸம்சார தாபத்திலிருந்து கரை சேர்த்துவைக்கும் உன் அபய ஹஸ்தமும், திருவடிகளும், கைகளில் சிவந்த வஜ்ராயுதத்துடன் விளங்கும் என் வாமனமூர்த்தியே, ஸ்ரீதரா, உன்னை அதிதிதேவி பூஜித்தது மாதிரி, "நமஸ்துப்யம் பகவதே புருஷாய மஹீயஸே, ஸர்வ பூத நிவாஸாய வாஸுதேவாய ஸாக்ஷிணே, நமோ அவ்யக்தாய ஸூக்ஷ்மாய ப்ரதான புருஷாயச சதுர்விசத் குணக்ஞாய குணஸம்க்யான ஹேதவே," என்று சொல்லி, நமஸ்தே ஆதிதேவாய ஸாக்ஷிபூதாயதே நம: நாராயணய ரிஷியே நராய ஹரயே நம: நமோ மரகதஸ்யாம வபுஷே அதிகத ஸ்ரியே, கேசவாய நமஸ்துப்யம் நமஸ்தே பீதவாஸஸே, த்வம் ஸர்வவரத: பும்ஸாம் வரேண்ய வரதரிஷப, அதஸ்தே ஸ்ரேயசே தீரா: பாதரேணு முபாஸதே, அன்வ வர்த்தையம் தேவா: ஸ்ரீஸ்சதத் பாதபத்மயோ: ஸ்பிருஹயந்த: இயா மோதம் பகவான் மே ப்ரஸீததாம்" என்று ஜபித்து நமஸ்கரித்து, அண்டர் கோன் அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றென்றினைக் காணவே," என்று திருவேங்

கடமுடையானே, ரங்கத்தப்பனே, பெருமாயனே, அண்ணலே அமுதே, என்று சொல்லி நமஸ்கரிக்கும் என்னை ஸ்வீகரிக்கும்படி பிரார்த்திக்கிறேன். பகவானே, ஜனார்சனா, அச்யுத: ப்ரியதாம் என்று சொல்லி, நம்பி வாழும் என்னை உய்யக் கொள்வீரோ? நீர்தானே ஸர்வபூத குஹாவாஸம் வாஸுதேவம் ஜகத்குரும் என்று சொல்லப்படுகிறீர். வரதர்ஷபரே, உம்மைத் தீனர்களிடம் அத்யந்த கருணை காட்டுபவரும் அமோக சுப பலன்களை அளிப்பவரும் ஸகல காமங்களையும் பூர்த்தி செய்யும் பரிபூர்ண ராமனாகவும், சீதாபிராட்டியின் ஏகபோக விலாஸமாகச் சொல்லுகிறார்கள். நாராயணா, உம்மிடம் பக்தி செலுத்தினவர்கள் என்றாவது குறைவை அடைந்து விளங்குவார்களா? உன்னை த்வாதசாக்ஷரம், அஷ்டாக்ஷரம், ஷடாக்ஷரம், பஞ்சதசாக்ஷரம் முதலியவைகளாகவும், பாலினாலும் மதுரமான சுகந்த புஷ்ப கீர்த்தனை மாலைகளாலும் ஆராதிக்கிறேன். என்னிடம் சந்தோஷமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.")

"ஸ்வாமி, தங்களுடைய காரியத்தின் ஸித்தி ஸ்வயமாகவே பழுத்துக் கிடக்கிறது. நாதரே, நான் என்னுடைய சாமர்த்தியத்தினால் ஒன்றும் செய்வதிற்கில்லை. மஹா உதார ஹ்ருதயத்துடன் விளங்கும் தாங்கள் எனக்கு கௌரவம் கொடுக்க வேண்டுமென்று ஸங்கல்பித்து, இந்த வேலையை என்னிடம் ஒப்பிவிக்கிறீர்கள். உமக்கு நான் எவ்விதமான நன்றி செலுத்துவேன்?" இந்த மாதிரி அங்கதன் தன் மனத்திற்குள் பகவானுடைய பெருமைகளை எண்ணியதை வாய் விட்டுச் சிறப்பித்துச் சொனனான். அதை நினைக்கும்போதும், அவன் மனம்விட்டு தனக்குள் சொல்லும்போதும், யுவராஜனான அங்கதனுடைய ஹ்ருதயம் சந்தோஷத்தால் விம்மியது. அவன் சரீர மனம் ஆகியவற்றில் புளகாங்கிதமடைந்தான். (105)

பகவானுடைய சரணங்களை வணங்கிவிட்டு பிரபுவின் மகத்வத்தை மனத்தில் தரித்துக்கொண்டு அங்கதன் லங்கைக்குச் சென்றான். அவன் போகுமுன்; எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டான். பிரபுவினுடைய சேர்க்கை ஸம்பந்தம் பெற்ற அங்கதன் பிரபுவின் பிரதாபத்தையும் அறிந்தவனாகையாலும் வாலியினுடைய புத்ரனானபடியாலும் ரணவீரனானபடியாலும் இயற்கையாகவே பயமில்லாதவனாக

விருந்தான். (106)

லங்கையில் பிரவேசித்து, ராவணனுடைய புத்ரனை சந்தித்தான். அப்பொழுது அவன் விளையாடிக்கொண்டிருந்தான். இருவர்களும் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்களுடைய பேச்சு வார்த்தைகள் பலமாகி, சண்டையில் கொண்டு வந்து விட்டது. அதற்கு காரணம் இருவர்களும் அதுளித பலவான்கள். மேலும் யௌவன வயதினர்கள். அவர்களுடைய பேச்சுக்களும் அவ்விதம் காரஸாரமாகவிருந்தன. சண்டை முற்றியது. (107)

அங்கதனை ராவண குமாரன் (பிரஹஸ்தன்) உதைத்தான். அதனால் கோபம் கொண்ட அங்கதன் அவனுடைய கால்களைப் பிடித்துச் சுழற்றி, பூமியின்மீது வீசி எறிந்தான். அதனால் அவன் செத்துப்போய் விழுந்தான். பக்கத்திலிருந்த ராக்ஷஸர்கள் இதைப் பார்த்துப் பயந்துகொண்டு ஓடினார்கள். மற்ற ராக்ஷஸர்களை உதவிக்கு அழைத்துக்கொண்டு யுத்தம் செய்வதற்கு ஓடிச் சென்றார்கள். அவர்களும் பயந்துகொண்டு மற்றவர்களை உதவிக்கு அழைத்தவண்ணமிருந்தார்கள். (108)

ஒரு ராக்ஷஸன் மற்றவனுக்கு என்ன நடந்தது என்கிற உண்மையைச் சொல்லவில்லை. ராவணனுடைய புத்ரன் மரித்துப் போனதைப்பற்றி ஒன்றும் பேசாமல் யாவரும் இருந்தார்கள். நகரம் முழுவதும் பயமும் ஆரவார சப்தங்களும் கேட்கப்பட்டன. "பழைய குரங்கு மீண்டும் லங்கைக்கு வந்து விட்டது. நமக்கு அனர்த்தம் விளைவிப்பதற்கு மீண்டும் வந்து விட்டது" என்று அவர்கள் பயந்து கலங்கினார்கள். (109)

[தியானம்*

ஸ்ரீதரா, நாராயணா, சுபலக்ஷணரே, சீதாராமா, என் ஆரா அமுதே, என் சோதியே, என்றைக்கும் என்னை உய்யக் கொண்டுபோக விரும்பும் சீதாராமா, என்னைக் கன்றுக்கி, தன்னுடையதாக்கி, எனக்கு ஆதியும், அந்தமுமாய் நின்ற என் அப்பனே, ஸ்ரீதரா, ஸ்ரீகரா, ஸ்ரீவிபாவனரே, எனக்குச் சிவனும் பரமேஸ்வரியுமாக நின்ற லக்ஷ்மி நாராயணா, வெண்தாமரை போல சுத்தனே, வெண்தாமரை போன்ற மேனியனே, என்

* ஸ்ரீதரன் என்கிற நாமத்தின் ஸ்துதி.

குருவாயூரப்பனே, நான்கு கைகளிலும் பட்டாக் கத்தியை (பட்டயம் என்கிற வாள்) வைத்துக்கொண்டு என் பயத்தைப் போக்கும் அமேயாத்மாவே, உம்மைச் சரணமடைந்தவர்களின் கஷ்டத்தைப் போக்கி, அனுக்ரஹிக்கும் சமயமிது என்று வரையறுக்கக் கூடாத ஸ்வபாவமுடைய பிரபோ, பல கல்யாண குணங்களால் நிரம்பப்பட்டு அகாதமாக விளங்கும் மஹா ஸமுத்திரமே, உம்முடைய அடையாளங்களால் உம்மை ஸ்ரீயப்பதி என்று அடையும் எனக்கு எப்போது உம்முடைய தரிசனமும் அனுக்ரஹமும் கிடைக்கும்? கிருஷ்ணன் பிறந்த ஊர் எது என்றால் வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற் பசுக்கள் என்று சொல்வதுபோல, கிருதலக்ஷணர் என்கிறபடி, ஸ்ரீவத்ஸம் என்னும் அடையாளத்தை உமக்கும், நீர் ஸங்கல்பிக்கும் மனிதர்களை உம்முடைய அனுக்ரஹ பாத்திரமாக உம்மாலே அடையாளம் செய்யப்படும் விநோதங்களையும், ஸர்வ ஸ்வாமியான உம்மைக் கேசவன், மாதவன் என்கிற நாமங்களுக்கு ஏற்ப, பக்தர்களையும் பிராட்டியையும் அடையாளம் கொண்டவராகவிருக்கிறீர். 'மன்னு புகழ் கோசலை தன்' என்று பாடிய கௌஸல்யையின் புத்ரரே, ராமா, உன்னை குலசேகராழ்வார் எவ்விதம் அனுபவித்தாரோ, அதுமாதிரி அல்லவோ அனுபவிக்க வேண்டும். பகவத் சேஷத்வத்திற்கு அனுகூலமானது பிரம்ம தேஜஸ் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அப்பேற்பட்ட பிறப்பை பாகவதர்களுடனும், உம்முடைய பக்த குழாங்களுடனும், அவர்களின் ஸம்ருத்தியை மிக்க உகக்கை கொண்டு உம்முடைய விஷயத்தில் ருசி மெய்யாக எங்களுக்குப் பிறக்கக் கடவது; பகவத் விஷயத்திற்கு பாகவத ருசிதான் காரணம் என்று எனக்கு அவர் விளக்கிக் காட்டினார். பீஷ்மர், ஆஞ்சநேயர், ஆட்கொண்ட வில்லி ஜீயர், நஞ்ஜீயா ஆகியோரையும், சுக மார்க்கண்டேயாதிகளையும் முன்னிட்டு ஸ்ரீவத்ஸவக்ஷ நித்ய ஸ்ரீரஜய்ய: சாஸ்வதோ த்ருவ: ஸர்வ லோகேஸ்வர: ஸாக்ஷால் லோகானும் ஹிதகாம்யயா ஸராக்ஷஸ பரிவாரம் ஹதவாம் ஸத்வாம் மஹாத்யுதி: என்று சொல்லி ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கின்றேன்.]

அந்த ராக்ஷஸ ராக்ஷஸிகள் அத்யந்தப் பீதியை அடைந்து தங்களுக்குள் விசாரிக்க ஆரம்பித்தார்கள். "இப்போது நாம்

என்ன செய்யக்கூடும்? ஆனது ஆகட்டும், என்ன நடக்கிறது பார்க்கலாம்'' என்று நம்பினூர்கள். அவர்கள் அங்கதன் கேட்காமலிருக்கும்போதே அவனுக்கு ராவணனுடைய வீட்டைக் காண்பித்தார்கள். அங்கதன் யார் யாரை முழித்துப் பார்த்தானே, அவர்கள் அத்யந்த பயபீதியுடன் விளங்கினூர்கள். முகம் எல்லாம் வெளிறிப் போய் கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள். (110)

ஸ்ரீராமச்சந்திரனுடைய தாமரைத் திருவடிகளை மனதில் தரித்துக்கொண்டு அங்கதன் ராவணனுடைய தர்பார் ஹாலின் முகத்வாரத்திற்கு வந்து சேர்ந்தான். அவனே மஹா தீரன், மஹா வீரன். சிம்மம் மாதிரி ராஜகம்பீரமாக அவன் இங்கு மங்கும் பார்த்தான். (111)

உடனே ஒரு ராக்ஷஸனை ராவணன் இருக்கும் இடத்திற்கு அனுப்பினுன். தன்னுடைய வருதலைப்பற்றி ராவணனுக்குச் செய்தி சமாசாரம் சொல்லி அனுப்பினுன். ராவணன் சிரித்துக் கொண்டு சொன்னுன்: ''அவனைக் கூட்டி வாருங்கள். அவன் எப்படிப்பட்டவன் என்பதை நாம் பார்க்கலாம்.'' (112)

ராவணனுடைய ஆக்ஞையைப் பெற்ற அநேக தூதர்கள் ஓடிவந்து அங்கதனை அழைத்துச் சென்றூர்கள். ராவணன் உயிருள்ள ஒரு கருப்புமை மலையைப்போல கம்பீரமாக காக்ஷி அளிப்பதை அங்கதன் கண்டான். (113)

அவனுடைய புஜங்கள் விருக்ஷங்கள் மாதிரி நீண்டும் அடர்த்தியாகவும், அவனுடைய சிரங்கள் மலையின் சிகரங்களின் கொடி முடிகள் போலவுமிருந்தன. அவனுடைய உடம்பில் இருந்த ரோமா வலிகள் அநேக கொடிகள்போல வளர்ந்திருந்தன. அவனுடைய முகங்கள், மூக்குக்கள், நயனங்கள், காதுகள், அநேக மலையின் குகைகள் போலவும், பிளவுகள் போலவுமிருந்தன. (114)

அதி பலம் கொண்ட வாலி தனயனுகிற அங்கதன் அரண்மனை தர்பாரில் நுழைந்ததுதான் தாமதம். அங்கே கூடியிருந்த சபையினர்கள் எல்லோரும் மிக்க மரியாதையுடன் எழுந்தார்கள். அங்கதன் பயமற்றிருப்பதையும் சபையினர்கள் எழுந்ததையும் கண்ட ராவணன் க்ரோதத்துடன் ஜ்வலித்தான். (115)

மத யானைகளின் கூட்டத்தில் ஒரு சிம்மம் எவ்விதம் பய

மின்றி உட்காருமோ, அதுபோல அங்கதன் ராமனுடைய பிரதா பங்களை ஸ்மரித்துக்கொண்டு அந்த சபையினர்களுக்கு தலை வணங்கி நமஸ்கரித்துவிட்டு உட்கார்ந்தான். (116)

ராவணன் உறுமினான். "குரங்கே, நீ யார்?" அங்கதன் பதில் சொன்னான். "தசகந்தரனே, நான் ரகுவீரனுடைய தூதன். என்னுடைய பிதாவான வாலிக்கும் உனக்கும் ஸ்நேகம் பூர்வோத்திரமிருந்தது. உனக்கு ஞாபகமிருக்கலாம். இதை நான் நினைத்துக்கொண்டு உனக்கு நல்லது செய்யலாம் என்று வந்திருக்கிறேன்." (117)

"அதுமாத்திரமில்லை. புலஸ்திய குலத்தைச் சேர்ந்தவனும், அவருக்குப் பௌத்ரனாகிற நீ மஹா உத்தம குலத்தைச் சேர்ந்தவன். சிவபெருமானையும் பிரும்மாவையும் நீ பலவிதங்களாக ஆராதனம் செய்திருக்கிறாய். உத்தமமான தவம் செய்து அவர்களிடமிருந்து சிறந்த வரங்களைப் பெற்றிருக்கிறாய். உன்னுடைய மனோபிஷ்டங்கள் யாவும் இனிதாக நிறைவேறப்பட்டிருக்கின்றன. லோகபாலர்கள் அனைவரையும், சகல அரசர்களையும் ஜயித்திருக்கிறாய்." (118)

"அரசனே, நீ அரசர்களுக்கு யேற்படும் புத்தி மயக்கம் கொண்டு அபிமானம் அடைந்தவனாக ஜகதாம்பாவாகிற சீதையை அபகரித்து வந்திருக்கிறாய். உனக்கு நான் சொல்லும் சுபமான வார்த்தைகளைக் கேள். என் வார்த்தைகளின்மீது விஸ்வாஸம் கொண்டு, ஸ்ரீ ராமச்சந்திரனிடம் மன்னிப்பு கேள். அந்த பிரபு உன் குற்றங்களை மன்னித்து, உன்னை அருள் பாலிப்பார். கால தாமதம் ஆகிவிட்டது என்று நினைக்காதே. அவர் உன்னை இப்போதுகூட மன்னிக்கத் தயாராக விருக்கிறார்." (119)

"உனது பற்களின் நடுவில் ஒரு புல்லையும், கழுத்தில் கோடாரியையும் வைத்துக்கொண்டு, உனது குடும்ப பரிஜன ஸஹிதம், மரியாதையுடன் ஜனகரின் பெண்ணான சீதையை அர்ப்பணம செய்வதற்காக ஸ்ரீராமனிடம் செல். உனக்கு யாதொரு பயம் வேண்டாம். அவர் உனக்கு ரக்ஷகத்தைத் தருவார்." (120)

"என் பிரபு ரகுவம்சமணி ஸ்ரீராமன் சரணாகதர்களை ரக்ஷிக்கும் பிரணத பால். அவருடைய ரக்ஷணம் இல்லாவிடில் இதத

ஜகத்தில் அரை நிமிஷம் வாழ முடியுமா? இவ்விதம் ஆர்த்தியாக பிரபுவின் ஆஞையை நாடு. நீ செய்த குற்றங்களுக்குப் பச்சாதாபப்படுகிறவன்போல, பிரபுவினிடம் சென்று, அவருடைய க்ஷமையைப் பிரார்த்தித்துக்கொள். பிரபு உனக்கு அபயம் அளிப்பார். உனக்குச் கவலைகளும், பாப பயங்களும் வேண்டாம்." (121)

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ராவணனுக்கு கோபம் வந்துவிட்டது. அவன் கர்ஜிக்க ஆரம்பித்தான். "குரங்குகளில் மஹா சிறியவனே, பாலனே, நீ பேசுமுன் யோசித்துப் பேசு. மூர்க்கனே, நான் தேவதைகளின் சத்ரு என்று உனக்குத் தெரியாதா? அடே தம்பி, உன் பெயரைச் சொல். உன் தகப்பன் யார்? என்பதைச் சொல். எந்த வார்த்தையினால் நாம் இருவர்களும் மித்ரர்கள் என்று சொல்லுகிறாய்?" (122)

அங்கதன் பதில் சொன்னான். "என் பெயர் அங்கதன். என் பிதாவின் பெயர் வாலி. என் பிதாவை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?" அங்கதனின் வசனங்களைக் கேட்ட ராவணன் சிறிது நேரம் யோசித்த பின்பு பதில் சொன்னான். "ஆமாம். இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. வாலி என்று ஒரு வானரம் இருந்தான்." (123)

"அடே அங்கதா, நீ வாலியின் புத்ரனா? அட குல நாசகனே, நீ வானர குலத்திற்கு விநாசமாக வந்திருக்கிறாயே. மூங்கில் காட்டிற்கு நெருப்பைப்போல குலத்தைக் கெடுக்க வந்திருக்கிறாயே. கர்ப்பத்திலேயே நீ அழிந்து போயிருந்தால் எவ்வளவோ நல்லதாக இருந்திருக்கும். இதுவரையில் நீ வளர்ந்திருப்பது வ்யர்த்தம். உன்னை ராமுனி வேஷம் கொண்ட தபஸ்விக்கு தூதன் என்று வேறு பறை சாற்றிக் கொள்ளுகிறாயே. இதைக் கேட்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது." (124)

"சரி. உனது குசலத்தைச் சொல். வாலி சௌக்யமா? அவன் இப்போது எங்கு இருக்கிறான்? சொல்." அங்கதன் சிரித்துக்கொண்டு பதில் சொன்னான். "ராவணா, பத்து நாட்கள் கழிந்த பின்பு வாலியினிடம் சென்று உன்னுடைய ஸ்நேகத்தை நினைத்துக்கொண்டு அவனுடைய சௌக்யத்தைப் பற்றி அவனிடமே கேள்." (125)

"ராவணா, நீ இப்போது ஸ்ரீராமனை விரோதித்துக்

கொண்டு விட்டாய். எங்கிருந்து குசலமும் சௌக்யமும் க்ஷேமமும் உனக்கு வரும்? அவன் உனக்கு எல்லாம் சொல்லு வான். நீ எண்ணிய கபட எண்ணங்களை நான் அறிவேன். பேத நீதி யாரிடம் பலிக்கும்? மூர்க்கனே, நன்றாகக் கேள். ஸ்ரீரகுவீரனைப் பஜித்துத் தொழும் ஆத்மாவை உன்னுடைய பேத நீதி யாது செய்யும்? ("ஹ்ருஷிகேசா சரணம்" என்று ராமனை ஸ்மரித்துக்கொண்டான் அங்கதன்.) (126)

[*தியானம்**

பிரபோ ஹ்ருஷீகேசா, கோதண்ட ஹஸ்தா, ராமசீதா, நாராயணா, ஸர்வ அந்தர்யாமியே, ஸ்வயம் பிரகாசனே, உன்னை பரத உள்ளத்தாலும், அர்ஜுனனுடைய அறிவினாலும், உமா மஹேஸ்வரர்களின் பக்தியினாலும் ஆராதிக்கிறேன். ஸ்வாமி, மஹா உரக சயனரே, நீர்தானே ஐம்புலன்களையும் நடத்துகிறவர். சூரிய ரூபராகவும் சந்திர ரூபியாகவும் ஸகல ஜகத்தையும் மகிழவைக்கும் பிரபோ, ஸந்தோஷமும், ஸௌக்யமும், ஐஸ்வர்ய மும் பொருந்தியவரே, ஹ்ருதி வேத்யனே, ஸஹஸ்ரபாஹுவே, ஸஹஸ்ரநயனனே, விஸ்வமூர்த்தி, உம்முடைய ரூபம் தேஜாமய மாகவும் விஸ்வம் பூராகவும் பரவி அனந்தமயமாக விருக்கிறது. ஆனாலும் உம்மை அடைவதுதான் மஹா கடினமாக விருக் கிறது. நீரே மனம் உவந்து உம்மைக் காண்பித்தீராகில் எனக்கு பாக்யமுண்டு. இல்லையென்றால் உமது திருவுள்ளம் இப்படியோ என்று பேசாமலிருக்கிறேன். வைகை நதியில் என்போன்ற வர்களும், வைதிக பெரியோர்களும், அன்று சீதையாகிற மஹா லக்ஷ்மியும், பரதனும் அர்ஜுனனும் ஆஞ்சநேயரும் கண்ட ஒரே ஒரு தெய்வமாக, உன்னைக் கருதி பேரருளாளன் நீயே, எங்களுக்கு ஸ்வாமியாகவிருந்து ஸர்வத்தையும் நியமிக்கும் அந்தர்யாமி நீயே, நல் நிலை மின் உருவாய், நாலு கரங்களில் சம்மட்டிகள் என்று சொல்லப்படும் முற்கரங்கள் கொண்ட உம்முடைய ஸ்வ ரூபத்தை எப்போது நான் காண்பேன்? ராமா, கிருஷ்ணா, உம் முடைய அனுஷ்டான விசேஷங்கள் சிறந்தவை. அவைகள் ஞான விசேஷங்களையும் அதிக்ரமித்து நிற்கின்றன. உம்மிடம் மோஹமும் த்வேஷமும் இல்லை. ஸ்வயம் பிரகாசமானவரான

* ஹ்ருஷீகேச நாமத்தின் ஸ்துதி.

படியால் ப்ரவிருத்தி தர்மத்தையும் நிவிருத்தி தர்மத்தையும் விரும்புகிறதோ, த்வேஷிக்கிறதோ இல்லை. தேகத்தில் ஆத்மாவாக, ஸுபர்ணராகவும், ஸர்வ சாக்ஷியாகவும் இருந்து கொண்டு, உதாசீனராக குண கார்யங்களான ராக த்வேஷங்களிலும் பற்றப்படாதவராக எல்லோருடைய கர்மங்களைப் பார்த்துத் தகுந்த பலன்களையும் அளித்து, பிரும்ம பாவத்துடன் ஸர்வாஸ்ரயமான நித்ய சுகத்திற்கும், ஸ்ரீதாமன் என்று சொல்லும்படி உத்தம சாந்தியுடன் விளங்குகிறீர். நீர் ஸமதர்சியாகவும் தர்மத்தை விட்டு விலகாமல் எல்லோருக்கும் பரம புருஷார்த்தமாக விளங்குகிறீர். ஹேஜகந்நிவாஸரே, உம்மையே பரமாம் கதி என்று நம்பி வாழும் நாரத தியாகராஜ வியாஸாதிகள் உம்முடைய சாந்தமானதும் ஸௌம்யமானதுமான ரூபத்தைக் கண்டு, எல்லா விஷய அபிமானங்களைத் துறந்து, எல்லா பிராணிகளிடத்திலும் ஸமமாகப் பழகுகிறார்கள். நீர்தான் என் ஜீவாத்மா. ஸத் அஸத் என்கிற சப்தங்களால் அறியப்படும் பிருகிருதி தத்வம். பிருகிருதி தத்வம் அதனுடன் ஸம்பந்தம் பெற்ற முக்தாத்மாவாகிற ஹிருஷீகேசரும் நீர்தான். புராண புருஷரே, அந்தமில்லாதவரே, உம்மைப் பயத்தினாலும், பக்தியினாலும், தாஸ்ய புத்தியினாலும் ஆராதிக்கிறேன். தேவ மாதா, காஸ்யபர், வஸுக்கள், பூர்வாசாரியர்கள் ஆராதித்த வழியில் வரும் அர்ஜுன சிஷ்யனாகிற எனக்கு கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடைய ஸ்ரீராமசீதா பதங்களை, திண்ணம் நாரணமே, தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து, தானே உண்டு உமிழ்ந்து, தானே யாள்வானே, ஆள்வானுழி நீர், கோள்வாயரவணையான் தாள்பாய் மலரிட்டு நாள்வாய் நாடீரே, நாவீர் நாடொறும் வாடா மலர்கொண்டு பாடீரவன் நாமம், வீடே பெறலாமே மாதவா, ஹ்ருஷீகேசா, சீதாராமா, லக்ஷ்மி நாராயணா, நீங்கள்தான் சரணம்; நீங்கள்தான் என் ரக்ஷகம்.]

“நான சொல்வது முழுவதும் ஸத்யம். உன் சொற்படி நான் என் குலத்தை நாசம் செய்யத்தான் வந்திருக்கிறேன். அதுமாதிரி நீயும் உன் குலத்தை ரக்ஷித்துக் காப்பாற்றத்தான் போகிறாய். ஆம். நீ குல பாலகன்; நான் குல தாலகன் (குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு). உனக்கு இருபது கண்கள் இருந்தும் குருடன்போல மதத்துடன் பேசிக்கொண்

டிருக்கிறுய். (உனக்கு ஆத்ம ஞானம் இல்லாமல், உன் உள்ளத்தில் உறைந்திருக்கும் ஹ்ருதி வேசயனை சோதண்ட ராமனை நீ உணர்ந்து கொள்ளாமல், குருடனைப்போல வெளி உலகத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிறுய். ரகுவீரனைத் தெரியாத, அறியாத ஆத்மா, குருடனேதான்.) ரகுவீரனுடைய பிரதாபங்களைக் கேட்காத காதுகள் உனக்கு இருபது இருந்தும், அவைகள் வ்யர்த்தப் தான். நீ செவிடனேதான். (ஸஹஸ்ர ஸ்ரோத்ரங்களும், ஸஹஸ்ர நயனங்களும் கொண்ட விராட்புருஷனை உன் அந்தர்யாமியாக அறிந்து கொள்ளாத போனுல், உனக்குப் பத்து தலைகளும், இருபது காதுகளும் கண்களும இந்திரியங்களும் யாவும் வீணுகவே ஸம்பாதிக்கப்பட்டன.) ஜகத்தில் இருக்கும் குருடர்களும் செவிடர்களும் உன்னைத்தான் குருடன், செவிடன் என்று சொல்லுவார்கள். என்னை ஒருக்காலும் சொல்லமாட்டார்கள்." (127)

"உனக்கு இன்னமுமா, ராமனின் பிரபாவங்களைப்பற்றித் தெரியவில்லை. ஆதி மறை ஓதும், எல்லோருடைய உள்ளத்திலும் ஸர்வாந்தர்யாமியாக ஆட்சி பீடம் செலுத்தி நீதி நெறி தவருமல் நிறுத்தி யிடும் பிரபுவை, வேங்கடவனை, நேசமுடைய (ஆழ்வாராதிகள் நிலைநின்று பார்ப்பார்கள் ;) சாது ஜனங்களான சிவன், பிரும்மா, தேவதைகள் முனி ஜனங்கள், நாம் வாழ்வதற்கு, அன்புடன் உஜ்ஜீவனம் செய்வதற்கு மனத்தை அடக்கி, இந்திரியங்களை வென்று ஸர்வ ஸங்கல்பரான பரமாத்மாவின் கிருபையை அடைவதற்கு சக்தி அற்றவர்களாக "கண்ணன் கழல்களில் சரணம் அடைந்து," "ஐயா, நாங்கள் உமது கிருபையால் பிழையற வாழவேண்டும், இரங்கு நீயே" என்று சொல்லி, "உமது சிந்தனையினுல் அனுதினமும் சிந்தித்து வாழ்நாட்களைப் போக்குகிறோம். எங்களுக்கு யோக க்ஷேமமும் தரும் மாதவன் ஹ்ருஷிகேசனுகிற நீ அல்லவோ, நின் கருணையினுல் அல்லவா," என்று சொல்லி க்ஷேமத்தைப் பெறுவார்கள். அப்பேற்பட்ட பரமார்த்தப் பொருளான சீதா ராமனுக்கு நான் தூதன் என்று சொல்வதில் என்ன தாழ்மை கண்டு விட்டாய்? [நான் என குலத்தை மேன்மைப்படுத்தவேனே தவிர, குலத்திற்குக் கெடுதல் விளைவிக்கமாட்டேன்.] ஹே ராவணு, உனக்கு இந்த மாதிரி புத்தி ஏன் ஏற்பட்டது? உன் ஹ்ருதயம் விண்டு போகவில்லையே?

இந்த மாதிரி நீசமான எண்ணம் உடைய நீ எவ்விதம் க்ஷேமத்தைப் பார்க்கப் போகிறாய்?" (128)

அங்கதனுடைய கடூரமான வசனங்களைக் கேட்ட ராவணன் கண்களைக் க்ரோதத்தினால் முழித்துக்கொண்டு, கோபத்தினால் உதடுகள் துடிக்கப் பேசினான். "அடே துஷ்டா, உன்னுடைய கடூரமான வசனங்களைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறேன. இப்பொழுது எனக்கு நீதியும் தர்மமும் புகட்டுகிறாய். நான் இதுவரை தர்ம வரம்பினாலும் ராஜ கௌரதையினாலும் உன் வார்த்தைகளைச் சகித்துக் கொண்டிருந் தேன். போதும், வாயை மூடு." (129)

அங்கதன பதில் சொன்னான். "உன்னுடைய தர்ம மரியாதைகளையும் சீலங்களையும் நான் நன்கு அறிவேன். உன் னால் பரஸ்திரி கபடமாக அபகரிக்கப்பட்டது. தூதனை ரக்ஷிக்க வேண்டும் என்கிற விஷயத்திலும் நீ கோபததுடன் கண்களைக் காட்டி பயமுறுத்துகிறாய். இப்பேற்பட்ட தர்ம வானையும் சீல விரதத்தை ரக்ஷிக்கும் பிரபுவை நான் நேரில் கண்டுவிட்டேன். நீ ஏன் வீண வாய்வீச்சாகப் பேச்சு பேசிக் கொண்டிருக்கிறாய்? எங்கேயாவது ஒழிந்து போவதற்கு என்ன? உன் முகத்தை வெளியில் காட்டாமல் தலை மறைவாக இருக்கிறதற்கு என்ன? அல்லது மரித்துப் போவதற்கென்ன?" (130)

"மூக்கும் காதுகளும் அறுபட்ட உன் தங்கையைக் கண்ட பின்பு தர்மத்தை அனுஷ்டித்து க்ஷமையைச் செய்தாயா? அல் லது உன்னுடைய தர்ம சீல நடத்தை ஜகம் முழுவதும் பரவியிருக் கிறதா? அடடா, அப்பேறபட்ட சுததமான தர்மசீல நடத்தை கொண்ட உன்னை இன்று யான் தரிசிககும் பாக்யம் கிடைத்தது பெரும் பாகயம்தான், ஆஹா பெரும் பாகயம் தான்." (131)

ராவணன் சொன்னான். "அடே, மந்த புத்தியுள்ள வானரமே, வ்யர்த்தமாக வார்த்தைகளைப் பேசாதே. மூர்க்கா, வாயை அடக்கு. இதோ பார். என்னுடைய இருபது கைகளின் பாஹு பலத்தைப் பார். சந்திர ரூபியாகிற அஷ்ட திக்பாலர்களின் விசாலமான பலத்திற்கு நான் ராஹுவுக்குச் சமமாகவிருக்கிறேன்." (132)

"அங்கதா, இதையும் நீ கேட்டிருக்கலாம். ஆகாச ரூபி யாகிற மானஸ ஸரோவரில் என்னுடைய புஜங்களின் ரூபமான கமல புஷ்பத்தில சம்புவைத் தாங்கும் கைலாஸ பர்வதம் ஒரு அன்ன பக்ஷியைப்போல மிதந்து சோபிதமாக விளங்கினது." (அதாவது மானஸ ஸரோவரில் உள்ள பத்மம் போல என் புஜங்களில் கைலாஸ மலை அன்ன பக்ஷியைப்போல மிதந்து கொண்டிருந்தது.) (133)

"அடே அங்கதா, உன்னுடைய சைன்யத்தில் என்னுடன் யுத்தம் செய்வதற்கு எவன் சாமர்த்தியமுள்ளவன் ஆவான்? சொல். உன்னுடைய எஜமானன் ஸ்திரியைப் விட்டுப் பிரிந்த தினல் பலஹீனனுகவிருக்கிறன். அவனுடைய தம்பி அண்ணனைப் பார்த்து அவனும் துக்க மயமாகவிருககிறன்." (134)

"நீயும் உன் அரசனுன சுக்ரீவனும் கரையில் இருக்கும் விருக்ஷங்கள்போல விருக்கின்றீர்கள். என் தம்பியிருக்கிறனே விபீஷணன் மஹா பயந்த ஸ்வபாவமுள்ளவன். ஜாம்பவான் என்கிற மந்திரி வயதானவன். அவனுல் யுத்தத்தில் நிலைத்து நின்று போராட முடியாது." (135)

"நளன், நீலன் இருக்கிறர்களே அவர்கள் சில்ப சாஸ்திரம் தெரிந்தவர்கள். அவர்களுக்கு யுத்தத்தைப் பற்றி என்ன தெரியும்? ஆனல் ஒருவன் நிஜமாகவே மஹா பலசாலியாக விருக்கிறன். லங்கைக்கு முதலில் வந்தானே, லங்கையையும் எரித்துக கொளுத்தி விட்டானே, அவன் வாஸ்தவமாகவே பல சாலிதான்." இதைக் கேட்டான் வாலி குமாரன் அங்கதன். (136)

அங்கதன் பதில் சொன்னன். "ராக்ஷஸ ராஜனே, சத்யமான வசனங்களைச் சொன்னய். ஒரு வானரம் லங்கையை எரித்தது என்று சொன்னயே, அது வானரம் என்று நினைக்கிருயா? அது ஒரு அல்பமான ஜந்து. சின்னம் சிறிய குரங்கு ஜகத் பிரஸித்தமான லங்கையை எரித்தது. அது மிக ஸத்ய மான வசனம்தான்." (137)

[தியானம்*

ஸ்ரீநாராயணு, பத்மநாபரே, ஸ்ரீ கர்ப்பரே, பூ கர்ப்பரே, ரத்ன

* பத்மநாப நாமத்தின் விமர்சனம்.

கர்ப்பரே, சரணம் சரணம். ஹே மனஸே, நீ ஏன் ஸ்திரமாய் நின்று ஆயிரம் கதிரவன் போல உருவாய் அழகிய சிவந்த திருக் கரங்களில் சக்கிரம் சங்கம், வாள், வில், தண்டு என்கிற பஞ்சாயுதங்கள் கொண்ட புண்டரீகாக்ஷனை எப்போதும் உனது பற்றுதலுக்காக அணுக்க மறுக்கிறாய். விஸ்வேஸ்வரராகிய பிரபு காலரூபமான கமலத்தில் பிரும்மாவை தனது நாபியில் சுமக்கிறாரே, அந்த பத்மநாபரை நினைக்க ஏன் மறுக்கிறாய்? பத்மநாபா, நீதானே அஷ்ட தளங்களோடு கூடிய அஷ்டாக்ஷரத்தை கமல ரூபமாக வகிக்கிறீர். ஹிரண்ய கர்ப்பரான நாராயணர் ஆதார மூர்த்தியாக பத்மாஸனத்தில் வீற்றிருந்து உபாஸனை செய்பவர்களால் அடையப்படுகிறார். அவருடைய நாபியில் இருக்கும் கமலம் உலகத்திற்குக் காரணமானபடியால் பூகர்ப்பர் என்று சொல்லப்படுகிறார். பதினான்கு உலகங்களையும் தனது நாபியில் தாங்கி, கமலம் போலவிருக்கும் மஹாலக்ஷ்மியை அணைப்பதால் ஸ்ரீகர்ப்பர் என்று சொல்லப்படுகிறார். போகங்களிலும் லீலைகளிலும் திருமகளை விட்டு எப்போதும் அகலாமல் இருப்பதால, ஸ்ரீகர்ப்பர், ரத்ன கர்ப்பர் என்று சொல்லப்படுகிறார். ஹே பிரபு, உமக்குள்ள லக்ஷணங்களில் மிக முக்கியம் லக்ஷ்மி பதித்வம், வேதங்களைக் காப்பாற்றுதல், ஸர்வ சேஷி ஸர்வ ஸ்வாமியாக விளங்குதல், தர்மம் என்கிற ஆசரணையினால் ஸகலரையும் வசப்படுத்தல், பக்தி பிரபத்தி யோகத்தினால வந்தவர்களை ஆஸ்ரிதர்களை ரக்ஷித்தல் ஆகிய பெருமைகளைக் கொண்ட பிரபு; ஸநந்தனர், ஸனத் குமாராதிகளால் மிக்க சிரமத்துடன் ஆராதிக்கப்படுபவர். ஹே மனஸே, உனக்கு ஸ்வாமியாகவும் ரக்ஷகமாயும் இருக்கும்போது, அவரை ஏன் அடைய மாட்டாமல், நீ ஏன் பிணக்கு பண்ணுகிறாய்? இனியாவது நான் சொல்வதைக் கேள். பத்மநாபரின்றி நீ அரை க்ஷணமும் வாழ முடியாது. எங்கேயாவது சிவசக்தி ரூபமின்றி ஜடமுள்ள சேதனனும் ஈஸ்வர பிரபாவங்களை அறிவானோ? உன் பிணக்குதலை விட்டு விட்டு, அரவிந்த நேத்ரமுள்ள நாராயணனை, மஹாகோசரை சரணம் அடை.)

"ராவணா, அந்தக் குரங்கைப் பற்றி புகழ்கிறாயே, அவன் சுக்ரீவனுடைய மிக மிகச் சிறிய சேவகன். நீ யாரிடம் பெரிதான ஏற்பாடுகளால் யுத்தம் செய்தாயோ, அந்த வானரம்

இங்குமங்கும் அனுப்பப்படும் தூதனுடைய வேலையைக் கொண்ட சிறிய வானரம். அவன் வீரனே இல்லை. அவனை நாங்கள் செய்தி சமாசாரங்களைக் கொண்டு வருவதற்கு உபயோகிப்போம்." (138)

"அந்த வானரத்திற்கு எங்கள் பிரபு லங்கையை எரிக்க ஆக்ஞையைத் தரவில்லை. அவ்விதமிருந்தும் அது லங்கையை எரித்து விட்டது. அதனால் அந்த வானரம் பயந்துகொண்டு சுக்ரீவனைச் சந்திக்காமல், மிக்க பயத்துடன் ஒளிந்துகொண்டிருக்கிறது." (139)

"ராவணா, நீ சொல்லிய வசனங்கள் யாவும் ஸத்யமானவை. அவைகளைக் கேட்ட நான் கோபமோ கிரோதமோ கொள்ளவில்லை. உன்னோடு யுத்தம் செய்வதற்குச் சமமாகவோ, யோக்யமாகவோ எங்கள் சேனையில் ஒருவரும் இல்லை. அவ்விதம் உனக்குத் தகுந்த யோக்யமான வீரன் உன்னோடு சண்டை செய்வதற்கு இல்லாதபோது, எவ்விதம் உனக்கு சோபை தரும்?" (140)

"உலக வழக்கம் என்ன தெரியுமா, ப்ரீதியோ விரோதமோ, சரிகுச் சமமானவர்களிடம் காட்டவேண்டும். ம்ருகபதியான சிம்மம் தவளைகளைக் கொன்றால், அதனால் கீர்த்தி அதற்கு ஏற்படுமா? அல்லது அதுதான் அதற்கு க்ஷேமத்தைத் தருமா?" (141)

"உன்னைக் கொல்வதில் ஸ்ரீராமனுக்கு எளிதான காரியம். ஆனால் அது அவருக்கு கடுத்த தோஷத்தையும் விளைவிக்கும். அவருக்குச் சமம் நீ அல்ல. தசகண்ட ராவணனே, இப்போது என்ன செய்யக்கூடும்? ஸ்ரீராமன் க்ஷத்திரியன்தானே. அந்த ஜாதிக்கு உரியதான க்ரோதம் மிக மிக கடினமாயிற்றே. உனக்குத் தெரியுமா?" (142)

அங்கதன் இவ்விதம் வசன ரூபியாகிற பாணங்களால் வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல ம்ருதுவான வக்ரோக்தியினால் தனுஷ்ஷில் பூட்டப்பட்ட பாணங்களால் எதிரியான ராவணனுடைய ஹ்ருதயத்தை அடித்து எரிய விட்டான். அந்த வசனங்களுக்கு ராவணன் பதில் சொல்வதைப் பார்த்தால், அவன் தன் மார்பிலிருந்து ராம பாணங்களை ஒவ்வொன்றாக எடுப்பதுபோலிருந்தது. (143)

அவன் சிரித்துக்கொண்டே அங்கதனுக்குப் பதில் சொன்னான். "அங்கதா, வானரங்களுக்கு ஒரு விசேஷ குணம் இருக்கிறது. அது யாரால் காப்பாற்றப்பட்டு, போஷிக்கப்பட்டு வருகிறதோ, அந்த எஜமானனை அது பல உபாயங்களால் சேஷ்டைகள் செய்து தனது பதியைத் திருப்தி செய்துவிக்கிறது." (144)

"வானரர்கள் நிஜமாக தன்யர்கள்தான். அவர்கள் லஜ்ஜையைவிட்டு, தங்கள் எஜமானனின் திருப்திக்காக சமயா சமயம் அறியாமல், எப்பொழுதும் நர்த்தனம் செய்கின்றன. குதித்து விளையாடுதல்களினால் அவைகள் எஜமானர்களையும், அந்தக் காக்ஷிகளைப் பார்க்கும் ஜனங்களையும் ஆனந்தப்படுத்துகின்றன. இவ்விதம் எஜமான ப்ரீதியைச் செய்து வாழும் வானரர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவன்தானே நீ? அதனால் உனக்கு இந்தக் காரியத்தில் நிபுணத்வமிருக்கிறதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை." (145)

"அங்கதா, உங்கள் வானர ஜாதி ஸ்வாமி பக்தியுள்ள தாஸ்ய ஜாதி. அதனால் நீ உங்கள் பிரபுவை அளவுக்கு மீறி வர்ணிக்கிறாய். உன்னைக் குற்றம் சொல்வதில் ஒரு தப்பும் இல்லை. நானோ, யார் எதைச் சொன்னாலும் சரி, செய்தாலும் சரி, குணத்தையே, நல்லதையே கிரஹிப்பேன். எது நல்லது, எது கெட்டது, என்கிற ஸ்வரூப ஞானமும் எனக்குத் தெரியும். அதனால் வாய்க்கு வந்தபடி நீ பேசிய வசனங்களை நான் காது கொடுத்து இது வரை கேட்டுக் கொண்டிருந்தேன். இனி நான் கேட்கப்போவதில்லை." (146)

அங்கதன் பதில் சொன்னான். "ராவணா, உன்னால் அனுஷ்டிக்கப்படுவதாகிய குணங்களையே கொள்ளும் பழக்கம் இருக்கிறதே, அதைப்பற்றி நான் வாயு குமாரனாகிற ஹனுமாரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டேன். அந்த ஹனுமார் அசோக வனம் முழுவதையும் எரித்து விட்டார். உன புத்ரனையும் கொன்றுவிட்டார். அவ்விதம் உனக்கு அவர் மஹத்தான அபகாரம் செய்தும், உன் கண்களில் அவன் ஒரு அபகாரமும் செய்யவில்லை என்று நினைத்துக்கொண் டிருக்கிறாய்." (147)

"அடே அப்பா, உன்னுடைய அழகான சீல நடத்தைகளை

உன் மனதிற்குள் ஆராய்ந்து பார். தசக்ரீவா, நானும் உனக்கு அவமானம் செய்திருக்கிறேன்: ஹனுமார் உன்னைப்பற்றி என்னிடம் சொல்லிய வசனங்களையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். நானும் நேரில் உன்னையும் பார்த்துவிட்டேன். உனக்கு லஜ்ஜை ஒன்றும் கிடையாது. ரோஷமும் மானமும் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் தர்ம வரம்புமில்லை." (148)

[*தியானம்**

"ஹே தாமோதரா, நாராயணா, ப்ருஸ்னிகர்ப்பரே, மார்க்கண்டேயர், நாரதர், வியாஸர், ஸப்த ரிஷிகளால் சேவிக்கப்படும் ஜனார்த்தனரே, கிருஷ்ணா, சீதாராமா, உம்மை தாமர் என்று அழைப்பதின் காரணம் நீர் சராசரங்களனைத்தையும் தாங்குகிறபடியால் பிரளய காலத்திலும் அழிந்துபோன சராசரங்களின் வித்துக்களைத் தாங்குவதாலும், தர்மங்கள் எனப்படும் உலகங்களைத் தமது உதரத்தில் சிசு மாதிரி வைத்து, அதை ரக்ஷகம் செய்வதால் அல்லவோ? யசோதையும் கௌஸல்யையும் கண்ட உலகளந்த பெருவாயா, தேவர்களுக்கும் அதிதி தேவிக்கும் சுகம் கொடுக்கும் காரணத்தால் அல்லவோ நீர் தாமோதரர் என்று அழைக்கப்படுகிறீர். கௌஸல்யையின் ஸுப்ரஜாராமா, யசோதையின் பாக்யமே, திருமகளும் ஆசையுடன் தேடிப் போகும் மஹா பெருமைகள் உள்ள உனது தேகத்தை அன்பினால் எனக்கு அளிக்கமாட்டாயா? உம்மை யசோதை கயிற்றினாலும் கௌஸல்யை தங்க அரிணாலும் இடுப்பைக் கட்டும்போது, அவர்களுடைய முகத்தில் முத்துக்கள் போலவிருக்கும் வியர்வைத் துளிகளைப் பார்த்து ரசித்த ராமா, கிருஷ்ணா, எனது எளிமையையும் தீனமான ஸ்திதியையும் பாரீரோ! நள கூபன் மணிக்ரீவன் ஆகியவர்களால் சேவிக்கப்படும் ஸ்ரீதாமரே, ஆஞ்சநேயர் மார்க்கண்டேயர் சுகரால் கண்டு தேடி அலையப்பட்ட மரகத ரத்னம்போல உன்னுடைய மங்கள விக்ரஹத்தை, பிம்பாதரனும் சரத் சந்திரனை வெல்லும் அதி மந்தஹாஸத்துடன் விளங்கும் உன் பால ரூபததை நான்கு பாசங்களை திருக் கைகளில ஏந்திக்கொண்டு, லக்ஷ்மி தேவியினால் அரவிந்தத்தால் விளையாட்டுக்களை காண்பிக்கும்

* தாமோதர நாமத்தின் விமர்சனம்.

போது. தாம் ஒரு இளம் கதிர்போல, என் மன இருளை அகற்றும் பாலகிருஷ்ண திவாகரனை, ராம திவாகரனை எப்போது காண்பேன்? உம்முடைய அழிவற்ற ஸத்யத்வத்தையும், பிரளய காலத்திலும் விமர்சனம் செய்வதுபோலவும், ஞான அனந்தத்தையும், ஆனந்த, பரிபூர்ணத்தையும், அமலத்வம் ஆகிற ஐந்து குணங்களையும், அழிவற்றதான பதினான்கு லோகங்களையும், அழிந்தும் மீண்டும் ஏழும் பீஜமவ்யம் என்று சொல்லப்படும் இயல்புடைய லீலா விபூதியையும் ஸ்ரீவத்ஸ மறுவுடன், பிராட்டியுடன், ஸ்ரீதரனை எப்போது காக்ஷி அளிப்பீர்? உன்னுடைய ஸ்வரூபத்தைப் பார்த்து, கர்மங்களும் வஸ்துக்களும் ஞானங்களும் அடியவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் மன சங்கல்பங்களும், எல்லாவற்றிற்கும் பேரருளாளராகத் திகழ்ந்து, அந்தர்யாமியாக உட்புகுந்து உயிருக்குள் உயிராக விளங்கும் ஸர்வ சரீரியே, என்னையும் என் புலன்களையும், மனம், பிராணன் ஆகிய எல்லாவற்றையும் மேய்க்கும் ஆத்மாவே, உமக்கு உட்படாத என் தேகமும், கர்மாக்களும் யாவும் வீணே. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள உறவு ஸநாதனம், நான் உய்வதற்கு விரோதிகளான தடைகளைக் களைந்து, பிருஸ்னிகர்ப்பரே என்று திரிதர் கூறியதுபோல, சொல்லி உம்மை சரணமடைகிறேன். ஆத்மாவுக்கும் உடலுக்கும் உள்ள ஸம்பந்தம், நல்லி சித்தாந்தங்களில் சந்தேகம், புலன்கள் வாயிலாகக் கிட்டும் போகங்கள் நிலையுள்ளன என்கிற விபரீத ஞானம், தகாத அதர்ம வழியில் சென்றும் மதத்தினால் உம்மை அறியாமலிருப்பது, மற்றைய ஜீவர்களையும் தன்னைப்போல கருதாமல், ஹிம்சை முதலியவை செயதலும், ஜனன மரண பிணிகளில் தோய்ந்துபோகும் உறவை அறுக்கத் தெரியாமல் மயங்கி மோஹம் பயம் பாபம் ஆகியவைகளில் மீண்டும் மீண்டும் விழுதல் என்கிற ஸ்தான பிரம்ஸம் அடைதல், இவைகளிலிருந்து, பிரபோ, துருவனைப்போல உமது திருவருளால் அல்லவோ நான் விடுபடவேண்டும். அந்தர்யாமியே, மெய்யருள் செய்திடும் திருமாலே, எனக்கு உன் திருமாதுடன் நின்று அயன் பணியும் அருளான அடியினைகளை எனக்கு என் ஆனந்தத்திற்குக் கொடுக்கமாட்டாயா? நான் எவ்வளவு காலம் பொறுத்திருக்கவேண்டும்?]

ராவணன் சொன்னான். "வானரா, சரி இப்போது புரிந்து கொண்டேன். உன்னுடைய மதி கெட்டுப் போய் விட்டது. உன் பிதாவும் இறந்துபோய் விட்டார். ஆகா, கெடுமதி யானே," என்று சொல்லிக்கொண்டு ராவணன் பலமாகச் சிரித்தான். அங்கதன் பதில் சொன்னான். "ஆமாம். நான் என் பிதாவின் இறப்புக்குக் காரணமாயிருந்து, இப்போது உன்னையும் சாக அடிப்பதற்கும் வந்திருக்கிறேன். ஆனால் ஒரு யோசனையினால் தடுக்கப்படுகிறேன். அதனால் உன்னை நான் உடனே கொல்லவில்லை." (149)

"மதம், அபிமானம் கொண்ட தசகண்ட ராவணா, நீ உயிருடனிருந்தால் என் பிதாவான வாலி புகழுடன் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதுபோல விருக்கிறது. ராவணா, என் தகப்பனரால் தண்டிக்கப்பட்ட ராவணன் என்கிற பெயருடன் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? பதில் சொல். உனக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லாவிடில் நான் சொல்லுகிறேன். உன் இருபது காதுகளால் கேள்." (150)

"ஒரு ராவணன் பலிச் சக்கிரவர்த்தியை ஜயிப்பதற்கு பாதாள லோகம் சென்றான். அவன் குழந்தைகளின் விளையாட்டு பொம்மையைப் போல கட்டப்பட்டு குதிரை லாயத்தில் சிறை வைக்கப்பட்டான். பாலர்கள் அவனை விளையாட்டுக் கேலிகள் செய்து அடித்து இன்புற்றார்கள். பலிக்கு தயை பிறந்தது. அவன் அந்த ராவணனை சிறையிலிருந்து விடுவித்தான். (151)

"இன்னொரு ராவணன் இருந்தான். அவனை ஆயிரம் கைகள் உள்ள ஸஹஸ்ரபாஹுவாகிற கார்த்திய வீர்யார் ஜுனன் பார்த்தான். அவனை உடனே ஸஹஸ்ரபாஹு ஒரு அதிசயமான ஜந்து, பத்துத் தலைகள் இருபது கரங்கள் உள்ளவையாக யிருக்கின்றதே என்று அதிசயித்து, அந்த ராவணனை சிறைப்படுத்தி கௌதூகலத்துடன் தனது கிரஹத்திற்கு அழைத்து வந்தான். புலஸ்திய மஹரிஷி கார்த்திய வீர்யார்ஜுனனிடம் சென்று, அவனை சிறை மீட்டு வந்தார்." (152)

"மேலும் ஒரு ராவணன் இருந்தான். அவனைப் பற்றிச் சொன்னாலே எனக்கு ஸங்கோசமாக விருக்கிறது. சில தினங்

களுக்கு முன்பு வாலியினுடைய இரு புஜங்கள் நடுவிலே சிறை வைக்கப்பட்ட அவன் எனக்கு விளையாட்டு பொம்மையாக வரிக்கப்பட்டான். அவனும் சில நாட்களுக்குப் பின்பு சிறை விடுவிக்கப்பட்டான். இப்பேற்பட்ட ராவணன்களில் நீ எந்த ராவணன்? ஸத்யமாகச் சொல். என்னிடம் கோபித்துக்கொள் ளாமல் உண்மையைச் சொல்.'' (153)

ராவணன் உறுமினன். "அடே மூர்க்கா, நீ கேட்ட கேள் விகளுக்கு பதில் சொல்லுகிறேன், கேள். மிக்க பலசாலியான ராவணன் என்று யாவராலும் கருதப்படும் ராவணனைப்பற்றிச் சொல்கிறேன். என்னுடைய இருபது புஜங்களின் மகிமைகளால் விளையாட்டாகவே கைலாஸ பர்வதம் பெயர்த்து எடுக்கப்பட் டது. அந்த பர்வதத்திற்கு என் பலத்தைப்பற்றி நன்ருகத் தெரியும். என்னுடைய வீரத்தைப்பற்றி உமாபதியான சங்க ரரிடம் கேள். என்னுடைய பக்தி நம்ரதைகளைப்பற்றி உமா சம்புவைக் கேள். நான் என் இருபது தலைகளை ஒவ்வொரு சிரமாக, உமா மஹேஸ்வரர்களுக்கு புஷ்பம் மாதிரி அறுத்துக் கொடுத்து பூஜை செய்திருக்கிறேன்.'' (154)

"அதுமாதிரி நான் ஒரு தடவை செய்யவில்லை. கணக் கற்ற தடவைகள் செய்திருக்கிறேன். எனது கைகளால் கமல புஷ்பத்தைப் பறிப்பதுபோல, என் சிரங்களை நானே கொய்து திரிபுராரியான சம்புவுக்கு அர்ப்பனம் செய்திருக்கிறேன். நான் அவரை மஹா விஸ்வாசத்துடன் ஆராதனை செய்திருக்கிறேன். அடே மூர்க்கா, எனது புஜபலத்தைப்பற்றி நீ அறிய ஆசை கொண்டால் திக்பாலர்களிடம் போய் கேட்டு அறிந்துக்கொள். அஷ்டதிக்பாலர்களும் இன்றும்கூட நான் அவர்களுக்குச் செய்த அவமரியாதைகளை நினைத்து நினைத்து ஹிருதயத்தில் குன்றி வாடி வதங்கி, அழுதுகொண் டிருக்கிருர்கள். (155)

"அதுமாதிரி அஷ்டதிக் கஜங்களைப் போய்க் கேட்டுப் பார். என்னுடைய கடினமான மார்பு பிரதேசம் அந்த திக்கஜங்களின் பயங்கரமான தந்தங்களைத் தாங்கியபோது, அவர்களை நான் மிக்க ஜபர்தஸ்துடன் எதிர்த்து நின்று போராடினேன். அப் போது அவைகள் என்னை முட்டித் தள்ளியபோது, அவைகளின் தந்தங்கள் என்னுடைய எலும்பின் கடூரத்தனத்தைத் தாங்க முடியாமல் முள்ளங்கியைப்போல ஒடிக்கப்பட்டன. பாவம்,

அவைகள் இன்னமும் ஒடிந்த தந்தங்களுடன் திரிகின்றன." (156)

"அடே அங்கதா, நான் நடக்கும்போது இந்த ப்ருதிவி பயந்து நடுங்குகிறது. இந்த பூமி ஒரு சிறிய ஓடத்தை ஒரு மத யானை தூக்குவதுபோல, தூக்கி நடுங்கிக்கொண்டு, தான் இருந்தவிடம் தெரியாமல் அசைந்து ஒடுங்கிப் போகிறது. அப்பேற்பட்ட ராவணன் நான் தெரியுமா? ஜகத் பிரஸித்த பிரதாபம் உள்ளவன். யாரிடம் உன் நையாண்டிப் பேச்சு செல்லும்? இப்பேற்பட்ட ராவணனைப்பற்றி நீ கேட்டிருக்கிறாயா?" (157)

[*தியானம்*

ஹே ஜானகி நாதா, ராமா சீதா, நீ சகாயம் செய்யும்போது எனக்கு சோகமும் பயமும் ஏன் ஏற்படும்? கிரஹ பலம் என்று சொல்லுகிறார்களே, ராமா, நீதானே இந்த கிரஹங்களின் மனத்தில் வசித்துக்கொண்டு ஹ்ருஷீகேசனாகவும், கோதண்ட ஹஸ்தனாகவும், ஸர்வ ஸ்வாமியாகவும் விளங்குகிறாய். காலமும், அந்தக் காலத்தை நடத்தும் காலாந்தகனும் நீதானே, அப்பா? நாராயணா, ஏன் சீதை பொறுமை விரதத்துடன் இருந்தாள்?; அல்லது நீதான் அவளையும் பரிக்ஷித்ததினாலோ?– சொல் அப்பா. உனக்கு மோஹமா அல்லது அவளுக்குப் பயமா? உன்னை ஆத்மா என்று தெரிந்துகொண்டவர்கள் சீதையையும் ஆத்மாவென்று தெரிந்து கொண்டால்தானே, பயமும் சோகமும், மஹா மோஹம் எனப்படும் அவித்யையும் போகும்? தர்மமும் ஒருவிதப்பட்ட மோஹம்தானே. காய க்லேசங்கள் செய்து தர்மத்தை அனுஷ்டிப்பதினால், மோஹத்தைத் தவிர, பயமின்மை போய்விடுமா? பயமின்மை யிருந்தும் சோகம் போய்விடுமா? ஹிருதிவேதியனாக நீ இருந்துகொண்டு ஸர்வ சாக்ஷியாக, விளங்குகிறாயே. உங்களால் நடித்தும், ஆசரணை செய்யப்படுவதும், கர்ம சுத்தத்திற்கா, அல்லது ஞான சுத்தத்திற்காகவா, அல்லது உங்களை ஆத்மாவென்று அறிவதற்காகவா? மன அடக்கம் செய்த மஹா யோகிகள் ராமா, சீதா உங்களைப் பரம சாந்தர்களாகப் பார்க்கிறார்களே. அதுவும் உங்களை ஆத்மா தேகம், ஈஸ்வரன் உலகம், அனபா

யினி என்று சொல்லப்படும் பிராட்டி எம்பெருமான் ஆகிய ஐக்ய காடோபகூடமான மிதுன சேர்க்கையா? அர்ஜுனனைப் போலவிருக்கும் நரோத்தமர்கள் வாழ்ந்த பாதையில் வரும் எனக்கு எப்படி உங்களுடைய ஸ்வரூபம் புரியும்? எவ்விதம் உங்களுடைய ஸஹாயமும் ஸ்நேகமும் கிடைக்கும்? எவ்விதம் உங்களுடைய தயை என்னிடம் பிறக்கும்?]

"அப்பேற்பட்ட மஹானும் ஜகத் பிரதாபங்கள் உள்ள ராவணனை நீ சிறியவனாக மதித்து, ஒரு சாதாரண மனிதனைப் போலவிருக்கும் தசரத புத்ரனாகிற ஸ்ரீராமனை உன்னதமான பீடத்தில் அமர்த்தி ஹ்ருதிவேதியனாகச் சொல்லுகிறாயே. யாரிடம் உன் பேச்சுக்கள் செல்லும்? அடே துஷ்டா, பொய் பேசுகிறவனும், நீச ஜாதியிலும் பிறந்த வானரமே, உன்னுடைய புத்தி விசாலத்தையும் ஞானத்தையும் நான் இப்போது நன்றாக அறிந்துகொண்டேன்." (158)

அங்கதன் இந்த வார்த்தைகளைக் கேட்டு கிரோத மூர்ச்சிதன் ஆனான். அவனுக்குக் கோபம் வந்தது. வார்த்தைகள் பீறிட்டுக்கொண்டு வந்தன. "அட ராவணா, நீசனே, அபிமானியே, வணங்க முடியானே; நீ பேசும் பேச்சுக்களில் பிறரை மதித்துப் பேசு. ஆயிரம் கைகள் கொண்டவனும், அபார மகிமைகள் உள்ளவனும், வனம்போல அடர்ந்து வளர்ந்து வந்தவனுமான கார்த்தியவீர்யார்ஜுனனுக்கு அக்னியைப்போல இருந்தாரே, அந்த பரசுராமன். (159)

அவருடைய பரசுவின் மகிமையினால், ஸாகரம்போலவிருக்கும் அபார ஆழமுள்ள ஜலத்திரள்களின் கணக்கற்ற அலைகள் இருந்தனவையே, அந்த அலைகளில் எத்தனையோ அரசர்கள் மூழ்கி காலவரையின்றி மரித்துப் போனார்களோ, அப்பேற்பட்ட பிருகுகுல பரசுராமனின் கர்வம் இருக்கின்றதே, எவருடைய பெயரைக் கேட்டவுடன் ஸகல க்ஷத்திரியர்களும் பயந்து, ஓடி ஒளிந்து கொள்ளுவார்களே, அடே, அபாக்யமுள்ள தசக்ரீவா, அவ்வித மகிமையுள்ள பரசுராமரே, ராமனைக் கண்டு கர்வத்தை விட்டவராக, அடங்கிப் போனாரே, அந்த தசரத ராமனையா நீ சாதாரண மனிதனாக நினைக்கிறாய்? உனது அக்ஞானத்திற்கு நான் மிக்க வருந்துகிறேன்." (160)

"மூர்க்கனே, உத்தண்டமான அதிகப் பிரசங்கியே, நீ

ராமச்சந்திரனை மனுஷ்யன் என்று சொல்லுகிறாய்? நீ அவ்விதம் சொல்வாயாகில், காமதேவனைக்கூட ஸர்வ சாதாரண வில்லாளி என்றுகூட சொல்லி விடுவாய். ஸர்வ ஜாதிகளையும் காமத் தால் [ஸர்வ சம்மதத்துடன்] ஆக்ரமிக்கும் மன்மதன் சாதாரண வில்லாளியா? அதுபோல ஸர்வ பாபங்களையும் போக்கும் கங்கா பிரவாஹமும் ஸர்வ சாதாரண நதியா? அட முட்டாளே, ஸுரதேனுவாகிற காமதேனுவும் ஸர்வ ஸாதாரண பசுவா? கல்ப தருகூட ஒரு ஸர்வ ஸாதாரண விருக்ஷமா? உன் புத் தியைப்போய் நான் யாரிடம் சொல்லுவேன்? அட மூர்க்கா, ஸர்வ தாபங்களை நீக்கும் அன்னதானத்தை ஸர்வ சாதாரண மான தர்மம் என்று சொல்லுவாயா? பாற்கடலில் கடைந்து எடுக்கப்பட்ட அம்ருதமும் ஸர்வ சாதாரணமான ரஸமா?"(161)

"முட்டாள், பலமான பிரசண்டமான காற்று அடிக்கிறதைப் போல பறந்துவரும் பகவான் விஷ்ணுவின் வாகனமான கருட னும் ஒரு சாதாரண பக்ஷியா? [ஸர்வ ஸத்வமான ஆசாரியரும், முக்குணங்களை ஜயித்த ராமானுஜனுகிறவரும்] ஆதிசேஷனும் ஸர்வ சாதாரண ஸர்ப்பமா? (பகவான் ரங்கனுதனுடைய போக பர்யங்க சயனமல்லவா அவர்?) ஸர்வாசா பரிபூரகம் செய்யும் அம்பிகையின் சக்தி ஒளியைப் பெற்ற சிந்தாமணியும் ஸர்வ சாதாரணமான ரத்னமா? உன்னுடைய மதிமந்தத்தையும், அபார அபிமானத்தையும், வணங்காமுடித் தனத்தையும் நான் யாரிடம் சொல்லுவேன்? பரமபத நாதன் எழுந்தருளியிருக்கும் வைகுண்டமும் (ஸர்வ சாதாரணமானதும் காலவரையில் அழி வதும், மூப்பும் இறப்புகளைக் கொண்ட தேவலோகம் பூலோகம் போன்ற) சர்வ சாதாரண லோகமா? ஸ்ரீ சீதாபதியாகிற ரகு பதியினிடம் கொண்ட அகண்டமான பிரேமை ஸர்வ சாதாரண மான லாபமா? ஐயோ, நீ மோசம் போய்விட்டாய். உன் அறிவை யும், அக்ஞானத்தையும் கண்டு நான் மிக்க வருந்துகிறேன்." [ஹா ராமா, நீயல்லவோ பரம புருஷார்த்தம்.] (162)

[*தியானம்*

ஹே உமா, சம்போ, திரியம்பகரே, திரிதசஸ் ஸ்ரேஷ்டரே, எனக்குச் சுகந்தமானவர்களே, எனக்குப் புஷ்டியையும், ஆரோக் யத்தையும், மன சாந்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கும்

உமாபதி, உங்களை நினைத்து கீர்த்தனம் செய்பவன் ஆயுசை அடைகிறான். மன சாந்தியையும், விவேக ஞானத்தையும் அடைகிறான். உட்பகை, வெளிப் பகைகளையும் வெல்கிறான். ஆத்ம பந்துவை அறிகிறான். கால பைரவா, காலாந்தகரே, சீதாபதி, ரமாபதி, உமாபதி, சரஸ்வதி பதியே, சதி பதியே கிருபை செய்யவேண்டும். அன்று பார்வதி சம்புவிடம் சொன்ன வார்த்தைகள் எனது ஞாபகத்திற்கு வருகின்றன. ''மஹரிஷிகளின் மித்ரரே, காமத்தையும் கோபத்தையும் வென்ற திரியம்பகரே, கிருபை செய்யவேண்டும். நாகபூஷணம் அணிந்தவரே, உமது சொற்கள் மிக்க இனியவயையாகவும் மன சாந்தியையும் கொடுப்பதாகவுமிருக்கின்றன. தேவர்களுக்கும் தேவரே, உமாதேவி, உமையின் மணம் தேக ஒற்றுமை, உம்மிடம் அவள் கொண்டுள்ள பக்தி, உம்முடைய தர்மங்களை ஒற்றுமை யுடன் வகித்து நடத்திக் காட்டும் என் சிந்தாமணி, நீங்கள் இருவர்களும் உலகங்களின் ஹிதத்திற்காக வாழ்கிறீர்கள். குஹனுடைய மாதாவே, விக்னேஸ்வருடைய பாக்யமே, பஞ்ச முகரே, முத்தலை சூலத்தை தரித்திருக்கும் சூலபாணியே, தக்ஷயாகத்தை அழித்தவரே, உம்முடைய மகிமைகள் அனந்தம். உமக்கே உரித்தான கிருபையும் அதிகம், ஆச் சர்யமாக விருக்கிறது. தர்மத்தை முதன்மையாகக் கொண் டிருப்பது உமக்கே தகும். நந்தி பிரமத கணங்களால் சூழப் பட்டிருக்கும் நம: சிவாயமே, உம்மால் அனுக்ரஹிக்கப்பட்டா லும் சரி, நிக்ரஹம் செய்யப்பட்டாலும் சரி, உம்முடைய திருவருள் எனக்குப் பரிபூர்ணமாகக் கிடைக்கவேண்டும். எனக்கு ரக்ஷையை உமாதேவியுடன் கூடிய சம்போ, ஸ்கந்தரே, நீங்கள்தான் அன்புடன் அளிக்கவேண்டும். கிருபை செய்ய வேண்டும். உமா சம்போ, கிருபை செய்யவேண்டும்.]

''அடே ராவணா, உன்னுடைய சேனையையும் அழித்து, அத்துடன் அசோக வனத்தையும் எரித்து, உன் புத்ரனாகிற அக்ஷய குமாரனையும் கொன்று, அத்துடன் உன் மானத்தையும் அழித்தாரே, உன் நகர ஜனங்களுக்குப் பயத்தைக் கொடுத்து உனக்கும் நடுக்கத்தை உண்டுபண்ணினாரே, ஹனுமான், என் குலநாயகன், மஹா வீரன், அடே துஷ்டா, சமுத்திரத்தை ஒரே மூச்சினால் தாண்டி லங்கைக்கு வந்திருந்து மேலே

சொன்ன அசாத்யமான காரியங்களைச் செய்தாரே, அந்த ஹனுமான் ஸர்வ சாதாரண வானரமா? (கஷ்டங்களிலிருந்து தன் பந்து ஜனங்களையும் விடுவித்து, ஜகத்திற்கு ஹிதத்தைச் செய்யும் பிரபு, ஸர்வ சுகந்தமான புருஷன், பக்தர்களுக்கு உத்தமமான அனுக்ரஹம் செய்பவர், உனக்கும் நன்மையாகிற விவேக ஞானம் செய்த மஹா ஆசாரியன், ராமனுக்குப் பரம தாஸன், சரணுகதர்களை ரக்ஷிக்கும் பிரபு, உமா மஹேஸ்வரர்களைப்போல உதார அனுக்ரஹ ஹ்ருதயம் கொண்ட தயாளு, ரகுவரனுடைய தூதன் ஸர்வ சாதாரணமான வானரமா? அஞ்சனுதேவியின் புத்ரனும், வாயு ஸூதனும், பலம், புத்தி, வித்யை, அனுஷ்டானம், சங்கீதம், ஸாஹித்யம், மதுவித்யை, ராம ஜபம், ராம நாம ஸங்கீர்த்தனம் ஆகியவைகளில் தேர்ந்த ஞான பண்டிதன், மஹா மேதாவி ஸர்வ சாதாரண குரங்கா? சுக தாயகன், வர தாயகன், ஜானகி பிரியன், கிலேசங்களைப் போக்கும் திரியம்பகன், கபீஸன், பவன குமாரன், வினய ஸம்பன்னன், தேவ கிங்கரன், சீதாராமனுடைய மஹா பாகவத சிரோண்மணி அல்லவா அந்த ஹனுமான்? ராஜ வித்யை, பிரப்ன்ன வித்யை, பிரும்ம வித்யை, உபாஸனு வித்யை ஆகியவைகளில் தேர்ச்சி பெற்ற ஹனுமான்ஜி மஹா உத்தம சீல ஸம்பன்னனும் ஆச்சுதே? அவனிடம்கூடவா உனக்குப் பயமில்லை.)'' (163)

''அடே ராவணு, உன்னுடைய கெட்டிக்காரத்தனத்தை விடு. அசூயையை விடு. கிருபாஸிந்துவாகிற ரகுராமனை பஜிப்பாய். காலத்தை தாமதம் செய்யாதே. அடே துஷ்டா, ராம மஹத்வம் தெரியாத உனக்குச் சொல்கிறேன் கேள். ஜானகி நாதனுகிற ஸ்ரீராமனை விரோதித்துக் கொண்டவர்களை ருத்ரரும் காப்பாற்ற முடியாது. பிரும்மாவும் உதவிக்கு வரமாட்டார்.'' (ராமனை விரோதம் செய்தவர்கள் உமா மஹேசருக்கும் சரஸ்வதி காந்தனுன பிரும்மாவுக்கும் பரம விரோதிகள். ஞாபகம் வைத்துக்கொள்.) (164)

''அடே மூடா, வார்த்தைகளைப் பேசி இறுமாந்து போகாதே. அதனல் பரமஹானியை அடைபவன் நீதான். வேறு ஒருவருமில்லை. ஸர்வ லோக பிதாவான ஸ்ரீராமனிடம் விரோதம் செலுத்துவாயாகில், உன்னுடைய பெருமைகள் கொண்ட சிரங்கள் ஸ்ரீராமனுடைய அம்புகளால் பூமியில் வெட்டித் தள்

எப்படும். வானரர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது உன் சிரங்கள் அறுபட்டு கீழே விழும்." (165)

"உன்னுடைய தலைகளை வானரங்களும், கரடிகளும் கால் பந்துகள் மாதிரி உருட்டி விளையாடுவார்கள். ஞாபகம் வைத்துக்கொள். என் பிரபு தனுர் வேதத்தில் கரை கண்டவர். அஸ்திர சஸ்திர வித்யையில் ரகு நாயகன் மஹா நிபுணன். யுத்தத்தில் கோபம் கொண்டால், அவர் ரண பூமியில் அதி பிரசண்டமாக விளங்குவார். அப்போது அவர் சண்ட பிரசண்டமாக தீக்ஷணய்மான அஸ்திரங்களை விடுவார். அந்த ரகு வீரன், ரண தீரன் யுத்த பூமியில் வர கோதண்டத்தை பிரசண்டமாக வளைத்து, உத்தண்ட ராமனாக விருக்கும்போது, (166)

உன்னுடைய வரட்டு டம்பப் பேச்சுக்கள் செல்லுமா? இதை யோசித்துப் பார். இதிலிருந்து நீ தப்புவதற்கு ஒரு உபாயம் உண்டு. உதார ஹ்ருதயமுள்ளவரும் (ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மனே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபிஷண முபஸ்திதம், என்று உன் தம்பி சொன்னானே, அது போல) பரமகிருபாளு ஸ்ரீ சீதாராமனிடம் சரணம் அடைந்து, அபராதங்களைப் பொறுத்துக் கொள்ளச் சொல்லி, அவருடைய கிருபையைப் பிரார்த்தனை செய்து கொள். காலதாமதம் செய்யாதே." என்று அங்கதன் சொன்னான். அங்கதனுடைய வசனங்களைக் கேட்ட ராவணன் அதிகோபத்துடன் ஜ்வலித்தான். அவனுடைய க்ரோதம் பிரசண்டமாக எரியும் மஹாக்னி, நெய் ஆஹுதி செய்தவுடன் எவ்விதம் தீக்ஷணயமாக எரியுமோ, அதுபோல ராவணன் கோபத்தால் ஜ்வலித்தான். (167)

[தியானம்

ராமா சீதா, ஜனார்த்தனரே, நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, உங்களை உமா மஹேஸ்வரர்களை நமஸ்கரித்துவிட்டு நான் நமஸ்கரிக்கிறேன். நந்தகோபர் அனுகூலமான கோபர்களிடமும் கோபிகைகளிடமும் சுர்க்க ரிஷியின் வசனங்களின் பலத்தாலும் அமானுஷ்யமான செய்கைகளிலிருந்தும், ஸ்ரீ கிருஷ்ணரை ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் செய்யும் நாராயணர் என்று சொன்னார். "அவருடைய குணங்களும் தர்மங்களுக்குத்

தக்கபடி பல பெயர்கள் ஏற்பட்டிருப்பதை அசாதாரணமான மனிதர்கள் அறிவார்கள். சாதாரண மனிதன் அவைகளை அறிய மாட்டான்'' என்று கர்க்கர் சொன்னார். கிருஷ்ணனுடைய ஸம்பத், கீர்த்தி, மகிமை இவைகளில் நாராயணமூர்த்திக்கு ஒப்பாக விருக்கிறபடியால், அவருடைய செய்கைகளும் ஆச்சர்யமில்லை. யாவருக்கும் நன்மையைச் செய்கின்ற கிருஷ்ணனை நாராயணமூர்த்தியின் அம்சமென்று நந்த கோபரும் கோபாலர்களும் நினைத்தார்கள். அதுமாதிரி மஹா தேஜஸ்ஸுள்ள ராமனுடைய சாமர்த்தியத்தையும் மகிமைகளை யும் உணர்ந்த அங்கதன் ராவணனுக்கு அவரைப்பற்றிச் சொல்லியும் பிரமாணங்களுடனும் நிரூபித்தும், ராவணன் பக்தி மார்க்கமாக பகவானை அடையவில்லை. யோக்யர்கள் அயோக்ய ளிடத்திலும் யோக்யமாக நடந்து கொள்ளுகிறார்கள். கொடுந் தன்மை உள்ளவன் மென்மைத்தன்மை உள்ளவனிடத்திலும் கொடுமையாகவே நடந்து கொள்கிறான். அவ்வாறிருக்க, யோக்யன் யோக்யனிடத்தில் ஸத்யமாக எப்படி நடவாமற் போகான்? உலோபியை தானத்தால் ஜயிக்கவேண்டும். கொடுஞ் செய்கை உடையவனை பொறுமையால் ஜயிக்க வேண்டும். அயோக்யனை யோக்யத்தன்மையால் ஜயிக்க வேண்டும்'' என்கிற நாரத வார்த்தையின்படி, ஸ்ரீராமா, சீதா, ராவணனிடம் எவ்வளவு பொறுமை காட்டியிருக்கிறீர்கள். என்னிடமும் உங்கள் பொறுமையை அனுஷ்டிப்பார்களா? மார்க்கண்டேயர், நாரதர் சிஷ்யனும், உமா மஹேஸ்வரர்களைத் தெய்வமாக மதிக்கும் எனக்கு உங்கள் கிருபை கிடைக்குமா?)

ராவணன் சொன்னான். "அங்கதா, முட்டாளே, (பிடி வாதமாக ஒரு மனிதனை தெய்வமாகவும் நாராயணமூர்த்தியின் அம்சம்போல அல்லவா நீ விமர்சிக்கிறாய்? உனக்குத் தெரி யுமா?) என் தம்பி கும்பகர்ணன்; அதுபோல என் புத்ரன் இந்திரஜித் மஹேந்திரனை ஜயித்தவன்; இருவர்களும் என் பிரிய பந்துக்கள் என்று உனக்குத் தெரியுமா? உதவி செய்வதி லும் யுத்தத்திலும் மஹா ஸமர்த்தர்கள். என் பராக்ரமத்தைப் பற்றியும் நீ கேட்டிருக்கிறாய். நாங்கள் அனைவரும் சரா சரங்கள் அனைத்தையும் ஜயித்து ஸம்பூர்ணமாக அரசாண்டு கொண்டிருப்பதை நீ அறிவாயல்லவா?'' (168)

"துஷ்டா, சாகா மிருகமாகிற வானரர்களின் உதவியைக் கொண்டு, ஸமுத்திரத்தை ஸ்ரீராமன் பந்தனம் செய்தான். இது தான் உங்களுடைய நேதாவாகிற ஸ்ரீராமனுடைய பிரபுத்வம். நீ ஒருவேளை சமுத்திரத்தை அணை கட்டியது ஒரு பெரிய அமானுஷ்யமான காரியம் என்று சாதிப்பாயோ? பக்ஷிகள் அநேகம் சமுத்திரத்தைத் தாண்டுகின்றன. இதனால் உங்கள் ராமன் சூரன், மஹாவீரன் என்று சொல்லக் கூடுமோ? நீங்களும் சூரர்கள் என்றுதான் சொல்லப்படுமோ? அடே பிடிவாதமாக ராமனைப் புகழும் மந்த புத்தியுள்ள வானரமே, நான் இன்னும் உனக்குச் சொல்கிறேன். கேள்." (169)

[தியானம்

ராமா, சீதாபதே, நான் உனக்கு அபராதியாக இருக்க முடியுமா? சிவபெருமானுடைய அபராதியல்லவா உனக்கு அபராதி. எனக்கு வேண்டியது உனக்குத் தெரியாதா? நீ எங்கு போயும் ஒளிந்து கொள்ளவில்லையே. இருபத்து நான்கு மணிகளிலும் என்னை விட்டுப் பிரியேன், என் துணைவனாக விருப்பேன் என்று தீக்ஷை கொண்டு அல்லவா எனது ஹ்ருதய குகையில் வாழ்ந்து கொண்டும், என்னை நடத்திக்கொண்டுமிருக்கிறாய். அவ்விதமிருக்கும்போது என்னிடம் உனக்கு சங்கை ஏற்படக் காரணமென்ன? தியாகராஜ துளசிதாஸ ஆஞ்சநேய அத்ரி அகஸ்தியாதிகளுக்கு வலுவில் தோன்றினாயே. உன்னை அர்ஜுனனும், தர்மரும் பாரபக்ஷமில்லாதவன் என்று சொல்லுகிறார்களே. ராமானுஜரும், பீஷ்மரும், ராம அபராத க்ஷமார்த்தம், சிவ அபராத க்ஷமார்த்தம்போல, "ஒரு தடவை என்னை ரக்ஷி, என்னைக் கட்டிக் காக்கும் பிரணதபாலர் நீதானே" என்று சொன்னால் போதும். "என் பிரபு, சீதா லக்ஷ்மண சகிதம் வில்லும் கையுமாக ஓடிவந்துவிடுவான்," என்று சொல்லுகிறார்களே. என் விஷயத்தில் நீயும் ஸத்யனாகவும், அவர்களும் ஸத்யவாதிகளாகவுமிருக்க, நீங்கள் கிருபை செய்யமாட்டீர்களா? நந்தி, பிரமத கணங்கள் வணங்கும் திரிபுராரி, என் ஜகன்மாதா உமா தேவி, ஏக தந்தரின் மாதா, ஷடானனின் பெரும்பேறு, எனக்கு உதவமாட்டாளா? சாவித்திரி மந்திரத்தின் அர்த்தமாகவும், நாராயண கவசத்தின் பொருளாக விளங்கும் மோக்ஷ

சுகானந்த ராமா, நாரத ப்ரியரே, எனக்கு எப்போது உங்கள் கிருபா கடாக்ஷம் கிடைக்கும்? எப்போது என்னை ஆட்கொள்ள நீ என்முன் ஆவிர்பவிப்பாய்?)

"அங்கதா, என்னுடைய அழகிய இருபது புஜங்களைப் பார். ஒவ்வொரு புஜமும் பலம் என்கிற ரஸம் கொண்ட சமுத்திரம். இது ஸாகரம்போல பரந்து ஆழமுள்ளதாயும், கரை காணுதபடி விசாலமாக உள்ளது. இந்த சமுத்திரத்தில் அநேக தேவ மனுஷ்ய வீரர்கள், சூரர்கள் இதன் கரையைக் காணுமல் அழுந் திப் போயிருக்கிறுர்கள். அங்கதா, ஒவ்வொரு புஜமும் அவ் விதமான அபாரச் செய்கைகளைச் செய்திருக்கிறது. இப்பேற் பட்ட இருபது ஆழமான சமுத்திரங்களின் மஹத்வத்தை எந்த வீரன், சூரன் ஆழம் காண முடியும்? எவனுவது அருகில் வரக் கூடுமா?" (170)

"பிடிவாதக்காரனே, ஸர்வ ஸ்ரேஷ்டர்களான திக் பாலர்கள் என் தோட்டத்திற்கு ஜலம் விடும் தொழிலைக் கொண் டார்கள் என்று உனக்குத் தெரியுமா? ஸுரபதிகள் இவ்விதம் என்னிடம் அடங்கி யிருக்கும்போது, என்முன் நீ நரமனுஷனை, மனுஷ்யப் பிறவியை எடுத்த ஒரு ராஜகுமாரனை அடிக்கடி அடிக்கடி புகழ்கிறுயே. நீ சொல்லியபடி உன் பிரபு ஸத்யமாக, வீரனுக விருக்கும்பக்ஷத்தில், அவன் ஏன் என்முன் தோன்ற வில்லை? அவன் என்மீது சண்டை செய்ய விருப்பம் கொண் டால், என்னிடம் சண்டை செய்யட்டும்." (நான் சிவனுடைய பக்தனுனபடியால் அவனேடு சண்டை செய்வேன். எனக்கும் அவனுடன் யுத்தம் செய்வதில் பிரியம்தான்.") (171)

(அவர் ஏன் என்முன் தோன்றி என்னை அவருடைய ஸம் பந்தச் செல்வமாக அடைய விரும்பவில்லை?) தூதனை என்ன காரணத்திஞல் அவர் என்னிடம் அனுப்பி யிருக்கிறுர்? என்னை அவர் சத்ருவாகக் கருதும் பக்ஷத்தில், என்மீது கருணையையோ, கிருபையையோ காட்டுவது அவருக்கு லஜ்ஜையாகத் தோன்ற வில்லையா? அவர் இஷ்டப்பட்டு என்னிடம் ஸந்தி கொண்டா லும், நான் அவருக்கு அடங்கிவிட மாட்டேன். இதோ பார். என்னுடைய அழகான பருத்த இருபது புஜங்களையும் பார். இவைகளை உயரத் தூக்கி, நான் அசைக்கவே முடியாத கைலாஸ பர்வதத்தையே மத்து கடைவதுபோலக் கடைந்து,

சிவ ஸாங்நித்யத்தை அடைந்திருக்கிறேன். ஒவ்வொரு புஜமும் சிவ முத்ரை கொண்டது. ஞாபகம் வைத்துக்கொள். முட்டாள் தனமாக என்முன் உனது பிரபுவை புகழ்கின்றாயே." (172)

"சிவ ஸம்பந்தம் பெற்ற ராவணனுக்குச் சமமான சூரவீரன் யார் இருக்கக்கூடும்? ஒவ்வொரு கையும், ஒவ்வொரு தலையை புஷ்பம் பறிப்பதுபோல பறித்து, நெய் ஆஹுதிபைப்போல, எனது ஸாம கானத்தினால் அக்னியில் ஆஹுதி செய்து, கௌரியின் ஈஸ்வரரை நான் திருப்தி செய்திருக்கிறேன். அது வும் மன சந்தோஷத்துடன் அருவெறுப்பின்றி, ஒரு தடவை இல்லை, பலகோடித் தடவைகள் என் பிரபு உமா மஹேஸ்வர ருக்கு ஆஹுதி செய்திருக்கிறேன். எனது சொந்தக் கரங் களால் நானே செய்திருக்கிறேன். நான் சொல்வது முழுவதும் ஸத்யம்; உமாபதியே அதற்கு சாக்ஷி." (173)

"அவ்விதம் செய்யும்போது, நான் என் மண்டை ஓட்டைப் பார்ப்பேன். அந்த கபாலத்தில் எழுதப்பட்ட பிரும்ம லிபியை யும் பார்ப்பேன். அந்த பிரம்ம லிபியில், நான் ஒரு மனிதனின் கைகளால் மிருத்யுவை அடைவேன்" என்று படித்திருக்கிறேன். இந்த பிரும்மாவின் வாக்கு எவ்விதம் பூர்த்தி அடையப் போகிறது? என்று வேடிக்கையாகச் சிரிப்பேன். அதை நினைத் துப் பார்ப்பேன். சிந்தனை செய்வேன். (எனக்குப் பயம் அல்லது துர் எண்ணங்கள் ஒன்றும் தோன்றவில்லை. நான் மரணத்தை யும் கூட சிரித்துக்கொண்டு வரவேற்பேன. அவ்விதமிருக்கும் போது எனக்கு ராமனிடம் பயமோ, சங்கையோ எவ்விதம் ஏற் படக் கூடும்? பிரும்ம வாணியில் பிரும்ம லிபியில் எழுதப்பட்ட விஷயம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அது பொய்யாக விருந்து விடட்டும். நிஜமாகவிருக்கட்டும். என் மனதில் விகாரமோ களங்கமோ ஒன்றும் ஏற்படவில்லை.) (174)

(பிரும்ம லிபியை அறியும் வழிகள் பல உள். இந்த விஷயத்தை நான் பல தடவைகள் சிந்தித்து விட்டேன்.) எனக்கு மனதில் பயம் ஏற்படவில்லை. இதுவும் பயம் உண்டா வதற்கு தகுதியான விஷயமாகத் தோன்றவில்லை. வயது காலத்தில் எனது பிதாமஹரான பிரும்மா ஏதோ எழுதி விட்டிருக்கிறார். அவருடைய மதி பேதலித்து விட்டிருக்கிறது. புத்தி பிரமையினால் எழுதப்பட்ட லிபி எவ்விதம் உண்மையாக

இருக்கக்கூடும்? அவர் போய்விட்டுப் போகிறார். அவரைப் பற்றி நாம் ஏன் இப்போது கவலைப் படவேண்டும்? அடே மூர்க்கனே நான் ஒரு ஸாம்ராஜ்ய சக்கிரவர்த்தி என்கிற மரியாதை வரம்பை மீறி, என்முன் சற்றும் வெட்கமின்றி, நீ ஏன் அடிக்கடி அடிக்கடி மற்றொரு அரச குமாரனைப் பற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறாயே? இது சரியான ராஜ தர்மமல்ல." (175)

[*தியானம்*

நாராயணா, திரிவிக்ரம நாராயணா, சரணம். ராமாசீதா பிரபோ, விஸ்வ சம்புவே, உன் கிருபையின்றி உன்னை அறிவது மஹா கடினம். அதிலும் உன் மாயையை அறிவதும் மஹா கடினம், மார்க்கண்டேய வியாஸாதிகள் அதனால் அல்லவா உன் கிருபையையும், எனது பக்தியையும், பெரிதாகக் கருதி, உம்மையே ஸ்திர புத்தியுள்ள பீஷ்மா, ஸஹாதேவன் நம்மாழ்வார் போன்ற மஹான்கள் பரமார்த்தமாகவும், அக்ர கண்யனாகவும் வரித்தார்கள். உம்முடைய பிரபாவங்கள் அனந்தமாக விருக்கின்றன. அர்ஜுனன், அம்பரீஷன், ஜனகன், போன்ற மஹானுபாவர்கள் பத்து விரல்களைக் கூட்டி கிழக்கு நோக்கி அஞ்சலி செய்கிறார்கள். நாராயணா, திரயம்பகரே, ஸர்வ அந்தர்யாமியே, உமக்கும் உமது கணங்களுக்கும், பரிவார பக்த கோடிகளுக்கும், அநேக நமஸ்காரங்கள் மேல்நோக்கி அஞ்சலி செய்கிறேன். எனது உட் பகைகளையும் வெளிப் பகைவர்களையும், திருவிக்ரம நாராயணா, உமது திறந்த வாயில் நான் சேர்த்துவிடுகிறேன். அன்றொரு நாள் அம்பரீஷன் தனது லோபத்தை கூர்மையான கத்தியினால் வெட்டி சுகத்தை அடைந்தான். லோபத்தினால் பொருள்களின் மேல் ஆசை உண்டாகிறது. மனக் கவலை உண்டாகிறது. அடைய வேண்டும் என்கிற விருப்பத்தால் ராஜஸ குணங்களை மனிதன் அடைகிறான். விரும்பியவை கிடைத்த பின்பு அவன் தாமஸ குணங்களை அடைகிறான். அந்தக் குணங்களால் சரீர அபிமானியாகி, மரித்தும் மீண்டும் சரீரத்துடன் பிறக்கிறான். லோபத்தை தைரியம் என்கிற வைராக்யத்தினால் வென்றவனுக்கு, மனம் அடங்கி, பரமானந்தம் என்கிற ஸாமராஜ்யம்

அடையப்படுகிறது. உள்ளபடி அறியப்பட்ட ஆத்மாவே அரசன். த்ருதி என்று சொல்லப்படும் இந்திரிய மன நிக்ரஹம் என்கிற ராஜ்யத்திற்கு நாராயணன் என்கிற விஸ்வ ¦சம்புவே அரசன். மமதையை விடுவது மோக்ஷ ஸாதனம். அலர்க்கன் என்னும் ராஜரிஷி இந்திரியங்களை அடக்கி, யோகத்தால் மேலான ஸ்ரேயஸை அடைந்தான். போகத்தில் ஆசையை வைத்தவன் ராஜ்யத்தை உபாஸிக்கிறான். நாரதர் போன்றவர்கள் யோகத்தால் ராஜ்ய சுகத்தைக் காட்டிலும் ஆத்ம ஸுகத்தை மேலானதாகக் கருதி கடுந்தவம் செய்து, சாந்தி பாராயணம் என்கிற மேலான சித்தியை அடைந்தார்கள். இவை அனைத்துக்கும் நாராயணனே ப்ராப்யமாகவும் உபாயமாகவும் ஆகிறான். மோக்ஷத்தை அடைய விரும்புவார்கள் சரணம் கதி: நாராயண: என்று வேதம் சொல்லியபடி, எல்லாவற்றையும் தரிப்பவனாகவும் போஷிக்கிறவனாகவும், ஸஹஸ்ர சீர்ஷனாகவும், விஸ்வம் விஷ்ணுவாகவும், தேவனாகவும் பிரபுவாகவும் வியாப்யனாகவும் ஹ்ருதய கோசனாகவும் விளங்குகிறான். ஆச்சர்யம்! அவனே உலகத்தை அபிமானிக்கிறான். அதனால் உலகத்தைக் காட்டிலும் வேறுபடாதவனாக, விஸ்வம் த்வய்யபி மங்யஸே ஜகதி ஹே தே நாத விதீய ஸ்தத: என்கிறபடி சொல்லப்படுகிறான். அப்பேற்பட்ட விஸ்வம் நாராயணனை சரீர ஆத்மாவை, அர்ஜுனன் அம்பரீஷன் சஹாதேவன் பீஷ்மர்போன்ற ராஜரிஷிகள், நாரதர் போன்ற மஹரிஷிகளை, முன்னிட்டு புத்தி பூர்வமாக எனது மாயையை விலக்குவதற்காகவும் பகவத் அருளை அடைவதும் பொருட்டு,'' ஏ பாவம் பரமே ஏழுலகும் ஈபாவம் செய்து அருளால் அளிப்பாரார்? மாபாவம் விட அவர்க்கு பிச்சை பெய் கோபாலக் கோளரி ஏறன்றியே,'' என்று நம்மாழ்வார் சொல்லியபடி, எனக்கு கர்ண களேபரங்களைக் கொடுத்து சாஸ்திரங்களை அருளி, பல அவதாரங்களைச் செய்து, நம்மைத் திருத்திப் பணிகொள்ள பரம யத்னம் செய்கிறான் எம்பெருமான். ஆனால் நாம் பிள்ளை மனம் கல். என்கிறப்போலே, இரும்பு நெஞ்சம் கொண்டு அவன் நம்மை அணுகாதபடி நாம் பிரயத்னம் செய்துகொண்டு பல பிறவிகளை அடைந்து உழல்கிறோம். அப்பொழுதும் நமக்குத் தகுந்த தண்டனைகளை அளிப்பதின் மூலம் நமக்கு நன்மையையே பயக்குகிறான்

ஸ்ரீதரன். இவ்விதம் நமக்காக அவன் பிரயத்னத்தைப் பற்றிச் சொல்வது எவ்விதம் ஸாத்யமாகும்? அதனால் அல்லவோ உலகத்தை சரீரமாகக் கொண்ட விஸ்வம் நாராயணன் எனக்கு சரணம் கதியாக ஆகிறான். பிரளய காலத்திலும் எனக்கு அவனே இருப்பிடமாகிறான். "பூர்வம் தேன நாராயணஸ் ஸ்மருத என்று ஸாவேஸ்வரன் சொல்லப்படுகிறான். அவனே எனக்கு கதி.)

அங்கதன் பதில் சொன்னான். "ஹே ராவணா, உன்னைப் போல சிறிதும் லஜ்ஜையில்லாதவர்கள் ஒருவருமே இருக்க முடியாது. எக்காலத்திலும் இருக்க முடியாது. (நீ ஆத்மாவை திருடிய கள்ளன். கொடிய நெஞ்சுள்ளவன். நன்றி கெட்டவன். உனக்கு ஹிதம் செய்தவனை அறியாதபடியால், விவேகமற்ற மந்தபுத்தி யுள்ளவன். இந்திரிய மன நிக்ரஹம் இல்லாதபடியால் வெளி ராஜ்யத்தைப் போகமாக நினைத்து, உள் ராஜ்யமாகிற ஆத்மாவை நீ அறியவில்லை. ஸ்ருஷ்டிக்கப்பட்ட விஸ்வத்தில் அதன் நாயகனையும் நீ அறிவாயோ, அதுவுமில்லை. ஸஹஸ்ர சீர்ஷம், விஸ்வம் நாராயணனுமா, உனது இருபது கண்களில் படவில்லை.) உன்னைப்போல ஆத்ம ஸ்துதியும், சீல நடத்தைகளைக் கொண்ட ஸஹஜ ஸ்வபாவமுள்ளவன் லஜ்ஜையின்றி சொல்லிப் பறையடித்துக் கொள்பவன் இருக்கவே முடியாது. மஹா சரீர அபிமானியாக விருக்கும் உன் போன்றவர்கள் தங்கள் திருமுக மண்டலத்தினால் தங்களுடைய நிஜ வைபவ குணங்களை தங்கள் வாய்களால் ஆத்ம ஸ்துதி செய்து கொண்டு, களிப்படைகிறார்கள் இல்லை." (அதனால் ஆத்மாவை அறிந்த மஹானுபாவர்கள் தங்களுடைய கல்யாண குணங்களைப்பற்றி தாங்களே பேசிக்கொள்கிறார்கள் இல்லை.) (176)

"வாஸ்தவம்தான். உனது தலைகளை நீயே அறுத்துக் கொண்டும், கைலாஸ மலையை உனது கரங்களால் பெயர்த்து எடுத்ததுபற்றியும், நீ உனது இருபது தலைகளால் இருபது தடவைகள் சொல்லித் தீர்த்து விட்டாய். உனது புஜபலத்தின் பெருமையைப்பற்றி சதா சிந்தித்தவண்ணமா யிருப்பதால் அதைப்பற்றி உடனே விமர்சனமும் செய்துவிட்டாய். ஆனால் உன்னால் ஸஹஸ்ரபாஹு விஷயமோ, வாலியின் கைகளில் உனக்கு ஏற்பட்ட அபஜயத்தைப்பற்றியோ, ஒன்றும் நீ சொல்ல

வில்லையே." (177)

"அடே மந்தமதி உள்ளவனே, உன் பிரதாபங்கள் போதும். வாயை மூடிக்கொள். உன் தலைகளை நீயே வெட்டிக்கொண்டால் சூரனாகி விடுகிறாயா? யாரிடம் உன் இந்திர ஜால வித்தையைக் காண்பிக்கிறாய்? வீரன் என்று சொல்லிக் கொள்பவன் தனது வீரத்தைப்பற்றி பேசிக்கொள்ளலாம். அவனே தனது சரீரத்தை தனது கைகளால் வெட்டிக்கொள்வதைச் சொல்வானோ? மிக்க விந்தையாக விருக்கிறதே." (178)

"ஐயோ, மதிமந்தனே, உனக்கு நான் பச்சாதாபப்படுகிறேன். நன்றாக யோசித்துப் பார். வீணாக விட்டில் பூச்சி அக்னியில் விழுந்து மரித்துப் போவதுபோல மடிந்து போய்விடாதே. கழுதை நிறைய பொதியைச் சுமப்பதால் பெரிதாகிவிடுமா? சூரர்கள் தங்களை இந்தக் காரணத்தால் வீரர்கள் என்று சொல்லிக்கொள்ள மாட்டார்கள்." (179)

"மிக்க அதமனே, போதும். உன்னைப்பற்றிய வீரப்பிரதாபங்கள் போதும். இப்போது என் வார்த்தைகளைக் கேள். அபிமானத்தை விட்டுவிடு. தசமுகனே, நானும் ஒரு ராஜகுமாரன். சாதாரண தூதனைப்போல உன்னிடம் வரவில்லை, சமாதானப் பேச்சுக்களுக்காக நான் உன்னிடம் வரவில்லை. ரகுவீரன் சந்தி பேசுவதற்காக என்னை உன்னிடம் அனுப்பவில்லை. நான் வந்திருக்கும் விஷயமே தனிப்பட்டது." (180)

"என் பிரபு ஸ்ரீ சீதாநாயகன் மஹா கிருபாளு. அதுவும் பரம அபராதியான உன்னிடம் இத் தருணமும் கருணை காட்டி, என்னை அனுப்பிவித்தார். சிம்மம் நரியைக் கொன்றுவிட்டால் மிக்க பிரஸித்தமாகிவிடுமோ? நீ அவருக்கு நரிமாதிரி மிகவும் துச்சமானவன். மனத்தில் நான் சொல்லும் வார்த்தைகளை வாங்கிக்கொண்டு, மேல்கொண்டு செய். அவருடைய கருணையை நினைவுபடுத்திக்கொண்டு, உன்னை இதுவரை சும்மா விட்டிருந்தேன் நான். உன்னுடைய கடோமான வசனங்களையும் சகித்துக்கொண் டிருந்தேன்." (181)

"இல்லாதபோனால், உன்னை முகத்தில் அறைந்துவிட்டு நான் சீதையை மீட்டுக்கொண்டு போயிருப்பேன். அதமனே, தேவதைகளின் சத்ருவே, உன்னுடைய நிஜ பலத்தை நான் அறிந்து கொண்டேன். தனியாக விருந்தபோது, பரஸ்திரியை

ஒருவன் அபஹரித்து வரலாமா?'' (182)

''நீ ராக்ஷஸ ராஜன் என்று சொல்லிக் கொள்கிருயே. உன்னைவிட்டு கர்வம் எங்கே போகக்கூடும்? அதி கர்வம் கொண்ட உன்னை எவ்விதம் நான் அடக்கக்கூடும்? ஆம். நான் ரகுபதியின் சேவகனுகிற சுக்ரீவனுடைய தூதன்தான். என்னை ராம சேவகனுடைய தூதன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு வருத்தமோ, வெட்கமோ இல்லை. நான் ராமனுக்கு அவமானம் ஏற்படக்கூடாது என்று பயப்படுகிறேன். இல்லாத போனல், இப்போதே நீ பார்த்துக்கொண் டிருக்கும்போதே இவ் விதமான தமாஷான காரியத்தைச் செய்திருப்பேன்.'' (183)

''உன்னை பூமியில் தள்ளி, உதைத்துவிட்டு உனது சேனைகளையும் நாசம் செய்துவிட்டு, உனது நகரத்தையும் பாழ்செய்துவிட்டு, அடே மூர்க்கனே, உன்னுடைய பெண்களையும் ஜானகி சகிதம் நான் எடுத்துக்கொண்டு போய்விடுவேன்.'' (184)

[*தியானம்*

நாராயணு, ராமா சீதா, உங்களுடைய ஸ்வரூபம் எனக்கு இன்னமும் புரியவில்லையே. நான் என்ன பாபங்களைச் செய்து, உங்களைச் சுலபமாக அறிந்துகொள்ள முடியவில்லை. பரதனும் தியாகராஜரும், ஆஞ்சநேயரும் எந்த ஸுஞானத்தினல், எந்த குண விசேஷங்களால், சீதாநாயகனை பரம புருஷனை நாராயணராக அடையாளம் தெரிந்து கொண்டார்களோ, அவைகளைக் காண தெரிந்து கொள்ளவில்லையே. நாராயணரே பரப்ரும்மம், பரம தத்வம், நாராயணனே பரம ஜ்யோதி, ஆத்மா நாராயண பர :; நாராயணனுடைய மற்ற நாமங்கள், அங்க அடையாளங்கள் என்ன என்று எவ்விதம் ஸுலபமாக அறியக்கூடும்? பரதன் குலத்திலும், கீர்த்தியிலும், வித்யையிலும், தனத்திலும், ஆசார அனுஷ்டானத்திலும் குரு மூலமாகவும் ராமனையே பெரிதாகக் கருதி, ஸ்ரீ சீதாராம பாதங்களை ஏக மாத்திரமாக வரித்தான். ஸ்ரீ ராமானுஜர் பகவான் புருஷோத்தமரைச் சொல்லும் போது, இயற்கையாகவே கெட்ட குணங்கள் இல்லாதவனும், அளவிட முடியாதபடி உயர்ந்த திருக் கல்யாண குணங்களை மனோஹரமான ஸம்பத்தாக உடையவனும், அவன் ஒருவனே புருஷன் என்றும், மற்றவர்கள் ஸ்திரி பிராயர்களே, ஜீவாத்

மாக்கள், எல்லாம் அவனுடைய தேவிகளே என்று ஸாதித்தார். அநவதிகாதிசயாசங்க்யேய கல்யாண குண கண : புருஷோத்தம : என்று சொல்லப்படும் புருஷன், விஸ்வாக்ஷரனுக, ஸர்வதோமுகராக, ஸர்வ சாக்ஷியாகச் சொல்லப்படுகிறுர். அவன் தேவம் என்கிற அமரத்துவம், அக்ஷரம் என்கிற அழிவற்ற தன்மை, அழகன், அமலன், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பன், பக்தர்களிடம் அன்பனுய், ஆஸ்ரயமாய், அச்யுதனுய் விளங்குபவன். இவன் நித்யஸூரிகளேவிட பரமம் என்று சொல்லப்படும் மிகு நரை இவனே என்று சொல்லும்படி ஈஸ்வரன், மஹேஸ்வரன், தேவதேவர், எல்லோரையும் நியமிக்கும் நியந்தா; சர்ம பந்தத்தினுல் அனேவரையும் பிணைத்து, அதில் தன் ஸ்வய இச்சையினுல் நடத்திச் செல்பவன். உலகமெல்லாம் அவனுக்கு சேஷம். அவன் சேஷி, ஸர்வ ஸ்வாமி; ஸர்வைஸ்வர்ய ஸம்பன்னன்; தனக்கு ஒருவரும் நிகரில்லாதபடி பரம தரித்திரன், என்று சொல்லும்படி உதார ஹ்ருதயத்துடன் எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுப்பவன். தனது ஸம்ரக்ஷணத்திற்கு ஒன்றும் வேண்டாதவன்; அப்பேற்பட்ட பிரபு என்னிடம் கிருபை காட்டாமல், நான் எவ்விதம் அவனே அடைவது? தன்னே அடைந்தவர்களே நழுவ விடாதபடி காப்பாற்றும் பிரபு, ஹ்ருதிவேதியன்; அவனே எனக்குப் பராயணம்; அவன் நம்மால் அறியப்பட்டதான அசேதனத்தைக் காட்டிலும் மேலானதும், வேருனதுமான ஆத்மா. இருபத்தாருவது தத்வம். ஜீவனுக்கும் பரமனுக்கும் உள்ள பேதம். அன்ய தேவ தத் விதிதாத் அதோ அவிதி தாத் அதி என்றும்; பேத வ்யபதேசாச் சாங்ய: என்கிற வியாஸ வசனப்படி, "இல்லதும் உள்ளதும் அல்லது அவனுரு" என்று மாறக்கூடிய அசேதனத்தையும், மாருத ஜீவனேயும் விட விலக்ஷணமானது பகவத ஸ்வரூபம் என்று ஆழ்வார் அருளிச் செய்தார். அவன்தான் நாராயணன். எனக்கு அவன்தான் தஞ்சம்.]

"நான் சொன்னுல் செய்து விடுவேன். ஆனுல் நான் அவ்விதம் செய்தால், யாருக்கு ஸ்ரேயஸ் ஏற்படும்? ஏற்கனவே மரித்துப்போனவனேக் கொன்றுல் ஸ்ரேயஸ் ஏற்படுமா? அல்லது அதுதான் புருஷத்வமா? வாம மார்க்கத்தில் பழக்கப்பட்ட ஸ்ரீவித்யையின் உபாஸகர்கள் எதைச் செய்யக்கூடாதோ,

அதைச் செய்வதால் அவர்களுக்கு ஸ்ரேயஸ் ஏற்படுமோ? காமவசத்தை அடைந்தவன், கிருபணன், அத்யந்த மூடன், அதிதரித்திரன், அசுபமானயசஸ் உடையவன், மிகுந்த வயோதிகன். (185)

"நிரந்தரம் ரோகத்தை அடைந்து கஷ்டப்படுகிறவன், எப்பொழுதும் கிரோத மூர்ச்சிதனுக விருப்பவன், பகவான் விஷ்ணு நாராயணன் ஹரி: சாக்ஷாத் என்கிற தேவ தேவனிடம் விமுகனுக விருப்பவன், வேதங்களை நம்பாமல் தனது சொந்த இச்சையினுல் நடப்பவன், ஸாது ஜனங்களை பகைப்பவன், தனது தேகத்தை போஷிப்பவனுக சரீர அபிமானத்துடனிருப்பவன், பர நிந்தையில் விருப்பமுள்ளவன், பாப பயங்களுக்கு அஞ்சாமல் மேன்மேலும் பாபக் குவியல்களைச் செய்து கொண்டிருப்பவன், ஆகிய பதினுன்கு பேர்களும் உயிருடன் இருந்தும், இறந்தவர்களுக்கு சமமானவர்களே." (186)

"அடே துஷ்டா, இதை யோசித்துப் பார்த்து, நான் உன்னைக் கொல்லவில்லை. எனது கோபத்தைக் கிளப்பாதே. ஜாக்கிரதையாக என்னுடன் பேசு," என்று அங்கதன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ராவணன் கோபத்தினுல் பல்லை நற நறவென்று கடித்து, கண்கள் சிவக்க, கைகளை பிசிந்து கொண்டு, கோபமுண்டவனுக வார்த்தைகளைச் சொன்னுன். (187)

"அட நீசனே, வானரமே, உனக்கு மரணம் விருப்பமா? உன்னைப் பார்த்தால், மிக அல்பனுகவிருக்கிருய். பேசும் வார்தைகளோ மிக்க விரதமாக விருக்கின்றன. நீ யாருடைய பலத்தினுல் வார்த்தைகளையும், பிரதாபங்களையும் அளந்து கொண்டிருக்கிருயோ, அவனுக்குப் பலமோ, பிரதாபங்களோ, புத்தியோ, தேஜஸ்ஸோ யாதும் இல்லை." (188)

"அவன் குண ஹீனன். மானத்தை இழந்தவன். தகப்பனுல் வனத்திற்கு அனுப்பப் பட்டவன். தீனன், துக்கப் பட்டவன். அத்துடன் அவன் இளம் மனைவியை இழந்து புலம்புகிறவன். இரவும் பகலும் என்னையே சிந்தித்துக்கொண்டு பயத்தினுல் நடுநடுங்கிக் கொண்டிருக்கிருன்." (189)

[தியானம்

சசி சூர்ய நேத்ரா, வெங்கடேசநயகா, நாராயணா, சீதா ராமா, உன்னையும் மஹாலக்ஷ்மியையும், கௌரியையும் கூடலிங்கரான மஹேஸ்வரரையும் சதுர்முகனையும் சாவித்திரி யையும், உமாபுத்ரர்களான விஷ்வக்ஸேனரையும் குஹனையும் நந்திகேஸ்வர, அனந்தன், கருடன், சேனை முதலியார், பூமி, நீளா தேவியையும் நினைத்துப் பார்த்தால், எனது மனது உத்தமமான சாந்தியை அடைகிறது. காமாக்ஷி, கஞ்ச தளாயதாக்ஷி, உனது கிருபை பரிபூர்ணமாக எனக்குக் கிடைக்கவேண்டும். நாராயணி, பரமேஸ்வரி, பரம புருஷா, என்னிடம் தயை கொள். கோமாதா, ஸர்வஸஹே, ஸர்வ ரக்ஷகா, என்னிடம் அன்பு கொள். உங்களுடைய ஸ்துதியும் ஸ்தோத்ரமும் எனக்குப் பரம சாந்தியை அளிக்கிறது. எனக்கு ஸ்வரூப ஞானத்தையும், ஸ்வரூப லாபத்தையம், உங்களுக்கு கர்த்தவ்யமான கைங்கர்யப் ப்ராப்தியையும், அதனால் யேற்படும் ஆனந்தமும், எல்லாம் என்னுடையதைப் போல தங்களுடையதும் அல்லவா? ஹே பிரபோ, அன்று பரதனும் ஆஞ்சநேயரும் நாரதரும் குஹனும் விஷ்வக்ஸேனரும், வியாஸரும், சுகப் பிரும்மமும், மார்க்கண் டேயரும், உபமன்யு ரிஷியும், ஜைகீஷவ்யரும் சொன்னது மாதிரி, உங்களுக்கு அனன்யார்ஹ சேஷத்வம் பூண்டு, உங்களையே பரம புருஷார்த்தம் என்று நம்பி வாழ்பவனுக்கு, அதைவிட ஆனந்தம், உம்மால் ஸ்வீகரிக்கப்படும்போது உமக்கு யேற்படும் சந்தோஷம், மன நிம்மதி, உத்தமப் பேறாக விருக்கிற தல்லவா? ஹேபிரபோ, ஹரிபகவானே, தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து தானே உண்டுமிழ்ந்து தானே யாள்வானே, என்று நம்மாழ்வார் சொல்லியபடி, உம்மையே ஸ்ரீயப்பதியான நாராயணனையே, ஸ்ரீவத்ஸவக்ஷ ஸ்ரீதாமனாகிற லக்ஷ்மிநாதனை, ப்ருகுபதம் பதிந்த மஹாவிஷ்ணுவை, என் ஹரி வாஸுதேவனை ஒரு தடவை இல்லை, ஆயிரம் தடவைகள் நான் நமஸ்காரம் செய்கிறேன். நான் அகிஞ்சனன், உங்களது பரம ஸ்ஷேஷ்டமான ஸம்பந்தத்தை ஞானத்தினாலன்றி, கர்ம பக்தி ஆஸ்ரயங்களால் அடைந்து, நானல்லவோ பரம சுத்தி அடை கிறேன். ஹே விஸ்வபதி, சேஷசேஷி ஸம்பந்தம் உமக்கு மாத்திரமல்ல, உம்மோடு காடோபகூடமாக விருக்கும் மஹா

லக்ஷ்மியையும் சேர்த்துத்தானே, நான் உங்கள் இருவர்களையும் ஸ்வாமியாக வரிக்கிறேன். உங்கள் இருவர்களையுமே உபாயம் உபேயமாக அடைந்து, சிவமாக ஆகிறேன். நான் பாபம் நீங்கினவனாக ஆகிறன். எவனுடைய திருவடிகளை அடைந்து கங்கை பரிசுத்தம் அடைந்ததோ, எந்த கங்கையை ஜடா தரனான சிவன் அணிந்து பரிசுத்தமடைந்து என்னையும் பரிசுத்தம் செய்கிருரோ, அந்த திருவடி நிலைகளை தலையில் தாங்கின மஹானுபாவர்கள், நாராயண கவசம் அணிந்த என் பூர்வாசார்யர்களால் ராமா, பாவனஸ் ஸர்வ லோகானும் த்வ மேவ ரகுநந்தன : என்று கோஷிக்கப் பட்டதன்றோ; நீதானே அச்யுதன். ஆபத் காலத்தில் உதவும் மஹனீயன். அதனுல் நான் ருத்ர பிரியனாகவும் ஆகிறேன். ஹே உமா, நீயே என் துணை.]

"அங்கதா, நீ எவனுடைய பலத்தினுல் கர்வமடைந்து என்னைத் துச்சமாகப் பேசுகிருயோ, அவன் யார் தெரியுமா? அவன் ஒரு மனிதன். ஒரு மனிதன் மாத்திரமில்லை; அப்பேற் பட்ட பல மனிதர்களை இரவுபகல் என்று பாராமல் புசிக்கும் ராக்ஷஸர்களின் குலத்தைச் சார்ந்தவன் நான். அதுமாத்திரமா, மூடா, ராக்ஷஸர்களின் முன்பு மனிதர்களைச் சரிக்கு சமான மாகச் சொல்ல முடியுமா? விசாரித்து அறிந்துகொண்டு, என் னிடம் வார்த்தைகளைப் பேசு." (190)

எப்போது ஸ்ரீராமனை ராவணன் இவ்விதம் சொல்லி நிந்தை செய்தானே, கபி ஸ்ரேஷ்டனான அங்கதனுக்கு அத்யந்த க்ரோதம் ஏற்பட்டது. அவனையுமறியாமல் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. எவன் ஒருவன் விஷ்ணுவையோ, சிவனையோ நிந்தை செய்கிருனே, அந்த நிந்தைகளை எவன் கேட்கிருனே, அவன் பசுவை வதம் செய்வதின் பாபத்தை அடைகிருன் என்று வேதங்களும், சாஸ்திரங்களும் கோஷிக்கின்றன. கோஹத் தியையும், சிவ நிந்தையையும், விஷ்ணு நிந்தையையும் கேட் பதைவிட மஹா பாபம் ஒன்றுமில்லை. அதனுல் அங்கதனுல் ராம நிந்தையை அந்தவிடத்தில் பொறுக்க முடியவில்லை. (191)

அங்கதன் பயங்கரமாக கூச்சல் போட்டான். அந்த சப்தத் துடன் தனது இரு கைகளினுல் தரையை ஓங்கி அவன் அடித் தான். பூமி அதிர்ந்தது. சபையில் ஆஸனங்களில் உட்கார்ந்து

கொண்டிருந்தவர்கள் பூமியின் அதிர்ச்சியினால் தங்கள் ஸ்தானங்களிலிருந்து நழுவி கீழே விழுந்தார்கள். ஒவ்வொருவரும் பயந்துகொண்டு சபையைவிட்டு ஓடிச் சென்றார்கள். அவர்கள் ஓடிச் சென்ற ஸ்திதியைப் பார்த்தால் ஒவ்வொருவரும் பிசாசின் பயத்தினால் தன்னிலை மறந்து நடுங்குவதுபோல விருந்தது. (192)

ராவணனும் தனது சிம்மாஸனத்திலிருந்து நழுவிவிடப் பார்த்தான். அதற்குள் அவன் தன்னை சமாளித்துக்கொண்டு நிலைநின்ற சமயம், அவனுடைய அழகான முகுடா மணிகள் கீழே விருந்தன. பூமியில் உருண்டுபோன கிரீடங்களை வரிசையாக அவன் தனது பத்துத் தலைகளில் எடுத்து வைத்துக்கொண்டான். ஆனால் அவனால் சில மகுடங்களையே பொறுக்க முடிந்தன. மிகுதியை அங்கதன், பிரபு ஸ்ரீராமச்சந்திரனிடம் போகும்படி வீசி எறிந்தான். (193)

மணிமுகுடங்கள் வேகமாக ஓடிவந்து கொண்டிருக்கும் போது வானரங்கள் பார்த்தன. அவர்களுக்கு இது ஒரு பெரிய ஆச்சர்யமாக விருந்தது. "ஹே பிரும்மா, இதுதினம் பகல் என்று பாராமல் நக்ஷத்திரங்கள் உதிர்வது போலவும், கிரஹங்கள் ஆகாயத்திலிருந்து நழுவி விடுவதுபோலவும், உத்பாதங்கள் ஏற்படுகின்றனவே. ஒருவேளை ராவணன் க்ரோதம் கொண்டு நான்கு வஜ்ராயுதங்களை நம்மீது எறிந்தானோ? அவைகள்தான் நம்மைத் தாக்குவதற்கு வேகமாக ஓடிவந்துக் கொண்டிருக்கின்றனவோ." என்று எண்ணினார்கள். (194)

என் பிரபு ராமன் சிரித்துக்கொண்டு சொன்னார். "மனத்தில் பயம் கொள்ளாதீர்கள். இவைகள் எரி நக்ஷத்திரங்களுமில்லை. வஜ்ரங்களுமில்லை. கேதுவும் இல்லை, ராகுவும் இல்லை. என் சகோதரர்களே, இவைகள் ராவணனுடைய மணிமுகுடங்கள். அங்கதனால் இவைகள் உதைக்கப்பட்டு நம்மிடம் வந்து கொண்டிருககின்றன." (195)

உடனே பவனசுதனை ஹனுமான் எழுந்து ஆகாயத்தில் தாவி, அவைகளைக் கைகளால் பிடித்து பிரபு ஸ்ரீராமச்சந்திரனிடம் ஸமர்ப்பித்தான். கரடிகளும், வானரங்களும் இந்த தமாஷான வேடிக்கையைப் பார்த்து ஆனந்தித்தார்கள். அவைகளின் பிரகாசம் ஸூர்யனுடைய தேஜஸ்மாதிரி யிருந்தது. (196)

[தியானம்

ஹே வெங்கடேச பதமே, தேவதேவா, நாராயணு, கேசவா, ராமா, சீதாபதி, துளசி பிரியா, உமா புத்ர ஸேவித ராமா, அக்ரகண்யரே, உம்முடைய ஸ்வரூபம் என் மனத்திற்கு புரி படாதபடி அனந்தமாக விருக்கிறது. கங்காதரனுகிய சிவன் உன் பெருமைகளைப் புரிந்துகொண்டு எப்போதும் உன் தாஸ்யத் தையே விரும்புகிருன். உமாதேவி சதா உன் நினைவாக விருக் கிருள். நாரதரும், வியாஸரும், பீஷ்மரும் ஸதா உனது புகழ்க ளைப் பாடியவண்ணமாகவும், சிந்தித்தவண்ணமாகவுமிருக்கி ருர்கள். கேசவ மூர்த்தியே, மஹாலக்ஷ்மி நாராயணு, உங்க ளுடைய புகழ் என் மனத்திற்கு இனிமையாகவும், கேட்பதற்குச் சுகமாகவும், மதுரமாகவும், பேசுவதற்கு அம்ருதமயமாக விருக் கிறது. விஷ்வக்ஸேனர் புகழும் நாராயணு, கருடன், வேதாந்த சார்யர் புகழும் ஹயக்ரீவ மூர்த்தியே, வேதங்களை முகுடாமணி யாக அணிந்து கொண்டிருக்கும் சாவித்திரி தேவியே, உன்னை நான் ஸதா ஆஸ்ரயித்தவண்ணமாகவே இருக்கிறேன். மதுசூ தனரே, உம்முடைய நிஜ ஸ்வரூபத்தை அறிந்த மஹானுபாவர்க ளான ராவணன், சும்பன், மார்க்கண்டேயர் ஸகலருக்கும், தியாகராஜருக்கும் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ஈஸ்வர அம்சம் பெற்ற மஹனீயர்கள் தங்களுடைய ஆத்ம பலத்தினுலும், மஹா தபஸ்ஸினுலும் உன்னுடைய பரம அனுக்ர ஹத்தாலும், பிராட்டியின் அபார கருணையினுலும் உன்னைக் காடோபகூடமாக ஐக்ய மிதுனமாக ஸுமனஸ்ஸினுல் உபா ஸித்து பரமாம்கதி என்று சொல்லப்படும் வைஷ்ணவ கதியை அடைகிருர்கள். ஆசார்யரே, பிதாமஹரே, ஜகந்நாதரே, பிரணதபால், உனக்கு அபராதம் செய்தவனும் உன் கிருபைக்கு பாத்திரமாகும்போது, உனக்கு ஹிதம் செய்பவன் எவ்விதமான ஸ்ரேயஸை அடைவான் என்று நான் சொல்லவும் வேணுமா? கர்ம யோகத்தினுல் விரைந்து வரும் என்னைப் போன்றவர்களுக் கும், விஸ்ராமம் கொடுக்கும் வேங்கட நாயகா, சசி சூர்ய நேத்ரா, விருக்ஷரே, மஹா ஸ்வானரே, உம்முடைய ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்த நாரதர், ஆஞ்சநேயர், தியாக ராஜர் போன்ற மஹனீயர்கள், நேரில் காண முடியாத உம் முடைய ஆத்ம ஸ்வரூபத்தை எங்கும் பார்ப்பவர்களாகி,

ஸத்யம், ஞானம், ஆனந்தம் பிரும்மமயமாகப் பார்க்கிறுர்கள். கருடத்வஜரே, அவர்களுடைய ஞான விசேஷங்கள் இந்திரன் மகனை அர்ஜுனனுக்குக் கண்ணன் உபதேசித்த மாதிரியும், எனக்கு வேதாந்த தேசிகர் உபதேசித்தபடிக்கும், ஒரே அர்த்த முள்ள ஏக பராயணமாக விருக்கிறது. நாராயணு, திருவனந் தாழ்வானுகிய திருப்பள்ளியில் யோக நித்திரை செய்யும் சேஷாசல நாயகா, க்ரீடியாகிற அர்ஜுனனுக்கு சரணுகதி தத்வத்தை உபதேசித்து, அபய ஹஸ்தம் கொடுத்த வாமனனே, உம்முடைய சரணுகதியாகிற யோகம் நான்கு நிலைகளைக் கொண்ட ஸமதர்சனம், பிரபத்தி யோகத்தின் அங்கங்கள், அதனுல் யேற்படும் பயன்கள் எல்லாம் ஏக மாத்திரமாக, சீதா பதே, உங்களை மஹேஸ்வர தம்பதிகளை அடைவிப்பதுபோல அல்லவா உபதேசிக்கப்படுகின்றன. பிரமன் பணிந்து பெருமை பெற்ற அத்திகிரி அருளாளா, நான்கு வேதங்களின் ஸாரத் தைப் போதித்த மஹா ஞானியான வேதாந்த தேசிகரை முன் னிட்டு சரணமடையும் எனக்கு உன் வேங்கடேச பதங்களைத் தரமாட்டாயா? உன் ஸம்பந்தத்தைத் தரமாட்டாயா? கிரிராஜ வரதா, ஆதி நாயகா, ஸ்ரீநிவாஸா, எனக்கு உன் நித்யமங்கள தாயகமான சேர்க்கையை நரநாராயண ரிஷிகளின் சேர்க்கை மணம்போல தரமாட்டாயா? எவ்வளவு காலம் பொறுக்க வேண்டும்? பிராட்டியே, கிருபை செய்யமாட்டாயா? நீங்கள் தானே ஞாதா, ஞானம், ஜ்ஞேயம், ஸ்தோதா, ஸ்துதி, ஸ்தவ பிரியர்கள். என் ஹ்ருதி ஸ்திதர்களும், ஹ்ருதி வேத்யர்களும், மதுசூதனரும், ஹயகிரீவரும், ஹ்ருஷிகேசரும் நீங்கள்தானே. இதை என்று நீங்கள் புரிந்துகொள்ளப் போகிறீர்கள்?]

இங்கே ராவணன் சபையில் க்ரோத மூர்ச்சிதனுக ஆனுன். அவனுல் பொறுக்க முடியவில்லை. கோபத்தால் வசனங்களைச் சொல்ல ஆரம்பித்தான். "வீரர்களே, இவனைப் பிடியுங்கள். இவனுடைய உயிரை எடுத்து விடுங்கள். இவனைச் சும்மா விடாதீர்கள்." என்று கட்டளையிட்டான். சீதாராம அபய ஹஸ் தத்தின் நிழலில் இருந்த அங்கதன் இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பயமின்றி பலமாகச் சிரித்தான். (197)

ராவணன் மீண்டும் உத்திரவிட்டான். "வீரர்களே. இவனைக் கொன்றுவிட்டு, வேகமாக ஓடி அலைந்து திரிந்து, எங்கு எங்கு

வானரர்களும், கரடிகளும் இருக்கிறார்களோ, அவர்களையும் இரக்கமின்றி கொன்று சாப்பிட்டு விடுங்கள். இந்த பூமியிலே குரங்குகள் இல்லாமலே பண்ணி விடுங்கள். அதன்பிறகு அந்த இரு தபஸ்விகளான ராம லக்ஷ்மணர்களை நீங்கள் ஜயித்து உயிருடன் பிடித்து வாருங்கள்.'' (198)

கோபத்துடன் மீண்டும் ராவணன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டான் அங்கதன். யுவராஜனுகிற அங்கதனுக்கு கோபம் மூண்டது. அவனும் வார்த்தைகளைப் பேச ஆரம்பித்தான். ''வாய்க்கு வந்தபடி நீ சொல்லிக்கொண்டு போகிறாய். உனக்கு லஜ்ஜையே கிடையாது. உன் நாக்குக்களை அறுத்துக் கொள். குல நாசகனே, உன்னால் ராக்ஷஸ குலமே அழியப் போகிறது என்னுடைய பலத்தினால் உனக்கு ஹ்ருதயம் வெடித்துப் போக மாட்டேன் என்கிறதே. உன் ஹ்ருதயம் நிஜமாகவே இரும்பினால் செய்யப்பட்டது.'' (199)

''ஸ்திரியைத் திருடிவந்த கள்வனே, உன்னுடைய மந்த மதி காமத்தினால் தூண்டப்பட்டு கெடுதலான வழியில் சென்று கொண்டிருக்கிறது. உனக்கு பாபங்கள், அதர்மங்கள் மலிந்துவிட்டிருக்கின்றன. நீ வார்த்தைகளை ஆராய்ந்து பாராமல் ஏதோ பேத்திக் கொண்டிருக்கிறாய். பயமடைந்து காலத்தினால் தூண்டப்பட்டவனாக, மரணத்தின் சமீபத்தை அடைந்திருக்கிறாய்.'' (200)

''இதனுடைய துாபலன்களை நீ சீக்கிரமாகவே அனுபவிக்கப் போகிறாய். வானரங்களும் கரடிகளும் உன்னைப் பிற்பாடு பீடிக்கும் போது நான் சொல்லும் வார்த்தைகளை நினைத்துப் பார்ப்பாய். நான எவ்வளவு எடுத்துச் சொல்லியும் ஸ்ரீராமனை மனிதன் என்று எண்ணுகிறாயே. இவ்வளவு அபிமானியானவனை நான் எங்கும் கண்டதில்லை. உன் நாக்குக்கள் அறுந்துவிழ மாட்டேனகிறதே.'' (201)

''நான் சொல்லும் வார்த்தைகள் நடக்கத்தான் போகின்றன. இதில் சந்தேகமே இல்லை. யுத்தம் நடக்கப் போகிறது. அதில உன் நாக்குக்களும் தலைகளும் அறுந்து கீழேவிழததான் போகின்றன. (202)

''தசகந்தனே, எந்த பிரபுவின் ஒரே பாணத்தினால் வாலி வதமடைந்து இறந்தானோ, அந்த பிரபுவை நீ மனிதன என்று

சொல்லுகிருயே. அவன் எவ்விதம் மனிதனுக இருப்பான்? கெடுமதியானே, உனக்கு இருபது கண்கள் இருந்தும் நீ குருடனுகவிருக்கிருயே. ஐயோ, உன ஜன்மம் வீணுகிவிட்டதே." (203)

"ஸ்ரீராகவ சிம்மத்தின் பாண சமுஹங்கள் உன் ரத்தத்தைக குடிப்பதற்குத் தாகம் கொண்டிருக்கின்றன. ராமனுக்கு நான் பயப்படுவதாலும், என் பிரபு ராகவனே நான் வருத்தத்திற்கு உட்படுத்த விரும்பாதபடியாலும், இவ்வளவு நீசனுன உன்னைக் கொல்லாமல் நான் உயிருடன் விட்டு விடுகிறேன். உன் ரத்தத்தை ராமனுடைய பாணங்களே உறிஞ்சிச் சாப்பிடட்டும்." (204)

"நான் ஒருவனே உன்னுடைய இருபது பல் வரிசைகளை உடைத்துத் தர ஸமர்த்தன். ஆனுல் எனக்கு உத்தரவு அவ்விதமில்லை. நான் என்ன செய்யக்கூடும்? ஸ்ரீ ரகுநாயகன் நான் போகும்போது, "உன்னிடம் கோபம் காட்டாதே, சமாதானமாகப் போ." என்று என்னை எச்சரித்திருக்கிருர். எனக்கு உன் மீது வரும் கோபத்தைப் பார்த்தால், உன்னுடைய இருபது மண்டைகளையும் உடைத்து, உன்னையும் இந்த லங்கையையும் கைகளால் பிடித்து, சமுத்திரத்தில் ஓங்கி அடித்து விடுவேன்." (205)

"உன்னுடைய லங்கை ஒரு பழுத்த பழுத்தைப்போலவும், நீயும் உன் பிரஜைகளும் அதில் வசிக்கும் கணக்கற்றப் பூச்சி புழுக்கள் போலவுமிருக்கிறீர்கள். வானரமாகிய நான அதை அப்படியே முழுங்கி விடுவேன். ஆனுல் உன்னிடம் கருணை காட்டும் உதார மனதுள்ள ஸ்ரீராமன் எனக்கு அவ்விதம் உத்தரவு அளிக்கவில்லை. ராம சாஸனம் உன்னிடம் உதார மனத்துடன் இரக்கம் காட்டச் சொல்கிறது." (206)

[*தியானம்*

ஹே துருவ நாராயணு, மஹாலக்ஷ்மிநாதா, சரணம். உமா மஹேஸ்வரரால் சேவிக்கப்பட்ட ராமா, சீதாபிரபோ, உனக்கு அநேக நமஸ்காரங்கள் செய்கிறேன். ஒரு மனிதன் உஜ்ஜீவிக்க வேண்டுமானுல், அனுகூலமான மனத்துடன் உனது திருவடிகளை அடையவேண்டும். அந்த ஸங்கல்பம்

எவ்விதம் நேரும் ? கர்ம பக்தி ஞானத்திஞல் வரலாம். ஸாதுக்களின் சங்கமத்தால் ஏற்படலாம். அதிருஷ்ட வசமாக பகவத் நிர்ஹேதுக கிருபையினுல் ஏற்படலாம். அதுவுமின்றி, ஸர்வ ரக்ஷகம் என்கிற பிரபத்தி யோகத்திஞல் ஏற்படலாம். இவைகள் எல்லாம் வைஷ்ணவம் என்கிற சக்தியிஞல் ஏற்படலாம். எல்லாவற்றிற்கும் பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சா, அவதார காலங்களிலும் ஏற்பட்டும், அந்தர்யாமியாக விருக்கும் நாராயணஞல் ஸதா காலத்திலும் ஏற்படலாம். ஆஞல் இது விபவாவதாரத்தில் எவ்விதம் ஏற்படும்? தேவரீர், விருத்தாத்மா, ஜ்யேஷ்டர், விதிதர் என்று சொல்லப்படும் பிரபு. ஜகத் ரக்ஷணம் என்கிற சிந்தனையுடன் பிரபு பரமபதத்தை விட்டு பூமியில் எழுந்தருளுகிருன். அப்போது அந்த திருவரங்கத்து அம்மான் ஸ்ரீரங்கதாமன் தயையிஞல் கலங்கிக் கிடைப்பவையான புஷ்கர கடாக்ஷங்களால், ஸம்சாரிகளைக் குளிரவைக்கிருன். அஜாயமானேபஹூதா விஜாயதே, ஜன்மம் பல பலச் செய்து, ஆத்மா இழந்தவர்களை உய்விக்கச் செய்கிருன். எவர்கள் எந்த விதமாக எப்படி பஜிக்கிருர்களோ, அவர்களைக் குறித்து அப்படியே அடைவதற்கு தகுந்தபடி ஸர்வேஸ்வரன் தன்னை ஆக்கிக் கொள்கிருன். ஆழ்வார் அதஞல் அல்லவோ அந்த வ்யூஹநாதனை தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம்தானே, நெஞ்சிஞல் நினைப்பான் யவன் அவனுகும் நின்கடல் வண்ணனை, என்று அருளிச் செய்தார். இது அவனுடைய குண மகிமைகளைச் சொல்லுமே தவிர, அவதார ரஹஸ்யங்களையும் ஒருவாறு கூறும். எதையும் ஸஹிக்காமல் ஸஹிஷ்ணு என்கிறபடி எல்லா நிலைகளிலும் அர்ச்சகர்களுக்கு பரதந்திரனுக விளங்குகிருனே. ஆச்சர்யம். இதஞல் ஈர நெஞ்சுள்ள ஆழ்வார்களும், நானும், பட்டரும் ஸ்ரீரங்கபதியின் சீல குண சௌலப்யாதி வாத்ஸல்ய குணங்களால் மோஹித்துப் போகிருேம். அதஞல் மஹாலக்ஷ்மி நாயகனுகிற நாராயணன் அனந்தமானதும், அவ்யயமானதும், ரூபங்களையும் குணங்களையும் உடைத்தவனுகவும், விஸ்வ சம்புவாகவும், எல்லாவற்றையும் பார்க்கும் கவியாகவும், அழகாய் பேசும் ஸ்திதராகவும், பாற்கடலில் பள்ளிக்கொண்டும், விபவ அர்ச்சாவதார கால விசேஷத்தால் ஜகத்ரக்ஷணன் என்கிற நாரணன் தன்னைத் தாழவிட்டு

நிற்கும் கிருபா மூர்த்தியாக விளங்குகிறுன். அப்பேற்பட்ட நாராயணன் என்னை ஆட்கொள்ள மாட்டாஞ? ஸ்ரீரங்கபதே, வேங்கட விண்ணோர் வெற்பனே, ஆறு பயனெனனே கண்டு அருளாளா இணையடி மேல் விண்ணப்பம் செய்த என்னைக் குறை குற்றங்கள் இல்லாதவனுகக் கோதென்றி கழினும், நான் அவனிடம் கோதண்டராமனின் அம்புபோல பதிந்தேன், அமிழ்ந்தேன் என்று சொன்னுல் போதாதா ?]

அங்கதனுடைய யுக்தி பூர்வமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகளை ராவணன் சிரித்துக்கொண்டு கேட்ட பின்பு மீண்டும் சொல்ல ஆரம்பித்தான். "மூடா நீயும் பல பொய்களைச் சொல்ல எவ்விதம் கற்றுக்கொண்டாய்? யாரால் இவ்விதம் பழக்கப்பட்டாய்? வாலி உயிரோடு யிருந்தவரை தன்னைப்பற்றி தற்பெருமையாகச் சொன்னதில்லையே. ஒருவேளை ராம லக்ஷ்மண தபஸ்விகளை அடைந்து, அவர்களுடைய ஸ்நேகத்திஞல் தன் நிஜ ஸ்வரூபத்தை மறைத்துப் பொய்யனுக மாறி விட்டாயோ? (207)

அங்கதன் பதில் சொன்னுன் "இருபது புஜபலபராக்ரமங்களையும்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டு போகும் ராவணு, நான் நிஜமாகவே பொய் பேசுகிறேன். உன்னுடைய இருபது கைகளையும், பத்துத் தலைகளையும், பத்துநாக்குக்களையும்வாய்க்குவந்தபடி பேச விட்டும், அவைகளை பிடிங்கிவிடாமல் சும்மாப் பார்த்துக் கொண்டு, ஸ்ரீராமனுடைய கசங்கிய இரு கருணைக் கண்களை நினைத்தபடி உன் பிரதாபங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேனே. எனது ஸ்வபாவத்தை மறந்து பேசாமலிருக்கிற படியால், நான் நிஜமாகவே நீ சொல்லியபடி மாறுதலுடனுகத் தானிருக்கிறேன். என் பிரபு ஸ்ரீராமசந்திரனுடைய பிரதாபங்களை ஸ்மரித்துக்கொண்டு, சரி, இவனுக்கு ஒரு பாடம் கற்பிப்போம்," என்று நினைப்பவனுக, அங்கதன் மீண்டும் கோபாவேசம் அடைந்தவனைப் போலத் தோன்ற, ராவணனுடைய சபையின் நடுவில் தனது கால்களை ரோஷத்துடன் அழுத்திப் பூமியின் வைத்தான். (208)

அதன் பிறகு வீர முழக்கத்துடன் அவன் கர்ஜனை செய்தான். "மூர்க்கனே, இந்த சபையில் எவனொருவன் தன் பலத்திஞல் எனது கால்களைத் தள்ளி நகர்த்துகிறுனே, அப்

பொழுது ஸ்ரீராமன் லங்கையை விட்டுச் செல்வார். மீட்கும் விஷயத்தில் தோல்வி உள்ளவனாக ஆவேன். உங்களால் முடிந்ததைப் பார்க்கலாம்," என்று சபதம் செய்தான். தச கண்ட ராவணன் பதில் சொன்னான். "அடே, என் வீரர்களே இந்த வார்த்தைகளைக் கேளுங்கள். இந்த வானரத்தின் கால் களைப் பிடித்து இவனை சுழற்றி பூமியில் வீசி எறியுங்கள்." (209)

இந்திரஜித் முதலான அநேக பல பலவான்கள் சிரித்துக் கொண்டு உத்ஸாகத்துடன் ஓடி வந்தார்கள். அவர்கள் பல உபாயங்களைப் பிரயோகித்து, அங்கதனுடைய கால்களை அசைக்கப் பார்த்தார்கள். அவர்களால் அவனுடைய கால் களை அசைக்கவே முடியவில்லை. அவர்கள் எல்லோரும் தங்கள் சிரத்தை கவிழ வைத்துக்கொண்டு, லஜ்ஜையுடன் தங்கள் ஸ்தானங்களில் திரும்பி உட்கார்ந்தார்கள். (210)

காகபுசுண்டி சொல்லுகிறார். "கருடரே, சர்ப்பங்களின் நாசகரே, கேளும். தேவதைகளின் சத்ருக்களான ராக்ஷஸர்கள் அநேகர் கூடியும், ஒன்றாகச் சேர்ந்தும், அங்கதனுடைய புனித மான சரணங்களை அசைக்க முயன்றும், அவர்களால் முடிய வில்லை. அங்கதனுடைய பாதங்கள் அசைவற்று பூமியில் பதிந்துயிருந்ததைப் பார்த்தால், விஷய சுகங்களில் ஈடுபட்ட புருஷன் தனது ஹ்ருதயத்தில் பதிந்துபோன மோஹம் என்கிற விருக்ஷத்தின் வேர்களைக் களைந்து எரிய மாட்டாமல், எவ்விதம் தவிர்ப்பானோ, அதைப்போல அவர்களுடைய பரிஸ்ரமம் வீணாகி விட்டது." (211)

கோடிக்கணக்கான வீரர்கள் யுத்தத்தில் பிரியம் கொண்ட வர்களும், பலத்தில் மேகநாதனுக்குச் சமமானவர்களும் இந்த வேடிக்கைப் பந்தயத்தில் கலந்துகொள்ள ஓடி வந்தார்கள். ஆனால் அவர்கள் அடிக்கடி முயற்சித்தும், வானரத்தின் சரணங்களை அசைக்கவே முடியவில்லை. லஜ்ஜையினால் அவ மானம் அடைந்து தங்கள் தலைகளை தொங்க விட்டுக்கொண்டு, வருத்தத்துடன் சென்றார்கள். அவர்கள் தங்கள் ஆஸனங் களில் திரும்பவும் போய் உட்கார்ந்து கொண்டார்கள். (212)

பூமியை விட்டு அங்கதனுடைய திவ்ய பாதங்கள் நகர வில்லை. அவைகளைப் பார்த்தால், கோடி கோடிக் கணக்கான

விக்னங்கள் ஏற்படினும், ஸாதுக்களின் மனம் தர்ம வழியி னின்றும் நழுவி விடுவதில்லையன்றோ? இதைப் பார்த்ததும் சத்ருவாகிற ராவணனுடைய மதம், கர்வம் அவனை விட்டுவிட ஆரம்பித்தது. (213)

கபியினுடைய அதிபலத்தைக் கண்ட சகல ராக்ஷஸ வீரர் களும் பயத்தினால் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டார்கள். அதைப் பொறுக்க முடியாத ராவணன் தானே எழுந்திருந்தான். அங்கதனின் கால்களைப் பிடிக்க வந்தான். வாலி குமாரன் சிரித்துக்கொண்டு ராவணனைப் பார்த்துச் சொன்னான். "என் னுடைய சரணங்களைப் பற்றியதால் நீ ராமனிடமிருந்து தப்பி விடலாம் என்று நினைத்துக் கோட்டை கட்டாதே." (214)

[*தியானம்*

தர்ம நாராயணா, தர்மரே, நரநாராயணா, விருஷபரே, ராமா சீதா, மஹாகோப்யமான மஹாலக்ஷ்மியின் நாயகா, மன அடக் கத்தினாலும், அத்யந்த வினயத்தினாலும் அதிசூக்ஷ்மராகவிருக் கும் ஸ்வாமியாகிற எம்பெருமானே, மஹா சிரமத்துடன் நீர் அறியப்படுகிறீர். கேவலமான ஞானிகளுக்கும் கடினமாக விளங்கும் ராமா, எப்போது என்னிடம் நீர் குஹனிடமிருந்தது மாதிரி சுலபராகி விடுவீர்? உம்முடைய சூக்ஷ்மததைத் தெரிந்த திரௌபதி ஸத்யம் என்கிற பெயரால் உம்மை வரித்து அடைந்தாள். காஸ்யபரும், பிரஹ்லாதனும், தர்மரும் "ஸதயம்தான் முக்கியமானது," என்று சொன்னார்கள். "எங்கே தர்மமானது அதர்மத்தினால் கெடுக்கப்பட்டு, எந்த சபையை அடைகிறதோ, அந்த ஸபையோர் தர்மத்தில் தைத்த ஆணியை எடுத்து விடாவிடில் அவர்களே அந்த ஆணியினால் குத்தப் படுகின்றனர். தலைவன் பாதிப் பயனை அடைகிறான். செய்த வனுக்குக் கால் பாகம். இகழத் தக்க காரியத்தை இகழாமல் இருந்த சபையோருக்கு மற்ற கால் பாகம் போய் சேருகிறது. நிந்திக்கத தக்கவனை நிந்தியாமல் போனால், தலைவனும் சபை யோரும பாபத்தால் கட்டப்படுகிறார்கள். தர்மத்தைக கேட்கிற வர்களுக்குச் சரியான பதிலை கூறாதவர்கள் முன் ஏழு, பின் ஏழு தலைமுறைகளையும், யாகப் பயன்களையும், தான தர்மங்களையும் அழிககின்றனர். அஸத்தியம் சொல்லுகிறவர்கள் மீளாத

துக்கத்தை அடைகிறார்கள். புத்ரன் மனைவி, பந்து ஸ்நேகத்தை விட்டு, தர்மத்தில் நிலை நின்று வாழ்வானாயின் அவன் மிக்க ஸ்ரேயசை அடைகிறான்,'' என்று பலவிதமாகச் சொன்னார்கள். இந்த தர்மம்தான் ஹரி; பகவான் நாராயணன் என்று ஸ்பஷ்டமாக அறிந்த திரௌபதி மஹாலக்ஷ்மியின் அம்சமன்றோ? அந்த மஹாலக்ஷ்மியுடன் கூடிய நாராயணன், சீதாராமன் மாதிரி, தர்மத்தைக் கடைப்பிடித்த ஸத்யநாராயணன், அல்லவோ? ஸர்வ வியாபியும், விகாரமற்றவனும், பரபிரும்ம புருஷனும், கிருஷ்ண பிங்களனும், ஊர்த்வரேதஸ்ஸுடன் விளங்குபவனும், மஹா கோப்தாவும், விரூபாக்ஷனும், உலகமெல்லாம் உமா மஹேஸ்வரர்களைப் போல வியாபித்திருக்கும் "ருதம் ஸத்ய நாராயணனை,'' என் பரமாத்மவை, அங்கதன் திரௌபதி பிரஹ்லாதன், நாரதர், காஸ்யபர் அங்கிரஸ் போன்ற மஹரிஷிகளை முன்னிட்டு சீதாராமனை, விருஷபத்வஜனை, தர்ம விக்ரஹவானை, ஆதிநாராயணனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். பிரபோ, ஆபத்துக் காலத்திலும் தர்மத்தைவிட்டு நழுவாத மனம் எனக்கு இருக்கவேண்டும். இந்த தர்மமே ஹரிபகவானாகிறார், என்று மஹாத்மாவாகிய வஸிஷ்டர் அடிக்கடி சொல்லுகிறார். சரணாகத வத்ஸலரான ஸ்ரீராமன், கிருஷ்ணன், லோகநாதர், ஸ்ரீயப்பதி, கோவிந்தன், ஜனார்த்தனர், மஹாயோகி, சரணமடைந்தவர்களைக் காப்பாற்றும் பிரணதபால், கேசவன், கோபிஜனப்ரியன், அயோத்யா ராமன், அனாதை என்று சொல்லும் தீனனுக்கு இரங்கும் வேங்கடேசன், என் பிரபு கருணா காகுத்ஸன், அகஸ்தியப் பிரியன், என்னிடம் தனுஷ்பாணியாக வரமாட்டாரா? இரக்கம் காட்டமாட்டாரா? சீதாபதே, ஹே ராமா, ஹே கிருஷ்ணா, ஹே கோவிந்தா, ஜகத்சக்ஷு, ஸர்வ தேஹிகளுக்கும் ஆத்மாவாகிற ஸத்ய நாராயணா, ஸூர்ய நாராயணா, உனக்கு ஸதா மங்களங்கள், ஜயங்கள் ஏற்படட்டும்.]

"அடே மூர்க்கா, உன்னைக் காப்பாற்றக்கூடியது ராமசரணாரவிந்தங்களே. அவ்விதமிருக்கும்போது, என்னை ஏன் வந்து நீ கட்டிக்கொள்ள விரும்புகிறாய்? (ராம சரணங்கள் ஸத்யமானவை. மஹா கோப்யமானவை. அவைகளே பரபிரும்மம், அம்பிகை வருடும் ராம சரணங்கள் கொடியவர்களுக்கு மருந்

தாகவும், நல்லவர்களுக்கு அனுக்ரஹ நாரரயணனுகவுமிருக்கின்றது. தர்மத்தில் ஸ்திரமாக வுள்ளவரும், ஊர்த்வ ரேதஸ்ஸான பெருமாள் விஸ்வ ரக்ஷணம் என்கிற தர்ம ரக்ஷணத்தைக் கைக்கொண்ட விரதம்போல விருக்கும் தனுஷ்பாணியாகிற சீதாராமனின் சரணங்களே உனக்குத் தஞ்சம். இதுதான் ஸநாதன மார்க்கம். ராவணு, ஏக மனத்துடன் தெரிந்து கொள். இன்னும் ஏன் கலங்கிககொண்டு, உனது பரிவார சகிதம் நாசமடைய விரும்புகிருய்? நாராயணனே ஸர்வ கதன். அவனே ஸத்யம். ஞானம், ஆனந்தம், பிரும்மம். ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் விகாரமில்லாத ஸத்ய நாராயணன். ஏகரூபன். ஆஸ்ரித ரக்ஷகம் என்கிற தர்ம வியவஸ்தையைக் கொண்டவன். கோபத்திலும், லோபத்திலும், காமத்திலும், பயத்திலும் தர்மத்தைவிட்டு விலகாத அசஞ்சலமான மனத்தை உடையவர்கள், இந்த நர்ராயண விஷயத்தில் கலக்கமடையமாட்டார்கள். இவனுக்குக் கைங்கர்யம் செய்வது, இவனை ஆனந்தப்படுத்துவது, இவனுடைய ஆக்ஞையை பரிபாலிப்பது, காளமேகம் போன்ற திருமேனியை சக்கரத்தாழ்வான் தன்னுடைய தேஜஸ்ஸாலே வ்யாபித்து நிற்பதால், கிருஷ்ண பிங்களம் என்று பெரியவாச்சான்பிள்ளை திருப்பல்லாண்டு வ்யாக்யானத்தில் அருளி யிருக்கிறபடி, அவனே மேகஸ்யாமன், ஹேமஸமான வர்ணம் புருஷம் கிருஷ்ண பிங்களம் என்கிற யோக நாராயணன்; அப்பேற்பட்ட நாராயணனுடைய அச்யுத பாதங்களை சரணமடையாமல், என்னை ஏன் வந்து அடைகிருய்) என்று பலவிதமாக ஞான தர்ம பூர்வமாகச் சொல்லிய அங்கதனுடைய வார்த்தைகளைக் கேட்டான் ராவணன். (உமா மஹேஸ்வர ஸ்வரூபமாகிற தர்ம தேவதையை நினைத்துக்கொண்டவனுக,) அவன் வெட்கப்பட்டு தனது இருப்பிடத்தை அடைந்து சிம்மாஸனத்தில் உட்கார்ந்தான். அவனுடைய ஸகல சம்பத் ஸ்ரீதேவிகளும் அவனை விட்டு நழுவி, அவன் தேஜஸ் யிழந்தவனுக, அன்று காணப்பட்டான். அவனுடைய தேஜஸ்ஸை இழந்த ரூபம் மாத்யான்னிக ஸூர்யன் பிரகாசிக்கும்போது எவ்விதம் சந்திரன் பலஹீனனுகத் தோன்றுவானே அதைப்போல ராவணன் அங்கதன் முன் விளங்கினுன். (215)

அவன் சிம்மாஸத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தால்,

(அன்று பலிச்சக்கிரவர்த்தி திரைலோக்ய ராஜ்யலக்ஷ்மியின் தேஜஸ் விடப்பட்டு மலினமாக விளங்கினுனே, அதைப்போல) ஸகல ஸம்பத் ஐஸ்வர்யங்களையும் தபஸ்ஸின் மாபலன்களையும் தியாகம் செய்த ராவணன் அப்பொழுது மஹா பலஹீனனுகத் தோன்றினன். ஸர்வ ஜகத்திற்கும், ஸர்வதேஹிகளுக்கும், ஆத்மாவாக விருக்கும் என் பிரபு ஸ்ரீராமசந்திரன ஸர்வேஸ்வரனுக விருந்து ராவணனைப் பரிஹரிக்க வரும்போது, அவன் இதைத் தவிர எங்கனம் தோன்றுவான் ? அப்பேற்பட்ட ஸர்வேஸ்வரனிடம் விமுகனுகவும், விரோதஸ்பாவத்துடனும் விளங்கும்போது, ராவணன் எவ்விதம் உத்தமமான சாந்தியை எளிதில் அடைவான் ? அடையத்தான் கூடும் ? (216)

என் பிரபு மஹேஸ்வரர் உமையிடம் சொன்னர். "உமா, என் பிரபு ஸ்ரீராமனை நம்பி ஸர்வஜகமும் வாழ்கிறது. அப்பேற்பட்ட பிரபுவின் புருவ நெரிப்பு உலகங்களைப் படைப்பதாகவும், உலகங்களை அழிப்பதாகவும் இருக்கிறது. பரம பாவன மூர்த்தி, சங்கல்ப மாத்திரத்தில் புல்லை வஜ்ரமாகவும், வஜ்ரத்தை புல்லாகவும் ஆக்க சக்தி கொண்ட ஸர்வ சக்திமான், தான் ஸ்வயமாகவே ஸத்ய நாராயணனுக விருப்பவன், அவனை விட்டு அவனுடைய தூதனுக விருக்கும் அங்கதனுடைய சபதம் எவ்விதம் வீணுகி, பொய்யாகிவிடும்? ஒருக்காலும் நடக்காது. என் பிரபு ஆதாரமூர்த்தியல்லவோ. நம்பினவர்களை கைவிடுபவன் அவன் இல்லையே. விஸ்வ ரக்ஷகனுகவும் இருக்கும் ஸ்ரீராமன், அவனுடைய தூதன் அங்கதன் விஷயத்தில் எவ்விதம் மாறுதல் ஏற்படும்?" (217)

"ராவணு, இன்னமும் உனக்கு ஸ்ரீராமனுடைய பரத்வ சௌலப்யங்கள் விளங்கவில்லையா? யோசனை செய்து பார். நான் சொன்னேன் என்று என் வார்த்தைகளைத் தள்ளி விடாதே," என்று பலவிதங்களால் அங்கதன் ராவணனிடம் சொல்லிப் பார்த்தான். ஆனல் ராவணனே மனம் மாறவில்லை. காலத்தினுல் கெடுக்கப்பட்டிருந்தபடியால், அவனுடைய முடிவும் சமீபித்துக்கொண்டிருந்தது. சத்ருவின் மதத்தை அழித்துவிட்டு, ராமனுடைய பரத்வத்தை ஸ்தாபனம் செய்துவிட்டு, ராமசந்திரனுடைய சௌலப்ய வாத்ஸல்யாதி குணங்களைப் புகழ்ந்துவிட்டு, கடைசியாக வாலிபுத்ரன் மீண்டும்

ராவணனைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கிளம்பினன். (218)

"ரணபூமியில் உன்னுடன் விளையாடிவிட்டு, அதன் பிறகு கொல்லாமல் உன்னை நான் விடுவேனாகில், நான் இவ்விதம் உன்னுடன் இதுவரை வார்த்தை, வீரபிரதாபங்கள் செய்தது வீணாகிவிடும். எல்லாம் வ்யர்த்தமாகிவிடும்." அங்கதன் சபைக்கு வருமுன்பே ராவண குமாரனைக் கொன்றிருந்தான். அதையும் நினைவு கொண்டு அங்கதனுடைய வீர சபதத்தையும் கேட்ட ராவணன் மனத்திற்குள் பயமடைந்தான். (219)

அங்கதனுடைய சபதத்தையும் வீர முழக்கங்களையும் கண்ட ராக்ஷஸர்கள் அதிவியாகுலமடைந்து, பயத்தினால் முகம் வெளிறிப் போனார்கள். அதிக கவலையடைந்தவர்களாகத் தோன்றினார்கள். (220)

சத்ருவின் பலத்தை மர்த்தனம் செய்துவிட்டு வாலி புத்ரனாகிற அங்கதன் மனத்தில் சந்தோஷம் கொண்டவனாக, புளகாங்கித சரீரத்துடன் ஸ்ரீராமசந்திரனுடைய தாமரை இணையடிகளை அடைந்து நமஸ்கரித்தான். அவனுடைய மனம் ராம கார்யத்தை சரிவரச் செய்து விட்டிருந்தபடியால் ஆனந்த மடைந்திருந்தது. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர்களை ஊற்றுக்களின் மடுக்களைப்போலப் பெருக்கி, தனக்கு, ஏன் என் பிரபு ஸ்ரீராமனுக்கும், இன்பத்தை வாரி அளித்தான், ஆனந்த மூர்த்தியாகிற அங்கத யுவராஜன். (221)

[*தியானம்*

ராமாசீதா, நாராயணா, லக்ஷ்மிபிரபோ, உங்களை நாரதர் நம்மாழ்வார், நாதமுனிகள், வால்மீகி, பரதன், உமா மஹேஸ்வரர்கள், அஸ்வினி குமாரர்களை முன்னிட்டு சரணம் செய்கிறேன். உலகம் உங்களுக்கு எவ்விதம் முக்கியமாக விருக்கிறதோ, அதைப்போல யாகங்கள், ஸத்கர்மாக்களும் உங்களுக்கு மிக முக்கியமாக விருக்கின்றன. ஸாது ஜன ஸம்ரக்ஷகா, ஒரு மனிதன் மஹாகர்மங்களின் பலனாக மஹத்தான ஐஸ்வர்ய ஸம்பத் பெருமைகளையும், ஞான விசேஷங்களையும் அடைந்து என்ன பண்ணவேண்டும்? தர்மர் என்ன பண்ணினார்? இன்னும் அநேக ராஜரிஷிகள் என்ன பண்ணினார்கள்? அவர்கள் மேன்மை அடைந்ததற்குக் காரணம் தபஸ், யாகாதிகள்

தானே காரணம். அந்த தபஸ்ஸுயம் யாகமும் உங்களையே பற்றியிருக்கிறது. ராஜஸ்ஸுயம் செய்த தர்மர் பாரத யுத்தத்திற்குப் பின்பு தனது பாபங்களைப் போக்க அஸ்வமேத யாகம் செய்தார். அது மாதிரி ஸ்ரீராமனும் செய்தார். எந்த யாகத்தில் தர்வி ஹோமம் (பலாச இலை) முதலாக ராஜஸுய அங்கமான எல்லா யாகங்களையும் செய்த பின்பு ஸர்வஜித் என்கிற பட்டத்தை அரசர் பெறுகிறாரோ, அந்தயாகத்தைப் பூர்த்தி செய்த தர்மர், ராமன் முதலியவர்கள், மருத்தனைப் போல, ஸம்பத்துக்கள் தேவ சொத்துக்கள் என்று நினைத்து தான, தர்ம தேவ பூஜை செய்தார்கள். போகத்திற்கும் ஏற்பட்ட ஐஸ்வர்யங்களை தர்மங்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். அப்போதும் கூட தர்மர் கிருஷ்ணனையே அகரகண்யராகப் பூஜித்து, அவருடைய ஸர்வ ஸ்நேகத்தை ஸம்பாதித்தார். காமமும் க்ரோதமும் விலகின ராஜரிஷிகள், கருடன் மஹா விஷ்ணுவை அண்டியதைப் போல, பகவான் விஷ்ணுவை உத்தேசித்து யாகம் முதலிய கர்மாக்களைச் செய்தனர். அதன் பிறகு மனத்தில் சாந்தியை அடைய விரும்பிய அவர்கள் மோக்ஷ மார்க்கத்தைப் பின்பற்றியவர்களாக கர்மங்களிலிருந்து ஒழிவடைந்தார்கள். அப்பேறபட்ட ஒழிவுதலே இயற்கையாகவே ஸ்வபாவமாகக் கொண்டு பிரும்ம ரிஷிகளை நான் என் மன சாந்திக்காக ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.]

சாயங்காலம் வந்துவிட்டதை அறிந்த தசகந்தன் (ராவணன்) தன் மனத்தின் சாந்திக்காக அரண்மனையின் அந்தப்புரத்திற்குச சென்றான். மந்தோதரி ராவணனை சந்தித்து அவனது வ்யாகுலததைத் தெரிந்துகொண்டு சமாதான வார்த்தைகளைச் சொன்னாள். (222)

"காந்தா, உமக்கு எது ஹிதம், எது அஹிதம் என்று விசாரித்துத் தெரிந்துகொள்ளத் தெரியவில்லை. நான் சொல்வதை விசாரித்து அறியுங்கள். நீர் நினைக்கிறபடி ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் கடோரஸ்வபாவம கொண்டவர்கள் அல்லர். ஸ்ரீராமனுடைய ஒவ்வொரு முயற்சியும் உம்மைத் தனது பக்கம் அணைத்துக்கொள்ள உபாயமாகவல்லவோ விருக்கிறது. அவர்களிடம் யுத்தம் செய்ய வேண்டும் என்கிற மனப்பான்மையை, பிடிவாதமாகக் கைக்கொண்டு, துராசாரத்தை விட்டுவிடுங்கள்.

உமக்கு யேற்பட்ட ஸ்ரேயஸின் காரணத்தினுல் நீர் அவரிடம் யுத்தம் செய்வதற்கு யோக்யரல்லர். இது சோபையைத் தராது. சீதா அபஹரணத்தின்போது, ராமானுஜன் சீதையைக் காப்பாற்றும்பொருட்டு ஒரு கோடு தனுஷ்ஷினுல் கீறி, சீதையை அதைத் தாண்டி வரக்கூடாது என்று கட்டளேயிட்டிருந்தான். அந்தக் கோட்டைக்கூட தாங்கள் தாண்டமுடியவில்லையே. சீதையல்லவோ வாசலில் தாண்டி வந்து, உமக்குப் பிக்ஷை போட்டாள். அப்படி யிருக்கும்போது, உமக்கு ஸ்ரீராமனிடம் யுத்தம் செய்வதற்கு புருஷத்வம் இப்போது எப்படி வந்தது?'' (223)

''என் பிரியதமரே, அவர்களுடைய தூதர்களான ஹனுமான், அங்கதன் ஆகியவர்களே அசகாய வீரத் தன்மை கொண்ட காரியங்களேச் செய்யும்போது, அவர்களுடன் நீங்கள் யுத்தம் செயது, உயிருடன் மீள்வீர்களா ? விளேயாட்டுப்போல இந்த கணக்கற்ற வானரங்கள் மஹா சமுத்திரத்தை, கருட பக்ஷியைப்போல தாண்டி வந்து விட்டார்கள். ஒவ்வொரு வானரமும் சிம்மம் மாதிரி கர்ஜனே செய்துகொண்டு லங்கையின் வெளிப்புரம் ஓடித் திரிந்து அலேகிருர்கள். ஹனுமான் ஒருவரே போராதா ?'' (224)

''காவற்காரர்களேக் கொன்று, அசோகவனத்தை அழித்து, அட்டஹாஸம் செய்த ஹனுமானே நாம் மறக்க முடியுமோ? உமக்கே தெரியும். ஸ்வாமி, நீர் பாத்துக்கொண்டிருக்கும் போது, அக்ஷய குமாரனே வதம் செய்யவில்லேயா? ஸம்பூர்ண லங்கைக்கு நெருப்பு வைக்கவில்லேயா? அந்த சமயத்தில் தங்களுடைய பலம், கர்வம் எங்கு சென்றிருந்தது?'' (225)

கைகளே தன் பதியின் கழுத்தில் போட்டுக்கொண்டு, மந்தோதரி மீண்டும் சொன்னுள். ''நாதா, வீணுகத் தற்பெருமை செய்துகொண்டு மதியை யிழந்து விடாதீர். என் வார்த்தைகளே ஹ்ருதயத்தில் தரித்துக்கொண்டு விசாரித்து யோசியுங்கள். பதி, ரகுபதியைச் சாதாரணமான மானிடன், சாதாரணமான அரசன் என்று எண்ணி மோசம் போகவேண்டாம். அவரே ஸகல சராசரங்களுக்கும் பதியான ஜகந்நாதர். அதுளித பலம் கொண்ட ஜகத்பதி.'' (226)

''அவருடைய பாணப்பிரயோகங்களின் பிரதாபங்களே நன்ருக அறிந்தவன் மரித்துப்போன மாரீசன். ஆனுல் அவனே

தாங்கள் அலக்ஷ்யம் செய்துவிட்டு, அவனுடைய வார்த்தைகளை யும் மதிக்கவில்லை. அவனுடைய வார்த்தைகள் ஈசனுடைய வார்த்தைகள் என்று தாங்கள் நினைத்து லக்ஷ்யம் செய்யவில்லை. ஸ்வாமி, உமக்கே ஞாபகம் இருக்குமே. ஜனகரின் ஸபையில் எவ்வளவு பூபாலர்கள் சீதையின் ஸ்வயம்வரத்திற்காக வந்திருந் தார்கள் என்றும், பெரும் கீர்த்தி பெற்றவர்களும் யுத்தத்தில் பின்பு காட்டாமல் நின்று சண்டை போடும் பலவான்கள் பலர் வந்திருந்தனர் என்றும் உமக்குத் தெரியுமே. நீரும் இருந் தீரே. (227)

"இந்த ராமன் அந்த ராஜ சபையில் சிவனுடைய தனுஷ்ஷை பங்கம் செய்துவிட்டு ஜானகியை மணந்து கொண் டார். அப்போது தாங்களும் அங்கு போனீர்கள். அந்த சமயத் தில் அவருடன் சண்டை செய்து யுத்தத்தில் ஏன் ஸ்வாமி ஜயத்தை அடையவில்லை? இந்திர புத்ரனுகிற ஜயந்தனும் இந்த ராமனுடைய பலத்தை நன்கு அறிவான். அவனும் ஸ்ரீராம னுல் பீடிக்கப்பட்டு, தன்னுடைய ஒரு கண்ணை யிழந்து, உயிரை மீட்டுக் கொண்டான்." (228)

"ஸ்வாமி, சூர்ப்பனகையின் கதியும் உமக்குத் தெரிந் திருக்கிறது. அவ்விதமிருந்தாலும், உம்முடைய மனதில் ஏன் லஜ்ஜையை அடையவில்லை? ஏன் ஸ்வாமி சண்டை செய்ய விருப்பமுள்ளவராக விருக்கிறீர்?" (229)

"பிரபு, இந்த ராமன் விராதனையும், உம்மைப்போல சரிக்குச் சமமான பலசாலிகளான கரன், தூஷணன், திரிசிரஸ்ஸையும் விளையாட்டாகவே கொன்றிருக்கிருன். அதுமாதிரி அவன் கபந்தனையும் வெட்டித் தள்ளி யிருக்கிருன். வாலியும் ஒரே பாணத்தினுல் அடிக்கப்பட்டு உயிரை இழந்திருக்கிருன். தச கந்தரே, இப்போவாவது ராமனுடைய உண்மையான ஸ்வரூபத் தைத் தெரிந்துக் கொள்ளும்." (230)

"நாதா, ஜலநாதரான வருணனை, ஸமுத்திர பந்தனம் என்கிற வியாஜத்தினுல் அடக்க முடியுமா? ஹே பிரபு, ஸேது பந்தனம் செய்யப்பட்டு, அதன் வழியாக பிரபு வானரர்கள் சஹிதம் ஸுவேலே மலைக்கு வந்து சேர்ந்து விட்டார்கள் என்ப தும் உமக்குத் தெரியும். ஸேனு சகிதமாக வந்து யுத்தம் செய்ய விரும்பும் ராமனை, சூரிய குல கீர்த்தியை த்வஜமாகக்

கொண்டிருக்கும் ஸ்ரீராமனை, தினகர குலமணியாக அறிந்து கொள்ளும். அதுமாத்திரமா, அவர் ஸகலரிடமும் கருணைமய மாக விளங்குகிறார். உம்மிடமும் கருணைகொண்டு உம்மையும் மீட்க விரும்பி, தூதரை அனுப்பி, உமக்கும் ஹிதத்தைச் செய்ய விரும்புகிறார். ஸ்வாமி, அவருடைய கருணை உள்ளத்தை பரம அபராதிகளுக்கும் ஹிதம் செய்யும் அன்பு மனத்தை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்." (231)

"அந்த மஹானுபாவரால் அனுப்பப்பட்ட தூதர்கள் ராஜ சபையில அவருடைய கீர்த்தி பிரபாவங்களை நிலைநாட்டி, யானைகளின் கூட்டத்தின் நடுவே ஒரு சிம்மக்குட்டி விளை யாடுவதுபோல, உங்கள் அனைவருடைய மதச் செருக்கை அழித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அங்கதனும் ஹனுமானும் அந்த பிரபுவினுடைய சேவகர்கள். ரண பூமியில் அதுளித பலம் கொண்டு சண்டை செய்யும் அதிவீரர்கள். ஸ்வாமி, நமக்குச் சூசகமாக ஹிதம் செய்யும் விருப்பத்துடன் அவர்களை இங்கு அவர் அனுப்பி யிருக்கிறார். இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்."

[*தியானம்*

நாராயணா, சீதாபதே, ராமா உன்னை எவ்விதமான பக்தியி னால் அடைய முடியும்? முதலில் உமது மாயையிலிருந்து விடு பட வேண்டும். அநேக ரூபங்களை உடையதும், அநேக நாமங் களைத் தரித்துக் கொண்டதாய், அநேக பிரயோசனந்திரங்களை உடைத்தாகவிருக்கும் உமது மாயை தென்னில் நிலாவைக் கண்டாற்போல, சந்தன குஸும தாமபூலாதிகளைப்போல, பசிய னுக்கு அன்னத்தைக் கொடுப்பதுபோல, உமது மாயை. ஸ்வாமி, எல்லோரையும் மயக்குகிறது. காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மஹா மோஹம் என்னும் ஆறு வ்ருஷளர்கள் நமது சரீரத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். கர்வம், அடங்காமை, அஹங்காரம், பொறாமை, த்ரோஹம், கடுஞ் சொல், க்ரோதத் தன்மை, கடூரத் தன்மை க்ஷத்திரிய குணங்களாகவும்; க்ரூரனாகவிருத்தல், வஞ்சனை, மாயை, ரஹஸ்யமாகக் கெடுதல் செய்வது, டம்பம், ருஜுவாக இல் லாமை, கோட்சொல்லுவது, பொய் என்கிற வைஸ்ய குணங்க

ளும்; தாஹம், பசி, நித்ரை, சோம்பல், அருவருப்பின்மை, இரக்கமின்மை, மனோவியாதி, அறியாமை, பாப எண்ணம், கோபம், ஆசை, சிரத்தையின்மை, உறுதியின்மை, ஆலோசியாமை, அசுத்தனாகவிருப்பது, மலினமாகவிருப்பது ஆகிய சூத்திர குணங்களும் எவனிடம் காணப்படுகிறதில்லையோ, எந்தக் காலத்திலும் பிராணன்களை யடக்கி, ஸதா நாராயணனை தியானம் செய்கிறானோ, அவன்தான் பிராம்மணன், விஷ்ணு பக்தன் என்று சொல்லப்படுகிறான். ஸாத்விகனாகவும், சுத்தனாகவும், கோபமற்றவனாகவும், தைர்யத்துடன் நாவையும் குறியையும் அடக்குகிறவன், அசஞ்சல நாராயண பக்தியுடன் விளங்குபவன், இரண்டு கண்களையும் நாராயண பதத்தில் பதித்திருப்பவன், விஷ்ணு பக்தனாகக் கருதப்படுகிறான். பயம் விட்டவனும், நாராயண ஸங்கல்பத்தை அனுசரித்து நடப்பவனும், தர்மத்தில் நம்பிக்கை வைத்து பொறுமையை வ்ரதமாகக் கொண்டு கோபத்தை ஜயிக்கிறவன் நாராயணப் ப்ரியனாகிறான். விரோசனனுடைய புத்ரனாகிற பலி அசூயைக்கும் அபிமானத்திற்கும் இலக்காகி, இளமைப் பருவம் முதல் பிராம்மணர்களிடம் அசூயை கொண்டு, பிற்பாடு அவனிடமிருந்து லக்ஷ்மி விலகும் சமயம் அவன் வருத்தத்தை அடைந்தான். அகங்காரம் என்பது லக்ஷ்மிக்கு அதர்மத்தினிடமிருந்து உண்டான புத்ரன் என்று ஸ்ருதி கூறுகிறது. அவ்வித அஹங்காரத்தால் தேவர்களும் அசுரர்களும் பல தடவைகள் அழிந்திருக்கிறார்கள். பல ராஜரிஷிகளும் நாசமடைந்திருக்கிறார்கள். அகங்காரத்தை வென்றவனே விஷ்ணு பக்தனாகிறான். பிரும்மதேவர் பிராணிகளின் ஸ்ரேயசுக்காக தர்மததைப் படைத்தார். பிரஜைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து தர்மத்தை வளர்க்க வேண்டும். காமத்தையும் கோபத்தையும் விட்டு தர்மத்தை அவலம்பித்து, தர்மத்திற்கு காரணமாகிற பிராம்மண விஷ்ணு பக்தர்களைப் பூஜித்து, மனிதன் பெரும் ஆபத்துக்களிலிருந்து தப்புகிறான். தர்மத்திற்குக் கெடுதல் நேர்ந்தால் அரசர்கள் பெண்டிர்களையும், பிள்ளைகளையும் விட்டுவிடுகிறார்கள். பிராணிகளின் க்ஷேமத்தைச் செய்துக்கொண்டு, தானம், தர்மம், இன்சொல், அஜாக்ரதை யில்லாமை, சுத்தி இவைகளே ராஜ ரிஷிகளின் குணங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவர்களையே யாவரும் எக்

காலத்திலும் புகழ்கிருர்கள். அப்பேற்பட்ட சுசியானவன் ஸ்ரீராமன். ஹரி : நாராயணன், அச்யுதன், அனந்தன், சூரியன் சந்திரனை கண்களாக உடைய விரூபாக்ஷன், தர்மத்தைக் கண்ணுகவுடைய அநலன், புண்டரீகாக்ஷன். அவன் திருவடிகளே தஞ்சம்.]

"ஹே பதி, (அப்பேற்பட்ட ஸ்ரீயப்பதியான நாராயண அம்சமான ஸ்ரீராமனை, ஸ்ரீவத்ஸவக்ஷ : ஸ்ரீநிவாஸ : நித்யஸ்ரீ நித்ய மங்களம் என்று சொல்லப்படும் சீதாராமனை,) தாசரதி புத்ரனை ஸர்வ சாதாரண அரசன், மானிடன் என்று அடிக்கடி சொல்லி மஹா மோகத்தை அடைந்திருக்கிறீர்கள். வ்யர்த்த மாக தனது அபிமானம், மதம், மமதை, அஹங்காரம் ஆகிய எல்லாம் தாங்கள் தங்கள் தலைகளில் சுமந்துகொண்டிருக் கிறீர்கள். இவைகள் எல்லாம் நமக்கு நன்மையைத் தருவது அல்ல. பிரியதமரே, ராஜாரிஷி போலவிருப்பவனும், மஹா நாராயணனும், மஹா சுத்தனும், தர்மத்தைக் கண்ணுகக் கொண்ட விரூபாக்ஷனுகிற ஸ்ரீ ராமனை தாங்கள் ஏன் பகைக் கிறீர்கள் ? காலத்திற்கு தாங்கள் வசப்பட்ட படியால் மனமும் புத்தியும் உம்மிடம் பேதலித்து விட்டிருக்கிறது." (233)

"காலம் என்கிற ம்ருத்யு ஒருவனையும் அகாரணத்தினுல் தணடம் கொண்டு அடிப்பதில்லை. அவனுடைய தர்ம ஆசரனைகள், பலம், புத்தி, சிந்தனை செய்து ஆராய்ந்து, தர்ம வழி யில் போகும் நடத்தை ஆகியவைகளை காலம் கெட்டுவிடில், மனிதனிடமிருந்து அபகரிதது விடுகிறது. ஸ்வாமி, எவனுக்கு மிருத்யு சமீபத்தில் இருக்கிருனே, அவனுக்கு பிரமையும் மஹா மோஹமும் ஏற்படுகிறது. ஸ்வாமி, நீர் அவ்விதம் இப்போது இருககிறீர்." (234)

"உமக்கு இரு புத்ரர்கள் மரித்துப் போய் விட்டார்கள். ஐஸ்வர்யங்கள் கொண்ட லங்கை அக்கினியில் எரிக்கப் பட்டது. அருமைக் கணவரே, இன்னுமுமா உமக்கு விவேகம் ஏற்படவில்லை? கிருபாஸிந்துவாகிற ஸ்ரீ ரகுநாதனை பஜியுங் கள். அவனுடைய அச்யுத பாதங்களை அடைந்தால்தான் அமலமான கீர்த்தியும் விமலமான சாந்தியும் உத்தம கதியும் கிடைக்கும்." (235)

மந்தோதரியின் வசனங்கள் பாணம் மாதிரி ராவண

னுடைய மனதில் தைத்தன. அவைகளை அவன் ஏற்றுக் கொண்டான் இதற்குள் காலைப் பொழுது வந்து விட்டது. அவன் "நாம் இனி என்ன செய்யக் கூடும்?" என்று யோசித்த வண்ணமாக விருந்தான். அதன் பிறகு ராவணன் சபைக்குச் சென்றான். சிம்மாஸனத்தின் மீது உட்கார்ந்தான். அவனுககு அத்யந்த அபிமானம் இருந்தபடியால், பயம் வெளிப் படத் தோன்றவில்லை. (236)

இங்கே ஸுவெலை மலையில் ராமன் அங்கதனை அழைத்து எல்லா விருத்தாந்தங்களையும் கேட்டார். அங்கதன் ஸ்ரீ ராம னுடைய பாத பங்கஜங்களை சரணமடைந்து எல்லாவற்றையும் சொன்னான். வாலியின் வார்த்தைகளை நினைவு கொண்டவராக, ஸ்ரீராமன் அங்கதனை தனது அருகில் அமர வைத்துக்கொண்டு, மஹாகிருதக்ஞரைப் போல, அவனைத் தடவி ஆஸ்வாசப் படுத்திக் கொண்டிருந்தார். கிருபாளு, கராரி, ஸ்ரீ ராமன் அங்கதனைப் பார்த்து அன்புடன் பேச ஆரம்பித்தார். (237)

[தியானம்

நாராயணா, ஸங்கர்ஷணா, அச்யுதா, கோவிந்தா, மாதவா, ராமசீதா, நீ செய்யும் கிருபையும், உபகார பரம்பரையும் என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறது. அதைவிட உன்னுடைய ஸ்வாதந்திரியமும் இன்பகரமாகவும் எனககும் ராவணனைப் போன்ற விமுகனுக்கும் அபய ஹேதுவாக விருககிறது. பிராட்டியைக் கெட்ட எண்ணத்துடன் ராவணன் லங்கைக்கு கூட்டி வந்த போதிலும், அவளைப் பலவிதமாகத் துன்புறுத்தியபோதி லும் அந்த கொடுஞ் செய்கையாகிற பிராட்டியைப் பகவானிட மிருந்து பிரித்தல் அவனுக்குச் சுக்ருதமாகவும் அக்ஞாத சுக் ருதம் என்று சொல்லப்படும் நிருபாதிக கிருபையை அவனுக்குச் சேர்ப்பிக்கலாயிற்று. நீ செய்யும் சூழ்ச்சி, அவனை ஊழ்வினை யின் பயனாக ஆழ்ந்த சம்சார கிணற்றில் விழுந்தவனை, அருகே நின்று கருணையினாலே காப்பதுபோல பரம உபகார சிந்தையுள்ள சீதாராமா, சுற்றி வளைத்து, அவன் மறந்திருக்கும் நிலையிலும், அவனுக்கு உன்னுடைய ஸ்வரூபமாகிற கிருபையை நினைப்பூட்டி மற்றவர்க்குப் பரம ஹானியாகத் தோன்றும் குற்றத் தையும் குணமாக ஸ்வீகரித்துக்கொண்டு, சீற்றமுடைய எம்

பெருமான் என்ன பொறுமையை, க்ஷமயை, சிரிப்பை, உகப்பை, உபகார ஸ்மிருதியை ஸ்வீகரித்துக் கொண்டாய்? இது லங்கையின் விசேஷமா? சீதாபிராட்டியை ராவணன் ஸ்வீகரிக்க நினைத்தலா, அல்லது ஈஸ்வரோஹம் என்கிற ஸ்வாதந்திரியமா, எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இன்று என்னைப் பொருளாக்கி, தன்னை என்னுள் வைத்தான் அன்றென்னைப் புறம் போகப் புணர்த்ததென் செய்வான், என்கிறபடி ஈஸ்வரன் கீழும் மேலும் பண்ணும் தண்ட விசேஷங்கள் எல்லாம் சிக்ஷை விசேஷ ரூபங்களான உபகாரங்களா? புருஷார்த்தம் தெளிவுபெற முற்பட்ட முக்தரானவர்களைப் பார்த்து, மோக்ஷ சித்தி பெறவொண்ண அவனை அக்ஞாத, யாத்ருச்சிக ஸுகிருதாதிகளுக்கு விபரீத வாஸனைகளை ஒழித்து, வடிவழகாலும் சீலததாலும் வசீகரிக்கும் எம்பெருமான், ராமா, என்னுடைய நன்னெஞ்சம் உனது ஈரவாடை பெற, உனது உபகார ஸ்மிருதியை நான நினைக்க, இவனுடைய தோஷமும் நம்முடைய தோஷமே, என்று நினைக்கிறுயே, அதை நான் எவ்விதம் விவரிப்பேன்? ஹே அந்தர்யாமியே, ஸர்வ வ்யாபகரான திரிவிக்ரமா, எம்பெருமானுக்கு சேஷம் என்று நினைக்காத ஸ்வாதந்திரிய ஜீவனிடத்தில் அக்ஞானம் வளர்ந்து, சூழ்ந்த விமுகனிடம், அவனுடைய பொறுப்புக்களை தானே ஏற்றிக் கொள்ளும் உனது நிர்ஹேதுக் கிருபை, நிருபாதிகத் வம், சரீரம் அழிந்ததும் ஸ்ரீவைகுண்டத்தை அடைவிக்கப் பண்ணும் உமது உபகார பரம்பரையை நான் எவ்விதம் புகழ்வேன்? சேதனன் பண்ணும் பரிபவங்களையும் பிரதிகூலங்களையும் அறுக்கும் கோதண்ட ஹஸ்தா, அவைகளை உகப்பாக ஏற்றுக்கொள்ளும் உம்முடைய ஸ்வாதந்திரிய உதாரத்தை, வலி பொறுக்க மாட்டாமல் கதறும் குழந்தை தனது தாயைக் குத்திக் உதைக்குமாப்போலே, மறந்திருந்தாயே, அதை நான் என்னவென்று சொல்வது? இந்தத் தோஷமே பகவத் நிக்ரஹ ஹேதுவாகி, பிராட்டி சேதனுடைய தோஷங்களை நித்ய ஸூரிகளிடமும் மறைப்பதுபோல, ஸ்வதோஷம் என்கிற நினைப்பாகிற உமது உதார மனத்தை அபய ஹேதுவாக நான் நினைக்கிறேனே நாரணா, நான் மறையால் புகழும் புகழும் திருவேங்கடமுடையானே, இதுவா உன் பிரபாவம்?]

"வாலி புத்ரா, உன்னைப் பார்த்தால் என் மனம் சந்தோஷிக்கிறது. பரம ஆனந்தத்தை அடைகிறது. என பிள்ளாய், ஸத்யமாக நான் கேட்கிறேன், நீ நடந்த விஷயங்களை விபரமாகச் சொல். ராவணன் ராக்ஷஸர்களுக்கு அதிபதியாயிற்றே, அவனுடைய புகழ், கீர்த்திகள், அதிபலம், தீர்க்காயுஸ், எல்லாம் உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்றதே. எல்லோரும் ஆச்சரியப்படும்படி இருக்கின்றதே. அது வாஸ்தவமா ?"

(238)

"அவனுடைய நான்கு மணிமுகடங்களை காலால் உதைத்து இங்கு அனுப்பினையே, என் பிள்ளாய். அவ்வளவு மஹத்வம் வாய்ந்த பெரும் பிரதாபமுள்ள அரசனை, என்ன தைரியம் கொண்டு அவனுடைய முகுடங்களின் மேல் கால் வைத்தாய்? ஆச்சர்யமாக விருக்கிறதே." அங்கதன் பதில் சொன்னான். "ஸ்வாமி, தாங்கள் ஸர்வக்ஞர். திரிகாலத்தையும் அறிபவர். பரம உபகாரி. (பரம சுகத்தை நிருபாதிக கிருபையினால் சத்ருவுக்கும் அளிக்கும் உதாரர்.) அவ்விதமிருக்கும்போது, உம்மையே நம்பி வாழும் எனக்கு சுகத்தை வாரி அளிப்பதில் தயங்குவீரோ ? தயாபரரே, அவைகள் நான்கு மணி முகுடங்கள் அல்ல. ஸர்வ ஸ்வதந்திரன் என்று தன்னை அபிமானிககும் அரசனின் நான்கு குணங்கள்," (239)

"ஸ்வாமி, ஸாமம், தானம், பேதம், தண்டம் என்கிற நான்கு வழி மார்க்கங்கள் ஒவ்வொரு அரசனின் ஹ்ருதயத்தில் வசிக்கின்றன என்று வேதங்கள் கோஷிக்கின்றன. இவைகள் ராஜதர்ம சாஸ்திரத்தில் நீதியின் நானகு தூண்கள், கால்களைப்போல விருக்கின்றன. இவ்விதம் அறிந்துகொண்டு, ஸ்வாமி, அவைகளே அவைகளின் நாதனுகிற தங்களிடமே வந்து சேர்ந்திருக்கின்றன." (238)

"தசகண்டன் என்கிற ராவணன் தர்மத்தைத் தியாகம் செய்துவிட்டான். பிரபுவின் பதங்களில் விமுகனுகிவிட்டான். அதனுல் காலத்தின் வசம் அடைந்துவிட்டான். கோசல ஈசரே, இதனுல் அவைகளே, ராவணனிடமிருந்தால் தங்கள் பெயர் கெட்டுவிடும் என்று ஸ்வயமாகவே தங்களிடம் சரணமடைந்து விட்டன." (249)

அங்கதனுடைய பரம சதுரமான பதிலைக் கேட்டார்.

அவைகளைக் கேட்ட பிரபுவுக்கு சந்தோஷம் தாங்கமுடியாமல், சிரித்துவிட்டார். அதன் பிறகு வாலி குமாரன் எல்லா விருத்தாந்தங்களையும் சொன்னான். (242)

எதிரியின் படைபலங்கள், எண்ணங்கள் முதலியவற்றை அறிந்த ரகுராமன் எல்லா மந்திரிகளையும் அழைத்து உத்தர விட்டார். லங்கைக்கு நான்கு கோட்டை வாசல்கள் பலமாக விருக்கின்றன. அவைகளைத் தாக்குவதற்கு யோசனை செய்யுங்கள்.'' (243)

[*தியானம்*

நாராயணா, சீதாராமா, லக்ஷ்மிநாதா சரணம் சரணம். நம்மாழ்வார் தொழுத ஸுவேல பர்வதத்தில் கிடந்த நம்பியே, தியாகராஜர், அங்கதன், ஆகிய இருவர்களும் உன்னை ஸாம, தான, பேத, தண்டத்தில் சதுரன், கெட்டிக்காரன் என்று சொன்னாரே, அதை எதனால் சொன்னார்கள்? என்ன ஆதார பலத்தினால் சொன்னார்கள்? அதை எனக்குத் தெரியும்படி சொல்லமாட்டாயா? மாயை, அஹங்காரம், அவித்யை, இவைகளுக்கு அப்பாலிருக்கும் தமஸ: பரஸ்தாத், என்று சொல்லப்படும் கடந்த நம்பியே, உமது ஸ்வரூபமாகிற கிருபையையும், ஸர்வ சேஷித்வத்தையும், எவ்விதம் மஹானுபாவர்கள் அறிந்தார்களோ, அதையும் எனக்குச் சொல் அப்பா. ஸர்வ ஜகத்திற்கும், நன்மை செய்யும் பரம சாம்பவா, ராவணனுக்கு அயோத்தி ஸாம்ராஜ்யத்தை வாக்கினால் அளித்த லங்கைக்கு நடந்த நம்பியே, உன் நாமமாகிற "நமோ நாராயணமே" என்று சொல்லப்படும் அஷ்டாக்ஷரத்தில் நம: சப்தத்திற்கு அர்த்தம் சொல் அப்பா. பரமசிவனுக்கு பரம பக்தனாகிற ராவணனுக்கு அதன் அர்த்தம் தெரியவில்லையே. விருஷபத்வஜன், வ்ருஷப வாஹனன் என்று சொல்லப்படும் பசுபதிக்கு மஹா தபஸ்ஸினால் கிடைத்த ஸர்வ ரக்ஷகத்வம் என்கிற க்ஷமை எவ்விதம் என்போன்ற ஜீவர்களுக்கு கிடைக்கும்படி எது அப்பா அருளியது? அதையாவது நீ சொல்ல மாட்டாயா? ராவண வதம் என்கிற வ்யாஜ்யத்தினால் தண்டம் செலுத்தப் புறப்பட்டாயே, இலங்கைகோன் ராவணனை வில்லால் அடித்த எங்கள் நம்பியே, விபீஷணன் நல்லானுடைய நாமம்

நாணுது சொல்லி, நமோ நாராயணமே என்று தேனும் பாலும் தமாய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமரு முரைமின் நமோ நாராயணமே என்று என்னையும் ஆட்கொள்ள வரமாட்டாயா? ஸர்வசேஷியான எம்பெருமான் சேஷபூதர் இருக்கும் இடத்தே அருள்புரியக் கடமைப்பட்டவனு? அவன் அங்கனம் செய்யாது போவில் நாம் நமது மமகார அஹங்கார ஸ்வரூபத்தைக் குலைத்து, நம: சப்தத்தினுல் அவனிருக்கும் இடத்திற்குச் சென்று, விபீஷணன், நப்பின்னைப் பிராட்டி மாதிரி சென்று சேவித்தால், அந்த ராமன், அந்த திருமாமகள் கேள்வன், நாராயணன எவ்விதம் அருள் பொங்குவிக்கிருன்? நிலமாமகள், மலர்மாமகள், மலைமாமகள், பிரமன், சிவன், இந்திரன், வானவர், நாயகராகிய நாரணன் "அந்தோ, நாம் நம் காரியத்திலிருந்து செய்யத் தவறி விட்டோமே," என்று பரித பித்து, "இனி நம் காரியத்தைச் செய்து தலைக்கட்டுவேன்," என்று வீரமுழக்கம் செய்கிருனே, அந்த கோதுகலத்திற்கு என்னவென்று உரைப்பேன்? ஜீவனுக்கு அவன் நற்தீய கர் மங்கள் எவ்விதம் பாரதந்திரியமோ, ஈஸ்வரனுக்கு சரணுகத தர்மமும், ரக்ஷகமும், பாரதந்திரியமன்ருே? கேட்பாரற்று ஸர்வ ஸ்வதந்திரனுன சேதனனின் பாபங்களைப் போக்கி, தண்டம் என்கிற கிருபையினுலே, இவனிடம் வந்து ஸம்பந்தம் செய்து கொள்ளப் பார்க்கிருன். இந்த ரக்ஷ்ய ரக்ஷகபாவ ஸம்பந்த மானது சேதன ஈஸ்வரர்களுக்கு இருவராலும், என்றும் அழிகக முடியாதபடி ஸம்பந்தம் அன்ருே? இவன் பாபத்தை இல்லை யெனச் செய்து, முன்புபோல இவனை என் பக்கலிலே என்னேடு கலந்து உய்யப் பெறவைத்து, என் கையாலே இந்த ஸம்பந் தத்தை சேதனனுலும் இல்லை, செய்ய முடியாது என்கிருப் போலே பிராட்டியும் புருஷோத்தமனும் பரிகிரஹிக்கிருர்கள். என்னை நெகிழ்க்கினும் என்னுடை நன்னெஞ்சத்தன்னை அகல்விக்கதானுங்கில்லானினி, பின்னை நெடும்பணைத்தோள் மகிழ் பீடுடை, முன்ன யமரர் முழுமுதலானே, கோல மலர் பாவைக்கன்பாகிய என்னன்பேயோ, நீலவரை யிரண்டு பிறை கவ்வி நிமிர்ந்தொப்ப, கோலவராகமொன்ருய் நிலங்கோட் டிடைக் கொண்ட வெந்தாய், நீலக் கடல் கடைந்தாய் உன்னைப் பெற்றினிப் போக்குவேனே? ஒருக்காலே சரணுக அடைந்

தவர்க்கும், உனக்கு அடிமை, உன் கைங்கர்யமே சிறந்தது என்று சொல்லிய விபீஷணர் போன்றவர்க்கும், உனது ப்ரீதியே எனது அறுசுவை என்று சொல்லும் எனக்கும், நாரணா, ராமா, சீதாபதே, லக்ஷ்மிநாதா, அஞ்சேல் என்று அருள்கிறாயே, என்றும் நீள்வ்ரதம் எனக்கு நெறி உரைக்கிறாயே, அருள் கொடுக்கிறாயே, இதுதான் வேதங்கள் ஸ்மிருதி சிஷ்டாசாரம் ஆகிய எல்லாவற்றிற்கும், தனக்கும் பிரியம் என்று இசை இசைக்கிறாயே, அந்த அபய ப்ரதான ஸாரம் மிக்க அபராதிகளுக்கும், காகாசூரன், காளியன் போன்றவாகளுக்கும் உண்டன்றோ? ஹே முகுந்தா, வராக சர்ம ஸ்லோகத்தில் இவ்வுலகம் அனைத்தும் எனது உடல்; உலகின் பிறப்பு இறப்பு ஆகிய தன்மைகள் என்னைச் சாரா. அன்புடன் என்னையே கதியாக நினை; அவன் நினைவு மாறி கல்போன்றும், கட்டைபோன்றுமிருக்கும் நிலையிலும், "அவனுககு நன்மையை ஸங்கல்பித்து அர்ச்சராதி கதியை அளிககிறேன்" என்கிறாயே, அது உனது அருளா, தர்மமா அல்லது உன் இயற்கையா? சொல். உமது ஸ்வாமித்வம் பிரகாசிக்கவும், எனது சேஷத்வம் பரிமளிக்கவும், ஸர்வ வித சேஷ விருத்திகளை சரணனுக்கு அளிப்பதில் நம: சப்தம் போல, அஞ்சலி பந்தம்போல, நமமேதிச சாச்வதம் என்றும், "யானே நீ யென்னுடைமையும் நீயே," என்று சொல்லுகிற நகார்த்த பலத்தாலே, "தனக்கேயாக"வென்கிறபடி பெரிய பெருமாள் திருமுகத்தைப் பார்த்து அனுஸந்தானம் செய்கிற என்னை எவ்விதம் எப்போது ஸ்வீகரிப்பாய்? அந்தர்யாமியான நாராயணா, உம்மைப் பல ஸ்தானங்களில் உபாஸிக்கும் பெரியோர்கள் ஹ்ருதயத்தில் நீர் விளங்குவதை ஆ யதனம் மஹத், "நெஞ்சமே நீள் நகராக இருந்த," என்று நம்மாழ்வாரும், "வடதடமும் வைகுந்தமும் மதிள் துவரா பதியும், இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே," என்று பெரியாழ்வாரும் சொல்லியபடி 'பத்மகோச ப்ரதீகாஸம் ஹ்ருதயம் சாப்யதே முகம்,' என்கிறபடி என் ஹ்ருதயத்தில் பெரிய கோயிலாகக் கொண்ட, நமோ நாராயணமே ஹ்ருதிதிஷ்டதி யோகீனும் என்கிறபடி அங்குஷ்ட மாத்ர: புருஷ: என்று சொல்லும்படி அருளுவாயா?]

அப்பொழுது கபீஸரான சுக்ரீவன், கரடி ராஜனான ஜாம்ப வான், விபீஷணன் ஆகியவர்கள் ஸர்வ அந்தர்மியான ஸ்ரீராம சந்திரனை, தினகர குலபூஷணனை மனத்தினால் ஸ்மரித்து நமஸ் கரித்தார்கள். அதன்பிறகு எதைச் செய்ய வேண்டும் என்று புத்தி பூர்வமாக நிச்சயித்தார்கள். அதன்பிரகாரம் வானரச் சேனைகளை அவர்கள் நான்கு பாகங்களாகப் பிரித்தார்கள். (244)

யதா யோக்யமாக சேனாதிபதிகளை நியமித்தார்கள். அதன் பிறகு அவர்களின்கீழ் வேலை செய்வதற்கு யூதபதிகளை அழைத்து அவர்களுக்குப் பிரபுவின் மஹத்வங்களைச் சொல்லி, தகுந்த ஆக்ஞையை விநியோகம் செய்தார்கள். அதன்பிறகு ஒவ்வொரு வானர வீரரும் யுத்த முழக்கம் செய்துகொண்டு, சிம்மத்திற்கு சமானமாக கர்ஜனை முழக்கம் செய்தார்கள். (225)

ஒவ்வொருவரும் ராம சரணங்களில் நமஸ்கரித்து பர்வ தங்களின் சிகரங்களை உடைத்து, ஆயுதமாகக் கொண்டு யுத்தம் செய்யப் புறப்பட்டார்கள். ஒவ்வொருவரும் "கோஸல ராஜ ரகுவீரனுக்கு ஜயம் ஏற்படட்டும்," என்று முழங்கிக் கொண்டு, ஜயகோஷ சப்தங்களுடன் சென்றார்கள். ஒவ்வொரு வானர, கரடி, சேவகர்கள் ரகுவீரனுக்கு, தினகர குலமணிக்கு ஜய சப்தங்கள், மங்கள கோஷங்கள் செய்தனர். (அப்பேற்பட்ட கைங்கர்யம் பாக்யம் கொண்ட வானரர்களையும், கரடிகளையும் நமஸ்கரிக்கிறேன். ராமா, விபீஷண, சுக்ரீவ, ஜாம்பவான், ஸேவிதா, லக்ஷ்மணாக்ரஜா, அடிக்கடி அடிக்கடி அஞ்சலி செய்கிறேன்.) (246)

லங்கையோ பரம ஸ்ரேஷ்டமான கோட்டையாக விளங் கியது. அது உடைக்க முடியாதபடி அஹங்கார மமகார கோட்டை வாசல்களுடன விளங்கியது. ஆனால் வானரங்களோ ஸ்ரீராம கிருபையினால் பயமற்று விளங்கினார்கள். ஆகாயத்தில் நான்கு புறங்களிலும் கர்ஜிக்கும் மேகங்களைப்போல சஞ்சரித் துக்கொண்டு அந்த வானரங்கள் தங்களுடைய வாய்களினாலும் கைகளினாலும் யுத்த பேரிக்கைகளைப்போல முழக்கம் செயது கொண்டு சென்றார்கள். (247)

"ஜயதிராம," "ஜயலக்ஷ்மண," "ஜயகபீஸ சுக்ரீவ," என்று ஜய சப்தங்கள் செய்யும் வானர கரடி வீரர்கள் அன்றோ மஹா

பாக்யசாலிகள். ஜயமங்கள சப்தங்கள் ஆகாயத்தில் எங்கும் பரவின. (பரமாத்மாவின் புகழ் எங்கும் வெண்மையாகப் பாவி, பாலும் தண்ணீரும் இரண்டுமே வெண்மையாக மாறி ஹம்சத் திற்கே தடுமாட்டம் ஏற்படுவதுபோல விருந்தது. ஒவ்வொருவ ருடைய கர்ஜனையும் சிம்ம கர்ஜனை மாதிரி யிருந்தது ) (248)

லங்கையிலோ பயம் ஏற்பட்டது. எங்கும் பரபரப்பு உண்டாகியது. தசானன் இன்னும் தனது அஹங்காரத்தையும் ஸர்வ ஸ்வாமித்வம் என்கிற மமகாரத்தையும் விட்டபாடில்லை. ராக்ஷஸர்களின் பய பீதிகொண்ட குரல்களைக் கேட்ட ராவணன் சிரித்துக்கொண்டு பதில் சொன்னன். "இந்த வானரங்களின் மூடத்தனமான பிடிவாதத்தைப் பாருங்கள். இவர்களுக்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும்" என்கிற எண்ணத்துடன் ராக்ஷஸ ஸேனைகளை அழைத்தான். (249)

[*தியானம்*

ராமா சீதா, லக்ஷ்மண ஸேவித சீதாராமா, மஹா நாராயணா, உன்னுடைய ஸ்வரூபமான கிருபையையும் வாத்ஸல்யமும், சௌலப்யத்தையும் அறிந்தேன். ஸ்வாமி, உம்முடைய ரூப சௌந்தர்யத்தை அறிய விரும்புகிறேன். பிரபு, உமக்கு எவ்வளவு ரூபங்கள் இருந்தாலும் எல்லோரும் உம்முடைய ஸகுண பிரும்மத்தையே அடிக்கடி புகழ்கிறார்கள். பீஷ்மரால் தொழப்பட்ட கிருஷ்ணா, ராவணனையும், விபீஷணனையும் நிக்ரஹ அனுக்ரஹமாக அருள்கொண்டு பரிபாலித்த ராமா உன்னுடைய திவ்ய சௌந்தர்ய ரூப விலாசங்களை நான் எப்போது காண்பேன். தேவநாதா, கோவிந்தா அறியாத பிள்ளைகளாக வந்து, உன்னைப் பரம புருஷனாக வரித்திருக்கும் என்னிடம் உன் நீல மேகத்தை நடுவில் கொண்ட பிராட்டிஸ்வமாகிற மின்னல் கொடிபோல ஒளியுடனும், நெல் நுனியைப் போல மெல்லியதாகவும், மஞ்சள் நிறமானதும், அனுத்தமமான ரூபமாகிற மங்களகரமான மிதுனத்தை, பரமம், மஹத், பிரும்மம் என்கிற சொற்களால் அறியப்படும் உங்களது ஐஸ்வரு பத்தை காட்டோப கூடமான சேர்க்கையை நான் எப்போது காணப்போகிறேன் ? மஹாலக்ஷ்மி நாதா, நீல மேகம் மின்னலால் எவ்விதம் பிரகாசமடைகிறதோ, அதைப்போல புருஷன

கிற நீர் பிராட்டியுடன் சேர்ந்து பிரகாசிக்கும்போது, [பிராட்டியா கிற உமது தேகத்துடன் சேர்ந்து நீர் பிரகாசிக்கும்போது,] நீங்கள் இருவர்களும் சேர்ந்து விராட்புருஷனாக விளங்கு கிறீர்கள். பிராட்டியுடனும் திவ்ய ஆயதங்களாகிற சங்கு சக் கிரம் கதை முதலியவைகளுடனும், கௌஸ்துபம் போன்ற மஹா ஆபரணங்களுடன் கூடியிருக்கும் நீலமேக ஸ்யாமளனே, நீலமேகத்தை உட்கொண்ட மின்னல் போன்ற இருவர்களுடைய ஐக்ய சிவசக்தியின் சேர்க்கையை நான் பரம மங்களமாகவும் எனது சுபாஸ்ரயமாகவும் ஆஸ்ரயித்து ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். சீதாராமா, மயிலின் கழுத்துப்போல பிர காசிக்கின்ற லக்ஷ்மி நாராயணா, மின்னிலங்கு திருவுருவே, ஸ்ரீவத்ஸமார்பனே, கருமுகிலொப்பர், என்னிடம் பெருமிதம் கொண்டு என்னைப் பெற்றபோது எவ்விதமான இயற்கை அன்பு கொண்டு காத்திரோ, அதுபோல என்னிடம் ஸந்தது மும் பிரியமாக விருப்பீர்களா ? தகுதியுள்ளளவன், தகுதியில் லாதவன் என்று பார்க்காத ஸ்வபாவம் தாய்க்கே உற்றது, சரணாகதி என்று விரதம் கொண்ட என்னை, மன்மத மன் மதனே, சிவசக்தி போல ஐக்ய ரூபம் கொண்ட ஆதிசக்தி ஆதிநாராயணா, என்னிடம் உங்களுடைய தாய் தந்தையின் அன்பு எப்பொழுதும் ஸந்ததமும் கிடைக்கவேண்டும். கமலத் தடம் பதிந்த ரகுவீரா, மண்ணும் விண்ணும் அளந்த திரு விக்ரமா, யக்ஞவராஹனே, எம்பிரானே, உமது புஷ்கர கடா க்ஷங்களை புண்டரீகாக்ஷ நயனங்களை, திருவடித் தாமரையின் நிழலை எப்போது நான் அடைவேன் ? கண்ணும் செந்தாமரை கையுமவையடியோ வவையே, வண்ணம் கரியதோர் மால் வரை போன்ற மதி விகற்பாய் விண்ணும் கபந்தும் பரப்பால் மிக்கு மற்றெப்பால் யவர்க்கும் எண்ணுமிடத்துவோ, எம்பிரான தெழில் நிறமே, எம்பெருமானுடைய பெரிய பிராட்டியுடன்கூடிய எழில் பெருமையை நான் எவ்விதம் வர்ணிப்பேன் ? தேவநாதா, என்னிடம் எப்போதும் அன்புடன் இருக்கவேண்டும்.]

ராவணன் வீரர்களை அழைத்துவர உத்திரவிட்டான். அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். "இந்த குரங்குகள், கரடிகள் காலத்தின் கதியை அடைந்துவிட்டன. காலத்தினால் தூண்டப்பட்டு என்னுடன் சண்டை செய்ய வருகிறார்கள்.

இவர்களுக்கு மரணம் நிச்சயம். என் ராக்ஷஸ படை வீரர்கள் பசியுடன் இருக்கிறார்கள். ப்ரும்மா அவர்களை என் வீடு தேடி வந்து ஆகாரமாக ராக்ஷஸர்களுக்கு அளித்திருக்கிறார் போல விருக்கிறது,'' இவ்விதம் தனக்குள் நினைத்துக் கொண்ட ராவணன் அட்டஹாஸம் செய்துகொண்டு கால் துடைகளில் கைகளைப் பலமாகத் தட்டிக்கொண்டு கொக்கரித்தான். (251)

ராக்ஷஸ வீரர்களைப் பார்த்துச் சொன்னான். "அடே ராக்ஷஸ வீரர்களே, நீங்கள் நான்கு திசைகளிலும் ஓடுங்கள். எங்கு எங்கு கரடிகளும், வானரங்களும் அகப்படுகின்றனவோ, அவைகளைப் பிடித்து நீங்கள் சாப்பிட்டு விடுங்கள். பயப் படாதீர்கள்" என்று ராவணன் உத்தரவிட்டான், சிவன் உமையைப் பார்த்து சொன்னார். "பிரியமான உமா, பிரியமானவளே, மங்களகரமானவளே, ராவணனுடைய அபி மானத்தையும், கர்வத்தையும், மமகாரத்தையும் பார்த்தாயா? தித்திரி பக்ஷி தூங்கும்போது தனது கால்களை உயரத் தூக்கிக் கொண்டு ஆகாயம் தனது ஸ்தானத்திலிருந்து நழுவி விழுந்து விட்டால் அதை தனது கால்களால் தாங்க எண்ணமிடுவது போல விருக்குமே, (கோபுரத்தைப் பொம்மைகள் தாங்கள்தான் தாங்கிக்கொண்டிருப்பது என்று நினைப்பதுபோல,) அது மாதிரி அல்லவா, அவனுடைய அபிமானம் விளங்குகிறது. ஆச்சர்யம், மஹா மூடனாகவிருக்கிறானே.'' (251)

ராவணனுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்ட ராக்ஷஸ வீரர்கள் பல திக்குக்களிலும் ஓடிச் சென்றார்கள். ஒவ்வொருவர் கையிலும் சூலம். இரும்பு கதை, கோடரி, மண்வெட்டி, தோமரம், முத்கரம், கத்தி, பட்டயம், கல்லால் செய்யப்பட்ட பல ஆயுதங்கள் இன்னும் அநேக ஆயுதங்களுடன் சென் றார்கள். (252)

[*தியானம்*

ஹே ராமா, சீதாராமா, தியாகராஜர், விபீஷணர், துளசி தாஸர் போன்ற மஹான்களால் சேவிக்கப்பட்ட நாராயணா, மஹாலக்ஷ்மி, உனக்கு பக்தர்களை ரக்ஷிப்பதில் யார் சமானமாக இருப்பார்கள்? பக்தர்களை ரக்ஷிப்பதில் ஏதாவது டம்பம் இருக்குமா அல்லது வெளிப்படையாக "நான் இதைச்

செய்வேன்'' என்று சொல்லிவிட்டு, பேசாமல் இருந்து விட்டு என்னைப்போல பரிகாசத்திற்கு இலக்காகாமல் பக்தர்களைக் காப்பாற்றும் விஷயத்தில் ஊக்கம் நிறைந்து, முயற்சி உள்ளவ ராக யார் இருப்பார்கள்? நகதரனே, ஸுரபூஸுர பூஜிதவரனே, நாகசயனு, ராமாநுஜ ஸேவிதா, உன்னை சேமுஷிபாவத்தினுல் வந்து அடையும் தர்மபுத்ர, பீஷ்ம, விபீஷணுதிகள் உன் ஸ்வ ரூபத்தை கருணு மயமாகவும், ஜீவ ஸ்வரூபத்தை ஸ்வதந்திர மயமாகவும், அஹங்கார சித்தமுள்ளவனுகவும் பார்க்கிருர்கள். பிராட்டியுடன் கூடியபோது கருப்பு நிறமுள்ள நீலமேக ஸ்யாமளன் சேதனனை அடையும்போது இயற்கையாகவே நீல மேக ஸ்யாமளனுகி விடுகிருன. சேதனனைப் பெருதபோது வெளிறிப்போய், தன்னை அலாபம் உள்ளவனுகக் கருதுகிருன். பிரிந்தபோது, "மின்னலட்டு திருவுரு," கலந்தபோது "கரு முகிலொப்பர்" என்னும்படி ஆகிருன் நாராயணன். அப்பேற் பட்ட கருணு ஸ்வரூபமுள்ள அந்தர்யாமியே, ஊழ்வினையின் பயனுக ஜீவன் ஸம்சாரத்தில் அழுந்தி விடுவதை பொறுக்க முடியாதபடியும் ஆகிருன். எவ்விதம் கர்மமே சேதனனுக்கு பகவத் விஷயத்தை கெடுக்கிறதோ, எவ்விதம் ஈஸ்வர தியாகம் செய்த சேதனன் நெடுநாளாக பகவத் விஷயத்தை இழப்பதற்கு கர்மமே ஹேதுவோ, அதைப்போல பகவத் கிருபை அந்த சேதனன் மீண்டும் ஈஸ்வரனை அடைவிப்பதற்கு ஹேதுவாக விருக்கிறது. அப்போது ஈஸ்வரனுடைய ஸ்வதந்திரமும் கிருபை யாக மாறுகிறது. இத்தனை காலமும் என்னை ஸம்சாரத்தில் தள்ளி விட்டு, வேடிக்கை பார்த்தவன் நீயே என்று சேதனன் சீறுவானே, என்று பயந்து, பரம கிருபாளுவாகிற ஈஸ்வரன் இடம் காலம் பார்ப்பவனுக, இவன் சீறித் தள்ளினுலும் வேறு புகல் ஒன்றுமில்லாமல் அனன்யகதித்வம் பூண்டு நம்மை இவன் அடைகிருனு என்று ஈஸ்வரன் பார்க்கிருன். அவ்விதம் பார்க்கும்போது, அவனை அணுகிச் சென்று, காகா சூரன் மாதிரி கால்களைக் கட்டி அணைத்துக்கொண்டு "நீ சீறினுலும், அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவன் தன் அருள் நினைந்தேயழுங் குழவியதுவே போன்றிருந்தேனே," சீறினுலும் நீயே கதியாக வந்து அடைந்தேனே, அதற்கு அருளும், ஆர்த்தியும், அனன்ய கதித்வமும் வேண்டுவதே

யரிகிரஹ ஸங்க்ரஹம். இதுவே பாஷ்யக்காரர் அருளிச் செய்த சரணுகதி தர்மத்தின் மர்மம். புண்டரீகாக்ஷரான ராமனே, என் பிரபு நாராயணனை சரணமடைந்து நற்கதி பெற விருப்பமுள்ள எனக்கு, பீஷ்மரை கிருஷ்ணர் ரக்ஷித்ததைப் போல எது க்ஷேமமோ அதை நினைக்கவேண்டும். வித்யைக்கும் தவத்திற்கும் காரணராயும், தாம் காரணமற்றவராக யிருக்கும் விஷ்ணு பகவானுக்கு அநேக நமஸ்காரங்கள் செய்கிறேன். பெரிய பிராட்டியோடு சேர்ந்த நாராயணனை, "திருக்கண்டேன், பொன் மேனி கண்டேன், என் இருள் அகலக் கண்டேன்," என்று கர்ம ஸம்பந்தமில்லாத அக்ஷரனுகிற நாராயணனுக்கு பொய்கை, பூதத்தாழ்வார், பேயாழ்வார் சரணங்களை அடைந்து நான் நமஸ்கரிக்கிறேன்.]

எவ்விதம் மூர்க்க குணமுடையதும், மாம்ஸம் சாப்பிடும் பழக்கமுள்ள பக்ஷிகள் சிகப்பு நிறமுள்ள பாறைகளின் சமூஹத்தைக் கண்டு ஆத்திரத்துடன் தாவி, தங்கள் மூக்குக்கள் அலகுகளுக்குத் தீங்கு ஏற்படினும், என்று தெரிந்தும் கூட அவைகளைத் தாக்கி, அதனுலேற்படும் வலியையும் பொறுத்துக்கொண்டு பறந்து ஓடுமோ, அதைப்போல இந்த ராக்ஷஸ கும்பல்கள் ராம சேனையிடமிருந்து பயம் கொண்டும், அந்த பயத்தைப் பாராட்டாமல் யுத்தத்திற்குப் புறப்பட்டுச் சென்றுர்கள். (253)

அவர்களுடைய கைகளில் நானுவிதமாக ஆயுதங்கள், தனுஷ்பாணங்கள், சாஸ்திரங்கள் இருந்தன. அவர்கள் அவைகளைக் கொண்டு, மேகங்களைப் போல லங்கையின் கோட்டை மதிற்சுவர்களை ஆக்ரமித்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் திட சங்கல்பத்தைக் கொண்டவர்கள். (254)

கருமேனி கொண்ட ராக்ஷஸ வீரர்கள் லங்கையின் தங்க மதில் சுவர்களில் ஏறியவர்களாக விருந்ததைப் பார்த்தால், மேரு பர்வதத்தின் மேல் கனத்த கருமேகங்கள் மொய்த்தால் எவ்விதம் விளங்குமோ, அதைப்போல விருந்தது. ஒவ்வொரு வீரரும் டோலக், யுத்த பேரிகை, துந்துபி போன்ற யுத்த முழக்க வாத்யங்கள் (டங்கா) இவைகளின் த்வனியைக் கேட்ட அந்த யுக்த வீரர்களின் மனம் ஆர்வம்கொண்டு போகும்படி யிருந்தது. (255)

அபாரமான நகரி பேரிகைகள் வாசிக்கப்பட்டன. அவை

களின் சப்தங்களைக் கேட்ட கோழைகளின் மனம் வெடித்துப் போகும்படியிருந்தது. மேலே ஏறிச் செல்லும் ராக்ஷஸ வீரர்கள் அங்கங்கே வானர வீரர்களையும், கரடி சேனையின் சேனைத் தலைவர்களையும் பார்த்தார்கள் அந்த வானர வீரர்களும் கரடி சேனாபதிகளும் பெரும் தேகத்துடன் கூடியவர்களாகவும், யுத்தம் செய்வதில் மிக்க ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப் பட்டார்கள். (256)

கரடிகளும் வானரர்களும் ஓடித் தாவிக் கொண்டிருந்தார்கள். மேலும் கீழும் நடுவிலும் கோட்டைகளின் வாசல்களில் அவர்கள் அமர்ந்து கொண்டார்கள். கணக்கற்ற வானரர்கள், கரடிகள் அங்கு காணப்பட்டார்கள். அவர்கள் பெரிய பாறைகளை உடைத்து கோட்டை வாயில்களைத் தாங்கி, கோட்டைக்குள் புகுவதற்கு ரஸ்தா (பாதை) பண்ணிக் கொண்டிருந்தார்கள். கோடிக்கணக்கான வானர வீரர்கள் கர்ஜனைகளைச் செய்து கொண்டும், பற்களையும், உதட்டுக்களையும் கடித்துக் கொண்டும், கோபத்துடன் கர்ஜித்துக்கொண்டும் மற்றவர்களைப் பார்த்தார்கள். (257)

சில ராக்ஷஸர்கள் ராவணன் பெயரைக் கூவி அழைத்து, ஜயகோஷம் செய்தார்கள். அதே மாதிரி சில வானரர்கள் ராமனின் பெயரைக் கூவி அழைத்து ஜயகோஷம் செய்தார்கள். எங்கு பார்த்தாலும் ஜய ஜய கோஷங்கள் இருதரப்பிலும் கேட்கப்பட்டன. இந்த ஜயத்வனிகளால் ராக்ஷஸ வானர யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. ராக்ஷஸர்கள் மலைப் பர்வதங்களை உடைத்து வானரர்களின் மீது எறிந்தார்கள். வானரங்கள் குதித்துக்கொண்டு அவைகளை தங்கள் கைகளால் பிடித்து, மீண்டும் அவைகளால் எதிரிகளைத் திருப்பித் தாக்கினார்கள். (258)

அதுமாதிரி பிரசண்ட யுத்த வானர வீரர்கள் மலைகளின் சிகரங்களைப் பெயர்த்து லங்கைக் கோட்டையின் மீது வீசி எறிந்தார்கள். சாமர்த்தியமுள்ள வீரர்கள் ராக்ஷஸ வீரர்களின் கால்களைப் பிடித்து அவர்களைச் சுழற்றி பூமியின் மீது வீசி எறிந்தார்கள். அந்த சேனையில் ராக்ஷஸ வீரர்கள் ஓட்டம் எடுத்தால் அவர்களைத் துரத்திக்கொண்டு வானர வீரர்கள் சண்டைக்கு மறுபடியும் அழைத்தார்கள். அதிக பிரதாபம்

கொண்ட வானர வீரர்கள் கோட்டை மதிலின் மேல் ஏறி லங்கைக்குள் நுழையப் பார்த்தார்கள். (259)

அங்கங்கே மதில்களின் மீது ஏறி உச்சியை அடைந்து, ஸ்ரீ ராமச்சந்திரனுடைய மங்களக் கீர்த்திகளை கானம் செய்தார்கள். (260)

பிறகு ஒவ்வொரு ராக்ஷஸனைப் பிடித்துக் கொண்டு, கோட்டைச் சுவற்றிலிருந்து பூமியில் குதித்தார்கள். அவ்விதம் குதிக்கும்போது ராக்ஷஸர்கள் கீழேயும் வானரங்கள் அவர்களின் மேலேயும் காணப்பட்டார்கள். (261)

எங்கு பார்த்தாலும் ஸ்ரீராமனுடைய கீர்த்தி பிரதாபங்களைப் பிரபலப் படுத்திய வானர வீரர்கள் வெகு சீக்கிரத்தில் ராக்ஷஸர்களின் ஸேனையை மர்த்தனம் செய்து பாழ் பண்ணி விட்டார்கள். அதன் பிறகு அவர்கள் கோட்டையில் மீண்டும் ஏறி, ரகு வீரனுடைய வீர பிரதாபங்களை, சூரியனைப் போல பிரகாசிக்கும் ரகு வீரனுடைய ஜய வீர பிரதாபங்களை உத்கோஷம் செய்தார்கள். (262)

*[ தியானம்*

நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, ராமா, சீதாராமா, சீதா பதே, உங்களுடைய கிருபையையே அவலம்பித்து, உங்களையே அனன்ய சரணத்வம் விரதம் பூண்டு, நம்மாழ்வார், நாத முனிகளைப் புரமாக வைத்து நமஸ்கரிக்கிறேன். என் பிறவித்துயர் அகல, உன் ஞானத்தை வேண்டி நிற்கிறேன். ஆழிப்படையைக் கொண்ட கோதண்டஹஸ்தா, சக்ரதரா, நீ அருமருந்து. உன்னை அண்டி வாழும் பாகவதர்கள் அம்ருதம். என் மாணிக்க சோதியே, மாயப்பிரானே, உங்கள் இருவர்களுடைய தூய அமுதைப் பருகிப் பருகி, சத்ருக்னன், ஆண்டாள் இவர்களைப் போல் என் மாயப் பிறவி மயர்வறுத்தேனே. ஸ்வாமி, என்னிடம் பக்தியில்லை. கர்மமோ உதிக்ருஷ்டமாகவில்லை. உங்களைப் பற்றிய சூக்ஷ்மமான ஞானமுமில்லை. பிரபத்திக்கு வேண்டிய சரண்ய குணங்களுமில்லை. ஆனால் பிரபோ, பகவத் அனுபவம் என்கிற அவாவிருக்கிறது. உமதுஸ்வரூபத்தில் வசப்பட்டவனாகி, வேறு உபாயத்தை அறியாது நம்மாழ்வாரைப் போல, எம்பெருமானையே உபாயமாகவும் பலனாகவும் வேண்டி

நிற்கிறேன். சௌனக மஹரிஷியும், பராசரபட்டரும் இதையே அருளிச் செய்தனர். புகல் ஒன்றில்லா வடியேன் உன்னடி கீழ் அமர்ந்து புகுந்தேனே, நான் பரம அபராதங் களுக்கு இருப்பிடமாகினும், அனன்ய சரண: என்கிற கார்ப்பண்யத்துடன் வந்து அடைந்தேன். எம்பெருமானை அடை வதற்கு அவனுடைய இருதிருவடித் தாமரைகளை அடைந்து பிரபத்தியைச் செய்து, பிரபத்தியைத் தவிற வேறு உபாயம் ஆயிரம் கல்ப கோடி காலம் சென்றாலும் இல்லை என்று ராமானு ஜர் சொன்னபடி நான் எண்ணுகிறேன். ஸ்வாமி, உமக்கு நிரு பாதிக கிருபையிருப்பினும், சாஸ்திரோக்த பூர்வமாக, பிராட் டியை வ்யாஜமாக வைத்து அனன்ய கதி, அனன்ய சரணத்வம் பூண்டவனை, நாராயண ஹ்ருதயனை, ஸர்வ அந்தர்யாமி யாகிற உம்மால் பிரேரணை செய்யப்பட்டு, கர்ம ஞானபக்தி ஆசார்ய கடாக்ஷ விசேஷங்களால், விளையாட்டாகவே சரண மடைந்திருக்கிறேன். அதிகாரி யோக்யதை யில்லாத போதிலும், திருமந்திர விசேஷத்தாலும், பூர்வாசாரியர்கள் காட்டிய அனுஷ்டான விசேஷத்தாலும், ஸ்வாமி, உங்களுடைய அபார கிருபையினாலும் தஞ்சம் என்று கொண்டு, ஸர்வருக்கும் சுபாஸ்ரயமான தங்களது திருவடிகளை அடைந்திருக்கும்போது, என்னை எவ்விதம் தாங்கள் கைவிடலாம்? நீங்கள்தான் அவடய வேண்டியது, நீங்கள்தான் உபாயம், நீங்கள்தான் புருஷார்த்தம், உங்களை அடைவதற்கு யேற்படும் பரம விரோதிகளை அழித்து, உங்கள் கிருபையையே அவலம்பித்திருத்தல், ஆசார்ய திருவடிகளையே உபாயமாக ஏற்று, எம்பெருமானின் திருவடி களை அடைதல், சரீரத்திற்கும் காரணத்திற்கும் உண்டான ஸம்பந்தத்தைப் போல, இன்று என்னைப் பொருளாக்கி, தன்னை யென்னுள் வைத்தான், என்று அனுஸந்தானம் செயது, நம்மாழ்வாரின் திருவடிகளையே சரணம் அடைகிறேன்.]

ராக்ஷஸ கூட்டங்கள் கடும் காற்றினால் சிதறி அடிக்கப் பட்ட மேகங்களைப் போல (ராமானுஜனின் திருவடிகளையும் நம்மாழ்வாரின் திருவடிகளையும் பின்பற்றிய சேதனனின் பாபக் கூட்டங்கள் எவ்விதம் சிதறி அழிக்கப் படுமோ, அதைப்போல) வானர வீரர்களால் நாசமடையப்பட்டன. லங்கை முழுவதும் பெரும் ஹாஹாகாரம் நிறம்பிய பயக் குரல்களும் அலருதலும்

கேட்கப்பட்டன. பாலர்களும் ரோகிகளும் அழ ஆரம்பித்தார்கள். (263)

எல்லோரும் கூடி அவர்கள் ராவணனை வைதார்கள். அவனே இந்த அனர்த்தத்திற்கு பொறுப்பாளி; இப்பேற்பட்ட ராக்ஷஸகுல நாசத்திற்கு மிருத்யுவை அழைத்தவன் அவனே என்று திட்டினார்கள். ராவணன் தனது சேனையின் துர்கதியைக் கேட்டான். கோபம் கொண்டவனாக, யுத்தத்தில் புறம் காட்டிய வீரர்களை அழைத்து, கடும் வார்த்தைகளை ஆக்ஞையாகச் சொன்னான். (264)

"எவர்கள் யுத்தத்தில் பயம் கொண்டு திரும்பி ஓட யத்தனிக்கிறார்களோ, அவ்விதம் புறம்காட்டி ஓடுபவாகளை கோழைத்தனத்தால் யுத்தம் செய்யாமல் ஓடுகிறார்கள் என்று நான் கேட்கும்பக்ஷத்தில், அவர்களை நானே என் கத்தியாலே வெட்டி விடுவேன். என் கைகளின் சாமர்த்தியத்தால் எல்லோரும் போகத்தையும் ஐஸ்வர்யத்தையும் இதுவரை உண்டார்கள். இப்போது நான் அவதிப்படும்போது, ரண பூமியிலிருந்து தங்கள் பிராணன்களைக் காப்பாற்றுவதற்குப் பிரியம் கொண்டார்களோ? இந்தப் பிரியம் எவ்விதம் ஏற்பட்டது?" (265)

ராவணனுடைய உக்ரமான வசனங்களைக் கேட்ட ராக்ஷஸ வீரர்கள் பயந்துபோய் விட்டார்கள். லஜ்ஜையினாலும் க்ரோதத்தாலும், ஆக்ரமிக்கப்பட்டவர்களாகி, அவர்கள் மீண்டும் ரண களத்தை நோக்கி ஓடினார்கள். ரணத்தில் நல்ல மனத்துடன் உயிரை விட்டால், அதுதான் வீரர்களுக்கு அழகு, கீர்த்தி என்று நிச்சயித்து, தங்கள் பிராணன்களைத் தியாகம் செய்ய யுத்தம் செய்யப் போனார்கள். (266)

அநேக விதமான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, யுத்த கோஷங்களைச் செய்துகொண்டு, ராக்ஷஸ வீரர்கள் யுத்த களத்திற்குச் சென்றார்கள். அவர்கள் பட்டயம், திரிசூலம் முதலிய ஆயுதங்களால் வானர கரடி சேனைகளை மிகவும் துன்புறுத்தி நஷ்டமாக்கினார்கள். (267)

சிவன் பார்வதியிடம் சொன்னார். "உமா, வானரர்கள் பயம்கொண்டு நாலு பக்கங்களிலும் ஓட ஆரம்பித்தார்கள். அவர்களுக்குள் ராமன், லக்ஷ்மணன், ஹனுமான்ஜி, சுக்ரீவன்

முதலியவர்கள் இருக்கும்போது, நமக்கு ஜயம் நிச்சயம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோதிலும், அவர்கள் பயந்து கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். அதில் சில பேர்கள் "அங்கதன் எங்கே? ஹனுமான் எங்கே? பலவான்களாகிய நீலன், நளன், த்விவிதன் எங்கு இருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள். (268)

ஹனுமார் வானர சைன்யங்கள் பயம் கொண்டு ஓடு வதைப் பார்த்தார். அவர்களுடைய அபயக் குரல்களையும் கேட்டார். அப்போது அந்த பலவான்களாகிற ஹனுமான், அங்கதன் முதலியோர் லங்கையின் மேற்கு வாசலில் அமர்ந் திருந்தார்கள். அவர்களுடன் மேகநாதன் யுத்தம் செய்து கொண்டிருந்தான். அவன் 'மிக்கக் கடுமையுடன் வானரர் களுடன் யுத்தம் செய்ததால் அந்த லங்கை கோட்டையை அவர்களால் உடைக்க முடியவில்லை. (269)

பவனஸுதனை ஹனுமார் மனத்தில் அதிக்ரோதம் கொண்டார். பிரபல ரோஷத்துடன் விளங்கும் காலதேவனைப் போல ஹனுமார் கர்ஜனை செய்தார். இனி தாமதம் செய்யக் கூடாது என்று எண்ணி, ஹனுமார் லங்கையின் மேல் தாவிச் சென்று, ஒரு மலைச் சிகரத்தைப் பற்றிக்கொண்டு மேகநாதனை நோக்கிப் பாய்ந்து சென்றார். (270)

[*தியானம்*

நாராயணா, உன்னுடைய பெருமைகளைக் கேட்க கேட்க, என் மனம் சந்தோஷத்துடன் பொங்குகின்றது. உனது வாஸுதேவ மயமான சரீரத்தையும், அதில் அந்தர்யாமியாக விருக்கும் க்ஷேத்ரக்ஞன் என்று சொல்லப்படும் நாராயணனை, அன்று அர்ஜுனன் சொன்னதுபோல நானும் சொல்லுகிறேன். ஏகோ, அப்ரமேயர், ஜங்கம ஸ்தாவர ஆத்மகமான இவ்வுலகத் திற்கு பிதாவாகவும், பூஜிக்கத்தக்கவராயும், கௌரவமுள்ள வராகவும், பிரும்மா முதலானவர்களுக்கும் தமது இந்திரியங் களால் அறியக் கூடாதவரும், பிரமாணங்களுக்கும் எட்டாத அப்ர மேயர், அவருடைய ஸ்வரூபங்கள் எண்ணிறந்தவை யாதலின் அளவிடப்பட முடியாதபடியும், பொருள்கள் ஒவ்வொன்றிலும் உள்ளும் புறமும் வியாபத்திருக்கும்

அப்ரமேயாத்மா; யாவராலும் பரிஹாஸமாகவோ நிஜமாகவோ அவமதிக்கப்பட முடியாதவர். ஹேஸ்வாமி. நான் அறியாத்தனத்திஞல் பரிஹாஸமாகவாவது, ராமா சீதா, மஹாலக்ஷ்மி நாராயணு, அவமதித்திருந்தால் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும்படி பெரிய மகிமைகளை பொருந்திய தேவரீரை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். மூவுலகிலும் எக்காலத்திலும் உமக்கு ஸமமானவன் பிரும்மருத்ராதிகளிலும் ஒருவனுமில்லை. நாராயணு, ஜீவாத்மாக்களுக்கு சேருமிடமாக இருப்பவரே, ஜீவர்களுக்குள் உறைகிற அந்தர்யாமியான ஹ்ருஷீகேசரே, நீரே பரபிரும்மம். நீரே நாராயணன், வாஸுதேவர், விஷ்ணு. ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் விகாரத்தை அடையாத புருஷனே, நான் உம்மைச் சரீரத்தை நன்கு படியும்படி செய்து சுக்ருத நமஸ்காரம் செய்து, வணங்கி க்ஷமிச்கும்படி பிருர்த்திக்கிறேன். நீரே அனுபவிக்கும் போக்தா, அனுபவிக்கப்படும் வஸ்துக்களும், அனுபவிக்கிற வஸ்துக்களும் சேர்ந்து ஜகத் என்று சொல்லப்படும், சேதன அசேதனங்கள் ஆகிய இரண்டும் நாராயணனுக்கு தேகம். என்னுடைய தேசம் அசித்வஸ்து. அந்த சரீரத்திலிருந்து எல்லாவற்றையும் நடத்தும் சித்வஸ்துவே ஜகந் நாராயணன். நீரே ஆத்மத! அந்தர:, எனது யாக மேடையில் அக்னி இருப்பதுபோல, வேத்யாம் அக்னி: திஷ்டதியாகவிருக்கும் அச்யுதா, அஸ்மிந் ஜகதி எங்கும் பரந்துளன், த்ருஸ்யதே ஸ்ரூயதே பிவா என்று சொல்லிக் கேட்டும் எனக்கு நீரும், ஹே பிரபோ, இந்த ஜகத்தும், மெய் நின்ற ஞானமாகவும், நந்தா விளக்காகவும், பரம் ஜ்யோதியாகவும் அிலராகவும் காணபபடுகிறீர். பாஞ்சராத்திர ஸம்ஹிதையில் சொல்லப்பட்டபடி, ஏகோ ஹிவை நாராயண ஆஸித்: ஆதியிலிருந்தவனும், கடைசிவரை அழியாமலிருப்பவனுமாகிற நாராயண விசேஷ சப்தத்தால் காரணவஸ்துவாகவிருக்கும் உன்னை அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். இந்திரியம்மனம் புத்தி ஸத்வ குணம், சக்தி வன்மை, தைரியம், தேகம், ஜீவாத்மா இவையனைத்தும் வாஸுதேவ நாராயண விஷ்ணுவினுடைய சரீரங்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்பேற்பட்ட நாராயணு, மஹாபுருஷா, உன்னையும் லக்ஷ்மியையும் வேதவியாஸரை முன்னிட்டு ஏகபராயணமாக

சரணமடைகிறேன்.)

ஹனுமான் மேகநாதனுடைய ரதத்தை உடைத்தார். சாரதியைக் கீழே தள்ளினர். அவனுடைய மார்பில் ஒரு குத்து விட்டார். அவனுடைய ஹ்ருதயத்தில் கலக்கம் உண்டாக்கினர். கொஞ்ச நேரத்தில் மேகநாதனை சாரதிவாரி அணைத்து, வ்யாகுலம் அடைந்திருக்கிறன் என்று தெரிந்து கொண்டு, அவனை வேறொரு ரதத்தில் வைத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றன். (271)

இங்கே அங்கதன் வாயுபுத்ரனை ஹனுமார் தன்னந்தனியாகக் கோட்டைக்குள் பிரவேசித்திருக்கிறர் என்று தெரிந்து கொண்டு, அவனும் வானரர்களின் விளையாட்டுப் போல கோட்டைமீது ஏறினன். (272)

யுத்தத்தில் சத்ருக்களைப் பீடிக்கும் இரு வானரர்கள் மஹா கோபத்துடன் தங்கள் ஆக்ரோஷத்தை வெளியிட்டனர். அவர்கள் இருவர்களும் ஸ்ரீராமனுடைய பிரதாபங்களை நினைத்துக் கொண்டவர்களாக ஒவ்வொரு கட்டிடத்தையும் தாண்டி ராவணனுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர். அங்கே கோஸலாதிபதியான ஸ்ரீராமனின் ஜயவீர பிரதாபங்களைப் புகழ்ந்தார்கள். (273)

அவர்கள் இருவரும் தங்கக் கலசங்களைக் கொண்ட அரண்மனையின் உச்சிகளையும், மேல் மாடங்களையும் உடைத்துத் தள்ளினர்கள். இவர்கள் செய்யும் அட்டஹாஸத்தைப் பார்தத ராவணன் பயந்தே போய்விட்டான். ஸ்திரிகள் வருத்தம் மேலிட்டவர்களாக, கூட்டமாக ராவணனிடம் வந்து, "ஸ்வாமி, மீண்டும் உத்பாதம் மாதிரி இரு வானர வீரர்கள் வந்து உபத்ரவம் செய்கின்றனர்" என்று முறையிட்டார்கள். (274)

அங்கதனும் ஹனுமாரும் குரங்குகளின் ஸ்வபாவமான லீலை விளையாட்டுக்கள் மாதிரி, அங்குள்ள யாவரையும் பயமுறுத்தி, ஸ்ரீராமசந்திரனுடைய சுந்தரமானதும் மங்களகரமானதுமான கீர்த்திகளைக் கானம் செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தங்கத் தூண்களை கைகளால் பிடுங்கி, பரஸ்பரம் அவர்கள் பேசிக்கொண்டனர், "நாம் இருவரும் இப்போது நாச வேலையை ஆரம்பிப்போம்." (275)

அவர்கள் கர்ஜனைகளைச் செய்துகொண்டு ராக்ஷஸ ஸேனை

களின் நடுவில் குதித்தார்கள். தங்களுடைய முழு புஜ பலத்தை உபயோகித்து, ராக்ஷஸ சேனைகளை மர்த்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். சில பேர்களை காலால் உதைத்தும், சில பேர்களை முகத்தில் அறைந்தும், அவர்கள் சொன்னார்கள். "இந்தாருங்கள். ராமனை பஜிக்காதவர்களுக்கு இந்த பலன் தான் கிடைக்கும்," என்று சொல்லிக்கொண்டு, எல்லோரையும் உதைத்தார்கள். (276)

ஒரு ராக்ஷஸனைப் பிடித்து, மற்றொரு ராக்ஷஸனின் மீது மோதினார்கள். ஒரு ராக்ஷஸனின் தலையை உடைத்து அதை ராவணன் முன்பு வீசி எறிந்தார்கள். இந்த விதமாக ராவணன் முன்பு தயிர் பானைகள் உடைந்து விழுவது போல, ராக்ஷஸர் களின் மண்டை ஓடுகளும் முண்டங்களும் ரத்த பிரவாஹத் தோடு ஓடி விழுந்தன. (277)

ராக்ஷஸப் படை வீரர்களின் பிரதான ஸேனாதிபதிகளை அந்த வானர வீரர்கள் பிடித்து, அவர்களின் கால்களைப் பிடித் துக் கொண்டு, சுழற்றி, பிரபு ராமசந்திரனுடைய ஸந்நிதானத் தின் முன்பு வீசி எறிந்தார்கள். ஒவ்வொரு ஸேனை வீரர்களின் பெயர்களை விபிஷணன் ஸ்ரீராமனுக்குத் தெரியப் படுத்தினான். (விபிஷணனால் புருஷகாரம் செய்யப்பட்ட) அந்த ராக்ஷஸ வீரர்களுக்கு ஸ்ரீராமன் தன்னுடைய வைகுண்ட பதத்தை அளித்தான். (278)

பிராம்மணர்களின் உடலைச்சாப்பிடும் மஹா பாபிகள், நர மாமிச புஜிக்கும் துஷ்ட ராக்ஷஸர்கள் ஸ்ரீராமனுடைய க்ருபா பிரஸாதத்தினால் (ஜகந்நாராயணனுடைய) அருட் பிர ஸாதத்தை அடைந்து, பரமபுனிதமடையப் பெற்று, உத்தம கதியை அடைந்தார்கள். அவர்களால் அடையப்பெற்ற உத் தம கதி பரம விரத அனுஷ்டானங்களைக் கொண்ட யோகி ஜனங்களாலும் கிடைக்கப்பெறாத அனுத்தமமான விஷ்ணுவின் பதம் அவர்களுக்கு பகவத்கிருபையினால் ஸர்வ ஸஹஜமாக யேற்பட்டது. என் பிரபு மஹேஸ்வரர் உமையிடம் சொன்னார். "உமா, என் பிரபு ஸ்ரீராமன் அதிகோமளமானதும், கருணை மய மான ஹ்ருதயத்தையும், உதார ஹ்ருதயத்தையும் கொண்டவர். இந்த ராக்ஷஸர்கள் இயற்கையாகவே பிறர்களுக்கு ஹிம்சை செய்பவர்கள்தான். அவர்கள் வைர ஸ்வபாவத்தினால் நாரா

யணனைச் சிந்தித்தார்கள். ஆனால் அவர்களுடைய குணங்கள், தோஷங்கள் ஆகிய இரண்டிலும் பற்றாத என் பெருமான்," நிர் குணராக, (பிரும்ம சப்தத்திற்கு அர்த்தமாக விளங்கும் புரு ஷோத்தம நாராயணன், இயற்கையாகவே கெட்ட குணங்கள் தோஷங்கள் இல்லாதவனானபடியாலும், அளவிட முடியாதபடி உயர்ந்த அஸங்க்யேய கல்யாண குணங்களை உடைய நாராயணன், ஆதியஞ் சோதியாய் அருமறை பயந்தவனை, அடலாழியானை மறைக்கவோ, அழிக்கவோ முடியாது, என்கிற படி என் பிரபு நாராயணன், ஸர்வேஸ்வரன், ஆத்மாவாய் எண்ணிறந்த சரீரங்களை நியமிப்பதனால் ஸர்வ சக்தி உள்ள விபுவாக, கர்மங்களில் பற்றப்படாதவனாக, ஞானத்தில் குறைவு இல்லாத நந்தா ஞானம் சுடர்விட, பரனானபடியால், ஸர்வ ஸ்வதந்திரனாக சங்கல்பம் செய்துகொண்டு, இவர்கள் என்னையே நினைக்கிறார்கள், எனது தஞ்சத்தையே விரும்பு கிறார்கள், என்று ஸ்வீகரித்து நிருபாதிக கிருபையினால் அணைத்தலுற்றான்." (279)

" இப்பேற்பட்ட நீச ஜாதியில் பிறந்த ராக்ஷஸர்களுக்கும் "நான்தான் ஆத்மா," என்று ஸர்வ நியந்தாவாக என் பிரபு மரித்துப்போன ராக்ஷஸர்களுக்கும் உத்தம கதியைக் கொடுத் தார். ஹே பவானி, நீயே சொல். எங்கேயாவது நீ கேட் டிருக்கிறாயோ? இப்பேற்பட்ட மஹா கிருபாளுவைப் பற்றி யாராவது உன்னிடம் சொல்லியிருக்கிறார்களா? அவ்விதம் கொடும் நெஞ்சம் கொண்ட ராக்ஷஸர்களிடமே கருணை காட்டும் வள்ளல் நியம நிஷ்டையுடன் ஸதாசார்ய ஸம்பத்துடன், அஹங்கார மவகாராதிகளை விலக்கி, பகவானே ஸ்வயம் பிரயோசனம் என்று எண்ணி, கர்த்தா காரயிதா பலன் ஆகிய மூன்றிலும் பகவானே பிரதானம் என்று நம்பி வாழும் ஸாத்விக மனப்பான்மையுள்ள வைஷ்ணவ சீலர்களிடம் எவ் விதம் அருள் கொள்வான்?, என்று நீயே யோசித்துப்பார். அவ்விதமில்லாதவர்கள் அவித்யையினால் நாராயணரின் பரத்வ சௌலப்யாதிகளை உணராத நரவ்யக்திகள், மதிமந்தர்கள், தங்களுக்கு எது ஹிதம் என்று தெரியாத பரம அபாக்யர்கள்; (உண்மையான ஜகத்தை மித்யை என்று வாதம் செய்து கொண்டு, எங்கும் பரந்துள்ள வ்யாப்ய நாராயணனை,

திலேதைலம் திஷ்டதி (எள்ளுக்குள் எண்ணெய் இருக்கிறது) என்று அறியாததுபோல ஆத்மாவினுள்ளும் அந்தராத்மா இருக்கிறான் என்று தெரிந்து கொள்ளாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் அன்றோ ? அவர்கள் ஸ்ரீநிதியை இழந்த அபாக்யவான்கள். [நாராயணன் என்கிற ஏகமான, ஒரே ஒரு புருஷனை குறிப்பிட்டுக் காட்டும் ரூடி சப்தம், ண என்கிற ணகாரம் அர்த்தம் செய்வதையும் அந்த பரம புருஷனையே பிரும்மாவாகவும் கருணையனாகவும் காட்டும். "தொட்ட தொட்ட இடந்தோறும் தோன்றுபவன்; அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்" என்று பிரஹ்லாதன் இரணியனுக்கு உறுதி கூறியதாக கம்ப நாட்டாழ்வார் சொன்னாரே, எங்கும் பரந்துளன் எம் பெருமான் அவன் மஹா கருணாமயன். வைஸவா நரனாக பிராணிகளின் தேகத்தை ஆஸ்ரயித்து, பிராண அபானங்களுடன் கூடியவனாய், நான்குவிதமான அன்னத்தைப் பக்குவம் செய்யும் அந்தராத்மா, ஸர்வ ஹிதன். அவனை உமா மஹேஸ்வரர்களை முன்னிட்டு ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ஹே பிரபோ, ஜகந்நாராயணா, என்னிடம் ஸதா கருணையுடன் இருக்கவேண்டும்.] (280)

[*தியானம்* –

நாராயணா, மஹாலக்ஷ்மிநாதா, சீதாபதே, ராமா, நீதானே கர்மம். நீதானே ஞானமும், ஐஸ்வர்யமும். நீதானே ஸர்வமும். ஸ்வாமி, உன்னையன்றி எனக்கு வாழ்வு வேண்டாம். ஆண்டாள் சொல்லிய மாதிரி, நான் எவ்வளவு ஜன்மம் எடுத்தபோதிலும், உன் தன்னோடு உறவு வேண்டும்; அந்த உறவு ஞான ஸம்பந்தமில்லாத வாழ்க்கை, அந்த நாராயண த்யானமில்லாத ஞானமும் வாழ்வதற்குரிய யாவும் இருந்தும் எல்லாம் வ்யர்த்தமே. பிரபோ, நாரதரால் உபதேசம் பெற்ற நான் சுத்த ஸத்வமும், அதற்கு மேற்பட்ட புருஷனும், அவர்களுக்குள்ள சேர்க்கை ஸம்பந்தமும், ஏகத்வமாகவும், நானாவிதமாகவும் இருக்கிறது. அந்தப் புருஷனுக்கும் சுத்த ஸத்வத்திற்கும் உள்ள சேர்க்கை ஸம்பந்தம், மீன் ஜலத்தில் வேறாகயிருப்பதைப்போன்றதும், ஜலத் திவலைகளுக்கு தாமரை இலையினுடைய சேர்க்கை போன்றதாகவுமிருக்கிறது.

என்னுடையது, "மம" என்னும் இரு அக்ஷரங்கள் ஸம்சாரத்திற்குப் பீஜம் என்றும், "நமம" என்கிற என்னுடையதன்று என்கிற மூன்று அக்ஷரங்கள் சாஸ்வதமான பிரும்மத்தை அடைவதற்கு காரணமாகவுமிருக்கிறது. நாராயண பரனுக விருக்கும் பக்தன், நாராயணப் ப்ரீதிக்காக காரியங்களைச்செய்து கொண்டு எப்பொழுதும் நாராயண சிந்தனையுடனிருக்கிறுன். ஆகையால் வித்வான்கள் கர்மங்களில் ஆசைப்படுகிறதில்லை. நாராயணனைப் பற்றிய புருஷ வித்யையை உபாஸிப்பவன் புருஷனுகிற நாராயணன் வித்யா மயனே; கர்ம மயனல்லன் என்று கருதப்படுகிறுன். எவன் ஒருவன் நாராயணனை, வேறு பிரமாணங்களால் அறியப்பட முடியாத புருஷனை, நித்யனும் எக் காலத்திலும் அக்ஷரமானவனும், ஈஸ்வரனுகவு மறிகிறுனே, அவனுக்கு மரணமில்லை. வைராக்யமடைந்த புருஷன் எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமமாக விருந்துகொண்டு, ஞானத்தில் நிலைபெற்றுக் கொண்டு எதை ஸதா எவன் தியானிக்கிறுனே அவன் அவசியம் அதுவாகிறுன். இது ஸநாதனமான ரஹஸ்யம் என்று தெரிந்துகொண்டு, வேத வியாஸர் சொல்லியபடி த்யேய: நாராயண: ஸதா என்கிறுப்போல, முகதாத்மா நாராயணனையே ஸ்மரிக்கிறுன். இவ்விதம் இருக்கும்போது, "ஹே விஷ்ணு பகவானே, நரோத்தமா, குரு சிஷ்ய பாவத்தில் எனக்கு உணர்த்தப்பட்ட இந்த ரஹஸ்யமானது உம்மையே, வாஸுதேவரே, என் ஹ்ருஷிகேசரே, என் அந்தர்யாமியே, என் குருவாகிற புத்தியே, மனமாகிற சிஷ்யனே, உன் கிருபை அர்ஜுனனுக்கு யேற்பட்ட மாதிரி எனக்கும் ஏற்படவேண்டும். மஹேந்திரனுககு ஹேமவதியாகிற உமை, என் மஹாலக்ஷ்மி, அருளியதைப்போல விருக்கவேண்டும். ஈஸ்வரரே, பாம்தபரே, மனம் சுத்தமாக இராமையினல் தவம் செய்ய முடியாது. அக்ஞானத்தினல் கர்மம் கெடுக்கப் பட்டிருக்கிறது: பொருளின் தோஷத்தால் தானமும் பயனற்றதாக விருக்கிறது. ஆகையால் கலியில் நாராயணு, வாஸுதேவா, ராமா, கிருஷ்ணு, கோவிந்தா ஆகிய உம்முடைய ஆயிர மங்கள நாமாக்களை த்யானம் செய்யவேண்டும். உமக்கு ஆயிரம் நமஸ்காரங்கள். உம்மை அண்டி வாழும் வேதங்களுக்கும் சாவித்திரி மாதாவுக்கும், பிரும்ம பாராயணர்களாக வாழும்

நாசிகேதஸ், யமன், தர்மர், பீமன் போன்ற பாண்டவர்களுக்கும், பிரும்மாவிற்கும், அநேக நமஸ்காரங்களைச் செய்கிறேன். ஆத்மாவுக்கு ஹிதமான கிரியையைச் செய்கிற ஒருவனும் நரகத்தை அடைகிறதில்லை. மமகாராதிகளையும், அபிமானங்களையும் கோபத்தையும் விட்ட என்னிடம் கிருபையுடன் இருக்கவேண்டும்.)

ஸ்ரீராமன் சுக்ரீவன் விபீஷணனிடம் சொன்னார். "அங்கதனும் ஹனுமாரும் லங்கைக் கோட்டைகருள் பிரவேசித்து விட்டார்கள். அவர்கள் லங்கை என்கிற அபிமானக் கோட்டையை த்வம்சம் செய்வதைப் பார்த்தால், இரு மந்திராசலங்கள் பாற்கடலில் வைத்துக் கடைவதைப் போல அகங்காரம் மமகாரம் ஆகியவைகள் மர்த்தனம் செய்யப் படுவதுபோல விருக்கிறது." (281)

இந்த இரு வீரர்களும் தங்களுடைய புஜபல பராக்ரமத்தினால் சத்ருக்களை அடக்கி, அவர்களுடைய வாசஸ்தலமாகிற கோட்டையை அழித்தார்கள். தினம் முடிந்துபோன காரணத்தினால் இரண்டு பேர்களும் குதித்துத் தாவி எந்த விடத்தில் பகவான் ஸ்ரீராமசந்திரன் இருக்கிறாரோ, அந்த விடத்திற்கு அவர்கள் வந்தடைந்தார்கள். (282)

அவர்கள் இருவர்களும் பிரபுவின் சரண கமலங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அவர்களைக் கண்ட ரகுபதியின் மனம் சந்தோஷத்துடன் பிரஸன்னமாயிருந்தது. ராம கிருபையின் பிரபாவத்தினால் அந்த இரு வீரர்களும் கிருதகிருத்யர்களைப் போல, செய்யவேண்டிய காரியத்தைச் சிரமமின்றி செய்துவிட்டு பரம சுகத்தை யடைந்தார்கள். (283)

ஹனுமாரும் அங்கதனும் திரும்பி வந்து விட்டார்கள் என்று அறிந்துகொண்ட வானர கரடி சைன்யங்கள் யுத்தத்தினின்று முடிவு அடைந்தவர்களாக, அவர்களும் ஸ்ரீராமன் இருந்தவிடத்திற்குத் திரும்பினார்கள். ஆனால் பிரதோஷ காலத்தில் ராக்ஷஸர்களுக்கு பலம் அதிகரித்தபடியால், அவர்கள் ராவணனுக்கு ஜயத்தை விரும்பி அதிக ஆத்திரத்தோடு சண்டை செய்ய முன்வந்தார்கள். (284)

ராக்ஷஸர்களின் சேனைகள் வருவதைக் கண்ட வானரர்கள் மீண்டும் யுத்தத்திற்கு ஆயத்தமடைந்து கிளம்பினார்கள். எங்கு

எங்கு இரு தரப்பினர்களும் சந்தித்தார்களோ, அங்கு எல்லாம் கடுமையான யுத்தம் நடந்தது. இரு சேனைகளும் ஒருவரை யொருவர் முதலில் கடும் வார்த்தைகளால் தாக்கிய பின்பு, ஆயுதங்களால் சண்டை செய்தனர். சிலர் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை ; அதனால் மீண்டும் சண்டை செய்த வண்ணமிருந்தார்கள். (285)

ராக்ஷஸர்களோ மஹா வீரர்கள், எல்லோரும் மிக்கப் பயங் கரமான ரூபத்துடனும் கருப்பு நிறமுள்ளவர்களாக விருந் தார்கள். அது மாதிரி, வானரர்களும் அநேக வர்ணங்களுட னும் விசாலமான மார்பு பிரதேசத்துடனும் விளங்கினார்கள். இருதரப்பிலும் பிரபலமான யுத்த வீரர்கள் இருந்தார்கள். தர்ம யுத்தத்தின்படி ஒவ்வொருவரும் தனக்குச் சமமான வீரர் களுடன் சண்டை செய்தனர். அவ்விதம் யுத்தம் செய்யும் போது, பல விளையாட்டுக்களையும் அவர்கள் செய்தனர். (286)

ராக்ஷஸ சேனைகளும் வானர கரடி சேனைகளும் பயங்கர மாக கலந்து சண்டை செய்யும்போது சரத் காலத்திலும், வர்ஷ காலத்திலும் பலமான காற்றினால் மோதப்பட்ட மேகங்கள் ஒன்றையொன்று மோதி, அந்த மோதலால் ஏற்படும் கர்ஜனை கள் எவ்விதம் கேட்கப்படுமோ அதைப்போல அந்த இரு தரப் பினர்களின் கர்ஜனைகள் கேட்கப்பட்டன. ராக்ஷஸர்களின் நாசத்தைக் கண்ட ராவணனுடைய புத்ரர்களான அகம்பனன் அதிகாயன் இருவர்களும் மாயையைப் பிரயோகித்தார்கள். (287)

ஒரே க்ஷணத்தில் எங்கும் இருள் சூழ்ந்து விட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் இரத்தமும் கற்களும் சாம்பலுமாக மழை பெய்ய ஆரம்பித்தது. (288)

பத்து திசைகளிலும் அடர்த்தியான இருள் சூழ்ந்திருந்த படியால் வானர சேனைகள் கலவரமடைந்து சின்னபின்ன மாயின. அவர்களுக்குப் பயம் ஏற்பட்டது. ஒருவன் மற்றொரு வனைப் பார்க்க முடியாதபடி இருள் சூழ்ந்திருந்தபடியால், ஒரே கூக்குரல் எங்கு பார்த்தாலும் கேட்கப்பட்டது. (289)

என் பிரபு ரகுநாயகன் இந்த மர்மத்தை உணர்ந்தார். அங்கதனையும் ஹனுமாரையும் அழைத்துச் சொன்னார். அவர் அவர்களுக்கு இந்த சமாசாரத்தைச் சொல்லியதுதான்

தாமதம். உடனே கபிகுஞ்சரர்களான இரு வீரர்களும் ஓடி கோபத்துடன் ராக்ஷஸர்களை எதிர்க்கச் சென்ருர்கள். (290)

என் பிரபு மஹாகிருபாளு ராமசந்திரன் சிரித்துக்கொண்டு அக்னியாஸ்திரத்தைப் பூட்டி அபிமந்தரணம் செய்துவிட்டார். உடனே இருள் மறைந்து எங்கும் பிரகாசம் தோன்றியது. அந்த பரம் ஜயோதி ஜீவாத்மா தன்து ஸ்வஸ்வரூபத்தை அறிந்து கேவலனுகி, இருபத்தாருவது புருஷனுகிற பரமாத்வை அவருடைய கிருபையினுல் பார்க்கும்போது எவ்விதம் ஞான மயம்மாகப் பார்ப்பானே, சகல சந்தேகங்களும் நீங்கி, க்ஷேத்ரத்தை (சரீரத்தை) அறிந்து உண்மையான ஞானமாகிற தும், அனுதியும், அழிவற்றதும், சுபமும், சோகமற்றதும், மோக்ஷ ரூபமான வாஸுதேவ பிரும்மத்தை, என் பிரபு நாராயணரை, சத்யம் ஞானம் அனந்தம் ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்கிற பிரும்மத்தை அறிவார்களோ, அதைப்போல அந்த வனேர கரடி வீரர்கள் ராக்ஷஸர்கள் உள்பட மோஹத்திலிருந்து விடுபட்டு தெளிவுற்று ஆனந்த நிலையை அடைந்தார்கள். (291)

கரடி வானர சைன்யங்கள் பிரகாசத்தினுல் மனம் சந்தோஷமடைந்து, ராக்ஷஸர்களைத் துன்புறுத்த ஓடினுர்கள். ஹனுமாரும், அங்கதனும் கர்ஜித்துக்கொண்டு ரணபூமிக்கு ஓடி வந்தார்கள். அவர்கள் வந்திருப்பதை உணர்ந்த ராக்ஷஸ வீரர்கள் பயம்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். (292)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷ்மி நாதா, தேவதேவா, பிரும்மா சங்கரர் உமா தேவியினுல் வணங்கப்பட்டவரே, ஸ்ரேஷ்டமான ஆயுதங்களை உடையவரும், புலித்தோலை அணிந்தவரும், லோக நாதரும், வரதரும், பிராம்மணர்களிடம் அன்புள்ள ஈஸ்வரரை முன்னிட்டு, நாராயணு, உன் பாதங்களில் சரணம் அடை கிறேன். நீர் உமா மஹேஸ்வரரைப் போல தேவதைகளுக் கெல்லாம் நாதராக விருக்கிறீர். பிரதம கணங்களைப்போல வரனரர்களாலும், கரடிகளாலும் சூழப்பெற்ற ராமா, லக்ஷ்மணு, உங்களைத் தரிசித்தவர்கள் மஹா பாக்யசாலிகள். ஞானமே மோக்ஷத்திற்கு ஸாதனம் என்று உமைக்கும் எனக்கும் போதித்த மஹேஸ்வரரே, ராம நாமமே சிறந்த தாரகம் என்று

எனக்கு உணர்த்தியக் மஹாதேவரே, பிரும்ம ஞானத்தினால் உறுதி பெற்ற வித்வான்கள் வேதத்தினால் அறியக் கூடிய கர்ம பிரும்ம ஸ்வரூபத்தையும், அவைகளின் அனுஷ்டான ஸ்திதி யையும் அறிந்தவன் வேத வித்து என்று சொல்லப்படுகிறான். பிரும்மத்தை அறிந்தவனுக்குக் கோபத்தைப் பொறுமையினால் தொலைத்து, ஸங்கல்பத்தின் திவாகத்தினால் காமத்தை நாசம் செய்து ஸத்வ குணத்தால் நித்ரையை விலக்கி, ஜாக்ரதை யினால் பயத்தைக் காக்கவேண்டும். ஆத்ம த்யானத்தினால் பிராணனை ரக்ஷிக்கவேண்டும். தைரியத்தினால் இச்சையையும் த்வேஷத்தையும், காமத்தையும் நீக்கவேண்டும். தத்வ தரிசனத் தினால் விஷபங்களையும், தயையினால் அதர்மத்தையும் ஜயிக்க வேண்டும். ஆத்ம ஸந்தோஷத்தினால் லோபம், மோஹம் ஆகியவைகளைத் தள்ளவேண்டும். புத்தியினால் மனத்தை அடக்கி, ஞானக் கண்களால் மஹாஞன ஆத்மா என்று சொல்லப்படும் நாராயணரை அடையவேண்டும். நாராயண பாதங்களைத் தவிர வேறு உபாயமின்றி, அதே உறுதியாக விருந்து மனோவாக்கு காயங்களாலும், ஆசார்ய ஸம்பந்தத் தாலும் க்ஷேத்ரக்ஞனை அறிய வேண்டும். ஸனத் குமாரர் சுக்ரர் முன்னிலையில் வ்ருத்திராசுரனுக்குச் சொல்லியபடி, விஷ்ணுவே அடையத் தக்கவர். அற்பமான கடுகெண்ணை யானது தன்னுடைய கந்தத்தை வாசனையுள்ள புஷ்ப மாலையின் ஸம்பந்தம் பெற்றிருப்பினும் விடுகிறதில்லை. அதைப்போல ஸூக்ஷ்ம வஸ்துவின் தரிசனம் எளிதில் உண்டாகிறதில்லை. அந்த கடுகெண்ணையே அநேக புஷ்ப மாலைகளால் அடிக்கடி அடிக்கடி வாசனையால் கட்டப்பட்டு, தன் வாசனையை விட்டு புஷ்பத்தின் வாஸனையை அடைவதுபோல ஜீவன் அநேக ஜன்மங்களால் சுத்தி அடைகிறான். ஆனால் ஒரே ஜன்மத்தில் பெரியதான யத்தினத்தினால அவன் முழுவதும் சுத்தனாகிறான். ஆதியந்தம் அற்றவரும், ஸ்ரீமானும், ஜனங்களின் ஹ்ருதய குகையிலிருக்கும் ஸ்ரீஹரி பகவான் சராசரங்களைப் படைத்து, உண்டு, உமிழ்ந்து, பரிபாலிக்கும் தாமோதரர், அவரே பிரும்மம், அவரே தவமும், சத்தும் அஸத்தும், மந்திரமும், பிரும்மாவும், ருத்ரரும், இந்திரனும், அஸ்வினி தேவர்களும், ஸூர்யனும், சந்திரனும், வருணனும், யமனும், குபேரனுமாவர். அந்த

பிரும்மா முதலான ருத்விக்குகள் தனியாகப் பார்க்கிறவர்களாக விருந்தாலும், நாராயணருடைய ஒரே ரூபமாக விருப்பதை வித்வான்கள் அறிகிருர்கள். இந்த ஸகல ஜகத்தும் நாபாயணருடைய வசத்திலிருக்கிறது. சுத்தமான வம்சத்தில் பிறந்தவர்கள், கடுமையான அனன்ய கதி என்கிற விரதத்திஞல் அளவற்ற வீர்யமுள்ள விஷ்ணுவின் ஸ்தானத்தை மேலாகக் கருதுகின்றனர். அதனுல் விருத்ராசுரன் ஒழிவடைந்து, நாராயண பதத்தை விரும்பினன். பக்ஷிகள் இறக்கையில்லாத குஞ்சுகளை அணைப்பது போலவும், இளம் கன்றை விட்டுப் பிரிந்த தாய்ப்பசு மீண்டும் அந்தக் கன்றை அடைந்தபோது எவ்விதம் சந்தோஷப்படுமோ, அதைப்போலவும், ப்ரியையான மனைவி தனது கணவனைப் பிரிந்து மீண்டும் அடையும்போது, எவ்விதம் சந்தோஷப்படுவாளோ, அதைப்போல ஸாதுக்களின் ஸங்கத்தாலும், ஆசார்ய விசேஷ கடாக்ஷத்திஞலும் இழந்துபோன ஜீவன் ஹரியின் பாதங்களை மீண்டும் அடைகிருன். கலியில் சாமர்த்தியம், தனம், விக்ஞானமில்லாதவர்கள் ஸ்ரீராமனையும், கிருஷ்ணனுடைய புண்யஸ்ரவண கீர்த்திகளைப் பாடவேண்டும். அதுவே ஸம்சார தாபங்களிலிருந்து மோக்ஷகாங்க்ஷிணர்களுக்கு ஸர்வ ஔஷதமாக விருக்கிறது. இந்திராணியும் இந்திரனும் அவ்விதமே உத்தம கதியை அடைந்தார்கள். அப்பேறபட்ட சீதா ராமா, உங்களை உமா மஹேஸவரர்களை முன்னிட்டு, சரணமடைகிறேன். நாராயணு, ரக்ஷி, ரக்ஷி என்று கூறுகிறேன்.]

ஓடிப்போகிற ராக்ஷஸர்களை வானரர்களும் கரடிகளும் ஓடிப் பிடித்து, அவர்களை பூமியில் விட்டு எறிந்து நாசமடையச் செய்தார்கள். இந்த அற்புத ஆச்சர்யச் செய்கையைச் செய்த வானர வீரர்கள் ராக்ஷஸர்களின் உடல்களை ஸமுத்திரத்தில் வீசி எறிந்தார்கள். அங்கு பெரிய மகரங்களும், பாம்புகளும், மீன்களும், அவைகளைக் கண்டு எடுத்துச் சாப்பிட்டன. (293)

சில பேர்கள் கொல்லப் பட்டார்கள். சில பேர்கள் காயமடைந்தார்கள். சில பேர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். தங்களுடைய விரோதிகளை நாசம் செய்த வானர வீரர்கள் கரடிகள் அதிக சந்தோஷத்தால் கர்ஜித்தார்கள். (294)

இரவு வந்துவிட்டதை அறிந்து, வானரர்களின் நான்கு

பிரிவுகளும் கோஸலாதிபதியான ராமன் தங்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தன. என் பிரபு மஹா கிருதக்ஞர். கிருபா வசமடைந்த ஸ்ரீராமன் அந்த வானர பரிவாரங்களைத் தனது பத்ம நயனங்களால் பார்த்தார். அந்த அம்ருதப் பார்வைகளால் வானரர்களின் சிரமங்கள் களைப்பு யாவும் நீங்கின. (295)

இங்கே லங்கையில் ராவணன் தனது மந்திரிகளைக் கூட்டிக் கலந்து ஆலோசித்தான். யார் யார் யுத்தத்தில் உயிரை யிழந்தனர் என்று அவர்களிடம் கணக்கிட்டுப் பார்த்தான். மிக்க மனம் கலங்கி ராவணன் தனது மந்திரிகளிடம் சொன்னான். "வானரங்கள் ராக்ஷஸ சேனைகளின் பாதியை ஸம்ஹாரம் செய்து விட்டன. , இனி நாம் என்ன உபாயம் செய்யலாம்? யோசனை செய்யுங்கள்." (296)

மால்யவான் என்கிற கிழ ராக்ஷஸன் ஒருவன் அந்தக் கூட்டத்திலிருந்தான். அவன் ராவணனுடைய தாயின் வழியில் பாட்டனாக விருந்தான். அவன் ராவணனுக்கு மந்திரியாகவுமிருந்தான். அதனால் அவன் நீதியுடன் வசனங்களைச் சொன்னான். "புத்ரா, என் வார்த்தைகளைக் கவனமாகக் கேள். உனக்கு நன்மை பயக்கும் நீதியை என்னிடமிருந்து கேள்."

(297)

"ராவணா, நீ எந்த நிமிஷத்திலிருந்து சீதையை அபகரித்து வந்தாயோ, அது முதல் அபசகுணங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ராமனை நீ வேத புருஷன் என்று நினைத்துக்கொள். புராணங்களில் புகழப்படும் இந்த பிரபுவை நீ விரோதம் செய்வதால், சுகத்தையும் நன்மையையும் அடைய மாட்டாய். ராமனிடம் விமுகனாக விருக்கும் எவனும் ஒருக்காலும் சுகத்தை அடைய முடியாது." (298)

"ஹிரண்யாக்ஷன், அவனுடைய சஹோதரன் ஹிரண்ய கசிபு, மஹா பலவான்களாகிற மதுகைடபர்கள் யாவரையும் கொன்ற மஹானுபாவனான நாராயணனே இந்த ராமனாக அவதரித்திருக்கிறான். அப்பேற்பட்ட பகவான் நாராயணர், மஹா கிருபாளு, மஹாலக்ஷ்மி சகிதம், உலகத்தின் நன்மைக்காக ராம சீதா ரூபத்துடன் பூமியில் தற்சமயம் அவதரித்திருக்கிறார்கள். [அவர்கள் ஸர்வேஸ்வரர்களானபடியாலும், பிரபிதாமஹரானபடியாலும், ஜகந்நாதரானபடியாலும், அசிந்தனீயரான

வரும், அநிர்தேஸ்ய வபுவாகவும், எல்லாப் பிராணிகளுக்கு உயிரும் கர்ப்பத்தில் பிறவாத அயோ நிஜரான நாராயணன் மஹாலக்ஷ்மியே.] (299)

மாஸபாராயணம்—25-வது நிறுத்தம்.

[*தியானம்*

ராமா, சீதா நாயகா, நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ உங்களை ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். வித்வான்கள் மானத்திற்கு இந்த லோகம், மௌனத்திற்கு பரலோகமான பிரும்மம் என்று அறிகின்றனர். செல்வம், மானம் என்னும் பொருளுடன் சேர்ந்திருக்கிறபடியால், மோக்ஷத்திற்கு விரோத மாகவிருக்கிறது. பிரும்மத்தைச் சேர்ந்த மோக்ஷ செல்வமோ ஞானமில்லாதவனுக்கு மிகவும் அரிதாகவிருக்கிறது. ஸத்யம், நேர்மை, லஜ்ஜை, அடக்கம், சுசியாகவிருத்தல், வித்யை ஆகிற ஆறு குணங்களையும் மோக்ஷ செல்வம் வருவதற்கு வாயில்கள் என்று ஸநத்ஸுஜாதர் திருதிராஷ்டிரனிடம் சொன்னர். வித்வானுகிறவன் மௌனத்தால் வேதங்களில் புகழப் படும் நாராயணரை வேத சப்தங்களாலேயே புகழ்கிருர்கள். எப்பொழுதும் இருக்கும் ஸ்ரீமான் பகவான் நாராயணரை, ஜீவர்க ளாகிற யோகிகள், தேனீக்கள் பிராம்மணுதி தேகமாகிற ஸ்வர்ண மயமான அஸ்வத்த மரத்தை அடைந்து, அதில் பரமாத்ம ஞானம், அனுஷ்டானம் முதலிய சிறகுகளுடன் பிரும்மத்தைப் பார்த்தவண்ணம், சிந்தித்தவண்ண மிருக்கிருர் கள். பகவானுமான நாராயணரை அந்த சுத்த பிரும்மத்தை, யோகிகள் நன்கு பார்க்கின்றனர். பூர்ணமான பிரும்மத்தி னின்று பூர்ணமான ஜீவர்களை எடுக்கின்றனர். பூர்ணமான பிரும்மத்திலேயே பூர்ணமான ஜீவர்கள் செய்யப் படுகின்ற னர். பூர்ணமான பிரும்மத்திலேயே பூர்ணமான ஜீவர்களை ஹரிக்கின்றனர். முடிவில் பூர்ணமான பிரும்மமே மிஞ்சுகிறது. எப்பொழுதும் இருப்பதும் பகவானுடைய அந்த சுத்த பிரும் மத்தை யோகிகள் நன்கு பார்க்கின்றனர். பூர்ணமும், மஹாத் மாவும், ஜனனமற்றதுமான பிரும்மம் கட்டை விரல் அளவுக்கு எப்பொழுதும்தேகத்தில் வசிக்கிருன்.நாராயணனே அந்தராத்மா வாக விருக்கிருன். வித்வானுனவன் அந்த நாராயணராகிய

அந்தராத்மாவை அறிந்து தெளிவடைகிருன். ஆத்மாவுக்கும் அணுவாகி நல்ல மனமுடையதாய் எல்லா பிராணிகளிடத்திலும் விழித்திருப்பதாகக் காண்கிருன். உலகத்திற்குப் பிதாவாகவிருக்கும் நாராயணனை வித்வான்கள் எல்லாப் பிராணிகளின் ஹ்ருதய கமலங்களில் வசிப்பவராக அறிந்து, அவனுடைய ஸங்கல்பத்திற்கு உடந்தையாக விருக்கிருர்கள். அப்பேற்பட்ட நாராயணனை, ஸநத்ஸுஜாதரை முன்னிட்டு நான் சரணமடைகிறேன்.]

"ராவணு, நாராயணரின் அம்சமான இந்த சீதாராமன், காலஸ்வரூபம். (எந்த மனிதனுடைய வாக்கும் மனமும் எப்பொழுதும் நாராயணரைத் தியானிக்கிறதோ, எவனுக்கு தவமும் தியாகமும் ஸத்யமும் இருக்கின்றதோ, அந்த மனிதனே ஞானக் கண்களுடன் காலாத்மா ஸ்வரூபமாயிருக்கிற நாராயணரை அறிகிருன். வேதமறிந்த வித்வான்கள் காலரூபியான ஸ்ரீராமனை, மாதத்தையும் பக்ஷத்தையும் வீடாகக் கொண்டதும், இரவாலும் பகலாலும் சூழப்பட்டதும், ருதுக்களை த்வாரமாகக் கொண்டதும், பிராண வாயுவை முகமாகக் கொண்டதுமாகக் கூறுகிருர்கள். காலமே நித்யம்; ஐந்து விதமான இந்திரியங்களும் அதைக் காண்கிறதில்லை. சிலர் அதை அக்னி என்றும், பிரும்மாவென்றும், ருதுக்கள் என்றும், மாதங்கள், பக்ஷங்கள், தினங்கள், க்ஷணங்கள், காலை, மாலை, நடுப்பகல், முகூர்த்தம் என்று பலவிதமாகச் சொல்லுகிருர்கள். உன்னைப்போல பல்லாயிரம் இந்திரர்கள், மேன்மை கொண்ட ராக்ஷஸர்கள் அநேகர் காலஞ் சென்ருர்கள். ராவணு, ஆகையினுல் காலத்தை யாவராலும் மீறிச் செல்ல முடியாது. காலமே ஸர்வ சக்ஷுஸ்ஸான சூர்யன் என்றும் சொல்லப்படுகிருன். மிக உத்தமமான ராஜலக்ஷ்மியை அடைந்து என்னிடம் ஸம்பத்து இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளாதே. இந்த லக்ஷ்மியானவள் ஸதா நாராயணரை அண்டியிருப்பதால், ராமனும், சீதையும் பூஜிக்கத் தக்கவர்கள். உன்னை விடச் சிறந்த பல பேர்களிடத்தில் இந்த லக்ஷ்மியானவள் இருந்திருக்கிருள்.) ஆகையால் ராமனிடம் விரோதம் செய்யாதே. சாந்தனுகவிரு. கர்வம் கொள்ளாதே, (லக்ஷ்மியானவள் காலத்தால் ஏவப்பட்டு, இப்போது விபீஷணனை

அடைந்திருக்கிறுன்.) ராமனை விரோதித்தால் அழிவிற்கு காலம் வந்துவிட்டது என்று நினைத்துக் கொள். வெட்கமில் லாமல் உன்னைப் புகழ்ந்து கொள்ளாதே. இந்த கால ஸ்வரூபி யாகிற அக்னி துஷ்ட சமுஹங்களான வனத்தை தகனம் செய்து விடுவான். இந்த ராகவன் ஸர்வ கல்யாண குணங் களுக்கு இருப்பிடம். அபராதங்களைப் பொறுக்கும் தன்மை உள்ளவர். பக்ஷபாதமில்லாதவரும், தன்னுடைய ஆக்ஞா ரூபமான சாஸ்திர மரியாதையை ஜீவிக்க வைப்பதற்காக இவன் அவதரித்திருக்கிறுர். இவரை, சிவனும் பிரும்மாவும் அனவரதமும் சேவை செய்கிறுர்கள். இவரிடம் விரோதம் செய்யாதே.'' (300)

''புத்ரா, விரோத பாவத்தை விட்டு, வைதேஹியை ஸ்ரீராமனிடம் ஒப்பிவித்து விட்டு வா. பரம கிருபாளுவான ஸ்ரீராமனை ஸ்நேக உள்ளத்துடன் பூஜை செய். வீணுக கால தாமதம் செய்யாதே,'' என்று மால்யவான் சொன்னுன். ராவணனுக்கு மால்யவானுடைய வார்த்தைகள் பாணத்தைப் போலவிருந்தன. கோபத்துடன் அவன் வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தான். ''அபாக்யமுள்ளவனே, உன் முகத்தை நான் பார்க்க விரும்பவில்லை. இவ்விடம் நிற்காதே. வெளியே போய்விடு.'' (301)

''நீ கிழவனுகி விட்டாய். இல்லாவிடில் உன்னை இப் போதே கொன்று போட்டிருப்பேன். என் கண்கள் முன்பு நிற்காதே. எங்கேயாவது போய் விடு.'' மால்யவான் இந்த வார்த்தைகளைக் கேட்டு தனக்குள் தீர்மானித்தான். ''ராவணனுக்கு காலம் நெருங்கி விட்டது. மஹா கிருபாளு வாகிற ஸ்ரீராமன் இவனை வதம் செய்வதற்கு ஸங்கல்பித்து விட்டார். இல்லாவிடில் என் வார்த்தைகளை இவன் கேட் டிருப்பான்.'' (302)

ராவணனுடைய துர்வசனங்களை வியாஜமாக வைத்துக் கொண்டு, மால்யவான் சபையிலிருந்து வெளிக் கிளம்பினுன். அப்போது மேகநாதன் மஹா க்ரோதத்துடன் சவால் செய்தான். ''பிதா, நாளைக் காலையில் எனது சாமர்த்தியத் தைப் பாருங்கள். நான் பெரு முயற்சி செய்து அசகாய சூரத் தனத்துடன் பெரும் லீலைகளைச் செய்வேன். அவைகளை முன்

கூட்டியே பேசுவதால், என்ன லாபம்?'' என்று மார்பு தட்டிப் பேசினன். (303)

ராவணன் தனது புத்ரனுடைய வசனங்களைக் கேட்டதும், அவனுக்குத் தான் ஜயித்து விடலாம் என்கிற நம்பிக்கை மனத்தில் எழுந்தது. மஹா ப்ரீதியுடன் அவனைத் தனது மடியில் உட்கார்த்தி வைத்துக் கொண்டான். அவனைத் தழுவி ஆசீர் வதித்து, உச்சி மோந்தான். இவ்விதம் விசாரம் செய்து இரவு கழிந்து, காலை வந்துவிட்டது. வானரர்கள் மீண்டும் நான்கு கோட்டை வாசல்களை அடைந்தனர். (304)

[தியானம்

நாராயணா, சீதாராமா, உமா மகேஸ்வரர்கள் உம்முடைய பரத்வத்தை சரியாகப் புரிந்துகொண்டு உம்மிடம் ஸதா ஸ்திர புத்தியுடன் இருக்கிறார்கள். உமது மாயை ஞானத்தையும் அனுஷ்டானத்தையும் கெடுத்து விடுகிறது. ஞானம் மோக்ஷ ஸாதனம் என்று தெரிந்தும், அந்த ஞானமும் அனுஷ்டானமும் உன்னைப் பற்றியில்லாது போனல், அவைகள் வீணே. சத ருத்ரீயத்தில் வியாஸரால் புகழப்பட்ட சங்கர பகவானே, நீரே இந்த விஷயத்தில் ஸமர்த்தர். நாராயண அம்சரான ராமனும் கிருஷ்ணனும் உம்முடைய பரத்வ சௌலப்யாதிகளை உணர்ந்த வர்கள். பிரும்ம விசாரம் உள்ளவன் சிறந்த கர்மாக்களால் அடையப்படும் புண்ணியத்தை பொன் விலங்காகவும், பாபங் களை இரும்பு விலங்காகவும் நினைத்துப் புண்ய பாபங்களை விலக்குகிறான். கர்மாக்கள் க்ஷயமடைந்து, பிரும்ம ஜிக்ஞாசத் தினல் பெரியோர்களாலும் ஆசார்யர்களான பாராசாரதி ராமானுஜ வழிகளில் வருகிறவன் நாராயண ஸம்பந்தத்தை எந்த விதத்திலும் விரும்புகிறான். அவன் ஆசார்ய பார தந்திரியமானதால் பிரும்ம பார தந்திரியமாகி, உலகமனைத்தும் பிரும்மத்தைக் கண்டு, ஸ்திதப் பிரக்ஞனைப் போல, தேகம், ஆத்மா என்கிற சாரீரகாத்மா என்கிற சாரீரகமிமாம் ஸையின் ஸாரமாகிற நாராயணனை ஆயிரம் தலைகள், ஆயிரம் கைகள், கால்கள் உள்ள பரம மங்கள மூர்த்தியான ஜகந் நாதரை, உமா மஹேஸ்வரர்களின் ஐக்ய ஸ்வரூபத்தை ஓம் இத்யாத்மானம் தியாயஸ்ச; ஆத்மானும் ஏவ லோகம்

உபாஸீத; தியானிக்க வேண்டிய ஏகமான பொருள் ஆத்மா, என்று சரணமடைகிறேன். அந்த ஆத்ம புத்தியில் நிலைத்து நிற்கும் நாராயணன் நிர்வாண மாகிய மோக்ஷ அதிகாரி, என்று விலக்ஷணமாக அறிந்து, அன்று அஸ்வத்தாமா வாஸுதேவரின் பெருமைகளை வியாஸ ராலும், அர்ஜுனன் மஹேஸ்வரரின் பெருமைகளை வேத வியாஸராலும் பீமன் வாஸுதேவராலும் கண்டிக்கப்பட்டு, பெரும் ஞான பரமான நாராயண அஸ்திரத்துக்கு, உலகங் களின் கர்த்தா, நியந்தா ஆகிற சூக்ஷ்ம அதிகாரிக்கு, நமஸ் காரம் ஒன்றே போதும் என்று ஸித்தாந்தமாக நிர்ணயிக்கப் பட்டதோ, அது மாதிரி நாராயணரை மோக்ஷம் விரும்பியவன் த்யானிக்கிறான். ஹே பஞ்சசிகரே, உமையின் மடியில் விளையாடிய சங்கரரே, சத ருதிரியத்தாலும் அனந்த ருத்ரியத் தாலும் புகழப்படும் உப ஸ்தானமும் ஹரரே, உமக்காகச் செய்யப் பட்டதல்லவோ. பூதநாதரே, கபர்தின், திரிஜடி, திரபுராந்தகரே, ஆகாயம், பூமி, ஜலம் ஆகிய திரியம்பகரே, அக்னி, சந்திரன், சூர்யன் ஆகிற முக்கண்ணரே, விருபாக்ஷரே, நீரே நாராயண அம்சரானபடியால், உமக்கு மஹேஸ்வரதத்வம் சித்தித்திருக்கிறது. உலகத்தை தண்டத்தால் அலரச் செய்யும் ருத்ரரே, ஜடாமண்டலதாரியே, அக்னியாகிற உக்ர ரூபமும் சந்திரனாகிற ஸௌம்ய ரூபத்தையும் பாதிப் பாதியாகக் கொண்ட பினாகின், என் தாயான ஹைமவதியின் பதியே, உமாதேவியை புறமாக வைத்து நமஸ்கரிக்கும் என்னிடம் ஸதா தாங்கள் கிருபையுடனும் அன்புடனுமிருக்க வேண்டும். அவனே அவனும் அவனும் அவனும், அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே என்று ஆழ்வார் ஸ: ஸ: என்கிறபடிக்கும், ஆள வந்தார் சொல்லியபடி பிரும்மா, சிவன், இந்திரன் முக்தாதிமா எனப்படுபவர்களும் உன்னுடைய ஐஸ்வர்யக் கடலில் பங்கு உள்ளவர்களாகிறார்கள். ஜகத் ஸ்ருஷ்டி செய்த நாராயணன் சிவனாய், அயனாய், இந்திரனாய், அக்ஷரனான முக்தாத்மாவாய், ஸ்வராட்டாய், கர்மத்திற்கும் பக்ஷபாதத்திற்கும் வசப் படாதவனாய், ஸர்வ ஸ்வதந்திரனாய், ஞானத்தினால் உமா மஹேஸ்வரர்களைப் போல, ஏகமாக வரிக்கப் படவேண்டியவர். அப்பேற்பட்ட ஆத்ம வஸ்துவாகிற நாராயணருக்கு, ஆதி

சக்தியுடன் விளங்கிய மஹேஸ்வரருக்கு, வியாஸரையும் ராமானுஜரையும் முன்னிட்டு ஆயிரம் நமஸ்காரங்களைச் செய்கிறேன். என்னை ரக்ஷிக்கவேண்டி அவர்களைப் பிரார்த்திக்கிறேன்.]

வானரர்கள் க்ரோதமடைந்து கோட்டையின் வாசல்களை உடைத்தனர். லங்கா நகரத்தில் பயத்தினால் எங்கும் கோலாகலமான இறைச்சல்கள் ஏற்பட்டன. ராக்ஷஸ சேனைகள் விதவிதமான ஆயுதங்களோடு அஸ்திர சஸ்திரங்களோடு ஓடிவந்தனர். கோட்டைகளின் மேல் வைக்கப்பட்டிருந்த மலைச்சிகரங்களின் பகுதிகளை வானரர்களின் மீது எறிந்தனர். (305)

ராக்ஷஸர்கள் பெரும் பர்வதங்கள் போன்ற பாறைகளையும் கோடிக்கணக்காக எறிந்தும், அநேகவிதமான ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அவர்களால் யேற்பட்ட நாசங்களும், கர்ஜனைகளும், வஜ்ரத்தினாலும் இடி மின்னல் போன்ற உத்பாதங்களினாலும் ஏற்பட்டதும் பிரளய காலாக்னிக்கு சமமானதாக விருந்தன. சாமர்த்தியமுள்ள பெரும் வானர கரடி வீரர்கள் ஆபத்தைப் பார்க்காமல் சரீரங்களின் காயங்கள் பலமாக ஏற்பட்ட போதிலும் விடாமுயற்சியுடன் ராக்ஷஸர்களை எதிர்த்தார்கள். ராக்ஷஸர்களும் மரணமே சிறந்தது என்று முடிவுக்கு வந்தவர்களாக பயப்படாமல் பாறைகளை வீசி எறிந்து, யுத்தம் செய்தார்கள். இந்த விதமாக யுத்தம் செய்தும், ராக்ஷஸர்கள் வானரர்களுக்கு இறையானார்கள். (306)

மேகநாதனுக்கு இந்தச் செய்தி எட்டியது. வானரர்கள் மீண்டும் கோட்டையைத் தாக்குகிறார்கள் என்று தெரிந்துகொண்ட மேகநாதன் யுத்த ஸன்முகனாகவும் நல்ல ஏற்பாடுகளுடனும், வீர முழக்கத்துடனும் கோட்டையை விட்டுக் கிளம்பினான். டங்கா, யுத்த பேரிகைகள் முழக்கம் செய்தன. (307)

மேகநாதன் சத்தம் போட்டுக்கொண்டு யுத்த முழக்கங்கள் செய்துகொண்டும் சென்றான். "கோசல தேச ராஜகுமாரர்கள் எங்கே? பிரஸித்தி பெற்ற தனுர் வீரர்களான ராம லக்ஷ்மணர்கள் எங்கு இருக்கிறார்கள்? அவர்கள்

இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள். அவர்களிடம் நான் யுத்தம் செய்யவேண்டும். அவர்கள் எங்கு ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்? நளன், நீலன், த்விவிதன், சுக்ரீவன், பலத்தின் எல்லை போன்ற அங்கதன், ஹனுமான் ஆகியவர்கள் எங்கிருக்கிறார்கள்? சீக்கிரமாகச் சொல்லுங்கள்." (308)

"பிராதாவுக்கு துரோஹம் செய்த விபீஷணன் எங்கே? நான் இன்று அவர்களைக் கண்டு பிடித்து பிடிவாதமாக அவர்களுடன் சண்டை செய்து கொல்லப் போகிறேன்." இவ்விதம் சொல்லிவிட்டு, இந்திரஜித் கடினமான அஸ்திர பாண பிரயோகம் செய்து, விசேஷமானதும் அதிசயமான க்ரோதத்துடன் காதுவரை இழுக்கப்பட்ட வில்லின் நாண்களினால் பூட்டப்பட்ட அம்புகளை எய்தான். (309)

அவன் எய்த அஸ்திரங்கள், பாணங்கள் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தன. அவைகளைப் பார்த்தால் அநேக இரக்கைகள் கொண்ட பக்ஷி சமுதாயங்கள் ஒரே கும்பலாக வந்து கொண்டிருப்பதைப் போலத் தோன்றின, எங்கு பார்த்தாலும் வானரங்கள் கரடிகள் அடிபட்டு, பூமியில் விழுந்தன. அந்த சமயத்தில் வானரங்களுக்கு ஆறுதல் சொல்வதற்கோ, மேகநாதனை எதிர்த்துப் போராடி அவர்களுக்கு ஆபத் விமோசனம் செய்வதற்கு ஒருவரும் ஸாமர்த்தியம் கொண்டவராக இருக்கவில்லை. (310)

கரடி வானரங்கள் எங்கு எங்கு ஓடி ஒளிந்து கொண்டனர்களோ, அங்கெல்லாம் இந்திரஜித்தின் பாணங்கள் வந்து கொண்டிருந்தன. அவர்களுக்கு யுத்தம் செய்வதே மறந்து போய்விட்டது. ரணகளத்தில் ஒரு வானரமோ, கரடியோ காணப்படவில்லை. எங்கு பார்த்தாலும் உயிருள்ள வானரமோ, கரடியோ மருந்துக்குக் கூட காணப்படவில்லை. யுத்த களம் காலியாகவிருந்தது. (311)

ஒவ்வொரு வானர வீரரையும் பத்துப் பாணங்களால் இந்திரஜித் அடித்து பூமியில் கீழே தள்ளினான். எங்கு பார்த்தாலும் மேகநாதன் பலமான சிம்மநாதம் செய்துகொண்டு சென்றான். அவனைப் போல பலவானும் தீரனும் காணப்படவில்லை. (312)

[*தியானம்*

நாராயணா, மஹாத்மா, ராமசீதா, லங்கேஸ்வரனுக்குப் பயத்தைக் கொடுத்து, அந்த பயத்தினால் உலகம் முழுவதையும் தைரியப்படுத்திய ஆஞ்சநேயர் ஹே சீதாராமா, எந்த பக்தி சிந்தனையினால் ராஜ பதமாகிற உன் நிஜ பாதங்களை அடைந்தாரோ அதை என்னால் ஸ்மரிக்க முடியவில்லை. பிரபோ, நாராயணா, உன்னுடைய மாயையை அறிபவர் மிக மிக அரியரே. நீதானே அமரரும் யாவையும் யாவரும் தானும், பேரும் ஓராயிரம் பிற் பலவுடைய வெம்பெருமான் பேருமோருருவமும் உளதில்லை யிலதில்லை பிணக்கே, என்று நம்மாழ்வார் ஸாதித்தபடி நீதானே தோஷமில்லாத கல்யாண குணங்களின் சேர்க்கை உள்ளவனும், ஆத்மாவாகவும், ஆத்மாவை அழைத்துச் செல்லும் ஸேதுவாகவும், அம்ருதஸ்யைஷ ஸேது: என்கிறபடி பரமார்த்தமாக வரிக்கப் படுகிறவனும், அஹம்ஹி ஸர்வ யக்ஞானும் போக்தாச ப்ரபு ரேவச, ஸர்வ கர்மங்களுக்கும் ஸர்வ யக்ஞங்களுக்கும் தேவதைகளுக்கும், உலகத்திற்கும் ஆத்மாவாக விளங்கும் நாராயணன் நீர்தானே. லபதேச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான் என்கிறபடிக்கும் பரம புருஷன் ஞானத்தையும் தாண்டி ஸர்வ தோஷ ஸங்கமற்றவனாக, ஸர்வ ஆராதனைக்கும் உபாஸனைக்கும் மோக்ஷம் உள்பட ஸர்வ பல தாயகரான நாராயணனை, நான் உமா மஹேஸ்வரர், ஜைகீஷவ்யரையும், அஸிதர் என்கிற தேவலரையும் கொண்டு சரணமடைகிறேன். ஆசையற்றவரும், யோகியும், த்வந்தங்களிலிருந்து விலகியவரும், அறிவுள்ளவரும் ஒரே விதமான இயற்கையுள்ள ஜைகீஷவ்யர் துதிக்கப்பட்டாலும் சந்தோஷமடைகிறதில்லை; அவமானப் பட்டாலும் கோபிக்கிறதில்லை. எல்லாக் காலத்திலும் எல்லோரிடத்திலும் ஸமமாக விருந்துகொண்டு தமது சக்திக்குத் தக்கபடி உபகாரம் செய்துகொண்டும், பிறர்களைக் கண்டு தாபப்படாமல் ஹ்ருதய கிரந்தி என்கிற அக்ஞானத்தை தள்ளிவிட்டு ஸர்வ பிராணிகளுக்கும் பந்துவாக விருந்தார் நிந்தையினால் குறைவும் புகழ்ச்சியினால் வளர்ச்சியும் ஆகாமல் அவர் வாழ்ந்து, இந்திரியங்களை அடக்கி, பிருக்ருதியை விட மேலானதும் நிலையுள்ளதுமான

பிரும்மமாகிற நாராயணனை தனக்குப்பரகதியாக நம்பி வாழ்ந்து வந்தார். பூமி ரூபியாகிறவளும், மிக்க காந்தி உள்ள உமா தேவியும், சந்திரன், சூரியன், அக்னி ஆகியவர்களை கண் களாகக் கொண்ட ஸ்ரீ ருத்ரரானவர், பிரகிருதி பரன் என்று சொல்லப்படும் ஆதி தேவர்கள், யக்ஞன் யக்ஞவபு என்று சொல்லும்படி என் ஆத்ம குருக்கள் பூஜிக்கத் தகுந்த வஸ்துவாக விளங்குகிறார்கள். ஆகையால் பரமனாகிற நாராயணரே உயர்ந்த வஸ்து. அவரை விடச் சிறந்ததில்லை. உருண்டையான பூமியும் சக்தியும் பல விசேஷங்களுடன் அந்த பரமாத்வாகிற நாராயணரிடத்தில் லயப்பட்டது என்று ஜைகீஷவ்யர் உணர்ந்தது போல, நானும் அறிகிறேன். அப்பேற்பட்ட உமா மஹேஸ்வர ரூபியான நாராயணரை லக்ஷ்மி, பூமி நீளாதேவி சகிதமாகப் பார்த்து எனது பரம கதியாக ராமானுஜரையும் ஜைகீஷவ்யரையும் அஸிதர் என்கிற தேவலரையும் முன்னிட்டு நான் சரணமடை கிறேன்.]

உமா மஹேஸ்வரர்களின் ஐக்ய ஸ்வரூபத்தைக் கொண்ட என் பிரபு ஆஞ்சநேயர் (ராமனே பரமார்த்தம், ராமனுடைய கைங்கர்யமே பரம போக்யம், ராமனே போக்ய வஸ்து, என்று தெரிந்துகொண்டு பிறருக்கு உபதேசிக்கும் மஹானுபாவன், ராவண இந்திரஜித்திற்கும் பிரகிருதியைக் காட்டிலும் பரமான வஸ்து உண்டு, அதற்கு யாவரும் பயப்பட்டாக வேண்டும் என்று நினைக்க வைக்கும் ஸர்வ ஸங்கல்பன், பரம உபகாரி) இந்திரஜித்தனின் காரிய ஸாமர்த்தியத்தையும் வானரர்களின் நஷ்டத்தையும் பார்த்து வ்யாகுலமடைந்தார். பவன புத்ரனாகிற ஹனுமார் க்ரோத வசமடைந்து, ஸ்வயம் கால புருஷனே வந்தது மாதிரி ரணகளத்திற்கு ஓடினார். ஒரு பெரிய பர்வதத்தை எடுத்துக்கொண்டு அதி கிரோதத்துடன் மேக நாதன் மீது வீசி எறிந்தார். (313)

பெரும் பாறை வருவதைக் கண்ட இந்திரஜித் ஆகாயத் தில் எழும்பினான். அந்த பாறை அவனுடைய ரதத்தையும் குதிரைகளையும் நாசப்படுத்தின. ஹனுமார் இந்திரஜித்தை யுத்தத்திற்கு அடிக்கடி அழைத்தார். ஆனால் மேகநாதன் அவரிடம் நெருங்கவில்லை. அவனுக்கு ஹனுமாருடைய

மர்மமும் பலத்தைப்பற்றிய ஞானமும் தெரியும். (314)

எப்போது மேகநாதன் ரகுபதியின் சமீபம் வந்தானோ, அப்போது அவன் அநேக துர் வசனங்களைப் பிரயோகித்தான். அதன் பிறகு அவன் அஸ்திரங்களையும் சஸ்திரங்களையும் பிரயோகித்தான். பிரபு வெகு சுலபமாக அவைகளை கண்டித்து நாசம் செய்தார். (315)

பிரபு ஸ்ரீ ராமசந்திரனுடைய வீர பிரதாபங்களையும் ஸாமர்த்தியங்களையும் நேரில் கண்ட மூர்க்கனான இந்திரஜித் மாயையை அநேகப் பிரகாரமாக உபயோகித்தான். அதைப் பார்த்தால் வேடிக்கையாக விருந்தது. சிறிய சர்ப்பக் குஞ்சுகளை கையில் வைத்துக்கொண்டு பக்ஷி ராஜனாகிற கருடனை பயமுறுத்துவது போலிருந்தது. (316)

எந்த பிரபுவினால் மாயை ஸ்ருஷ்டிக்கப்பட்டு, எவரிடம் அது லயமடைந்திருக்கிறதோ, எவருடைய மாயையினால் சிறியவர்களும், பெரியவர்களும், பிரும்மாவும், பரமசிவனும், ஸகல தேவர்களும் உள்பட மோஹமடைந்து பரமாத்மாவின் ஸங்கல்பத்திற்கு வசப்படுகிறார்களோ, அப்பேற்பட்ட அசாதாரணமான மகிமை பெற்றவரும் வேறொரு ஸாதகமின்றி தானாகவே பிரகாசிக்கும் சுகரூபியும், மாயைக்கு வெளிப்பட்ட ஈஸ்வரனான ஸ்ரீராமனிடம் நீச புத்தியுள்ள மேகநாதன், ராக்ஷஸ குலத்தில் உதித்தவன், தன்னுடைய பூர்ணமான மாயா பலத்தை பிரயோகித்தான்! அந்தோ! (317)

ஆகாயத்தில் எழும்பி, ஆகாயத்திலிருந்து நெருப்புத் துண்டங்களையும் பூமியிலிருந்து ஜலதாரைகள் வெளியில் வரும்படி செய்தான் இந்திரஜித். அநேக பிரகாரமான பிசாசங்கள், பெண் பிசாசங்களான யாதுதானிகர்கள், முதலியவைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. அவர்கள் "வெட்டு, கொல்," என்கிற பயங்கர சப்தங்களுடன் ஓலமிட்டுக் கொண்டு யுத்த பூமியில் நடமாடின. (318)

அதே மாதிரி இன்னொரு சமயத்தில் விஷ்டை, மலம், சீ, மூத்திரம், ரத்தம், மயிர், எலும்பு ஆகியவை மழைத் தாரையாக பெய்து கொண்டிருந்தது. இன்னொரு சமயம் கல் மழையையும், தூசி, புழுதி மழையையும் அவன் பெய்யும்படி செய்தான். இவ்வித மாயைகளினால் ஆகாயத்தில் ஒரே அந்த

காரமான இருட்டு எங்கும் சூழ்ந்தது. அந்த கண இருட்டில் ஒருவர் தனது கைகளைக் கூடப் பார்க்க முடியவில்லை. அவ்வித மான கன இருட்டை இந்திரஜித் மாயையினுல் உண்டு பண்ணினுன். (319)

வானரங்கள் இந்த மாயைக்குப் பயந்துபோய் விட்டார் கள். அவர்கள் கலங்கிப் போய் உட்கார்ந்து கொண்டு, தங்களது மரணம் நிச்சயம் என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பிரபு ஸ்ரீராமன் இவைகளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார். ஸகல படை வீரர்களும் பயபீதம் கொண்டு கலங்குகின்றதைப் பிரபு கவனித்தார். (320)

ஸங்கல்ப மாத்திரம் உலகங்களை ஸ்தாபிக்கும் பிரபு ஒரே பாணத்தினுல் மாயையின் சகல சேஷ்டிதங்களையும் அழித் தார். தினகரன் உதையமாகும் போது, ஸகல இருட்டுக் கும் பல்கள் எவ்விதம் ஒழியுமோ, அதுபோல ஸகல மாயைகளும் ஒழிந்தன. (அதுமாத்திரமா, அன்று பிரும்மதேவர் கிருஷ்ணனைப் பார்த்தாரே, அப்பேற்பட்ட) மாயன், மஹா கிருபையுடன் தன்னைத் தவிர இரண்டாவது வஸ்து இல்லாததாக இருந்து கொண்டு, வானரர்களையும் கரடிகளையும் தேடுவது, தேற்றுவது, தான் ஒருவராக விருந்து ஊகித்து ஸ்நேகிதர்களைத் தேடுவதைப் போல, வானர கரடி படைகளைத்தேடி, தனது பத்மபத்ரம் போல விருக்கும் அரவிந்த நேத்ரங்களால் மஹா கிருபையை வர்ஷித் தார். அந்த கிருபா வேகத்தினுல் வானரர்கள் மீண்டும் பல மடைந்து, தடுக்கப்பட்டாலும் ரண களத்திற்கு யுத்தம் செய்ய ஓடினுர்கள். (321)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ, ராமா சீதா, ஓம் நமோ பகவதே மஹா புருஷாய மஹானு பாவாய மஹா விபூதி பதயே ஸகல ஸாத்வத பரிவ்ருட நிகர கர கமல குட் மலோப லலித சரணு ர விந்த யுகள பரம பரமேஷ்டின் நமஸ்தே. நாரா யண பரர்களாக விருக்கும் மஹா பாகவத உத்தமர்கள் எந்த ஸ்திதிக்கும் பயப்படாமல், ஸ்வர்க்கத்தையும் நரகத்தையும் சம மாகப் பார்ப்பார்கள். தேக ஸம்பந்தத்தால் வருத்தம், சுகம் ஆகிற த்வந்தங்களாகிற இரட்டைகள் ஏற்படுகின்றன. அவி

வேகம் படைத்தவர்கள் அல்லவோ இது வேண்டும், இது சுகத்தைத் தரும், இது துக்கத்தைத் தரும் என்று நினைப்பவர்களாக, விஷய சுகங்களில் ஈடுபடுகிறார்கள். வாஸுதேவரே, நாராயணரே, ஸர்வமும் என்று நினைப்பவர்களான வைஷ்ணவ சீலர்கள், ஞான வைராக்ய வீர்ய சீலர்களாய், பகவானிடம் பக்தி செலுத்துகிறவர்களாக, குண தோஷங்களின் பரிணமங்களைப் பார்க்கிறதில்லை. ருத்ரரும், பிரும்மாவும், ஸனத் குமாராதிகளும், நாரதர், ப்ருகு, அங்கீரஸ் போன்ற மஹரிஷிகளும், இந்திராதி திக் பாலர்களும் நாராயணரின் திருவுள்ளத்தை ஸதா அறிகிறார்கள் இல்லை. நாராயணருடைய ஸ்வரூபம், சங்கல்பம் பலவகைப்பட்டதானபடியால் அதை எளிதில் அறிவதும் முடியாது. அதனால் அப்பேற்பட்ட மஹாத்மாவுக்கு ப்ரியன் இவன், அப்ரியன் இவன் என்கிற பாரபக்ஷம் கிடையாது. ஹரியான பகவான் ஸர்வ பூதங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிறபடியால் ஸர்வ பூதப்ரியனாக ஆகிறான். அப்பேற்பட்ட பிரபுவின் நிஜதாஸ்யர்கள், மஹா பாக்யமுள்ளவர்களாக, ஸர்வத்தையும் ஸமதிருஷ்டியுடன் பார்த்து, சாந்தர்களாகவும் அச்யுத பிரியர்களாகவுமிருக்கிறார்கள். அப்பேற்பட்ட மஹாத்மாக்கள் சாந்த தம சீலர்களாக, நாராயண ஸங்கல்பத்திற்கு அடிமையாகிறார்கள். ஸமதர்சனம் என்கிற கண்களால் ஜகத்தைப் பார்த்து உஜ்ஜீவிக்கச் செய்கிறார்கள். அவர்களுக்கு பிரும்ம பதமோ நாகலோகத்தின் வாஸமோ; பாரமேஷ்டியம் என்கிற அணிமாதி சித்திகளோ, இந்திர பதமோ, ஸார்வபௌம பதமோ, துருவ பதமோ எதிலும் விருப்பம் கிடையாது. ஹரியினுடைய பாத கமலங்களையே அடிக்கடி பிரார்த்திப்பவர்களாக அவர்கள் ஸகலரையும் உஜ்ஜீவிக்கச் செய்கிறார்கள். அப்பேற்பட்ட மஹானுபாவர்களான ஹரிதாஸர்களை, பாகவத உத்தமர்களை, சித்ரகேது போன்ற வித்யாதரர்கள் ஸேவித்த ஸமதிருஷ்டியுடன் உள்ளம் கொண்டவர்களை நான் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். ராமானுஜா தயை செய்.]

ஸ்ரீ ராமசந்திரனுடைய ஆக்ஞையை ஸ்வீகரித்துக் கொண்ட லக்ஷ்மணன் தனுஷ் பாணத்துடன் யுத்த வீரர்களான ஹனுமார் அங்கதன் புடைசூழ கோபமடைந்து, யுத்தத்திற்குப் புறப்பட்டான். (322)

லக்ஷ்மணனுடைய நேத்ரங்கள் சிவந்துஇருந்தன. மார்பு பிரதேசம் மிக்க விசாலமாகவும், பாஹீக்கள் தீர்க்கமாகவு மிருந்தன. ஹிமாசல பர்வதத்திற்குச் சமானமாக வெள்ளை நிறம், சிகப்பு வர்ணத்துடன் கலந்தால் எவ்விதமிருக்குமோ அதைப்போல அவனுடைய சரீரம் விளங்கியது. லக்ஷ்மணன் யுத்தத்திற்குப் புறப்பட்டு விட்டான் என்கிற சமாசாரத்தைத் தெரிந்துகொண்ட ராவணன் பிரபலமான யுத்த வீரர்களை அழைப்பித்து, அவர்களை ஆயுதம், சஸ்திரம், அஸ்திரம் ஆகிய வைகளால் தயாரித்து அவனுடன் யுத்தம் செய்வதற்காக அனுப்பினன். (323)

பர்வதங்கள், நகங்கள், விருக்ஷங்கள், ஆகியவைகளை ஆயுதங்களாகத் தரித்துக் கொண்டு ஜயராம, ஜயலக்ஷ்மண என்று கூவிக்கொண்டு வானரக் கூட்டங்கள் சண்டைக்கு கிளம்பின. வானரர்கள் ராக்ஷஸர்கள் தங்களுக்குச் சமானமாக பலமுள்ளவர்களிடம் ஜோடி ஜோடியாகக் கலந்துகொண்டு சண்டை செய்தனர். இரு தரப்பினர்களும் யுத்தத்தில் ஜயம் அடைய எண்ணங் கொண்டு, தீவிரமாக யுத்தம் செய்தார்கள். அதனல் யுத்தம் கடுமையாகவிருந்தது. (324)

வானரங்கள் ராக்ஷஸர்களைக் கைகளால் குத்தி, கால்களால் உதைத்து, பற்களால் கடித்தார்கள். அவர்கள் விஜயசீலர்க ளாக ஆகி, ராக்ஷஸர்களை வதைத்தவண்ணமாக விருந்தார்கள். ராக்ஷஸக் கூட்டங்களைக் கண்டு, அவர்கள் கூவினர்கள். "பிடியுங்கள், உதையுங்கள், கொல்லுங்கள். கால்களையும், கைகளையும் வெட்டி விடுங்கள். மண்டைகளை உடையுங்கள்."

(325)

உலகத்தின் ஒன்பது கண்டங்களிலும் இதே குரல்களால் நிறம்பப்பட்டன. பிரசண்டமான முண்டங்கள் எங்கு பார்த் தாலும் ஓடிக்கொண்டும் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. ஆகாசத்தில் தேவகணங்கள் வேடிக்கைகளைப் பார்த்த வண்ண மிருந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் ஆனந்தமடை வார்கள்; சில சமயங்களில் அவர்கள் வியாகுலப்படுவார்கள்.

(326)

ரத்தம் பூமியிலுள்ள பள்ளங்களில் நிறம்பிவிட்டது. அதன் மேல் தூசிகள் படிந்திருந்தன. அதைப் பார்த்தால் எரியும்

தணல்களின் மேல் சாம்பல் ஒட்டிக் கொண்டிருந்தது போலிருந்தது. (327)

காயம்பட்ட வீரர்கள் பலாச மரம் பூத்தால் எவ்விதம் விளங்குவார்களோ அதைப்போல ரோஹிதமாகவும் (சிகப்பாகவும்) சோபிதமாகவு மிருந்தார்கள். லக்ஷ்மணனும் இந்திரஜித்தும் இருவர்களும் கடுமையாக யுத்தம் செய்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கிரோதத்துடன் சண்டை செய்தார்கள். (328)

[*தியானம்*

நாராயணு, ஆதிசேஷஞல் வணங்கப்பட்ட நாராயணு, லக்ஷ்மிபிரபோ, சீதாராமா, லக்ஷ்மண ஸேவித சீதாராமா, உங்களைப் பலவகையால் நமஸ்கரிக்கிறேன். மாபலிச் சக்கிரவர்த்தியை தானம் கேட்ட வாமனனே, நம்மாழ்வார், ராமானுஜர் ஆகியவர்களின் கநஞ்சம் புகுந்த தாரகமே, உங்களுடைய கைங்கர்யத்தைத் தவிர வேறு எதையும் அவர்கள் வேருகக் கொண்டார்களோ, இல்லை. நீங்கள்தானே எனக்கும் ஸ்வாமி. அவர்களுக்கு ஒளியாகவிருந்த நீங்கள்தான் எனக்கும் ஒளி. அவர்களுடைய வாழ்வின் அரங்கமும் நீர். வெள்ளத் தரவணைமேல் துயிலும் ரெங்கநாயகா, என்னிடம் உமது கிருபை வாராதா? அன்று ஸ்வேதகேது ஸ்வர்ச்சலைக்கு உபதேசித்தாரே, அந்த உயர்ந்த மனிதனின் ஆசாரம், நியமம், தர்ம ரஹஸ்யம், ஆத்ம ஞானம் எல்லாம் நீங்கள்தானே. சிறந்த மனிதன் எதைச் செய்கிருனே, அதையே உலகமும் மற்ற ஜனங்களும் பற்றத் தொடங்குவார்கள். அதனுல் உலகமும் தர்மமும் காப்பாற்றப் படுகிறது. தர்மம் ஸங்கீர்ணமானுல் ஜாதி ஸங்கரஹத்தை அடைந்து, பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவதுபோல, மீன்களுக்கு உரிய நியாயம் தடைபெறுகிறது. அப்போது ஸர்வ விபூதிகளான ஹரிக்கு அநிஷ்டம் யேற்படுகிறது.'' அவ்விதம் பெருங்காட்டில் ஆத்மா அகப்பட்டதாக விருக்கிறது. அதில் அறிவு என்கிற கத்தியால் அந்தச் காட்டை வெட்டி விட்டு, எவன் செல்லுகிருனே, அவனே அறிவுள்ளவன். அவனே எனக்கு நேசமுள்ளவன். அவனே நான். ஸந்தேகமில்லை,'' என்று ஹரிபகவான் சொல்லி

யிருக்கிறார். ஆகையால் தர்மம் என்கிற உலக மரியாதை யாவராலும் மிக்க சிரமத்துடன் காப்பாற்றப் படவேண்டும். அந்த உலக மரியாதையைக் காப்பாற்ற வேண்டி அவதரித்த சீதாராமா லக்ஷ்மணா, உங்களை ஆயிரம் தடவைகள் நான் நமஸ்கரிக்கிறேன். இருப்பதும் இல்லாததுமான வஸ்து, ரூபத்தையும் நாமத்தையும் சொல்வதுபோல, அந்த இரண்டும் சப்தத்திற்கும் அர்த்தத்திற்கும் இருப்பிடமான போதிலும், எவ்விதம் ஆகாயமின்றி, உலகமானது வாழமுடியாதோ, அதே போல அதில் ஸம்பந்தமில்லாமல் "நான்" என்னும் அஹங் கார சப்தமானது கல்யாண குணங்களோடு கூடிய ஆத்ம வஸ்துவைப் பற்றியதாக விருக்காது. மண்ணினால் உண் டாக்கப்பட்ட பொருள்களில் எவ்விதம் கடத் தன்மையிருக் கிறதோ, அவ்விதம் ஆத்ம வஸ்துவில் அஹங்காரமிருக்கிறது. ஆகாயத்தை அடைந்த உலகமானது பற்றுதலில்லாவிட்டாலும் எவ்விதம் பற்றுதல் கொண்டதாகக் காணப்படுகிறதோ, அதைப்போல காரியமும் ஆத்மாவைப் பற்றியதாகவிருக்கிறது. உருவத்திலும், ரூபத்திலும் ஆத்மா பலவிதமாகக் காணப் படுகிறதோ, அதைப்போல காரியமும் ஆத்மாவைப்பற்றியதாக விருக்கிறது. உருவத்திலும் ரூபத்திலும் ஆத்மா பலவிதமாகக் காணப்பட்டாலும், ஆகாயத்திலிருக்கும் வாயுவைப் போல உணர முடியும். அப்பேற்பட்ட பரமாத்மா "இது" என்று அறியப்படாவிடினும், அருகிலுள்ள அடையாளங்களால் வேதங்கள் மூலம் அறியப்படுகிறான். வேதங்களும் பரமாத்மாவை அடைய ஸாதனங்களை அறிவிக்கின்றன. அந்த பரமாத்மா வால் உலகம் நிறம்பப்பட்டதாக விருக்கிறது. அதே பரமாத்மா இந்த மனத்தில் இருந்துகொண்டு விளங்குகிறார். ஆத்ம ஞானம் என்பது இதுதான். வேற்றுமையானது அக்ஞானத் தினால் ஏற்படுகிறது. ஹ்ருஷீகேசரும் எங்கும் வியாபகரா யுள்ள கோவிந்தரிடம் பக்தி கொண்டவர்கள், பிராண வாயு ஒன்றே ஆயினும் மல நாமங்களுடன் தேகத்தில் எவ்விதம் விளங்குகிறதோ, அதைப்போல பரமாத்மா மயமான பாவனை யுடன் லக்ஷ்மணன் வாழ்ந்து நம் போன்றவர்களை உத்தாரணம் செய்தார். அப்பேற்பட்ட லக்ஷ்மண முனிக்கு ஆயிரம் நமஸ் காரங்கள் செய்கிறேன்.]

அந்த யுத்தத்தில் ஒருவரை யொருவர் ஜயிக்க முடிய வில்லே. ராக்ஷஸர்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட பலமும் மாயையும் அநீதியும் வலுத்து இருந்தது. (தர்மம் ஸங்கீர்ண மாளுல் உலகம் அழியுமென்று நினேத்த) மஹா உரகளுகிற அனந்த பகவான் க்ரோதம் கொண்டு, இந்திரஜித்தின் ரதத்தை உடைத்து, சாரதிகளேயும் நாசம் செய்து, இந்திரஜித்துக்குப் பயத்தை உண்டு பண்ணினுர். (329)

லக்ஷ்மணனுகிற அனந்தபகவான் பலவிதங்களால் அவனே அடித்துத் துன்புறுத்தினுர். (எவ்விதம் வைதண்டத்தில் அனந்தனுடைய மூச்சுக் காற்று சேதனனின்மீது விழுந்ததும், முக்குணங்களும் நீங்கி, சுத்தஸத்வத்தை மாத்திரம் அவன் பெறுவானே,) அதைப்போல ராக்ஷஸனுடைய பிராணனேத் தவிர ஸகலமும் அழிந்தன. மதம், அஹங்காரம் யாவும் அழிக் கப்பட்ட ராவண புத்ரனுகிற மேகநாதன் தனக்குள் நினேக்க ஆரம்பித்தான். ''இனி நமக்கு பிராண ஸங்கடம் இவனுல் நேர்ந்திருக்கிறது. இவன் நம்மை இன்று உயிருடன் திரும்ப விடமாட்டான்.'' (330)

அப்படி யோசித்து, இந்திரஜித் ஒரு பெரிய சக்தி ஆயு தத்தை லக்ஷ்மணன்மேல் பிரயோகித்தான். அந்த சக்தி ஆயு தம் மிக்க தேஜஸ்ஸுடன் லக்ஷ்மணனே மார்பில் தாக்கியது. சக்தி ஆயுதம் லக்ஷ்மணன் மீது விழுந்ததும், அவன் மூர்ச்சை யடைந்தான். அப்பொழுது மேகநாதன், பயத்தை விட்டுவிட்டு லக்ஷ்மணனிடம் அருகே வந்தான். (331)

மேகநாதனுக்குச் சமமாக ஆயிரம் கோடிக் கணக்கான வீரர்கள் லக்ஷ்மணனே எடுக்கப்பார்த்தார்கள். ஜகதாதாரமான சேஷ பகவான், உலகங்களேத் தாங்கி போஷிக்கும் பிரபு ஸ்வயம் லக்ஷ்மணனுக அவதரித்திருக்கும்போது, யாரால் அவரை நகர்த்த முடியும்? முயற்சித்த கணக்கற்ற வீரர்கள் அனே வரும் வெட்கப்பட்டுக்கொண்டு திரும்பினுர்கள். (332)

பார்வதியிடம் பிரபு சிவன் சொன்னுர். ''கிரிஜா, கேள். எங்கேயாவது பிரளய காலத்தில் எவருடைய கிரோதாக்னியின் வேகத்தால் பதினுன்கு புவனங்களும் சகல சராசரங்களும் வெகு சீக்கிரத்தில் அழிவடைகின்றதோ, எவருக்குப் பயந்து ஸுர நரஸமஸ்த சேதனு சேதனர்கள் ஸேவை செய்கின்றனரோ,

அப்பேற்பட்ட மஹா உரகனை, சேஷாசல நாயகனை, யுத்தத்தில் யார்தான் ஜயிக்கமுடியும்?'' (333)

"இந்த மஹத்வமான லீலையின் மர்மத்தை என் பிரபு ஸ்ரீராம சந்திரனுடைய கிருபையை அடைந்த மஹானுபாவன் தான் சரியாக அறிந்து கொள்வான். அவனுடைய கிருபையின்றி பகவானுடைய லீலைகளை அறிய முடியாது.'' ஸந்தியா காலம் வந்ததும் ஸகல சேனை வீரர்களும் யுத்தத்திலிருந்து நிவர்த்தி அடைந்தார்கள். சேனாதிபதிகள் தங்கள் வகுப்பினர்களை கணக்கிட்டுப் பார்த்தனர். (334)

ஸர்வ வ்யாபகர், ஸகலத்தையும் ஸ்ருஷ்டித்த பரபிரும்மம், ஒருக்காலும் ஜயிக்கப்படாதவர், ஒருக்காலும் யாவராலும் அவமானப் படுத்த முடியாதவர், புவனேஸ்வரர், எவருடைய புருவ நெறிப்புக்களால் ஸகல சராசரங்களும் வாழ்ந்து ஒடுங்குகின்றதோ, அந்த ஸர்வேஸ்வரர் ஜகதாதாரர், ஸர்வ நியந்தா, என் பிரபு, பகவான், கருணாகரர் ராமச்சந்திரன், "எங்கே லக்ஷ்மணன்?'' என்று கேட்டார். அவர் கேட்டதற்கு பதில் சொல்லுபவரைப் போல, சிவசக்தியின் ஐக்ய ஸ்வரூபரான ஆஞ்சநேயர், ஆபத்துக்களிலிருந்து பக்தர்களைத் தாண்ட வைக்கும் பிரபு, மஹாவீரர், (விக்ரம சூரர், ராமத்வஜர், கேஸரி நந்தனர், சங்கர பகவானைப்போல தேஜஸ், பலம், பிரதாபங்களைக் கொண்டவர், ஜகத் வந்தன மஹாவீரருமான) ஹனுமார் மூர்ச்சை அடைந்த லக்ஷ்மணனை வாரி அணைத்துக்கொண்டு ஸ்ரீராம ஸந்நிதியில் நிவேதனம் செய்தார். தனது இளைய ஸஹோதரனின் தினஸ்திதியைக் கண்ட பிரபு பரம துக்கமடைந்தவராகக் கதற ஆரம்பித்தார். அவருடைய மானிட சேஷ்டிதங்கள் ஓங்க ஆரம்பித்தன. (335)

[*தியானம்*

நாராயணா, லக்ஷ்மி நாதா, மஹா பிரபு சீதாராமா, பக்தர்களின் சோகத்தை ஹனுமாரைப் போல நீர் போக்குகிறீர். ஒரு சிஷ்யனுக்கு சர்ம தசையில் திருமந்திர சுருக்கு, த்வயம் சர்மஸ்லோகம் ஆகியவைகளை ஆசாரியன் உபதேசிக்கும்போது பகவத் பிராப்திக்கு ஆசார்யனின் திருவடிகளையே உபாயமாகவும், பிராப்தமாகவும் சொல்லுவார்கள். அதுமாதிரி பிரதம

தசையிலும் பகவத் பிராப்திக்கு ஆசார்ய கைங்கர்யமே உபாயம் என்று சொல்லுவார்கள் பூர்வாசார்யர்கள். பகவத் ப்ரீதி, பாகவத கைங்கர்யமாக வளர்ந்து, அந்த பாகவதர்களால் எல்லோருக்கும் ப்ராப்தி பலனுய்க் கொண்டு, கைங்கர்யம் வருகிறுப்போல, சர்ம தசையில் பகவான் ஆசார்ய கைங்கர் யத்தை பிரதமமாக ஸ்வீகரிக்கிறுன். மயர்மற மதி நலமருளப் பெற்றவர்களாய் பிரதம பர்வத்திற் காட்டிலும், சர்ம பர்வத்தில் ஆசார்யனே உபாயம் என்று நிச்சயிப்பது எவ்வித மெனில், கண்ணி நுண் சிறுத்தாம்பில் சொல்லிய பாசுரமே "மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே, தேவுமற்றறறி யேன்," என்று ஸ்வாசார்யரான நம்மாழ்வாருடைய திருவடி களை ப்ராப்யமும் பிராபகமுமாகப் பற்றி, வேறெரு தெய்வ மறியாதவராய் ஒரே நிலையில் நின்று ஆழ்வார்களுடைய படிகளைப் பார்த்து "இவர்களேன் இப்படி பிரதம பர்வத்திலும் சர்ம பர்வத்திலும் தோள் மாறுகின்றனர்" என்று அவர்களைப் பரிஹஸித்திருக்கும் ஸ்ரீ மதுரகவியாழ்வாருடைய வார்த்தை களும், உபாயம் உபேயம் இவையிரண்டிற்கும் உடையவர் திருவடிகளையே என்று பிரதிபத்தி செய்து வடுக நம்பி, கூரத் தாழ்வானையும், முதலியாண்டானையும், சர்மாவதியிலும் ப்ரதமா வதியிலும் கைவைத்து, நிற்கிற இவர்களை இரு கரையென்று சொல்லுவர். பலத்தில் ப்ரதம பர்வமாகிற ஆசாரிய கைங்கர்யம் ; மத்யம பர்வம் பகவத் கைங்கர்யம் ; சர்ம பர்வம் பாகவத கைங்கர்யம் ஆகிய மூன்றுக்கும் ஆசார்ய உகப்புக்க ளாகிற பகவத் கைங்கர்யம், பகவானுடைய உகப்புக்கு உருப் பான பாகவத கைங்கர்யம், பாகவதர்களுக்கு உகப்பாகச் செய்யப்படும் ஆசார்ய கைங்கர்யம் ஆகியவைகளே. அதில் ஆசார்ய கைங்கர்யமே சர்ம பர்வம் என்று ஸாதிப்பார்கள். ஸர்வ ஸ்வதந்தரரான பகவான் பக்தனைப் பிரிந்து ஸம்ஸ்லேஷ சுகத்தை நித்யமாக நடத்தாமல் பிரிந்து பிரிந்து, துக்கத்தை விளைவிக்கிறுன். கடியன், கொடியன், நெடியமால் உலகம் கொண்ட அடியனுகிறுன். ஆகிலும் கொடிய வென்னெஞ்சம் அவனென்றே கிடக்குமெல்லே, அந்த விஸ்லேஷ துககங் களாலே அவனை மேன்மேலும் விரும்பச் செய்யும். பகவா னுடைய அருள் ஒருக்காலும் மாருது என்று பறை சாற்றுவர்

என்கிற உபகார ஸ்மருதி, பாகவதர்களாலும் ஆசாரியர் களாலும் ஏற்படுகிறது. இதற்கு சத்ருக்னே நித்ய சத்ருக்ன ; என்கிறபடி ராம சௌந்தர்யத்தை தனது சத்ருவாக நினைத்து, அதை வென்று பரதானுவர்த்தியைக் கொண்ட அவன் பிரதம பர்வத்திலும், சர்ம பர்வத்திலும் ஆசார்ய கைங்கர்யத்தில் புத்தியைச் செலுத்தினன். அப்பேற்பட்ட ப்ராப்யமாகிறஆசார்ய கைங்கர்யத்திற்கு ஆசார்யனே உபாயமாக ஆகிருன், பிராபக ஞக ஆகிருன். ராமானுஜ நூற்றந்தாதியில் சொல்லியபடி பேறென்று மற்றில்லை நின் சரணன்றி; அப்பேறளித்தற்கு ஆறென்றுமில்லை மற்றச் சரணன்றி, என்று ஆசார்யனே ப்ராப்ய ப்ராபக ஐக்யமாகிருன். ஆசார்யன் ஈஸ்வரனுக்குச் சேஷ வஸ்துவை உபகரித்து, சேதனனுக்குச் சேஷியை உபகரித்து வைக்கிருன். அப்பேற்பட்ட ஆசார்யர்களான ராமானுஜ ஆஞ்சநேயர்களுக்கு நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். அவர்களே என் பிராணன். அவர்களே எனக்கு ஸ்ரேஷ்டர்கள். அவர்களே எனக்கு கண்களைக் கொடுக்கும் ஸுர்யன்; அவர்களே எனக்கு தர்சனம் செய்யும் நாரத குரு ஸ்வாமி. அவர்களே என் முக்திக்குக் காரணம். அவர்களே நாவலர், மறை நலம் புகழும் பெருமையுடன் கொண்ட பிரபன்ன காயத்திரி. அவர்களே திருரஹஸ்யம். அவர்களே எனது ஏகாக்ஷரம். பகவானுடைய அசாதாரண சின்னங்களான திருவாழி, திருச்சங்கு போலவிருக்கும் ராமானுஜா, ஆஞ்சநேயா, உங்கள் பகவத் ஸந்நிதியிலே நான் வாயோலை செய்து பகவானைப் பேணுகிறேன். ஸ்ரீராமன் உங்கள் இருவர்களையும் அணிந்துகொண்டு யிருக்கும்போது அடியேனைக் காத்தருள வேண்டும். திருவாழி திருச்சங்கு மாதிரி ஸ்ரீராமனுக்கு போக்யமாகவிருந்த ராமானுஜா, ஆஞ்சநேயா, பரம போக்யமாக எனக்கு எப்போது ஸேவை சாதிப்பீர்கள்? எம்பெருமான் வைபவத்தைப்போல ஆசார்யர்களின் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்காட்ட வொண்ணுதது. தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த விதத்தாய் இராமானுஜன்" என்று அருளினுர் பிரபன்னகாயத்திரியைப் பணித்த திருவரங்கத்தமுதனுர். நம்மாழ்வார், நாத முனிகள் நாரதர் வியாஸாதிகளைப்போல

தியாகராஜர், துளசிதாஸர், வால்மீகி, கம்பன் ஆகியவர்களைப் போல அல்லவா என் ஆசார்யர்கள் எனக்கு விளங்குகிறார்கள்.]

ஜாம்பவன் சொல்ல ஆரம்பித்தார். "லங்கையில் ஸுஷேணன் என்கிற வைத்தியன் இருக்கிறான். அவனை அழைத்து வருவதற்கு யாரை அனுப்புகிறீர்கள்?" அதைக் கேட்ட ஹனுமார் மிகச் சிறிய ரூபத்தைத் தரித்துக் கொண்டு ஸுஷேணனை வீட்டோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து விட்டார். (336)

ஸுஷேணன் ராமனுடைய பாதார விந்தங்களில் நமஸ்கரித்தான். அவன் பகவானிடம் பர்வதத்தின் பெயரையும் ஓஷதியின் பெயரையும் சொன்னான். மேலும் தொடர்ந்து அவன் சொன்னான், "பவனபுத்ரா, ஓஷதியை நீ சீக்கிரம் எடுத்துவா." (337)

ஸ்ரீராமனுடைய சரண கமலங்களில் விழுந்து நமஸ்கரித்து விட்டு, "இதோ நான் கொண்டு வருகிறேன்," என்று சொல்லி, பவனபுத்ரனாகிற ஹனுமான்ஜி புறப்பட்டுச் சென்றார். அவர் போன காரியத்தை ரகசியமாக அறிந்து கொண்டான் ஒரு ராக்ஷஸ தூதன். ராவணனிடம் அவன் எல்லாவற்றையும் சொன்னான். அதைக் கேட்டதும் ராவணன் கால நேமியின் வீட்டிற்கு வந்தான். (338)

தசமுகன் சகல கார்யங்களின் மர்மங்களை கால நேமியிடம் சொன்னான். அதைக் கேட்ட கால நேமி அடிக்கடி அடிக்கடி தனது தலையில் அடித்துக் கொண்டான். "உன் ராஜ்யத்தில் நீ இருக்கும் போதே எந்த வானரம் நெருப்பை வைத்ததோ, அந்த வானரத்தை யாரால் தடுக்க முடியும்? அவனுடைய மார்க்கத்திற்கு யாரால் விக்னம் செய்ய முடியும்?" (339)

"ராவணா, நான் சொல்வதைக் கேள். ரகுபதியை நமஸ்கரித்து, பஜித்து வா, அதுதான் உனக்கு ஹிதமான வழி. என் ப்ரியனே, உனது பிடிவாதத்தை விட்டு விடு. உன் மூடப் பேச்சுக்களையும் விட்டு விடு. உனது நேத்ரங்களை ஆனந்தப் படுத்தும் நீல கமல புஷ்பத்திற்குச் சமமான அழகான ஸ்யாம நிறம் கொண்ட ஸ்ரீராமனை பரிபூர்ண லோசனங்களால் ஆனந்தப்பட்டு, ஹ்ருதயத்தில் தரித்துக் கொள்." (340)

"ராவணா, "நான்," என்கிற அபிமானத்தையும், மமகாரத்தையும், அக்ஞானமாகிற மூர்க்கத்தனத்தையும், தியாகம் செய்.

மஹா மோகத்தை அடையாதே. காளராத்திரியாகிற பேத பாவத்தையும், பிணக்குதலுடன் கூடிய அக்ஞானத்தையும் விட்டு முழித்துக்கொள். கால ரூபியாகிற சர்ப்பத்தை முழுங் கும் நீல லோஹிதரிடம் நீ போட்டி போட்டு ஸ்வப்னத்தில் கூட ஜயிக்கலாம், என்று நினைக்காதே. வீணாக மனக் கோட்டை கட்டிக் கொண்டு உயிரை இழக்காதே.'' (341)

[ *தியானம்*

நாராயணா, சீதாராம, மஹாலக்ஷ்மி சகித தீர்த்த நாரா யணா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீமதே சீதா ராமசந்திராய நம: ராமா, ரமாரமணா, என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். உனது கருணையில்லாவிடில் என்னால் வாழ முடியுமா? என்னிடம் கஜேந்திரன், திரௌபதி இவர் களிடம் நீ காட்டிய பரபரப்பையும், ஸுமுகனிடம் காட்டிய உதார மனத்தையும், அம்பரீஷ, பிரஹ்லாத, தியாகராஜர் இவர்களிடம் காட்டிய மாத்ரு ஸ்நேகத்தையும், தீக்ஷிதர், நாரத, ஆஞ்சநேயர் முதலியவர்களிடம் காட்டிய பித்ரு ஸ்நேகத்தையும் காண்பிக்க மாட்டாயா? மல்லிகைப்பூ எங்கேயாவது கல்லைத் தூக்குமா? ராமா, சீதா, நீங்களே பதில் சொல்லுங்கள். வெள்ளரிப் பிஞ்சு இரும்பு விலங்கைத் தாங்குமா? பிரபு, கிளிக்கும், குயிலுக்கும் யாராவது பிரும்மாஸ்திரம் போட் டுத்தான் கொல்ல வேண்டுமா? உங்கள் நினைவு, உங்க ளுடைய ஆராதனம், உங்களுடைய ப்ரீதியை உத்தேசித்தே பரமப் ப்ரயோசனமாக வாழ்ந்து வந்திருக்கிறேனே? இன்னும் எவ்வளவு காலம் எனது பொறுமையைச் சோதிக்கப் போகிறாய்? ராஜவர்ய சரண தியாகராஜ தீக்ஷிதர் ஆஞ்சநேய வினுத சரண, ஹரே ராமா, ஹே சீதே, உங்களுடைய மலரடிகளை நான் ஆயிரம் நாமாக்களுடன் நமஸ்கரிக்கிறேன். கமலஜாதா, நீதானே அம்மா பகவானுடைய கருணை. என்னிடம் ஆவிர் ப்விக்கமாட்டாயா? அம்மா, நீதானே பகவானுடைய பக்த அகண்டைக ரஸம். கிளியைக் கையில் வைத்துக் கொண் டிருக்கும் சீதே, என் காமாக்ஷி, அகசட தபாதி எழுத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட ஸாரதே, பஞ்ச பூதங்களும் உன்னுடைய அம்சமாயிற்றே. பரிபூர்ணே, ஹே உமா, சுந்தரி, மாயையை

வென்றவள் நீதானே. ஸகல லோக நாயகி, உனது பிரபாவத்தால் அல்லவோ சகல பக்தர்களும் க்ஷேமத்தை அடைந்து பரிபூர்ணராக விருக்கிறார்கள். வரதே, சிவே, எனது பாபங்களைப் போக்குபவளே, ஆஸ்ரித கல்ப தருவே, உன்னை அண்டினவனுக்கு மோக்ஷம் கூட ஸர்வ ஸாதாரணம் அம்மா. அழகிய சிகப்பு பட்டாடை அணிந்த என் மனோன்மணி, சங்கீத ரஸிகே, சண்டிகே, என்னைக் காப்பாற்று. கருணார்ணவே, ராஜயோகத்தின் ஆனந்தத்தை அனுபவிக்கும் திரிபுர ஈஸ்வரி, நாராயணி, என்னைக் காக்கவேண்டியது உன் பொறுப்பு. சீதாராம ரஸாயணம் என்கிற பக்தி தாஸ்ய ரஸம் கொண்ட ஜானகி புத்ரனை ஹனுமான்ஜியை புரம் வைத்து நமஸ்கரிக்கும் என்னிடம் நீ கருணை செய்.]

காலநேமியின் வார்த்தைகளைக் கேட்ட ராவணன் அதி க்ரோதமடைந்தான். அவனுடைய கோபத்தைப் பார்த்த காலநேமி தனக்குள் எண்ணமிட்டான். "ராவணன் தன்னைக் கொன்று விடுவான். இலங்கையில் இறப்பதைவிட ராமனுடைய தூதனின் கைகளால் இறப்பதே மேல். இது ராமனுடைய ஸங்கல்பம் போலிருக்கிறது. இவனோ பரம துஷ்டன். பாபக் கூட்டங்களால் சூழப்பட்டவன். (342)

இவ்விதம் எண்ணிக்கொண்டு, காலநேமி ராவணன் சொன்ன காரியத்தை நிறைவேற்றுவதற்கு புறப்பட்டான். எங்கு பார்த்தாலும் மாயையை உண்டுபண்ணி, ஹனுமான்ஜியின் மார்க்கத்தை மறைத்தான். அவனுடைய மாயையினால் எங்கு பார்த்தாலும் குளம் குட்டைகள், அழகான நந்தவனங்கள் உபவனங்கள் தோன்றின. கோவில்களும், ஆஸ்ரமங்களும் உண்டாயின. இவைகளைப் பார்த்த ஹனுமான்ஜி, மாருத ஸுதன், ஆச்சரியப் பட்டுக்கொண்டு, இந்த ஜலத்தைக் குடித்து, சிறிது இளைப்பாறிவிட்டு மீண்டும் புறப்படலாம் என்று எண்ணினார். (343)

அதற்கேற்றாற்போல், சில ராக்ஷஸர்கள் முனிகளின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அங்கிருந்தார்கள். அந்த மூர்க்கன் ஸர்வ மாயைகளுக்கும் அதிபதியாகவிருக்கும் ஸ்ரீராமனுடைய தூதனை மோஹம் செய்ய நினைத்தான். மாருதி அவனிடம் சென்றார். அவன் ஹனுமான்ஜியிடம் ஸ்ரீராம

னுடைய குணங்களைப் பாடிப் புகழ ஆரம்பித்தார். (344)

காலநேமி சொன்னான், "ராமனுக்கும் ராவணனுக்கும் கொடிய யுத்தம் ஏற்படப் போகிறது. அதிலே ராமனே ஜயித்து விடுவார். சந்தேகமே இல்லை. என் பிரிய ஸஹோதரனே, நான் எனது ஆத்ம பலத்தினால் நடக்கப் போவதை நன்கு அறிவேன். ஞானதிருஷ்டியின் பலத்தினால் நான் எல்லா வற்றையும் அறிகிறேன்." (345)

ஹனுமான்ஜி தனக்குத் தாகத்திற்காக அவனை ஜலம் வேண்டினார். முனி வேஷத்தைத் தரித்த காலநேமி தனது கமண்டலத்தைக் கொடுத்தான். "இந்த ஜலம் எனக்குப் போதாது; என் தாகம் இதனால் சமனம் அடையாது" என்று ஹனுமான்ஜி சொன்னார். அப்பொழுது காலநேமி சொன்னான் :- "அப்படியானால் இந்த குளத்தில் நீராடிவிட்டு, சீக்கிரம் வா. நான் உனக்குத் தீக்ஷை அளிக்கிறேன். அதனால் உனக்கு ஞான திருஷ்டி யேற்படும்." (346)

ஹனுமான்ஜி குளத்தில் பிரவேசித்தார். அப்பொழுது ஒரு பெண் முதலை அவருடைய காலைப் பிடித்தது. ஹனுமான்ஜி அதைப் பிடித்துக் கொன்றார். அந்த முதலை இறந்ததும், ஒரு திவ்யமான ஸ்திரீ ஆகாயத்தில் கிளம்பி ஹனுமான்ஜியைப் பார்த்துச் சொன்னாள். (347)

"வானரமே, உன்னுடைய புண்ய தர்சனத்தால் நான் நிஷ்பாபமாக்கப்பட்டேன். என் பிரியனே, எனக்கு முனிவர்க ளால் கொடுக்கப்பட்ட சாபமும் உன்னால் அழிந்தது. வான ரமே, உன்னால் நான் புனிதமாக்கப்பட்டேன். என் வார்த் தையைக் கேள். நான் ஸத்யத்தை உனக்குச் சொல்கிறேன். இங்கே காணப்படும் முனி நிஜமான முனியில்லை. அவன் ஒரு ராக்ஷஸன்." (348)

இவ்விதம் சொல்லிவிட்டு, அந்த அப்சரஸ் மறைந்து விட்டாள். அதற்குப் பின் ஹனுமான்ஜி ராக்ஷஸனிடம் சென் றார். ஹனுமான்ஜி சொன்னார். "ஹே முனி, உனக்கு முதலில் நான் குரு தக்ஷிணை கொடுக்க வேண்டும். அதற்குப் பின் நீ எனக்கு மந்திரம் கற்றுக் கொடு." (349)

அவ்விதம் சொல்லிவிட்டு, என் பிரபு ஹனுமான் (கதமாயன், அம்பிகையின் அருள் பெற்றவன், ஞான பாஸ்கரன்,

என் தீப்த மூர்த்தி) தனது வாலினால் அந்த ராக்ஷஸனை இறுகக் கட்டி அவனது தலையை பூமியில் அடித்தார். காலநேமி இறந்து விட்டான். அப்போது அவன் தன்னுடைய ஸ்வய ராக்ஷஸ உருவத்தை பிரகடனப் படுத்திக்கொண்டு கீழே விழுந்தான். அவன் மரிக்கும் சமயம், "ராம், ராம்" என்று சொல்லிக் கொண்டு தனது பிராணனை விட்டான். ஹனுமான்ஜி சந்தோ ஷத்துடன் அந்த ராம சப்தத்தைக் கேட்டுக்கொண்டு தனது பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினார். (350)

ஹனுமான்ஜி குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று ஓஷதி பர்வதத்தைத் தேடினார். அவருக்கு அந்த மணிமந்த்ர ஔஷதம் சுலபமாகப் புலப்படவில்லை. அவருடைய ஸ்வபாவத்திற்கு ஏற்ப, அவர் அந்த ஓஷதி மலையை அடியோடு பெயர்த்துக் கொண்டு தனது பிரயாணத்தைச் செய்தார். அந்த ஓஷதி மலையை கரங்களில் தாங்கிக்கொண்டு, ஸர்வ வியாதிகளைப் போக்கும் எனது சிந்தாமணி தெய்வமாகிற ஆஞ்சநேயர் இரவு நேரத்தில் ஆகாய மார்க்கத்தில் சஞ்சரித்துக்கொண்டு அயோத்யாபுரியின்மேல் பறந்து வந்துக்கொண்டிருந்தார். (351)

பரதன் அப்பொழுது ஹனுமான்ஜியின் பெரிய உடலைப் பார்த்து, "இது ஒரு ராக்ஷஸனாகவிருக்கக்கூடுமோ," என்று மனதில் எண்ணங்கொண்டு, தனது வில்லை எடுத்தான். காது வரையில் நாணை யிழுத்து, சிரஸ் இல்லாத ஒரு பாணத்தைப் பிரயோகித்தான். (352)

பாணம் ஹனுமான்ஜியின் மார்பு பிரதேசத்தில் விழுந்தது. ஹனுமான்ஜி, "ராம், ராம்" என்று சொல்லிக்கொண்டு முன கிக்கொண்டு மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்தார். தனக் குப் பிரியமான ரகுநாயகனுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டு கீழே விழுந்த ஹனுமான்ஜியை பரதன் அதி வியா குலத்துடன் ஓடிப் போய் எழுப்பி, அவரை ஆஸ்வாசப்படுத்தி, உயிர் நிலைக்குக் கொண்டுவர யத்தனித்தான். ஆனால் அவ னுடைய முயற்சி பலனளிக்கவில்லை. அதனால் அதி வியாகுலம் அடைந்தவனாக கண்களில் நீர் மல்க, பரதன் கைகளை அஞ்சலி பந்தம் செய்துக்கொண்டு வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித் தான். (353)

"நான் ஒரு ராம பக்தன் என்பது நிஜமாக இருந்தால்,

நான் சீதாராமனை எந்த சமயத்திலாவது அவமரியாதையுடன் பேசாமல் இருந்திருப்பேனாகில், அந்த பிரபு என்னையும் இந்த வானரத்தையும் மஹா துக்ககரமான ஆபத்திலிருந்து காப்பாற்றட்டும். என்னுடைய மனம், வசனங்கள், கர்மங்கள் யாவும் ராம ப்ரீதிக்காக செய்யப்பட்டிருந்தால், எனக்கு ஸ்ரீமத் ராகவனுடைய சரண பாதங்களில் கபடமின்றி நிஜவாத்ஸல்யம், பக்தி ஆகியவை ஏற்பட்டிருக்குமாகில், (354)

என் பிரபு ஸ்ரீரகுபதி என்னிடம் அத்யந்த ஸ்நேகம் கொண்டு பரம ப்ரியனாக விருக்கிறார் என்பது ஸத்தியமானால், இந்த வானரம் என்னால் செய்யப்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு உயிர் வாழட்டும்,'' என்று பரதன் பிரார்த்தித்துக் கொண்டான். கபீஸரான ஹனுமான்ஜி அந்த வார்த்தைகளைக் கேட்டார். சிரமம் நீங்கியவராக அவர் எழுந்து உட்கார்ந்தார். "ஜய ஜய கோஸலாதீஸா, ராமனுக்கு ஜயமங்களங்கள் ஏற்படட்டும்'' என்று சொல்லிக்கொண்டு ஹனுமான்ஜி எழுந்து உட்கார்ந்தார். (355)

பரதன் வானரத்தை சந்தோஷத்தினால் தழுவிக் கொண்டான். அவனுடைய சரீரம் புளகாங்கிதமடைந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர்கள் உதிர்ந்த வண்ணமிருந்தன. ரகுகுலதிலகன் ஸ்ரீராமசந்திரனுடைய கிருபையையும் அவருடைய ஸங்கல்பத்தையும், மன ப்ரீதியையும் ஸ்மரித்துக் கொண்டு பரதன் வெகு ஆனந்தமடைந்தான். (356)

பரதன் சொன்னான்:—"பிரியனே, இளைய தம்பியாகிற லக்ஷ்மணனுடன் கூடியவரும், ஜகன்மாதாவும் எனக்கு ஸதா அனுஸரணையாக விருக்கும் ஜானகியும், சகலருக்கும் சுகத்தை வாரி அளிக்கும் வள்ளலாகிற என் பிரபு ஸ்ரீராமசந்திரன் சௌக்யமாக விருக்கிறார்களா? அவர்களுடைய க்ஷேம சமாசாரங்களை விபரமாகச் சொல்,'' ஹனுமார் சகல விருத்தாந்தங்களை ஸங்க்ஷேபமாக எடுத்துச் சொன்னார். அவைகளைக் கேட்ட பரதன் பரம துக்கம் கொண்டு அழ ஆரம்பித்தான். (357)

"ஹா, தேவ, நான் ஏன் இந்த உலகில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்? என் ஜன்மம் வ்யர்த்தம். என்னால் என் பிரபுவுக்கு ஒருவிதமான கைங்கர்யமும் செய்யப்படவில்லை,

என்று வருத்தப்பட்டுக் கொண்டு பரதன் சோகப்பட்டான். அதற்குப் பின்பு சமயத்தை அறிந்து "இது வருத்தப்படுவதற்கும், கால தாமதம் செய்வதற்கும் சரியான நேரமில்லை," என்று நினைத்து, தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தான். பிறகு தைர்யத்துடன் ஹனுமான்ஜியினிடம் பரதன் சொல்ல ஆரம்பித்தான். (358)

"பிரியனே, நீ புறப்பட்டுப் போவதற்குள் கால தாமதம் ஆகிவிடும். காரியமும் கெட்டுவிடும். இப்பொழுது காலை நேரம் வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் ஒஷதி பர்வதத்துடன் நீ என் அஸ்திரத்தின் மேல் ஏறி அமர்ந்து சவாரி செய்து கொண்டு, ஸ்ரீ ராமனிடம் உடனேயே செல். நான் உன்னை இந்த பர்வதத்துடன் கூடியவனாக கிருபா நிகேதனாகிற ஸ்ரீராமன் இருக்குமிடத்திற்கு இந்த அஸ்திரத்தினால் அனுப்பி வைக்கிறேன்," என்று சொன்னான். (359)

*[தியானம்*

நாராயணி, மஹாலக்ஷ்மி அம்மா, உன்னை நாராயணன் ஸந்நிதியில் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ராமனுக்கு பிரிய பத்னியாகிற சீதே, நீதானே ஆனந்தபைரவி. திரிபுராரி உமா ஆகியவர்கள் சந்தோஷப்படும் ராகினி நீதானே. காள ராத்திரி, கண்டிதா, காயத்திரி, கண்டாகர்ஷிணி, ஜ்வாலா, சண்டா, சாயா, ஜயா, ஜங்காரிணி, ஞான ரூபா, டங்க ஹஸ்தா, டங்காரிணி, ஆகிற பன்னிரண்டு சக்திகளின் கூட்டத்தால் சூழப்பட்டு, என்னுடைய அனாஹத கமலத்தின் பன்னிரண்டு தளங்களில் வீற்றிருப்பவளே, உன்னை திஸ்ர ஜாதி திரிபுடை தாளத்தினால் ஆனந்தக் கீர்த்தனம் செய்து ஆனந்திக்கிறேன். மஹாதேவி, பிரஹ்லாதனுக்கும் இந்திரனுக்கும் வரமளித்தவளே, உன்னை என் ஹ்ருதய கமலத்தில் தாங்கி, "கமலாம்பா, என்னை ஸம்ரக்ஷி", என்று சொல்லி அழைக்கிறேனே. என்னிடம் உனது கிருபையை வர்ஷிக்க மாட்டாயா? பரமேஸ்வரி, சித்தேஸ்வரி, உன்னை மந்தாரம் பாரிஜாதம் துளசி பில்வாதிகளால் அர்ச்சித்து, சுகந்த பரிமள வஸ்துக்களால் ப்ரீதி செய்கிறேனே. சுந்தரமான மனதுடன் என்னைப் பிரகாசப் படுத்தமாட்டாயா? என் மன இருள் அகல உனது கமல

ஜானந்த போத முகத்தை, நான் எப்போது பார்ப்பேன்? நாரா யணனை காந்தனாகவுடைய ஆதிசக்தி தேவதையே, என் மனதிலும் நாராயண மனத்திலும் ராமனுடைய ஹ்ருதயத்திலும் தீக்ஷிதா தியாகராஜ துளசி தாஸரின் ஹ்ருதயக் கூண்டிலும் கிளியைப்போல அடைபட்டுக் கிடக்கும் ரமா தேவியே, நீதானே திரிபுராரி வணங்கும் சக்ரேஸ்வரி. நீதானே அணிமாதி சித் திகள். நீதானே ஆராதிக்கத் தகுந்த நித்ய காமேஸ்வரி. உன்னை ஆராதித்தால்தானே திரை லோக்யம் முழுவதும் ஆரா திக்கப்பட்டதாகும். ராவணன், மஹிஷாசூரன், சும்பன் நிசும் பன் முதலியவர்களை ஸங்கல்ப மாத்திரத்தில் மரிக்கச் செய்த பிரகட யோகினி, என்னிடம் தயையுடன் இருப்பாய் அம்மா. சுரர்களின் எதிரிகளை அழிக்கும் பராசக்தியே, விப்ரப்ரியே, நீதானே அம்மா நிகம ஆகம புராணங்களுக்கு மூலாதாரம். திரிபுரசுந்தரி, மஹேஸ்வரி, உன்னை மனு, லோபாமுத்ரையினால் உபாஸிக்கப்பட்ட காதி வித்யையாலும், அகஸ்தியர், குபேரன், விஷ்ணு ஆகியவர்களால் உபாஸிக்கப்பட்ட ஹாதி வித்யை யாலும், நான் தாயிடம் பக்தியுள்ள புத்ர பாவத்தால் உபாஸிக் கிறேன். சக்ரேஸ்வரி, பிறைச் சந்திர கலாதரி, என் பக்திக்கு வசப்பட்டு பிரியமாகவிரு அம்மா. நீதானே பிரணவமாகிற ஏகாக்ஷரி. ஹ்ரீம் என்கிற பீஜ மந்திரத்தில் ஆராதிக்கப்படும் புவனேஸ்வரி. என்னை சுகத்தை அடையச் செய் அம்மா.]

பரதனுடைய வார்த்தைகளை ஹனுமான்ஜி கேட்டு தனக் குள் சிரித்துக் கொண்டார். [தனது பலத்தில் மிக்க அபிமானம் கொண்டவராக,] என்னை, என்னுடைய சரீரத்தை பரதனுடைய அஸ்திரம் எவ்விதம் தாங்கும்,? என்று எண்ணமிட்டார். (சீதை யின் அனுக்ரஹத்தால் ஏற்பட்ட மஹா கிருபையினால் அவ ருடைய அக்ஞானம் சிறிது நேரத்தில் விலகியது. ஆதிசக்தி தேவதை, ராம கிருபை ஆகியவற்றால் அல்லவோ ஸகல பிரபஞ்சம் முழுவதும் நடைபெறுகிறது. சீதையின் பலத்தினால் ராம பிரபாவங்கள் ஓங்குகின்றன. யார் இதை அறிய முடியும்?) அவர்களுடைய திருவிளையாடல்களை, ஸங்கல்பங்களை யாரால் அறிய முடியும்? என்று விரைவில் விவேக ஞானமடைந்தவராக ஆஞ்சநேயர் பரதனுடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்து, அஞ்சலி பந்தத்துடன் வார்த்தைகளைச் சொன்னார். (360)

"நாதா, பிரபோ, உம்முடைய அனுக்ரஹ உள்ளத்தை என் மனதில் தரித்துக்கொண்டு நான் செல்வேன். சீக்கிரமாகவே அடைந்து விடுவேன்," இவ்விதம் சொல்லிவிட்டு ஆஞ்சநேயர் பரதனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். (361)

பரதனுடைய பாஹுபலம், தமம் முதலிய சீல குணங்கள், பிரபுவினுடைய சரணங்கள், சீதையின் அபார காருண்ய பிரேமை விலாஸங்கள் எல்லாவற்றையும் ஸ்மரித்துக்கொண்டு (என் பிரபு சதாசிவனுகிற) ஹனுமான்ஜி சென்று கொண்டிருந்தார். ["ஹே சங்கடஹர ஹனுமான்ஜியே, நீதான் எங்களை ஸர்வ ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். பக்ஷீஸ் வரனுகிய ஸுபர்ணரைப் போல பறந்து செல்லும் ஆஞ்சநேயா, கைகட்டி அடங்கிய மனத்துடன் நமஸ்கரிக்கும் என்னை ஸதா ஸம்ரக்ஷிக்க வேண்டும்."] (362)

அங்கே லங்கையில் லக்ஷ்மணனுடைய தீன ஸ்திதியைக் கண்டு என் பிரபு, ராமன் சாதாரண மனிதனைப் போல சோகம் கொண்டு விலலாபித்தார். "ஹா, என் அருமைத் தம்பியே இரவோ கழிந்து விட்டது. ஹனுமான்ஜியும் வந்து சேர்ந்த பாடில்லை. நான் என்ன செய்வேன்?" என்று வருத்தப்பட்டுக் கொண்டு லக்ஷ்மணனை வாரி எடுத்து, தனது ஹ்ருதயத்துடன் (சீதையை வக்ஷஸ்தலத்தில் கிளியைப் போல கூட்டில் அடைத்து வைத்திருக்கும் என் மாயாதிபதி) ஸ்ரீராமன் அணைத்து உச்சி மோந்தார். (363)

"அடே தம்பி, லக்ஷ்மணு, மஹாத்மாவாகிய உன் உள்ளம், நானும் சீதையும் ஒரு நிமிஷங்கூட வருத்தப்படுவதைக் கண்டு சகிக்காதே. அப்பேற்பட்ட பிராண பந்துவல்லவோ நீ. என்னிடமும் சீதையிடமும் ஸதா ம்ருதுள ஸ்வபாவத்துடன் மஹா அனுகூலனுக, தாஸ்ய கிங்கரனுக எனக்கும் என் தேவிக்கும் இருந்தாயே. ('சென்றால் குடையாம், இருந்தால் சிம்மாஸனமாம் என்கிறபடி) லக்ஷ்மணு, எங்களுடைய ஹிதத்திற்காக ராஜ்ய போகங்களை விட்டுவிட்டு, பிதா மாதா என்கிற பிறந்த ஸம்பந்தத்தையும் உதறித் தள்ளிவிட்டு, எங்களுடன் வனம் வந்து, எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட தாபங்களை ஸகித்துக் கொண்டு, கடும் வெயில், மழை, பணி, காற்று, இரவு, பகல்

இன்னும் எத்தனையோ, ஸங்கடங்களைப் பொறுத்துக் கொண்டு எங்களுக்கு இன்பம் அளித்தாயே. லக்ஷ்மணா, என்னுடைய ஆத்ம பந்துவே, உன்னை நான் பிரிந்து எவ்விதம் வாழ்வேன்?'' (364)

''என் அருமைத் தம்பி, எங்களிடம் நீ காண்பித்த அந்த நிரதிசய ப்ரேமை அன்பு இப்போது எங்கே போய்விட்டது? நான் கதறும் போது நீ பேசாமல் கேட்டுக் கொண்டிருக்கிறாயே. மூர்ச்சையிலிருந்து பிழைத்து எழுந்திருக்கமாட்டாயா? எனது பிரிய வசனங்களைக் கேட்டும் எழுந்திருக்கமாட்டாயா? இவ்விதம் என்னை விட்டு நீ பிரிந்து போவாய் என்று நான் நினைத்திருப்பேனாகில், நான் பிதாவின் வசனத்தைக் கேட்டிருக்கவே மாட்டேன். உனக்கு இவ்விதமான அவகதி ஏற்படும் என்று நான் தெரிந்து கொண்டேனாகில், நான் பிதாவின் வசனப்படி வனம் வந்திருக்கவே மாட்டேன். நான் வனம் வந்ததால் அல்லவோ, சீதையையும் தம்பியையும் இழந்து விட்டேன்?'' (365)

''புத்ரன், தனம், ஸ்திரி, வீடு வாசல், பரிவாரங்கள், ஜகத்தில் மனிதனுக்கு அடிக்கடி ஏற்பட்டு நஷ்டமடைகின்றன. ஆனால் இந்த ஜகத்தில் சகோதரர்கள் சகோதரிகள் அடிக்கடி ஏற்படுகிறதில்லை.'' இவ்விதம் பிரபு நினைத்துக் கொண்டவராக மீண்டும் கதற ஆரம்பித்தார். (366)

''லக்ஷ்மணா, நான் உன்னை விட்டு அரை நிமிஷம் பிரிந்து வாழ முடியுமா? (பிராட்டியை விட்டுப் பிரிந்து பெருமாள் பத்து மாதம் ஆறியிருந்தார். பிற்பாடு பத்தாயிரம் ஆண்டுகள் பொறுத்து இருந்தார். ஆனால் இளைய பெருமாளைப் பிரிந்து பகலமுதைச் செய்திலர்,'' என்று பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்தபடி,) என் பிரபு ராமன் மீண்டும் சொன்னார் ''லக்ஷ்மணா, என்னைப்பார். பக்ஷி இரக்கைகள் ஒடிந்து போனால் எவ்விதம் தவிக்குமோ, அதைப் போல உன்னை விட்டுப் பிரிந்த நான் கஷ்டப்படுவதைப் பார். ஸர்ப்பம் நாகமணியை இழந்த பின்பு உயிர்தரிக்குமா? தும்பிக்கையில்லாத போனால் ஸ்ரேஷ்டமான யானை தன்னை மிக துச்சமாக எவ்விதம் நினைக்குமோ, அதைப் போல தீனஸ்த்தியை அடைந்த என்னைப்பார். என்னிடம் அகண்ட ஏக ரஸ பக்தி தாஸ்யம் கொண்ட பிரிய லக்ஷ்மணா,

என்னை விதி உன்னை விட்டுப் பிரிந்து வாழவைக்க வேண்டும் என்று கொடூரமான எண்ணத்துடன் இருந்ததோ, நான் சக்தி ஆதாரமற்று ஜடமாகவும், நடைப் பிணமாகவுமிருப்பேன். இதைத் தெரிந்து கொண்டு, என்னை முழித்துப் பார்." (367)

"எனது ஸ்திரியைத் தேடிக் கொண்டு போய், என் அருமைத் தம்பியை இழந்து விட்டேனே. பிரியனே, நான் எந்த முகத்துடன் உன்னை இழந்து விட்டு அயோத்திக்குத் திரும்புவேன்? சுமித்திரையிடமும், பரதனிடமும், என் மாதாவான கௌஸல்யையிடமும் நான் என்ன ஆறுதல் சொல்லுவேன்? எனக்கு மனைவியை இழந்தவன் என்கிற அபயசஸ் வந்து விட்டுப் போகட்டும். எனக்குப் பரவாயில்லை. ஸ்திரியை இழப்பது கூட எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. பிரபு லக்ஷ்மணனுடைய பரம உபகாரங்களை நினைப்பவராக, மஹா கிருதக்ஞையை அடைந்தவராக மீண்டும் கதற ஆரம்பித்தார். (368)

"ஹே லக்ஷ்மணா, எனக்கு வயது காலத்தில் பெற்றோர்களுக்குச் சேவை செய்யும் ஸத் புத்ரனைப்போல விருந்தாயே. என்னுடைய ஹ்ருதயம் நிச்சயமாகவே நிஷ்டூரமானதும், இரும்பைப்போல கடினத்வம் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். உனது பிரிவை சகித்துக்கொண்டு வாழ விரும்புகிறேனே, இன்னும் எனது மனம் வெடித்துப் போகவில்லையே. என் பிரிய மனைவியை இழந்தது ஒரு பக்கம், என் பிரிய சஹோதரனையிழந்தது மற்றொரு பக்கம். இந்த இரு துக்கங்களால் வாட்டப்படும் எனக்கு எவ்விதம் சுகத்தின் எல்லையை அடையக்கூடும்? பிரிய புத்ரனே, உனது தாயாருக்கு நீ பிரியமான ஏக புத்ரனைப் போல விருந்தாயே. அவளுக்கு என்ன ஆறுதல் நான் அளிக்கக் கூடும்? [பிரபு, தன்னிடம் அனன்ய பக்தி, அனன்ய கதியாகப் பிரேமை செலுத்தி வாழ்ந்து வந்த லக்ஷ்மணனுடைய நிரதிசய அனன்ய சரணத்வம், அனன்யார்ஷ சேஷத்வத்தை நினைத்துக் கொண்டவராக மீண்டும் கதற ஆரம்பித்தார்."] (369)

"லக்ஷ்மணா, நீ போய்விட்டால் எனது ஸர்வ சுகங்களும் போய்விட்டதப்பா? என்னுடைய பரம ஹிதகாரி நீ என்று நான் உன்னைத் தெரிந்து கொண்டும், இப்போது உன்னை விட்டுப் பிரிந்தமையால், நான் இனி யாருக்காக வாழவேண்டும்? என்னைவிட உனக்குச் சிறந்த ஹிதகாரி வேறு யாருமில்லை

என்று நினைத்த உன் தாயார், நாம் வனம் செல்லும் சமயம், உனது கைகளைப் பற்றிக்கொண்டு, "லக்ஷ்மணா, ராமனே உனக்கு மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று சொல்லி, உனது க்ஷேமப் பொறுப்புகளை என்னிடம் ஒப்பிவித்தாளே. அப்பேற்பட்ட உனது தாயாருக்கு நான் என்ன பதில் சொல்வேன்? ஹா தெய்வமே, என்னை இவ்விதம் சோதிக்கலாமா? இது தர்மமா? என் பிரிய தம்பி, இதோ பார். உன்னை விட்டுப் பிரிந்து கதறும் உன் பிரிய ஜகத் ராமனை எழுந்திருந்து பார்க்க மாட்டாயா? மஹா விரதனே, வேத நிதியே, அனந்தனே, மஹா உரகனே, [சித்த புருஷர்களால் சூழப்பட்டிருக்கும் மஹாத்மாவே, என்னை முழித்துப் பார். ஆயிரம் தலைகளைக் கொண்ட ஸதா சிவனே,] [ஜகந்நாதராகிய] என்னைப் பார்க்க மாட்டாயா? (370)

[*தியானம்*

என் ஹ்ருதயத்தில் ராஜ பீடத்தில் அஷ்ட தளத்தில் வீற்றிருக்கும் ஸம்க்ஷோபன சக்தியாக வீற்றிருக்கும் காமேஸ்வரி, அனந்தன், ராமன் முதலியவர்களால் ஸேவிக்கப்படும் நாராயணி, சீதாதேவி, எனக்கு உமா மஹேஸ்வரர் தத்வமாகவும் பிராட்டியுடன் கூடிய பெருமாள் தத்வமாகிற உங்களை நான் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். அனங்கனை உண்டு பண்ணிய கமலாம்பா, நீதான் என்னை ஸம்ரக்ஷிக்க வேண்டும். நீதானே சச்சிதானந்த பரிபூரணி. பாகசாஸனன், பிரும்மா முதலியவர்களால் ஸேவிக்கப்படும் மஹாலக்ஷ்மி, உன்னால் மாயை நிர்மிதம் செய்யப்படுகிறது. உனது அனுக்ரஹம் கிடைத்த மஹா பாக்யவான் மாயையிலிருந்து விடுபடுகிறான். ஹே சிவ சஹிதே, கமலா வாணி ஸேவித உமா மஹேஸ்வரி, அழகிய கம்புக்ரீவமுள்ளவளே, கமலாபுரம் என்கிற ஹ்ருதய ஆகாசத்தில் வீற்றிருக்கும் ஏகாக்ஷரி, உன்னுடைய மிருதுவான கரங்களால் எப்போது உனது ஸ்பர்சம் கிடைக்கும்? நாராயண பிரியகரி, உன்னுடைய கமல வதனத்தை நான் எப்போது பார்ப்பேன்? நீதானே என்னை பாபங்களிலிருந்தும், பயங்களிலிருந்தும் விடுவிக்கும் ஆத்ம பந்து. நீதான் துர்வாஸாதிகளால் ஸேவிக்கப்படும் குஹ்ய குபத யோகினி, எனது துக்கத்தை

த்வம்சம் செய்யும் ஹம்ஸினி, உன்னைப் பக்தியுடன் ஆராதிப்பவன் உன்னுடைய பாதங்களை அடைகிறான். நித்ய கல்யாணி, நீயும் பகவானும் சேர்ந்து ஸம்பூர்ண ஜகத்திற்குச் க்ஷேமத்தை விளைவிப்பவர்கள். நீதான் என்னுடைய கர்வத்தை நாசம் செய்யும் ரஞ்சனி. நீதான் காமாகர்ஷினி என்னும் சக்திகளை ரஞ்சனம் செய்பவள். நீதான் நிர்விகல்ப சைதன்ய ரூபினி. என்னை மாயையிலிருந்து விலக்கி, எனக்கு விவேக ஞானத்தைக் கொடு. போகம், மோக்ஷம், எனப்படும் உனது பாதாரவிந்தங்களை விஷயமாகக் கொடு. பரதேவதே, நீதான் எனக்கு மங்களங்களைக் கொடுக்கும் சர்வாணி. க்லீம் என்கிற காம பீஜத்தைக் கொண்ட மந்திர ரூபிணி, என்னை உனது பக்தனாக ஆக்கிக்கொள்.]

என் பிரபு, ஸ்ரீ ராமச்சந்திரன், [மோஹமஹாரி, கதமாயன்,] பல பிரகாரங்களால் லக்ஷ்மணனைக் குறித்து விலலாபம் செய்தார். அவருடைய அரவிந்தலோசனங்களி லிருந்து புண்யமான கண்ணீர் துளிகள் உதிர்ந்தன. [அப்போது பராபரா, எனது தீர்த்த நாயகி, எனது சோகத்தைப் போக்கும் சதுர்பத தயா மூர்த்தி, நித்ய கல்யாணி, காமாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி, சச்சிதானந்த பரிபூரணி, லலிதாதேவி, மஹா திரிபுரசுந்தரி,] உமாதேவியின் கண்களிலிருந்து ஆனந்த கடா க்ஷம் என்கிற பரிபூர்ண பிரும்மத்தின் நித்ய சுக ஆனந்தம் பரிபூர்ணமாக விகஸித்து, கண்ணீர்கள் உதிர்ந்தன. (அனங்கன் முதலியவர்களால் அஷ்டதளத்தில் உபாஸிக்கப்படும் தயா ஸுதா, கருணாஸாகரம் மனதில் கருணை கொண்டவளாக விளங் கினாள்.) அதைப் பார்த்த அனந்தகோடி பிரும்மாண்ட நாயக ரான ஸதாசிவன் கருணை உள்ளத்துடன் இருக்கும் உமையைப் பார்த்துச் சொன்னார். "என் பிரியே, ஸ்ரீ சீதாராமன் அகண்ட மான ஏகம் என்று சொல்லப்படும் நாராயணன், ஸகல ஸம்பூர் ணன், ஸச்சிதானந்த மயன், பரபிரும்மம் என்று சொல்லப்படும் பிரபு, பாசசாஸனன், ஸகல தேவதைகள், பிரும்மா முதலியவர் களால் ஸேவிக்கப்படும் ஏகவிஜயபதம் என்று சொல்லப்படும் ஸ்ரீராமன், பக்த பராதீனன், பக்தவத்ஸலன்; தனது தம்பிக்காக மனுஷ்ய கதியை அடைந்து, மனுஷ்யர்களின் தீனகதியை பிரகடனப் படுத்துவதற்காக அழுதுகொண்டு, பகவத் கிருபை



பிரபு ராமன், லக்ஷ்மணன் மூர்ச்சை யடைந்ததைக் குறித்து மிக்க அழுதார். "ஹா, லக்ஷ்மணா, இந்த சம்சாரத்தில் புத்ரன், தனம், வீடு வாசல், பந்து ஜனங்கள் அடிக்கடி ஏற்படுகிறார்கள். ஆனால் இந்த உலகில் பிரியமான ஸஹோதரன் அடிக்கடி கிடைக்கக்கூடியதாக வில்லை." இவ்விதம் மனதில் எண்ணிக்கொண்டு, பிரபு கதறினார் :—"பிள்ளாய், என்னைப் பார்க்க சீக்கிரம் எழுந்திரு." (பிரபு சுக்ரீவனைத் தழுவிக் கொண்டிருப்பதையும், ஆஞ்சநேயர் சஞ்சீவினியைத் தேடிக்கொண்டிருப்பதையும் காணலாம்.)

யைப் பிரார்த்திப்பது போல, லீலை நாடகம் நடத்திக் காண்பித்தார்.'' (371)

சகல லோக நாயகனுகிற ஸ்ரீராமனுடைய வருத்தங் களேயும் சோகங்களேயும் கேட்டார்கள் ஸர்வ வானரர்கள். அந்த பிரலாபங்களேக் கேட்டு, வானர சமூஹங்களும் மாயை யின் வசம் அகப்பட்டு, அழுதார்கள். அவ்விதம் இருள் சூழ்ந்திருக்கும் சமயம் உதிக்கும் சூர்யனைப்போல, ஹனுமான்ஜி சஞ்சீவி மலேயுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். (அவதார சமயங்களில் அதர்மம் முற்றிப்போய், எங்கு பார்த்தாலும் வருத்தமும், துக்கமும் ஏற்பட்டு தெய்வ நம்பிக்கை, பலம் குன்றிப் போகுமோ, அப்போது கருணையை உருவாகக் கொண்ட பகவான் ஆவிர்பவிப்பது போல,) மஹாவீர ரஸம் கொண்ட ஹனுமான்ஜி சகலருடைய துக்கங்களேயும் துடைக்க, கருணே ரஸமே உருவாகக் கொண்டு சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்தார். (ஆஞ்சநேயா, ராமலக்ஷ்மண சீதா ஹிதகாரி, உன் நினைவு, ஸம்பந்தம், ஜன்மந்தோறும் ஏற்பட வேண்டும். உன்னிடம் பக்தி, உனது தாஸ்யர்களிடம் நீ காட்டும் சிரத்தை, எனக்கு அந்த ஜன்மங்களில் நாள்தோறும் ஏற்படவேண்டும். உன்னுடைய பல பிரஸாதத்திஞல் நான் உமா மஹேஸ்வரர்களே அடைந்தது போல ஆனந்தித்து, பெரும் சங்கடங்களிலிருந்து விடுபடவேண்இம். எனது பாப பயங்களே நீர்தான் நாசம் செய்ய வேண்டும்.) (372)

ஸ்ரீராமன் ஹனுமான்ஜியை ஓடித் தாவி இறுகத் தனது ஹ்ருதய கமலத்துடன் அணேத்துக் கொண்டார். (என் ரகு ராமன், நல்ல ஆதித்ய குலத்தில் பிறந்த கிருபாளு, மஹா கிருதக்ஞையை அடைந்தவராக, ஹனுமான்ஜியைத் தழுவிக் கொண்டான்.) ஸுஷேணன் அந்த ஒஷதியை எடுத்து உபயோகித்தான். அதஞல் லக்ஷ்மணன் குணமடைந்து எழுந்து உட்கார்ந்தான். எல்லோரும் சந்தோஷத்தை அடைந்தார்கள். (373)

பிரபு லக்ஷ்மணனே ஹ்ருதயத்தில் தழுவிக்கொண்டார். கரடிகளும் வானரங்களும் சந்தோஷப் பட்டுக்கொண்டு நர்த்தன மாடிஞர்கள். ஹனுமான்ஜி பழையபடி ஸுஷேணனே அவனுடைய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார். (374)

இந்த விருத்தாந்தத்தை தசானன் கேட்டான். அவனுக்கு கோபமும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தது. அதனால் வருத்தம் மேலிட்டவனாக ராவணன் கும்பகர்ணனிடம் வந்து, பல உபாயங்களால் அவனை எழுப்பினான். (375)

கும்பகர்ணன் நித்ரையிலிருந்து எழுந்தான். அவனைப் பார்த்தால், நிஜமாகவே காலன் தேகத்தை எடுத்துக்கொண்டு வந்தது மாதிரி அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். கும்பகர்ணன் சொன்னான்:- "அண்ணா, நீ சௌக்யமாக இருக்கிறாயா? உனது க்ஷேம சமாசாரங்களைச் சொல்."

(376)

மஹா அபிமானத்துடன் விளங்கும் ராவணன் எவ்விதம் சீதையை அபஹரித்தது, அவளை லங்கைக்கு கொண்டு வந்ததிலிருந்து சகல விருத்தாந்தங்களையும் சொன்னான். அதன் பிறகு ராவணன் சொன்னான்:- "தம்பி, வானரங்கள் சகல ராக்ஷஸர்களையும் கொன்று விட்டார்கள். பெரும் யுத்தம் நடந்தது. அதில் அவர்கள் எல்லா ராக்ஷஸர்களையும் ஸம்ஹரித்து விட்டார்கள். (377)

துர்முகன் இறந்து விட்டான். தேவ சத்ருவாகிற தேவாந்தகன், மனிதர்களைச் சாப்பிடும் நராந்தகன், மிகச் சிறந்த யுத்த வீரர்களான அதிகாயன், அகம்பனன், மஹோதரன் ஆகிய மஹா வீரர்கள் ரண தீரர்களாக விருந்தவர்கள் யாவரும் மாண்டு போய்விட்டனர். (378)

தசகந்தரனுடைய வசனங்களைக் கேட்ட கும்பகர்ணன் அதிக துக்கமடைந்து, ராவணனைப் பார்த்து கோபத்துடன் கேட்டான். "மூர்க்கனே, ஜகதம்பாவாகிற ஜானகியை அபஹரித்து வந்து, எவ்விதம் கல்யாணங்களையும் மங்களங்களையும் எதிர்பார்க்கிறாய்?" (379)

"ராக்ஷஸாதிபனே, நீ செய்தது தர்மமில்லை. ஸ்வயமாக நாசத்தைத் தேடிக்கொண்டு விட்டாய். இப்பொழுது என்னிடமிருந்து எதை எதிர்பார்க்கிறாய்? இப்போதாவது உனது அஹங்காரத்தை விட்டு விட்டு, ஸ்ரீ சீதாராமனை பஜி. உனக்கு நன்மைகள் ஏற்படும்." (380)

"ராவணா, ஹனுமான்ஜியைப் போல பலவான்கள் எவனுக்குச் சேவகர்களாக விருக்கிறார்களோ, அப்பேற்பட்ட

ரகுநாயகனை சாதாரண மனுஷ்யனாகவா நீ எண்ணிக் கொண் டிருக்கிறாய்? அடே முட்டாளே, நீ செய்த பெரிய தப்பு என்ன வென்றால், முன்னாடியே இந்த விஷயத்தைப்பற்றி என்னிடம் சொல்லி, என் ஆலோசனையைக் கேட்டிருக்க வேண்டும்."
(381)

[*தியானம்*

என் மனம், கர்மம், வசனங்கள் எல்லாவற்றையும் ஒடுங்கச் செய்யும் லலிதே, நீதானே என்னுடைய ராஜசந்திரமூர்த்தி. என் ராமனைப் பிரியம் செய்விக்கும் ஈசபிரியகரி, பச்சை கற்பூரம், சந்தனம், குங்குமப்பூ முதலிய வாசனை திரவியங்களை அணிந்துகொள்ளும் திரிபுரசுந்தரியே, ஸர்வ சுகந்த ப்ரியே, நீதானே பஞ்ச தசாக்ஷரி என்கிற மந்திர ஸ்வரூபத்தில், மேல் பாகம் வாக் பீஜமாகவும், மத்தியில் காமராஜ பீஜமாகவும் கீழ் பாகத்தில் சுத்த அபேத காடோப கூடமான சிவசக்தி ஐக்ய பீஜ மாக விளங்குகிறாய். நீதானே பிரும்ம மய பிரகாசினி, நாமரூப விமர்சினி, காம கலையைப் பிரதர்சனம் செய்யும் என் காமாக்ஷி. உன்னுடைய நித்ய விபூதியும், லீலா விபூதியும் அப்ராக்ருத மானவை. தாயே, உனது ரூபத்தையும் அனவதி குணங்களை யும் அடதாளத்தில், ஸ்வரம், ராகம் இரண்டும் லயமடைவது போல, காம்போதியில் பாடி நான் இன்புற்று உனது அப்ஜ சரணங்களில் லயமடைகிறேன். ஹே கமலா, எனது ஹ்ருதய உல்லாஸினி, அஜை என்று என்றால் ப்ரீதியோடு அழைக்கப் படுபவளே, என்னிடம் பிரியமாகவிரு. ஹிமகிரிதனுஜே, உன்னை ஹ்ரீங்கார பீஜத்தினால் புவனேஸ்வரி என்று ஆராதிக்கிறேன். நீதானே எனக்கு ஸகல சௌபாக்யங்களைக் கொடுக்கும் காமாக்ஷி; ஸம்க்ஷோபண சக்தியே, சராசராதிகளைக் கல்பனை செய்யும் நாராயணி, உமா மஹேஸ்வரி, சகல தத்வங்களும் பொருள்களும், மந்திரங்களும், உன்னைத்தானே சுமந்துகொண்டு நிற்கின்றன. உன்னுடைய அனுஷ்டானங்களும் கருணை விலாஸங்களும், களங்கமற்ற ரூபமும், அங்கங்களும், நாமங் களும் மிக மிக பிரபலமானவை. சங்கரரை அடைவதற்கு வலிமை மிக்கத் தவம் செய்த அபர்ணா, ராமனை அடைவதற்கு சிம்சுபா விருக்ஷத்தினடியில் பத்து மாதம் காத்துக் கிடந்த

அபர்ணு, ராவணனையும், கும்பகர்ணனையும், மேகநாதனையும் அழித்த ஸுபர்ணு, நீருண்ட மேகத்தைப் பரிஹசிக்கும் கூந்தல் அழகை உடைய என் ஹ்ருதய சுந்தரி, காமேஸ்வரி, என்னைப் பார்க்க மாட்டாயா? உன்னை உபாயமாக அடைந்தவர்கள் ஔதாரியம் என்னும் குணத்தை அனுபவிக்கிறார்கள். அதனால் தான் சரண்யாம் என்று அர்த்தமுள்ள உன் கருணு ஸாமர்த் தியத்தை அறிகிறார்கள். உன்னுடைய விபவ ஐஸ்வர்யங்களை அறிந்தவர்கள் உன் ரூபத்தை ரசிக்கிறார்கள். உன்னுடைய நிஜ ஸ்வரூபம், விபவம் எல்லாம் தாய்மையின் உள்ளடங்கிய வாத்ஸல்யம் ஒன்றைத்தானே குறிக்கிறது. ஸ்ரீ வித்யையின் ரஹஸ்யமான பிந்து தர்ப்பணமாக விருக்கும் ஸ்ரீ வித்யா ரூபிணி, கமலா நகரம் எனப்படும் லங்கையிலும், ஹ்ருதய ஆகாசத்திலும், லீலை செய்பவளுமான உன்னை ஆயிரம் தடவை கள் நமஸ்கரிக்கிறேன். மார்க்கண்டேயர், நாரதர், வியாஸாதி களை நவரத்ன மாலையாகக் கொண்ட பரமேஸ்வரி, எனது கலி தோஷங்களை நாசம் செய் அம்மா. எனக்கு நன்மை செய்யும் ஸ்ரேயோமூர்த்தி, எனக்கு நன்மையைச் செய்யும் ஞான ஆனந்தமூர்த்தி, உன்னைப் பரா என்னும் சப்த பிரும்மமாகவும் அபரா என்று அதற்கு மேல்பட்ட அனுமான பிரும்மமாகவும் அறிந்து, உன்னைத் தவிர, ஹே மஹாலக்ஷ்மியே, மஹா திரிபுர சுந்தரியே, உமையின் வடிவான சீதாதேவியே, வேறு உயர்ந்த தெய்வம் இல்லை என்று மனப்பூர்வமாக அறிகிறேன். நாராயணி, உனது புகழை வேற்றுமையில்லாத நித்ய சுத்த புத்த முக்த ஸச்சிதானந்த கேவல விசிஷ்டமானதும், அத்வைத மாகவும், த்வைதமாகவும் நான் அறிகிறேன். மூலாதார சக்தியே, உன்னுடைய சேஷ்டிதங்களும் மாயையும் விநோத மானது. உன்னை "நமஸ்தே," "நமஸ்தே," என்று சொல்லி நமஸ் கரிக்கிறேன். உன்னை நான்காவது ஆவரணமாகிறதும் சோபன கர மனு கோணத்தில் "கமலாம்பிகே," என்று சொல்லி தீக்ஷிதரை முன்னிட்டு, நான் நமஸ்கரிக்கிறேன். தாயே, கிருபை செய்.]

"ஸ்வாமி, ஸர்வ பிரதமனுகிற நாராயணரிடம் விரோதம் செய்துவிட்டீர். ஆதிநாராயண பிரபுவாகிற மதுசூதனனிடம் விரோதபாவம் கொண்டீர். உமக்குத் தெரியாதா, அவரே

விரிஞ்சியாகிற பிரும்மாவினுலும், பரமசிவனுலும் வணங்கப்படும் வேத முதல்வர். என் குரு ஸ்வாமியாகிற நாரத முனிவர் எனக்கு அவருடைய மகிமைகளைப் பற்றி சொல்லியிருக்கிறர். [அவரே ராஜராஜேஸ்வர், நிரஞ்சனர், நிருபமர், ராஜவதனர். மனது, இந்திரியம் பிராணன் ஆகியவைகளை அடக்கி, அவரைத் தொழுதுகொண்டு, தியாகராஜர் போல ஆராதித்து வந்தால், அவரே மணிமந்திர ஔஷதமாகிருர். தசரத பாலனைத் தொழுது ஆராதித்தவன் தேக ஆத்ம பேதங்களை நன்கு அறிகிருன். அவனுக்கு சீதாராமனே தபஸ். அவனுக்கு ரமா ரமணனே நான்குவித ஆஸ்ரம தர்மங்கள். அவனே மாயையைத் தாண்டுகிருன். பெண்களைத் தாயாராகவும், சஹோதரியாகவும் அவனே மதிக்கிருன். அவனுக்கு ஜன்ம சுழல்களும், சம்சார தாபங்களும் ஏற்படுவதில்லை. அந்த தாஸரதி சிஷ்யனுக்கு, மதுசூதனனே அன்றி மற்றெலேனென்று எத்தாலும் கருமமின்றி துதி சூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்றூழி யூழிதோறும், எதிர் சூழல் புக் கெனைத் தோர் பிறப்பும் எனக்கே யருள்கள் செய்ய, விதி சூழ்ந்ததாலெனக்கே லம்மான் திரிவிக்ரமனையே, என்று ஆழ்வார் சாதித்தபடி, நீ நாரதருடைய போதனையைப் பற்றி என்னிடம் கேட்டிருந்தால், அருள் செய்திருப்பேனே. அண்ணு, செங்கனி வாய் ராமனை விட்டு, வேறு தெய்வம் உண்டோ?] ஐயோ, இப்போதோ காலம் கடந்து விட்டது. அவனுடைய பாத பங்கஜங்களை மருவித் தொழு, மேதாய் என்று நான் உனக்கு உணர்த்தியிருப்பேனே. இனி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. நமது காலமும் முடிந்து விட்டது.'' (உள்ள நோய்கள் எல்லாம் நமக்கு ஒழிந்து, நாம் உய்ந்து போக வேண்டியதுதான். ஹே நாரணு, உனது அந்தமிலடிமை யடைந்தேன் விடுவேனே, ஐந்து பைந்தலை யாட ரவணை மேவிப் பாற்கடல் யோக நித்ரை, சிந்தை செய்த வெந்தாய், உன்னைச் சிந்தை செய்து செய்தே. ஹே பிரபோ, உகந்து வந்து அடியேனுள் புகுந்தான் அகல்வானு மல்லன்னி, செடியார் நோய்கள் எல்லாம் துரந்து எமர் கீழ் மேலேழு பிறப்பும், விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே.) [''அண்ணு, நம்முடைய பாக்ய விசேஷத்தால் அவனே வந்து நம்மை ஆட்கொள்ள வந்து விட்டான். இனி நாம் என்ன

செய்யக்கூடும்? நாம் யுத்தம்தான் செய்திட வேண்டும் என்று அவன் தீர்மானித்து விட்டான். சரி, ஆனபடி ஆகட்டும். தைர்யமாக நாம் இனி சண்டை செய்வோம். (மைந்தா, வானரே இனி யெங்குப் போகின்றதே. நாம் தண்டுழாய் மார்பன் வசம் செல்வோம். கமலத் தடம் பதிந்த பெரும் புகழ் ராமனிடம் செல்வோம்,'' என்று பலவாறு சிந்தித்து ராவண னிடமும் சொல்லி மனம் ஆற்றினன், கும்பகர்ணன்.''] (382)

"அண்ணா, வா, என்னிடம் வா. நாம் மீண்டும் சந்திப்பது இனி அரிதாகிவிடும். (அந்திம ஸ்திதியில் நாராயண பதங்களை, வேங்கட நல்வெற்பன், விசும் போர் பிரான், எந்தை தாமோதரனே, என்று சொல்லி, நாம் அவனிடம் லயமடை வோம்.) அண்ணா, ஓடி வந்து என்னுடைய உடம்பின் அங்கங்களை இறுக்கக் கட்டிக் கொண்டு, அணைத்து என்னை ஆசீர்வதித்து, அனுப்பு"."என்னுடைய புலன் அனைத்தும் மேயும் பொறியை, நீல ஜோதியை எனது லோசனங்கள் நிறை யும்படி கண்டு களிப்பேன். என்னுடைய ஜன்மாந்திர சுக்ரு தத்தை நான் அடைவேன். என் பிரபு ஸ்யாமகாத்ரன், ஸரஸிருஹலோசனன். [சங்கு, சக்ரம், கோதண்டம் கையில் கொண்டான். வண்ண மாமணி சோதியை, அமரர் தலைவனை, எனக்கே தன்னைத் தந்த கற்பகத்தை, என்னமுதம் கார்முகில் போலும், சொல்ல ஒண்ணாத பேரழகுடன் என்னை ஆட் கொள்ள வந்திருக்கும் தெயவத்தை, கோலமே தாமரைக் கண்ணதோர் அஞ்சன நீலமே, நின்றெனதாவியை ஈர்க்கின்ற சீலமே வடிவெடுத்து வந்தான் போலும். உன்னை என் கால மாய் நினைத்து உனனை இந்நாள் கண்டு கொள்வேன்.] நான் போவேன். எனது தாபத்ரயங்களை மோசனம் செய்யும் சியாம சரீர, கமல நேத்ர, ஸ்ரீராமனைக் கண்டு இன்புறுவேன். பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண் டானே, அவனுடைய கருணையே கருணை'' என்று பலவாறு தனக்குள் எண்ணிக் கொண்டே போனன். (383)

இவ்விதம் கும்பகர்ணன் பலவாறு தனக்குள் ஸ்ரீராமச் சந்திரனுடைய ரூபத்தை நினைத்து, அவனுடைய பரந்த பரத்வ சௌலப்ய, வாத்ஸல்ய குணங்களை நினைப்பூண்டு, பயம் குன றியவனக, ப்ரேமாதிசயத்தில் கும்பகர்ணன் மூழ்கி, ஒரு

க்ஷணம் தன்னை மறந்தான். (நின்று நின்று நினைக்கின்றேன் உன்னை யெங்கனம் நினைக்கிற்பன், பாவியேன் எனக்கு ஒரு நல்லுரை உரைப்பாயா? என் கண்கொளாவகை நிகரத்தென்னைச் செய்கின்றன, எண் கொள் சிந்தையுள் நைகின்றேன், என் கரிய மாணிக்கமே, என் கண்களுக்கு அருளாய் திருவாய் திகழ்வாயா?) இவ்விதம் எண்ணிய கும்பகர்ணன் தனக்குள் ஆனந்தம் கொண்டான். இதற்குள் ராவணன் கணக்கற்ற கள் ஜாடிகளையும், மாம்ஸ மலைகளையும் கும்பகர்ணனின் ஆகாரத்திற்காகத் தரவழித்தான். (384)

கும்பகர்ணன் மஹிஷங்களைச் சாப்பிட்டான். கள்ளை நிறையக் குடித்தான். இடி முழக்கம் செய்வதைப்போல கர்ஜித்தான். மதத்துடன் ஒரு பெரிய பூதம் செல்வதுபோல உத்ஸாகத்துடன் ரண களத்திற்குச் சென்ருன். கோட்டை வாசலைக் கடந்து சென்ருன். அவனுடைய உதவிக்கு சேனை ஒன்றும் செல்லவில்லை. (385)

கும்பகர்ணனைப் பார்த்ததும் விபீஷணன் ஓடிவந்தான். காலில் விழுந்து அவனை நமஸ்கரித்தான். தம்பியை எழுப்பி, கும்பகர்ணன் தனது ஹ்ருதயத்தில் தழுவிக் கொண்டான். ஸ்ரீ ரகுபதியின் பக்தன் என்று தெரிந்துக்கொண்டு அவனிடம் கும்பகர்ணன் தனது ப்ரீதியை வர்ஷித்தான். (386)

விபீஷணன் சொல்ல ஆரம்பித்தான். “அண்ணு, ராக்ஷஸர்களின் நன்மையையும், நமது குடும்பத்தின் க்ஷேமத்தையும் உத்தேசித்து, நான் பலவிதங்களால் ராவணனுக்குப் பரம ஹிதமாகிற ராம சரணுகதியின் மஹா மந்திரத்தை உபதேசித்தேன். (ராகவனுடைய சௌலப்ய வாத்ஸல்யத்தை நினைவுறுத்தி, மஹா அபராதியாகிலும், தோஷங்கள் உள்ளவனுகிலும், “ஒருக்கால் சரணம்” என்று சொல்லி வந்த பாபிக்கும் அடைக்கலம் தந்து அணைக்கும் எம்பெருமான் என் ரகுபதி என்று சொன்னேன்.) அதற்குப் பதிலாக அவன் என்னைக் காலால் உதைத்து வெளியேறும்படி கட்டளையிட்டான். அதனுல் நான் வருத்தம் மேலிட்டு, ரகுபதியினிடம் வந்து சேர்ந்தேன். என்னுடைய தீன ஸ்திதியைக் கண்டு பிரபுவுக்கு என் மீது பிரியம் வந்தது. என்னை ஆட்கொண்டு உற்ருர்கள் இல்லையென்னும் உற்ருர்களைச் செய்வேன் யானே யென்னும்

விரதம் கொண்டு, என்னை ஏற்றுக்கொண்டான். (நிகரில் அமரர் முனிகணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானின் புகல் ஒன்றில்லா வடியேன் அவன் அடிக் கீழமர்ந்து புகுந்தேனே,) அவனுக்கு பரம த்ரோஹியான ராவணனுடைய தம்பியாக விருந்தாலும், அவன் என் சரணுகதியை பரம சௌலப்யத்தினுல் ஸ்வீகரித்துக் கொண்டான்.'' கும்பகர்ணன் ஸகல விருத்தாந்தங்களையும் கேட்டுக்கொண்டான். (387)

அதன் பிறகு கும்பகர்ணன் சொன்னுன். "பிள்ளாய், நீ செய்தது சரிதான். ராவணன் அதர்மத்தைச் செய்து கால வசத்தை அடைந்தான். மானத்தையையும், மரியாதையையும் இழந்தான். சிக்ஷிக்கப்பட்டாலும், அவனுடைய அபிமானம் அவனை விட்டுப் போகாது. அவன் ஒருவருடைய பேச்சையும் கேட்கமாட்டான். உத்தமர் யார் சிக்ஷை செய்தாலும் அவனுக்கு லக்ஷ்யம் கிடைக்காது. ஹே விபீஷணு, நீதான் தன்யன். மஹாப் பேறு படைத்தவன். நீதான் சீதாராம பாதங்களை அடைந்த தன்யன். (நீதான் நமக்கார் துணையென என்று கவலை அடையும்போது, கலங்கி நிற்கும்போது, "நாம் ஸஹாயமாய் நிற்போம், விபீஷணு," என்று அருள் தரும் நாரணன். தனது மெய்ப் பாதங்களை நீட்டி உனக்கு இது உபாயம், உணர்ந்து கொள், இனி உனக்கு ஒரு பரம் (பொறுப்பு) இல்லாது இரு வினைகளாகிற புண்ய பாபங்கள் ஒழியும்; உன்னைக் காக்கும் பரம் (பொறுப்பு) இனி எமக்கே," என்று நினைத்து, "தாம் முயலும் தாம்"—கர்மஞான பக்திகளாகிற மற்ற உபாயங்களின் ஸ்தானத்தில் தாமே நின்று பலன் கொடுக்க முயல்கின்ற எம்பெருமானை, ரெங்கநாயகி ஸமேத ரெங்கநாயகனை நீ பாக்ய வசத்தாலே அடைந்து விட்டாய்.) தம்பி, நீதான் ராக்ஷஸ குலத்திலே மிக மிக தன்யன். (பிரஹ்லாதன் என்கிற தைத்ய குமாரனைப் போல நீயும் ஆகிவிட்டாய்.) என் பிள்ளாய், அருமைத் தம்பி ராக்ஷஸ குலத்திற்கே மணி விபூஷணனுக ஆகிவிட்டாய்.'' (388)

[*தியானம்*

நாராயணு, பரமேஸ்வரி, தியானேஸ்வரி, சீதாதேவி, உமா தேவி, சரணம். சரணம். அம்மா பரதேவதே, காமாக்ஷி,

நீதானே அம்மா எனக்கு தத்வரூபிணி. உன்னைத்தானே அம்மா, ஸ்ரீகண்டன், விரிஞ்சி, விஷ்ணு, தேவேந்திர கணங்கள், பூஸுரர்கள் ஆராதனை செய்ய வேண்டிய பரதேவதை என்று கருதுகிறார்கள். ஹே வஸுப்ரதே, வரலக்ஷ்மி, பங்கஜ மாலினி,கேசவ ஹ்ருதய உல்லாஸினி, ஹே சிவாத்மிகே, உனது பாத பங்கஜ ஸம்பந்தத்தைப் பெற விரும்புகிற எனக்கு ஸ்ரீ கரியாகவிருக்க மாட்டாயா? நீதானே சூக்ஷ்ம ரூபிணியாக வும், நாத ரூபிணியாகவுமிருக்கிறாய். சாம்பவி, நீதானே அம்மா, பஹிர் தசார சக்ரத்தின் மத்தியிலிருக்கும் பரதேவதை, பைரவி, பார்க்கவி, பாரதி, மஹான்கள் உன்னைத்தானே கதிஸ்த்வம், மதிஸ்த்வம், த்வமேகா பவானி என்று கூறு கின்றனர். மின்னல் கொடி போல பிரகாசிக்கும் காந்தி தேவதையே, நீதானே அம்மா ஆறு அவயவங்களோடு கூடிய சக்கிரங்களுக்கு மேல் உள்ள ஸஹஸ்ரார பத்மத்தில், எனது ஹ்ருதய கோசத்தில், உட்கார்ந்துகொண்டு என்னை நியமித்துப் பரிபாலிக்கிறாய். குலகௌலினி, மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா என்கிற ஆறு ஸ்தானங்களில் வீற்றுக் கொண்டும், ஸஹஸ் ராரபத்மத்தில் இருந்துக்கொண்டும், தனது பதியான நாயக ரிடம் ரமித்துக் கொண்டு, சிவசக்தி ஐக்ய ஸ்வரூபமாக, உத்ஸவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாய். ஹே சீதே, மஹாலக்ஷ்மி, உமாதேவி, உன்னுடைய ஸஹஸ்ரார பத்மத்தில் பெருக்கும் அம்ருத தாரையை என் மீது வர்ஷிக்க மாட்டாயா? உனக்குப் பக்கத்தில் சந்திரனும் வீற்றிருக்கிறான். இந்த குண்டலினி சக்தியைத்தானே உபாஸகர்கள் தியானிக்கிறார் கள். பதினாறு சக்திகளாகிற அம்ருதா, ஆகர்ஷிணி, இந்திராணி, ஈசானி, உமா, ஊர்த்வகேஸி, ருத்திதா, ருகாரா, லுகாரா, லூகாரா, ஏகபதா, ஐஸ்வர்யாத்மிகா, ஓம்காரா, ஔஷதி:, அம்பிகா, அக்ஷரா ஆகிற பதினாறு மஹா சக்தி களால் சூழப்பட்ட கமலாலய தீர்த்த வைபவே, சிவே, கருணார்ணவே, ஜகதம்பிகே, ஸகல லோகநாயகி, ஸங்கீத ரஸிகே, நீதான் என்னை ஸம்ரக்ஷிக்க வேண்டும், கடாக்ஷிக்க வேண்டும். சுகத்தை வாரிக் கொடுக்க வேண்டும். மஹா திரிபுரசுந்தரி, ஸர்வ ஸித்தி ப்ரதாயினி, டாமரி முதல் பட்டாரி

வரை பத்து சக்திகளால் சூழப்பட்டு, ஆராதிக்கப்படும் அகண்டைகரஸமே, ஆதிமத்யாந்தர ரஹிதே, குருகுஹனை ஆனந்தித்த மாதிரி என்னையும் ஆனந்தப்படுத்த மாட்டாயா? மூலாதிநவத்வாரங்களுக்கு வேறுபட்ட பத்து வகை சங்கீத த்வனியை, தசகமகத்தை அறிந்த அகஸ்தியர், நாரதர், மதங்கர், சாம்பசிவன், ஆஞ்சநேய மார்க்கண்டேயாதி முனிவர்களை காக்கும் நாத ரூப சுந்தரி, என்னையும் தியாகராஜர், தீக்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரி போன்றவர்களையும் ஸம்ரக்ஷிக்கும் மஹா பைரவி, உனது கண் திருஷ்டிகள் என் மீது கிருபையுடன் எப்போது விழும்? திரிகண்டா முத்ரையாக விளங்கும் மஹாகீர்த்தி தேவதையே, நீதானே அபேத சுத்த புத்த நித்ய முக்த சச்சிதானந்த மயமாகவிருக்கும் கேவல ரூபிணி, மஹா கீர்த்தி தேவதையே, உனது கடாக்ஷ வீக்ஷணயங்கள் என் மீது எப்படி எப்போது விழும்? ராஜ ராஜேஸ்வரி, ராஜ்ய வல்லபா, ராஜத்கிருபா, ஸுலபாகதி: மாத்ரு வர்ணங்களால் நிரூபிக்கப்படும் ஸ்வர்ணகர்ப்பா, நீதானே எனக்கு ராஜயோகம். பக்தவசங்கரி.]

"என் அருமை விபீஷணா, நீ நமது ராக்ஷஸ குலத்திற்குக் கௌரவத்தை அளித்தாய். வம்சத்தை உத்தாரணம செய்தாய். புலஸ்திய வம்சத்தைக் காப்பாற்றினாய். பரம சோபன மூர்த்தியான ராமனை, நாராயண மூர்த்தியை, லக்ஷ்மி நாதனை வணங்கி, (எனக்கென்றும் தேனும்பாலு மதுமாய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமருமுரையின் நமோ நாராயணமே, என்கிருப்போல) சகல குலத்தினர்களையும், பந்துக்களையும் சுகம் அடையச் செய்த மஹா பாக்யவான் நீதானே அப்பா. (பிரமன், சிவன், இந்திரன், வானவர் நாயகராகிய ஸ்ரீராமனை, சீதாபிராட்டியின் தெய்வ நாயகனை, நமது வினைகள் தீர, நன்று காண்மின் தொண்டீர் சொன்னேன், நமோ நாராயணமே, என்று நாம் எல்லோரும் சொல்லும்படி கருணாஸாகரா,) சோபாமய, ஸ்ரேயோ மூர்த்தியான ஸ்ரீராமனை, ஜானகி ரமணனை நன்கு ஆஸ்ரயித்துப் பஜித்தாய்." (389)

"மஹா பாக்யமுள்ள விபீஷணா, எந்த மஹானுபாவன் மனம், வசனம், கர்மம் முதலியவைகளால் கபடமின்றி ராம், சீதா ராம், ரகுபதி, ரணதீரா, ராஜாராம் என்று மெய் சிலிர்த்து

பழிக்கிறுனே, அவனே இப் பூமியில் வாழத் தகுந்தவன். ராவணனும் நானும் ம்ருத்யுவின் வசத்தை அடைந்து துஷ் கர்மங்களால் நிக்ரஹம் செய்யப்படுவோம். இப்போது என்னை விட்டு, நீ விலகிப் போய்விடு." (ஒரே மனத்துடன் என் நன்மையை உத்தேசித்து, மோஹம், மாயை ஆகியவைகளால் தாக்கப்பட்டவனுக, எனது மனம் இந்திரியங்கள், புத்தி, பிராணன் இவைகளை நிக்ரஹம் செய்து, சத்ருமித்ரன் என்கிற வித்யாஸம் பாரமல் உன்னடி கீழ் வந்து புகுந்தேன், அடியேனைப் பணியாண்டு கொள். எந்தாய், என் அம்மானே, என்று சொல்லி, நாராயண பரனுக விருக்கிறேன்.) உனக்கு என்னுடைய பரிபூர்ண ஆசீர்வாதங்கள். போய் க்ஷேமமாக வாழ்ந்து சிரஞ்சீவியாக விரு," என்று ஆசீர்வதித்து அனுப்பினுன். (390)

விபீஷணன் கும்பகர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டு, ஸ்ரீ லக்ஷ்மண ராமனிடம் திரும்பிச் சென்ருன். பிரபு திரிலோகாதிபதியான ஸ்ரீராமன் கும்பகர்ணனைக் கண்டு திரும்பும் விபீஷணனையும் கண்டார். விபீஷணன் பிரபுவினிடம் சொன்னுன், "நாதா, அதோ வருகிருன் பாரும், என் பிராதா. மலைபோல சரீரத்துடன் மதம் பிடித்த யானையைப்போல் விசாலமான மார்பை உடையவனுகவும் ரண தீரனுகவும், பூதாகார சரீரத்துடன் வரும் கும்பகர்ணனைப் பாரும்." (391)

வானரங்கள் இதைத்தான் கேட்டார்கள். ஒரே கிலா கிலா சப்தத்துடன் வானர கரடி சைன்யங்கள் அவனை நோக்கித் தாவிச் சென்றன. விருக்ஷங்கள், பர்வதங்கள் இவைகளைப் பெயர்த்து அவர்கள் மஹா கிரோதத்துடன் கும்பகர்ணன் மீது வீசி எறிந்தார்கள். (392)

கோடி கோடிக்கணக்கான மலை பர்வதங்கள் சிகரங்கள் கும்பகர்ணன் மீது விழுந்தன. ஒரு தடவை இல்லை. பல தடவைகள் அவன் மீது விழுந்தன. சரமாரி பொழிவதுபோல விழுந்தன. கும்பகர்ணனுடைய திடமான மனது அதனல் கலக்கமடையவில்லை. தனது சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற புத்தியும் அவனுக்குத் தோன்றவில்லை. அதனல் அவன் மனம் தளராமல் யுத்தம் செய்தான். மதார் (Sun Plant) செடியின் பழங்களின் விருஷ்டியினுல்

அடித்தபோதிலும், மதம் கொண்ட யானை தனது எண்ணத்தை விடாமல் எவ்விதம் எதிர்த்து நிற்குமோ, அதைப்போல கும்ப கர்ணன் அசைவற்று நின்றவிடத்திலே ஸ்திர நிலையாய் நின்று போரிட்டான். (393)

*தியானம்*

ஹே கமலாம்பிகே, ஜகதாம்பிகே, உன்னை ஆயிரம் தடவைகள் பிரும்மா, சிவன், இந்திரன், மார்க்கண்டேய ரிஷி, அகஸ்தியர், குபேரன், ஹயக்ரீவர் ஆகியவர்களை முன்னிட்டு நான் நமஸ்கரிக்கிறேன். ஹே ராமா, ஹனுமான் ப்ரியரே, கருணார்ணவே, வேத முதல்வா, உன்னை நான் துளசி கவசத்தோடு உன் பிரியத்தையும் தேவியின் பிரியத்தையும் அடைய விரும்புகிறேன். நீதானே ரஹஸ்யத்தைக் கூட உனது பிரிய சிஷ்யனுக்குச் சொல்லி என்னையும் பொருளாக்கினீர். உனக்கு நான் புத்ரனல்லவோ. உன்னிடம் அர்ஜுனன் துரோணரிடம் காட்டிய அன்பையும், துரோணர் அவனிடம் காண்பித்த பிரியமும் காலவர், உத்தங்கர், வால்மீகி, சுகர் போன்ற மஹாத்மாக்கள், யாக்ஞய வல்கியர் மைத்ரேயி காக்கையிடம் காட்டிய பிரேமையினல் விகனித்த குரு சிஷ்ய பரம்பரையில் நடந்துவரும் என்னை அனுக்ரஹிக்க மாட்டீர்களா? நீதானே எனக்கு மஹா பிரஸாதமாகிற தேவியின் நிழலையும் ராமனுடைய பாரிஜாதமான திருவடித் தாமரைகளையும் எனக்குத் தந்தாய். லக்ஷ்மி ஹயக்ரீவரே, பிரும்மாவிடம் நீர் காட்டிய அன்பும், தேசிகரிடம் கொண்ட பக்தி ப்ரேமையும் ரொம்ப பிரஸித்தமானது. பிரும்மா ரிஷியாக ஸ்ரீ சிவனிடமும், ஸ்ரீசிவன் பார்வதியிடமும், உம்முடைய மகிமைகளை உணர்த்தினர். ஹயக்ரீவரே, என் ஞான ஸுதாகரனே, துளசி ப்ரியனே, ஹ்ரௌம் பீஜம், ஹ்ரீம் ஓம் கீலகம் என்னும் மந்திரங்களால் ஆராதிக்கப் படுபவரே, அம்ருத ஸுதையாகிற மஹா லக்ஷ்மியினல் அணைக்கப்பட்டு, சின்முத்ரை, அக்ஷமாலை, தாமரை, புஸ்தகம் என்கிற வேதங்கள் இவைகளைக் கைகளில் தரித்துக் கொண்டிருக்கும் ஹயக்ரீவரே, உம்மை ஆயிரம் தடவைகள் அகஸ்தியர், வேதாந்த தேசிகரை முன்னிட்டுக் கொண்டு கருடனுடைய ஸந்நிதியில் நான் நமஸ்கரிக்கிறேன்.

ராமசீதா, தேவநாதா, நாராயணு, நீர்தான் ஹயாஸுரன் என்கிற அசுரனைக் கொன்று வேதங்களையும், சப்த பிரும்மத்தையும் ரக்ஷித்தீர். வைகுண்டநாதரே, ஹனுமாரால் ஸேவிக்கப்படும் சீதாராம லக்ஷமணு, என் வாக்குக்களுக்கு அதிபரே. என்னிடம் ஸதா கிருபையுடன் இருக்கவேண்டும். நீர்தான் என்னைப் பத்து திக்குக்களிலும் காப்பாற்ற வேண்டும். அகஸ்திய லோபா முத்ரையின் சிஷ்யஞன எனக்கு காவேரி ரங்கா, உன் கிருபையைப் பரிபூர்ணமாக நான் அடைய வேண்டும். என்னுடைய ஹருதயாகசத்தில் வீற்றிருந்து, துர்வாதம் செய்பவர்களாகிற ராக்ஷஸர்களின் துன்பங்களை அடையாமல் ரக்ஷிக்கவேண்டும். உம்முடைய அனுக்ரஹத்தால் பஞ்ச பிரும்ம ஸ்வரூபியாகிற ஈசான், தத்புருஷ, அகோர வாமதேவ, ஸத்யோஜாத என்கிற ஐந்து பிரும்ம ஸ்வரூபமாகிற ஈச அம்பிகையின் பாதங்களை நான் அடையவேண்டும். அம்மா உன்னுல் அல்லவோ பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன், ஸதாசிவன் ஆகிய ப்ரும்ம ஸ்வரூபிகள் வாமாமா, ஜ்யேஷ்டா ரௌத்திரி, ஆகிய சக்திகளுடன் கூடி உலகங்களை வாழ வைக்கிருர்கள். ஹே புவனசங்கரி, நான் அகஸ்திய லோபா முத்ரை ஹயக்ரீவரால் கடாக்ஷிக்கப்பட்ட உன் பக்தன். உன்னை பாஸ்கரராயர், அபிராம பட்டர் போன்ற மஹாத்மாக்களை புரமாக வைத்து ஸமஷ்டியின் அபிமானி, ஹிரண்ய கர்ப்பரின் சக்தி ரூபமாக ஸ்மரிக்கிறேன். விக்ஞான கண ரூபிணி, பரமானந்தா, மஹாதந்திரா, மஹா மந்திரா, மஹா யந்திரா, பிருத்வி முதலிய முப்பத்தாறு தத்வங்களைச் சிறந்த ஆஸனமாகக் கொண்ட மஹாஸனு, உன்னுல் கடாக்ஷிக்கப்பட்ட நான் அதி மதுர தர வாக்கு ஸ்வரூபத்தைக் கேட்டேன். செந்தாமரையை வென்ற பாதங்களை உடையவளே, நீதான் எனக்கு ஸர்வ ரக்ஷாகரம். உன்னுடைய பத்து விரல்களிலிருந்தும் ஸர்வாசுர அஸ்திரம் எனப்படும் நாராயணருடைய பத்து அவதாரங்களும் உண்டாயிற்று. மஹாபாசுபதம் என்னும் ஸ்ரீ ஸதாசிவனுடைய அஸ்திரமும் உனது ஸ்வரூபம் தானே. ஹே ஜ்வாலாமாலினி, என்னுடைய பத்து இந்திரியங்களை அடக்கி, ஸாம்ராஜ்யம் செய்யும் ஸ்ரீமந் நகரநாயகி, எனது ஸுமேருவே, என் சிந்தாமணி கிரஹமே, எனது தச

சக்தி மாலினி என்று உன்னை ஆராதிக்கிறேனே, சனைஸ்சர னிடத்தில் காட்டிய பிரியத்தை என்னிடமும் காண்பிக்க மாட்டாயா ? எனது பஞ்ச பிரும்மாஸன ஸ்திதே, கதம்பவன வாஸினி, ஜனக சிவபோதினியை, உன்னுடைய கவர்க்கம் சவர்க்கம் ஆகிற பத்து எழுத்துக்கள் பத்து சக்திகள். ஐம்பது எழுத்துக்கள் உள்ளடங்கிய குண்டலியின் சக்தியாக விளங்கு கிறது. கௌலினி, பத்து இந்திரியங்களை அடக்கி ஸத்பத மாகிற உன்னுடைய பக்தியில் என்னை நியமிக்கும் மரீசி நிகர்ப்ப யோகினி. ஹே சர்வாணி, ஸமயாசார தத்பரா, உன் னுடைய தலையின் கூந்தல், உத்தமமான யானைகளையும், வண் டுகளையும் ஜயித்து, அழகாய் (புன் நாகமாக) விளங்குகிறது. மங்கள ஸுவாஸினி, என்னிடம் பிரியமாக இரு. உன்னையே விஷயமாகக் கொண்ட என்னை உன் பக்தனுக நீதான் ஸ்வீக ரிக்க வேண்டும். பத்துக் கலைகளோடு கூடிய அக்னி ஸ்வரூப மாக விருப்பவளே, உன்னைத்தானே ஸர்வ ரக்ஷாகரம் என்று நம்பி வாழ்கிறேன். தாயே, குருகுஹ பிரியனுகிய என்னிடம் பிரியம் வை. அம்மா பிரியம் வை. அம்மா, கெஞ்சிக் கேட் கிறேன்.]

கும்பகர்ணனை பவனு ஸுதனுகிற ஹனுமார் ஒரு குத்து விட்டார். அதனால் கும்பகர்ணன் மதி கலங்கி பூமியில் விழுந் தான். சிறிது நேரத்திற்குப் பின் அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து ஹனுமான்ஜியை ஒரு குத்து விட்டான். அதனுல் ஹனுமான்ஜி மனம் கலங்கி, உடனேயே பூதளத்தின்மீது விழுந்தார். (394)

அதன்பிறகு, அவன் நளனையும் நீலனையும் பூமியில் பிடித் துத் தள்ளி, மற்ற வானரர்களையும் அடித்து உதைத்து துன் புறுத்தினுன். வானர கரடி சேனைகள் சிதறியன. அத்யந்த பய பீதி கொண்டவர்களாக அவர்கள் நான்கு திக்குகளிலும் ஓடினுர்கள். (395)

அங்கதனும் சுக்ரீவனும் மூர்ச்சை யடைந்து விட்டார்கள். மற்ற வானர வீரர்களும் அடிபட்டு கீழே விழுந்துவிட்டார்கள். அமித பலம் கொண்ட கும்பகர்ணன் சுக்ரீவனைத் தனது கைக ளின் அடியில் (கக்ஷத்தில்) நசுக்கிக்கொண்டு, அவனை எடுத் துக்கொண்டு, மேலும் யுத்தம் செய்வதற்கு ஸிம்மநாதம் செய்

தான். (396)

சிவன் உமையிடம் சொன்னார், "உமா, ரகுபதியின் மானிட லீலைகள், விளையாட்டுக்கள் அபரிமிதம். அவருடைய மனித விளையாட்டுக்கள், கருடன் சர்ப்பக் கூட்டங்களின் நடுவே எவ்விதம் விளையாடுவாரோ, அதைப்போல விருந்தன. எந்தப் பிரபுவினுடைய புருவ நெருப்பினால் ஒருவித பரிஸ்ரம மின்றி காலனைக்கூட முழுங்கி விடுவாரோ, அந்தப் பிரபுவி னிடம் சண்டை போடுவது அழகாக விருக்குமா? சண்டை செய்கிறவனுக்குத்தான் சோபையைத் தருமா? அந்தப் பிரபுவே சண்டை செய்வாரா? மஹா கிருபாளு, [யாவரையும் தனது புத்ரனைப்போல பாவிக்கும் ஸ்வபாவமுள்ள என் ரகுநந்தன்] தன்னுடைய குழந்தைகளிடமே சண்டை செய்வாரா?" (397)

"அவருடைய நாமத்தை ஒரு தடவை உச்சரித்தால் ஸகல ஜன்மாக்களின் பாபக் கூட்டங்கள் நசித்து விடுமே. அப்பேர்ப்பட்ட பதித பாவனன், ஜகத்பாவனன் தனது குழந் தைகளையே அழித்தால் சந்தோஷப்படுவாரா? அவருடைய மங்களமான கீர்த்திகள் அவ்விதம் செய்தால் சாஸ்வதமாகத்தா னிருக்குமா?" (ஸகல புவனங்களிலும் அவர் புகழப்படுவாரா? விஸ்தாரமான கீர்த்தி புகழ்களை உடைய என் ரகுநந்தனன் தன்னுடைய முயற்சியால் தனது குழந்தைகளைப் பவ சாகரத்தி லிருந்து தப்ப வைக்கிறாரே, அவர் போராடுவாரா?] இந்த கும்பகர்ணனின் நிக்ரஹத்தின்மூலம், பிரபு தன்னுடைய நிருபாதிக கிருபையை அல்லவோ பிரகடனப்படுத்தி, அதை கானம் செய்யும் என் போன்றவர்களை பவ சாகரத்திலிருந்து தூக்கி, அக் கரை சேர்க்கிறான்." [அப்பேற்பட்ட ஜகத்பாவனன் பத்த பாவனன் ரகுநாயகன் என்னைக் காப்பாற்றமாட்டாரா? துளசிதாஸரைப் புறமாக வைத்து நமஸ்கரிக்கும் என்னிடம் கருணையைக் காட்டுவாரா? ஹே உமா சங்கரரே, நீங்கள்தான் என் மனத்தை அறிந்தவர்கள். எனது பாபங்களையும் அறிந் தவர்கள். ஸர்வ சாக்ஷிகளான நீங்கள் ரகுநந்தனிடம் சென்று எனது ஆற்றாமையையும், அகிஞ்சனத்தையும் சொல்ல வேண் டும்.] இதற்குள் வாயு குமாரனாகிற ஆஞ்சநேயர் முழித்துக் கொண்டார். முதல் காரியமாக அவர் சுக்ரீவனைத் தேட ஆரம்பித்தார். (398)

சுக்ரீவனுடைய மூர்ச்சையும் கழிந்தது. உடனே அவன் தனது நிலையை உணர்ந்து, கும்பகர்ணனுடைய கரங்களி லிருந்து நழுவி அவனுடைய சிரத்தின்மேல் பாய்ந்தான். கும்ப கர்ணன் சுக்ரீவன் இறந்து விட்டான் என்று கருதி யிருந்தான். அதனால் அவனுக்கு சுக்ரீவனின் நினைவு யேற்படவில்லை. இதற்குள் சுக்ரீவன் கும்பகர்ணனுடைய காதுகளையும், மூக்கையும் கடித்துவிட்டு, கர்ஜனை செய்துக்கொண்டு ஆகா சத்தின்மீது பாய்ந்து உயரக் கிளம்பினான். (399)

அப்பொழுது கும்பகர்ணன் சுக்ரீவனைக் கால்களால் பிடித்து, பூமியில் வீசி எறிந்தான். பலவானான சுக்ரீவன் லாவகமாக அவனுடைய பிடியிலிருந்து தப்பி, கும்பகர்ண னுடைய பின்புறத்தில் ஒரு உதை கொடுத்துவிட்டு, பிரபு ஸ்ரீ ராமச்சந்திரனை அடைந்து, "ஜயதி ஜயதி ஜய கிருபாநிதான், ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு நமஸ்காரம்" என்று சொல்லிக்கொண்டு பிரபுவின் நிழலை அடைந்தான். (100)

[ *தியானம்*

ஹே சீதே, மஹாலக்ஷ்மி, நாராயணப்ரியே, உமா, நாரா யணா, சீதாராமா, சரணம் சரணம். ஹே சீதே, உன்னிடம் ஏன் ராமன் காமவசனாகிறான்? உமாதேவியே, உனனை அஹங்காரம், காமம், க்ரோதம் யாவற்றையும் தியாகம் செய்த சம்பு ஏன் உன்னை தர்மவத்ஸலையென்றும், பிரியமானவளே என்றும், உன்னை ஐக்யமாகச் சேர்த்துக்கொண்டார்? ஹே சரஸ்வதி, உன்னை ஏன் பிரும்மா என்றும் எந்த அவஸ்தையி லும் பிரியமாட்டாமல், தன் நாவில் உனது ஸ்வரூபத்தைத் தேக் கிக் கொண்டார்? ஹே ரெங்கநாயகி, அலர்மேல் மங்கையே, நீ பகவானைவிட்டு என்றும் பிரியாதவள் என்று நிரூபணம் செய் வதற்காக அவனுடைய வக்ஷஸ்தலத்தில் உறைந்து, அவனை மலர்மார்பா என்கிற திவ்ய நாமத்தினாலும் ஸ்ரீவிபாபனர், ஸ்ரீதர், ஸ்ரீசர் என்கிற திவ்ய நாமங்களாலும் அழைகக்கப்படும்படி செய் கிறாய். ஹே உமா, தந்திரங்களில் முப்பத்தாறு தத்வங்களாகவும் பாரத தேசத்தில் முப்பத்தாறு பீடங்களாகவும், எனது ஹ்ருதயத் தில் ஹ்ருஷீகேச சிவசக்தி ஐக்ய கருணாமூர்த்தியாகவும், எனது க்ஷேத்திரத்தில் க்ஷேத்திரகஞனாக, மூலாதாரத்தில் காம

கிரியாகவும், அனுஹதத்தில் பூர்ண கிரி பீடமாகவும், விசுத்தியில் ஜாலந்திர பீடமாகவும், ஆஜ்ஞையில் ஒட்யாண பீடமாகவும், பரா, பஸ்யந்தி, மத்யமா, வைகரி, என்கிற வடிவில் ஆராதிக்கப்படுகிருயே, என்னிடம் நீ பிரியம் காட்டமாட்டாயா? சப்த வடிவில் ஐம்பத்தொரு அக்ஷரங்களாலும் நாத யோகத்தில் ஸப்த ஸ்வரங்களாகவும் எனக்கு காக்ஷி அளிக்கும் பரதேவதையே, நீதானே எனக்கு ஸர்வார்த்த தாத்ரி, ஸர்வ வியாதி பிரஸமனி, ஸர்வ ம்ருத்யு நிவாரணி, கலிகல்மஷ நாசினி, ஸர்வோபத்ரவ நிவாரிணி, பசுபாச பந்த மோசனி, "ஹே மனமே, இது உனக்குத் தெரியவில்லையா? எனக்கு அந்த பரமேஸ்வரியைவிட பரம் ஒன்றுமில்லை. அவளிடம் பக்தி செலுத்தி, அவளுடைய அனுக்ரக்ஷத்தை அடைந்துகொள்," என்று பல தடவைகள் சொன்னலும், நீ ஏன் அறிந்துகொள்ள மாட்டேன்கிருய்? அவள்தான் உனக்கு ஆஸ்ரித கல்ப வாடிகை. சண்டிகே, ஜகதம்பிகா, கங்கை, நர்மதா, காவேரி, கிருஷ்ணு, கோதாவரி, வைகை முதலிய புண்ணிய தீர்த்தங்களால் ஸேவிக்கப்பட்ட மஹா தீர்த்த ரூபிணி, என் பாபங்களை நாசம் செய்ய மாட்டாயா? உனது ஸௌம்ய ரூபமாகிற ஸகுண ஸ்வரூபத்தை பிரகடனப்படுத்தமாட்டாயா? ஹே சீதே, மஹா தாண்டவ ஸாக்ஷிணி, உன்னை அந்தரியாமியாகவும் பஹிர்யாகம் எனப்படும் பூஜை முறைகளாலும், ஸத்கதியைத் தரும் மந்திரங்களாலும் ஸர்வ மயமாக விருக்கும் தந்திரங்களாலும், "பரதேவதை" என்று விமர்சனம் செய்யக்கூடிய மஹாரூபம், மஹாபூஜ்யை, மஹா மாயை, மஹா ஸத்வை, மஹா சக்தி, மஹா போகா, மஹா ஐஸ்வர்யை, மஹா வீர்யை, மஹா பலா, மஹா புத்தி, மஹா ஸிததி, மஹா யோகேஸ்வரி, என்று பல்விதங்களாக உன்னை நான் ஆராதனை செய்து கொண்டிருக்கிறேனே. நாராயணி, உனது ரூப ஸௌந்தர்யம் ஆச்சர்யமாக விருக்கிறது. ஹே லங்கேஸ்வரி, சமுத்திர மத்தியில் ரத்ன தீபம் என்கிற என்கிற தீவிலிருக்கும் காமேஸ்வர பிரேம ரத்னமணி, ராஜசந்திர வதனு, ராஜீவநயனு, இந்திரனுலும் கமலாஸனரான பிரும்மாவினுலும், பராசரராலும் ஆராதனம் செய்யப்பட்ட கமலபதே, நீதானே பஞ்சதன் மாத்திரைகளாகவும், அவைகளில் பிரபையாக விருக்கும்

ஹ்ரீங்கார தேவதையே, நீதானே ஹ்ரீங்காரமாகிற விருக்ஷத்தின் மலர் கொத்தாகவும் காயும் பழமாகவும் அடிவேராகவும் இருக்கிறாய். என்னுடைய சரீரமாகிற க்ஷேத்திரத்தில் க்ஷேத்ரக்ஞனாக விருக்கும் பத்ம தேவதையே, ஆத்மானுபாவம் என்கிற போகத்தை நீயல்லவோ அடைகிறாய். மந்திரிணி, தந்திரிணி, தேவதைகளால் பக்தியுடன் வணங்கப்படும் கமலாம்பிகையே. சப்த பிரும்மம், அதனால் கல்பிக்கப்படும் கற்பக தருவாகிற ஜகதாம்பிகையாகிற அனுமான பிரும்மமே, என்னுடைய பராதி வாக் தேவதையே, என் ரோகங்களை நாசம் செய் அம்மா. நிராமய ராஜயோகினி, சரீராத்மக ஸர்வரோக ஹர யோகேஸ்வரி, உனது கைகளில் மங்களாக்ஷதையும், பத்ம மலரும், தம்புராவும், வீணையும் இருக்கின்றன. மது மதுரமான குரல் இசையாக விருக்கும் நாத ரூபஸுந்தரி, ஸுர நர முனி ஜன மோதினி, என்னுடைய க்ஷேத்ரத்தில் இருந்து கொண்டு சுக ஆனந்தத்தை வாரிக் கொடுக்கும் ராம ரமாதேவி, மஹா நாராயணி, காமாக்ஷி, குரு குஹனுக்கு வர பிரஸாதம் அளித்த தாயே, உன்னை "நமஸ்தே" "நமஸ்தே" என்று நமஸ்கரிக்கிறேன். ஸ்வாஹா, ஸ்வதா ரூபத்தில் இருக்கும் திரிபுராஸ்ரீ:, மஹா மஹா ரூப்தே, என்னுடைய மஹாஸ்ரீ, எனது கமலா நகரத்தில் வரத பிரஸன்னமாக விருக்கும் ஸாம் ராக்ஞே, உன்னை நமஸ்தே நமஸ்தே, ஸ்வாஹா, ஸௌ: க்லீம் ஐம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் என்று சொல்லி சரணமடைகிறேன். லலிதே, ஸ்ரீபதே, சிவ ஸஹிதே, சிவபரா, அப்ரமேயா, மனோவாசாம கோசரா, ராஜயோகசுகி மன்மதன், நந்தி கேஸ்வரர், விஷ்ணு, ஸூர்யன் போன்றவர்களால் ஆராதிக்கப்படும் சந்திராகலாதரி மஹாதிரி புவனேஸ்வரி, ஏகாக்ஷரி, விஷ்வக்ஸேனர் ஸந்நிதியில் நமஸ்கரிக்கும் என்னை பாஹி, ரக்ஷி சிவே.]

கும்ப கர்ணனுடைய மூக்கு, காதுகள் கடிக்கப்பட்டதும் அவனுக்குக் க்ரோதம் அதிகரித்தது. அவனுடைய மனம் தனக்கு ஏதோ ஆபத்து நேரப்போகிறது என்பதை முன் கூட்டியே சூசிப்பது போல விருந்தது. அவனுடைய ஸ்வாபாவிகமான சரீர ஆக்ருதி பீம பயங்கரமாக விருந்தது. அவனுடைய திடமான எண்ணத்தாலும் அத்யந்தக்ரோதத்தினாலும், அவனுடைய பீம பயங்கர ஸ்வரூபம் விருத்தி அடைந்தது.

அவனுடைய கோர ரூபத்தைக் கண்ட வானரர்கள் மிகவும் கலக்கமடைந்தார்கள். (401)

அவர்கள் சீதாராமனைப் பார்த்தார்கள். அவர்களுடைய கவலைகளும் வருத்தங்களும் பொறுப்புக்களும் நீங்கினவர்களாக, ஜய ஜய ஜய ரகுவம்சமணி, என்று கோஷித்துக்கொண்டு பயம் நீங்கினவர்களாக அவர்கள் கும்பகர்ணனை நோக்கிப் பாய்ந்து ஓடினார்கள், அவன் மீது மலை சிகரங்கள் விருக்ஷங்கள் யாவற்றை யும் வீசி எறிந்தார்கள். ஒரே மாத்திரமாக அவன்மீது கல் மழையைப் பொழிந்தார்கள். (402)

கும்பகர்ணனும் யுத்தத்தில் உத்ஸாஹம் கொண்டவனாக தீவிரமாக யுத்தம் செய்வதற்கு ஸன்முகனை, காலனே கோபம் கொண்டு யுத்தத்திற்கு வந்தது போல சண்டை செய்தான். கோடிக் கோடிக் கணக்கான வானரர்களைப் பிடித்து அவன் சாப்பிட்டான். அவனுடைய வாய் அகண்டமான மலையின் குஹை போலவும், அதினுள் ஆயிரக்கணக்கான பூச்சிகள் உட் சென்று கொண்டிருப்பது போலவும் அது காக்ஷி அளித்தது. (403)

கும்பகர்ணன் கோடிக்கணக்கான வானரங்களையும் கரடி களையும் பிடித்து அவர்களுடைய சரீரங்களைக் கசக்கிப் பிழிந் தான். கோடிக்கணக்கான வானரங்களைப் பிடித்து மற்ற வானரங்களின் மீது வீசி எறிந்து நாசம் செய்தான். கோடிக் கணக்கான வீரர்களைத் தனது உள்ளங்கையில் கசக்கி, அழித்து. பூமியில் தள்ளினான். வானரர்களின் மூக்கு, நாக்கு, கை, கால்கள், காதுகள் அறுபட்டு, அவர்கள் நாலா பக்கங்களிலும் பயந்து ஓடினார்கள். அதேமாதிரி கரடிகளும் பயம் கொண்டு ஓடினார்கள். (404)

ரணமதம் கொண்ட ராக்ஷஸனான கும்பகர்ணன் (கர்வித பண்டாசுரனைப் போல) காக்ஷி அளித்தான். அவனைப் பார்த்தால் பிரும்மா அவனுடைய கரங்களில் ஸகல பிரபஞ்சங் களையும் படைத்து அவனிடம் அர்ப்பித்து, தர்ப்பணம் செய்த மாதிரியாக விருந்தது அவன் ஸகலத்தையும் முழுங்கி ஏப்பம் விட்டவன்போல காக்ஷி அளித்தான். அவனுடைய யுத்த வீர்யத்தைக் கண்ட ஸகல வீரர்களும், தூண்டப்பட்டும், யுத்தம் செய்வதற்கு வர பயப்பட்டார்கள். அவர்கள் கும்பகர்ண பீதியினால் அவனிருக்கும் இடத்தையே பார்க்க மனம்

கூசினார்கள். அவனுடைய குரலைக் கேட்டவுடனே பயத்தினால் ஒன்றையும் கேட்க விரும்பவில்லை. அவர்களுடைய மனத்தில் பயத்தைத் தவிர ஒன்றும் குடிகொண்டிருக்கவில்லை. (405)

கும்பகர்ணன் வானர கரடி சேனையை நாலா பக்கத்திலும் சிதறி அடித்தான். அதைக் கண்டு ராக்ஷஸ சேனைகள் யுத்த களத்தில் முன்னேறிக்கொண்டு ஜயகோஷம் செய்தார்கள். என் பிரபு ராமன் இந்த ஸ்திதியைப் பார்த்தார். பிறர் துக்கத்தை சகிக்க மாட்டாத என் பிரபு தனது வியாகுலத்தை வெளிப்படுத்திக் கொண்டு, முன்னேறி வரும் சத்ருவின் சைன்யத்தைக் கண்டார். மேலும் மேலும் சேனைகள் புதிதாக வந்து கொண்டிருந்தன. (406)

ராஜீவ நயனங்களைக் கொண்ட அரவிந்தாக்ஷர் என் பிரபு ஸ்ரீசீதாராமன் சொன்னார், "சுக்ரீவா, விபீஷணா, கேளுங்கள். நமது சேனையைக் கட்டுப்படுத்துங்கள், அமைதியாகவிருக்கும் படி செய்யுங்கள். நான் இந்த துஷ்டனைக் கவனித்துக் கொள்கிறேன். அவனுடைய பலத்தை அடக்குகிறேன். ராக்ஷஸ ஸேனையுடனும் நான் ஒருவனே சண்டை செய்கிறேன்." (407)

பிரபு சாரங்கபாணி, தன்னுடைய கோதண்டத்தை டங்காரம் செய்தார். (பாற்கடலைக்கடையும்போது வீரபாஹுவாகத் தோன்றின என் பிரபு ரகுநாதன்) சார்ங்கதன்வா, ஸுதன்வி, கச்சத்தைக் கட்டிக்கொண்டு சத்ருவின் சைன்யத்தில் புகுந்தார். அதுளித பலத்துடன் விளங்கும் ஸ்ரீரகுநாதன் சத்ருவின் மதத்தை அடக்கும் தனது கோதண்டத்தின் நாணொலியால் சத்ருக்களுக்குப் பயத்தை உண்டு செய்தார். அவர்களுடைய காதுகள் அந்த சப்தத்தைக் கேட்டதும் மந்தமாகி விட்டன. (408)

(ஸத்ய காமர் என் பிரபு ஒரு தடவைதான் ஸங்கல்பம் செய்பவர். மனம் மாறாதவர்.) ஸத்யஸந்தர். ஆஸ்ரிதகல்பதரு. ஒரு தடவை அஸ்திரம் விடுவதோ. (ஒரு தடவை ரக்ஷிப்பேன் என்று அபய பிரதானம் செய்வதோ, மஹா லக்ஷ்மியாகிற சீதையை ஏக மாத்திரமாக அனுபவிப்பதிலேயோ,) என் பிரபு நின்ற நிலையுள்ளவர். வில்லை வளைத்து கால ஸர்ப்பம் போல ஒரு லக்ஷம் அஸ்திரங்களை லாகவமாகப் பூட்டி என் பிரபு ராக்ஷஸர்கள் மீது பிரயோகித்தார். எங்கு எங்கு அந்த

அஸ்திரங்கள் சென்றனவோ, அங்கே ராக்ஷஸர்கள் மாண்டு போய் பிணங்களாக விழுந்தார்கள். (409)

ராக்ஷஸர்களின் கால்கள், கைகள், சிரங்கள், இடுப்பு பிர தேசங்கள், யாவும் வெட்டப்பட்டு, அவர்கள் பூமியில் விழுந்தார்கள். அநேக வீரர்கள் துண்டம் துண்டமாக வெட்டப் பட்டார்கள். அநேகம் பேர்கள் சுழன்று கொண்டு மதி மயக்க மடைந்தவர்களைப் போல பூமியில் விழுந்தார்கள். காயமடைந் தவர்களில் சிலர் வீர முழக்கம் செய்துகொண்டு பிரபுவினிடம் சண்டை செய்யக் கிளம்பினார்கள். (410)

ரகு நாயகர், ராக்ஷஸர்களின் காலாந்தகன், தான் ஸ்வய மாக விளங்கும் அம்ருத்யு, மீண்டும் பாணங்களை ராக்ஷஸ ஸேனைகளின் மீது மேகவர்ஷம் போல வர்ஷித்தார். அந்த அஸ்திரங்கள் மேலே பட்டவுடன் சில ராக்ஷஸர்கள் வலி பொறுக்க முடியாமல் மேக கர்ஜனை செய்தார்கள். இன்னும் சிலர் பயந்து கொண்டு ஓடத் தொடங்கினார்கள். தலை யில்லாத முண்டங்களும், கைகளில் பிரசண்டருண்ட ராக்ஷஸ வீரர்களும் ராமனை நோக்கி, ஓடி வந்தார்கள். அவர்கள் வரும் போது "பிடியுங்கள், பிடியுங்கள்," "கொல்லுங்கள் கொல் லுங்கள்," என்று சத்தமிட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். (411)

பிரபுவின் பாணத்தினால் க்ஷண மாத்திரத்தில் அநேக ராக்ஷஸர்கள் மாண்டார்கள். பயங்கரமான ராக்ஷஸர்கள் அடி பட்டு விழுந்தார்கள். ராக்ஷஸ சேனை முழுவதும் அழிந்துபோய் விட்டது. அதே க்ஷணத்தில் அந்த அஸ்திரங்கள் ஸ்ரீராம னுடைய அம்புராத்துணியில் பெரிய சத்தம் போட்டுக் கொண்டு வந்து நுழைந்தன. (412)

ராக்ஷஸ ஸேனை முழுவதும் அழியப்பட்டதைக் கண்டான் கும்பகர்ணன். அவனுடைய மனம் அதிக வியாகுலமடைந்து, மஹா பலவானுகிற கும்பகர்ணன் அத்யந்த கோபம் கொண் டான். அப்பொழுது அவன் மிருகேந்திரனை சிம்மம் கர்ஜிப் பது போல கர்ஜித்து சிம்ம நாதம் செய்தான். (413)

[*தியானம்*

ஹே கமலாம்பிகே, சரணம் சரணம். உன்கையில் வைத்

திருக்கும் கிளியாரம்மா சொல்? அந்த பாக்யமுள்ளவனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். நீதானே லோக பாலினி. எனது மதத்தை அடக்கும் சூலினி. திரிலோக ஜனனி, நீதானே எனது பகமாலினி. ஹே ஸாத்வி, நீதானே ஸர்வ ஸித்தி பிரதாயினி. திரிபுராம்பிகே, எனக்கு பாலாம் பிகையாகக் காக்ஷி அளிக்கிருய். மங்கள மூர்த்தியே, உன் ஹ்ருதய கவாடத்வாரத்தில் வீற்றிருக்கும்என்னை, எனதுஸந்தர் பங்களை ஒழிக்க, ரத்ன மணிகண்டா ஓசையை எழுப்பி, அம்ருத கருணை பிரவாஹத்தை என் மீது பாய்ச்சி, ,என்னுடைய ஹ்ரு தய நிவாஸத்தில் இடம் பெற அனுகிரஹி அம்மா. காமேஸ் வரி சக்தி கூட்டங்களால் பூஜிக்கப்படும் என்இஷ்டமூர்த்தியே, நீதான் எனக்கு அகண்ட ஏக பிரேமை ரஸம், தாஸ்ய, புத்ர உள்ளத்துடன் வந்திருக்கும் என்னை ஆஸ்ரயம் செய்து கொள். என் ராகத்தை ஸம்ஹரிக்கும் பாசத்தையும், எனது த்வேஷத் தையும் மதனம் செய்யும் அங்குசத்தையும் தரித்துக்கொண் டிருப்பவளே, எனது பஞ்சதன் மாத்திரை, அந்தக்கரணம், யாவற்றையும் மர்த்தனம் செய்வதற்கு கரும்புவில்லையும். அம்பு களையும் கைகளில் தரித்துக்கொண்டிருக்கும் ரஹஸ்ய யோகினி, விஷ்ணுவுக்கும் பரமாகவிருக்கும் நாராயணி, என் மீது கருணை செய் அம்மா. எனது அஹங்காரத்தை அடக்கும் குருகுல்லா தேவி, ராமஸஹிதே, சிவஸஹிதே,மஹாலக்ஷ்மிநாராயணு, உன் னுடைய ராஜீவ நயனங்களுடன் கூடிய ராஜ சந்திர முகத்தை எப்போது நான் காண்பேன்? எனது திருஷ்ணை உனக்குத்தெரிய வில்லையா? சந்திரஸஹோதரி, குருகுஹபக்தனுகிற என் னிடம் அருள் கொண்டு சுகத்தைத் தரமாட்டாயா? உன்னுடைய கேசாதி பாதஸேவை எனக்கு உனது கருணு கடாக்ஷங்கள் எப் போது கிடைக்கும்? லங்கேஸ்வரி, ஸ்ரீநகரவாஸினி, மராளி மந்த கமனு, மஹாலாவண்ய ஸேவிதா, பவானி, என்னுடைய பவா ரண்யத்தை உனது கோடாலியினுல் வெட்ட மாட்டாயா? உனக்கு என் போன்ற பக்தர்களை ஸம்ரக்ஷிப்பதைத் தவிர வேறு எண்ணமில்லை என்று பூர்வாசிரியர்கள் சொல்லுவார் களே? என்னிடம் கருணை செய் உனது ஹ்ருதய கவாடத் வாரத்தை எனக்கு அடைக்கலமாக நீ திறந்து விடமாட்டாயா? உனக்கு யாருடைய சக்தியாவது தேவையா? இல்லை, உன்னை

நாரதாதிமார்க்கண்டேய ரிஷிகள், "நிராதாரா, ராகமதனி, மத நாசினி, நிரஹங்காரா, மோஹ நாசினி, நிர்மமா, பாப நாசினி, நிஷ்க்ரோதா, கிரோத சமனி, லோப நாசினி, நிஸம்சயா, பவ நாசினி, மிருத்யு மதனி, துஷ்ட நிக்ரஹா, துக்கஹந்திரி, ஸுகப்ரதா, தோஷவர்ஜிதா," என்கிற பல நாமாக்களால் ஆராதனம் செய்கிறார்கள், உன்னுடைய பிரபாவத்தை யாராவது வர்ணிக்க இயலுமா? ஹே அம்பிகே, பகவதி, நீ அனந்தை. பிரும்மா, விஷ்ணு, ஹரர், இந்திரன், ரிஷிகணங் கள் ஆகிய எல்லோரும் உன்னை ஆராதித்து அல்லவோ பெருமையை அடைகிறார்கள். ஹே பரமேஸ்வரி, சித்தேஸ்வரி, சண்டிகே, அகில ஜகத் பரிபாலனார்த்தம் அசுபங்களை நாசம் செய்வதற்கும் ஸதா நீ புத்தியைச் செலுத்திக் கொண்டிருக் கிறாய். என்னுடைய சுக்ருதஸ்ரீ: பாக்யலக்ஷ்மி, நீதானே. ராஜலக்ஷ்மி, பாபிகளைக் கெட்ட வழியில் ப்ரேரணை செய்து நாசத்தை அடைய வைக்கும் சாமுண்டா, நீதானே என் னுடைய ஸத்காரியங்களுக்கு சிரத்தையாகவும், குலஸ்திரி களின் பிரபாவமாகிற லஜ்ஜையாகவும் ஹே விஸ்வபாலினி நீதானே விளங்குகிறாய். உன்னுடைய ரூபம் அசிந்தனீயம். அசுரர்களை நாசம் செய்யும் ஹே பராசக்தி, நீதான் எனக்கும் ஸமஸ்த ஜகத்திற்கும் சுபாஸ்ரயம். தேவி, நீ திருப்தியாக வும், ஸ்வாஹாவாகவும், ஸ்வதாவாகவும், முக்தி ஹேதுவாக வும் விளங்குகிறாய். பரமா, தேவி, பகவதி, பரமார்த்த ஹந்திரி, துர்க்காதேவி, கௌரி, பரிபூர்ண சந்திரா, கனகம் போல பிரகாசிக்கும் காந்தி தேவியே, மஹிஷாஸுர மர்த்தினி, தர்ம ஸம்வர்த்தினி, சத்ரு நாசினி, உன்னுடைய ஸௌம்ய ரூபத்தை கருணையுடன் பிரகடனம் செய்யமாட்டாயா? நீதான் எனக்கு ஸர்வரக்ஷகம் ]

கும்பகர்ணன் க்ரோத வசமடைந்து ஒரு பர்வதத்தைப் பெயர்த்து எடுத்து, அதை வானரர்கள் மீது அடித்தான். அந்த பர்வதம் வருவதை அறிந்த என் பிரபு பிரசண்ட கோதண்ட ராமன் ஒரு அஸ்திரத்தினால் (கிரௌஞ்ச மலையைப் பிளந்த குஹப்பெருமானைப் போல,) அதைப் பிளந்தார். அதைப் பார்த்த கும்பகர்ணன் மீண்டும் பர்வதங்களைப் பெயர்த்து வாரி இறைத் தான். என் பிரபு சார்ங்க தன்வா அவைகளையும் உடைத்து

தூள் தூளாகப்பொடி செய்தார். (414)

அவனுடைய ராக்ஷஸ சேஷ்டிதங்களைக் கண்ட ரகுநாயகர் க்ரோதமடைந்து தனுஷ்ஷில் பயத்தைத் தரும் அநேக அஸ்திரங்களைப் பூட்டி கும்பகர்ணனைக் கால சர்ப்பம்போல் பீடித்தார். அவருடைய பாணங்கள் மலைபோலிருக்கும் கும்பகர்ணனுடைய சரீரத்தை (க்ரௌஞ்ச மலையைப் பிளந்த குஹப் பெருமானுடைய வேலாயுதத்தைப் போல பிளந்து,) சத்தம் செய்துகொண்டு அவனுடைய ரத்தத்தைக் குடித்தன. அதன் பிறகு அவைகள் அவன் சரீரத்திலிருந்து முதுகுப் புறமாக வெளிவந்து, மின்னல் கூட்டங்கள் கனமானதும், அடர்த்தியான மேகக் கூட்டங்களின் நடுவே பிரகாசிப்பது போல பிரகாசித்தன. (415)

கும்பகர்ணனுடைய கருப்பு சரீரத்திலிருந்து அருவியைப் போல ரத்த பிரவாஹம் பெருகியது. அந்த காக்ஷியைப் பார்த்தால் அஞ்சன மலையில் சிகப்பு நிறமுள்ள பூங்கொத்துக்கள் முளைத்தன போலவிருந்தன. அவனுடைய ஸ்திதியைப் பார்த்ததும், கரடிகளும் வானரங்களும் அவனிடம் நெருங்குவதற்கு ஓடி வந்தன. வானரங்களும் கரடிகளும் சமீபம் வந்ததும், அவைகளைப் பார்த்து கும்பகர்ணன் பலமாகச் சிரித்தான். (416)

மஹாநாதம் செய்தான். மஹா கோரமாக அவன் கர்ஜித்தான். கோடிக் கோடிக்கணக்கான வானரங்களையும் கரடிகளையும் பிடித்து அவன் பூமியில் அடித்தான். அவ்விதம் அவன் அவர்களை அடிக்கும்போது, ஒரு கஜராஜன் பூமியில் தனது கால்களில் சிக்கிய வஸ்துக்களை கசக்கி நாசம் செய்யும்போது, எவ்விதம் பிளிரிக்கொண்டு, மதம் பிடித்துக் கத்துமோ, அதைப்போல செய்துகொண்டு, அடிக்கடி ராவணனுடைய பெயரை ஸ்மரித்து ஜயகோஷம் செய்துகொண்டு, ராக்ஷஸர்களை உத்ஸாஹப்படுத்தி, தானும் மஹா வீரத்துடன் யுத்தம் செய்தான். (417)

இதைப் பார்த்ததும் கரடி வானரக் கூட்டங்கள் பயந்துகொண்டு ஓட்டம் பிடித்தன. ஒரு ஓநாயைப் பார்த்த செம்மறி ஆட்டுக் கூட்டங்கள் எவ்விதம் கதிகலங்கி, நாலு பக்கங்களிலும் ஓடுமோ, அதைப்போல எல்லோரும் ஓட்டம் பிடித்தனர்.

சிவன் பவானியிடம் சொன்னார், "ஹே பவானி, வானரங்களும், கரடிகளும் வியாகுலமடைந்து, அகிஞ்சனர்களாகவும், தீனர்களாகவும் ஸ்ரீராமனை உதவிக்கு அழைத்தார்கள்." (418)

அந்த வானரக் கூட்டங்கள் கதற ஆரம்பித்தன. "இந்த ராக்ஷஸனுகிற கும்பகர்ணன் துர்பிக்ஷத்திற்குச் சமானமாக விருக்கிறுன். வானரங்களைப் பிரஜைகளாகக் கொண்ட கபி ராஜ்யத்தையே இவன் நாசம் செய்து பாழாக்குகிறுன். ஹே ராமா, கராரி, பிரணதார்த்தி ஹாரே, ஆபத்ஸகா, உன்னுடைய கருணையாத்ற மேகஜலங்களை வர்ஷித்து, எங்களைக் காப்பாற்று. உங்களுடைய உதவியின்றி நாங்கள் அரைக்ஷணம் வாழ முடியுமா?" (419)

பகவான் ஸ்ரீ சீதாராமன் கருணையையே வடிவாகக் கொண்டவர். வானரர்களின் தீனமான குரலைக் கேட்டார். தனது கோதண்டத்தை எடுத்துக்கொண்டு அவர் கும்ப கர்ணனை நோக்கிச் சென்முர். வானரர்களையும் கரடிகளையும் பின்னல் வைத்துக்கொண்டு, ஸ்ரீராமன் கோபத்துடன் கும்ப கர்ணனை நோக்கிச் சென்றா. மஹா பலசாலியான என் பிரபு ஸ்ரீராமசந்திரன் கும்பகர்ணனுடன் சண்டை செய்யக் கிளம் பினர். (420)

ஸ்ரீராமன் தனுஷ்ஷை வளைத்து, பாணத்தைப் பூட்டினர். கும்பகர்ணனுடைய சரீரத்தை நூறு பாணங்களால் அடித்தார். பாணங்கள் அவன் மீது விழ, அவனல் வலி பொறுக்க முடியாமல், கோபாக்ராந்தனை ஸ்ரீராமனை நோக்கி ஓடிவந்தான். அவன் ஓடி வரும்போது, மலைகள் அசைந்தன. பூமி நடுங் கியது. (421)

[*தியானம்*

ஹே சீதே, லக்ஷ்மி, நாராயணி, காயத்திரி, ஸாவித்திரி சரஸ்வதி உங்களை நான் அடிக்கடி நமஸ்கரித்து, சரணம் சரணம் என்று சொல்லுகிறேன். மஹாதுர்க்கே, நீதான் அம்மா எனக்கு கதி. ஸர்வ கதி, ஸர்வ பிரளய, ஸாக்ஷிணி, நாத மய, பிரும்ம மய பிரகாசிணி, ஸர்வ ரோக ஹர சக்ர ஸ்வாமினி, நாரத, மார்க்கண்டேய வியாஸ ப்ரியே, நீதானே எனக்கு ஸர்வ ஆதாரம். ஹே கமலாம்பா, மஹாலக்ஷ்மி,

மஹா சீதே, மாதவி உனக்கு ஸர்வ மங்களங்களும், ஸர்வ ஜயங்களும் ஸதா ஏற்படட்டும். ஹேஜயதி ஜயதி கமலாம்பா, எனது ஸ்ருங்கார ரஸ கதம்ப நாயகி, என் மதத்தை அழிக்கும் மதநாசினி, காம கலா பிரதர்சினி, என்னிடம் உனது பிரியத்தை அம்ருத வர்ஷமாகச் செய். ஹே சந்திர ஸஹோதரி, எனக்கு ஜன்ம மிருத்யு ஜராதப்தஜன விஸ்ராந்தி தாயினி, தமயிதே, எனது விஷயத்தில் உனது சித்தம் ஸபலமாகட்டும். நீ சும்ப மஹிஷ மர்த்தினி. தேவி, உன்னிடம் பிரபன்னமாக வந்திருக்கும் என்னை அருள் கொண்டு பார் அம்மா. என்னிடம் சந்தோஷத்தை அடை. என் மனமாகிற ஸ்ரீபுரத்தில் ஸ்ரீபதியாகிற நாராயணனுடன், சிவஸஹிதே, சிவாகார மஞ்சஸ்திதே, சிவ காமேஸ்வராங்க ஸ்திதே, ராமதயிதே, விஸ்வேஸ்வரி, நாக பரியணை மேல் விளையாடும் திருமகள் கேள்வா, ஆழியங் கையனையே ஏற்றிய அரிவரிய பிரானே, பாழியந்தோளுடைய பத்மநாபனே, ஞானமென்னும் வஸ்துவின் பிரதிபிம்ப சந்திரனே, பிம்பாஸ்ரீ, எனது சிந்தாமணியே, நீதான் எனக்கு ஈஸ்வரி என்றும், ஸர்வ சராசரங்களின் ஈஸ்வரி என்றும் பிரகடனப்படுத்தி, நான் சரணமடைகிறேன். வராஹப் பெருமானின் மித்ரே, மஹா திரிபுரசுந்தரி; நீதானே அம்மா ஸர்வ ஆதாரபூதை. ஜகத் ஆதாரமும் நீதானே அம்மா. மங்களமூர்த்தியே ஜகன்மாதா, ஜகந்நாராயணு, நீதானே அம்மா வைஷ்ணவ சக்தி, அனந்த வீர்யை. விஸ்வத்தின் பீஜம், நீ பிரஸன்னம் அடைந்தால்தான் யாவரும் முக்தி அடைய முடியும். அதனால்தான் உன்னை முக்தி ஹேது என்று யாவரும் புகழ்கிறார்கள். ஹே ராஜமாதங்கி, ராஜராஜேஸ்வரி, என் கிருபாவசங்கரி, ஸர்வானந்தமய சக்ரவாஸினி, எனக்கு நீதானே ராம பக்தியை விளைவிக்கும் ஸ்ரீகரி. ஹேராமனுடன் கூடிவாழும் உமாஸுவாஸினி, உன்னை நினைத்து அக்னி, சந்திரன், சூரியன் பிரகாசமடைவது போல நானும் பிரகாசமடைகிறேன். ஸமஸ்த வித்யைகளின் அதிரஹஸ்யமாக விருக்கும் ஸர்வஸாரா, தாமரைத் தண்டுபோல குளிர்ச்சியை எனக்கு தந்து எனது தாபத்ரயங்களை ஒழித்த ஸுகேசி, தயாகரி, பாகசாஸனனைக் காப்பாற்றியது போல என்னைக் காத்து ரக்ஷி அம்மா. பராசரின் கீதம் பாடும்

எனக்கு உன்னுடைய சேர்க்கை ஸம்பந்தத்தைக் கொடு. மஹாமாயை, உன்னை ஸ்துதி செய்து, ஸ்தவ்ய ப்ரியையாகிற ஸ்ரீமாத்ரே நமஸ்தே. சின்மாத்ரே ஸேவிதே, ரமாஹரி ஆகிய வர்களால் ஆராதனை செய்யப்படும் காயித்திரி, ஸாவித்திரி, சரஸ்வதி தேவியே, உன்னை ஆயிரம் தடவைகள் நான் நமஸ்கரிக்கிறேன். காதி, ஹாதி, ஸாதி வித்யா மயமாக விருக்கும் க ஏ ஈ ல ஹ்ரீம் ஹஸக ஹல ஹ்ரீம் ஸகல ஹ்ரீம் பிந்து ஆத்மகே, பராபரே, திரிபுராம்பா ஸமேத காமேசரே, நாராயணி, குணமயீ, உன்னை நான் ஏகமாக வரித்து ஆயிரம் தடவைகள் நமஸ்கரித்து சரணமடைகிறேன். உன்னைச் சரண் புகுந்தவர்களை, தாயே, நீயே அவர்களை ருசிக்கிறாய். தர்ம நந்தினி, ஸுரஸேவிதே, அந்தர் முக ஸமாராத்யா, பஹிர் முக ஸுதுர்லபா, என்னிடம் ஸதா கிருபையுடன் இரு அம்மா, ராஜகோபாலஸ்ரீ.]

கும்பகர்ணன் ஒரு பெரிய பாறையைப் பெயர்த்து எடுத்தான். என் பிரபு ரகுகுல திலகன் ஸ்ரீ சீதாராமன் அவனுடைய கரத்தை வெட்டினார். உடனே அவன் இடது கையினால் மற்றொரு சிகரத்தைப் பெயர்த்துக் கொண்டு ஓடி வந்தான். பிரபு அவனுடைய இடது கையையும் வெட்டினார். அதுவும் பூமியில் விழுந்தது. (422)

அவனுடைய பூதாகார உடலிலிருந்து வெட்டப்பட்ட இரு கரங்கள் மந்திராசலம் என்கிற பர்வதம் இரக்கைகளை யிழந்து எவ்விதம் சோபை யாகவிருக்குமோ, அதைப்போல காக்ஷி அளித்தது. மஹா உக்ர பார்வையினால் அவன் என் பிரபுவைப் பார்த்தான். அவன் முழித்த பார்வையானது திரைலோக்ய லக்ஷ்மியாகிற சகல சராசரங்களையும் முழுங்குவது போல விருந்தது. (ஹிம்சையைத் தொழிலாக உள்ள காம க்ரோதாதிகளால் மதத்துடன் அபிமானமாகப் பிரபுவை அவன் பார்த்தான்.) (423)

வாயைப் பூதாகாரமாகத் திறந்துகொண்டு, கோரமாக சப்தித்துக் கொண்டும், முகத்தை க்ரூர மனத்தினால் விகஸித்த ஆக்ரோஷ விரோத பாவத்துடன் கும்பகர்ணன் ஸ்ரீராமனிடம் ஓடி வந்தான். (ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம் தெழி குரலரு வித்

திருவேங்கடத்து, எழில்கொள் சோதி எந்தைத் தந்தை தந்தைக்கே, தாள் பரப்பி மண் தாவிய) வீசனே முழுங்க வருவது போல ஓடி வந்தான் அந்த பாபாத்மாவான கும்பகர்ணன். ஸகல லோக நாயகரான என் பிரபு கருணு வடிவம் கொண்டு, தன்னை நோக்கி வரும் சேதனனே அருள் கொண்டு நோக்கிப் பார்த்தார். (அரவிந்தாக்ஷர், சங்கு சக்கிரத் தானெகோ சாதி மாணிக்கம், செங்கதிர் முடியன், திருமறு மார்வன், அஞ்சன வண்ணன், அங்க திரடியன், பவளச் செவ்வாயன், பங்கயக் கண்ணன், விநோத சரணங்களைக் கொண்டதும் அருள் கொண்டதுமான வேங்கடேச சரணங்களைப் பார்த்தான் மஹா பாக்கியவாளுகிற கும்பகர்ணன். சாதி நல்வயிரம் என்று சொல்லும்படி திடகாத்திரமான ஸுந்தர தேகம். கரத்ருத கோதண்ட ஹஸ்தன், கமலாம்பிகை எனப்படும் ஜகதம்பிகை யின் நாயகன், ஆதி எம்மான், நாராயணன், ஸ்ரீபுரநாயகன், மஹாலக்ஷ்மியின் அச்சுதன், அடியவர் வினை கெடுக்கும் நாரணன், நச்சு மாமருந்து, நலங்கடல் அமுது, அறுசுவை பொருந்திய அம்ருதத்தின் பிம்பஸ்ரீ, ஜய ஜயராமா, கோதண்ட ராமா, பிரசண்ட கோதண்ட ஹஸ்தா, எனது சிந்தாமணி, ராம, சீதா ஸஹிதன், கண்ணன், மாயன், மஹா திரிபுர சுந்தரி யின் ஹ்ருதய உல்லாஸன், என் பிரபு ஸ்ரீராமன் தனது ராஜீவ லோசனங்களால் அவனைப் பார்த்தார். ஸர்வானந்த மய சக்ரவாளி, எனது ஹ்ருதயத்தில் ஏகம் என்று வீற்றிருக்கும் பிரபுவை மஹா பாப உள்ளத்துடன் முழுங்கப் பார்த்தான்.) அதைக் கண்ட தேவ ரிஷிகணங்கள், சித்த ஸுரர்கள் பயந்து கொண்டு (தாபத்ரயங்களை அழிக்கும் நாராயணு, பராபரனே, அக்னி சூர்யன் சந்திரர்களைப் பிரகாசிக்கச் செய்யும் ஸ்ரீராமா,) "ஹா," "ஹா," (ஸ்ரீமந் நாராயணு, சின்மாத்ரே ஸேவித மஹாலக்ஷ்மி நாராயணு, ஸர்வ வித்யைகளினுல் ஆராதிக்கப் படும் பரதேவதையே நீதானே, அப்பா எங்களுக்கு ஸர்வமும்,") என்று தீனமாக தீனர்களாக ஓலமிட்டார்கள். (424)

(மஹா மந்திர ரூபமுள்ளவரும், பிரேமை பக்தியின் தத்வ மாக விளங்குபவரும், பிரும்ம மய, நாமரூப விலாஸ, நாமரூப விமர்சனம் செய்யும்) கருணுநிதியான என் பிரபு கோதண்ட ராமன், (சகலருடைய மதத்தை அழிக்கும் பயக்ருத் பயநாசனர்,)

தேவரிஷி கணங்களைப் பார்த்து அபய ஹஸ்தத்தைக் காண் பித்து, (நாரதர் என் போன்றவர்களை எவ்விதம் ஹரி நாமம் பயத்தையும் ஆபத்தையும் போக்குமோ) அதுபோல பயத்தை தெளிவித்தார். (யாவையும் யவருந் தானாய் அவரவர் சமயந் தோறும், தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படா னுணர்வின் மூர்த்தி,) என் பிரபு மாதவன். ஸ்ரீ சீதாராமன், ஸ்ரீராமசந்திரன் தனது கோதண்டத்தை காது வரையில் இழுத்து கும்பகர்ணனுடைய வாயில் அஸ்திரங்களை நிரப்பினார். அவ்விதம் பாணங்களால் நிரப்பப்பட்டும் மஹா பலமுள்ள கும்பகர்ணன் பூமியில் விழுந்த பாடில்லை. (425)

வாய் நிரம்ப அம்புகளுடன் கூடிய கும்பகர்ணன் தீவிர எண்ணத்துடன் பிரபுவினிடம் ஓ டி வ ந் த ா ன். அவன் வருவதைப் பார்த்தால் கால ரூபியாகிற ம்ருத்யு உயிருடன் அந்தக கவசத்துடன் ஓடி வருவதுபோலத் தோன்றியது. அப்பொழுது என் பிரபு ரகுநாயகன் அதிகோபத்துடன் தீவிர மான அஸ்திரத்தை கோதண்டத்தில் பூட்டி அவனுடைய சிரத்தை உடலிலிருந்து வெட்டி, உடலைப் பின்னம் செய்து பூமியில் தள்ளினார். (426)

கோதண்டராமனால் வெட்டப்பட்ட சிரம் பத்துத் தலைகளைக் கொண்ட ராவணன் முன்பு போய் விழுந்தது. அவன் அந்த சிரத்தைப் பார்த்து, பய பீதி அடைந்து, ஒரு ஸர்ப்பம் தனது நாகமணியை யிழந்து எவ்விதம் துடிக்குமோ, அதைப் போல துக்கக் கிராந்தகனாக ஆனான். அவனுடைய கர்வம் முழுவதும் ஒடுங்கியது. மிக்க பயம் கொண்டான். கும்பகர்ணனுடைய சிரமற்ற முண்டம் பிரசண்ட வேகத்துடன் பூமியில் தாவி ஓடியது. அப்பொழுது என் பிரபு மிக்க பரிவுடன் அவனுடைய பூத உடலை இரு துண்டங்களாக வெட்டினார். (427)

அந்த இரு துண்டங்களும் பூமியில் விழும்போது வானரர் களையும், கரடிகளையும், ராக்ஷஸர்களையும் நசுக்கிக் கொண்டு, ஆகாயத்திலிருந்து உதறித் தள்ளப்பட்ட இரு பர்வதங்கள் பூமியில் எவ்விதம் விழுமோ, அதுபோல அவைகள் பூமியில் விழுந்தன. அப்பொழுது மஹத்தான ஆச்சரியம் நேரிட்டது. கும்பகர்ணனுடைய பிரும்ம தேஜஸ் பிரபு ஸ்ரீ சீதாராமசந்திர னுடைய வதனத்தின் திருவாயில் புகுந்து அடங்கி லயித்து

விட்டது. [பிரும்ம காய்த்திரி போல விருக்கும் மஹா தேஜஸ், மஹா பிராம்மண்யம், பகவானுடைய வாயில் புகுந்தது.] அந்த ஆச்சரியத்தைக் கண்ட தேவதைகளும் முன் ஜனங்களும் ரிஷி கணங்களும் ஆச்சர்யம் தாங்காமல் "ஜய ஜய ராமா சீதா, நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ, ஜய ஜய நாராயணு," என்று உத்கோஷம் செய்தார்கள். (428)

தேவதைகள் துந்துபி வாசித்தார்கள். அவர்களின் சந்தோஷம் மஹத்தாக விருந்தபடியால் பாரிஜாத கற்பக புஷ்பங்களை வாரி இறைத்தார்கள். (புஷ்கரேக்ஷணு, எங்கள் மீது தயை செய், அச்சுதனே. நீதான் எஙகளுக்கு கதி. கோவிந்தனே, நீதானே எங்களுக்கு சரண்யம். தயை செய்யுங்கள். கருணை புரியும் காகுத்ஸா, அன்புடன் எங்களைப் பார். மஹாலக்ஷ்மி பிரபோ, சீதா நாயகா,) எங்களிடம் கருணை கொண்டு சந்தோஷம் கொள்" என்று ஸ்தவராஜம் செய்து ஆதி தம்பதிகளை மங்களா சாஸனம் செய்தார்கள். (தே மருவு பொழில் புடைசூழ் திருககண்ண புரத் துறையும் வாமனனே, பேரருளாளா, எஙகளையும் ஆட்கொண்டு உய்யக் கொள்வீர். நீலமேனி கொண்டல் வண்ணு, எங்கள் உள்ளம் கவர்ந்தானே, மனத்துக் கினியானே, அண்டர்கோன் அணிய ரங்கன் என்ன முதிலைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே, என்று சொல்லித் தேவர்கள், ரிஷிகள், முனீஸ்வரர்கள் எம்பெருமானிடம் சரண் புகுந்தார்கள்.) அவர்களுடைய வினய நம்ரதிகளை எம்பெருமான் ஸ்வீகரிதது்க் கொண்டு, தனது கோபத்தை, ரௌத்ரத்தை அடக்கினுர். அந்த சமயத்தில் தேவ ரிஷியான நாரதர் அவரிடம் வந்து சேர்ந்தார். (ராமா, நாரதப்ரியா, ஸுரஸேவிதா, ரிஷி கணங்களால் சேவிக்கப்படும் தீர்த்த நாராயணு, உனக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். காயத்திரி, ஸாவித்திரி, சரஸ்வதி, தஞ்சம் தஞ்சம்.) (429)

[*தியானம்*

நாரதரால் ஸேவிக்கப்பட்ட மஹா நாராயணரே, லக்ஷ்மி பிரபோ, தேவதேவா, சீதாராமா, உங்களைத்தான் நாரதரால் சிக்ஷிக்கப்பட்ட நான், குரு மண்டல ரூபமாக உபாஸித்து

சரணமடைகிறேன். அயோ நிஜரே, வேத வியாஸரே, தியாக ராஜ வால்மீகி துளசிதாஸர் தீக்ஷதரால் ஸேவிக்கப்பட்ட ராஜ ராஜேஸ்வரி, காமேஸ்வரி, காமரூபினி, காமாக்ஷி, மீனலோசனி, நீதானே எனக்கு ஸர்வமும். ஸந்ததமும் உனது கிருபையினால் அல்லவோ எனக்கு சீதாராம பக்தி, நாராயண லக்ஷ்மி ப்ரீதியேற்பட வேண்டும். ஸகல உலகங்களையும் அணுக்களாகச் செய்து பகவானிடம் லயமடையச் செய்யும் திரோதாகைரீஸ்வரி, ராஜயோக சுகி, என்னிடம் நீ மஹா ப்ரீதியுடன் இருக்க வேண்டும். பாலா மந்திரத்தின் மூன்று பதங்களாயுள்ள திரியக்ஷரி, ஸத்ஸம்பிரதாயேஸ்வரி, என்னிடம் மஹா கிருபையுடன் ஸதா நீ இருக்கவேண்டும். நிருபாதிகா, அகிலேஸ்வரி, புவனேஸ்வரி, ஆனந்த மத ஸாலினி, உன்னிடமுள்ள ப்ரேமையை நீதான் மஹா கிருபையுடன் வர்த்திக்கவேண்டும். ப்ராஹ்மி, பிருஹ்மாத்ம ஐக்ய ஸ்வரூபிணி, பிரஹ்மாணி, ஸாவித்திரி, காயத்திரி, சரஸ்வதி, பாரதி, பரமம், பிரும்மம், ஸர்வ ஸ்ருதி பராயணம், மங்கல்யம், ஸர்வ பூதானும் பவித்திரம், பஹுகீர்த்திதம் என்று அடிக்கடி உன்னைப் புகழ்ந்து நான் நமஸ்கரிக்கிறேன். உன்னுடைய மஹத் பிரும்ம குண கீர்த்திகளைப் பாடிப் பாடி நான் ஆனந்த இன்பம் அடைகிறேன். ஜகதீஸ்வரி, உன்னைத்தானே சக்ரன், பிரும்ம ரிஷிகள், ராஜ ரிஷிகள் யாவரும் புகழ்ந்து ஸநாதனமான மோக்ஷ சுகங்களை அடைந்தார்கள். ஹேஸாவித்திரி தேவதையே, என்னிடம் பரம கிருபையுடன் இருக்கவேண்டும். காயத்திரி தேவதையே, விஸ்வாமித்திர ப்ரியே, பங்கஜாஸன ப்ரியே, சதுர்முக ஆனந்திதே, நீதானே அம்மா ஜ்யேஷ்ட ஸாமம், பிருஹத் ஸாமம், வாமதேவ்யம். ஸாமகான ப்ரியே, சுரத்ருத வீணா புஸ்தக நாத ரூபிணி, என்னிடம் ஸதா கிருபையுடன் இருக்கவேண்டும். காயத்திரி தேவதையே, பரமேஸ்வரி, உன்னை சரணம் அடைந்து சீதாராமனை நான் சரணமடைகிறேன். ஹே மனஸே, சீதாராம பக்தி பலமில்லாமல் ஸகல சித்திகளும் இருந்து என்ன பிரயோஜனம்? சீதாராம பக்தி மட்டும் ஒன்று இருந்தால் அதுவே போதும். அது எனக்கு வேண்டியதை அளிக்கும். ராஜ ராஜேஸ்வரி, காம ப்ரதாயினி, காக்கைகளும் மீன்களும் ஜலத்தில் மூழ்குகின்றன. அதை

நாம் ஸ்நான ஸந்தியாவந்தனுதிகள் நித்ய கர்மானுஷ்டானங்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? கொக்கு தனது கண்களை மூடிக்கொண்டால், அது ஜபம் தபம் செய்கிறது என்று நினைக்கக் கூடுமா? தேக பலம் மிகுந்த ராவணன் கும்பகர்ணுதிகள் இந்திரஜித் போன்ற ஸ்வ அபிமானிகள் ராமா சீதா பக்தியின்றி என்ன கதி அடைந்தார்கள்? அந்தோ கஷ்டம்! அதே சமயம் வர தியாகராஜர், கம்பர், துளசி தாஸர் போன்ற ராம பக்தர்கள் அடைந்த ஸத்கதியை நினைத்துப் பார். செம்மறி ஆடுகள் இலைகளைத் தின்கின்றன. அவைகளை "அபர்ணு" என்று சொல்லலாமா? நிராஹாரம் செய்கிறவர்கள் என்று சொல்வது நியாயமா? பக்ஷிகள் உயரமாகப் பறந்தாலும் கருடனைப் போல ஆகிவிடுமா? ராமா, சீதா, நீயே சொல். சாதாரண மனிதர்கள் ஸாதுக்களின் உடைகளை மாத்திரம் அணிந்து கொண்டால் போதுமா? காட்டில் வசிக்கும் மிருகங்கள் நான்காவது ஆஸ்ரமம் ஆகிற வானப் பிரஸ்தாஸ்ரம வாழ்க்கையை நடத்துகின்றன என்று நாம் சொல்லி விடலாமா? வஸ்திரம் அணியாத சிறு பாலகர்களை நாம் திகம்பரர்கள் என்று சொல்லி விடலாமா? நாரதாதி வ்யாஸ வால்மீகி முனிவர்களைப் போல நானும் ஆகிவிடுவேனு? வரபக்தி கொண்ட தியாகராஜ கம்பர் துளசிதாஸர் எப்போதும் அவதரிப்பார்களா? ஹே மூட மனமே, ஏன் உனக்கு இந்த அஹங்காரம்? வேதாந்த தேசிகரைப் போல ஞான திவாகரன் எப்போதும் இருக்க முடியுமா? ஆதிசேஷனைப் போல பகவத் ப்ரீதிக்காக உழைக்கும் வைஷ்ணவ சீலன் ஸர்வ சாதாரணமா? நம்மாழ்வாரைப் போல திட நாராயண பக்தி ஸர்வ ஸுலபமா? ஹே உமா, உன்னைப் போல சங்கர பக்தியுள்ள ஸ்திரியையும் கருணை ஸ்வரூபத்துடன் ஸகல ஜகத்தையும் காக்கும் ஸர்வ ஜன ரக்ஷகியாக யாராவது இருக்க முடியுமா? பரிபூர்ணரான ராமசீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஆஞ்சநேயா, நாரதாதி வஸிஷ்ட சதுரானன, திரியம்பக, ஓங்கார நாயகருடைய சேர்க்கை ஸம்பந்தம் கிடைப்பதை விட மேலான சுகம் ஏதாவது உண்டா? ஆதித்ய குல பூஷண ராமனை விட்டு நீ சந்தோஷமடையக் கூடுமா? ஸ்ரீ சீதாராமசந்திரனுடைய கோதண்ட ஹஸ்தங்கள் இல்லாமல் உன்னுடைய அஹங்காரம்

அடங்குமா? ஆத்மாராமன் என்று சொல்லக்கூடிய ஆஞ்ச நேயாதிகளைப் போன்ற பக்தர்கள் அல்லவா சீதாராமன் வசிக்கும் அயோத்தி என்று உனக்குத் தெரியாதா? ஹே மனஸே, சீதாராமனிடம் பக்தியில்லாமல் நீ உஜ்ஜீவிக்க முடியாது. அவர்களுடைய கிருபையின்றி நீ ஒரு க்ஷணமும் வாழ முடியாது. ஸம்சாரதாபங்கள் அடங்கி, ஜன்ம ம்ருத்யு சுழல்களிலிருந்து தப்ப முடியாது என்று நீ நன்ருகத் தெரிந்து கொள். ஹே உமா, கமலாம்பா, சீதே, நீதான் எனக்கு மார்க்கதரிசி. என்னையும் உனது மஹா கருணையினுல் ஆட் கொள்ளுவாய் அம்மா. கஞ்ச தளாயதாக்ஷி, நளினுக்ஷி, மீனுக்ஷி, காமாக்ஷி, விசாலாக்ஷி, மஹாலக்ஷ்மி, நீதானே எனக்குத் தஞ்சம்."]

ஆகாயத்தின் மேலே நாரத பகவான் தம்புரா ஸகிதம் இருந்துகொண்டு பகவான் ஸ்ரீஹரியினுடைய சுந்தரமான மஹா கர்மங்களைச் செய்தவரும், மஹா வீர ரஸம் பொறுந்திய வரும், ஆச்சர்யகரமான சேஷ்டிதங்களை உடையவரும், மஹா பீம பராக்ரம அத்புத செயல்களை உடையரும், (யாவரும் ஆச்சரியப்படத் தக்க சக்திமதாம்ஸ்ரேஷ்டர், மஹா வீரர், ஸர்வ சஸ்திர ப்ருதாம்வரர், குப்தர், சக்ர கதாதரர், சத்ருஜிச் சத்ரு தாபனர், சரசாபதரர், மஹா விக்ரமர், மஹா பாஹீ, ஸத்ய தர்ம பராக்ரமர், மனு முதலான ஸாதுக்களின் விஷயத் திலும், பாண்டவர்களின் விஷயத்திலும், தேவர்கள் விஷயத் திலும், ரிஷிகணங்கள், ஆஸ்ரமவாசிகள் விஷயத்திலும், சுக்ரீவன், விபீஷணன் போன்ற பிரபன்னர்களிடத்திலும் வஞ்சனையின்றி தனது முழு சக்தியை உபயோகித்த ஸத்ய பராக்ரமர், பாரப்ருத், தமது பக்தர்களின் விஷயத்தில் பிறர் செய்யும் பிழைகளைப் பொறுக்க மாட்டாத அநலர், பக்தர்களை யும் தான் இயற்றிய தர்மாசாரங்களையும் காப்பாற்றுவதில் ஊக்கம் கொண்டவராக, எவ்வளவு மகத்தான காரியங்களைச் செய்தும், "ஐயோ, இவனுக்கு இது போதாது, இன்னும் அவர்களையும், ஸநாதனமான மரியாதை அவஸ்தைகளையும் ஸம்ரக்ஷிப்பதற்கு மேலும் மேலும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மஹாகிருபாளு, பிரும்மாவினுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட அனுதி, கண்கொட்டாமல் கவனித்து

கடாக்ஷிக்கும் அநிமிஷர், ஸுர ரிபு மர்த்தனர், சொல்லப் பட்டது, சொல்லப்படாதுமான கல்யாண குணங்கள் நிரம்பி யிருப்பராக எல்லா சாஸ்திரங்களாலும் புகழப்பட்ட கதிதர் என்று சொல்லக்கூடிய) அகண்ட பரந்த சீதாராம கீர்த்திகளை, (லக்ஷ்மி நாராயண தம்பதிகளைப்) புகழ்ந்து பாடினார். (ஆடினர், மகிழ்ந்து பாடினார் என் பிரபு குருநாதரான நாரத பகவான், பிறந்தவாறும், வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து, ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்து போன மாயங் களும், திறந்தனூடு புக்கென தாவியை நின்று நின்றுருக்கி யுணர்கின்ற, இச் சிறந்த வான் சுடரே, உன்னை யென்று கொல் சேர்வதுவே. உன்னையும் உனது மஹா கிருபையையும் உனது மஹா விக்ரமச் செயல்களையும் நினைத்துப் பார்த்தாலே, புண்ய ஸ்ரவண கீர்த்திகளைத் தியானித்தாலே, வெள்ள நீர்ச் சடை யானும், உமையும் உள்ளமுள் குடைத்து என்னுயிரை யுருக்கி யுண்ணுமே; ஹே விபோ, நாராயணா, கருணா காகுத்ஸா, உன்னை எண்ணுந்தோறும் என் நெஞ்சு எரிவாய் மெழு கொக்கும் நின்றே. உன்னுடைய கீர்த்தி அரங்கங்களைப் பாடி நானும் நீரும் அல்லவோ இன்ப ஆனந்தங்கள் அடை கிறோம். சீதாராம, லக்ஷ்மணா, "த்வாம்" என்று ராமானுஜன் சீதையையும், கண்ணன் தன்னையும், தாயாராகிய லக்ஷ்மி, உன்னையும், சுபாஸ்ரயம் என்று சொல்லி வேறு உபாயமின்றி பிராட்டியை "சரண்யாம்" என்று சொல்லி, உன்னை "அசரண: சரணம் பிரபத்யே" என்று சொல்லி புகலில்லாமல் ஸர்வ ரக்ஷக மாக சரணமடைகிறேன். ஹே பிரபோ, மஹாலக்ஷ்மி நாதா, ஸ்ரீரங்கநாத பிரபோ, வரதா, ஸ்ரீ வெங்கடேச சரணங்களே, எனது ஸ்ரேயோ மூர்த்தியே, தாங்கள் கோபத்தை சமனம் செய்து, க்ஷமிணும்வரர் என்கிற பெயருக்கு ஏற்ப, எங்களிடம் அனுகிரஹ புத்தியுடன் இருக்கவேண்டும். அரௌத்ரர, ஜிதக்ரோதரே, ஜிதமன்யுவே, உம்மைத் துதிக்கும் எங்களிடம் அருள் பாலிக்க வேண்டும்," என்று நாரதர் பல விதங்களால் அர்ச்சித்து பெருமாளையும் பிராட்டியையும் புகழ்ந்து கீதம் பாடினார்.) பிரபு ஸ்ரீராம சந்திரனுடைய அருள் வெள்ளம் பொங்க ஆரம்பித்தது. கோதண்டத்தைத் தோளில் மாட்டிக் கொண்டார். (மஹாபிரளய ஸாக்ஷினியாகிற சீதை அருள்

பாவித்தாள். நிரஞ்சனம், நிர்விஹாரம் என்று சொல்லக் கூடிய களங்கமற்ற சீதை ஆனந்த மதம் கொண்டாள். பெருமாளும் திருப்தியுடன் கிருதக்ருத்யனுக மாறினுர். பல விதங்களால் பெருமாளையும் பிராட்டியையும் ஸந்தோஷிப்பித்து) நாரதரிஷி, ''ராவணனையும் சீக்கிரம் கொன்றுவிடும்,'' என்று பெருமாளைப் பிருர்த்தித்துக்கொண்டு, சென்று விட்டார். திருவுக்கும் திருவாகவிருக்கும் ராகவ சிம்மம் ரண பூமியி லிருந்து மெதுவாக தன்னிருப்பிடத்திற்கு வந்துகொண்டிருந் தார், (ஸர்வ விஜயர், தநுர்வேதர், ஸர்வ விஜ்ஜயி,) பரம சோபிதமாக வந்து கொண்டிருந்தார்.] (430)

என் பிரபு ரகுபதி கோஸலாதிபதி, யுத்த பூமியிலிருந்து பரம சோபதமாக வந்து கொண்டிருக்கும் சமயம், வீரமும், கருணையும் சேர்ந்து உருவெடுத்து வரும் பரம சோபனமூர்த்தி யாக எனக்குக் காக்ஷி அளித்தார். அதுளித பலம் கொண்ட ரகுவீரன், தயையையே தனமாகக் கொண்ட தனஞ்ஜயர், கோதண்ட தன்வீ, வந்து கொண்டிருக்கும்போது, அவருடைய வலக்கை ராஜீவ முகத்தை மறைத்துக் கொண்டிருந்த கேச பாசங்களை விலக்கியது. சந்திர காந்தியுடன் கூடிய வதனம், ராஜீவ லோசனங்கள், சிரமத்தின் காரணமாக யேற்பட்ட வியர்வைத் துளிகள், தாமரை இலையில் வீற்றிருக்கும் பனித் துளிர்களைப் போல, சூரிய வெப்பத்தினுல் அவருடைய முக சந்திர வதனத்தில் பிரகாசித்தன. கடாக்ஷரோஹிதர்; அவ ருடைய புஷ்கராக்ஷங்களிலிருந்து கருணை பிந்துக்கள் வழிந்து ஓடிவந்து கொண்டிருந்தன. அவருடைய கோபம், க்ரோதம் மக்னப்பட்டு அருண சூரியனைப் போல, இளம் கிருபை பிரகா சித்துக் கொண்டு, குப்தமாகப் பிரகாசித்தது. அவருடைய சரீர மேனியில் ரத்த பிந்துக்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. அவ ருடைய இரு கரங்களில் தனுஷ்ஷும் பாணமும் அமைதியுடன் வீற்றிருந்தன. (வாக்குக்கு அதிபதியான கணபதி சந்தோஷத் துடன் ஹரி சரணங்களை மார்பில் பதித்துக் கொண்டு நர்த்தனமாடி வருவதுபோல, பக்தர்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்தோம் என்கிற ஆத்ம ஸந்துஷ்டியினுல் ஏற்பட்ட சாந்தியுடன் ஹரிபகவான் எனக்குப் பக்த ஹ்ருதயமாக காக்ஷி அளித்தார். அப்பேற்பட்ட கோதண்டராமனை, சீதாலோலனை,

நாரதப் பிரியனே, வ்யாஸர் இயற்றிய வேத சாஸ்திரங்களின் மந்திரப் பொருளாக புதைந்து கிடக்கும் என் குஹர், குப்தர், ரஹஸ்ய தர்பபணம், திறம் பெற்ற தீரராக, எனக்கும் ஸகல பிரபஞ்சங்களுக்கும் நன்மையைச் செய்துவிட்டு, இன்னும் சுகிருதங்களைச் செய்ய விருப்பம்கொண்டு ஆசையுள்ளவராகத் தோன்றினர். என் பிரபு ரகுநாயகர், தினகர குலமணி, ஸர்வ ஸுகந்த ப்ரியன்,) தனது பக்தர்களின் ஹிதகாமி, ஆஸ்ரித கல்பதரு, தேவநாயகர், தன்னை அண்டி வாழ்ந்து வரும் வானர கரடிகளிடம் வந்து கொண்டிருந்தார். ஸர்வ ஜன ரக்ஷகன், பிரணதார்த்தி பாலர், சீதாராமன் (பகமாலினியாகிற சீதையைக்) கோதண்டமாக அணிந்து கொண்டவர், வரவீர லக்ஷ்மணனிடம், தனது அடியார்களிடம் வந்து கொண்டிருந்தார். (என் குலநாயகர் விஸ்வாமித்திரர் அன்று யாக ரக்ஷண சமயம் மாரீசனை அடித்தபோதும், சீதா ஸ்வயம்வர சமயத்தில் சிவதனுஷ்ஷையும் ஒடித்த சமயத்திலும், ஸ்ரீராமனுடைய வீர்ய சௌந்தர்யங்களைப் பார்த்து, கன அழகின் விலாஸங்களில் மோஹம் அடைந்து கண்கள் காணென கண்கள் கொண்ட அழகு வரிசைகளைக் கண்டு, ஆனந்த இன்பம் அடைந்தது போல இன்று) என் பிரபு துளசிதாஸர் ராமனுடைய வீர சௌந்தர்யங்களை ரஞ்சனம் செய்துகொண்டு சொல்லுகிறார். "என் பிரபு, ரகுநாதனுடைய முக, ஹ்ருதய சோபைகளை ஆயிரம் முகங்கள் கொண்ட ஆதிசேஷ பகவான் கூட வர்ணிக்கத் தயங்குவான். ஆச்சரியம், சுகம், ஆனந்தம், கிருபை, அனுகம்பை, நளினம், (வரம்ருது பாஷணன், பச்சை மாமலையைப் போல மேனி, பவளவாய், செங்கண் திருமால், அரவிந்த லோசனங்கள், தாபத்ரய சமன அரவிந்த பதாப்ஜங்கள், வனமாலி, சங்கி, சக்ரீ, ஸநந்தகி, ஆஹா ஆச்சர்யம் !! அத்புதமான சுகுமார சௌந்தர்ய லாவண்யம், நவசம்பக புஷ்பத்தைப் போல மூக்கு, விசாலமான வக்ஷஸ் தலம், ஸ்ரீ வத்ஸ மறுமார்பன், ஆஜானுபாஹு, ஆஸ்ரிதர்களை அணைத்து இன்புறும் தீர்க்க பாஹுக்கள், கராங்குலி நகோத் பன்ன தச சக்திகள், ஆஹா இந்த சௌந்தர்ய, அழகு குவியல் களைக் கண்ட கண்களே மிக்க பாக்யமான கண்கள்!! அப் பேர்பட்ட சீதாராமனை, கராரியை கும்பகர்ணனரியை நான்

ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.] (431)

பகவான் சம்பு பார்வதியிடம் சொல்லுகிறார். "ஹே கிரிஜா, கும்பகர்ணன் நீசமான ராக்ஷஸன், மஹா அதமன், மஹா பாபாத்மா, தமஸ் குணத்தினால் நிரம்பப் பெற்றவன், மஹா மந்த மதி கொண்டவன், அப்பேற்பட்ட அதமனை என் பிரபு ஸ்ரீ ரகுநாயகர் (சீதாரமணன், விஸ்வாமித்திர பிரியன்,) தன்னிடம் சேர்த்துக் கொண்டு அவனுக்கு அவர் வைகுண்ட பதவியைக் கொடுத்தார். ஸாதுக்கள் வேண்டும் நிஜ சுபாஸ்ரயமான தனது பதாப்ஜத்தைக் கொடுத்தார். ஆகையினால் எவர்கள் ஸ்ரீ சீதாராமனை பஜிக்கிறார்கள் இல்லையே, அவர்கள் நிஜமாகவே மந்த புத்தியுள்ளவர்கள் என்று சொல்வேன். அவர்களைப் போல ஜன்மத்தைப் பாழாக்கினவர்கள் இருக்கவே முடியாது." (ஹே துஷ்ட மனமே, உமையையும் சம்புவையும் நினைத்து, சீதாராம பதங்களில் இணைத்து வாழ இன்னமும் உனக்குத் தயக்கமா?) (432)

அன்று தினமும் முடிந்தது. இரு தரப்புச் சேனைகளும் தங்களுடைய தங்கும் ஸ்தானத்தை அடைந்தார்கள். "இன்று நடந்த யுத்தத்தில் யாவருக்கும் களைப்பு அதிகமாகி விட்டது. இளைப்பாறுவதற்கு யாவரும் விரும்புகிறார்கள்," என்று ராக்ஷஸர்கள் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் ராம கிருபையைத் தனமாக அடைந்த வானரங்கள், கரடிகளோ அதே காரணத்தால் சீக்கிரம் ராவணனையும் "நம் பிரபு இது மாதிரி ஸம்ஹரித்து விடுவார்; நமது துயரங்கள் இனி ஒழிந்தன," என்கிற நினைப்பினால் உத்ஸாஹமடைந்தவர்களாக, கரை கொள்ளாத ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தார்கள். அவர்களுடைய மஹா விஸ்வாசமும், ராமகிருபையை அடைந்ததால், திருஷ்ணையுள்ள அக்னி புல்லை எரிப்பதைப் போல, அவர்களுடைய ராம ப்ரீதியும், சீதாராம பக்தி விஸ்வாசமும் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு போயிற்று. (அப்பேற்பட்ட மஹாவிஸ்வாசம் கொண்ட ராம பக்தர்களை முன்னிட்டு சீதாராம லக்ஷ்மணனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரித்து சரணமடைகிறேன். ஹே விபீஷண, சுக்ரீவ, ஆஞ்சநேய அங்கத ஸேவித, ரெங்க நாயகி ஸமேத ரெங்கநாதா, என்னிடமும் அத்யந்த கிருபை காட்ட வேண்டும்.) (433)

*[தியானம்*

ஹே சங்கர பகவானே, உமா மஹேஸ்வரரே, எனது மார்க்க பந்துவே, உன்னை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரித்து சரணமடைகிறேன். ஹே பிரபோ, நீர்தானே எனக்கு ஞான வைராக்ய பக்திதான மோக்ஷ சுகத்தை அளிக்கும் பந்து; அகிலகுரோ, பஞ்ச பூதநாதா, உம்மைச் சரணமடைந்து ஸர்வ லோக தயாநிதியாகிறவரும், ஸார்வபௌமருமான தாசரதி ராமனை, சீதையின் நாயகனை, சரணமடைகிறேன். ஹே உமா மஹேஸ்வரர்களே, உம்மைச் சத ருத்ரீயத்தாலும், ஜ்யேஷ்ட ஸாமத்தாலும், வாம தேவ்யம், ப்ருஹத் ஸாமங்களாலும் எனது ஆராதனைக்குறியவராக தியானம் செய்து, உம்முடைய கூடலிங்கத்தைப் பூஜை செய்கிறேன். எனது ஆத்ம பந்துவே, உம்முடைய நிஜஸ்வரூபம் பாதாளம் முதல் ஆகாயம் வரை பரந்துள்ளது. ஜோதிர் மயமான ஸ்படிக லிங்கராக நீர் விளங்குகிறீர். உம்முடைய சிரத்தில் பூர்ண சந்திரனிடமிருந்து பெருகும் அம்ருத தாரைகளால் அபிஷேகம் செய்யப்பட்டவராக, நான் ருத்ரானுவாகத்தை, ஏகம் ஈசம் என்று சொல்லி, நிதானமாகப் பரபரப்பில்லாமல் உச்சரித்து இடைவிடாது ஸாமகானம் செய்து ஸ்மரிக்கிறேன். ஹே பிரபோ, உம்முடைய பஸ்மபூச்சு பனியை ஒத்த ஹிமகிரியைப் போல விருக்கிறது. ஸர்ப்ப ஆபரணங்களை அணிந்துகொண்ட நீலகண்டராக எனக்குத் தோற்றமளிக்கும் சிவசம்போ, உம்முடைய ஜடாமுகுடம் திரியக்ஷங்களாகிற அக்னி, சூர்யன், சந்திரன், வில்லேந்திய கைகள், ருத்ராக்ஷ மாலைகள், தம்புரா ஸஹிதம் பத்மம், என்னைப் போன்ற வணங்குபவர்களின் அச்சத்தையும் பாபங்களையும் நாசம் செய்கின்றன. ஹே ருத்ரரே, ஸ்ரீருத்ரம், சமகம் ஆகியவைகளால் சந்தோஷிக்கப் படும் என் ப்ரிய பந்து, நீர் ஒருவர்தான் கோதண்டபாணியான ஸ்ரீராமனுடைய பெருமைகளை முழுவதும் உணர்ந்தவர். நீர் ஒருவர்தான் பூஸுதாவாகிற சீதையின் பரத்வத்தை அறிந்தவர். காரார் கடலை அடைத்திட்டி லங்கைபுகு ஒராதான் பொன்முடி ஒன்பதோடு ஒன்றையும் தள்ளி, நேராவெவன் தம்பிக்கே நீளர சீந்த ஆராவமுதனைப் பாடிப் பாடி, அயோத்தி வேந்தனைப் பாடிப் பாடி இன்புறுகிறீர். பிரபோ, கருணையை

வடிவாகக் கொண்ட சாம்ப ஸதாசிவா, உம்மைத் தேவகணங்களுக்குப் பதியாக நினைத்து சரணமடைகிறேன். மஹாதேவா, நீர்தானே எனக்கு இவ்வுலக இன்பமும், ப்ரியமும், அதனால் யேற்படும் ஆசையும், அந்த ஆசையின் அனுபவமும் நீர்தானே. ஹம்ஸரே, வியாஸ முனிவரால் பல தடவைகள் சொல்லப்பட்ட உம்முடைய பெருமைகளை கேள்விப்பட்டேன். மஹேஸ்வரரே, உம்முடைய அருளினால் நன் மனம் படைத்த உற்றாரும், மங்களமும், உயர் நலமும், புத்ரோத்பத்தியும், வம்ச வர்த்தனமாக விருக்கும் புத்ரனையும் நாங்கள் அடைகிறோம். நீரே ஸாங்கிய சாஸ்திர ஞானியான கபிலராகவும் இருக்கிறீர். நீரே எனக்கு மங்களமாகிற பத்ரம், ஸ்ரேயஸ், சௌபாக்யம், செல்வம், நல்ல வாசஸ்தலமாகவுமிருக்கிறீர். ஸம்சாரத்தை ஒழிக்கும் தத்வ ஞானத்தைக் கொடுக்கும் சிவபெருமானே, வழிகாட்டும் தந்தையும், ஆசார்யராகவும் ஸர்வ ரக்ஷணமாகவும், ஸர்வ க்ஷேமமாகவும், ஸர்வ காமேஸ்வரராகவுமிருக்கிறீர். ஹே உமையின் பிரபோ, கோகர்ண க்ஷேத்ரத்தில் பூஜை செய்யத் தகுந்தவரே, என்னிடம் ஸதா அனுக்ரஹ புத்தியுடன் இரும்.]

அங்கே லங்கையில் ராவணேஸ்வரனுடைய மாளிகையில் ஒரே அழுகைக் குரல். எங்கு பார்த்தாலும் வருத்தமும், சோகமும் தாண்டவமாடின. சுக்ருதங்கள், புண்யங்களின் பலன்கள் காலம் வரும்போது அழிவடைகின்றதுபோல, ராக்ஷஸர்கள் தினமும் இரவுமாக கழிந்து கொண்டு, அழிவை அடைந்து கொண்டிருந்தார்கள். ஒரு மனிதன் தான் செய்த சுக்ருதங்களைப் பிரகடனம் செய்து, அந்த பாவத்தினால் அவனுடைய புண்யங்கள் நசித்துப் போவதுபோல, ராக்ஷஸ சேனைகள் நாசம் அடைந்து கொண்டிருந்தன. தச கந்தரனை ராவணன் கும்பகர்ணனுடைய முடிவைக் கண்டும், மனம் மாறாதவனாக, அகந்தையில் ஈடுபட்டிருந்தான். தன்னுடைய பிரிய பந்துவாகிற தம்பியின் சிரத்தை ஹ்ருதயத்தில் வைத்துக் கொண்டு பல விதங்களாக புலம்பிக் கொண்டிருந்தான். அவனுடைய வருத்தம் எல்லையை மீறி புதிது புதிதாக வளர்ந்து கொண்டு, அவனைவிட்டு பிரியாமலிருந்தது. என்ன செய்வான்? சீதாராமனைப் பகைத்துக் கொண்டால், சுகங்களும் ஆனந்தங்

களும் எவ்விதம் நீடிக்கும்? பரமசிவன் இடைவிடாது தொழும் ராம பதாப்ஜங்களிடம் அன்பூன்றி யிராமல், விரோதபாவத்தை அடைந்தவனுக்கு ஆயுஸும் குறையுமன்றோ? அந்தோ! அவன் புத்தியும், தவங்களும், பிறப்பின் மகிமையும், சுக்ருதங்களும் ஒவ்வொன்ருக அழிய ஆரம்பித்தன. (434)

அவனுடைய ஸ்திரிகளும் அவனுடன் அழ ஆரம்பித்தார்கள். சிலர் கும்பகர்ணனுடைய அளவிட முடியாத பலத்தை நினைப்பவர்களாக ஹ்ருதயத்தில் அடித்துக் கொண்டு ஓலமிட்டார்கள். இன்னும் சிலர் அவனுடைய தேஜஸ்ஸையும், பலத்தையும், கம்பீரமான தோற்றத்தையும், புகழ்ந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார்கள். எங்கு பார்த்தாலும் ஒரே ஓலம். அந்த சமயத்தில் மேகநாதன் அவ்விடத்திற்கு ஓடி வந்தான். தன் பிதாவை பல கதைகளாலும், நீதிகளாலும் ஆஸ்வாசப்படுத்தினன். தேகத்தின் நிலையற்ற ஸ்திதியையும், ஆத்மாவின் நித்யத்தையும் சொல்லி, அவன் ராவணனை மனம் தேற்றினன். (435)

மேலும் இந்திரஜித் தனது தகப்பனுரைப் பார்த்துச் சொன்னன். "அண்ண, நாளைப் பார்ப்பீர். என்னை உமக்குப் புத்ரனுக அடைந்ததின் புருஷார்த்தத்தைக் காண்பீர். இப்பொழுது நான் மார்தட்டி என்னைப்பற்றி பெருமை கொள்வதால் யாது பிரயோசனம்? ஸ்வாமி, நான் தங்களுக்கு ஏற்கனவே சொல்லியுமிருக்கிறேன். ஆனல் இன்னும் அதை பிரமாணமாக நிரூபித்துக் காட்டவில்லை. நான் என் இஷ்ட தேவதையைப் பிரார்த்தித்து அமிதமான பலமும், ஜயிக்க முடியாத ரதத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறேன். அவைகளைக் கொண்டு நான் போர் புரிவேன். கவலையை விடுங்கள்" (436)

இந்திரஜித் இவ்விதமாக தனது பிதாவின் பயத்தைப் போக்கினன். இரவும் கழிந்து விட்டது. லங்கையின் நான்கு புறங்களிலும் வானர சைன்யங்கள் சூழ்ந்துகொண்டு விட்டன. இங்கே காலனுக்குச் சமமாக வானரர்கள், கரடிகள். அந்தப் பக்கத்தில் அதியந்த ரண தீரர்களான ராக்ஷஸர்கள், இரு தரப்பிலும் பலமுள்ள வீரர்கள். (437)

இரு தரப்பினர்களும் "நாம் இன்று எவ்விதமாவது சண்டை செய்து ஜயித்துவிட வேண்டும்," என்று ஒரே எண்

ணத்துடன் யுத்தம் செய்தார்கள். காகபுசுண்டி கருடனைப் பார்த்துச் சொன்னார், "கருடரே, அவர்களுடைய யுத்த சாமர்த்தியங்களை யார்தான் சரியாக வர்ணிக்க முடியும்?" (438)

மேகநாதன் மாயா மயமான ரதத்தின் மீது ஏறி ஆகாயத்தில் சஞ்சரித்தான். அட்டஹாசம் செய்துகொண்டு கர்ஜித்தான். அவனுடைய கர்ஜனையைக் கேட்டு வானர சைன்யங்கள் பயம் கொண்டார்கள். (439)

சக்தி, சூலம், கத்தி, வாள், அஸ்திரம், சஸ்திரம், வஜ்ரம் போன்ற கணக்கற்ற ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. கோடாலி, பரிகம், கல் ஆகியவைகளும் பாணங்கள் மாதிரி வர்ஷிக்கப்பட்டன. (440)

ஆகாசத்தில் பத்துத் திக்குக்களிலும் பாணங்கள் இறைக்கப் பட்டிருந்தன. அவைகளைப் பார்த்தால் புரட்டாசி மக நக்ஷத்திரத்தில் மேகங்கள் கன வ்ருஷ்டியைப் பொழிவதைப் போலவிருந்தன. "பிடியுங்கள், கொல்லுங்கள்," என்கிற சப்தங்கள் கேட்கப்பட்டன. ஆனால் யார் யாரைக் கொல்லுகிறார்கள் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. (441)

வானரங்கள் பர்வதங்களையும் விருக்ஷங்களையும் ஆகாயத்தில் எடுத்துக்கொண்டு சஞ்சரிப்பார்கள். ஆனால் அவர்கள் இந்திரஜித்தைக் காணாமல் துக்கம் கொண்டு திரும்பி விடுவார்கள். மேகநாதன் மாயா பலத்தை உபயோகித்து மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், ரஸ்தாக்களையும் பர்வத குகைகளையும், பாணக் கூண்டுகள் மாதிரி பண்ணிவிட்டான். எங்கு பார்த்தாலும் பாண மயமாக விருந்தது. வேறு ஒன்றும் அவர்களால் காணப்படவில்லை. (442)

இந்தப் புதிய காக்ஷியைக் கண்ட வானரங்கள் வியாகுலமடைந்தார்கள். பாதைகள் மூடப்பட்டன. எந்த வழியாகப் போவது என்று தெரியாமல் திக்குக்கள் அடைபட்டது போல கலங்கிப் போனார்கள். ஸுரபதியாகிற இந்திரன் பல மந்தர பர்வதங்களை சிறைப்படுத்தினால் எவ்விதம் இருக்குமோ, அது போல எங்கு பார்த்தாலும் ஒரே குழப்பமாக விருந்தது. ஒருவருக்கும் சரியான வழி புலப்படவில்லை. மாருதசுதனாகிற

ஹனுமான்ஜி, அங்கதன், நளன், நீலன் இன்னும் அநேக பல வான்கள் என்ன செய்வது என்று ஒன்றும் தெரியாமல் கலங்கி விட்டிருந்தனர். (443)

பிறகு மேகநாதன் லக்ஷ்மணனையும், சுக்ரீவனையும், விபீஷணனையும் பாணத்தால் அடித்தான். அவர்களுடைய சரீரங்களை சல்லடை மாதிரி அஸ்திரங்களால் துளைத்தான். அதன் பிறகு அவன் ரகுபதியிடம் சண்டை செய்ய முன் வந்தான். அவனுடைய பாணங்கள் சர்ப்பங்களாக மாறி சப்தங்கள் செய்து கொண்டு ஸ்ரீராமனை வந்து தாக்கின. (444)

[*தியானம்*

நாராயணா, மஹா லக்ஷ்மியின் பிரபோ, உன்னை நான் சரணமடைகிறேன். ராமா சீதா, சங்கரபகவானே, நீலக்ரீவரே, உம்மை ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். ஹே ருத்ரரே, எனது ஹ்ருதயத்தில் ஹ்ருஷிகேசராக விருப்பவரே, என்னிடம் தாங்கள் சாந்த மூர்த்தியாக விருக்க வேண்டும். உம்மிடம் பயப்படுகிற என்னை கருணையினால் தழுவிக் கொள்ள வேண்டும். நீர் கைலயங்கிரியில் வசிப்பவர்; வேதத்தின் உச்சியில் மணியைப்போல பிரகாசிப்பவர். உம்மையே அன்று நாரதர் வேதமாதாவின் சூடாமணியாகப் பார்த்தார். நீரே ஏகாக்ஷரமாகவும், பிரணவமாகவும் இருக்கிறீர். அகோர மூர்த்தியே, முதலில் உம்முடைய வில்லையும் அம்பையும் அம்புறுத் துணியையும் நான் நமஸ்கரிக்கிறேன். உம்முடைய இரு கைகளுக்கும் நமஸ்காரம் செய்கிறேன். ருத்ரரே, கிருஷ்ணனும் அர்ஜுனனும் உம்முடைய வில்லையும் அம்புகளையும் மங்களமாகப் பார்த்தபடி, நானும் அவைகளை மங்களமாக ஸ்வீகரிக்கிறேன். உம்முடைய ஸ்வ ரூபத்தை யாம் - ராம் - லாம் - வாம் - ஸாம் - த்ராம் - த்ரீம் - க்லீம் - ப்லூம் — ஸ: ஸர்வ ஜம்பனேப்யோ காமேஸ்வரி — காமேஸ்வர - பாணேப்யோ நம: பாணசக்தி - ஸ்ரீ பாதுகாம் பூஜியாமி நம: என்று நமஸ்கரிக்கிறேன். தேவா, மஹா தேவா, தேவ தேவா, கபர்த்தின், எனது துயரத்தை அழிக்கும் திரிபுராரி, தண்டி மஹரிஷியினால்

செய்யப்பட்ட உம்முடைய ஆயிரம் மங்கள நாமக்களைச் சொல்லி சரணமடைகிறேன். உங்களுடைய சிவமான ரூபத்தை ஸதாதியானித்து அபாப காசினி என்கிற பாவம் நீங்கியதும், மிக சுத்தமானதும், ராமேஸ்வர லிங்கத்தைப் பூஜிக்கத் தகுந்த மன தேக நிலையை உள்ளதும், எனக்கு அகோர மூர்த்தியாகப் பிரகாசிப்பதும், கிரிஜாவின் காமேஸ்வர தத்வமும், எனக்கு நாராயணுத்மகமாகவும் விளங்கும் உம்மை ஆத்ரேய மஹ ரிஷியை முன்னிட்டு, அனுஷ்டப் சந்தத்தால், சம்பு, ருத்ரர் என்று அழைத்து நமஸ்கரிக்கிறேன். பரசுவை ஆயுதமாகக் கொண்ட சடையுள்ள சிவமூர்த்தியே, ஸர்வக்ஞரே, சரண மடைந்தவர்களை ரக்ஷிக்கும் மஹா புருஷரே, பாசஹஸ்தரே, பாபிகளின்மீது பிரயோகிக்கும் ஆயுதங்களைத் தரிக்கும் சாந்த ஸௌம்யமூர்த்தியே, என்னையும் மக்களையும் உலகத்தையும் ஹிம்சிக்க வேண்டாம். காயத்ரி தேவதையே, பசுபதியே, கங்காதரரே, நீர்தான் எனக்கு ஸஹாயர். சைலஸுதாவாகிற உமையுடன் வீற்றிருக்கும் ராஜஹம்ஸமே, திரிலோசனரே, புஜங்கபூஷணரே, சந்திர கலாதரரே, உங்களைச் சிரித்த முகத்துடன் என்னை வரவேற்கும் உமா மஹேஸ்வரர்களாக ஸதா தியானிக்கிறேன். ஹே பிரபோ, உம்மிடம் அடங்கிய என்னிடம் கோபம் வேண்டாம். ஜகத்பதியே, நீர்தானே எனக்கு ஸம்சார தாபங்களைப் போக்கும் பிஷக். உம்மை அடைந்தல்லவோ நான் நின்றவாறும், இருந்தவாறும், கிடந்த வாறும் நினைப்பரியன, ஒன்றலா வுருவாய் அருவாய் நின் மாயங்கள், நின்று நின்று நினைக்கின்றேன் உன்னை யெங்கனம் நினைக்கிற்பேன், பாவியேற்கு ஒன்று நன்குரையாய் உலக முண்ட வொண் சுடரே, என்று அனு சந்திக்கும் எனக்கு லக்ஷமி நாராயண பதத்தை அன்று நீரும் உமது ராஜ ஹம்ஸத்தைத் போல விருக்கும் உமையும் விருஷா ரூடராக மார்க்கண்டேயர் முன்பு தோன்றி, ருத்ர பக்தியையும் நாராயண பதத்தையும் பிரார்த்தித்த அவருக்கு உதார மனத்துடன் வரபிரஸாதமாகக் கொடுத்தீர்களே, அந்த ஔதார்யத்தை என்னிடம் அருள மாட்டீர்களா? உம்முடைய தாஸர், உமது தாஸருக்குத் தாஸன், சீதாராம தாஸன் என்று தாங்கள் அறிந்து கொண்டும் என்னிடம் மௌனமாக விருக்கலாமா? "ராமரே, உனக்கு

பாபம் இராது. யாவராலும் ஜயிக்கப் படாமலிருப்பாய். உனக்கு மரணமும் இராது. மூப்பில்லாமலிருப்பாய்,'' என்று பல மஹரிஷிகளுக்கு முன் தர்ம நந்தனரிடம் பரசுராமர் உம் முடைய சிவமான அனுக்ரஹத்தைப் புகழ்ந்தாரே, அப்பேற் பட்ட ராமலிங்கரே, ராமநாத ஸ்வாமியே, ஜடாதாரி, மஹா நகரே, நரசிம்மரே, மஹா பிரஸாதரே, மஹா மாயரே, மஹா முகரே, மஹா முனியே, என்னிடம் ஸதா நீரும் உமையும் அனுக்ரஹத்துடன் இருக்கவேண்டும்.]

(என் பிரபு, உமையின் ஆனந்தம், மஹாதேவரின் ஹ்ருதயம், நாராயண ஆத்மகரான ஸ்ரீராமன் அந்த சர்ப்ப பாணங்கள் சிவ பிரஸாதமாக ஏற்றுக்கொண்டார். அகோரமூர்த்தி, ஸௌம்ய மூர்த்தி, மஹா பிரஸாதர் சம்பு பகவானை பகுமானிக்கும் எண் ணத்தினால் அவைகளை புஷ்பங்களாக ஏற்றுக்கொண்டார்.) [கண்டபரசுவான ஸ்ரீராமன் வ்யாளர் அகாதமாக விருப்பவர், ஞானம், ஐஸ்வர்யம், பலம் முதலிய அளவற்ற குணங்களால் பிரகாசிக்கும் கபீரர். மானிட வேடத்தில் மறைந்த மாயர். கபீராத்மா, ஆழம் கண்டறியாதபடி ஸர்வ ஸ்வதந்திர ரூபமுள்ள வர். விசேஷமாக அபயப்ரதானம் செய்து சரணாகதர்களை அங்கீகரித்து, தமது ஆக்ஞைக்கு உட்படும்படி நடத்திச் செல்லும் வ்யாளர். என் பிரபு சீதாநாயகர். தேசகால ஸ்வரூப குணங்களுக்கு வரையில்லாமல் முடிவு பெறாத அனந்தர். ஸர்வ வ்யாபி, ஸர்வக்ஞர், ஸர்வாந்தர்யாமி, பக்தர்களைக் காப்பதற்காக அனந்தமான எண்ணிறந்த ரூபங்களை எடுக்கும் மஹாமாயர், ஸர்வ ஸ்ரேஷ்டர்களான உமா மஹேஸ்வரர்களாக ஏகமாக வரிக்கப்படும் நாராயணர், அப்போது அலர்ந்த செந்தாமரை போல கண்களை உடைய புஷ்கராக்ஷர், நிர்விஹாரர், கராரி, விவேக ஞானம் உடைய] சீதாராமன் நாகபாசத்திற்கு கட்டுண்டார். [லீலையாக, மாயா நாடகமாடுகிற என் பிரபு ஸ்வ வசம் கொண்டவராக நாக பாசத்திற்குக் கட்டுண்டவராக தனது ஸ்வதந்திரத்தை இழந்த வரைப் போலக் காணப்பட்டார்.] இது ஒன்று அவருடைய கபட நாடகம்? இது மாதிரி எவ்வளவு கபட நாடகங்கள் செய்து முடித்திருக்கிறார்? ''பகவான்'' என்று சொல்லக்கூடிய ஸர்வ சக்திமான் தனது ஸ்வதந்திரத்தை யிழந்தவராக சக்தி

யற்றவராக நாகபாசத்திற்குக் கட்டுப்பட்டதுபோல நடித்தார்.''
(445)

''ரணத்தைப் பெரிதாக்க வேண்டும், தன்னுடைய சத்ருக்களின் யுத்த சாமர்த்தியத்தை வெளிப்படுத்த வேண்டும். யுத்தத்தின் சிக்கல்களை தேவர்களுக்குக் காட்டவேண்டும், என்று விளக்குவதற்கு என் பிரபு நாகபாசத்திற்கு கட்டுப் பட்டார். அதைக் கண்டு அவருடைய ஸங்கல்பத்தின்படி தேவதைகள் நடுங்க ஆரம்பித்தார்கள். (446)

சிவன் கிரிஜாவிடம் மேலும் தொடர்ந்து சொல்கிறார், ''கிரிஜா, எந்த பிரபுவினுடைய நாமத்தை உச்சரிப்பதால் முனிஸ்ரேஷ்டர்கள் ஜன்மச் சுழல்களிலிருந்து தப்புகிறார்களோ, பாச பந்தங்களை அறுத்து, ஜன்ம ம்ருத்யு, ஜனன மரணகர்ப்ப வாஸம் முதலிய துன்பங்களிலிருந்தும், அவற்றின் காரணங்களாகிய அவித்யை, பூர்வகர்மம், அதனால் யேற்படும் வாசனை, அதைப் பற்றிய விருப்பம், அதனடியாக வரும் பிரக்ருதி ஸம்பந்தம், ஆகிய ஸம்சார தாபங்களை அறுத்து விடுவார்களோ, (எவருடைய நாம உச்சாரணத்தினால் விஷம், பிசாசம், வ்யாதி, கிரஹம், தீய கனவு, அபசகுனம் முதலிய அமங்களங்களுக்கு சாந்தி செய்வதற்கும், மஹா பாதகம் முதலான பாதங்களுக்கும் பிராய சித்தமாகவிருந்து, இம்மையிலும், மறுமையிலும் மேன்மை கிடைப்பதற்காகவும், ஸம்சார விலங்கை விட்டு, பரம பதத்தை அடைவதற்கும் உபயோகப்படுகிறதோ, அப்பேற்பட்ட விஸ்வ மூர்த்தி, விஸ்வ நிவாஸ், உலகமெல்லாம் தனது உடம்பாக உடையவர், எல்லாவிதத்திலும் பிரவேசித்து எங்கும் நிறம்பியிருக்கும் பிரபு, திவ்ய ஆத்ம ஸ்வரூபம், திவ்ய மங்கள விக்ரஹம், கல்யாண குணங்கள், மகிமைகள் நிறம்பிய பரிபூர்ணர்) என் பிரபு பகவான் விஷ்ணு, நாக பாசத்தால் கட்டுண்ணப்பட்டார்,'' என்று சொல்லுவது வேடிக்கையாக விருக்கிறது. (ஸர்வ ஸ்வதந்திரரான பிரபு தமது ஸங்கல்பத்தினால் அன்று பிரும்மாஸ்திரம் பிரயோகம் செய்யப்பட்டசமயம் ஆஞ்சநேயர் கட்டுண்ணப் பட்டதுபோல, தானே வலுவில் நாக பாசத்திற்கு கட்டுண்டார்.) (447)

''என் பிரியமுள்ள பவானி, அழகிய கீர்த்தியுள்ள ஸ்ரீ ராம சரிதம், மஹா புண்யஸ்ரவண கீர்த்திகளுடன் கூடியது; பிரபு

வினுடைய ஸகுண ஸ்வரூபத்தின் லீலைகள் அனந்தமாகவிருக்கின்றன. அவைகளில் மனம் புத்தியைச் செலுத்துபவன், தன்னுடைய வாக்கு சாமர்த்தியத்தினுல் விவரிக்க எண்ணுகிறவன், நிச்சயமாகச் சோர்வை அடையத்தான் அடைவான். இந்த விஷயத்தில் அறிவும் வாக்கும் உபயோகப்படுமா ?'' (ராம கிருபையில்லாமல் பகவான் அர்ச்சாவதாரம் எடுக்கும் காலங்களிலும் அவரை யாவராலும் சுலபமாக அறிந்துகொள்ள முடியாது ) அதை நன்ருக அறிந்து கொண்ட சூக்ஷ்ம ஞானி, மஹா வைராக்ய உள்ளத்துடன், ஸர்வ ஸங்கதியாகத்தை அடைந்தவனுக, சீதாராம கிருபையினுல் ஏக மாத்திரம் சீதாராமனைப் பஜிக்கிருன். இதில் ஆச்சர்யப் படுவதற்கில்லை.''

[ஆகையினுல் ராம பக்தியையே ஸாம் ராஜ்யம் என்று ஹே மனஸே,நன்ருகத்தெரிந்துகொள். அதுவேபிரும்மானந்தத்தைக் கொடுக்கும். வார்த்தைகளால் ஸ்வானுபவத்தைச் சொல்லக் கூடுமா? அடே அப்பா, ராம பக்தி என்கிற கோபுரம் எவ்வளவு பெரிதாக விருக்கிறது. கண்கள் இமைகளைக் காப்பது போல, ராம பக்தியும், ராம தாஸர்களின் மனத்தை அடக்கி கெட்ட வழிகளில் பிரவேசிக்காமல் தடுக்கிறது. ராம பக்தியில்லாத போனுல், மஹா லக்ஷ்மி பூமிக்கு எழுந்தருளுவாளா? சீதையாக அவதரித்து ராமனையே நம்பு என்று காட்டி சுசரிதமாக நிஷ்களங்கையாக வாழ்ந்தாளே. சூஷ்ம புத்தி கொண்ட பரதன் ராஜ்யத்தைத் தியாகம்செய்துவிட்டு, ஏன்ஸ்ரீராமனுடைய பாதுகைகளை வரித்தான்? அந்த மர்மம் கூட உனக்குப் புரியவில்லையா? ஹே மந்த புத்தியே, இன்னமும் சொல்கிறேன் கேள். காசீசனுகிற சுந்தர சிவன் தன் பிரிய பத்னிக்கு நேத்ரங்களில் ஆனந்தக் கண்ணீர்கள் மல்க சீதாராமனுடைய புகழ் மலிந்த வாழ்க்கைச் சரிதத்தைச் சொல்லுவாரா ? வேடுவ ஸ்திரியாகிற சபரி அதிதி ஸத்காரம் செய்வாளா ? வானரங்கள் கடலைக் தாண்டக் கூடுமா ? உரலோடு பர பிரும்மத்தை ஒரு ஸ்திரீ கட்ட முடியுமா ? மஹா அபராதியான எனக்கு தியாகராஜர் தனது ஆனந்த ரஹஸ்யத்தைச் சொல்லுவாரா ? ராம பக்தியே பாக்யம் என்று தெரிந்து கொள்வதற்கு இன்னமும் தயக்கமா ? தசரத நந்தனனை வேதங்கள் புகழும்படி கீர்த்தனம் செய்து, ஏன் ஆனந்தமடையத் தயங்குகிருய் ? வர

தியாகராஜ,துளசிதாஸர் காட்டிய பாதைகளில் ஹ்ருதயத்தைப் பதித்து ஸுரவிருந்த, பூஸுர வ்ருந்த மூல சீதாராம பதங்களை நாடிய ராமதாஸர்களே உனக்குத் தஞ்சம், என்று தெரிந்து கொள். சம்போ மஹா தேவா, உமா, கௌரி, நீங்கள்தான் எனக்குத் தஞ்சம்.] (448)

[*தியானம்*

ஹே கருடரே, அனந்த வீர்யரே, மஹாக்ஷரே, வேதாத்மாவே, என் பூத உடலில் வீற்றிருக்கும் ஸுபர்ணரே, ராஜ ஹம்ஸரே, வாயுவாஹனரே, காஸ்யபரே, உமக்கு ஆயிரம்நமஸ்காரங்கள் செய்கிறேன். கிரீஸரே, நீர்தானே ஸ்வஸ்தி வசனங்களாக விருக்கிறீர். இந்த ஜகம் முழுவதும்உம்முடைய, உறவினர்கள்தானே. பிரபோ பசுபதி, உம்முடைய அருளினுல் அல்லவோ யாவரும் நோயற்று பரஸ்பரம் நேசமுள்ளவர்களாகவுமிருக்கிறுர்கள். உமாகாந்தரே, நீர்தானே தேவர்களுக்கும் பிஷக்காகிற அஸ்வினி தேவர்கள். பக்தர்களின் குணத்தை ஒன்றையே ஸ்மரித்து, தோஷங்களை மறந்து, துஷ்ட ஜந்துக்களான பாம்பு முதலானவைகளையும் அரக்கர்களையும் எங்களுக்காக அழிக்கின்றீர். தாமிரம் போல சிவந்த உதய அருணனின் சஹோதரரே, பப்ரு: என்கிற ஆதி சேஷனையும் தாங்குகிற அமிதபலரே, என்னிடம் அன்புடன் கஜேந்திரனைத் தழுவிய பர்ய வஸ்திதராக, ஸ்வாமி, தாங்கள் ஸதா இருக்கவேண்டும். பரம சிவனே, ருத்ரரே, உம்மையே சுமங்களமாகவும், ஸுர்யனுகவும், வாலகில்யர்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட கருடராகவும், ஸுபர்ணராகவும், நான் பார்க்கிறேன். நீரே பூமியை எல்லாதிக்குக்களிலும் வியாபித்திருக்கும் ருத்திரமூர்த்திகளாகவுமிருக்கிறீர். மார்க்கண்டேயருக்கும், ஸுமுகனுக்கும் ஆயுள் முடிந்த போதிலும், அவர்களுக்காகப் பரிந்து, யமன் அணுகாமல் காத்து அருளிய ஸஹஸ்ராக்ஷரே, ஸஹஸ்ர சீர்ஷரே, உமது அருள் இருந்தால் எல்லோருடைய கோபமும் தணிந்து போய்விடுகிறது. நீலக்ரீவரே, கண் வரால் அனுஷ்டப் சந்தஸ்ஸில் வழிபட்டு ஆராதனை செய்யப்பட்ட சம்புவே, சூர்யனுக நீர் உதித்துவிட்டால் விஸ்வபூதங்களும், மற்றும்எல்லாபிராணிகளும் கூடஉம்முடைய அனுகிரஹத்தால் பார்க்கின்றன. நீரே த்ருஷ்ட, அதிருஷ்ட ஆதித்யரூபி, என்

னுடைய பக்தி வினயத்தினுல் உமது கோபம் அடங்கட்டும். ரதந்திரம் என்னும் ஸாமத்தினுல் உம்மை யோகியான மஹேஸ் வரராகத் தியானித்து, மிருகத்தன்மையைப்போக்கினவசிஷ்டர் என்னும்மஹரிஷி புகழ்ந்தபடி,நீர் சரணுகதவதிஸலர், பரிக்ரஹர் ஸ்ரீவர்த்தனர். என்னுல் பூஜிக்கத்தக்க மஹான். அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கும் என்னிடம் நீரும், உமையும், உமது அடியார்களாகிய பிரமத கணங்களும் கிருபையுடன் இருக்க வேண்டும். ஹிரண்மயம் ப்ராஜமான வபுஷம் சுசிஸ்மிதம் சண்ட தீதி தி மகண்டித த்யுதிம் முனிஸஹஸ்ர ஸேவிதமான பரம தேஜஸ்ஸை நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். ஹே ராமா, உனது திருவிளையாடல்கள் அநேகம். உமதுமாயை களும் அனந்தம். அன்று ஸுமுகனைக் காப்பாற்றும் சமயம் விஷ்ணுவாகிற நீர் "துர்பலனுன உன்னை பலமுடையவனுக நீ நினைக்கிருய். பக்ஷியே, என் எதிரில் நீ உன்னைத் துதித்தது போதும். மூவுலகையும் நானே தரிக்கிறேன். நீ என்னைக் கை களால் சுமக்கவில்லை. நீயும் என்னுல் தரிக்கப்படுகிருய். என்னு டைய வலக்கையை சுமப்பாயாகுல் பலனுள்ளவனுக ஆவாய்," என்று சொல்லி பிரபு கருடருடைய தோளில் வலக்கையை வைத்தார். கருடன் அதன் பாரத்தால் அறிவை இழந்து கீழே விழுந்தான். அப்பொழுது மஹா புத்திமானுன கருடர், மஹா ஸ்வானர் என்கிற நாராயணரை, "நீரே உலகத்திற்கு ஸாரம். உம்முடைய பலம் என்னுல் அறியப்படவில்லை. உம் முடைய த்வஜத்தில் வசிக்கின்ற பறவையாகிற என் விஷயத் தில் பொறுக்க வேண்டும். தேவரே, விபுவே, விஷ்ணுவே, வாயுவே, உபேந்திரரே, இந்திரனே, நாரதரால் முழுவதும் அறியப்பட்டவரே, என்னிடம் மஹா கிருபையுடன் இரும்," என்று கெஞ்சினுன். ஸுமுகனை மார்பில் தரித்துக்கொண் டிருக்கும் கருடரே, நாகாபரணரே, என்னிடம் மிக்க அருள் கொள்ளவேண்டும். கருட வாஹனரே, கிருபை செய்யும்]

மேகநாதன் வானர சைன்யத்தை நாசம் செய்தான். மறைந்து யுத்தம் செய்யும் மேகநாதன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, துர்வசனங்களைச் சொல்ல ஆரம்பித்தான். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஜாம்பவான் சொல்ல ஆரம்பித்தான், "அடே துஷ்டா, நின்ற இடத்திலேயே நில்." இதைக் கேட்ட

இந்திரஜித்திற்கு கோபமும் கிரோதமும் அதிகரித்தது. அத்துடன் அவன் வார்த்தைகளைச் சொன்னான். (449)

"அடே கிழவா, மூர்க்கத்தனத்துடன் சண்டை செய்யாதே. நீ வயது வந்தவன் என்று நினைத்து உன்னை உயிருடன் விட்டு விடுகிறேன். அதமனே, உனக்கு என்னை யுத்தத்திற்கு அழைப்பதற்கு எவ்வளவு ஸாஹஸம் இருக்க வேண்டும்? பார் உன்னை விட்டேனு," என்று சொல்லிக்கொண்டு இந்திரஜித் மிக்க பிரகாசமாக விருக்கும் திரிசூலத்தை ஜாம்பவான் மீது வீசி எறிந்தான். அதை ஜாம்பவான் தனது கைகளினால் பிடித்துக்கொண்டு மேகநாதனிடம் ஓடி வந்தான். (450)

அதைக் கொண்டு ஜாம்பவான் இந்திரஜித்தின் மார்பில் ஓங்கி அடி அடித்தார். தேவர்களுக்கு எதிரியான மேகநாதன் மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்தான். அப்பொழுதும் கோபம் தணியாமல் ஜாம்பவான் மீண்டும் கிரோதம் அடைந்தவனாக அவனைக் குத்திக் குத்தி பூமியில் தள்ளி, தனது பலத்தை வெளிக் காட்டினார். (451)

ஆனால் வர பலத்தினால் இந்திரஜித் கொல்லப்பட முடியவில்லை. அப்பொழுது ஜாம்பவான் இந்திரஜித்தின் கால்களைப் பிடித்துக்கொண்டு, அவனைச் சுழற்றி லங்கையின்மீது வீசி எறிந்தார். இதற்குள் தேவரிஷி நாரதர் கருடனை அனுப்பி வைத்தார். நாரதருடைய வசனத்தைக் கேட்ட கருடன் மிக்க சினத்துடன் சிறகுகளின் பெரிய காற்றினால் மூவுலகங்களையும் நிறைத்துக்கொண்டு விரைவாக யுத்த களத்திற்கு வந்தார். (452)

பக்ஷிராஜனான ஸுபர்ணர் மாயையினால் ஏற்பட்ட ஸர்ப்பக் கூட்டங்களைப் பிடித்துச் சாப்பிட்டார். அப்பொழுது வானரக் கூட்டங்கள் மாயையின் லீலைகளிலிருந்து தப்பினவர்களாக மீண்டும் சந்தோஷத்தை அடைந்தார்கள். (453)

பர்வதங்கள், விருக்ஷங்கள், பாறைகள், நகங்கள் முதலியவைகளை ஆயுதங்களாகக் கொண்டு வானரங்கள் மீண்டும் க்ரோத மூர்ச்சிதமாக ஓடி வந்தார்கள். ராக்ஷஸர்கள் மீண்டும் விசேஷமாக வியாகுலமடைந்து ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் லங்கையின் கோட்டையின் மதிலில் ஏறிக் கொண்டார்கள். (454)

மேகநாதன் மூர்ச்சையிலிருந்து விடுபட்டான். அப்பொழுது தன் பிதாவைப் பார்த்தான். அவனுக்கு மிக லஜ்ஜையாக விருந்தது. உடனே அவன் ஒரு மலைக் குகைக்குள் புகுந்து யாகம் செய்ய ஆரம்பித்தான். தன்னை யாவரும் ஜயிக்க முடியாதபடி ஆகவேண்டும் என்று எண்ணம்கொண்டு, அவன் யாகம் செய்ய ஆரம்பித்தான். (455)

இங்கு விபீஷணன் இந்திரஜித்தின் யாக ஏற்பாடுகளை அறிந்து கொண்டான். அவனுடைய வரங்களையும் நினைத்துக் கொண்டான். (பன்னிரண்டு வருஷங்கள் நித்ரை ஆகார, மின்றி இருப்பவனல் மேகநாதன் கொல்லப்படுவான் என்கிற வரத்தையும் நினைத்து, லக்ஷ்மணன் அயோத்தியை விட்டு ராம ஸேவையைப் பன்னிரண்டு வர்ஷங்கள் நித்ரை, ஆகாரம் சோம்பல் இன்றி செய்து வந்ததால், அவனே அவனைக் கொல்லத் தக்கவன் என்று தீர விசாரித்து,) விபீஷணன் பிரபு ஸ்ரீராமசந்திரனிடம் கைகளைக் கூப்பிக்கொண்டு விக்ஞாபித்தார், "பிரபு, அதுளித பலமுள்ளவரே, உதார ஹ்ருதயத்தைக் கொண்டவரே, மேகநாதன் ஒரு பெரிய மாயாவி, தேவதைகளின் சத்ரு, கெட்ட எண்ணத்துடன் யாகம் செய்கிறுன். (456)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷ்மி பிரியா, உன்னுடைய நாராயணு நாமம் எவ்வளவு மஹத்தான பாபங்களைப் போக்கக்கூடியது. அஜாமிளன் தனது புத்ரனின் பெயராகிய நாராயணனை அழைத்து, மஹா பாதகங்களிலிருந்து விடுபட்டான். பதிதனையும் பாவனம் செய்யக் கூடிய தாரகமே, யத்ருச்சையாக உமது நாமத்தை உச்சரிப்பதாலே அகாதமான வீர்யம் உள்ளதாக விருக்கிறதே. வாஸ்தவமான பக்தியினுல் சொல்லப்பட்ட உமது திருநாமம் எவ்வளவு மஹத்வம் வாய்ந்தது என்று ஸ்மரிக்கக் கூடுமா ? ஹே பிரபோ, மஹாதேவரே, யமரே, ஹரி : நாராயண பிரபோ, என்று சொல்லக்கூடிய பக்தனிடம் உமது கோபங்கள் நழுவி விடுகின்றன. ஸஹஸ்ராக்ஷரே, உம்முடைய அம்புராத் தூணிகளும், வில்லும், பாணங்களும் மழுங்கி, என்னிடம் மங்கள வடிவாக விருக்கவேண்டும். பீம விக்ரமரே,

கபர்த்தின், ஸம்சார தாபங்களுக்கு விசல்யகரணி என்கிற சிறந்த ஔஷதமாக தாங்கள் எனக்கு இருக்கிறீர். உம்மிடமும் உமையிடமும், உம்முடைய பரிவாரங்களிடமும் நல்ல மன துடைய என்னிடம் உம்முடைய சந்திரஹாஸம் என்கிற கத்தி யின் உரை விலகாமலிருக்கட்டும். நாரத பகவானுல் அனுஷ் டப் சந்தஸ்ஸினுல் உபாஸிக்கப்படும் ருத்ரரே, பக்தர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதில் சிறந்தவரே, உம்முடைய ஆயுதங்கள் எவையோ, உம்முடைய தனுஷ்பாணம் எவை உள் ளதோ, அவைகளால், உம்மை சரணமடைந்திருக்கும் என்னை ரக்ஷித்தருளவேண்டும். நமஸ்தே அஸ்து பகவன் விஸ்வேஸ்வ ராய மஹாதேவாய திரியம்பகாய, உமை பிரியத்தினுல் உம்மை அழைக்கும் நாமாக்களாகிற திரிபுராந்தகாய திரிகாக்னி காலாய காலாக்னி ருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய ஸர்வேஸ்வராய ஸதாசிவாய ஸ்ரீ மஹாதேவாய நம : என்று சொல்லி, உம்மை ஸமஸ்த 'பரிவாரங்களுடன் நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். என்னைக் கெட்ட வழியில் போகாமல் காத்து, எனது பாபங்களைப் போக்கி, அந்தம ஸ்திதி யில் நாராயண நாமத்தை அஜாமிளன் சொன்னது மாதிரி சொல்லச் சொல்லி, ரக்ஷித்தருளவேண்டும்.]

''ஹே பிரபோ, இந்திரஜித் யாகத்தை முடித்து சித்தி அடைந்து விட்டானுகில், அவனை ஒருவனுகிலும் ஜயிக்க முடியாது. தர்மசாஸ்திர பரிபாலரே, அவன் யாகத்தைப் பூர்த்தி செய்ய முடியாதபடி நாம் ஏதாவது செய்தாகவேண்டும். காலதாமதம் செய்யக் கூடாது;'' ரகுபதி இதைக்கேட்டு (மகிழ்ச்சி) சுகத்தை அடைந்தார். இந்திரஜித்திற்கு முடிவு காலம் வந்துவிட்டதை அறிந்து கொண்டார். அவர் அங்கதாதி பிரமுகர்களை அழைத்து அவர்களிடம் சொன்னுர். (457)

"ஸகோதரர்களே, நீங்கள் அனைவரும் லக்ஷ்மணனுடன் செல்லுங்கள். இந்திரஜித்தின் யாகத்தைப் பூர்த்தி செய்து விடாமல் கெடுத்துவிடுங்கள். ஹே லக்ஷ்மணு, யுத்தம் நேரிட்டால் அவனைக் கொன்றுவிடு. இதோ பார், தேவதைகள் அவனைக் கண்டு நடுங்கிக் கொண்டிருக்கிருர்கள். தர்மத்தை அவமதிக்கும் இவனைக்கொன்று தேவதைகளை ஸந்தோஷப் படுத்து. அப்பொழுதுதான் என் துக்கமும் விலகும்." (458)

"அன்புள்ள லக்ஷ்மணா, மீண்டும் கேள். உன்னுடைய பலத்தையும் புத்தியையும் உபயோகித்து, தர்மத்தில் சிரத்தையையும் ஸ்மரித்துக்கொண்டு, இவனை யுத்தத்தில் அடித்துக் கொன்று விடு. ஹே ஜாம்பவான், சுக்ரீவா, விபீஷணா, நீங்கள் மூவரும் சேனையுடன் சென்று இவனுக்கு ரக்ஷையாக இருங்கள்." (459)

எப்பொழுது என் பிரபு தர்மாத்மாவான ரகுவீரன் தன் தம்பியாகிற லக்ஷ்மணனுக்கு ஆக்ஞை செய்தாரோ, அப்பொழுது ஸஹஸ்ராக்ஷரான ஆதிசேஷன் ரூபி, யமன் காலனைப் போல அமித பலமுள்ளவர், [விருஷபத்வஜர், திரிபுராந்தகர்,] பரமபாகவதனாகிற லக்ஷ்மணன் களங்கமின்றி, இடுப்பில் கச்சையை இறுகக் கட்டிக்கொண்டு, தனது பிரபுவின் பாத சரணங்களில் விழுந்து நமஸ்கரித்து, அருட்பிரஸாதம் வேண்டினார். [பாற்கடலைப்போல பரந்து இருக்கும் ஆத்மாவை உடைய லக்ஷ்மணன், அதன் அலைகள் போலவிருக்கும் இந்திரியங்களை அடக்கி, பெரும் மனத்துடனிருக்கும் ஸுஜாதன், அனந்தன், ஆத்மாராமன், மஹாயோகி, அவித்யை, மோஹம், மோகம் இவைகளிலிருந்து விலகி, மஹாசிரத்தையுடன் கூடிய லக்ஷ்மி ஸம்பன்னன், தேக ஆத்ம ஸம்பந்தங்களைத் தெளிவாக உணர்ந்தவன், பரமயதி, என் பிரபு ராமானுஜன் ஆஸ்ரிதாஸ்ரிதானுபவம் கொண்ட பரமபாகவத வைஷ்ணவப் பிரியன்] ராமதாஸன் ஸ்ரீ சீதாராமனுடைய பாதசரணங்களில் விழுந்து நமஸ்கரித்தான். மஹா உரகனின் அம்சமாகிற லக்ஷ்மணனை என் பிரபு தனது ஹிருதயத்தில் கட்டித் தழுவிக்கொண்டார். கம்பீரமான மேகத்வனியில் வசனங்களைச் சொல்ல ஆரம்பித்தான் என் பிரபு லக்ஷ்மணன். (460)

[*தியானம்*

நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, ஸ்ரீநிவாஸா, அலர்மேல் மங்கைமார் உறைபவனே, நீங்கள் இல்லாதபோனால் நான் என்ன செய்வேன்? தேவு மெய்பொருளும் படைக்க பூவில் நான்முகனைப் படைத்த பத்மநாபரே, தேவனே, என் எம்பெருமானே, உமக்குப் பிரயோசனம் இல்லாதபோனால் நான் வாழ்வது எதற்கு? உமது பெருமைகளை நான் சொல்லிப் போமோ? பள்ளி

யாலிலை ஏழுலகம் கொள்ளும் வள்ளல் வல்லாயிற்ற பெருமான் நீயன்றோ? ஹே பிரபோ, கள்ளமாய் என் உள்ளம் புகுந்து, என் கருத்திலும் நான் காணும் எல்லாப் பொருளிலும் மாயமாகப் புகுந்த எம்பிரானே, நீதானே என்னை ஸம்ரக்ஷிக்க வேண்டும். எனது குருகூர் சடகோபன் சொல்படி, ஏழு உலகங்களையும் உருவம் கொண்ட கோலக் கூத்தனே, வெளிறேன், நான்முகன், இந்திரன், வானவர், புள்ளூர்தி கழல் பணிந்தேத்துவரே, என்னை நீர் காப்பாற்றுவிடில் எனக்கு புகல் ஏது? ஹே சம்போ, வ்ருஷப்ரியரே, ஹ்ரீஷீகேசரே, பரமேஸ்வரரே, உம்மை முன்னும் பின்னும் பல தடவைகள் நமஸ்கரிக்கிறேன். இளம்புல் போன்ற நிறமுள்ளதும் மஞ்சள் பாய்ந்த சிவப்பு வண்ணரே, பதீனும் பதயே நம: என்று சொல்லி நமஸ்கரிக்கும் என்னைப் பாரும். பப்லுசாய விவ்யாதினே அன்னாநாம் பதயே நமோ நம: என்று சொல்லி நமஸ்கரிக்கும் என்னை ஸ்வாமி, கிருபையுடன் பாரும், என்னுடைய ஸம்சார விருக்ஷத்தைச் சேதிக்கும் ஜகதாம்பதியே, எனது க்ஷேத்ரக்ஞரே, எனக்கு மந்திரியாகவும், குருவாகவும், பதியாகவுமிருக்கும் ஸ்தபதியே, உறக்கக் கூவி, என்னை அழ வைக்காமல் ஸாதுவென்று உம்மால் அனுகிரஹிக்கப்பட்ட வனை ரக்ஷித்தருளும். வாளேந்தியவரே, வில்லையும் அம்பையும் கைகளில் தரிப்பவரே, ருத்ரரே, கால பைரவரே, என்னை நய வஞ்சகராக இருப்பவர்களிடமிருந்து காப்பாற்றும். எனக்கு வனங்களிலும், காடுகளிலும், இரவிலும் சந்தியிலும், அரக்கர் களிடமும், மற்றும் இதர கொடூர நெஞ்சம் உள்ளவர்களிட மிருந்து என்னை ரக்ஷியும். ஜாக்ரதை, ஸ்வப்ன, ஸுஷுப்தி துரியாவஸ்தைகளிலும் என்னை ரக்ஷியும். விலங்குகளிட மிருந்தும், பக்ஷிகளிடமிருந்தும், புழு பூச்சிகளிடமிருந்தும், ஸர்ப்பம் போன்றவைகளிடமிருந்தும், தாவரங்களிடமிருந்தும், பஞ்ச பூத உத்பாதங்களிடமிருந்தும், இன்னும் பல விதங்களால் கொல்லும் சக்தி வடிவங்கள் கொண்ட ஆபத்துக்களிடமிருந் தும் நீர்தானே காப்பாற்ற வேண்டும். யக்ஞபதி, ஸப்த மாதர் கள் என்று சொல்லப்படும் உக்ர தேவதைகளான துர்க்கை முத லான வடிவங்களாயுள்ள பரமேஸ்வரரே, உம்மை நான் ரக்ஷகம் அடைந்த பின்பு எதற்காக கவலைப்பட வேண்டும்? ஸயஞ்சர் என்னும் யக்ஞ சத்ருக்களோடு இருப்பவரே, ஸர்ப்ப சீர்

நிவாஸனரே, ஸர்வகரே, என்னை ரக்ஷித்தருளும்.]

"அண்ணா, உம்முடைய அனுக்ரஹம் பெற்றுக்கொண்ட வனாக ஆவேன். நான் இன்று தேவ சத்ருவான மேகநாதனை வதம் செய்யாமல் திரும்பி வருவேனாகில், பிரபோ, "நான் ரகுபதியின் சேவகன்," என்று சொல்லிக் கொள்வதற்கு தகுந்தவனில்லை. நூறாயிரம் சங்கர பகவான்கள் வரட்டும். அவர்கள் எனக்கு உதவி செய்வார்களே தவிர அவனுக்கு நன்மையைச் செய்ய மாட்டார்கள். (அர்ஜுனனுக்கு உதவியது மாதிரி, யுத்த களத்தில் என் முன்னால் சங்கர பகவானே செல் வார். அவர் என் எதிரிகளை அழிப்பார்.) உம்முடைய திருமந் திரத்தைச் சொல்லி, [ஸர்வாதாரமான தர்மத்தை நினைத்து, விருஷப த்வஜரை கொடியாகக் கொண்டு,] ஸ்வாமி, நான் இந்திரஜித்தை உமது ஸங்கல்பத்தால் கொல்வேன். என்னை அனுக்ரஹிக்க வேண்டும்." (461)

ஸ்ரீரகுபதியின் சரணங்களின் விழுந்த லக்ஷ்மணன் சாக்ஷாத் அனந்தன் என்கிற மஹா உரகன், ஆதிசேஷன். அவன் தனது நிஜ ஸ்வரூபத்தை நினைத்துக் கொண்டவனாக, ராமானுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு சீக்கிரமாகச் சென்றான். அங்கதன், நீலன், மைந்தன், நளன், ஹனுமான் ஆகிற உத்தம வீரர்கள் அவனுடன்கூடச் சென்றார்கள். (462)

வானரங்கள் இந்திரஜித் யாகம் செய்யும் இடத்தை அடைந்தார்கள். அப்போது அவர்கள் இந்திரஜித் ரத்தத்தையும், உயிருள்ள காளைகளையும் ஆஹுதி செய்துகொண்டு, யக்ஞம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்தார்கள். வானரங்கள் யாகத் தைக் கலைத்து நாசம் செய்தார்கள். அப்பொழுதும் அவன் யாக தீக்ஷையாக விருந்து கொண்டு, எழுந்திருக்கவில்லை. அவன் வானரங்களையும், யாவரையும் திட்டிக்கொண்டிருந்தான்; தன்னைப் பற்றியும் புகழ்ந்து கொண்டிருந்தான். (463)

இவ்விதமிருந்தும், அவன் யக்ஞத்தை முடித்துவிட ஆசையுடனிருந்ததால், எழுந்திருக்கவில்லை. அதைக்கண்ட வானரங்கள் கோபம் கொண்டு, அவனிடம் சென்று, அவன் மயிரைப் பிடித்து, காலால் உதைத்து அவனைச் சண்டைக்கு இழுத்தார்கள். வானரங்கள் அவன் திரிசூலம் கொண்டு எழுந்ததைப் பார்த்து ஓடினார்கள். அவன் அவர்களைத் துரத்

திக் கொண்டு, ஸ்ரீராமானுஜன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். (464)

லக்ஷ்மணனைப் பார்த்ததும் இந்திரஜித்திற்கு கோபம் அதிகரித்தது: கோரமாக கர்ஜனை செய்து கொண்டு, பயங்கரமாக எல்லோரையும் வைது கொண்டும், மீண்டும் கர்ஜனை செய்து கொண்டு மிருந்தான். அங்கதனும், ஹனுமானும் அவன் மீது பாய்ந்தார்கள். அப்பொழுது மேகநாதன் திரிசூலத்தை அவர்கள்மேல் ஓங்கி அடித்தான். வலி பொறுக்க முடியாமல் இருவர்களும் பூமியில் விழுந்தார்கள். (465)

அதன் பிறகு திரிசூலத்துடன் லக்ஷ்மணனிடம் ஓடி வந்து அவரையும் இந்திரஜித் அடித்தான். அனந்த ஸ்வரூபியாகிற லக்ஷ்மணன் தனது பழைய வாசனைகளை நினைத்துக் கொண்டு, அந்த திரிசூலத்தை இரு துண்டுகளாக ஒடித்தார். அதற்குள் யுவராஜனை அங்கதனும் ஹனுமான்ஜியும் மூர்ச்சையிலிருந்து தெளிந்தார்கள். அதிக கோபம் அடைந்தவர்களாக அவர்கள் இந்திரஜித்தை ஓங்கி அடித்தார்கள். ஆனால் அவன் அதிகமாகக் காயப்படவில்லை. (466)

எவ்வளவு அடித்த போதிலும் சத்ருவான மேகநாதன் கொல்லப்படவில்லை. இதைக்கண்ட வீரர்கள் திரும்பினார்கள். அப்பொழுது இந்திரஜித் அடங்கப்படாமல் அவர்களை நோக்கி மீண்டும் பாய்ந்து ஓடி வந்தான். கர்ஜனை செய்து கொண்டு வரும் இந்திரஜித்தை நோக்கி, லக்ஷமணன் பயங்கரமான பாணத்தைப் பூட்டி அவனை அடித்தார். (467)

வஜ்ரத்திற்குச் சமமான பாணம் வருவதைக்கண்ட துஷ்டனாகிற இந்திரஜித் உடனேயே அந்தர்தியானம் அடைந்தான். அவனை யாவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. விவித விசித்திரமான வேஷங்களைத் தரித்துக் கொண்டு இந்திரஜித் கபட யுத்தம் செய்ய ஆரம்பித்தான். சில சமயங்களில் தன்னை வெளிப் படுத்திக் கொள்வான். சில சமயங்களில் அவன் தன்னை மறைத்துக் கொள்வான், இவ்விதம் பலவிதங்களாக அவன் யுத்தம் செய்தான். (468)

சத்ருவான இந்திரஜித்தை ஜயிக்க முடியாதவனாக விருப்பதைக் கண்ட வானரர்கள் பயந்து விட்டார்கள், அவர்களுக்கு கலக்கம் யேற்பட்டது. அதனால் சேஷ நாயகனாகிற லக்ஷ

மணன் அதிக்ரோத மடைந்தான். அவன் தன் மனத்திற்குள் எண்ணமிட்டான், "இனி இந்த பாபியை அதிக நேரம் உயிருடன் வைத்திருக்கக் கூடாது ; சீக்கிரமாகவே முடித்து விட வேண்டும்," என்று தீர்மானித்தவனாக, லக்ஷ்மணன் திருடமாக ராம மந்திரத்தை ஜபித்து, அவருடைய சாஸ்வதமான தர்ம ஸ்வரூபத்தை நினைத்து ராமனுடைய ஸத்ய ஸங்கல்பத்தையும் பரமாக நினைத்து, தன்னை ஒரு வகைப்படுத்திக் கொண்டு,

(469)

என் பிரபு லக்ஷ்மணர், (லக்ஷ்மி ஸம்வர்த்தனர், லக்ஷ்மி ஸம்பன்னர், சுத்தஸத்வ ஸ்வரூபி, சேதனர்களை வைகுண்டத்தில் தனது மூச்சுக் காற்றினால் சுத்தப்படுத்தி, முக்குணங்களிலிருந்து விலகச் செய்யும் ஞான பிரபோதகன், சித்த புருஷர்களால் ஸதா ஆஸ்ரயிக்கப்படும் நாகராஜன், ரிஷிகளாலும் சிறந்த தவம் உள்ளவர்களாலும் ஆராதிக்கப்படும் சிறந்த ராமானுஜர், என் குலபூஷணன், ராமதிவாகரன்,) இந்தக் காரியத்தை எவ்விதம் ஸாதிக்க வேண்டும் என்று நினைத்துப் பார்த்து, ஸ்ரீராமனுடைய திருவடிகளே சரணம், என் பிரபு கோஸலாதீஸர், மஹா வீர பிரதாபங்களைக் கொண்ட மஹாத்மா, எவருடைய திருநாம உச்சாரணத்தால் ஸகல காரியங்களும் இனிது நிறைவேறப்படுமோ, அந்த நாம ஆதார பலத்தால், சீதாராமனை தர்ம விக்ரஹமாக நினைத்து, பூஜித்த என் பிரபு லக்ஷ்மணன் ஒரு பாணத்தைப் பூட்டி இந்திரஜித்தை அடித்தார். அந்த பாணம் இந்திரஜித்தின் மார்பில் விழுந்து அவனைக் கீழே தள்ளியது. மரணத்தை அடைந்த இந்திரஜித் கபட யுத்தத்தை தியாகம் செய்தான். (அவனையுமறியாமல் அவனுடைய அக்ஞாத ஸுக்ருதங்கள் பகவானுடைய நிர்ஹேதுக கிருபையாக வந்து அவனைச் சூழ்ந்துகொண்டன.)

(470)

''ராமன் எங்கே''? ''ராமானுஜன் எங்கே''? என்று சொல்லிக்கொண்டு இந்திரஜித் பிராணனை விட்டான். [லோக ஜனனி, ஹே சீதே, உன்னுடைய மாயை புரியாதபடியிருக்கிறதே.] ஹனுமான்ஜியும் அங்கதனும் ஆச்சரியம் தாங்காமல் ''இவனல்லவோ தன்யன். இவனைப் பெற்ற தாயார் மஹா தன்யை, கடைசிக் காலத்தில் ராமனையும் லக்ஷ்மணனையும்

(ராமானுஜனேயும்) அழைத்துத் தன்னேயும் தன் குலத்தையும் சாஸ்வதமான நாராயண பதத்தில் சேர்த்தானே. இவர்கள் அல்லவோ மஹா பாக்யவான்கள்'' என்று சொல்லி ஆச்சர்யப் பட்டார்கள். (471)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷ்மிஸமேதா மஹாநாராயணு, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணு நமோ நம: ஹே பசுபதி நடேசரே, கூத்தபிரானே, உமக்கும் முன்னும் பின்னும் நமஸ்காரம் செய்கிறேன். ஹே விஷ்வக்ஸேனரே, விஸ்வ ரூபரே, ரகுபதி, ஸேனுபதி, தக்ஷரே, தக்ஷயக்ஞ நாசரே, குலபதியே, நீரே மஹத் அஹங்காரமாகயிருக்கிறீர், ஆத் மாவைப் பற்றிய ஞானத்தினுல் திருப்தி உள்ளவரே, நீரே பூதாதி யென்னும் தாமஸ அஹங்காரமாகவும், பூதக்ருத்தாகிற வைகாரிகா அஹங்காரமாகவும் விளங்குகிறீர். தேஜஸ் அஹங்காரத்தினுல் உலகத்தை ஸந்தோஷிக்கச் செய்கிறீர். பைரவரே, நீரே உலகத்தின் உற்பத்திக்குக் காரண மாகிற பவராகவும், உலகை அழவைக்கும் ருத்ரராகவும், புண்ணிய ஆத்மாக்களே சந்தோஷிக்கச் செய்யும் ம்ருடனுகவும், பசுபதியாகவும் இருக்கிறீர். நீலக்ரீவரே, சிதிகண்டரே, கபர்தின், ஸங்யாஸியின் உருவமாகிற கேசம் நீங்கப் பெற்ற வ்யுப்தகேஸரே, ஸஹஸ்ராக்ஷரே, சதானனரே, சததன்வினே, உமக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். கணபதி குஹனுக்குப் பிதாவே, உமாமஹேஸ்வரரே, நீரே விஷ்ணுவாகிற சிபிவிஷ்டர், கிரணங்களால் வியாபிக்கப்பட்டிருக்கும் ஆதித்யர். நீரே வாமனர். நீரே ப்ருஹத். நீரே வ்ருத்தர். நீரே அத்ரி, அஜிதர், ஜ்யேஷ்டர், பூர்வஜர், திக்பாலர்கள், நீரே புண்யம் பாபம் ஆகிய இரண்டும் கூடிய மனுஷ்ய லோகம். வேத மந்திரங்களால் புகழப்படும் புண்ய ஸ்லோகரே, நீரே அக்னி, ஸ்வாஹா, ஸ்வதாமந்திர ஸ்வரூபி. திருப்தியும் நீரே; ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவும் இருப்பவர் நீரே. நீரே சூரர், வீரர், பேரி முதலிய வாத்யங்களாகவுமிருக்கிறீர். நீரே மேகம், மின்னல், காற்று, வர்ஷம், ஆகாயம், பூமியாகவும் இருக்கிறீர். நீரே வாஸ்து புருஷன், உமையுடன் கூடிய ஸோமராகவுமிருக் கிறீர். ருத்ராபிஷேகத்தில் பிரியம் கொண்ட ஸோமரே,

ருத்ரரே, உமக்கு முன்னும் பின்னும் ஸர்வ திக்குக்களிலும் நமஸ் காரம். பஞ்சாக்ஷரத்தைக் கொண்ட அனுவாகத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டால் நீர் மஹாத்ருப்தி அடைகிறீர். உக்ரரே, பீமரே, பசுபதியே, ஸௌம்யரே, எனக்கு ஸதா இன்பத்தைக் கொடும். ஹே சம்புபகவான், நீரே பிரணவமாகவு மிருக்கிறீர். நீரே மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவராகவு மிருக்கிறீர். பித்ருக்களின் வடிவில் நின்று இன்பத்தை அளிக்கும் சங்கரரே, நீரே குரு வடிவில் தோன்றும் மயஸ்கரராகவுமிருக்கிறீர். நீரே மங்கள வடிவான சிவஸ்வ ரூபம். நீரே புண்ய தீர்த்தங்களின் ஸ்வரூபம். முமு க்ஷுக்களால் தேடப்படும் பார்யராகவும், சம்சார பாபதாபங் களிலிருந்து கரையேற்றும் மந்த்ரஜப உத்தாரணராகவுமிருக் கிறீர். காம்யார்த்தமாக வேண்டும் ஜீவனைக் காப்பாற்றும் ஆதார்யராகவும், அவனுடைய கர்மங்களைப் புஜிக்கும் ஆஸாத்யாயராகவுமிருக்கிறீர். என் பிரிய காமதேனுவே, என்னைத் துன்புறச் செய்ய வேண்டாம். உம்முடைய கிருபை யால் நான் இனிமையைப் பார்ப்பேன். என்னிடம் உம்முடைய கிருபையினால் சாந்தி நிலை பெறட்டும். மஹாதேவ சம்போ, உமா தேவரே, சாணம்.]

ஹனுமான்ஜி ஒருவித பிரயாசையுமின்றி இந்திரஜித்தைத் தூக்கினார். லங்கையின் கோட்டை வாயிலில் அதை வைத்து விட்டுத் திரும்பினார். அவனுடைய மரணத்தைக் கேட்ட ஸுரர்கள், கந்தர்வர்கள், ஸகலரும் சந்தோஷம் கொண்டு, தங்களுடைய விமானங்களில் ஏறி ஆகாயத்தில் வந்து கூடினார்கள். (471-A)

அவர்கள் புஷ்ப வர்ஷங்களைச் செய்து, துந்தபி வாத்யங்களை முழக்கி வாசித்தார்கள். புண்ய கீர்த்தி, புண்ய ஸ்ரவண, உத்தமஸ்லோகனுகிற ஸ்ரீ ரகுநாதனுடைய விமலமான கீர்த்தி புகழ்களைப் பாடி ஆனந்தம் கொண்டார்கள். "ஜய அனந்த, ஜய ஜகதாதாரா, ஜய மஹா உரகரே, உமக்கு எப்பொழுதும் மங்கள ஜயங்கள் யேற்படட்டும். ஹே பிரபோ, நீர் தேவர் களின் சத்ருவான இந்திரஜித்தைக் கொன்று, தேவதைகளை மஹத்தான ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றினீர். எங்களையும் உத்தாரணம் செய்ய வேண்டும். ராமானுஜரே, உம்

முடைய கீர்த்தி பிரபாவங்கள் வாழையடி வாழையாகப் பொங்கி ஸ்ம்ருத்தியுடன் விளங்க வேண்டும். உம்முடைய ரக்ஷை எங்களுக்கு எந்த அவஸ்தையிலும் கிடைக்க வேண்டும்." (472)

தேவதைகளும், சித்தர்களும், மஹா உரகனைப் புகழ்ந்து ஸ்துதி செய்து விட்டு, தங்களுடைய இருப்பிடத்திற்குச் சென்றார்கள். லக்ஷ்மணன் கிருபாஸிந்துவாகிற ஸ்ரீ ராம சந்திரனிடம் சென்றார். அவரை நமஸ்கரித்தார். ஸ்ரீ ராமனால் உச்சி முகரப்பட்டு, தழுவப்பட்டார். (கிருத கிருத்யஞன லக்ஷ்மணன், ஸ்ரீராமன் ஆகியவர்கள் என்னை ஸதா தேவதைகளின் சத்ருக்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.) தசானனன் தனது புத்ரனுடைய வதத்தைக் கேட்டு, மூர்ச்சையை அடைந்தான். அவனுடைய மனதில் பயம் அதிகரித்தது. (473)

மந்தோதரி தன்னுடைய மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். அவனுடைய பெருமைகளைப் பல விதங்களால் புகழ்ந்து கொண்டு அழுதாள், புரண்டாள், பல விதமாக விலலாபம் செய்தாள். மரித்தவன் திரும்பி உயிர் பெறுவானோ? லங்கையில் எங்கு பார்த்தாலும் ஒரே அழுகைக் குரல் கேட்டது. சோகமும் அழுகையும் லங்கை முழுவதும் தாண்டவ மாடியது. எல்லோரும் ராவணனே இந்த அனர்த்தங்களுக்கு காரணம், பொறுப்பு அவனுடையதே என்று அவனை வைது திட்ட ஆரம்பித்தார்கள். அவனுடைய நீசஸ்வபாவங்களைத் திட்ட ஆரம்பித்தார்கள். (474)

அப்பொழுது ராவணன் அந்த ஸ்திரிகளைப் பல விதங்களால் ஆஸ்வாசப்படுத்த முயற்சித்தான். "இதோ பாருங்கள். நாம் காண்பது எல்லாம் அழியக் கூடியவை. இந்த ஜகத் ரூபம் எல்லாம் நாசமடைய வேண்டியவை. ஆத்மா ஒன்றுதான் சாஸ்வதம். யாவரும் ஒரு நாள் இறந்துதான் ஆகவேண்டியது தானே. அதை ஹ்ருதயத்தில் நினைத்துக்கொண்டு, வருத்தம் கொள்ள வேண்டாம்." (475)

அப்பொழுது ராவணன் தன்னுடைய குலத்தினர்களுக்கு தேக ஆத்ம ஞானத்தை உபதேசித்தான். ("ஒரு மனிதன் எவ்வாறு பழைய துணிகளை விட்டு வேறு புதிய வஸ்திரங்களை எடுத்துக்கொள்கிறானோ, அவ்வாறே ஜீவன் பழைய சரீரங்களை

விட்டு, புதிய சரீரங்களை அடைகிருன். ஆத்மா அழிவற்ற வன். பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம். இறந்தவனுக்கு பிறப்பு நிச்சயம். பூதங்கள் அறியப்படாத முந்திய ஸூக்ஷ்ம நிலைமையை அடைகின்றன. இந்த விஷயத்தில் எதற்காக வ்யஸனப் படவேண்டும்? ஆச்சர்யப் பொருளான ஆத்மா வைப் பற்றியே நாம் அறிய வேண்டும். எல்லாப் பிராணிகளு டைய தேகமும் கொல்லப்பட்டாலும் இந்த ஆத்மாவானவன் எப்பொழுதுமே கொல்லத் தகாதவனுகவும், சாஸ்வதமாகவும் மிருக்கிருன். ஆதலால் மரணத்தை, விலக்கக் கூடாத விஷ யத்தில், நாம் துக்கிக்கலாகாது?'' என்று பலவிதமாக ஞான பிரபோதம் செய்தான்.) ராவணனே ராக்ஷஸ ஜாதியில் பிறந்து க்ரூர நெஞ்சை உடையவன். அவன் எது தனக்கு ஹிதமோ, அதையே தன் குலத்தினர்களுக்கும் ஹிதமாக எண்ணினுன். அவனுடைய செய்கைகளோ அவனைப் பொறுத்த மட்டில் க்ரூர மாக விருந்தவை. (அதே புத்தியினுல் தனது குலத்தினர்களுக் கும் சுபமான ஆத்மகதையையும், புனிதமான தேக ஆத்மஸம்பந் தத்தையும் அன்று ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷனுடைய வதத் தினுல் யேற்பட்ட துக்கத்தைப் போக்க தன்னுடைய குல ஸ்திரி களுக்கு எவ்விதம் உபதேசித்தானே, அதைப் போல) இன்று ராவணன் ராக்ஷஸ குல ஸ்திரிகளுக்கு உபதேசித்தான். என் பிரபு லோகாச்சாரியர் துளசி தாஸர் சொல்லுகிருர். "உல கத்தில் மற்றவர்களுக்குப் [பர] உபதேசம் செய்வது எளிமையாக வும் நிபுணத்வம் வாய்ந்தவர்களாகவும் லோக ஜனங்கள் விளங்குகிருர்கள். இவ்விதமான ஜனங்கள் அதிகமாகவே காணப்படுகிருர்கள். ஆனுல் தங்கள் விஷயங்களில் மாத் திரம் அவர்கள் அந்த உபதேசங்களை அனுஷ்டானம் செய்கிற தில்லை!'' (சாஸ்திரங்கள் எல்லாவற்றிற்கும் ஆசாரமே முத லாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரத்திலிருந்து உண் டானது தர்மம். தர்மத்தினுல் ஆராதிக்கப்படுபவரும் அதன் பலனைத் தருபவரும், துணையாக விருப்பவரும் அச்சுதர்.'') இவ் விதம் பல வழிகளால் ராவணன் உபதேசித்தான். (476)

இரவு கழிந்தது. பகலும் விடிந்தது. கரடிகளும் வான ரங்களும் லங்கை கோட்டையின் நான்கு புற வாசல்களில் வந்து கூடினுர்கள். ராவணன் யுத்த படர்களைக் கூப்பிட்டு,

அவர்களிடம் வார்த்தைகளைச் சொன்னான். "ரணத்தில் விருப்பம் கொண்டவர்கள் மாத்திரம் சண்டை செய்யலாம், மனமில்லாதவர்கள் யுத்தம் செய்ய வேண்டாம்." (477)

"அவர்கள் இப்பொழுது யுத்தத்திலிருந்து நிவிருத்தி அடைந்து விட்டால் பரவாயில்லை. யுத்தம் செய்ய முன் வந்த பின்பு, யுத்தத்தில் புறம் காட்டி ஓடினால், அவர்களுக்கும் எனக்கும் அழகில்லை. நான் ராமனோடு யுத்தம் செய்வதற்கு என்னுடைய புஜ பலத்தையே நம்பிப் போரிடுகிறேன். எந்த சத்ருக்கள் என்னிடம் சண்டை செய்ய வருவார்களோ, அவர்களுக்கு நான் இன்று சரியான பதில் கொடுப்பேன்." (478)

இவ்விதம் சொல்லிவிட்டு, ராவணன் மருத்துக்களின் வேகத்தோடு சண்டை செய்ய புறப்பட்டான். ரதம் தயாராகி அதில் அவன் ஏறிக் கொண்டான். யுத்த பேரிகைகள் வாத்தியங்கள் பல விதமாக முழங்கின. அதுளித பலம் கொண்ட ராக்ஷஸ வீரர்களுடன் ராவணன் புறப்பட்டான். அவர்கள் புறப்படும் வேகத்தைப் பார்த்தால் அஞ்சன மையின் காரணமான புகை அதி அடர்த்தியுடன் புறப்பட்டது போலத் தோன்றியது. (479)

அந்த சமயத்தில் கணக்கற்ற அபசகுனங்கள் யேற்பட்டன. ஆனால் அவர்கள் தங்களுடைய ஆத்ம பலத்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டு, கர்வம் கொண்டவர்களாக விருந்தார்கள். ராவணனும் அவனுடைய சகாக்களும் அந்தத் துர்சகுனங்களை லக்ஷயம் செய்யவில்லை. (480)

[*தியானம்*

நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, சீதாபதே, ராமா, ஸம்ஸ்த பரிவவாய ஸ்ரீ மதே நாராயணாய நம: என்று சொல்லி நாரதர் காட்டிய வழியில் வரும் என்னைப் பாரும். ருத்ரரே, காலாந்தகரே, மிருடரே, நீர் தேவர்களிடம் அந்தர்யாமியாகவிருந்து கொண்டு, பாபங்களை அறவே ஒழிக்கும் அநிர் ஹதேப்ய வடிவுக்கு நான் நமஸ்கரிக்கிறேன். நீர் தேவதைகளின் ஹ்ருதய புண்டரத்தில் வீற்றிருந்து, எங்கும் ருத்ரகணங்களாக சஞ்சரிக்கும் உமது வடிவுகளான ஆமிவத் கேப்யருக்கு நான் நமஸ்கரிக்கிறேன். ஹே புருஷரே, பாபிகளை நரக வேதனை செய்யும்

த்ராபரே, உம்மிடம் பயந்த ஸ்வரூபமுள்ள என்னை ரக்ஷிக்க வேண்டும். நீர்தான் எனக்கு உம்மையும், உமது பத்னியாகிற உமையையும், விஷ்வக் ஸேனர், குஹன், நந்தி முதலிய பரிவாரங்கள் அடங்கிய உமது கணங்களிடமும், ஸதாதியானத்தில் ஈடுபடும் புத்தியைக் கொடுக்க வேண்டும். கண்வர், ஜைகீஷ்வ்யர், கர்க்கர், பராசரர், வேதவியாஸர், ஆணி மாண்டவ்யர், மார்க்கண்டேயாதிகளுக்கு அவர்களின் இஷ்டப்படி வரங்களைக் கொடுத்தவரே, விஸ்வாமித்திரரின் சிஷ்யனுன காலவரை அனுக்ரஹித்தவரே, என்னை உமது புத்ரனைப்போல பாவிக்க வேண்டும். உபமன்யு ரிஷி, தண்டி, சுக்ரர், கிருஷ்ணன் முதலியவர்களிடத்தில் அதிகப் ப்ரேமை காட்டிய ஸோமரே, நீர்தான் ஸூர்யன், சந்திரன், வாயு, அக்னி, ஆகாயம், பூமி, ஜலம், வஸுக்கள் விஸ்வே தேவர்கள், தாதா, ஆர்யமா, நவக்ரஹங்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் திக்பாலர்கள், பிரும்மா இந்திரன், பிரும்ம காண்டம், ஸத்யலோகம், வேதங்கள், யக்ஞங்கள், தக்ஷிணைகள், வேதபராயணங்கள், ஸோமலதை, யாகம் செய்பவன், ஹோமத்ரவியங்கள், கவ்யங்கள், யக்ஞரக்ஷணம், நியமங்கள் ஆகிய எல்லாம் நீர்தானே. உம்முடைய அருளால் மோக்ஷ உபநிஷத்தும் சுலபமாக அடைய பெறுவோம். உம்மிடமுள்ள பக்தியினுல் எங்களைத் துன்புறுத்த வேண்டாம். குழந்தைகளையும், யௌவனர்களையும், சிசுக்களையும், கருவிலுள்ள சிசுக்களையும் துன்புறுத்த வேண்டாம். மேலும் தாய்மார்களையும், பிரிய பார்யைகளையும், துன்புறுத்த வேண்டாம். எங்களுடைய ஆயுளில் குறைவு வேண்டாம். எங்களுடைய ஐஸ்வர்யங்களுக்கும் துன்பம் நேரிட வேண்டாம். எங்களுடைய நோய்களை வதைத்து, எங்களுக்கு உமது அருளினுல் பூர்ண தேக ஆரோக்யம் கிடைக்கட்டும். ஸ்வாமி, உம்முடைய உக்ரரூபம் எப்பொழுதும் உங்களை நமஸ்கரிக்கும் எங்களிடமிருந்து விலகி நிற்கட்டும். உம்முடைய மங்களகர, ஸௌம்ய ரூபம் எங்களிடம் ஸதா கருணையுடன் இருக்கட்டும். சர்மரே, யுவரே, சிங்கத்தைப் போல பயங்கரமான கீர்த்தி மிகுந்த ருத்ரரே, எங்களை இன்புறச் செய்து, பிரளய அபிமானி தேவதையான நடராஜரே, என் ஜகத்பதியே, என்னிடம் அருள் கொண்டு விளங்கும்படி, நான்

காணும்படி இருக்க வேண்டும். உமா சம்போ, கிருபை செய்யும்.]

ராவணனும் அவனைச் சேர்ந்த ராக்ஷஸகணங்களும், அத்யந்த கர்வம் கொண்டவர்கள். அதனால் தெய்வ நம்பிக்கை யில்லாதவர்கள். அதன் காரணமாக, இந்த சகுனங்கள் என்ன செய்யக்கூடும்? என்று திடமாக நம்பினார்கள். [அவர்கள் இவைகளை உமா சம்பு என்று நினைக்கவில்லை. அவர்களுடைய மனதில் ஒரே ஒரு எண்ணம் தான் இருந்தது. எவ்விதமாவது சாகவேண்டும். இல்லாவிடில் ஜயித்துவிட வேண்டும். ஆனால் ராமனின் திருவுள்ளம் வேறு மாதிரியிருந்தது. நான் பரமாத்மா வைகுண்டத்திலிருந்துப் பூமிக்கு அவதாரம் செய்திருக்கிறேன். உன்னையும் காணப்போகிறேன். என்னுடைய ஸௌலப்யத்தை நீ உணராதபோனால் எனது அருளை உனக்கு கிடைக்க இஷ்டமில்லையானால், என்னுடைய பரத்வத்தைப் பார். அறிந்துகொள். உனக்கு என்னுடைய சேஷ்டிதங்களால் என்னை யார் என்று புரிந்து கொள்ளவில்லையானால், என்னுடைய கால சக்தி உன்னை அறியவைக்கும்'' என்று சொன்னது போலவிருந்தது,] அதனால் அன்றோ, அவனுக்குப் புத்தி புகட்டுவதற்கு, ராவணன் கைகளிலிருந்து ஆயுதங்களை நழுவி விடும்படி செய்தார் என் பிரபு. ரணவீரர்கள் ரதங்களிலிருந்து நழுவி விழுந்தார்கள். குதிரைகளும் கஜங்களும் தங்கள் நண்பர்களைவிட்டு, கதறுவதுபோல கனைத்தன, பிளிறின. பயங்கரமாக நரிகள் ஊளையிட்டன. கழுகுகளும் பருந்துகளும் அவனுடைய தலைமேல் சுற்றி வட்டமிட்டன. கழுதைகள் கத்தின. நாய்கள் பல ஸ்வரங்களுடன் ஊளையிட்டன. ஆந்தைகள் கால தூதர்களைப்போல பரம பயத்தை தரும் குரல்களால் கத்தின. (481)

எந்த அபாக்யவான்கள் ஸதா பிறர்களுக்கு ஹிம்சை செய்து கொண்டும், த்ரோஹ எண்ணத்துடன் பரபீடை செய்து கொண்டுமிருக்கிறார்களோ, எந்த சுக்ருதமற்றவர்கள் மஹா மோகத்தினால் ஆக்ரமிக்கப்பட்டு, ''நான் பெரியவன், நான் சொல்வது, செய்வது தான் தர்மம்'' என்று ஸ்வ அபிமானிகளாக ஸர்வ ஸ்வதந்த்ரர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டு வாழ்கிறார்களோ, அவர்கள் ராம விமுகர்களாக ஆகிவிடுகிறார்

கள் அன்றோ ? எந்த ஜீவர்கள் பூத தயையின்றி காம க்ரோதம் லோபங்களால் தாக்குண்டப்பட்டு பிறர்களுக்கு ஹிம்சையை விளைவிக்கிறார்களோ, அவர்கள் ஸவப்னத்தில் கூட ஸம்பத், நிலைபெற்ற ஐஸ்வர்யங்கள், ஆமுஷ்மிக லௌகிக ஐஸ்வர் யங்கள், சுப சகுனங்களாகிற உத்தம க்ஷாந்தி, பரஞானம், பரபக்தி, பரம பக்தி ஆகிய சேமுஷி பாவங்களை அடைகிறார்க ளில்லை. அவர்களுக்கு அவை எவ்விதம் யேற்படும்? என் பிரபு துளசிதாஸர் சொல்லுகிறார். "எவன் ஸ்ரீராமனிடத்தில் நிலைபெற்ற சேமுஷி பக்தி பாவத்துடன் வாழ்கிறானோ, அவனுக்கு ஸகல ஸம்பத்துக்களும் சுபயசஸ்ஸும், உத்தம சித்த சாந்தியும் கிடைப்பது திண்ணம்" என்கிறார். (482)

ராக்ஷஸ சேனைகள் அபாரமாக விருந்தன. பயமின்றி யுத்த களத்தில் நடந்து சென்று கொண்டிருந்தன. சதுரங்க சேனை களாகிற கஜரதகதுரகபதாதி வகைகளுடன் ஒவ்வொன்றிலும் பல பிரிவுகளுடன் காணப்பட்ட அந்த சேனைகள் உத்தம கொடிகளாலும் அநேக பிரகாரம் அலங்கரிக்கப் பெற்று விளங்கின. அநேகப் பிரகாரமான வாஹனங்கள், ரதங்கள் ஸவாரிகள், அநேக வர்ணங்களுடன் பிரகாசிக்கும் கொடிக ளுடன் அழகாய் விளங்கின. (483)

மதம் பிடித்த யானைகளின் கூட்டங்கள் அநேகமிருந்தன. அவைகளைப் பார்த்தால் வர்ஷா காலத்தில் மருத்துக்களால் அடித்து விரட்டப்படும் மேகக் கூட்டங்களோ, என்று சந்தேகப் படும்படி யிருந்தன. விதவிதமான வர்ணங்களுடன் காலாட் படைகள், மஹா சூரர்கள், மாயா வித்யையில் மஹா தேர்ச்சி பெற்றவர்கள், யுத்த களத்திற்கு வந்தனர். அவர்களுடைய உடைகளும், நடைகளும், வர்ணிக்க முடியாதபடி யிருந்தன. (484)

அந்த சேனைகளின் அழகுகள் வர்ணிக்க முடியாதபடி விளங்கின. வசந்த காலத்தில் பல வர்ணங்களுடன் விளங்கும் புஷ்பங்கள், இலைகளைப் போல, வீர வசந்த கீதம் முழங்கும் துருப்புக்கள் பார்ப்பதற்குப் பரம சோபிதமாக விருந்தன. அவர்கள் நடந்து செல்லும்போது, திக்கஜங்கள் நடுங்க ஆரம்பித்தன. சமுத்திரங்கள், அலைகளுடன் பொங்கி எழுந்தன. மலை பர்வதங்கள் தங்கள் ஸ்தானங்களிலிருந்து

பெயர்ந்து ஆடின. (485)

அவர்கள் எழுப்பிய தூசிகள் ஆகாயத்தின் மேலே கிளம்பி சூர்யனையும் மறைத்தன. வாயு பகவானும் தடை பெற்று நின்றார். பூமியும் கலங்கினாள். டோலக், நகா டாக்கள், யுத்த பேரிகைகள், பயங்கரமாக ஒலிக்கப்பட்டு, எங்கும் யுத்த த்வனிகள் கேட்கப்பட்டன. பிரளய காலத்தில் கன மேகங்கள் சப்தம் செய்துகொண்டு, கர்ஜனை செய்து கொண்டிருந்தன. (486)

பேரிகைகள் துரஹி வாத்யங்கள், சஹ்னாய்க்கள் யுத்த காலத்தில் வாசிக்கப்படும் மாரு ராகத்தில் வாசிக்கப்பட்டு (ஸைந்தவி ராகம் மாதிரி) யுத்த படர்களுக்கு உத்ஸாஹத்தைக் கிளப்பின. சகல வீரர்களும் சிம்மநாதம் செய்து கொண்டு தங்கள் தங்கள் வீர பிரதாபங்களையும் பௌருஷ செய்கை களையும் சம்பாஷித்துக் கொண்டும் சென்றார்கள். (487)

ராவணன் அந்த உத்தம சேனாதிபதிகளை அழைத்துச் சொன்னான். "வீரர்களே, கேளுங்கள். கரடிகளையும், வானரங் களையும் மர்த்தனம் செய்து அடக்கி, நாசம் செய்து விடுங்கள். நான் அந்த இரு சஹோதரர்களுடன் யுத்தம் செய்கிறேன். அவர்களைக் கொன்று விடுகிறேன்." இவ்விதம் சொல்லி விட்டு ராவணன் சேனைகளின் முன்பாகச் சென்றான். (488)

ராவணன் ராக்ஷஸ சேனைகளுடன் வருவதைக் கேட்ட வானரங்கள், கரடிகள், ரகுவீரனிடம் சென்று அவருடைய உதவியை நாடினார்கள். (489)

விசாலமான மார்பு பிரதேசங்கள், உடல், ஆஹூதி ஆகியவைகளுடன் கூடியதும், பார்ப்பதற்கு மிக்கப் பயங்கர மான ரூபங்களை உடைய வானர கரடிகள், ராக்ஷஸ சேனைகளை நோக்கித் தாவிப் பாய்ந்தன. அவர்களைப் பார்த்தால் இரக்கைகள் கொண்ட விசாலமான பர்வதங்கள் மேலே பறந்து கிளம்புவன போல விருந்தது. இவர்களும் அநேக வர்ணங் களுடன் அநேக வித ஆயுதங்களுடன் எதிர்த்துச் சென்றார்கள். நகங்கள், பல் போன்றவைகள், பர்வதங்கள், பெரிய பெரிய விருக்ஷங்கள் கணக்கற்ற பிரகாரம் அவர்களின் கைகளில் ஆயு தங்களாக விருந்தன. அவர்கள் பாய்ந்து செல்லும்போது, "ஜயராம், ஜயராம், ராவண ரூபியாகிற மதம்பிடித்த யானையை

த்வம்சம் செய்யப்போகும் ராகவ சிம்மத்திற்கு ஜயங்கள் ஸதா ஏற்படட்டும். எங்கள் பிரபு ரகோத்தமனின் புகழ்களை நாங்கள் ஸதா கானம் செய்யும்படி, எங்கள் ராகவ சிம்மத்திற்கு மங்கள ஜயங்கள் ஏற்படட்டும்,'' என்று வீர முழக்கம் செய்தார்கள். (490)

இவ்விதம் ராம ராவண யுத்தம், ஸமுத்திரம் ஸமுத்திரத்தைத் தாக்குவது போலவும், ஆகாயம் ஆகாயத்தைப் போலவும், பரந்து விசாலமான யுத்தமாக, தனக்கே சிறப்புக்கள் வாய்ந்ததாக ஆரம்பமாயிற்று. இரு தரப்பினர்களும் "ஜய, ஜய,'' என்று ஆரவாரமிட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் தர்ம யுத்தப்படி தங்களுக்குத் தகுந்த போர் வீரர்களுடன் ஒருவரையொருவர் எதிர்த்துச் சண்டை செய்தனர். ராக்ஷஸர்கள் ராவணனுடைய புகழ் கீர்த்திகளையும் வானரங்கள், கரடிகள் ஸ்ரீ ரகுராமனுடைய விசாலமான கீர்த்திகளையும் பாடி ஆடி உத்ஸாஹத்துடன் சண்டை செய்தனர். (491)

[*தியானம்*

நாராயணு, பராசக்தி அம்பா, சரணம் சரணம். ராமசீதா, உங்களை உமா மஹேஸ்வரர்களை முன்னிட்டு நான் நமஸ்கரிக்கிறேன், எனது ஹ்ருதய புண்டரத்தில் வீற்றிருக்கும் மஹேஸ்வரரே, குப்தரே, ருத்ரரே, என்னை இன்புறச் செய்யும். எங்கள் மக்களுக்கும் மக்களுடைய மக்களுக்கும் இன்பத்தை அளிப்பீராக. ஹே பிநுகின், கிருத்திவாஸரே, உமது வில்லையும் பிநுகத்தையும் எங்கள் கண்களுக்கு அலங்காரமாக வைத்திரும். சிவதமரே, ஸுமனரே, உம்முடைய ஆயிரக் கணக்கான ஆயுதங்களை நான் நமஸ்கரிக்கிறேன். இயற்கையான நறுமணம் கொண்டு ஸுகந்தமாக விருப்பவரே, உமது கருணையினல் எங்களைப் போஷித்து புஷ்டி செய்யவேண்டும். திரியம்பகரே, உம்மை ஆயிரம் தடவைகள் பூஜித்து வழிபடுகிறேன். வெள்ளரிப் பழம் தாம்பிலிருந்து விடுபடுவது போல, மிருத்யுவினுடைய கைப்பிடிப்பிலிருந்து எங்களை விடுவிப்பீராக, மா அம்ருதாத் என்று சொல்லப்படும் மோக்ஷ வழியிலிருந்து விலகாமல் எங்களை ரக்ஷிப்பீராக.]

ராவணன் ரதத்துடனும், ரகுவீரன் ரதம் இல்லாமல்

யுத்தம் செய்வதையும் கண்ட விபீஷணன் அதிக பயமடைந் தான், மனத்தில் அதிக ப்ரீதியை அடைந்த அவன் எவ்விதம் ரகுவீரன் யுத்தத்தில் ராவணனை ஜயிப்பார் ? என்கிற சந்தேகம் கொண்டு, ஸ்ரீ ராமனிடம் வந்து அவருடைய சரணங்களை ஸ்நேக பூர்வமாக வந்தனம் செய்து வார்த்தைகளை விக்ஞாபித் தான். (492)

"ஸ்வாமி, தங்களிடம் ரதம் இல்லை. தேகத்தைக் காப் பாற்றும் கவசமும் இல்லை. கால்கலின் செருப்புக்கள் கூட கிடையாது. பிரபோ, கிருபாநிதான், ராவணன் ஒரு மஹா வீரன், எவ்விதம் நீர் அவனை ஜயிக்கப்போகிறீர் ?'' என்று வினயமாகச் சொன்னான். அதைக்கேட்ட கிருபாளு பதில் சொன்னார், "விபீஷணா, பதில் சொல்லுகிறேன். ஜயமடை வதற்கு ரதம் வேறு ஒன்று இருக்கிறது. அதனால்தான் ஒருவன் ஜயசீலனாக விளங்குகிறான்.'' (493)

"சௌர்யமும் தைர்யமும் அந்த ரதத்திற்கு இரு சக்கிரங் கள். ஸத்யவ்ரதமும், அதன் அனுஷ்டானமும் அந்த ரதத்தின் திருடமான கொடி, ஆத்ம பலம், தேக பலம், ஆகிய இரண்டும் சேர்ந்த பலம், விவேகம், தமமாகிற இந்திரிய அடக்கம், பரோபகாரம் ஆகிய நான்கு குதிரைகள். க்ஷமை, பூததயை கிருபை, ஸமதிருஷ்டி ஆகிற நான்கு கடிவாளங்கள் அந்த குதிரைகளுக்கு இருக்கின்றன.'' (494)

"ஈஸ்வரனுடைய ஆராதனை, ஈஸ்வர விஸ்வாஸம், ஈஸ் வர கிருபையை வேண்டுவதுதான் சிறந்த சாரதி. வைராக்யம் கேடயம்; சந்தோஷமாகிற ஆத்ம திருப்தி கத்தி; தானம் செய்வது கோடாரி என்கிற ஆயுதமாகவும், புத்தி பிரசண்ட மான சூலாயுதமாகவும், விக்ஞானம் கடினமான கோதண்ட மாகவுமிருக்கிறது.'' (495)

நிர்மலமானதும், பாப ரக்ஷிதமான மனம், ஸ்திர நிலை யைக் கொண்ட மனம், ஆகிய இவை இரண்டும் அம்புராத் தூணியாகவும், சமம் என்கிற மன அடக்கம், அஹிம்சை முத லிய யமாதி நிஷ்டைகள், தேக சுத்தி, ஆத்ம சுத்தியாகிற நிய மங்கள் ஸ்நான ஜபாதிகள் இவைகள்தான் பலவித பாணங் களாகவுமிருக்கின்றன. பிராம்மண பூஜையும், குருவின் சேவையும் பிளக்க முடியாத கவசமாகவிருக்கிறது. இவைகள்

தான் நான் கைக்கொண்டிருக்கும் உபாயங்கள். இவை களால்தான் நான் ராவணனை ஜயிக்க விரும்புகிறேன்.'' (என் பிரபு கோதண்டராமன் அமானீ, பக்தர்களின் விஷயத்தில் தமது உயர்வை நினையாதவர், தம்மைச் சேர்ந்தவர்களிடம் கௌரவத்தைப் பார்க்காத மாநதர், தம்மாலேயே தாம் வெகு மானிக்கப்படும் மாங்யர்; தம்மாலேயே தாம் தாங்கப்படும் ஸ்வதிருதர்; எப்பொழுதும் பரிசுத்தமாகவிருக்கும் ஸ்வாஸ்யர்; ஸர்வ ஸ்வதந்திரரான அத்ருதர்; ஸத்பதாசாரங்களை வ்ருத்தி செய்யும் வம்சவர்த்தனர். அப்பேற்பட்ட மங்கள ஸ்ரீ கோதண்டராமனுக்கு, என் ஹ்ருஷீ கேசவருக்கு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) (496)

[*தியானம்*

நாராயணா, ஸர்வ தீர்த்தகரரே, சரணம். மஹா லக்ஷ்மி நாதா, சரணம், ராம சீதா சரணம் சரணம். திரியம்பகரே ருத்ரரே, நீர்தானே நீரில் இருக்கிறீர். நீர்தானே ஒஷதிகளிலுமிருக்கிறீர். பிரபோ நீர்தான் உலகனைத்தையும் ஊடுறிவி நிற்கின்றீர். ஹே சைலராஜ புத்ரியான உமையின் பிராண காந்தரே, ஸுதன்வா, நீர்தானே விஸ்வத்திற்குப் பிணியைத் தீர்க்கும் பேஷஜர், பிஷக் என்றும் சொல்லப்படுகிறீர், ஞான மூர்த்தியே, உம்மை துதிப்பவர்கள் நல்ல மனது உடையவர்களாகவும் ரோகமற்றவர்களாகவும். ஞான ஸ்வரூபியாகவும் விளங்குகிறார்கள். உம்மைத் தர்சனம் செய்தவர்கள் மஹா பாக்யவான்கள், என்னுடைய இந்த ஹஸ்தம், என் வாக்கு, நாக்கு, என் கால்கள், மனம், புத்தி, இந்திரியங்கள், ஸ்வாமி, ஸகலமும் உம்முடைய ஸ்வரூபம். இந்த சரீரத்தாலேயே, பிரபோ, நான் உம்மைத் தொட்டு பூஜை செய்கிறேன். ம்ருத்யுவே, இந்த தேகமே மிக்கப் பிரியமாக விருக்கிறது. நீர் பிராணிகளைக் கொல்லுவதற்காக ஆயிரக்கணக்கான பாசக் கயிற்றுக்களை வைத்துக் கொண்டிருக்கிறீர். அவைகளனைத்தையும் ருத்ராய விஷ்ணுவே ம்ருத்யுவே, என்று சொல்லும் எங்களை, எங்களுடைய பூஜைகளின் பிரபாவத்தினால் விலகிப் போகும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேன். ஸ்வாமி, எங்களுக்கு ம்ருத்யு வராமல் காத்தருள் வீராக. நீரே எங்கள் பிராணனாக

விருக்கிறீர். நீரே ஹ்ருதய க்ரந்தியாக விருக்கிறீர். நீரே அந்தகராகவுமிருக்கிறீர். யக்ஞுத்தின் மானஸமாகவும் யக்ஞமாகவுமிருக்கிறீர். ருத்ரரே, என்னிடம் ஸதா உறைந்து அந்தர்பஹிர் ஸ்வரூபமாக விருக்கிறீர். அவ்விதம் தாங்கள் எங்களிடம் உறைவதால் நான் உண்ணும் அன்னமாகவும், ஆஹுதியாகவும் இருக்கிறீர். நீரே வைஸ்வநரன் என்கிற அக்னி. நீரே என்னுல் கர்மங்களால் ஆராதிக்கப்படும் விஷ்ணு. ஸ்வாமி, தாங்கள் என்னிடம் ஸதா திருப்தியுள்ள மனத்துடன் இருக்கவேண்டும். உங்களையும் உம்முடைய பரிவாரங்களையும் துதிக்கும் என்னிடம் தாங்கள் ஸதா கிருபையுடன், சகல ஐஸ்வர்யங்களுடன், உணவுப் பொருள்களுடன்யிருந்து, உங்களிடம் அசஞ்சலமான பக்தியையும், ஆயுள், ஆரோக்யம் சௌபாக்யங்களையும் ஸதா அனுக்ரஹிக்க வேண்டும். உம்மைப்பற்றி நான் ஸதா இனிமையாகப் பேசுவேனுக. உம்மைப்பற்றி தேன் போல தித்திக்கும் கீர்த்தனைகளைப் பாடுவேனுக. உம்முடைய கருணையை நினைத்து, மனிதர்களிடமும், தேவதைகளிடமும், உம்மைப்பற்றி நான் ஸதா ஸ்துதியாய் பேசுவேனுக. உம்மைப் புகழும் என் ஸ்வஸ்தி வசனங்கள், சொற் குற்றங்கள், பொருட் குற்றங்கள் மற்றும் இதர குற்றங்களுமில்லாமல், பரம சோபிதமாக விளங்கட்டும். தேவர்களும், பித்ருக்களும் என்னைக் காப்பாற்ற ஆமோதிக்கட்டும். எனக்கு மூன்று காலங்களிலும் உமது கிருபையால் சாந்தி ஏற்படட்டும்.]

"என் பிரியமுள்ள விபீஷணு, (தர்ம ரூபியான விருஷபத்வஜரின் சூக்ஷ்மமான அங்க அடையாளங்கள் இவைகள்). அந்த தர்மாத்மாவை எனக்கு ரதமாகவும் சாரதியாகவும், குருவாகவும், ஆத்ம பந்துவாகவும், நான் நினைத்துக் கொண்டு யுத்தம் செய்கிறேன். [ஈஸ்வரராகிய அவர் தம்முடைய கோரமான மூர்த்தியினுல் எல்லாவற்றையும் புஜிக்கிருர். எல்லாவற்றையும் கொளுத்துவதினுலும், உக்கிர ஸ்வரூபியாகவும், மஹா பிரதாபங்கள் கொண்டவராகவும், மாம்ஸங்களையும் ரத்தங்களையும் யுத்த களத்தில் உண்பதால் ருத்ரர் என்று அவர் சொல்லப்படுகிருர். பினுகபாணியான அவரே மஹாதேவர். மஹாதேவரைச் சகாயமாகக் கொண்ட எவனும்]நானும் யுத்தத்தில் அபஜயம் அடைகிறதில்லை.[அவரே

தர்ம மயமாக விருக்கிறபடியால், ஜயமடைகிருர். பிரஸன்ன மான திரியம்பகரிடம் பக்தியுடன் பூஜிக்கும் எவனும் அவரு டைய சகாயத்திஞல் வேண்டிய இஷ்டங்களை அடைகிருன்.] ஆகையால் விபீஷணு, எனக்கு சத்ருக்களிடம் பயம் கிடையாது." (497)

["சம்சார தாபங்களிலிருந்து விடுபடும் நோக்கத்துடன் தீக்ஷணமான புத்தியுடன் என்னை வந்து அடைந்திருக்கும்] விபீஷணு, என் பிரிய மித்ரா, இன்னமும் கேள். எவனிடம் இம் மாதிரியானதும் அசைக்க முடியாததுமான [சீலம் என்கிற] ரதம் இருக்கிறதோ, (எவனிடம் திருடமானதும் அசஞ்சலமான பக்தி விருஷபத்வஜரிடம் இருக்கிறதோ,) அந்த மஹானுபாவன் ஸம்சார சுழல்களாகிற ஜன்ம ம்ருத்யு ரூபங்களிலிருந்து சுலப மாகத் தாண்டுகிருன். ஜயிக்க முடியாத விரோதிகளையும் அந்த மஹாத்மா சுலபமாக ஜயித்து விடுகிருன். அவ்வித மிருக்கும்போது, ராவணனைப்போல மிக்கச் சாதாரண சத்ரு வைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா ? (மதி தீரனுகவிருக்கும் எவனும் உமாபதியான திரியம்பகரை நல்ல மனதுடன் ஸதா பூஜிக்க வேண்டும். அவரே உக்ரமான நரசிம்மமூர்த்தி. அவரே ஸர்வதோமுகர். அவரே மஹாவிஷ்ணு. அவரே பீஷணமாகவும் பத்ரருமாக விருப்பவர். அவரே ம்ருத்யுவுக்கும் ம்ருத்யு," என்று சொல்லி விபீஷணனை பிரபு ஆஸ்வாசப் படுத்திஞர்.) (498)

பிரபுவினுடைய வசனங்களை விபீஷணன் மிக்க மரியாதை யுடன் கேட்டான். அவனுக்கு சந்தோஷம் அதிகமாகியது. பகவானுடைய சரண கமலங்களில் விழுந்து பரம பாகதவத ஸ்ரேஷ்டஞன விபீஷணன் சுக்ருத பிரணமம் செய்தான். அவ்ரை அவன் முன்னும் பின்னும் நமஸ்கரித்து பிரதக்ஷணம் செய்து, மீண்டும் நமஸ்கரித்தான். "ஹே பிரபோ, ஆததாயி, (பிஞகின்,) கோதண்ட ஹஸ்தா, ஸுதன்வீ, ஹ்ருஷீ கேசரே, என்னிடம் தாங்கள் ஸதா கிருபையுடன் இருக்க வேண்டும். ராம கிருபை என்னை விட்டு ஒரு க்ஷணம் கூடப் பிரியாமல் இருக்கட்டும். என் சுகங்களுக்கு கொத்துப் போல விருக்கும் புஷ்டிவர்த்தனரே, என்னிடம் மஹா காருண்ய மனத்துடன் இந்த உபதேசத்தைச் செய்தீர், உமக்கு நான்

எவ்வாறு க்ருதக்ஞை செலுத்த முடியும்? (அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, படை போர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே,'' என்று பிரபுவை மனமாற வாயாற வாழ்த்தினான் என் பிரபு விபீஷணன்.) [மங்களா சாஸனம் செய்தான் அந்த பாகவ தோத்தமன், அந்த யுத்த களத்தில், கோதண்டராம லக்ஷ்மணர் களுக்குச் செய்தான். அப்பேற்பட்ட மஹா பாகவதனாகிற விபீஷணனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.] (499)

இன்னொரு பக்கத்தில் ராவணன் அங்கதனையும் ஹனுமான்ஜீயையும் போருக்கு அழைத்தான். கரடிகளும் வானரங்களும் ராக்ஷஸர்களைப் போருக்கு அழைத்து, இரு தரப்பினர்களும் தங்கள் பிரபுவின் ஜயங்களைக் கோஷித்துக் கொண்டு சண்டை செய்தார்கள். (500)

பிரும்மாவும், தேவதைகளும், ஸித்தர்களும், முனி கணங் களும் தங்கள் விமானங்களில் ஏறிக்கொண்டு ஆகாயத்தின் மீது இந்த யுத்தத்தைப் பார்ப்பதற்கு வந்து கூடினார்கள். என் பிரபு சிவன் உமையிடம் சொல்லுகிறார், ''உமா, வேடிக்கை யைக் கேள்; நான் கூட அந்த பிரும்மா, தேவதைகளின் ஸமா ஜத்தில் வீற்றிருந்தேன். ஸ்ரீராமபிரானுடைய ரண உத்ஸாஹத் தைப் பார்ப்பதற்கும் லீலையையும் பார்க்கவும் விரும்பினேன்!'' (501)

இருதரப்பினர்களும் தீவிரமாகச் சண்டை செய்யும்போது, வானரர்கள் ராக்ஷஸர்களை அடித்தார்கள்; வெட்டினார்கள், பிடித்துச் சுழற்றினார்கள். கைகளையும், கால்களையும், ஒடித் தார்கள். வயிற்றைக் கீறி எறிந்தார்கள். சிரங்களை உடைத்து அவைகளால் மற்றவர்களை அடித்துக் கொன்றார்கள். வயிற்றையும் புஜங்களையும் இழந்த ராக்ஷஸர்கள் யுத்த பூமியில் சிதறிக் காணப்பட்டார்கள். கால்களும் ஒடிக்கப்பட்டு, ராக்ஷ ஸர்கள் ரண பூமியில் சிதறிக் காணப்பட்டார்கள். (502)

கரடிகளும், வானரங்களும் ராக்ஷஸ வீரர்களைப் பூமியில் புதைத்தார்கள். அவைகளின் மேல் மண்ணைப் போட்டு மூடினார்கள். யுத்தத்தில் வானரங்களும் கரடிகளும் ஆவேசம்

வந்தவர்களைப் போலக் காண்பித்துக் கொண்டு க்ரோத மூர்ச்சிதர்களாக விளங்கினுர்கள். அவர்களைப் பார்த்தால் கோபம் கொண்ட கால புருஷர்கள் அநேகம் பேர்கள் இருந்த மாதிரி விளங்கினுர்கள். (503)

க்ரோதமடைந்த கால புருஷர்களுக்குச் சமமாக வானரங் களும் கரடிகளும் விளங்கினுர்கள். எங்கு பார்த்தாலும் ரத்த பிரவாஹம் ஓடியது. ராக்ஷஸர்களின் மாம்ஸங்களும் குன்று களைப் போல பார்ப்பதற்கு பயங்கரமாக விருந்தன. ஒரே ரத்த மயமாக ரணகளம் பரம சோபிதத்துடன் விளங்கியது. பல முள்ள வானர வீரர்கள் ராக்ஷஸர்களை மர்த்தனம் செய்து, மேகங்கள் கர்ஜிப்பது போலக் கர்ஜித்துக் கொண்டிருந்தார்கள். வானரங்கள் ராக்ஷஸர்களை கன்னத்தில் அறைந்து, பற்களால் கடித்து, கால்களால் நசுக்கி ராக்ஷஸ வீரர்களை சின்னுபின்ன மாக்கினுர்கள். கரடிகளும் வானரங்களும் வீர கர்ஜனை செய்து கொண்டு, பயங்கரமாக ஒலிபரப்பி ராக்ஷஸ வீரர்களைப் பய முறுத்திக்கொண்டு ரண களத்தில் சஞ்சரித்தார்கள். அவர்களைப் பார்த்த ராக்ஷஸ வீரர்கள் நடு நடுங்கினுர்கள், (504)

ராக்ஷஸ வீரர்களை வானரங்களும் கரடிகளும் தங்கள் கைகளால் பிடித்து, கன்னங்களில் கீரி, வயிற்று பாகங்களை கிழித்து, குடல்களை வெளியில் எடுத்து மாலைகள் மாதிரி தங்கள் கழுத்துக்களில் அணிந்து கொண்டு ருத்ர மூர்த்தி களாக விளங்கினுர்கள். அவர்களைப் பார்த்தால் பிரஹலாத னுடைய பிரபுவான உக்ர நரசிம்மமூர்த்தி அநேக ரூபங்கள் எடுத்துக்கொண்டு யுத்த களத்தில் விளையாடுவது போல விருந்தன "பிடியுங்கள், கொல்லுங்கள், துண்டம் துண்டமாக வெட்டுங்கள், குத்திக் கொன்று விடுங்கள்," என்று பல விதமான பயங்கர சப்தங்கள் எங்கு பார்த்தாலும் கேட்கப் பட்டன. ஆகாயத்திலும், பூமியிலும் இந்த சப்தங்கள் எதிரொலி செய்துகொண்டு எங்கும் கேட்கப்பட்டன. "ஸ்ரீராம சந்திரனுக்கு ஜய மங்களங்கள் ஏற்படட்டும்; எங்கள் பிரபு நினைத்தால் ஒரு புல் கூட வஜ்ரமாகி விடும்; வஜ்ரம் புல்லைப் போல சக்திஹீனமாகவும் ஆகிவிடுகிறது. என் பிரபு ஸ்ரீராமன் ஸத்திய ஸங்கல்பன். அவர் நினைக்கிறபடி பலமில்லாதவன்

பலமுள்ளவனுகவும், பலம் உள்ளவன் பலமில்லாதவனுகவும் ஆகிவிடுகிருன்.'' (505)

*[தியானம்*

அயோநிஜரே, பிரபிதாமஹரே, அசிந்தனீயரே, மஹா நாராயணரே, ஜகந்நாதரே, மஹாலக்ஷ்மி பிரபோ, சரணம் சரணம், ருத்ரரே, காலாந்தகரே, திரிபுராரி, நீரே அம்பிகை யுடன் காமதேனுவாக தேவர்களை அழைப்பவராக விருக்கிறீர். நீரே மனுவாக யக்ஞங்களைப் பிரவர்த்தகம் செய்கிறீர். நீரே பிரஹஸ்பதியாகவும், மகிழ்ச்சியைப் பொங்குவிக்கும் சாஸ்திர மந்திரங்களை ஜபிக்க வைக்கிறீர். நீரே பிரபோ, விஸ்வே தேவர்களாக ஸூக்தங்களைச் சொல்லுவிக்கிறீர். மஹா புருஷரே, என்னை எவ்விதத்திலும் துன்புறச் செய்யவேண்டாம், உமக்கு மதுவாகச் செய்வேன். உமக்கு மதுவாக தேவர் களின் ஆராதனைக்காக எடுத்துச் செல்வேன். மஹேஸ்வரரே, மதுவைப்போல இனியதையே தேவர்களிடத்திலும் மனுஷ்யர் களிடத்திலும், நல்லதைக் கேட்க விரும்பும் மனிதர்களிடத்தும் மதுவாகப் பேசுவேன். நீர் அர்ஜுனனுக்கு எதிரில் நின்று அவனை ரக்ஷித்தது மாதிரி என்னையும் எங்களையும் ரக்ஷிப்பீராக. உமா மஹேஸ்வரரே , நடராஜரே, அம்பலவாணனே, திருச் சிற்றம்பலமே, கூத்தபிரானே, விஸ்வசாக்ஷியே, சுத்த ஆத்ம ஸ்வரூபியே, ஸர்வஸ்ரேஷ்டரே' உலகங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாக விருப்பவரே, துஷ்டர்களுக்குப் பயங்கரரும் சந்திரசேகரரும், சாஸ்வதரும், புராதனரும் பூமியைத் தரிக் கின்றவரும், தேவரும், ஸர்வ வாகீஸ்வரரும், ஈஸ்வரருமாகிய நீர் சொற்குற்றங்களால் வராமல் சோபிக்கும் வண்ணம் என்னைக் காப்பாற்ற வேண்டும். எனக்கு சாந்தி எப்பொழுதும் உமது கிருபையினுல் ஏற்படவேண்டும். ஜகந்நாதரே, ஞானத் தினுல் அடையத்தக்கவரே, ஞானத்தினுல் மேன்மை பெற்றவரே, பக்தர்களுக்கு அருளோடு கூடிய வரங்களைக் கொடுப்பவரே, நான் அர்ஜுனன் செய்தது மாதிரி உம்மை பகவானுக சரணமடைகிறேன். உம்முடைய பரிஜனங் களையும், பரிவாரங்களையும் நமஸ்கரிக்கிறேன். தேஜஸ்வியான சங்கரரே, உமது கருணையினுல் உம்மை ஸதா முன்னுல் பார்க்

கிறேன். பிறகின், மஹாதேவரே, உம்மை அடிக்கடி வந்தனம் செய்து, தேவர்கள் ஸ்திரமாகவிருக்கிறார்கள். மங்கள ஸ்வரூபியே, உமாபதியே, ஸர்வேசரே, உம்மை ஏகபாவத்துடன் எப்பொழுதும் உபாசிக்கிறேன். சிவசக்தி ஐக்யதத்வமே சாந்த ஸ்வரூபியே, யுவரே, ஜடா மண்டலரே, வரதரே, பிரும்ம ரூபியே, ஸ்தாணுவே, சரணம், சரணம்.]

யுத்த தளத்தில் தனது பலமுள்ள மூலபல ராக்ஷஸ சேனைகள் நாசமடைந்ததைக் கண்டான் தசகந்தரனுகிற ராவணன். தனது இருபது கைகளில் பாணங்களுடன் பத்து விற்களை எடுத்துக்கொண்டு, ராவணன் மிக்க கர்வத்துடன் தனது சாரதியை "ரதத்தை ஓட்டு" என்று உத்தர விட்டான் (506)

ராவணன் அதிக்ரோதமடைந்து வேகமாக ஓடி வருவதைக் கண்ட வானரங்கள் அவனை ஹூம்காரம் செய்தன. இவனும் அவைகளை ஹூம்காரம் செய்துகொண்டு, அவர்களுடன் யுத்தம் புரிந்தான். [தேவர்களாகிற] வானரங்கள் கரடிகளின் கைகளில் விருக்ஷங்களும் கற்பாறைகளும், மலைகளும் இருந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு வானரங்களும் கரடிகளும் ராவணனை நோக்கி, ஏகமாத்திரமாகப் போர் புரிவதற்கு ஓடி வந்தன. (507)

உடனே ராவணன் அவைகளை தனது வஜ்ரத்திற்கு ஒப்பான அத்யந்த கடினமான சரீரத்தினால் தாங்கினான். அவனுடைய சரீரத்தில் அவைகள் விழுந்ததும் துண்டு துண்டாக சிதறி விழுந்தன. அவன் ஒன்றுக்கும் பயப்படாமல் மலையைப்போல அசஞ்சலமாக தனது ரதத்தை நிறுத்தி, யுத்தத்தில் தீவிர மனத்துடன் அதிகோபத்தை அடைந்தான். அவன் மீது எல்லாவற்றையும் அவர்கள் வீசி எறிந்தனர். (508)

வானரங்களின் சேஷ்டிதங்களை கண்டு அவன் அதிக கோபத்தை அடைந்தான். ரணகளத்தில் அங்குமிங்கும் ஓடி வானரர்களைப் பிடித்து ராவணன் கசக்க ஆரம்பித்தான். எங்கு பார்த்தாலும் வானரங்களும் கரடிகளும் அவனுடைய உபத்ரவம் தாங்க முடியாமல், "ஹே அங்கதா, ஹே ஹனுமான்ஜி, எங்களைக் காப்பாற்றுங்கள்," என்கிற அபயக் குரல்

கேட்கப்பட்டது. வானரங்களும் கரடிகளும் யுத்த களத்தி லிருந்து ஓட ஆரம்பித்தார்கள். (509)

"ஹே கோஸாயி, ஆர்த்திகளைக் காக்கும் ரகு வீரா, ஓடிவா. எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களை ரக்ஷியுங்கள், ராவணன் காலனுக்குச் சமமாக எங்களைப் பிடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்." அவனைக் கண்டதும் ஸகல வான ரங்களும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். அதைக் கண்ட ராவ ணன் ஏக சமயத்தில் பத்து விற்களை நாண் பூட்டி இருபது கைகளாலும் பாணங்களை வர்ஷிக்க நினைத்தான். (510)

ராவணனால் தனுஷ்களில் பூட்டப்பட்ட பாணங்கள் கொத்து கொத்தாக ஒரே சமயத்தில் இருபது கைகளிலிருந்து ஸர்ப்பங்கள் மாதிரி வெளிக் கிளம்பின. ப்ருத்வி, ஆகாசம், திசைகள் திசைகளின் மூலைகள், ஆகிய எல்லா விடங்களும் பாண வர்ஷங்களால் மூடப்பட்டன. வானரங்கள் எங்கு போய் ஒளிந்து கொள்ள முடியும்? தச இந்திரியங்களால் அடக்கப்பட்டனர். அவர்கள் பயபீதி கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தார்கள். எங்கு பார்த்தாலும் கோலா ஹல சப்தங்கள் கேட்கப்பட்டன. வானரங்கள், கரடி களின் சேனைகள் ரணகளத்தில் பயந்துகொண்டு ராமனுடைய உதவியை நாடினார்கள். அஞ்சலி பந்தத்துடன் அவர்கள் அகிஞ்சனர்களாக கதற ஆரம்பித்தார்கள். "ரகு வீரா, கருணா சிந்து, பிரணதபால், மனமுருகி, உமது உதவியை நாடுகிறோம். எங்களிடம் கருணை செய்யுங்கள். உம்மைச் சரணம் அடைந் தவர்களான எங்களுடைய துக்கங்களைப் போக்கி, உமது ரக்ஷ ணத்தை எங்களுக்கு அருள் பாலியும், ஸ்வாமி." (511)

பிரபு ரகு வீரன் வானரர்களின் அபயக் குரலைக் கேட்டார். தன்னுடைய சேனை சின்னா பின்னமாகி திக்குத் தெரியாமல் ஓடுவதைக் கண்ட லக்ஷ்மணன் தனது கச்சத்தைக் கட்டிக் கொண்டார். கையில் கோதண்டத்தை எடுத்துக் கொண்டு ரகு ராமனுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து அதி க்ரோதத்துடன் யுத்தம் செய்ய புறப்பட்டார், (512)

லக்ஷ்மணன் ராவணனை அணுகி, வார்த்தைகளைச் சொன்னார். "அடே துஷ்டா, கரடிகளையும், வானரங்களையும் நீ கொல்லுகிறாய். இதோ பார், உன்னுடன் சண்டை செய்ய

நான் வந்திருக்கிறேன். உனக்குக் காலனைப் போல நான் இருப்பதைப் பார். வா, சண்டைக்கு வா,'' என்று அழைக்கும் லக்ஷ்மணனைப் பார்த்து ராவணன் மிக்க க்ரோதத்துடன் பதில் சொன்னான். "அடே, உன்னைத்தான் நான் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். என் புத்ரனை நீதானே கொன்றாய். அதற்குப் பதிலாக உன்னை வதைத்து, என் தாபங்களைக் குளிரப்படுத்துவேன்.'' (513)

இவ்விதம் சொல்லிவிட்டு, ராவணன் பிரசண்டமான பாணங்களை வர்ஷித்தான். லக்ஷ்மணன் அந்த பாணங்கள் அனைத்தையும் வெட்டித் தள்ளினான். ராவணன் கோடிக் கணக்காக ஆயுதங்களைப் பிரயோகித்தான். என் பிரபு லக்ஷ்மணன் அவைகளைத் துண்டம் துண்டமாக வெட்டி, எள்ளை இறைப்பது போல சிதறி அடித்தார். (514)

லக்ஷ்மணன் தனது கூர்மையான பாணங்களால் ராவணனுடைய ரதத்தை உடைத்து சாரதியைக் கொன்றார். ராவணனுடைய பத்துத் தலைகளையும் தலைக்கு நூறு பாணங்களால் அடித்தார். அவைகள் மலையின் கொடுமுடிகளில் ஸர்ப்பங்கள் சீறிக்கொண்டு நுழைவது போல, ராவணனுடைய மஸ்தகங்களில் புகுந்தன. (515)

[*தியானம்*

நாராயணா, மஹாலக்ஷ்மி ஸமேத ரங்க நாராயணா, ராமா சீதா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே சீதா பதயே நமோ நம: என்று சரணம் செய்து உங்களை வந்து அடைகிறேன். ஹே பிரபோ, மஹாதேவா, திரியக்ஷரே, பாலரே, பஞ்சசிசரே, ஜடாதரரே, நீரே நான்கு வேதங்களும் யஜமானனுடைய ஸம்ஸ்காரமாகிற தீக்ஷையும், பாபத்தைப் போக்கும் தபஸ்ஸாகவும், பசுவின் ஒரு முலைக்காம்பின் பாலை மட்டும் பருகும் விரதமாகவும், அஹோராத்திரியில் பெய்யும் மழைகளால் உண்டாகும் பயிர்களின் செழிப்பாகவும், பிரும்மரதந்திர ஸாம கானங்களினாலும், பகவான் வேதவியாஸர் அர்ஜுனனுக்கு உபதேசித்த சதருத்ரீயத்தாலும், ஜ்யேஷ்ட ஸாமத்தினால் புகழப்படும் மஹேஸ்வர உமா தம்பதிகளாக விருக்கிறீர். ஹே கபர்த்தின், தேவதேவரே, உம்முடைய வத்ஸனாகிற

என்னிடம் ஸதா கிருபையுடன் இரும். உமது பெருமைகள் திறமைகள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதபடி யிருக் கின்றன, நீரே பிரகிருதி முதல் தேவர்கள் வரை முப்பத்துமூன்று தேவ பிரஸாத தத்வங்களாகவும், சதுர்வித புருஷார்த்தங்களி லிருந்து ஜகத் சந்தம் வரை 48 தத்வங்களாகவும், உலகங்களி லுள்ள பிராணி வர்க்கங்களின் செழிப்பைக் குறிக்கும் தத்வ விஷயங்களாகவு மிருக்கிறீர். க்ஷேத்திரிபுராரியே, கங்காதரரே, ஸோமாஸ்கந்தரே, சைல ராஜபுத்ரியாகிற உமையின் புருஷரே, நீர்தான் என்னை ஸதா சம்ரக்ஷிக்க வேண்டும். சாந்த மூர்த்தியே சரணம் சரணம்.]

லக்ஷ்மணன் ராவணனை மீண்டும் நூறு பாணங்களால் வக்ஷஸ்தலத்தில் அடித்தார். ராவணன் மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான். சில நிமிஷங்களுக்குப் பின் அவன் மூர்ச்சையிலிருந்து தெளிந்து எழுந்து உட்கார்ந்தான். மஹா வீரனை ராவணன் பிரும்மாவினல் கொடுக்கப்பட்ட சக்தி ஆயுதத்தை எடுத்தான். (516)

ராவணன் பிரும்மாவினல் கொடுக்கப்பட்டதும் பிரசண்ட மானதுமான பிரும்ம தண்டத்தை அனந்தனுடைய மார்பில் ஓங்கி அடித்தான். தசமுகனல் அடிக்கப்பட்ட லக்ஷ்மணன் வ்யாகுலமடைந்து பூமியில் விழுந்தான். மஹா வீரனை லக்ஷ்மணன் மூர்ச்சையற்று பூமியில் கிடந்தான். உடனே ராவணன் ஓடி வந்து லக்ஷ்மணனை வாரி எடுக்க முயற் சித்தான். அவனுடைய அதுளித பலம், ராவணனுடைய மஹாபலம், லக்ஷ்மணனுடைய மகிமைகளுக்கு முன்பு வியர்த்த மாகி விட்டது. அவனல் லக்ஷ்மணனை அசைக்கவே முடிய வில்லை. [அப்பொழுதும் ராவணனுக்கு லக்ஷ்மணனுடைய நிஜ ஸ்வரூபத்தை உணர்ந்துகொள்ள முடியவில்லை;] என் பிரபு மஹா உரகனகிற ஆதிசேஷன் தனது சிரங்களில் பிரும் மாண்ட ரூபியாகிற சகல புவனங்களையும் மணல் திட்டுக்கள் மாதிரி தரிக்கிருரோ, பாரப்ருத், அப்பேற்பட்ட மஹா பிரபுவை ராவணன் எடுக்க முயன்றது என்ன மடத்தனமாகவிருக்கிறது. அவரை எடுக்க முயற்சி செய்து மனம் நொந்தவனாக காணப் பட்டான் !! ஸஹஸ்ர மண்டலமுள்ள நாகராஜன் மூன்று புவனங்களுக்கும் ஸ்வாமி, அந்த பிரபு லக்ஷ்மணனக அவதரித்

திருக்கிறார் என்று மஹா அஹங்காரம் கொண்டுள்ள ராவணனுக்கு எவ்விதம் புரியப்போகிறது? (517)

இதைப் பார்த்தார் என் பிரபு பவனஸுதன். ராவணனை கடுமையான வசனங்களால் கடிந்து பேசிக்கொண்டு ஓடி வந்தார். ராவணன் தனது முஷ்டியினால் அவரைக் குத்தினார். அதனால் ஹனுமான்ஜி வலி பொறுக்க முடியாமல் கீழே விழுந்தார். ராவணன் வாய்விட்டு பயங்கரமாக கர்ஜித்தான். ஹனுமார் சிரமப்பட்டார். (518)

கீழே விழாமல் முழங்கால்களினால் ஹனுமான்ஜி தன்னைத் தாங்கிக் கொண்டு பூமியில் உட்கார்ந்தார். அவருக்குக் கோபம் வந்தது. அவர் எழுந்துகொண்டு ராவணனின் மீது பாய்ந்து ஓங்கி பதிலுக்கு இன்னொரு குத்து விட்டார். ராவணன் வலி பொறுக்கமாட்டாமல் வஜ்ரத்தால் தாக்குண்டப்பட்ட பர்வதத்தைப் போல கீழே விழுந்தான். (519)

சில நிமிஷங்களுக்குப் பின் ராவணனுக்கு மூர்ச்சை தெளிந்தது. ராவணன் எழுந்து உட்கார்ந்து கொண்டு, ஹனுமாருடைய தேக பலத்தை மெச்சி ஆச்சரியப்பட்டான். ஆஞ்சநேயர் அவனுடைய மூர்ச்சை தெளிந்ததைக் கண்டு, "சே, என் பலம் பௌரஷம் எள்ளளவும் பிரயோசனமில்லை. ஸுரத்ரோஹியாகிற இவன் என்னிடமிருந்து குத்து வாங்கியும் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்." (520)

இவ்விதம் எண்ணியவராக ஹனுமான்ஜி லக்ஷ்மணனை வாரி எடுத்தார். அவர் லாகவமாக லக்ஷ்மணனைத் தூக்கி எடுத்து ஓடிக்கொண்டிருக்கும் சமயம், தசானன் ஹனுமான்ஜியின் பஹு பலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான். அப்போது என் பிரபு ரகுவீரன் ராவணன் கேட்கும்படி தனது பிரதாவாகிற லக்ஷ்மணனைப் பார்த்துச் சொன்னார் "லக்ஷ்மணா, உன்னுடைய நிஜ ஸ்வரூபத்தை அறிந்துகொள். நீ காலனையும் பக்ஷிக்கும் ம்ருத்யு அல்லவோ. ம்ருத்யுவுக்கும் ம்ருத்யுவாகிற சங்கர்ஷணமூர்த்தி, கிருதாந்தகர் அல்லவோ? உக்ரமான நரசிம்மர் நீதானே? நீதானப்பா ஸகல தேவர்களையும் ரக்ஷிக்கும் அனந்தமூர்த்தி. மஹா யோகி மஹாவீரர்." (521)

பிரபுவின் வசனங்களைக் கேட்ட லக்ஷ்மணர், மஹா

க்ருபாளு, கோபத்தை சமனம் செய்து கொண்டு, சாந்தமூர்த்தியாக எழுந்திருந்து உட்கார்ந்தார். அவர் எழுந்து உட்கார்ந்ததும் ராவணனுடைய மஹா பயங்கரமான சக்தி ஆயுதம் ஆகாயத்தில் சென்று விட்டது. லக்ஷ்மணன் தனது கோதண்டத்தை எடுத்துக்கொண்டு, பாணத்தைப் பூட்டிக் கொண்டு ஓடினார். சத்ருவாகிற ராவணன் முன்பு யுத்த ஸன்முகனாக அவர் நின்றார். (522)

[*தியானம்*

நாராயணா, மஹாலக்ஷ்மி சரணம் சரணம். ராமாசீதா, ஸதாசிவா, நீதானே என் பிரபு. ஸ்கல தத்வங்களுக்கும் ஆத்மாவாக விருக்கிறீர். ஹே பிரபோ, ஸர்வ மந்திர ஸ்வரூபமாகவும், யந்திர ஸ்வரூபமாகவும், தந்திர ஸ்வரூபமாகவும் இருக்கிறீர். ஸர்வ தத்வ விதுரராகவு மிருக்கிறீர். பிரும்ம ருத்ர ஸ்வரூபரே, மஹாமணி மகுடத்தைத் தரித்தவரே, ஸ்ருஷ்டி, ஸ்திதி, பிரளய கால ரௌத்ராய தாரகமாக விருக்கிறீர். மூலாதார நிலையராகவு மிருக்கிறீர். தத்வாதீதமாகவும் இருக்கிறீர். அனந்த, வாஸுகி, தக்ஷ, கார்க்கோடக, சங்க, குலிக, பத்ம, மஹா பத்மன், என்கிற அஷ்ட மஹா நாக குல பூஷணரே, பிரணவ ஸ்வரூபரே, சிதாகாஸரே, ஆகாஸாதிக ஸ்வரூபரே, கிரஹ நக்ஷத்திர மாலினியே, எனக்கு ஸகலரே, களங்க ரஹிதரே, எங்களிடம் பரம ப்ரீதியுடன் இரும். பார்வதி மனோஹரா, ஸோம ஸூர்ய அக்னி லோசனா, பஸ்மோத் துளித விக்ரஹா, சௌந்திராம்பிகா ஸமேத கச்சபேஸ்வரா, ஸகல ஜகத் பயங்கரா, ஸகல துரிதார்த்தி பஞ்சனா, சசாங்க ஸேகரா, உமாபதி, ஸமஸ்த பரிவாரங்களுடன் கூடிய உமா மஹேஸ்வரரே சரணம் சரணம். ரக்ஷி, ரக்ஷி என்று நமஸ்கரித்து, சரணமடைகிறேன், கிருபாளு.]

லக்ஷ்மணன் அதிசீக்கிரமாக பாணங்களைப் பூட்டி ராவணனுடைய ரதத்தை உடைத்து, தேர்ப் பாகனைக் கொன்று, ராவணனுடைய ஹ்ருதயத்தைப் பிளந்து, ராவணனை அதிகமாகப் பீடித்து பூமியில் கீழே தள்ளினார். அதற்குள் இன்னொரு சாரதி லங்கைக்கு அழைத்துச் சென்றான். ஸ்ரீ ரகுவீரனுடைய தம்பியான லக்ஷ்மணன் ராவணனை அடித்து மானபங்கங்கள்

செய்துவிட்டு ரணவிஜய பிரதாபங்களுடன் ஸ்ரீராமனிடம் சென்று அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். (523)

லங்கையை அடைந்த லங்காதிபதியான தசானன் சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்தான். மஹா மூர்க்க ஸ்வபாவம் கொண்ட ராவணன் இன்னமும் ராமனுடைய மகிமைகளை உணரவில்லை. ஐயோ, பரம முட்டாள்! பரம அக்ஞானத்தினுல் பகவானுகிற ஸ்ரீமந் நாராயண அம்சரான ஸ்ரீ சீதா ராமனை மஹா விரோத புத்தியினுல் சாதாரண மனிதனைப்போல நினைத்து, ஜயம் அடைய எண்ணம் கொண்டவனுகவிருந்தான். (''ராமா, நீதான் என்னை அப்பேற்பட்ட அக்ஞானத்திலிருந்து காப்பாற்றவேண்டும்.'') (524)

இங்கே விபீஷணன் எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டு, ''சரி இனி தாமதப்படுத்தக் கூடாது,'' என்று நினைத்து, ஸ்ரீ ரகுபதியிடம் சென்றுன். கைகளை குவித்துக் கொண்டு, விபீஷணன் சொல்ல ஆரம்பித்தான். ''பிரபு, ராவணன் ஒரு யாகத்தைச் செய்து கொண்டிருக்கிறுன். அவன் அந்த யக்ஞத்தைப் பூர்த்தி செய்து விட்டானுகில், அவனுக்கு மரணம் சம்பவிக்காது.'' (525)

''நாதா, சீக்கிரமாகவே வானரங்களையும் கரடிகளையும், அனுப்பி, தசகந்தரனுடைய யக்ஞத்தை நாசம் செய்ய வேண்டும். ராவணனை யுத்த களத்திற்கு வரும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.'' இதைக் கேட்டு அங்கதனும் ஹனுமான்ஜியும் உடனே ஓடினுர்கள். (526)

வானரங்கள் விளையாட்டாகவே குதித்துக் கொண்டு லங்கைக்கு ஓடினுர்கள். அவர்களுக்குப் பயம் துளிக்கூட இல்லை. ராவணனுடைய அரண்மனையை அடைந்தார்கள். அங்கே அவன் யாகம் செய்வதைக் கண்டார்கள். உடனேயே அவர்களுக்கு கோபம் அதிகமாக வந்தது. (527)

உடனே அவர்கள் கத்தினுர்கள், ''ராவணு, உனக்கு லஜ்ஜையே கிடையாதா? ரண பூமியிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டு, கொக்கைப் போல தியானத்தில் ஈடுபட்டிருக்கிறுயே,'' இவ்விதம் சொல்லி விட்டு, அங்கதன் ராவணனைக் காலால் உதைத்தான். ராவணனுடைய மனமும் கவனமும் யாகத்தில்

ஏகமாத்திரமாக ஈடுபட்டிருந்ததால், அவன் தனது முகங்களால் அவர்களைப் பாராமல் தியானத்தில் ஈடுபட்டிருந்தான். (528)

தனது மனத்தையும் கவனத்தையும் திருப்பாமல் இருந்ததைக் கண்ட வானரங்களுக்குக் கோபம் இன்னும் அதிகமாகியது. அதனால் அவைகள் பற்களால் அவனைக் கடிக்க ஆரம்பித்தனர். அவனுடைய பத்னிகளையும் அண்டி அவர்களையும் கேசத்தால் பிடித்து வாசற் பக்கம் வீசி எறிந்தார்கள். அந்த ஸ்திரிகள் தீனர்களாக ஆகி, உதவிக்கு ராவணனை அழைத்தார்கள். ராவணனுக்கு கோபம் ஜ்வலித்தது. கிருதாந்தகன் மாதிரி ராவணன் எழுந்திருந்து வானரங்களின் கால்களைப் பிடித்துச் சுழற்றி வாசலில் வீசி எறிந்தான். இதற்குள் மற்ற வானரர்கள் யாகத்தைக் கெடுத்து விட்டார்கள். யாக சாமான்கள் சிதறப்பட்டுக் கிடந்தன. யாகம் நிறைவேறாமல் போவதைக் கண்டதும், ராவணனுக்கு மனத்தில் ஏக்கம் ஏற்பட்டது. அவனுக்குப் பயமும் உண்டாகியது. (529)

யாகம் நிறைவேறாமல் உபத்திரவங்களைப் பண்ணி விட்டு, மஹா சாமர்த்தியமுள்ள வானர வீரர்கள் ஸ்ரீ ரகுபதியினிடம் வந்து சேர்ந்தார்கள், அப்பொழுது ராவணன் இனி உயிருடன் இருப்பதில் பிரயோசனமில்லை என்று தீர்மானத்திற்கு வந்தான். மஹா க்ரோதத்துடன் யாகத்தைத் தியாகம் செய்துவிட்டு யுத்தத்திற்குச் சென்றான். (530)

[*தியானம்*

நாராயணா, மஹா ஸங்கல்பரே, சீதாராமா, சரணம் சரணம். ஜய ஜய ருத்ரரே, மஹா ரௌத்ரரே, பத்ராவதாரரே, என்னிடம் கருணையுடன் இரும். மஹா பைரவரே, கால பைரவரே, கபால மாலாதரரே, மிருத்யுஞ் ஜயரே, என்னிடம் அன்புடன் இரும். திரியம்பகரே, திரபுராந்தகரே, உமா தேவியினால் பக்தியுடன் அழைக்கப்பட்ட திரியக்ஷரே, விஸ்வரூபரே, என்னுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும். விரூபாக்ஷரே, விஸ்வேஸ்வரரே, வ்ருஷப வாஹனரே, விஸ்வதோமுகரே, என்னை நல்ல மார்க்கத்தில் சேர்ப்பிக்க வேண்டும், என்னை ரக்ஷிக்க வேண்டும். மார்க்கபந்தோ, தீனபந்தோ, சரணாகத

வத்஬லரே, என்னை உமது ஜ்வலிக்கும் மஹா ம்ருத்யு பயங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும். ஜ்வாலா ப்ரஜ்வல மஹா ம்ருத்யுவின் கைப்பிடியிலிருந்தும், ரோக பயங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்ற வேண்டும். எங்களைத் திருடர்களிடமிருந்தும், சத்ருக்களிடமிருந்தும் காப்பாற்ற வேண்டும். திரிசூலரே, பிரும்ம, ராக்ஷஸ கணங்கள், மிருகங்கள் கூஷ்மாண்ட வேதாள யாதுதானிகளின் பயங்களிலிருந்தும் யக்ஷ, கின்னர, தேவ, கந்தர்வ, ரிஷிகணங்களிடமிருந்தும், ஆபத்துக்கள் வராதபடி ஸதா பரிபாலிக்க வேண்டும். ஸம்ஜீவியே, உம்முடைய அம்ருத கடாக்ஷத்தினால், நரக பயங்களிலிருந்தும், அக்ஞானங்களிலிருந்தும், பசி, தாகம், துக்கத்தைத் தரும் ஸந்தாபங்கள், முக்குண சேஷ்டிதங்கள், தாபத்ரயங்கள், ஆகிய ஸகல விதமான சேஷ்டிதங்களிலிருந்து எங்களை ரக்ஷித்து, சிவகவசத்துடன் இருக்கும் எங்களை ஆனந்திக்க வேண்டும். ம்ருத்யுஞ்ஜய, திரயம்பக, ஸதாசிவரே, நமஸ்தே நமஸ்தே என்று சொல்லும் எங்களை பாபங்களிலிருந்தும், பயங்களிலிருந்தும், ரக்ஷித்து, எங்களுடைய ஆராதனைகளை ஸ்வீகரித்து, உம்முடைய பக்தர்களாகிய எங்களை ஸதா பரிபாலிக்க வேண்டும். பரம சாந்தரூபாய, தேஜோரூபாய, தேஜோமயாய, நந்தி முதலிய பிரமத கணங்களால் சேவிக்கப்படும் நித்ய சுத்த புத்த பரிபூர்ண சச்சிதானந்தாய நமோ நம: ஹே பிரபோ, உமையும் நீரும் ஸதா எங்களிடம் பரிபூர்ண அனுக்ரஹராக விருக்கவேண்டும்,'' என்று பிரார்த்திக்கிறோம்.]

ராவணன் புறப்படும்போது, பயங்கரமானதும் அசுபமான அமங்கள சகுனங்கள் ஏற்பட்டன. கழுகு வட்டமிட்டுக் கொண்டு, அவனுடைய தலையில் வந்து உட்கார்ந்தது. அவன் காலத்தின் வசம் அடைந்து விட்டான். (அதனால் மஹா ஸங்கல்பராகிய நாராயணனுடைய கிங்கரர்களான அசுபங்களை அவன் எவ்விதம் அறிவான்? பரபிரும்மத்துடனேயே போராடி ஜயிக்க வேண்டும் என்று துராசை கொண்டவன். நன்றிக் கொன்றவனிடம் எவ்விதம் ஆயுஸ் நிலைத்து நிற்கும்?) பாவம், கெடுமதி கொண்ட ராவணன் தனது யுத்த படர்களைக் கூப்பிட்டு ''யுத்தம் செய்வதற்கு டங்கா முதலிய பேரிகைகளை முழங்கச் செய்யுங்கள்,'' என்று உத்திர

விட்டான். (531)

காலம் சமீபித்து விட்டதால், தேவதைகளின் மனமும் சங்கடப்பட்டது. பரமாத்மாவின் திருவுள்ளத்தைத் தொடும்படி அவர்கள் கிருதாஞ்சலியுடன் புகழ் மாலைகள் பாடினார்கள். "ஹே பிரபோ, ஸ்ரீ ராமசந்திர பிரபோ, தயாளு, சரணாகத வத்ஸலரே, சீதா நாயகரே, இதோ ஓடிவரும் ராவணனைப் பாருங்கள். இவனால் எங்களுக்குப் பல துன்பங்கள், அவமானங்கள் செய்யப்பட்டன. நாங்கள் இதுவரை உமது கிருபைக்காகக் காத்துக் கொண்டிருந்தோம். அவனிடம் தாங்கள் பொறுமையுடன் இனி இருக்கவேண்டாம். உம்முடைய பிரிய பத்னியாகிற வைதேஹி நிரதிசய துக்கத்துடன், பொறுமை விரதத்துடன், க்ஷமா தேவியாகவும், தயா தேவியாகவும் பல நாட்கள் இருந்து விட்டாள். அவள் இனி உம்மிடம் சேர விரும்புகிறாள். ஆகையால் ஸ்வாமி, இனி காலதாமதம் செய்யாமல், இந்த துஷ்டனை விளையாட்டாகக் கொன்று விடவும். இவனுக்கும் காலம் நெருங்கி விட்டது" என்று சொன்னார்கள். (532)

பிரபு ரகுவீரன் தேவர்களின் வசனங்களை சிரித்துக் கொண்டு கேட்டார். [மஹா கர்மா, இந்திர கர்மா, ஊர்ஜித சாஸனா, விஸ்வ கர்மா,] என் பிரபு ரகுராமன் எழுந்திருந்தார். பாணங்களையும் தனுஷ்ஷையும் கையில் எடுத்துக் கொண்டார். தன்னுடைய ஜடாமண்டலத்தை இறுகக் கட்டிக்கொண்டார். அவைகளில் அழகாக பதிந்திருந்த புஷ்பங்களை சரிப்படுத்திக் கொண்டார். நடு நடுவே பிரகாசிக்கும் புஷ்பங்கள் அவருடைய சோபையை பலவிதங்களால் அழகுபடுத்தின. (533)

அருணோதயமான சமயத்தில் யேற்படும் சிகப்பு (ரோஹித) நிறமுள்ள பத்மலோசனங்கள். மேகத்தின் நிறமாகிற ஸ்யாமள சரீரம். அகில புவனங்களும் காணக் காணென அழகு படைத்த சுபேக்ஷணர். பரத்வ சௌலப்யாதிகளின் மேன்மைக்கு அறிகுறிகளாக குளிர்ந்தும் பரந்தும் நீண்டுமிருக்கும் திருக்கண்களை உடைய பைத்த பாம்பணையான், திருவேங்கடம் மொய்த்த சோலைபோல அழகுடன் கடாக்ஷ வர்ஷங்களால் மங்கள கரங்களினால் வர்ஷிக்கும் லோசனா பிராமர், என்பிரபு, என் கோதண்டபாணி, கோதண்ட ஹஸ்தன், ஸுதன்வீ,

(ஆதியுஞ் சோதி, பங்கயக் கண்ணன், பவளச் செவ்வாயன், அஞ்சன வண்ணன், செங்கதிர் முடியன், திருமறுமார்வன், சங்கு சக்கிரத்தன், என் சாதி மாணிக்கம், ஸம்பூர்ண லோகங்களை மோஹிக்கும் புவன சுந்த்ராங்கதன், ராக்ஷஸர்கள் அசுரர்கள் ஏமாறும்படி சுபமான அங்கங்களால் தன்னை மறைத்துக் கொள்ளும் மாயா மோஹன ராமன், கண்களில் சிறிது நீர் ததும்ப, தேவர்களைப் பார்த்து. ஒரு தடவை சீதையையும் நினைத்து, ராவணனுடைய துஷ்கர்மங்களையும் சிந்தித்தவராக, ஸர்வக்ஞர், தியான யோகத்தினுல் அறியப்பட்ட கர்த்தவ்யங்களையும் நினைத்துக்கொண்டு, என் பிரபு ராகவ சிம்மம், தனது பிடரி கழுத்தை ஒரு தடவை சிலிர்த்து விட்டு, தேய்ந்த மனத்துடன் எழுந்தார். நாம் காட்டிய அன்பும், ராவணனிடம் காட்டிய அன்பும், ராவணனிடம் காட்டிய பொறுமையும் வீணாகி விட்டது என்கிற நினைப்புடன் என் பிரபு, அச்சுதன் அமலன், அடியவர் வினை கெடுக்கும் நச்சு மாமருந்து போல தன்னைக் கருதிய காகுத்தன் ஒரு நிமிஷம் சிந்தித்தான். எவருக்கும் நலம் கடலாகவும் அமுதாகவும் விளங்கும் என் பிரபு தேவ மார்தர்கள் படும் துயரங்களையும் அறிந்தான். எப்பொழுது இரவு முடிந்து பொழுது விடியும், விடிந்தமைக்கு அடையாளம் என்ன, ஆனைச் சாத்தன் (பரத்வாஜ பக்ஷிகள்) கலந்து பேசின பேச்சரவம் முதலிய அடையாளங்களை கீசு கீசு என்று சப்தித்து உணர்த்துவது போல, சார்ங்கமாகிற வில்லின் சப்தத்தால் சீதையின் துயரமும் ராவணனுடைய துயரமும் ஒருங்கே போக வேண்டும்என்று நினைக்கும் என் மனத்துக்கினியான்,) தனது கச்சத்தை இறுகக் கட்டிக் கொண்டார். அம்புராத்தூணியை சீர்படுத்திக் கொண்டார். (534)

[தேவாசுர யுத்தத்தின் சமயம் நாஞ்ஞெலி செய்து தேவர்களைக் காப்பாற்றிய வீரபாஹு தனது சாரங்கத்தை, கோதண்டத்தை எடுத்துக் கொண்டார். (அப்பேர்ப்பட்ட தேவநாயகப் பெருமானுகிற நாராயணமூர்த்தி, கேசவனை நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரித்து, அவருடைய ஸங்கல்பத்திற்கு அடி பணிந்து, குருகூர் சடகோபன் சொல்போல வாழ்கிறேன். தீர்த்த வடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ள வல்ல ஆர்த்த புகழச்சுதனை அமரர்பிரானை, எம்மானை, என் அருவினை

நீறு செய்யும் என் கோதண்டராமனே, தர்ப்பசயனனே, பிரசண்ட கோதண்ட ஹஸ்தனே நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். (535)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ, உத்தம ஸ்லோகா, சரணம், சரணம். ராமா சீதா, சரணம், சரணம். உமா மஹேஸ்வர சம்போ, சரணம், சரணம். ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணுய நம. நாகேந்திர ஹாரரே, திரிலோசனரே, நாராயண விபூதியினுல் பிரகாசிப்பவரே, மஹேஸ்வரா சரணம், சரணம். நித்யரே, சுத்தரே, திகம்பரரே, உம்முடைய பஞ்சாக்ஷரத்திற்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். மந்தாகினி ஸலில சந்தன ஸதாசிவரே, நந்தீஸ்வர ப்ரமத கணங்களால் ஸேவிக்கப்பட்ட மஹேஸ்வரரே, உம்முடைய கிருபையை நான் பிரார்த்திக்கிறேன். உம்முடைய ஸௌம்ய ரூபத்தையும், கோர ரூபத்தையும், மந்தார புஷ்பங்களாலும் ப்ஹு புஷ்பங்களாலும் பூஜை செய்து உம்முடைய நம: சிவாய என்கிற பஞ்சாக்ஷரத்திற்கு நமஸ்கரிக்கிறேன். சிவரே, கௌரீவதனுப்ஜ வ்ருந்த ஸூர்யரே, தக்ஷயக்ஞத்தை நாசம் செய்தவரே, ஸ்ரீநீலகண்டரே, விருஷபத்வஜரே, எங்களுடைய பூஜைகளை ஏற்றுக்கொண்டு எங்களை க்ருதார்த்தர்களாக ஆக்க வேண்டும், வஸிஷ்ட, அகஸ்திய, வாமதேவ, கௌதமாதிகளாலும், விஸ்வாமித்திர, பிருகு மஹரிஷியினுலும் ஸேவிக்கப்பட்ட தேவரே, சசிசேகரரே, சந்திரார்க்க வைஸ்வாநர லோசனரே, உம்மை அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். யக்ஷஸ்வரூபரே, ஜடாதரரே, பிநாகஹஸ்தரே, ஸநாதனரே, திவ்யதேவரே, திகம்பரரே, உமா மஹேஸ்வரரே, உம்முடைய பஞ்சாக்ஷர வித்தையினுல் புனிதமடைந்து, உம்முடைய ஸந்நிதானத்தில் வந்து அடைந்திருக்கிறோம். எங்களை நீங்கள்தான் ரக்ஷிக்கவேண்டும். பிரியமாக எப்போதும் என்னிடமிருக்க வேண்டும்.]

[*தியானம்*

நாராயணரே, முகுந்தரே, வாஸுதேவரே, ஹரிபகவானே, ஸ்ரீ வத்ஸவக்ஷரே, ஸ்ரீதரரே, ஸ்ரீவாஸரே, நித்ய ஸ்ரீயுடன் கூடிய

ஸ்ரீ சீதாராமா, ராமசீதா, ஜகன்னுதரே, உம்மை நான் நெருக்க மான கரயாம்பூங் கொத்துப்போல அழகான திவ்ய தேஜஸ் ஸாக ஏகமான ஸாரமாக நான் பார்க்கிறேன். அந்த, தேஜோ மயமான ஒளிபிம்பத்தில் நான் அம்ருதத்தினுல் நனேக்கப்பட்டவ னுகிறேன். அந்த அம்ருத மயமான ஆனந்தம் ஒரு தெய்வீக பாலனுடைய வடிவத்தில் ஸ்பரிசம் செய்யப்பட்டதாக விருக்கி றது. நான் மயிர் கூச்சலுடன் உத்தம ஆனந்தத்துடன், அந்த சுப அங்கங்களேயும், சுபமான அடையாளங்களேயும், மங்களங் களேச் சூசிப்பிக்கின்ற காலத்தையும் அனுபவிக்கிறேன். ஹே பிரபோ, என் குரு, ஆசாரியரான நாரதர் முதலியவர்களாலும் உப நிஷத்துக்களாகிற ஸ்ருதி சுந்தரிகளின் அழகான வரிசை, பாவம், ஸ்வரம், ராகம், தாளம், ஸாஹித்யம் ஆகியவைகளால் மதுரமாக கானம் செய்யப்படும் சுப கீதங்களேக் கேட்கிறேன். ஹே தேஜோ வ்ருஷரே, என்னிடம் தயையுடன் இருக்க வேண் டும் என்று பிரார்த்திக்கிறேன். உம்முடைய உத்தம சௌந் தர்ய அழகுக் குவியல்கள் வேத வ்யாஸருடைய விசாலமான புத்தியைப்போல ஆழமாகவும், பரந்ததாகவும், குபேரனுடைய ஸம்பத்துக்களேப் போல என்று அழிவடையாதப் படியாயிருக் கின்றன. உம்முடைய தீர்க்கமான பாஹீக்கள், அழகான பாதங்கள், விரல் வரிசைகள், பத்மபத்ரலோசனங்கள், மென்மையான வடிவம், கேசபாசங்களாகிற கம்புக்ரீவம், இளம் சந்திரனேப் போல நெற்றித்தடம், மனேஹரமான கருப்பு விழிகள், அநாதனுகவிருக்கும் எங்களிடம் மங்கள மய மாகச் செலுத்தப்பட வேண்டும். ஹரி மணி முகுடம் எனப் படும் உமது சிரம் பிரும்மாவிடம் பொறுத்தப்பட்ட தாக விருக்கிறது. உமது வாயில் ஆதிசேஷனின் மூச்சுக் காற்றுப் போல ஸ்புடம் செய்யப்பட்ட ஸகுண சுத்த ஸத்வம் பிரகாசிக்கிறது. உமது ஹ்ருதயத்தில் சரஸ்வதி, சாவித்திரி காயத்திரி தேவதையாகிற பிராம்மண் ஹ்ருதயம் ப்ருகுபதம் போல பிரகாசிக்கிறது. மான் கொம்பு போல ஸ்தனங்கள் கொண்ட சீதையின் பொருட்டு, இலங்கை நகர் சென்று ராவணன், கும்பகர்ண, இந்திரஜித்தாதிகளின் மேல் பாணங் களே வர்ஷித்த கோதண்டராமா, உமது பாதங்களில் என்னே சுத்தப்படுத்தும் கங்கை விளங்குகிருள். எனது காதல் என்

கிற பத்மத்தை பரிமளிக்கவைக்கும் ஆதித்யரே, ரங்கராம துரையே, ஸ்ரீநிவாசரே, அலர்மேல் மங்கை உறை மார்பனே, என் ரங்க தாமரே, வரத ராஜரே, எனது உமாசங்கர தத்வமே, உம்மை ஸதா பார்த்துக் கொண்டு இன்ப ஆனந்தங்கள் நான் அடைவேனாக. உம்முடைய ஆலிங்கத்தினாலும், ஸரளமான ஹ்ருதயத்தோடு பேசப்படும் பக்தவாத்ஸல்யப் பேச்சுக்களும் என்னை மேன்மைப் படுத்த வேண்டும். உம்முடைய ரக்ஷணத்தை நான் ஸதா அடைவேனாக].

[தியானம்

ஹே மஹா லக்ஷ்மி அம்மா, என் ஞானேஸ்வரி, ஸித்தேஸ்வரி, ஜகதீஸ்வரி, அம்மா, உனது சரணங்களை பிரும்ம தேவர் சரஸ்வதியை முன்புரமாக வைத்து சரணமடைகிறேன். நாராயணி, நீதானே என் ஹ்ருதய உல்லாஸினி. அம்மா, தாயே, திருவிக்ரமனுடைய மூன்றடிகளைக் கொண்டே மூவுலகங்களையும் உன் மனதின் ஸங்கல்பத்தினால் அளக்கப்பட்டதாக பகிரங்கப் படுத்தினாய். மஹேந்திரன் இந்திரா ஆகியவர்களால் தொழப்பட்ட திரைலோக்ய ஸாம்ராஜ்ய லக்ஷ்மியே, என் சீதா தேவியே, ஜானகி, உன் மனத்தை நாங்கள் சந்தோஷப்படுத்தா விட்டால் சகல ஐஸ்வர்யங்களையும், நாராயணனுடைய கிருபையையும் அடையமாட்டோம். உனது த்ருப்தி ஏற்பட்டால் நாங்கள் சந்தோஷத்தை அடைந்து கிருதக்ருத்யர்களாகவும் ஆக்கப் படுகிறோம். உன்னுடைய ஸ்வரூபம் ஜலத்திலும் பொன்னிலும், மாதர்களின் வடிவங்களிலும், அக்னியிலும், பூமியிலும், மழைத் துளிகளான அம்ருத தாரைகளிலும், ஸுகந்தமான வாசனையுள்ள திரவியங்களிலும், காமதேனுவின் ப்ருஷ்ட பாகத்திலும், நாரதர், சுகர், வேத வியாஸர், மார்க்கண்டேயர் ப்ருகு, விஸ்வாமித்திர, வஸிஷ்ட, பராசர, ராமானுஜ ஹ்ருத்யத்திலும், தியாக பிரும்மம், ச்யாமா சாஸ்திரி, தீக்ஷதர், வால்மீகி கம்பர், துளசிதாஸர் போன்ற மஹான்களின் கவிதை கீதங்களிலும் பிரகாசிக்கின்றது. எனது ராஜலக்ஷ்மியே, நீதானே எனக்கு ஆனந்தத்தை அடைவிக்கும் உலகம். பகவான் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பதற்கு உன்னுடைய வீர்யம் தான் ஆதார ஹேது. பூமியின் பொடிகளை எண்ண முடியும்.

ஆனால் உன்னுடைய பெருமைகளையும் மகிமைகளையும் எக் காலத்திலும் யாராலுமாவது எண்ணக் கூடுமா ? நாராயணி, உமா சக்தியின் அர்த்தமே, மஹா பொருளே, நீதானே மோக்ஷலக்ஷ்மி என்கிற அம்ருத ரஸம். உன் கிருபையாகிற அம்ருத பிரவாஹம் எப்போதும் பிரியத்தையும், மேலான நாராயண பதமாகிற ஸ்ரீ சீதாராம பதத்தை ஸ்மரித்த மாத்திரமே அடையவிப்பதாக விருக்கிறது. ஜகன்மாதா, உன்னை ஸதா ஆனந்திக்கும் என் பெருமாள் எனக்குப் புத்தியைப் புகட்டுவதற்கு ஸ்ரீதரனாகவும் ஸ்ரீவத்ஸ மறுவனாகவும் காக்ஷி அளிக்கிறார். உன்னிடம் பக்தி வினயம் நிறைந்தவன் ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிது புதிதாக உண்டாகும் ஐஸ்வர்ய காமப் பொருள்களால் யக்ஞம், ஆராதனம், பூஜை முதலிய கர்மங்களால், ராமகிருஷ்ண அவதாரங்கள் போன்ற பகவானுடைய லீலைகளை ஸ்மரித்துக்கொண்டு, ஸகல அபிஷ்டங்களையும் அடைந்து, துன்பமற்றவனாக, வைகுண்ட பதமாகிற பரமாம் கதிம் என்கிற பதத்தை தாமதமின்றி அடைகிறான். ஹே கோமாதாவே, உனது நிஜ ஆஸ்ரயம் நாராயண திருவடிகளானபடியால், என்னையும் நீ நாராயணப் பிரியனாக ஆக்குகிறாய். ஜயலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, நீயும் பகவானும் ஒன்றாகச் சேர்ந்து, காடோப கூடமாகப் பிரகாசிக்கும் ஐக்ய தத்வம்; ஹே பத்ரே, பத்மோத்பவரான பிரும்ம தேவருடைய பிறந்த ஸ்தலம் காரண பத்மமாக விளங்குகிறது. உங்கள் இருவர்களுடைய அனுக்ரஹமே, பிரும்ம தேவரின் படைப்புத் தொழிலாக விளங்குகிறது. உங்களுடைய வர பிரஸாதமே பிரும்மதேவரைக் காத்து ஆனந்திக்கும் காயத்திரி, ஸாவித்திரி, சரஸ்வதி மந்திரங்கள், ஞான ப்ரபோதகமாக விளங்குகின்றன. உங்களுடைய சேர்க்கை ஸம்பந்தமே, என் தாயே, காரண பத்மத்தின் திக்குக்களாகிய இதழ்களை உடையதாகவும், மஹா மேருவாகிற கனகதரணி என்கிற தாமரைக் கொட்டையை உடைத்ததான ஸர்வ லோகங்களின் ரூபமாகவுமிருக்கிறது.

"ஹே மனஸே, பந்துக்களே, மித்ரர்களே, விஷ்ணு பகவான் உலகங்களைப் படைத்தார். பிரும்மாவைப் படைத்தார். பிரும்மா இன்புறுவதற்கும் காரியங்களைச் செய்வதற்கும் அஹம் பிரத்யய கம்யமான ஜீவனைக் காட்டிலும், அபரம்

என்கிற விஷ்ணு ரூபத்தை, என்னுடைய ஹ்ருதயத்தில் லக்ஷ்மி நாராயணர் இருக்கின்றது போல, எங்கும் பஹிர் முகமாகவும், அந்தர் முகமாகவும் பரப்பினர். பனிக்கொப்பான மாயைகளால் மறைக்கப்பட்ட மனத்தை, தமஸ்ஸை அடைந்த அபாக்ய வான்களை மீட்பதற்காக, நாம ரூபங்களை ஸ்ருஷ்டித்தார். அந்த நாம ரூபங்களில் நாராயண திவ்ய லீலா பதிந்து கிடைக்கின்றது. அந்த திவ்ய லீலைகளைப் புரிந்து கொண்டவன் நாராயணருடைய கிருபையை சாஸ்வதமாக அடைகிருன். ஆகையினால் நீங்கள் மோக்ஷத்தை அளிக்கும் மஹாவிஷ்ணுவினிடத்தில் மோஹத்தை அடையாமல் உங்களைத் திருத்திக்கொண்டு பஜியுங்கள்'' என்று பெருமாள் ஆக்ஞையிட்டார். முகுந்தனுடைய பாதாரவிந்தங்களில் ஆசை வைத்தவன் எல்லாக் கஷ்டங்களையும் தாண்டி மோக்ஷ சுகத்தையும் அடைகிருன். புருஷோத்தம ராமா, சீதா, நீங்களே எங்களுக்குத் தஞ்சம். ஸமஸ்த பரிவாராய ஶ்ரீமதே நாராயணாய நம :]

என் பிரபு ரகோத்தமன் புருஷோத்தம ராமன், தன்னுடைய கைகளில் சார்ங்கம் என்கிற கோதண்டத்தையும் பாண ஸமுஹங்களையும் அழகான அம்புராத் தூணியுடன், வனமாலியாக, சாந்த புத்தியுடன் எனக்கு காக்ஷி அளித்தார். அவருடைய தீர்க்கமான புஜங்கள் புஷ்டி லக்ஷ்மியுடன் சேர்ந்து, காடோபகூடமாகப் பிரகாசித்தன. அவருடைய விசாலகான மார்புவக்ஷ ஸ்தலம் ப்ருகு மஹரிஷியின் பாதத்தை அணிந்து கொண்டதாக, ஶ்ரீவத்ஸ மறுவனுகிற அடையாளத்துடன், பிராமணப் ப்ரியனுகவும் மனோஹரமாகவும் காக்ஷி அளித்தார். [என் ஶ்ரீதரன், ஶ்ரீவிபாவனர், நாராயண ஆத்மா, மஹாலக்ஷ்மியை, ஆஸ்ரித வாத்ஸல்யையை, சரணுகதர்களைக் காப்பாற்றும் தயை ஸ்வரூபிணியாகிற சீதையை மார்பில் தரித்துக் கொண்டிருந்தார். கோமாதா ஸ்வரூபமாக அவள் கீழ்நோக்கிப் பார்த்துக்கொண்டு, அந்த ப்ருகு பதத்தில் மஹா சோபிதையாக பிரகாசித்துக் கொண்டிருந்தாள். என் ஜகதீஸ்வரி, சீதையாகிற ரங்கநாச்சியாரை, அலர்மேல் மங்கையை இறுகத் தழுவிக் கொண்டிருக்கும் காடோபகூடமான சேர்க்கை ஸம்பந்தத்துடன் கூடிய என் பிரபு ஶ்ரீநிவாஸர்,

ஜகத் பரியனுக இன்பக் காக்ஷி அளித்தார்.) அந்த சுந்தரமான காக்ஷியைக் கண்ட என் குருநாதர் துளசிதாஸர் ஆச்சர்யம் தாங்காமல், இன்புற்றுச் சொல்கிருர், "என் பிரபு சரதாப ஹஸ்தனுக, கோதண்டராமனுக, தனுஷ்பாண ஸம்பந்தம் கொண்ட திருக்கரங்களை எந்த மஹானுபாவன் பார்க்கிருனே, எவருடைய அஸ்திர வர்ஷங்களால் சகல பிரும்மாண்டங்களும், பத்துத் திசைகளும், திக்கஜங்களும், ஆதிகூர்மமும், சேஷ பகவானும் ப்ருத்வியாகிற பூமியும், சமுத்திரங்களும், அண்ட கடாஹங்களும், பர்வதங்களும் பயந்து நடுங்குகின்றனவோ, அப்பேர்ப்பட்ட சரதாப ஹஸ்தனைப் பார்க்கும் மஹானுபாவனே மிக மஹா பாக்யவான். பகவான் கோபம் கொண்டு, நிக்ரஹ மூர்த்தியாகப் பரிமளிக்கும்போது, சகல அண்ட கடாஹங்களும் பரபிரும்மத்தை ஆனந்தப்படுத்துவதற்கு தயாராக நின்றனர்."

(536)

[*தியானம்*

ஸ்ரீ நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணுய நம: என்று சொல்லி, உன்னுடன் கூடிய நாரத பிரமுகாதி மஹரிஷி களுக்கும் மஹேந்திரன், சசீதேவி, ருத்தியுடன் கூடிய வைஸ்ரவணன், தூமோர்ணையுடன் கூடிய தர்மராஜன், கௌரி யுடன் கூடிய ஜலேஸ்வரனுகிற வருணன், இதர திக்பாலர்கள், அவருடைய மஹிஷிகள், ஏகாதச ருத்ரர்கள், த்வாதச ஆதித்யர்கள், அஷ்ட வஸுக்கள், நாஸத்யன், தஸ்ரன் என்கிற அஸ்வினி தேவர்கள், காமதேனுவாகிற ஸுரபி, மார்த்தண்டன், விஸ்வே தேவர்கள், ஸௌம்ய ரௌத்திர கணங்கள், அவர்களின் தலைவரான மஹா கணபதியாகிற விஷ்வக்ஸேனர், மாத்ருகா தேவிகளுடன் கூடிய குமரக் கடவுள், ஸர்வ ஸமுத்திரங்கள், ஓஷதிகள், பர்வதங்கள், ஆகாயம், பூமி, இவர்களுடன் கூடிய விராட் ராமனை என் சீதா நாயகனுக நான் பார்க்கிறேன். ஏழு, ஏழு ரிஷிகள் பர்ஷிதர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஒவ்வொரு திக்கிலும் பகவானை நாரதாதி வால்மீகி வேத வ்யாஸரை முன் கொண்டு ஸ்துதி கீதம் செய்து கொண்டிருக்கிருர்கள்.

பகவானுடைய பார்ஷதர்கள் கூடமான ராமதாரக மந்திரத்தை நாராயண ஹ்ருதயத்துடன் சொல்லிக்கொண்டு, அஞ்சலி பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். மஹா நாராயணரின் அம்சரான ஸ்ரீ சீதாராமனை ராஜரிஷிகள், பித்ருக்கள், சாவித்திரி யாகிற நான்கு வேதங்கள், ஸர்வ தீர்த்தங்களுடன் கூடிய கங்கை, காவேரி, வைகை, காளிந்தி, ஸரயு, நந்தா முதலிய ஜலதேவதைகள் அஞ்சலி பந்தம் செய்துகொண்டு, குபேரனை நோக்கி நான் உத்திரதிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதுபோல, அவர்கள் பத்ரை என்று சொல்லப்படும் கிழக்கு திக்கை நோக்கி, சூர்யன், மஹேந்திரன் பிரகாசிக்கும் கிழக்கு திக்கை நோக்கி, பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்திரன் இரவில் நக்ஷத்திரங்கள் கிரஹங்களுடன் கூடி களங்க மில்லாத மனத்துடன் எவ்விதம் பிரகாசிக்கிறானோ, அதைப் போல தங்கள் கஷ்டங்களாகிற காளராத்திரியை விடுவிக்கும் பொருட்டு, அவர்கள் ஸ்துதி செய்கிறார்கள். என் பிரபு ஸ்ரீ ராமசந்திரன் அந்த உத்தம தேவரிஷி, ராஜரிஷி கணங் களுக்கு அதி விடியற்காலையில் தோன்றும் அருணோதய ஸூர் யனைப்போல, க்ரோதமற்ற சிகப்பு நேத்ரங்களுடன், பொறுத்துப் பார்த்தும், ராவணன் தனது பரிவாரங்களுடன் தன்னை வந்து சரணம் அடையவில்லை என்கிற மன ஏமாற்றத்தில் தேய்ந்து போன ஹ்ருதயத்துடன் காக்ஷி அளித்தார். அந்த சமயம் ஸ்ரீ ராம திவாகரன், மஹா லக்ஷ்மியின் விரதத்தையும், அவ ளுடைய அனன்யார்ஹ சேஷத்வத்தையும், அனன்ய சரணத்வம் செய்த சீதையையும் அவளைச் சுற்றி வலம் வரும் சிறைபட்ட தேவ மாதர்களையும், என் பிரபு, சரணாகதவத்ஸலர் ஒரு நிமிஷம் நினைத்துப் பார்த்தார். ஆகாயத்தில் பிரும்ம தேவரைத் தலைமை யாகக் கொண்ட தேவமஹரிஷி கணங்களையும் செந்தாமரைக் கண்களால் கடாக்ஷித்தார். தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தவ ராகவும், சீதையைப்பற்றிய தசரதரின் வசனங்களையும், ஜானகி யின் பரிணயத்தின் போது, ஜனக மஹாராஜரின் உத்தம வசனங்களையும், என் பிரபு, தர்ம கோப்தா, தனஞ்ஜயர், ஸ்ரீராமன் ஒரு கணம் நினைத்துப் பார்த்தார். இனி தாமதித்தால் ஹானி நமக்கல்லவோ நேரிடும் என்று சிந்தித்தவராக, என் பிரபு ஆததாயி, விப்ர பிரியர், சீதாராமன் அஹிம்சை விரதத்தை

அனுஷ்டிக்கும் தர்ம துரந்தரர், தேவர்களுக்கு வாக்குக்கொடுத்த வரதானத்தையும், நினைவுபடுத்திக்கொண்டார். வனத்தில் சஞ்சரிக்கும்போது மஹரிஷிகளால் காண்பிக்கப்பட்ட எலும்புக் குவியல்களையும் நினைவு படுத்திக் கொண்டார். தேவர்களின் வார்த்தையை ஏற்பது போல, என் பிரபு வரதராஜர், சக்தி மதாம் ஸ்ரேஷ்டர், சத்ருக்னர், மஹா வீரர், ராக்ஷஸர்களை அழிப்பதற்கு எடுத்துள்ள அவதார ரஹஸ்யத்தைக் கொண்ட அநயர், வரங்களை அளிக்கும் பிரும்மாதி தேவர்களுக்கும், அவர்களால் அளிக்கப்பட்ட வரங்களுக்கும் வீண் போகாமலும், வரங்கள் பெற்ற ராவணாதிகளும் தம்மிடத்தில் வியாபிக்காமல் போகும்படியிருக்கும் விராமர், காலாந்தகனைப்போல ஜ்வலித் துக்கொண்டு, விளங்கினார். அப்பேற்பட்ட தர்மாத்மாவான ஸ்ரீ ராமனை என் நேயரை நான் அக்னியை புறம் வைத்து நமஸ்கரிககிறேன். என்னை ஸ்ரீ சீதாராம பதத்தில் அழைத்துக் செல்லும் அக்ரரை, தேவர்களை புறம் வைத்து நமஸ்கரிக்கி றேன். தேவர்களும், பிரும்மாவும், சரஸ்வதியும், மஹரிஷிகளும், ராஜ ரிஷிகளும், உத்தம ஸ்லோகர்களான மனிதர்களும் என்னைக் காப்பாற்றட்டும்.]

நான் பகவானாகிற விராட் ராம ஸ்வரூபத்தை எவ்விதம் வர்ணிப்பேன்? பரமசோபிதமாக விருக்கும் என் பிரபு ஸர்வ மோஹன ஜகத்ராமன் தேவதைகளைப் பார்த்து புன்சிரிப்பு செய்தார். தேவ ஸ்ரேஷ்டர்களும், பிரும்ம ருத்ராதிகளைத் தலைவர்களாகக் கொண்டு என் பிரபு கோதண்டராமனை ஸ்துதி கீதம் செய்து கொண்டு, புஷ்பங்களை வர்ஷித்தார்கள். அபார புஷ்ப விருஷ்டியாக அந்த புஷ்பங்கள் உதிர்ந்தன. "ஜய ஜய ஜய கருணாநிதி, ஸ்ரீராமன்" என்று சொல்லும்படி ஸர்வ கல்யாண குணங்களின் மங்களச் சேர்க்கையாக வல்லவா என் பிரபு விளங்கினார். அப்பேற்பட்ட ஜய கோதண்டராம னுக்கு ஜய மங்களங்கள் ஸதா ஏற்படட்டும். என் பிரபு சீதா நாயகருக்கு அடிக்கடி அடிக்கடி ஜயமங்களங்கள் ஏற்படட்டும்" என்று ஜய கோஷங்கள் செய்தார்கள். [மஹாலக்ஷ்மி அம்மா, சீதானே. ஜயலக்ஷ்மி. நீ சேர்ந்துதானே ராமனை ஜயராமனாக செய்கிறாய். உன்னையும் ராமனையும் சேர்ந்து பார்க்கிறவன் என்றும் உங்களுடைய கிருபா கடாக்ஷங்களை அடைகிறான்

அல்லவா? சீதே, ராமா, உங்களை நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.] (537)

இதற்குள் ராக்ஷஸர்கள் அடர்த்தியான மேகக் கூட்டங்களைப் போல திரண்டு வந்தார்கள். அந்த ராக்ஷஸ சேனைகளைப் பார்த்த கபிஸ்ரேஷ்டர்கள் அவர்களை எதிர்கொண்டு யுத்தம் செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் எதிர்த்துப் போராடும் சமயம் பிரளய காலத்தின் மேக வர்ஷங்களின் கூட்டங்களைப்போல பிரகாசித்தார்கள். (538)

அநேக விதமான கத்திகள், வாள்கள், பிரகாசித்தன. அவைகளின் பிரகாசங்கள் பத்துத் திக்குகளிலும் மின்னொளி பிரகாசித்தது மாதிரியிருந்தன. கஜங்கள், ரதங்கள், குதிரைகள், காலாட்படைகள் ஆகியவர்களின் வீர கர்ஜனைகள் பயங்கரமாக கர்ஜிக்கும் மேகக் கூட்டங்களின் கர்ஜனைகளைப் போல மிக்க பயங்கரமாக ஒலித்தன. (539)

வானரக் கூட்டங்களின் அழகானதும் நீண்டதுமான வால்கள் ஆகாயத்தின்மீது உயரக் கிளம்பி அப்பொழுது உதயமான இந்திர தனுஷ் (வானவில்) மாதிரி வளைந்து பல வர்ணங்களுடன் பிரகாசித்தன. இருதரப்பிலும் எற்பட்ட தூசிகளின் கும்பல் சேர்க்கைகள் ஜலதாரைகளைப் போல ஆகாயத்தில் காட்சி அளித்தன. பாண வர்ஷங்கள் அந்த ஜல தாரைகளின் ஜலத் திவலைகளைப் போல பலவிடங்களிலும் போய் விழுந்தன. (540)

இருதரப்புக்களும் பர்வதங்களைப் பெயர்த்துக்கொண்டு ஆயுதங்களாக உபயோகித்தார்கள். அந்த மலைப் பாறைகள் வஜ்ரங்களைப் போலவும் மழைக் காலங்களில் காணப்படும் மின்னொளியைப் போலவும் காக்ஷி அளித்தன. என் பிரபு ஸ்ரீ ரகுபதி கோபம் கொண்டு பாணங்களைப் பூட்டி வர்ஷித்தார். ராக்ஷஸ சேனைகள் அந்த பாண வர்ஷங்களால் மிக்க காயமடைந்தனர். (541)

[*தியானம்*

ஹே ஸமஸ்த பரிவாரயே ஸ்ரீமதே நாராயணாய நம: தேவ தேவா, ஸர்வேசரே, அனந்தரே, அஜரே, அவ்யயரே, லோக

தாமரே, சரணம் சரணம். உம்மை நமஸ்கரித்து அர்ஜுனன், பீஷ்மர், ஆஞ்சநேயர், ராமானுஜன் மாதிரி அடிக்கடி அடிக்கடி நமஸ்கரித்து, பிரதக்ஷணம்செய்து, "ஸ்வாமி நீரே நாராயணன்;" சீதாராமா, நீரே பிரும்மா, நீரே பிணுகிதிருக்; நீரே இந்திரன் அக்னி வாயு, வருணன், ஸவிதா, யமன், வஸுக்கள் மருததுக்கள், ஸாத்யர்கள், விஸ்வே தேவகணங்கள்; ஸ்வாமி, தேவபிரபோ, நீரே அக்ரர்; ஸநாதனர்; பிராணர், ஜ்யேஷ்டர், உம்முடைய சமீபத்தில் வலது மார்பில் மின்னொளி போல கிருபையை வர்ஷித்துக்கொண்டு பரமபாவனமான சீதை, நாராயணி ஆட்சி பீடம் செலுத்திக் கொண்டிருக்கிருள். பிரபோ, எங்களிடம் பிரஸன்னமாக வேண்டும். எங்களுக்கு பரிபூர்ணராக தர்சனம் கொடுக்க வேண்டும். பூர்ணரே, பரமார்த்தம் என்று சொல்லப்படும் ஸ்ரீதாமரே, ஜகந்நாதரே, நீர் பாராபாரம். பராசராதிகளால் பரமாராத்யம் என்று கொண் டாடப்படுகிறீர். ஜகத்தாமரே, ஸர்வகதரே, அச்யுதா, உம் முடைய வசத்தில் பிரும்மா ருத்ராதி தேவாகள் ஸதா இருக் கிருர்கள். நீரே யக்ஞம், வஷட்காரம், ஓங்காரம், பிரஜாபதி, ஸகல வித்யைகள், அறியப்பட வேண்டிய ஹ்ருதிவேதியன். உம்முடைய ஸங்கல்பத்திஞல் அகில ஸ்ரீதேவி மயமாக விருக்கும் சகல ஜகத்தும் நடைபெறுகிறது. ஹே விஷ்ணே, ரெங்கபதி, வேங்கடபதி, பவனபுரபதி, நாரத பிரும்மாதிகளால் ஸ்தோத்திரம் செய்யப்படும் அத்திகிரி அருளாளா, காமாக்ஷி ஆட்சி பீடம் செலுத்தும் வரதராஜா, திருமாலிருஞ் சோலையானே, அழகிய சுந்தர மணவாளா, மஹா சுகத்தை அடைய விரும்பும் என்னிடம் திருஷ்டி கோசரத்தில் ஸதா விளங்கவேண்டும். எனது மஹா மோஹத்தை ஒழிக்க வேண்டும். என்னிடம் பிரஸன்னமான மனத்தை நீர் அடைய வேண்டும். உம்முடைய சக்தி வீர்யத்திஞல் பிருகு மஹரிஷீ முதலியவர்கள் தர்ம ஸ்வரூபியாக நிறுத்தப்படுகிருர்கள். தேவதைகள் அவரவர்களின் ஸ்தானத்தில் நிலைத்து நிற்கிருர்கள். உம்முடைய அமிதமான தேஜஸ்ஸிஞல் ஜகம் நிலை நிறுத்தப்படுகிறது. மஹாலக்ஷ்மி ஸர்வதா ஜயத்துடன் விளங்குகிருள். உங்களுடைய சக்தி தேஜஸ் எப்பொழுதும் விருத்தி ஆகிக்கொண்டு ஸகல புவனங்களுக்கும், உம்மை

அண்டியவர்களுக்கும் மங்களங்களை ஸதா செய்யட்டும். ஓம் நமோ பகவதே மஹா புருஷாய மஹானுபாவாய மஹா விபூத பதயே நம:. ஹே ராமா, சீதாபதே, நீதானே பரபிரும்மம். உன்னுடைய பாதங்களே அக்ஷயமான தத் விஷ்ணோ: பரமம் பதம் என்று சொல்லப்படுகிறது. ஹே பிரபோ, போக்தா ஹவ்ய கவ்யங்களைப் புசிப்பவரே, மஹா நாராயணரே, பக்தர்களால் போக்யம் என்று அனுபவிக்கப்படும் ஆருத அமுதமே, உம்முடைய ஸூக்ஷ்ம ஸ்தூல ரூபங்களுக்கும், நீர் நித்யமாக வசிக்கும் பரம பதத்திற்கும் அநேக கோடி நமஸ்காரங்கள் செய்கிறேன். உம்முடைய பக்தர்கள் புண்யங்கள் பாபங்கள் ஆகிய இரண்டையும் உதறித் தள்ளிவிட்டு, பிரணவம் என்கிற ஓங்காரத்தின் வழியாக உம்முடைய சரணார விந்தங்களை ஸதா சிந்தனை செய்து கொண்டிருக்கிறார்கள். பரமேசரே, உம்முடைய திவ்யமான தத் விஷ்ணோ: பதம் தேவகணங்களாலும், முனிகணங்களாலும் பகவான் சங்கராலும் பராசராதி மஹரிஷிகளாலும் சரியாக அறியப்படுகிறதில்லை. அவ்விதம் அவர்கள் அறிந்திருந்தாலும், அது விவரிக்க முடியாதபடி மகிமைகள் பொருந்தியிருக்கின்றது. உம்முடைய சக்தியானது பிரும்ம, விஷ்ணு, சிவாத்மிகமாக விருக்கிறபடியால், நாராயண பதம் திவ்யமாக கருதப்படுகிறது. ஸர்வேசரே, ஸர்வ பூதாத்மன், அச்யுதா, விஷ்ணோ, உம்மை விட்டு கன்று தனது தாயைத் தேடுமோ, தாய் பசு தனது வத்ஸத்தைத் தேடுவதைப் போல, ஆய்ச்சியர்கள் கண்ணனை எவ்விதம் தேடுவார்களோ, எவ்விதம் நான் சடகோபன் மாறனைத் தேடித் திரிகிறேனோ, அதுபோல ராமா சீதா, உன்னை அல்லவா உன் தொண்டர்களான தேவர்கள் ஸதா தேடிக் கொண்டிருக்கிறார்கள். என் சீதாநாயகா, உலகை உண்டு உமிழ்ந்த தாமோதரா, பாலகிருஷ்ணா, உனது அடியிணைகளை நான் எப்போதும் ஸ்ரீவத்ஸ மறுவனுகிற உன்னைப் போலத் தரித்துக் கொண்டு இருக்கிறேன்.]

கோதண்டராமனால் விடப்பட்ட பாண வர்ஷங்கள் பெரும் சப்தத்துடன் எழும்பிக்கொண்டு, வழியில் உள்ள எல்லா பதார்த்தங்களையும் முழுங்கிக் கொண்டு பூமியில் விழுந்த வண்ணமாக விருந்தன; ராக்ஷஸ வீரர்களின் மார்பு

பிரதேசங்களை அடித்து அவர்களை கீழே அடித்துத் தள்ளின. மலையைப் போலவிருக்கும் அவர்களுடைய சரீரங்களிலிருந்து ரத்தம் பெருகிய வண்ணமிருந்தது. ரத்த பிரவாஹங்கள் மலைகளின் அருவிகளைப் போலப் பெருகி ஓடி வழிந்தன. அவைகளைக் கண்டு கோழைகள் மிக்க பயமடைந்து போனார்கள். (542)

கோழைகளின் பயம், அபவித்திரமானதும், வெள்ளப் பெருக்கைப் போல பிரவாஹத்தைக் கண்டதும் இன்னும் அதிகரித்தது. அந்த ரத்த பிரவாஹத்திற்கு இரு தரப்பு சைன்யங்களும் இரு கரைகளைப் போல விளங்கின. ரதங்கள், மணல் திட்டுக்களைப் போலவும். ரதங்களின் சக்கிரங்கள் ரத்த பிரவாஹத்தின் நீர் சுழல்களைப் போலவுமிருந்தன. கஜங்கள், காலாட்படைகள், குதிரைகள் இன்னும் கணக்கற்ற சவாரிகள் அந்த பிரவாஹத்தில் வசிக்கும் ஜல ஜந்துகளைப் போலவும்; பாணங்கள், சக்தி ஆயுதங்கள், தோமரங்கள், ஸர்ப்பங்களைப் போலவும், தனுஷ்கள் அலைகளைப் போலவும், கேடயங்கள் ஆமைகளின் முதுகுகளின் ஓடுகளைப் போலவும் காக்ஷி யளித்தன. (543)

அந்த ரத்த பிரவாஹத்தில் வீரர்கள், விருக்ஷங்கள் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டவர்களைப் போல, அடிபட்டுக்கொண்டு போகப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் எலும்பும், மஜ்ஜைகளும், வெள்ளத்தின் துறைகளைப் போல மிதந்துகொண்டு போய்க்கொண்டிருந்தன. கோழைகளின் மனம் அவைகளைக் கண்டு வெடித்துப்போவது போலவும்; உத்தம மனிதர்கள் அதை "தர்மத்தின் விஜயம்" என்று சிலாகிக்கும்படி அந்த ரத்த பிரவாஹம் காக்ஷி அளித்தது. (544)

பூதங்களும், பிசாசங்களும், வேதாளங்களும் மிக்க பயங்கரமான கேசபாசங்களை உடைய கொள்ளுவாய் பிசாசுகளும், சிவ பெருமானுடைய பிரதம கணங்களும் ஆனந்தம் கொண்டு அந்த ரத்த பிரவாஹத்தில் ஸ்நானம் செய்வது மாதிரி மூழ்கி எழுந்தார்கள். காக்கைகள், கழுகுகள் புஜங்களை எடுத்துக்கொண்டு பறந்தன. கொடூர நெஞ்சமுள்ள அவைகள் ஒன்றை மற்றொன்றிலிருந்து பிடுங்கிக்கொண்டு சண்டை செய்ய ஆரம்

பித்தன. (545)

சில பேர்கள் சொல்லிக் கொண்டார்கள், "அடே மூர்க்கர்களே, இவ்வித சௌபாக்ய வ்ருத்திகளுடன் விளங்கும் போது கூடவா, உங்களுக்கு ஏன் தரித்திரம்? அது எவ்விதம் வந்தது?" காயமடைந்த வீரர்கள் அந்த பிரவாஹத்தில் விழுந்து அவதிப்படுவதைப்பார்த்தால், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் மரித்துபபோன ஜனங்கள் பாதி சரீரம் பிரவாஹத்திலும், மீதிப் பாதி சரீரம் கரையிலும் கிடந்து தவிப்பார்களே, அதைப்போல அவஸ்தைகளுக்கு உட்பட்டுக் கிடந்தார்கள்." (546)

அந்த பிரவாஹத்தின் இரு கரைகளிலும் கழுகுகள் மரித்துப்போன உடல்களிலிருந்து ஈரல்களை உருவி அவைகளைக் கிழிப்பதைப் பார்த்தால், நதியின் இரு கரைகளிலும் செம்படவர்கள் மிக்கத் தியானத்துடன் மீன்களைப் பிடிப்பது போல காக்ஷி அளித்தன. ரத்த பிரவாஹத்தில் மிதந்து ஓடி வரும் மரித்த சரீரங்களின் மேல் பக்ஷிகள் வேடிக்கையாக உட்கார்ந்து கொண்டு நதியின் வெள்ளத்தில் தெப்பம் ஓட்டுபவர்களைப் போல காக்ஷி அளித்தன. (547)

யோகினிகள் என்று சொல்லப்படும் துர்க்கையாகிற திரிபுர சுந்தரியின் படர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் மண்டை ஓட்டுக்களில் ரத்தத்தை நிறப்பிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சில பூத பிசாசங்கள் ஆகாயத்தில் நர்த்தனம் செய்து கொண்டு களித்தன. அதற்கேற்ப, சாமுண்டா தேவியின் ஸ்திரி பக்தர்கள் கைகளால் தாளங்கள் போட்டுக்கொண்டு ஆரவாரம் செய்துகொண்டு களித்தன. அவர்களில் சிலர் நானா பிரகாரம் கீதம் பாடினார்கள். (548)

நரிகள் மரித்த உடல்களை தங்களுடைய பற்களால் கடிக்கும் போது கட்கட் என்று சத்தம் செய்தன. அந்த பூத உடல்களைச் சாப்பிடும்போது அவைகளுக்கு ஏற்பட்ட மஹத்தான சந்தோஷம் விவரிக்க முடியாதபடி யிருந்தது. அந்த சந்தோஷத்தினால் பயங்கரமாக ஊளையிட்டன. ஒன்றையொன்று பயங்கரமாக முழித்துப் பார்த்தன. கோடிக்கணக்கான முண்டங்கள் யுத்த களத்தில் ஓடித் திரிந்தன. பூமியில் கிடக்கும் தலைகள் மாத்திரம் இருக்கும் உடல்கள் ஜய, ஜய என்று

கோஷித்தன. (549)

முண்டங்களின் ஜய கோஷங்களைக் கேட்டதும் தலையில்லாத முண்டங்கள் அவைகளை நோக்கி வெகு வேகமாக ஓடிப்பாய்ந்தன. அந்த முண்டங்களில் உட்கார்ந்திருந்த பக்ஷிகள் ஒன்றையொன்று எதிர்த்து, பெரிய யுத்த வீரர்களைப் போல, பரஸ்பரம் யுத்தம் செய்தன. பலம் கொண்ட வீரர்கள் மற்றவர்களை அழித்தன. மஹா பாஹு பலம் கொண்ட வானர வீரர்கள் ராக்ஷஸர்களை நன்றாக யுத்தத்தில மர்த்தனம் செய்து, பூமியில் கீழே தள்ளினார்கள். ஸ்ரீ ராமனுடைய பலத்தில் அவர்கள் தர்ப்பணம் செய்யப் பட்டவர்களைப் போல காக்ஷி அளித்தார்கள். வானர வீரர்களால் அடிபட்டு, ஸ்ரீ ராம பாணங்களினால் முழுதும் கொல்லப்பட்டு, அந்த ராக்ஷஸ வீரர்கள் ரண களத்தில் உயிரை யிழந்து விழுந்தார்கள். (550)

ராவணனுடைய ஹ்ருதயத்தில் ராக்ஷஸர்களின் பெரும் அழிவைக் கண்டதும் பெரும் பயம் ஏற்பட்டது. அவன் எண்ணத் தொடங்கினான்: "நானே ஒருவனாக உயிருடன் விடுபட்டு சண்டை செய்கிறேன். வானரங்களும், கரடிகளும் உயிருடன் அநேகப் பேர்களாக சண்டை போடுவதைப் பார்க்கிறேன். இது என்ன அபாரமான மாயையாக விருக்கிறது." (551)

தேவர்கள் பிரபு ஸ்ரீராமசந்திரன் ஒருவித வாஹனமுமின்றி, வெறும் கால்களுடன் யுத்தம் செய்வதைக் கண்டார்கள். அந்தக் காக்ஷியைக் கண்டதும் அவர்களுக்கு அதிகமான லஜ்ஜையும் துக்கமும் ஏற்பட்டது. தேவர்களுக்குப் பதியான மஹேந்திரன் உடனே தனது சாரதியான மாதலியை அனுப்பினான். மாதலியும் அதி சந்தோஷத்துடன் குதிரைகள் பூட்டிய இந்திரனுடைய ரதத்துடன் யுத்த பூமிக்கு ஓடிவந்தான். (அப்பேர்ப்பட்ட மாதலிக்கு இந்திரன், நாரதரை முன்னிட்டு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். அவர்கள் ஸதா எனக்கு மங்களங்களையும், ஆனந்தங்களையும் கொடுப்பார்களாக.) (552)

[தியானம்

நாராயணு, மஹாலக்ஷ்மியே, சீதாராமா, உங்களை சரண மடைந்து ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். ஸமஸ்த பரிவா ராய ஸ்ரீமதே நாராயணுய நம : நீங்கள்தானே என் பாபங்களைப் போக்கும் மஹா தீர்த்தங்கள். கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, பிரபாஸம், கயை போன்ற மஹா தீர்த்தங்களாகவும், பாப பயங்களைப் போக்கும் மஹா சமுத்திரங்களாகவும், மஹா பர்வதங்களாகவுமிருக்கிறீர்கள். ஹே பிரபோ, நீங்கள்தான் ராஜ ரிஷிகள் அனுஷ்டிக்கும் ராஜ தர்மமாகவும், தேவ ரிஷிகள் பிரும்ம ரிஷிகள் ஆராதிக்கும் ஸநாதன பிரும்மமாகவும், நான்கு திக்குக்களிலும் பர்ஹிஷதர்கள் என்று சொல்லப்படும் திக்பாலர் களின் ஆசாரியர்களாகவுமிருக்கிறீர்கள். நரநாராயண ரிஷி களைப் போலவிருக்கும் ராமா லக்ஷ்மணு, சீதா பிரபோ, சரணம் சரணம். பித்ரு தேவதைகளான விஸ்வேதேவர்களாகவும், ஸ்வதாவாகவுமிருக்கிறீர்கள். தக்ஷிணுயண வழியாகவும், உத்திராயணமாகவும், அர்ச்சராதி மார்க்கமாகவுமிருக்கிறீர்கள். உங்களைத் தஞ்சம் அடைந்திருக்கும் எங்களை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.]

மாதலி ஓட்டி வந்த மஹேந்திரனுடைய ரதம் தேஜோமய மாகவும், உத்தமமான திவ்ய ஸம்பத்துக்களுடன் உவமையற்ற தாகவும் விளங்கியது. என் பிரபு கோஸல தேசத்தின் அதிபர் ஸ்ரீராமசந்திரன் மிக்க சந்தோஷம் கொண்டு அதில் ஏறினுர். படபடப்புடன் அதி லாகவமாக துள்ளி ஓடும் குதிரைகள் நான்கு அந்த ரதத்தில் பூட்டப்பட்டிருந்தன. அந்த நான்கு பச்சைக் குதிரைகளும் புஷ்டியுள்ளதாயும், மிக்க யௌவனமாகவும் அமரத்வம் வாய்ந்ததாகவும், மனத்தின் கதியைப்போல வெகு வேகமாகச் செல்லக்கூடியதாகவுமிருந்தன. (553)

பகவான் ராமசந்திரன் ரதத்தில் விற்றிருப்பதைக் கண்டு, வானரங்கள் வெகு சீக்கிரமாக அதிபலத்துடன் உதஸாஹமும் கொண்டு, ''ரகுநாதனுக்கு ஜய மங்களங்கள் ஏற்படட்டும்,'' என்று உரக்க கோஷித்தார்கள். ராவணனும் அதைப் பார்த்ததும் தன்மீது ஓடிப் பாய்ந்து வரும் வானர கரடி வீரர்களைச் சுலப மாகக் கொல்ல முடியாது என்று கவலைகொண்டு மாயையைப் பிரயோகித்தான். (554)

அவனுடைய மாயை ரகுவீரனைப் பாதிக்கவில்லை. ஆனால் லக்ஷ்மணன் அந்த மாயைக்கு வசப்பட்டவனைப்போல அதை கௌரவம் செய்தான், வானரங்கள் எங்கு பார்த்தாலும் ராக்ஷஸ கும்பல்களாகவும், தம்பியுடன்கூட கோஸலாதிபதியான ஸ்ரீ ராமசந்திரனையும், அநேக ராம லக்ஷ்மணர்களாகப் பார்த்தார்கள். (555)

எங்கு பார்த்தாலும் ராம லக்ஷ்மணர்களைக் கண்ட வானர கரடி சைன்யங்கள் மனத்திற்குள் பயம்கொண்டார்கள். அந்த இரு சகோதரர்களான ராம லக்ஷ்மணர்கள் சித்திரத்தில் எழுதிய பொம்மைகள்மாதிரி எல்லாவற்றையும் பார்ப்பது போலவும் கண்டார்கள். வானரர்களின் ஆச்சரிய நிலையைக் கண்ட என் பிரபு (சுதமாயர், மாயாக்ரீடர் மோஹமஹாரி,) ஸ்ரீ ராமசந்திரன், தனது கைகளில் கோதண்டத்தையும் பாணத்தையும் தரித்துக் கொண்டிருக்கும் ஜகன் மோஹன ராமன் சிரித்துக்கொண்டு, ஒரு நிமிஷத்தில் ராவணனுடைய மாயைகளை அழித்தார். ஹரிபகவான், பக்தர்களின் இடையூறுகளைப் போக்கும் கிருபாளு, ஸர்வேஸ்வரர் மாயையை அழித்தபின்பு, ஸகலவானரங்களும் சந்தோஷத்துடன் பிரபுவுக்கு கிருதக்ஞை செலுத்தினார்கள். (556)

மஹாபாஹு பலமுள்ள என் கோதண்டராமன் நம்பிக்கையைத் தரும் கம்பீரமான வசனங்களால் வானரங்களையும் கரடிகளையும் பார்த்துச் சொன்னார். "வீரர்களே, நீங்கள் எல்லோரும் கவலையினாலும், யுத்தங்களில் செய்யப்பட்ட பராக்ரமச் செய்கைகளாலும் களைப்புற்றிருக்கிறீர்கள், இதனால் நீங்கள் சிரமப்ரிஹாரம் செய்துகொண்டு, இப்போது நடக்கப் போகும் ராமராவண யுத்தமாகிற த்வந்த யுத்தத்தைப் பாருங்கள்." (557)

[*தியானம்*

நாராயண, மஹாலக்ஷ்மி அம்சரான ராமா சீதா, உங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் வால்மீகி, நாரத வியாஸாதிகளை முன்னிட்டுச் செய்கிறேன், தேவதேவரே, கோதண்ட ராமனே, உன் கோபம் சமனம் அடையட்டும். திரிபுராந்தகரே, எனது குருவும், ஆசார்யரான துளசிதாஸரால்

காணப்பட்ட திரியக்ஷரே, நீ ராவணனிடம் யுத்தம் செய்யப் போவதாகச் சொன்னுயே? நிஜமாகவே உன்னுடைய பாஹுபலத்தைக் காண்பித்து, "நான் ஸர்வ ஜீவராசிகளிலும் மிக்க உயர்ந்த வீரன்," என்று பறைசாற்றிக்கொள்ளவா ? யுத்தம் செய்தாய்? இல்லவே இல்லை, உம்முடைய கருணை நிறம்பிய விழிக்ளில் ஏது அப்பா கோபம், கிரோதம், லோபம்? சீதையை மீண்டும் அடைவதற்காகப் போர் புரிந்தாயோ? நீ ஒரு காமி, ஸ்திரிலோலன் என்று உன்னை நாங்கள் நினைப்பதற்காகவா? அதுவும் இல்லை. தேவர்களைப் பார்த்துச் சொன்னுயே—அது உன்னை பக்த பராதீனன், சரணுகத வத்ஸலன் என்று வேதங்களில் சொல்லப்பட்ட வசனங்களை ஊர்ஜிதம் செய்கின்றனவே. உன் சீதை யார்? எதற்கு நீ எவ்வளவு பிரயாசைப் பட்டாய் என்று விசாரித்துப் பார்த்தால், அவள்தானே சாந்த பரமேஸ்வரி, தயா மஹேஸ்வரி; அவள் உன்னிடம் இருந்தால்தானே, நீயும் சாந்தனுகவும், தயையுடன் கூடிய மஹேஸ்வரராகவும் விளங்கலாம். முனிவேஷதரராமா, உனது மனம் தர்மம் என்கிற வியவஸ்தையில் ஈடுபட்டிருக்கும்போது, உன்னை தயை என்கிற காருண்யம் வந்து அடைகிறதில்லை என்று வாதித்தாலும் தப்பு. தர்மத்தின் சூக்ஷ்மம் பிறர்களுக்கு ஹிதம் செய்வதுதானே. பிறர்களுக்காக வாழ்ந்தரகுகுலராமா, உன்னுடைய முன்னோர்களான இக்ஷ்வாகு குலப் பெருமைகளை உயரத்தூக்கி, மேல்வைத்து, சிரோண்மணியாக விளங்கும் தானதர்ம துரந்தரனே, ராவணனையும் ஜயித்து, லங்கா ராஜ்யத்தை விபீஷணனுக்கும், புஷ்பக விமானத்தை குபேரனுக்கும், திரைலோக்ய லக்ஷ்மியை மஹேந்திரனுக்கும் கொடுத்த தான தர்மத்வஜரே, உனக்கு ராஜ்யத்தில் ஆசை இல்லை என்று முதலில் பரதனுக்கும், இரண்டாவது தடவை சுக்ரீவனுக்கும், மூன்ருவது தடவை விபீஷணனுக்கும் கொடுத்தாயே, அந்த சுத்தஸத்வமான குணம் கங்கையைப் பூமிக்குக் கொடுத்த பகீரதனுடைய பெருஞ் செயலைப்போல அல்லவா மஹத்தாக விருக்கிறது. உனது ராமநாமம் கங்கையைப்போல பரம பாவனமாக விருக்கிறது. உனது ராஜதர்மம் லோக மரியாதையைக் காப்பதாகவு மிருக்கிறது. சீதையிடம் நீ காண்பித்த உத்தம

ப்ரேமை கிருஹஸ்த தர்மத்தில் உனக்குள்ள பற்றுதலைக் காண் பிக்கிறது. ராவண ஸம்ஹாரம், ஆஸ்ரம தர்மங்களை பரிபாலனம் செய்வதாக விருக்கிறது. ஸாதுக்களின் தர்மங் களையும் போஷிப்பதாகவு மிருக்கிறது. ஹே லக்ஷ்மணுசஹித் கோதண்டராமா, உன்னுடைய பலம், வீரியம் நாராயண ஸந்நிதியிலிருக்கும் கருடனைப்போல தர்ம பராயணமாக விருக்கிறது. அந்த தர்மமும் தயாரூபியான சீதையிடம் ஸம்பந்தம் பெற்றிருக்கிறது, அப்பேர்பட்ட ராம லக்ஷ்மண சீதைக்கு நான் நாரதரை முன்னிட்டு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.]

என் பிரபு கோதண்டராமன் இவ்விதம் சொல்லிவிட்டு பிராம்மண சரணங்களை சுக்ருத நமஸ்காரங்கள் செய்து, அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுர். பூலோக தெய் வங்களான விப்ரர்கள் பகவானைப் பல்லாண்டு, பல்லாண்டு சொல்லி மங்களா சாஸனம் செய்தார்கள். அதைக்கண்ட ராவணன் க்ரோத மூர்ச்சிதனுக கர்ஜனை செய்துகொண்டு ஆரவாரத்துடன் ஸ்ரீ சீதாராமனை நோக்கி ஓடி வந்தான். (558).

ராவணன் பிரபுவைப் பார்த்துச் சொன்னுன். "தபஸ்வி, (புத்தி, மனம், இந்திரியங்கள், பிராணன்யாவற்றையும் காயத்திரி மந்திரத்திற்கு அர்ப்பணம் செய்த இக்ஷ்வாகு குலராமா,) நன்ருய்க் கேள். ஜயத்தை விரும்பி நீ யாரிடம் யுத்தத்தைச் செய்கிருய் ? என்பதைத் தெரிந்துகொள், என்னையும் சாதாரண யுத்த வீரன் என்று நினைத்துக் கொள்ளாதே. உன்னுல் இதுவரை வெல்லப்பட்ட வீரர்களுக்குச் சமமான வீரன் என்று என்னையும் நினைத்து ஏமாருதே, என்னை ஜயிப்பது மிக்க கடினம். என் பெயரைக் கேட்டாலே, ஜகம் முழுவதும் நடுங்கும். நான் "ராவணன்" என்கிற பெயரைக்கொண்டவன். என்னுடைய நாமத்தின் புகழ் ஸகல ஜகம் முழுவதிலும் பரவி யிருக்கிறது, என்னுல் லோகபாலர்கள் அனைவர்களும் கைதிகளாக ஆக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைபட்டிருக் கிருர்கள், என்பதை நீ அறிவாயா? (559)

"வாஸ்தவம்தான், எனக்குச் சமமான பலம் தேஜஸ் கொண்ட கரதூஷண, விராதர்களை நீ கொன்றிருக்கிருய், மேலும் வேடவேஷம் பூண்டு மறைந்துகொண்டு, மிருகங்களை

வேட்டை ஆடுவதுபோல, நீ நாதனற்ற வாலியை வதம் செய்திருக்கிறாய், என்னுடைய ராக்ஷஸ சைன்யத்தில் மிக்க பிரஸித்திபெற்ற யுத்த வீரர்களையும், ராக்ஷஸ ஸமூஹங்களையும் நீ பாழ்படுத்தி யிருக்கிறாய். மஹாபாஹு பலம்கொண்ட கும்பகர்ணனையும், சிறந்த வரங்களைப்பெற்ற என் புத்ரனாகிற மேகநாதனையும் நீ கொன்று விட்டிருக்கிறாய்.'' (560)

"அடே மானிட தபஸ்வியைப்போலவும், ராஜரிஷியைப் போலவும், வேஷம் தரித்த கள்ளனே, நீ என்னுடன் யுத்தம் செய்ய விரும்புகிறாய்! நான் யுத்தகளத்தில் ஒருவனையும் உயிருடன் ஓட விடமாட்டேன், அதிலும் உன்னால் பரம அபகாரம் அடைந்தபின் நான் இன்று எனது வைரம் முழுவதையும் காண்பித்து, உன்னிடம் சண்டை செய்யப் போகிறேன். இன்று நான் உன்னை ம்ருத்யுவினிடம் ஒப்பிவிக்கப் போகிறேன். எனது பெயருக்கு ஏற்ப, நான் கடினமான ஸங்கல்பத்தைக் கொண்ட ராவணன் என்று தெரிந்துகொள்.'' (561)

பிரபு ராவணனுடைய துர்வசனங்களைக் கேட்டார். (அவருடைய மனம் கருணையினால் தேய்ந்து போய்விட்டிருந்தது. காரியமும் கர்த்தாவும் முன் வினைகளால் சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொருவனுக்கும் தன் தன் வினைகளே இலக்கணம். நிழலும் வெயிலும்போல, கர்மமும் காலமும் ஒன்று சேர்ந்துள்ளது. மூவுலகங்களும் தம் கர்மங்களில் சார்ந்திருப்பவை என்று அறிந்த) என் பிரபு ஸ்ரீ ராமசந்திரன் சிரித்துக்கொண்டு வசனங்களைச் சொன்னார். "ஆமாம், நீ சொல்லும் பிரபுத்வங்களும், வைபவங்களும் சத்யமான வைதான், (அவைகள் முற்றிலும் உண்மையானவை) இப்பொழுது நீ வியர்த்தமாகப் பேச்சு வார்த்தைகளைச்சொல்லாதே. அவைகளை காரியத்தில் காண்பி. அதனால் நீ புருஷார்த்தத்தை அடையலாம்.'' (562)

"ராவணா, வீண் தர்க்கவாதம் செய்துகொண்டு, உன் சுந்தரமான கீர்த்தி புகழ்களை வியர்த்தமாக்கிக் கொள்ளாதே. க்ஷமைகொண்டு, நான் சொல்லும் வசனங்களைக்கேள். இந்த ஸம்சாரத்தில் மூன்றுவிதமான புருஷர்கள் இருக்கிறார்கள். பாடல் (ரோஜா) புஷ்பம் மாதிரியாகவும்; மாமரம்போலவும்;

பனஸம்போலவும் அவர்கள் இருக்கிறார்கள், ரோஜாச் செடி அழகான புஷ்பத்தை பிறர்களின் நன்மைக்காகக் கொடுக்கிறது. ஆனால் காய்க்கிறதில்லை. மாமரம் மாம்பூவையும் சுவையுள்ள மாம்பழத்தையும் கொடுக்கிறது. பலாமரம் பலாப்பழம் ஒன்றையே பிறர்களுக்காகக் கொடுக்கிறது. சிலர் வாய்வீச்சு உள்ளவர்களாக காரியத்தில் ஒன்றையும் செய்வதில்லை; இன்னும் சிலர் தாங்கள் சொல்வதைக் காரிய சாமர்த்தியத்தில் நிறைவேற்றுபவர்களாகவுமிருக்கிறார்கள்; இன்னும் சிலர் காரியத்தில் கண்ணும் கருத்துமாக விருப்பவர்கள், அவர்கள் பேசுகிறவர்களுமில்லை; பேச்சுக்களினால் திருப்தி அடைகிறார்களில்லை. (563)

[*தியானம்*

நாராயணா, சீதா பிரபோ, ராமா, கோதண்டராமா, பட்டாபி ராமா, ஸமஸ்த பரிபாராய ஸ்ரீமதே ராமாய நம:, ஸ்ரீமந் நாராயணஸ்ய சரணென சரணம் பிரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம; ராமா. நீ எதற்காக ராவணனோடு யுத்தம் புரியும்போது, மாதலியின் தேரில் அமர்ந்தாய்? நீ ஸர்வ ஸ்வாமித்வம் கொண்டதை ராவணனுக்கும் எனக்கும் விளக்குவதற்காகவா? ராவணனுடன் போர் புரிந்தும், உன்னை ஏன் ஜிதக்ரோதர் என்று சொல்லுகிறார்கள்? ராமா, நீ ராவணனுடைய காமத்தையும் கிரோதத்தையும் அழித்தவர். ராவணகும்பகர்ண, மேகநாதன் மற்றும் இதர ராக்ஷஸர்களையும் அழித்து, வேத மரியாதைகளையும் லோக மரியாதைகளையும் காப்பதற்காகவேயன்றி, உன் மனைவி சீதையை அபஹரித்ததால் யேற்பட்ட உனது கோபத்தைக் காட்டுவதற்கல்ல. அப்போது உனக்கு ஏது கோபம் இருக்கக்கூடும்? உன்னை சரணம் அடைந்த கஜேந்திரனைக் காப்பாற்றிய சமயம், நீ முதலைக்கும் அதன்மேல் கோபம் வைக்காமல், நற்கதியைக் கொடுத்தாய். அது மாத்திரமா, மானிடராக நீ பிறந்து நாடகம் ஆடிய போதிலும், உனது அசாதாரணச் செய்கைகளால் ராவணனுக்குப் பலதடவைகள் உனது பரத்வத்தைக் காண்பித்து, உன்னுடைய ஸர்வ ஸ்வாமித்வத்தையும் நிலைநாட்டி, அவன் உன்னை வந்து அடையாமலிருந்த விரோதிகளான அஹங்

காரம், மமகாரம், காமக்ரோதங்கள் ஆகிய எல்லாப் பகைகளேயும் ஜயித்தாய். ஹே பிரபோ, சீதா நாயகா, அதனுல் உன்னே ஜிதமன்யு, ஜிதாமித்ரர், லோகபந்து, ஸமதர்சனர், ஜநேஸ்வரர், க்ஷமிணும்வரர் என்று பல நாமாக்களால் வியாஸர் புகழ்கிருர். அப்பேற்பட்ட சீதாராமன் என்னேயும் கருணேயுடன் காப்பாராக.]

ஸ்ரீராமனின் வசனங்கள் அர்த்த புஷ்டியுடன் விளங்கினதைக் கண்டு, நேரில் கேட்ட ராவணன் தனக்குள்ளும், பிற்பாடு பஹிரங்கமாகவும் சிரித்துக் கொண்டான். "பெரிய ஞானியைப் போல என்னிடம் நீ பேசுகிருய். [ராமா, அந்த சமயமும் விருப்பு வெறுப்பின்றி ஸமதர்சனம் உள்ளவனேப் போல நீ தோன்றுகிருய்.] ஆனுல் உனக்கு வைரம் இருக்கிற படியால்தான் அல்லவா நீ இப்போது என்னுடன் போர் புரிய வந்திருக்கிருய். உனக்கு வாஸ்தவத்தில் ஸமபுத்தி இருக்குமாளுல், இதற்கு முன் கோபப்படாத நீ இப்பொழுது என்னிடம் யுத்தம் செய்வதற்கு ஏன் வருகிருய்? இப்பொழுதே உன் உயிரை உன் கையில் பிடித்துக்கொள். பிரியமாகவும், அமைதியாகவும் போய் வாழ்ந்து வா," என்று ராவணன் சொன்னுன். (564)

அவ்விதம் சொல்லிக்கொண்டு ராவணன் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்கிற கொடிய எண்ணம் கொண்டவனுக, மீண்டும் கடும் துர்வசனங்களேச் சொல்லிக்கொண்டு, க்ரோத வசமடைந்தவனுக, வஜ்ரத்துக்குச் சமமான பாணங்களே ரகுநந்தனின் மீது வர்ஷித்தான். அநேக பிரகாரம் பாணங்களேப் பூட்டி பல திசைகளிலும் அவைகளேப் பிரயோகித்து, அவன் பூமியிலிருந்து ஆகாயம் வரை பாணங்களால் ரகுநந்தனே மூடிவிட்டான். (565)

என் பிரபு ரகுவீரன் அக்னியாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அந்த அஸ்திர வீர்யத்தினுல் ராவணனுடைய சகல பாணங்களும் ஒரே க்ஷணத்தில் அழிந்துவிட்டன. அதன் பிறகு ராவணன் தீக்ஷணமான சக்தி ஆயுதத்தைப் பிரயோகித்தான். ஸ்ரீராமசந்திர பிரபு அதை ஒரு க்ஷணத்தில் பங்கப்படுத்தி, அதை அவனிடமே திரும்பிச் செல்லும்படி அனுப்பிவிட்டார். (566)

ராவணன் கோடிக்கணக்கான சக்ராயுதங்களையும் திரி சூலங்களையும் பிரயோகித்தான். என் பிரபு கோதண்டதன்வீ ஒருவித பிரயாசையுமின்றி அவைகளை அழித்துவிட்டார். ராவணனுடைய வீர்யம் கொண்ட ஒவ்வொரு அஸ்திரமும் அழிவதைப் பார்த்து என் பிரபு துளசிதாஸர் சொல்லுகிறார். "எவ்விதம் துஷ்டர்களுடைய விபரீத மனோரதங்கள் பூர்த்தி அடையும்? அவைகள் அழிய வேண்டியவைதானே. அவைகள் அவர்களையும் அழித்துவிடுமே." (567)

ராவணன் அதி கோபமடைந்தான். நூறு பாணங்களால் அவன் ஸ்ரீராமனுடைய சாரதியான மாதலியை அடித்தான். அவன் பூமியில் விழும்போது, "ஸ்ரீராமனுக்கு ஜயங்கள் ஏற்பட வேண்டும்," என்று பிரார்த்தித்துக் கொண்டு கீழே விழுந்தான். அப்பொழுது ராம கிருபாளு, உடனே ஓடிப் போய் தன் சாரதியைத் தூக்கி எழுப்பினார். ஸ்ரீராமனுக்கு கோபம் ஜ்வலிக்க, அக்னியைப் போல அவர் க்ரோதம் கொண்டார். (568)

[*தியானம்*

நாராயணா, ஸ்ரீ ராமா, ஓம் நமோ பகவதே மஹா புருஷாய மஹானுபாவாய மஹா விபூதி பதயே நம:. நாரதப் பிரியரே, நமஸ்காரம். உன்னைக் கிருதாக்ருதர் புருஷோத்தமர் என்று ஏன் சொல்லுகிறார்கள்? நீ ராவண னுடன் யுத்தம் செய்ய விரும்பும்போது, உன் மனதில் என்ன எண்ணங்கள் இருந்தன? தயவு செய்து சொல் அப்பா. உன் ஸ்வரூப ஸ்வபாவங்களை முழுதும் அறிய விரும்புகிறேன். பொறுமையைக் கடைப்பிடித்து, பொறுமையே பிம்பமாக விளங்கும் சீதையைக்கூட தினரவைத்து விட்டாயே. உன் பொறுமைக்கும், யுத்தம் செய்வதற்கும் உள்ள ஸம்பந்தம் யாது? உன்னை லோகாத்யக்ஷர், ஸுராத்யக்ஷர், தர்மாத்யக்ஷர் என்று சொல்லுகிறாரே வேத வியாஸ பகவான், க்ஷமிணாம் வரர் என்றும் அவர் சொல்லுகிறார். என்ன சின்னங்கள் அடையா ளங்கள் உனக்கு உண்டு?]

யுத்தத்தில் தனக்கு நிகரற்றவரும், சத்ருக்களைப் பீடிப்பவருமான என் பிரபு கோதண்டராமன் க்ரோத

மடைந்தார். இடுப்பைச் சரிப்படுத்திக்கொண்டு, யுத்த ஸன்முகனாக விருந்தபோது, அவருடைய அம்புராத் தூணியில் ஒவ்வொரு பாணமும் தான் முந்திதான் முந்திப்போவேன் என்று ஆரவாரம் செய்துகொண்டு முன் நின்றன. கோதண்டத்தின் பிரசண்டமான த்வனி எங்கும் கேட்கப்பட்டது. அந்த கோதண்டத்தின் நாணொலி சப்தத்தைக் கேட்டு, மனிதர்களைச் சாப்பிடும் ராக்ஷஸர்கள் பயபீதி கொண்டார்கள். மந்தோதரியின் ஹிருதயம் துடிதுடித்தது. அவளுடைய துடிப்புக்கு ஏற்ப, ஸமுத்திரங்களும் நடுநடுங்கின. ஆதி கூர்மமும் நடுங்கியது; அஷ்டபர் வதங்களும் நடுநடுங்கின. அஷ்ட திசைகளின் திக்கஜங்கள் நடுநடுங்கி தங்கள் நிலையை யிழந்து தங்கள் ஆதாரத்திற்காக பற்களால் பூமியைக் கடித்துக் கொண்டு பிளிறின. இந்த சாஹியைப் பார்த்ததும் தேவர்களுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவர்கள் ஒரே ஆரவாரம் செய்தார்கள். (569)

[*தியானம்*

நாராயணு, ஸமஸ்த பரிவாரய ஸ்ரீமதே நாராயணய நம: ஹே பிரபோ, சீதாபதே, கோதண்டராமா, ஸுதன்வீ, உன்னை ஏன் ப்ராஜிஷ்ணு;, போஜனம், போக்தா, ஸஹிஷ்ணு: ஜகதாதிஜர், ஸ்கந்தர், ஸ்கந்ததரோ, துரியோ, வரதோ வாயுவாஹனர் என்று வேதவியாஸர் சொல்லுகிறார். ஹே பகவான், உம்முடைய ஸ்வபிரவிருத்தி அசுரர்களின் துர்க்குணங்களையும், அவர்களின் கூட்டங்களையும் வற்றடிக்கிறது. நீர் குஹப்பெருமானுக்கு மிக்க வேண்டிய வராதலால், நீர் ஸ்கந்ததரர் என்று போற்றப்படுகிறீர். அறிந்தும் அறியாமலும் உமது அடியார்களின் செய்கை, மனம், மொழிகளினால் செய்யப்படும் அபராதங்களை மன்னிக்கும் ஸ்வபாவம் இயற்கையாகவே உடையவர் நீர். இவ்விதம் பொறுக்கும் தன்மை உமக்கே ஏற்பட்ட விலக்ஷண மன்றோ? உலகங்களுக்கு முதல் பொருளாகிய நாராயணரே, நீரே மும்மூர்த்திகளாகவும் மும்மூர்த்திகளில் ஒருவராகவும்; அருள் வரதராகவும் இருக்கிறீர். உலகத்திற்கு ப்ராணனை காற்றையும் நடத்தும் வாயுவாஹனர். ஸப்த மருத்துக்களையும் தாங்குகிறவர்; பக்தர்

களால் உணவுப் பொருளைப்போல ஸர்வ ஸம்மதமாகவும் ஸுகமாகவும் அனுபவிக்கப்படுகிறீர். ஹயசிரஸ் ரூபமாக, ஹவ்யகவ்யங்களைப் புஜிக்கும் போக்தாவாக விருக்கிறீர். நெய், பால், தேன், சர்க்கரை கோதுமை சேர்ந்த ப்ராபணம் என்னும் பரயஸத்தைச் சாப்பிடும் போக்தாவாக விருக்கிறீர். தேவர்களைச் சந்தோஷப்படுத்தும் ஸ்ரேயஸ் ஸ்ரீமானே, எங்களிடம் ஸதாபரிவுடனும் அன்புடனும் இருக்க வேண்டும்.]

என் பிரபு புருஷோத்தம ராமன், ஸுதன்வி, சாரங்கபாணி, தன்னுடைய கோதண்டத்தைக் காதுவரையில் இழுத்தார். பயங்கரமான அஸ்திரத்தைப் பூட்டிப் பிரயோகித்தார். ராமபாணங்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லும்போது, கருநாகங்கள் பயங்கரமாகக் கூச்சலிட்டுக்கொண்டு, ஆகாயத்தின் வழியாகச் சென்றன போலவிருந்தன. பெரும் சப்தங்களைப் போட்டுக்கொண்டு, அவைகள் போய்க்கொண்டிருந்தன.

(570)

ராமபாணங்கள் இறக்கைகளைக் கொண்ட கால ஸர்ப்பங்கள் மாதிரி எழும்பிச் சென்றன. முதன் முதலில் அவைகள் ராவணனுடைய ஸாரதியையும், குதிரைகளையும் கொன்றன. அதன் பிறகு ரதத்தை சின்னபின்னமாக்கி, ராவணனுடைய த்வஜத்தையும், கொடிகளையும் அறுத்துக் கீழே தள்ளின. அதைக்கண்டு ராவணன் அதி கோபம்கொண்டு பெருத்த கர்ஜனை செய்தான். அதன் பிறகு அவை அவனுடைய ஆத்ம பலத்தையும் உறிஞ்சி, அவனை மனத்தில் களைத்துப்போகும்படி செய்தன. (571)

உடனே ராவணன் வேறு ரதத்தின்மீது ஏறி நானாவிதமான அஸ்திர சஸ்திரங்களை எய்தான். அவனுடைய யத்னங்களும் பிரயாசைகளும் வீணாகி விட்டன. பரத்ரோஹம் செய்யும் கொடிய எண்ணமுள்ள மனுஷ்யர்கள் எவ்விதம் நாசமடைவார்களோ, அதுபோல ராவணனுடைய முயற்சிகள் யாவும் வியர்த்தமாய் விட்டன. (572)

[தியானம்

நாராயணா, ஸ்ரீநிவாஸா, ஸ்ரீரங்கா, ஸ்ரீஹர்ஷா, சீதா பிரபோ, ராமா, உன் மனதில் ஏற்பட்ட தர்ம வியவஸ்தைகள்,

ஸர்வ ஸ்வாமித்வம், மாதவத்வம், என்கிற ஸ்ரீயப்பதித்வம் ஒருபுற மிருக்கட்டும். ராவணன் மனதிலே தோன்றின எண் ணங்கள் யாவை? அதையாவது நீ சொல். மணவாள மாமுனிகள், மஹா கிருபாளு, ஆதி சேஷனுடைய அம்சமாக ஜனித்தவர், இதைப்பற்றி என்ன சொல்லுகிறுர் என்பதை ஆராய்ந்து பார்த்தால், ஸ்ரீவசன பூஷண தாத்பர்ய ஸாரத்தில் நிஷித்தந்தாலும், நாலுபடியாக இருக்கும்; அதாவது அக்ருத்ய கரணமும் பகவத் அபசாரமும், பாகவத அபசாரமும், அஸஹ்ய அபசாரமமும் ஆகும். அக்ருத்ய கரணமாவது பரஹிம்சை, பிராணிகளைப் பீடித்தல், பரஸ்தோத்ரம், அயோக் கியர்களைத் துதித்தல், பரதார பரிக்ரஹம் - பரஸ்திரிகளை பரிகிரஹித்தல், பிறர் பொருளைக் களவு செய்தல், பொய் சொல்லுதல், பரதிரவிய அபஹாரம், பக்ஷிக்கத்தகாதவற்றைப் பக்ஷித்தல் (அபக்ஷ்ய பக்ஷணம்) ஆகியவை; பகவத் அபசார மாவது - தேவதாந்தரங்களோடு ஈஸ்வரனைத் துல்யமாக நினைப் பது, ராமகிருஷ்ண அவதாரங்களில் மனுஷ்ய ஸஜாதீயதா புத்தியும், (மனுஷ்ய ஜாதியின்புத்தி பண்ணுவதாலும்) வர்ணாஸ் ஸ்ரமங்களுக்குத் தகாத விதமாக எம்பெருமானுக்கு உபசாரங் கள் பண்ணுதல்: அர்ச்சா வதாரத்திலும் உபாதான நிரூ பணமும், உபாதாந்தரவ்யத்தை ஆராய்ந்து இகழ்தல், ஆத்ம பரிஹாரமும், ஸ்வஸ்வாதந்திரிய புத்தியுடைமை; பகவத் திரவ் யத்தைத்தான் அவஹ்ரிக்கையும், அபஹரிப்பவர்களுக்குத் துணையாக விருத்தல் என்கிற ஸஹகாரிகையும், அவர்களிட மிருந்து சிலவற்றைப் பெற்றுக்கொள்வதும், எம்பெருமானின் திருவுள்ளத்தைப் புண்படுத்துதலும்; பாகவத அபசாரமாவது அஹங்காரார்த்த காமங்களடியாக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம் - அஹங்காரமடியாகவும் அர்த்தகாமங் களடியாகவும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பண்ணுகிற விரோதம் பாகவத அபசாரமாகும். பகவத் விஷயம் அபசாரம், பாகவத விஷயம் அபசாரம் என்ருல் ஒரு காரணமுமின்றி பொருமை கொண்டிருப்பதும், ஆசார்யன் பச்சலில் அபசாரப்படுதலும், ஆசார்ய பக்தர்களான ஸப்ரும்மச்சாரிகளிடத்தில் அசூயை கொண்டிருப்பதும், ஆகியவை அஸஹ்ய அபசாரமும், ஆகும். இப்பேற்பட்ட அபசாரங்கள் மென்மேலும் ஒன்றைவிட ஒன்று

க்ருரங்களுமாய் உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளு மாய் இருக்கும். அதனுல் அந்த ஆத்மாவினுடைய உஜ்ஜி வனத்துக்குமென்மேலும் க்ருஷாபண்ணுகிரஎம்பெருமானுடைய கிருபைக்கும் அவனுடைய முக மண்டல உல்லாஸத்திற்கும் விலக்காயிருக்கும். அப்பேற்பட்ட அஸஹ்ய அபசாரங்களைச் செய்த ராவண கும்பகர்ணாதி இந்திரஜித் முதலானவர்களை என் பிரபு பிரஹ்லாதனை உத்தேசித்து ஹிரண்ய கசப்பையும் அவனுடைய குலத்தார்களையும் உத்தாரணம் செய்தது போல, விபீஷணனை உத்தேசித்து, லங்கா ராக்ஷஸர்களையும், ராக்ஷஸ குலத்தையும் ராவண கும்பகர்ணமேகநாதாதி சம்ஹாரங் களால் உத்தாரணம் செய்தான். நேரிலேயே வைகுண்டத்தை விட்டு பிராட்டியுடன் பூமியில் எழுந்தருளி அவதரித்து, ஸ்வயயாக லங்கைக்குச் சென்று, பிராட்டியை மீட்பதாகிற மாதவத்வத்தை நிலை நாட்டுவது போல, என் பிரபு ரங்கபத்தி ஸ்ரீரங்க வெங்கடேசன் வரத வெங்கடேசன், ரெங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கராஜன், காவேரி தீர்த்தன், ராவணனுடன் நேரில் போரிடுவதற்கு, தேவ காரியங்களை ஸாதிப்பதற்கு, லங்கைக்கு விஜயம் செய்தான், அப்பேற்பட்ட லக்ஷ்மணராம சகோ தரர்களை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.]

அப்பொழுது ராவணன் பத்து திரி சூலங்களைப் பிரயோ கித்தான். ஸ்ரீ ராமசந்திரனுடைய நான்கு குதிரைகளையும் அடித்து அவைகளைப் பூமியில் கீழே தள்ளினுன். என் பிரபு, அம்ருத்யு, நரசிம்ம மூர்த்தி அந்தக் குதிரைகளைத் தனது அம்ருத மயமான கரங்களால் தடவி எழுப்பி, [மீண்டும் ராவணனுடைய நான்குவித அபசாரங்களை நினைப்பவராக,] மிக்க க்ரோதமடைந்தார். ["கோதண்டராமா, உன்னிடம் நான் எக்காலத்திலும் எந்த அவஸ்தையிலும் மனோவாக்கு காயத் துடன் பரிபூர்ண பக்தியுடன் அடங்கினவனுகவும், உன் திருஷ்டிபதத்தில் ராவணனைப் போல குற்றங்கள் இல்லாதவ னுகவும் இருப்பவனுக உனது கிருபையை நான் வேண்டி நிற்கிறேன்."] (573)

ராவணனுடைய பத்து சிரங்களும் ஸரோஜ வனங்கள் மாதிரி பூத்துக்குலுங்கி நின்றன. ஸ்ரீராமனுடைய பாணங்களோ அதிபலம் கொண்ட வண்டுக்களைப் போல அவைகளையே

சுற்றிக் கொண்டிருந்தன. என் பிரபு ரகுவீரன் ஒவ்வொரு தலைக்கும் பத்து பத்து பாணங்களாக பிரயோகித்துக் கொண்டும் அறுத்துக்கொண்டும், மீண்டும் மீண்டும் புதிது புதிதாக வளரும் தலைகளையும் அறுத்துக்கொண்டும் அவனுடைய தலைகளிலிருந்து தாரையாகப் பெருகும் ரத்தப் பிரவாஹங்களை உண்டுபண்ணிக் கொண்டுமிருந்தார். (574)

அவ்விதம் தோன்றும் ரத்த பிரவாஹம் அதிகமாகி பெருகிக் கொண்டிருந்தது. அதைக்கண்டும் பலவனான ராவணன் யுத்த முழக்கம் செய்துகொண்டு ஓடி வந்தான். பிரபு அவனை மீண்டும் பாணங்களைப் பூட்டி அடித்தார். ரகுவீரன் முப்பது பாணங்களைப் பிரயோகித்தார். இருபது பாணங்களால் அவனுடைய இருபது புஜங்களையும், பத்துப் பாணங்களால் பத்துத் தலைகளையும் அறுத்து பூமியில் தள்ளினார். (575)

[*தியானம்*

நாராயணரே, மஹா விபூதிபதயே, ஸ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே ராமசந்திராய நம: என்று சொல்லி, ஸ்வாமி, நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ஹே சீதாபதே, என்னிடம் குளிர்ச்சியுள்ள பார்வைகளால் மந்த ஸ்மிதம் செய்து கொண்டிரும். நாரத சிஷ்யனை என்னிடம், திருதிராஷ்டிரனிடம் ஸநத் ஸுஜாதர் சொல்லியது போல, மிக்க பரிவுடன் அனுக்ரஹ புத்தியுடன் இரும். விருப்பு வெறுப்புக்களற்ற ராஜ தர்மத்தை அனுஷ்டித்த அஜாத சத்ருவே, உம்மிடம் தயை சாஸ்வதமான தர்மமாக விளங்குகிறது. வாமதேவரிஷி பலமுள்ளவரும் பரிசுத்தனுமான வஸுமனஸ் என்னும் கோஸல தேசத்து அரசனும் ராஜரிஷியின் நடத்தையுடன் தர்ம ஸம்வாதம் செய்யும்போது, "ஸ்வாமி, பகவானே, நான் ஸ்வதர்மத்திலிருந்து எந்தநடத்தையால் நழுவாமலிருப்பேனே, அந்த நடத்தையை தர்மார்த்தங்களை உடைய வாக்கியங்களால் சொல்ல வேண்டும்;" என்று கேட்க, வாமதேவர் நஹுஷனின் புத்ரனை யயாதியைப் போல பொன்மேனியை உடைய வஸுமனஸ்ஸைப் பார்த்துச் சொன்னரே; அந்த உபதேசத்தின் ஸாரமாக

விளங்கும் ராஜரிஷி வேஷதர கோதண்டராமா, புத்திமான்களில் சிறந்தவனே, உனக்கு எந்த சமயம் பராக்ரமத்தை உபயோகிக்க வேண்டும்; எப்பொழுது பிராணிகளிடம் தயை செய்ய வேண்டும்; என்கிற ராஜ தர்மத்தின் ரஹஸ்யம் தெரியும். பெரியோர்களால் எந்த தர்மம் வெறுக்கப்பட்டதோ, அதை நீர் செய்ய மாட்டீர். எது நன்றென்று அறிகிறீரோ, அதைச் செய்வதில் தன்னை ஏவிக்கொள்கிறீர். எந்த அரசர் பிறர் காரியங்களை முழுவதும் முடிக்காமல் சுகத்தை அனுபவிக்கிருனே, அவன் நிந்தைக்கு உட்படுவான். அதனல் காரியத்தை மிச்சம் வைக்காமல் முடித்து தன்னையும் பிறர்களையும் தாபங்களிலிருந்து விடுவித்த கோதண்டராமா, மஹாகர்மா, இந்திரகர்மா, அபராஜிதரே, நீர் ஆள்ரிதர்களான தேவர்களையும் தேவமாதர்களையும் சீதையையும் மஹரிஷிகளையும் காப்பதில் ஊக்கம் தவருத சரணுகத வத்ஸலரான அப்ரமத்தர். உமக்கு வேறு ஆதாரம் வேண்டாதபடி உம்முடைய மகிமையையே ஆதாரமாகக் கொண்டிருக்கும் பிரதிஷ்டர், அதனுல் ராவணன்கூட உமது கிருபையை அடைந்தான். கடவுள் நல்லவனையோ, கெட்டவனையோ சிறந்தவனையோ, முதியவனையோ, பலமில்லாதவனையோ, பலசாலியையோ, யாவரையும் தம்வசம் செய்துகொள்ளுகிருர், முன் காரணமான வினையை வெளிப்படுத்துவதற்காக, மூடனுக்குப் பாண்டியத்தையும் பண்டிதனுக்கு மூடத்தன்மையையும்முழுதும் கொடுக்கிருர். ராவணன் பரம்பொருளான நாராயணரைப் பரமார்த்தம் ஏகம் என்று நினைத்து ஸர்வஸங்கதியாகனுக, வைர பாவத்துடன் ஸ்ரீராமனுடன் யுத்தம் செய்தான், தியாகமானது ஆறுவிதங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆறுவித தியாகமும் ஸ்ரேயஸ் கரமானது. அவைகளில் மூன்ருவதாகச் சொல்லப்படும் தியாகம் ஆதி ஆத்மிக, ஆதிதைவிக, ஆதி பௌதிக தாபங்களை உடனேயே அழிக்கிறது. ஆறுவித தியாகங்களும் கீழ்கண்டவாறு சொல்லப்படுகின்றன. (1) ஐஸ்வர்யத்தை அடைந்து கர்வம் இல்லாமலிருப்பது, (2) எப்பொழுதும் பயனில் விருப்பம் இல்லாமல் தர்மங்கள், யாகங்களைச் செய்வது; (3) காமங்களைத் தியாகம் செய்வது. இதனை முடிவுடன் சொல்ல முடியாது என்று சொல்லுகிருர்கள்.

திரவியங்களை விடுவதால் உண்டாகிறதும், போகப் பொருள்களை உபயோகித்தலால் உண்டாகாததுமான நிஷ்காமத்வ குணமானது இதையே சொல்லுகிறது ஸர்வஸம்பத்துக்கள் உள்ளவனாக விருந்தும், எல்லா குணங்களோடு இருப்பவனுக்கு தான் செய்யும் கர்மாக்கள் பயன் பெறாத சமயம்கூட அவன் துக்கப்பட மாட்டான். அதனால் அவன் தாபப்பட மாட்டான். (4) அநிஷ்ட காலத்தில் ஒரு பொழுதும் வருத்தத்தை அடைகிறதில்லை; (5) ஒரு பொழுதும் இஷ்டர்களையும், புத்திரர்களையும், தாரங்களையும், யாசிக்க மாட்டான். (6) யோக்யனாக யாசகன் பொருட்டு தானம் செய்வது. உண்மை உரைத்தல், ஈஸ்வர ஸ்வரூபத்தை சிந்தித்தல் பிரும்ம ஸ்வரூபமாய் நிலை பெற்றிருத்தல்; நான் யார்? யாரைச் சேர்ந்தவன்? எங்கிருந்து வந்தேன், என்று தனக்குள் வினவுகிறவன், வைராக்யம், திருடாமை, ஐஹிக ஆமுஷ்மிக போகங்களில் ஆசையை விடுதல், எட்டுவிதமான சேர்க்கையைத் தள்ளுதல் (ஸ்திரியை நினைத்தல், அவளைப்பற்றி புகழ்தல், அவளுடன் விளையாடுதல், அவளைப் பார்த்தல், ரஹஸ்யமாக அவளுடன் பேசுதல், சேர்க்கையை ஸங்கற்பித்தல், உறுதி செய்தல், சேர்தல்) புத்திரன், தாரம்பூமி, ஸம்பத்துக்கள் முதலிய வைகளைச் சேர்த்துக் கொள்ளாமலிருத்தல்; இவைகள் மதமாகிற அபிமானத்தின் தோஷங்கள், ஐம்புலன்கள், மனம், சென்ற காலத்தின் விஷயங்கள், வருங்காலத்தின் விஷயங்கள், (ஐம்புலன்களின் மனம் இவற்றின் விஷயங்களின் விருப்பு வெறுப்புக்களால் உண்டாகும் தவறுகள் ஆறு—புத்ரன் இறந்துபோனவனைப் பற்றியும் நினைத்ததால் உண்டாகும் தவறு ஒன்று; புத்ரன் விரும்பியும் உண்டாகாமை முதலியவற்றால் உண்டாகும் தவறு ஒன்று ஆக எட்டு தோஷங்களையும் விலக்க வேண்டும்.) ஸத்தியத்தில் மனமுடையவனாக விருத்தல்; ஸத்தியத்தில் உலகங்கள் வியாபிக்கப் பட்டிருக்கின்றன. மோக்ஷமானது ஸத்தியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தோஷங்களை விலக்கியே தவமாகிற விரதத்தைச் செய்பவன் மோக்ஷ ஆனந்தத்தைச் செய்ய வேண்டும். இந்த குணங்களுடன் இருப்பவன் இவ்விதம் மோக்ஷத்திற்கு அருகதையாகிறான். ராமா, உன்னையே ஏக பராயணமாக நம்பி வைரத்தைச் செலுத்தினானே, ராவணன்

காமத்தினுல் ஏற்பட்ட வைரத்தினுல் அழிந்துபோனுன். அதனுல் அவன் பகவானுடைய நிக்ரஹத்தை அடைந்தான்.] இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை! ராமன் சிரங்களையும் கைகளையும் அறுத்துத் தள்ள அவைகள் மீண்டும் புதிது புதிதாக முளைத்தன. என் பிரபு ராமன் அவைகளை மீண்டும் அறுத்துத் தள்ளினுர். இவ்விதம் பல தடவைகள் பிரபு செய்து பார்த்தார். அவைகளை வெட்டித் தள்ள, மீண்டும் முளைத்த வண்ணமாக விருந்தன. (576)

என் பிரபு மீண்டும் புஜங்களையும், சிரங்களையும் வெட்டித் தள்ளினுர், அவருக்கு ஒரே உத்ஸாஹம். கோஸலாதி பதியான ஸ்ரீராமன் அதி உத்ஸாஹத்துடன் வெட்டித் தள்ளிய வண்ண மிருந்தார். அவரால் வெட்டப்பட்ட தலைகளும் முண்டங்களும் ஆகாயத்தில் சிதறி வீசி எறியப்பட்டன. அவைகளைப் பார்த்தால் கணக்கற்ற ராஹுக்களும் கேது கிரஹங்களும் தோன்றியது போல விருந்தன. (577)

அநேக ராஹுக்களும், கேதுக்களும் ரத்த வெள்ளத்தைக் கக்கிக்கொண்டு சஞ்சரிப்பது போல, அந்த தலைகளும், முண் டங்களும் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. ரகு வீரனுடைய தீவிரமானதும் பிரசண்ட பாணங்களாலும் அடிபட்ட அந்த ராஹுக்கள், கேதுக்கள் போலிருக்கும் சிரங்கள், கரங்கள் முதலியவை பூமியில் விழுந்தன. கோதண்ட ராமனுடைய ஒவ்வொரு பாணக் கொத்தும் ஒவ்வொரு தலை யையும் கவ்விக்கொண்டு உயரக் கிளம்பிய வண்ணமிருந்தன. அந்த பரம சோபையைப் பார்த்தால், தினகரனுகிற சூரியன் க்ரோதமடைந்து தன்னுடைய கிரணங்களின் வரிசைகளால் எங்கெங்கு ராஹு கிரஹங்கள் இருக்கின்றதோ, அவைகளைத் துறத்தி அடிப்பதுபோல விருந்தன. (578)

[*தியானம்*

ஹே சீதே, உமா மஹேஸ்வரி, சிம்சுபா விருக்ஷத்தின் கீழே ஸமஸ்த பரிவாரங்களுடன் கூடியிருக்கும் மஹாலக்ஷ்மியே, சரணம், சரணம். ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணய நம: ராமாய ராமபத்ராய ராமசந்திராய நமோ நம:, நம: சீதாபதயே, ரகு நாதாய சீதாபதயே நம: ஹரி: ஓம் தத்ஸத், உக்ரரே, ஜயலக்ஷ்மியே, சரணம், சரணம், ராமா, ராவணன்

உன்னுடன் யுத்தம் செய்யும்போது காமம் என்கிற பக்தியை அடைந்து, மார்க்கண்டேய நாரதாதிகள் மாதிரி உன்னை ஸர்வலோக சரண்யன் என்று பஜித்திருந்தால் அவனுக்கு நிக்ரஹத்திற்குப் பகிலாக சீதாராம அனுக்ரஹம், வீபீஷணன்மாதிரி கிடைத்திருக்கும். ராவணனும் இப்போது உன்னை ஸநாதனமான நாராயணம் அநாமயம் அப்ரமேயம் என்று நம்பினர். அன்று ஸஞ்சயன் துரியோதனனின் பிதாவான திருதிராஷ்டிரனிடம் சொல்லியது போல, தேவர்களுடைய விஷயத்தைக் காட்டிலும் (எல்லாம் தெய்வாதீனம் என்பதைக் காட்டிலும்) வேறு என்ன விருக்கிறது? தேவர்களுக்கு ஸம்மத மானவனும், இந்திர புத்ரனும், இந்திர லோகத்தை விஜயம் செய்தவனும், கிருஷ்ணனுடைய பரமமித்ரனுமாகிற அர்ஜுனன், காண்டீவத்துடன் வனவாசம் செய்தான் என் பதினுல், மனித முயற்சி பயனற்றது என்பதில் சந்தேகமில்லை என்று சொன்னுன். மஹாபலிச் சக்கரவர்த்தியோ கர்மாவினுல் செய்யப்பட்ட இந்த குணங்களையும் தற்காலம் இருப்பவை களாகவும், நிலையற்றவைகளுமான செல்வத்தையும், வறுமை யையும், கர்மாவினுல் செய்யப்பட்டனவாக அறிந்து, ஆலோ சித்துப் பார்த்து, முடிவை அடையாமல், இந்த விஷயத்தில் காலத்தைத் தவிர வேறு காரணம் உண்டென்று நினைக்க வில்லை. கண், காது, மூக்கு, நா, தொக்கு, இவைகள் பிராணிக ளுடைய ஞானத்திற்கு இருப்பிடம், இவைகள் ஆசை நசித்த பொழுது திருப்தியை அடையவே அடைகின்றன. ஆகையால் வைராக்ய மனத்துடன் ஒருவன் வருத்தமில்லாதவனுகவும், துக்கம் பச்சாதாப மில்லாதவனுகவும் இந்திரியங்களைப் பழக்கி, தெய்வ நம்பிக்கைகொண்டு, விருப்பு வெறுப்பு, சுகம் துக்கம், புகழ்ச்சி இகழ்ச்சி, இவைகளிலிருந்து விடுபட்டவனுக மோக்ஷத்தில் ஆசையுற்றவனுக பிரும்ம நிலையை, நாராயண பதத்தை, அடைய வேண்டும், பிரஹலாதன், விபிஷணன் அந்த உத்தம வழியை அனுஷ்டித்தார்கள். ஹிரண்யகசிபு, ராவண கும்பகர்ணுதிகள் வைரத்தினுல் மனம் சமனம் ஆகாதபோதிலும், மோக்ஷ பதத்திற்கு அடையாளங்களான ஸர்வ ஸங்கதியாகத்தை அடைந்தவர்களாக, பரமாத்மாவினுல் நேரிலேயே உத்தாரணம் செய்யப்பட்டார்கள். சீதையின் ஸாங்

நித்யமும் நினைவும் ராவணனுக்கு மிக்க உதவியது. அதே மாதிரி அகஸ்தியரின் ஆதித்ய ஹ்ருதய உபதேசமும், ராமனை சீதையினிடம் வெகு சீக்கிரத்தில் ராவண ஸம்ஹாரத்தை முடிக்கச் செய்து, சந்தோஷ மனத்துடன் சேர்த்தது. அப்பேற்பட்ட சீதாராம தம்பதிகளை நான் அகஸ்திய, லோபாமுத்ரா தம்பதிகளை முன்னிட்டு சரணமடைகிறேன்.]

எங்கு எங்கு பிரபுவினால் ராவணனுடைய சிரங்கள் வெட்டப்பட்டு சிதறி அடிக்கப்பட்டனவோ, அந்த ராவணனுடைய உடலிலிருந்து அப்போதே, அந்த க்ஷணமே உமா மஹேஸ்வரர்களின் கிருபையினால், புதிது புதிதான சிரங்கள் அமோகமாகவும் அபாரமாகவும் தோன்றியவண்ணமிருந்தன. [யயாதி சொன்னபிரகாரம், ஆசை அக்னியைப் போல, திருப்தியினால் திருப்தி அடைகிறதில்லை. வைராக்யம் ஒன்றினாலே ஆசையை அழிக்க முடியும் என்கிற உண்மையை விளக்குவது போலவும்] விஷய போகங்களில் இஷ்டம் கொண்ட மனிதன் போகங்களின் சுகத்தினால் திருப்தி அடையமாட்டாமல் மீண்டும் மீண்டும் போகங்களையே எவ்விதம் விரும்புவானோ, அதைப்போல ராவணனுடைய சிரங்களும், புதிது புதிதாகத் தோன்றும் ஆசையைப் போல உண்டாகி, வளர்ந்து கொண்டிருந்தன. (579)

தசமுகன் தன் தலைகள் அமோகமாக உண்டாகிக் கொண்டிருப்பதைக் கண்டு, "தான் மரணமடைய வேண்டும்," என்கிற ஆசையையும் விசாரத்தையும் விட்டுவிட்டான். யுத்தம் செய்வதற்கு முன் மரணம் வேண்டும் என்கிற ஆசையுடன் வந்த ராவணன், இப்போது அந்த ஆசையையும் நசிக்கச் செய்தான். (மஹா கிருபாளு, ஆசு தோஷி, என் பர தெய்வங்களான உமா மஹேஸ்வரர்களின் கிருபையை ராவணன் அடைந்து விட்டான். அவனுடைய மனம் ஸநாதனமான புருஷன் என்று சொல்லப்படும் ஸ்ரீமந் நாராயணனிடம் லயித்துவிட்டது. பூர்வ வாஸனையினால் அவன் ஜயலக்ஷ்மியுடன் வீற்றிருக்கும் கோதண்ட ராமனை ஏகபராயணமாக மனத்தால் சரணமடைந்தான். அவனுடைய மனம் வைராக்யத்தினால் சீதாராம பதங்களை அடைந்துவிட்டது. ஆனால் அவனுடைய பாவங்கள் அவனை மிஞ்சிவிட்டன.) பூர்வ வாசனையினாலும் கர்மங்களின்

மடியாகவும், அவனுக்கு ராமனிடம் விரோதம் வளர்ந்தது. (மஹா மூடன். தம்பி விபீஷணனுடன் வாழ்ந்தும், அவனுடைய ஞான லாபத்தை ராவணன் அடையவில்லை.) மஹத்தான அபிமானத்தினால்தன்னை வளரச்செய்துகொண்டு, (சீதையினால் கடாக்ஷிக்கப்பட்டும், மஹாபாக்ய வசமடைந்த) ராவணன் கர்ஜனை செய்துகொண்டு, பத்துக் கைகளிலும் பத்து விற்களையும் பாணங்களையும் எடுத்துகொண்டு ராமனை நோக்கி ஓடினான். (580)

ரண பூமியில் ஸ்ரீஜயலக்ஷ்மியுடன் ஸாந்நித்யம் செய்யும் கோதண்ட ராமனை ராவணன் கோபத்துடன் கூடிய க்ரோதத்துடன் பார்த்தான். (புண்டரீக நயனங்களைக் கொண்ட ஸ்ரீரகுபதியைப் பார்த்ததும், அவன் சாபத்தின் பலத்தினாலும் கர்ம வாசனையினாலும், மதியை இழந்தவனாக) ராவணன் பாண வர்ஷங்களால் ஸ்ரீராமனுடைய தேரை மறைத்து அஸ்திரங்களால் மீண்டும் வர்ஷித்துக் கொண்டிருந்தான். இந்த விதமாக சுமார் அரை மணி நேரம் வரை அந்த இந்திர ரதம் மூடப்பட்டு கண்களுக்குப் புலப்படவில்லை. தினகரனாகிற ஆதித்யன் மேகங்களாலும் புகைமண்டலங்களாலும் மூடப்பட்டு, எவ்விதம் மறைந்திருப்பானோ, அதைப் போல என் பிரபு (தேவர்களுக்கும் எனக்கும்) மறைந்திருந்தான். (581)

தேவதைகள் ஹாஹாகாரம் செய்தனர். ராமனுடைய பரிஸ்ரமத்தை நினைத்து வருந்தினார்கள். ஆஸ்ரிதர்களின் வருத்தத்தைத் தாங்கமாட்டாத என் பிரபு க்ரோதமடைந்து கோதண்டத்தை வளைத்தார், (ஆதித்யனைப் போல ஜ்வலித்துக் கொண்டு மஹாமகிமைகள் பொருந்திய ஹிரண்ய காப்பர், சூர்யனைப் போன்ற காந்தியுள்ளவர், தமஸ் என்கிற இருளுக்கு அப்பாலிருப்பவர், விரோதம் என்னும் அவகுணத்தால் பற்றப்படாத தர்ம விக்ரஹவான், பக்ஷபாதியாகிற புருஷன், எவனை அறிவதால் இங்கேயே இப்பிறப்பிலேயே முக்தியை அடையலாமோ, அவனைப்பற்றி அறிவதைத் தவிர முக்தி அடைவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லை என்று வேதங்களும், மஹரிஷிகளும் ஸாதிக்கின்றார்களே; அப்பேற்பட்ட பர பிரும்மமாகிற நாராயணன், சார்ங்கதன்வா, சீதா பிரபு, காகுத்ஸ ராமன்,) ரகுகுல வீரன், தினகரகுல விபூஷணன், பாணவர்ஷங்களால்

அந்த மாயைத் திரையை விலக்கிவிட்டு, அநேக பாணங்களால் ராவணனுடைய பத்துத் தலைகளை பத்து திக்குக்களில் சிதறி விழும்படி வெட்டிச் சாய்த்தார். ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொரு தலை போய் விழுந்தது. (582)

பகவான் ஸ்ரீ ராமசந்திரனால் வெட்டப்பட்ட பத்து தலைகளும் ஆகாய மார்க்கத்தில் எழும்பி ஜயஜய, (ஜயலக்ஷ்மி,) ஜயசீதை என்று பயங்கரமாக சப்தித்துக்கொண்டு பயத்தை எழுப்பிக்கொண்டு, ஆகாயத்தில் வேகமாய் தாவிப்போய்க் கொண்டிருந்தன. அவைகள் போகும்போது,'' எங்கே லக்ஷ்மணன், எங்கே சுக்ரீவன், கோஸலாதிபரான ரகுவீரன் எங்கே? என்று சொல்லிக்கொண்டு போயின. (583)

"என் பிரபு ராமன் எங்கிருக்கிறான்?'' என்று சொல்லிக் கொண்டு, அந்த சிரங்கள் கூட்டம் கூட்டமாக ஓடிப் பாய்ந்து சென்று கொண்டிருந்தன. அவைகளைக் கண்ட வானர கரடிக் கூட்டங்கள் பயந்து ஓடிப் போய்விட்டன. அதைக் கண்ட ரகு வம்சமணியாகிற ராமன் தனது கோதண்டத்தால் அந்த சிரங்களை துண்டம் துண்டமாக வெட்டினார். அந்த சமயம் காளிகா தேவிகள், காளியின் சேவகர்கள், ராவண சிரங் களையும், ராவண முண்டங்களையும் மாலைகளாக்கி கோத்து அந்த ரத்த தாரையில் ஸ்நானம் செய்து ஆனந்தமடைந்தவர்க ளாகத் தோன்றினார்கள். (584)

அந்த பத்ர காளியின் சேவகர்கள் ஸ்நானம் செய்துவிட்டு அந்த சிரமாலைகளை கைகளில் வைத்திருப்பதைப் பார்த்தால், அவர்கள் யுத்த ஸ்வரூபமான அக்ஷயவடவ்ருக்ஷத்திற்குப் பூஜை செய்வதற்குப் போவதுபோலத் தோன்றிக்கொண்டிருந்தார்கள். (585)

[*தியானம்*

நாராயணா, கோவிந்தா, வாமனா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம.: ஹே சீதே, ஸமஸ்த பரிவாராய சீதாய நம; சீதாபதயே நம. ராவணனுக்கு முதலில் லோபம் யேற்பட்டு, அதன் பின்பு காமம் உண்டாகி, இப்பொழுது அவன் க்ரோத மடைந்துவிட்டான். விதுரர் திருதிராஷ்டி ரனுக்கு உபதேசித்தது போல, எவன் அடக்கம், சுத்தி, தெய்வ

கர்மம், மங்கள காரியங்கள், பிராயச்சித்தங்கள், பலவிதமான உலக வியவஹாரங்கள் ஆகியவைகளை நித்யமாகச் செய்கிறானோ, அவனுக்கு தேவதைகள் மேன்மேலும் விருத்தியைச் செய்கிறார்கள். எந்த மனிதன் அகாரியத்தில் தானாகவே லஜ்ஜையை அடைகிறானோ, அவன் எல்லா உலகத்திற்கும் குருவாகிறான். தவிரவும் அளவற்ற தேஜஸ் உடையவனாகவும், நல்ல மனது உடையவனாகவும், சித்தம் நிலைபெற்றவனாகவும் அவன் ஆகிவிடுகிறான், வைரம் தானத்தினால் சாந்தியை அடைகிறது. தர்மத்தில் நிலைபெற்றதாக விருக்கிறது. அப்பேற்பட்ட ராவணன் ராமனிடம் மோக்ஷத்தை அவலம்பித்து, தர்மத்தின்மீது பற்றுதலையும் தியாகம் செய்து வைரபாவத்தினால் சாந்தியைத்தேட விரும்பினான். ஆனால் ராமனோ தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு, தனது ரெங்கநாயகியை அடைக்கலம் வைத்து, ஐயலக்ஷ்மி ஸந்நித்தனாக போர் புரிந்தான். அவனுடைய மனம் சீதையினிடம் லயித்திருந்தது. தாமரைக் கண்ணி, வலது கையில் தாமரை யேந்திய பொன் மாது, மிக்க வெளுப்பாக அணிந்து கொண்ட வஸ்திரம், ஸதா ஆபரணங்கள், பூமாலைகள் அணிந்துகொண்டு சந்தோஷத்துடன் விளங்குபவள் பகவதி. விஷ்ணுவின் பிரிய மனோனுகூலை. எவளை ராவணன் போன்ற பாதகர்களும் ஒரு தடவை நினைப்பினும் எல்லாப் பாபங்களையும் போக்கும் தன்மையுடையவள், ஸுவர்ண ரஜதஸ்ரஜாம், ஸகல தாபங்களை அழிக்கும் சந்திரனைப் போலிருப்பவள், சந்திரனுடைய ஸஹோதரியான சீதையை என் மஹாலக்ஷ்மியை, நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். என் ஸர்வேஸ்வரி, புவனேஸ்வரி, காமாக்ஷி, காருண்யேஸ்வரி, அந்த மஹானுபாவை, உத்தம லக்ஷணங்களுண்ட கூடிய ஸ்ரீ மஹாலக்ஷ்மி, என்னை அவள் சமீபத்தில் வரும்படி செய்யவேண்டும். ஹே ராமா, கோதண்ட ராமா, லக்ஷ்மீபதி, நாராயணா, இயற்கையாகவே உம்மிடத்தில் தான் தனமோ, ஞானமோ, யசஸ்ஸோ விருக்கிறது. அதனால் தானே உம்மை ஜாதவேத: என்று அழைக்கிறார்கள். உம்முடைய பிரிய பத்னியாகிற சீதை தேவர்களுக்கும், ராக்ஷஸ ராக்ஷஸிகளுக்கும், மனிதர்களுக்கும், சகல சராசரங்களுக்கும் ஹிதம் நினைத்துச் செய்கிறபடியால் ரமணீயமாகவிருக்கிறாள்.

ராவணன் கெட்ட மனத்துடனும் தேவியின் திவ்ய ரூபத்தைப் பார்த்து, ப்ராப்யமும் ப்ரமப்ராபகமாகவுமாய் இருக்கிறது என்று நினைத்தான். நம்மாழ்வார் கதறியபடி, பெற்றதாய் நீயே, பிறப்பித்த தந்தை நீ, மற்றை யாராவாரும் நீ பேசில—எற்றேயோ மாய மாமாயவனே மாய முலை வாய்வைத்த, நீயம்மா காட்டும் நெறி என்கிறப் போல, கதறும் உன் பாலகர்களை நீதானே காப்பாற்ற வேண்டும். பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன். மிகக் கண்டேன். ஊன் திகழும் யொளிதிகழுஞ் சேவடியான், வான் நிகழுஞ் சோதி வடிவு, என்கிருப்போலே, உங்களுடைய திவ்ய தரிசனம் கிடைக்கப் பெற்றேன். அர்த்த பஞ்சகத்தை அறியப் பெற்ற நான் முதலில் எனது ஸ்வரூப விரோதிகளை ஒழித்து, பிராட்டியைத் தஞ்சமடைந்து, ஆசார்ய உள்ளத்தால் வளர் பெற்று, பகவானையும் பிராட்டியையும் சேர்த்து ஏகமாக வந்து அடைகிறேன்.]

மீண்டும் ராவணன் கிரோதமடைந்து பிரசண்டமான சக்தியைப் பிரயோகித்தான். அந்த சக்தி ஆயுதம் விபீஷணனை நோக்கிப் பாய்ந்து சென்றுகொண்டிருந்தது. அந்த சமயம் அவன் விபீஷணனின் முன்பு நின்றுகொண்டு யமராஜன் கால் தண்டத்தை வீசி எறிவதுபோல விளங்கினுன். (586)

என் பிரபு, பிரணதார்த்தி ஹரன், ரகுபதி கோரமாக வரும் சக்தி ஆயுதத்தைப் பார்த்தார். விபீஷணனை நோக்கிவரும் சக்தி ஆயுதத்தைப் பங்கம்செய்ய நினைத்தார். (மஹாலக்ஷ்மியை நினைத்துக்கொண்ட என் ஸ்ரீயப்பதி, என் பிராணன், சரணுகதர்களுக்கு முன்பு ஸர்வ ஸாதாரணம். "நான் அவர்களின் துக்கத்தை நாசம் செய்யவே பிறந்திருக்கிறேன். எம் பெருமானுர் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே, என்கிற பதங்களுக்கு வாக்யார்த்தம் செய்ததைக் காரியத்தில் காட்டிய) ரகுநந்தனன், தனது பக்கத்திலிருந்த விபீஷணனை தனது பின்புரம் தள்ளி, அந்த சக்தி சூலாயுதத்தை, ஸ்ரீயப்பதியான எம் பெருமான், ஸன்முகனுக, தானே தனது வக்ஷஸ்தலத்தில் ஏற்றுக் கொண்டார். (அன்று ப்ருகுபதம் பதித்த ஸ்ரீவத்ஸ மார்பன் இன்று விபீஷணனைக் காப்பாற்றியதால், என்போன்ற தீனர்களுக்கும் பிரணதார்த்தி ஹரன் ஆனுர். அயர்வறுமமரர்கள் அதிபதியான ஸ்ரீயப்பதி மிக்க உயர் வறவுயர் நலம் உடையவன்

மயர் வற மதிநலம் அருளினன் என்று சொல்லும்படி, எல்லோருக்கும் பரந்த கல்யாண குணக் கடலாகவும், உன்னதமான குணக் குன்றாகவும் தோன்றுகிறான் அல்லவா? அந்த லக்ஷ்மியும் பிரகிருதியிலிருந்து உண்டாகும். மஹத், அஹங்காரம் முதலிய தத்வ விவகாரங்கள் அவளுடைய அனுப்ரவேசத்தினால் உண்டாவதால், பகவத் சக்தி ரூபமாகிற பிரகிருதி, விக்ருதி என்கிற பெயர்களையும் அவள் அடைந்தாள் அல்லவா? அப் பேற்பட்ட சீதாநாயகனான கோதண்டராமனை லக்ஷ்மி நாராயணனாக நான் ஆயிரம் தடவை நமஸ்கரிக்கிறேன்.] (587)

சக்தி ஆயுதம் ராமனுடைய பரந்த மார்பில் விழுந்ததும், அவர் மூர்ச்சையடைந்தார். பிரபு தனது ஸ்வய இச்சையினால் லீலைகளைச் செய்தார், அதைக் கண்ட தேவர்கள் அவரைச் சரியாக புரிந்துகொள்ள மாட்டாமல், மிக்க வியாகுலப் பட்டார்கள். பிரபுவின் ஸ்ரமத்தை விபீஷணன் கண்டு கொண்டான், மிக்க கோபம் கொண்டவனாக, அதிகிரோதத்துடன் அவன் கதையை எடுத்துக்கொண்டு கர்ஜனை செய்து கொண்டு ராவணனை நோக்கித் தாவினான். (588)

''அடே அற்ப பாக்ய முள்ளவனே, நீசா, மந்த புத்தியுள்ளவனே, உனக்கு விரோதமானவர்கள் யார் இல்லை? ஸர்வ லோகத்ரோஹி, தேவதைகள் மனுஷ்யர்கள், முனி கணங்கள், நாகர்கள் யாவருக்கும் நீ விரோதியாகி விட்டாய். வாஸ்தவம் தான். நீ மிக்க மரியாதையுடன், மஹா விஸ்வாசமாக உனது பத்துத் தலைகளை பகவான் மஹேசருக்கு அர்ப்பணம் செய்தாய். ஒவ்வொரு தலையின் அர்ப்பணத்திற்கும் நீ உதார மனமுள்ள மஹேஸ்வரரிடமிருந்து கோடிக்கணக்கான நன்மைகளை அடைந்தாய்.'' (589)

''அடே மூர்க்கா, அந்த மஹா கிருபாளுவின் ஸுப்ர ஸாதத்தினால் இதுவரை நீ உயிருடன்விடப் பட்டிருக்கிறாய். ஆனால் இப்போதோ காலதேவன் உன்னை நாசமாக்குவதற்கு நாட்டியம் ஆடுகிறான் மஹா பிடிவாதமுள்ளவனே, ராமனை அலக்ஷ்யம் செய்துவிட்டு. நீ ஸம்பத்துக்களையும் சுகங்களையும் நிம்மதியாக அனுபவிக்க முடியுமா?'' இவ்விதம் சொல்லிக்கொண்டு விபீஷணன் ராவணனுடைய வலது மார்பில் தனது கதையினால் ஓங்கி அடித்தான். (590)

[*தியானம்*

**ஹே** ரங்கராஜ மஹிஷி, சீதே, நாராயணி, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே ராமாய நம, நாராயணி அம்மா, நீதானே ஸர்வ பூத ஸ்தித்யை, ஸர்வபூத ஹிதைஷிணி. ஹே லக்ஷ்மீபதியே, ஹே விஷ்ணு, அஸ்வின், உம்முடைய தயவினால் ஸ்வர்ணமயமான மஹாலக்ஷ்மி என் பக்கத்தில் எனது திருஷ்டி கோசாரத்தில் இருக்கவேண்டும். ஸ்ரீ வத்ஸ மார்பனே, அலர்மேல் மங்கை யுறைமார்பா, ஜாதவேதோ, அஸ்வங்கள், பசுக்கள், யானைகள் முதலிய வாகனங்களாலும், தாஸிதாஸன் என்கிற பரிசராகர்களை யுடையவளும், ஸகல ஐஸ்வர்யங்களையுடைய மஹாலக்ஷ்மி, உனது அனுக்ரஹத்தினால் நீ என்னைவிட்டு வேறிடம் செல்ல விரும்பாதபடி யிருக்கவேண்டும். ஹே லக்ஷ்மிதேவி பராசர முனிவரால் அனபகாமினி, விஷ்ணோர் அனபாயினி, ஸர்வயக்ஞமயம் வபு; என்று சொல்லப்படுகிறாய். வாஸவனாகிற இந்திரன், இந்திராணி முதலிய தேவ, தேவஸ்திர்களால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீராமதயிதே, தயாபூர்ணேஸ்வர், ஜானகி, சீதே நீயல்லவோ லீலைகளைச் செய்யும் நாராயணனுடன் கூடவே இருக்கிறாய். அவாப்த ஸமஸ்தகாமன் என்று சொல்லப்படும் புருஷோத்தமனுக்கு நீ காமேஸ்வரியாக விளங்குகிறாய். புருஷன் என்கிற சப்தத்திற்கு பொருளாக எதையும் கொடுக்கவல்ல சக்தியாக நீ விளங்குகிறாய். என்னை ஸதா கடாக்ஷித்துக் கொண்டிருக்கும் லக்ஷ்மி, பகவானுடைய ரதமாகிய உடம்பின் மத்தியில் வீற்றிருந்து நீ ஹரிவக்ஷ: ஸ்தலை என்கிற பெயரையும் அடைந்திருக்கிறாய், பெருமாள் உன்னை மார்பில் சுமக்கும் காரணத்தால், ஸ்ரீதரன் என்கிற காரணப் பெயரை நீ அடைய வைத்திருக்கிறாய், பெரிய நாச்சியாரே, நாரத மார்க்கண்டேயப்ரியே, உன்னையே நம்பி சிரத்தையுடன் பூஜிக்கும் என்னிடம் ஸதா ஸாந்நித்யம் செய் அம்மா. ஜீவர்களுடைய ஹ்ருதயத்தில் ஆத்மாவாக விருப்பவனே, ராமனால் முன்னும் பின்னும் ஸர்வ திக்குக்களிலும் காப்பாற்றப்படும் மஹாலக்ஷ்மி அம்மா, நீதானே திரௌபதி கதறும் காலத்திலும், கஜேந்திரன் அபயக் குரல் கொடுத்தபோதும், பகவானுக்கு முன்பே விழித்தெழுந்தவள். என்னிடம் உன்னுடைய அனுதாபங்கள் ஸதா இருக்கட்டும். தாயே, ஆஸ்திகர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில்

நீ ஸஹாரபியாக விளங்குகிறாய். பகவானை விட தயை நிரம்பினவளாக, நீ ஸதா பரமாத்மிகா என்று சொல்லும்படி, பகவானுக்கும் ஆத்மாவாக விருக்கிறாய். தாமரைக் காடுகளில் வசிக்கும் பத்மயோனியே, உனது ஆஸன பத்மத்திலிருந்து அஷ்டதிக் கஜங்களால் ஸதாநித்ரையை விட்டு எழுப்பப்படுகிறாய்; உன்னுடைய ஆஸனபத்மமே அஷ்டதிக்குக்களாகவும் எனக்கு அஷ்டாக்ஷர வித்யையாகவு மிருக்கிறது. ஹே ஸ்ரீதேவி, ரெங்க நாயகியே நீ என்னிடம் ஸதாப்ரீதியுடனும் என்னை நாராயண ப்ரியனாகவும் செய்யவேண்டும். அடிக்கீழ் அமர்ந்து புகுந்து வீணை நாதமாதிரி, பாலர்களின் மழலைச் சொல்மாதிரி, ராஜ மாதரின் இன்னிசைக் குரல் மாதிரி, பாடி ஆடி கண்ணீர் மல்கி, என்னை நாடி, உரைத்த நம்மாழ்வார் சொன்னதுமாதிரி, வண் புகழ் நாராயணன் தி ண் க ழ ல் சேரே, அடியீர் வாழ்மினென் றென்றருள் கொடுக்கும்படிக் கேழில்லாப் பெருமானைப் பாடின குருகூர் சடகோபன், முடிப்பான் சொன்னவாயிரத்துத் திரு வேங்கடத்துக்கிவை பத்தும், பிடித்தார். பிடித்தார் வீற்றிருந்து பெரிய வர்னுள் நிலாவுவரே, என்று சொல்லி வி பீ ஷ ண னை புறம் வைத்து, ராமா சீதா, நான் சரணம் அடைகிறேன்.]

விபீஷணனால் எறியப்பட்ட கதையானது ராவணனுடைய பரந்த மார்பு பிரதேசத்தில் விழுந்து அவனை ராமசீதா மறுவனாக ஆக்கியது. வெகுவாய் ஆழ்ந்த அந்த கதையானது ராவணனுடைய பாபங்களைப் போக்கி, கடினமான காயங்களை உண்டு பண்ணி, [அவனை நாராயண அஸ்திரத்தின் முன்பு கிருஷ்ணர் பீமனைத் தள்ளி அந்த அஸ்திரத்தை நமஸ்கரிக்கச் செய்தாரே, அதைப் போல] மதம்பிடித்த அவனை சீதாராமனின் முன்பு நமஸ்கரிக்கச் செய்தது. அவனுடைய பத்து முகங்களிலிருந்தும் ரத்தம் பெருகி, அவனை சீதாராமதியானத்தில் அமிழ்த்தியது. சிறிது நேரம் கழிந்த பின்பு, அவன் தன்னை வசம் செய்துகொண்டு, மிக்க க்ரோதத்துடன் விபீஷணனை நோக்கி ஓடி வந்தான். இருவர்களுக்கும் பலமான மல் யுத்தம் நடந்தது. ஒருவர் மற்றொருவரை ஜெயிக்க விரும்பி, யுத்தம் செய்தார்கள். எவனை ராவணன் கோழை என்று சொன்னானோ, அந்த விபீஷணன் இன்று ராம பலத்தினால் ஜகத் விஜயனான ராவணனை எ திர் த் து ச்

சண்டைசெய்து, யுத்தத்தில் தனக்கு ஈடில்லை என்று நிரூபணம் செய்துவிட்டான். (அதனால் ரகுவீரனுடைய புகழை விபீஷணன் பாடிக்கொண்டு, ராமார்ப்பிதம் என்று சொல்லிக் கொண்டான்.) (591)

என் பிரபு, பரமதயாளு, மஹேஸ்வரர் உமையைப் பார்த்துச் சொன்னார். "ஹே உமா, ராவணன் எவ்வளவு பலம் கொண்டவன். ராவணனை விபீஷணன் நிமிர்ந்துகூட பார்க்க முடியுமா? அப்படியிருந்தும், ராமனுக்கு ஆத்ம நிவேதனம் செய்த விபீஷணன் இன்று தசமுக ராவணனிடம் யுத்த ஸன்முகனாக சண்டை செய்தான். இன்று காலனுக்குச் சமமாக அவன் ராவணனுடன் யுத்தம் செய்வதாக விருந்தால் ஸ்ரீ ரகுவீரனுடைய பிரபாவத்தைத் தவிர வேறு எதைக் காரணமாகக் கொள்ளலாம்? இதை நீயே சிந்தனை செய்து பார்." (592)

விபீஷணனுடைய தீனஸ்திதியைக் கண்டார் ஹனுமான். உடனே ஒரு பெரிய பர்வதத்தை எடுத்துவந்து, அதனால் ராவணனுடைய ரதத்தை உடைத்து, குதிரைகளையும் சாரதியையும் நாசம்செய்து, ராவணனுடைய ஹ்ருதயத்தின் வலது பக்கத்தில் காலால் உதைத்தார். (593)

அந்த உதையைப் பொறுக்க முடியாமல் ராவணன் சுழன்று மயக்கம் கொண்டான். அந்த சமயத்தில் விபீஷணன் அந்த விடத்தைவிட்டு நகர்ந்து ஸ்ரீராமனைக் காப்பாற்றும் ரக்ஷகர்களிடம் சென்றான். அப்பொழுது ராவணன் நிதானமடைந்து, ஹனுமாரைச் சண்டைக்கு இழுத்து, அவரை ஓங்கி அடித்தான். அப்பொழுது ஹனுமார் வாலைச் சுழற்றிக் கொண்டு ஆகாயத்தில் எழும்பினார். (594)

ராவணன் ஹனுமாருடைய வாலைப் பிடித்துக் கொண்டான். பிரபல பலவானான ஹனுமான் வாலில் தொங்கும் ராவணனுடன் ஆகாயத்தின் மேலே எழும்பினார், மிக வேகத்துடன் ஹனுமார் கீழே இறங்கி, அவனை பூமியின் கீழே தள்ள, அதைச் சகிக்காத ராவணன் மீண்டும் ஓடி வந்து வெகு ரோஷத்துடன் அவருடன் சண்டை செய்தான். இருவர்களுக்கும் பயங்கரமான யுத்தம் ஏற்பட்டது. அவர்கள் இருவர்களும் மிக்க க்ரோதத்துடன் ஆகாயத்திலும் பூமியிலும் சண்டை செய்தார்கள், ஒருவரை

யொருவர் அடித்துக் கொண்டார்கள். (595)

அவர்கள் இருவர்களும் ஆகாயத்தில் சண்டை செய்யும்போதும், இருவர்களும் பலமான சப்தங்களுடன் ஆரவாரம் செய்துகொண்டு யுத்தம் செய்யும் போதும், அவர்களைப் பார்த்தால் புகை மண்டலமாயுள்ள பர்வதமும் தங்க நிறமுள்ள ஸுமேரு பர்வதம் போலவும் சோபிதமாக விளங்கினார்கள். எப்பொழுது ராக்ஷஸ வீரனான ராவணனை புத்தியினாலும் தேக பலத்தாலும் சூக்ஷ்ம உபாயத்தாலும் யுத்தத்தில் ஹனுமார் அடக்க முடியவில்லையோ, அப்பொழுது வாயுபகவானின் புத்ரனான ஹனுமார் பிரபு ராமசந்திரனுடைய சரணங்களை நினைத்துக் கொண்டார். (596)

[*தியானம்*

ஹே ஆரா அமுதே, வாமனா, நரசிங்கா, ஆதி கூர்மப் பிரானே, மத்ஸ்ய மூர்த்தியே, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம; ஆதிப்பிரானே, சீதாதேவியே, என் ஸ்ரீ தேவியே, ஸ்ரீமதே ராமாய நம: அம்மா சீதே, மஹாலக்ஷ்மி, பாஞ்சராத்திரத்தில் உன்னுடைய "ஸ்ரீ" நாம சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹே மஹாலக்ஷ்மி, ஸ்ரீ தேவி, என்னிடம் நீ வர மாட்டாயா! உன்னைத்தானே ஸந்தோஹ லக்ஷ்மி, மோக்ஷலக்ஷ்மி என்று சொல்லுகிறார்கள். எம்பெருமானுடைய கட்டளைகளை நிறைவேற்றாமல் பயந்து நடுங்கும் சேதனன் உன்னை அணுகியல்லவோ பயம் தெளிந்தவனாக பகவானை ஆஸ்ரயிக்கிறான். ஆதலால் குற்றமுள்ள மஹத்தான அபராதிகளுக்கு நீஸ்வ பாவமாகவே அனுக்ரஹ சித்தமுள்ளவளாக விருக்கிறாய். சீதே, நீ பகவானை பத்மா என்கிற பெயரால் ஸதா ஆஸ்ரயித்திருக்கிறபடியால், பகவானும் தன்னை ஆஸ்ரயித்துள்ள குற்றமுள்ள சேதனர்களையும் உய்விக்க எண்ணம்கொண்டு, நெஞ்சுருகி, "இவர்களைத் தண்டிக்கக்கூடாது; நாம் இவர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று எண்ணமிடுகிறான். அதனால் சேதனர்களின் சார்பாக புருஷகாரம் நீ செய்வதால், உனக்கு ஸ்ரீ தேவி என்கிற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. அபராதம் பண்ணின காகாசுரனைக்கூட ஸர்வேஸ்வரனுடைய திருவடி

களில் சேர்த்தருளிச் செய்து, அவர்களின் அபயக் குரலைக் கேட்கிறாய். பிரபத்தி செய்து என்னை ரக்ஷி," என்று வாய்விட்டு, மைத்ரி பாவத்தினால் வந்து உன்னை அடையும் எவனையும் பகவான் பக்கலில் நின்று, பகவானின் ஆஸ்ரித ரக்ஷகத் வத்தைப் பூர்த்தி செய்கிறாய். பரமேஸ்வரி, அஹங்காரம் என்று மஹா பலியினால் பாடப்பட்ட நீ பாகாஸுரனை அடக்கிய இந்திரனிடம், ஆசை, சிரத்தை, த்ருதி, க்ஷாந்தி, விஜிதி, ஸந்நிதி, க்ஷமை இவ்வெழுவருக்கும் முன் செல்லும் எட்டாவது மங்கள மூர்த்தியான விருத்தி தேவியே, தர்மத்தில் உறுதியுள்ள மனத்துடன் இருக்கும் தேவர்களிடம் வசிப்பவளே, அசோகா, தீப்த சீதையே என் பக்கத்தில் வரவேண்டும். உலகத்தாருக்கு ஹிதம் செய்வதையே விரதமாகக் கொண்ட இந்திரா, ராவணன் போன்ற விபரீத அஹங்காரம் உள்ளவர்களையும் "ஏ, ராவணா, நீ மரணமடையாமல் இலங்கையில் வாழ விரும்புவாயாகில் புருஷோத்தமனை ராமனை மைத்ரி பாவத்தால் சரணம் அடை;" என்று வாதித்தாயே, அப்பேற்பட்ட லோக சோகவிநாஸினி, எனது எல்லா பாபகர்மங்களையும் நாசம் செய்துவிட்டு, உபாயவிரோதி எனப்படும் பிரபத்தியை அடைய விடாமல், பரம புருஷார்த்தமான பகவானுடைய திருவடிகளை, வஞ்சனையென்னும் கை தொழும், தன நெஞ்சம் வேவ நெடிதுயிர்க்கும், விறல் கஞ்சனை வஞ்சனை செய்தீர், உம்மைத் தஞ்சமென்று இவள் பட்டனவே, என்று நான்படும் கஷ்டங்களை ஹே மாளினி, பகவானிடம் சொல்ல மாட்டாயா? அதேபோல, சக்கரத்தண்ணலே யென்று தாழ்ந்து, கண்ணீர் ததும்ப, பக்கம் நோக்கி நின்றலந்தேன். பாவியேன் காண்கிறேன், மிக்க ஞானமூர்த்தியாய் வேத விளக்கினை, என் தக்க ஞானக்கண்களாலே கண்டு தழுவுவனே என்று அனுசந்திக்கும் என்னை உம்மை அனுபவிக்கவொட்டாது தடுத்து நிற்கும் பிராப்ய விரோதியாகிற கர்மங்களைப் போக்க மாட்டாயா? சரணம் காகுத்ஸ: ஸர்வதேவ நமஸ்கார: என்று சலிக்காமல் மஹேந்திரன் ருதுவுக்கு தக்கபடி மழை பெய்வித்தான்; ஒருவனும் தர்மவழியிலிருந்து நழுவவில்லை; பூமியும் ரத்னங்களை விளைவிக்கும் பலவிடங்களை ஆபரணமாகக் கொண்டது; தேவர்களும் ஜயமுள்ளவர்களாக பரந்த மனம்

கொண்டார்கள் என்று போற்றும்படி பூமி, ஜலம், அக்கினி, மனி தர்களுள் ஸாதுக்களும், பிராம்மணர்களுக்கு நன்மை செய்பவர் களும் ஸத்யம் பேசுகிறவர்களாயுமிருப்பவர்களிடம் தயையுடன் இருப்பாயே, தன்னை விபாகம் செய்துகொண்ட காருண்யகிருஹ ராஜலக்ஷ்மியே, உன்னை ஆஸ்ரயித்து ச்ரீ ஞுதி என்கிற சப்தத் தால் அறிந்து, நித்யகைங்கர்யமாகிற பகவானுடைய கைங்கர் யத்தையும் தர்மத்தையும் குணஸ்வரூபமாக உடையவள், என் றும் நான் உன்னை ஸஹதர்ம சாரிணி! என்று போற்றி ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.]

என் பிரபு ஆஞ்சநேயர், அஞ்சனாதேவியின் குமாரன் ஸ்ரீ ரகுவீரனுடைய பாதபத்மங்களை ஸ்மரித்துக் கொண்டு, ஹுங் காரம் செய்துகொண்டு ராவணனை ஓங்கி அடித்தார். இருவர் களும் பூமியில் புரண்டு சண்டை செய்தார்கள். மீண்டும் எழுந்து அவர்கள் சண்டை செய்தார்கள். மஹாவீரரான ஹனுமான் மஹா வர பிரஸாத பலமுள்ள ராவணனுடன் கடும் யுத்தம் செய்யும்போது, யாருக்கு ஜயம் ஏற்படும், என்கிற நிச் சயம் தேவர்களுக்கு ஏற்படவில்லை. எங்கு பார்த்தாலும் ஜய சப்தங்கள் கேட்கப்பட்டன. இவ்விருவர்களும் சண்டை செய் வதையும், சங்கடஹர ஹனுமாரின் சிரமத்தையும் கண்ட இதர வானர வீரர்கள் ஓடிவந்தார்கள். அவ்விதம் ஓடிவரும் வீரர் களை ரணமதம் கொண்டு ஜயம் என்கிற எண்ணம் கொண்ட ராவணன் சகல வானர வீரர்களையும் தனது பிரசண்டமான புஜங்களின் பலத்தினால் விரட்டி அடித்து அவர்களைத் துன் புறுத்தினான். (597)

அப்பொழுது ரகுவீரனுடைய நாமங்களை உச்சரித்துக் கொண்டு, வானர வீரர்கள் பிரசண்ட வேகத்துடன் ஓடிவந் தார்கள். ராவணன் அவர்களைப் பார்த்தான். அவர்கள் மிகுந்த பலத்துடன் ஒருங்கே கூடி அவனைப் பிடிக்க, ராவணன் மாயையைப் பிரயோகித்தான். (598)

க்ஷண பரத்தில் ராவணன் மாயமாக மறைந்து போய்விட் டான். பிறகு பலரூபங்களுடன் வெளிவந்து தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டான். ரகுபதியின் சேனையின் நடுவில் எத்தனை கபிகளும் கரடிகளும் இருந்தனவோ, அவர்களின் பக்கத்தில் ஒவ்வொருவர் சமீபத்திலும் ராவணன் அநேக ரூபங்களுடன்

காணப்பட்டான். (599)

வானரர்கள் எங்குப் பார்த்தாலும் அபரிமிதமாக ராவணனுடைய பல உருவங்களைக் கண்டார்கள். இங்கு பார்த்தால் ராவணன், அங்கு பார்த்தால் ராவணன், எங்கு பார்த்தாலும் ராவணன் காணப்பட்டான். வானரர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஒரே கலக்கத்துடன் காணப்பட்டார்கள். உடனே அவர்கள் கதற ஆரம்பித்தார்கள். "ஹே லக்ஷ்மண்ஜி, ரகுவீரா, எங்களைக் காப்பாற்றுங்கள், என்று உதவிக்கு வேண்டிக்கொண்டு அவர்கள் நாலாபக்கத்திலும் ஓட ஆரம்பித்தார்கள். (600)

[*தியானம்*

நாராயணு, மஹாலக்ஷிமி சஹித ஸ்ரீரங்கேசரே, ஸமஸ்த பர்வாராய ஸ்ரீமதே நாராயணுய நம: ஸ்ரீமதே ராமசந்திராய நம: ஹே ஆர்த்தரே, நீதானே லக்ஷ்மி, பூதி, ஸ்ரீ, சிரத்தை, மேதை, ஸந்நதி, விஜிதி, ஸ்திதி, த்ருதி, ஸித்தி, ஸம்பூதி, ஸ்வாஹா, ஸ்வதா, ஸம்ஸ்துதி, நியதி, க்ருதி, என்று பல பெயர்களுடன் பல உருவங்களுடன் இருக்கிருய். ஹே மஹாலக்ஷ்மி, அம்மா, நீ வெல்லும் திறமை உள்ளவர்களும், இயற்கையில் தர்மமுள்ளவர்களுமான அரசர்களின் படைமுகத்திலும், த்வஜங்களிலும், தேசங்களிலும், நகரங்களிலும் வசிக்கிருய். ஹே சாமுண்டா, திக்கஜங்களால் அம்ருத கலசங்களால் திருமஞ்சனம் செய்யப்படும் திருமேனியை உடையவளே, நீயும் பெருமாளும் சேர்ந்த காடோபகூடமான சேர்க்கை, உங்கள் இருவர்களுடைய இயற்கையான ஸ்வரூபம் என்றும் ஆனந்தகரமாகவிருக்கிறது. எப்பொழுதும் மந்தஹாஸத்துடன் உங்களை விளங்கச் செய்கிறது. சிவசக்தியின் ஐக்ய ஸ்வரூபம் போல என்றும் ஆனந்த கூடமான ரஹஸ்ய சேர்க்கை உள்ளவளே, ரஹஸ்ய பிந்துவே, ஆராத அமுதமே, நாராயணி, மந்தஹாஸ சிரிப்பினுல் எங்களைப் பாரு அம்மா. அம்ருதமயமான வசனங்களால் எங்களை அனுகிரஹிக்க வேண்டும். எங்களுடைய அலக்ஷ்மித்வத்தை நீதான் ஸர்வ காலத்திலும் போக்கி, உங்களை அடைந்த கிருத கிருத்யர்களாகச் செய்ய வேண்டும். ராம சேர்க்கையை அடைந்ததினுல் ஜ்வலிக்கும் மஹாசீதே, பத்மா, தயையினுல் நனைந்த திருவுள்ள

முள்ளவளே, உன்னுடைய லாவண்யம் ஸகல லோகங்களையும் மோஹிக்கச் செய்யும்போது நான் மாத்திரம் எவ்விதம் விதி விலக்காக இருக்க முடியும்? பகவானுடன் சேர்ந்திருப்பதால் ஏற்படும் பேரானந்தம் உன்னையும், பகவானையும், எங்களையும் திருப்தி அடையச் செய்கிறது. நாங்கள் நம்மாழ்வார் சொல்லியபடி, மயர்வற வென் மனத்தே மன்னினான் தன்னை, உயர்வினையே தரும் ஒண்சுடர்க் கற்றையை, அயர்விலமரர்கள் ஆதிக் கொழுந்தை, என் இசைவினை என்சொல்லி யான் விடுவேனோ; யானொட்டி யென்னுள் இருத்துவ மென்றிலன், தானொட்டி வந்து என் தனி நெஞ்சை வஞ்சித்து, ஊனொட்டி நின்று என்னுயிரில் கலந்து, இயல் வானொட்டுமோ இனியென்னை நெகிழ்க்கவே - என்கிறபடி உங்களுடைய தயவால் மூன்றுவித தாபங்கள் அழிக்கப்பட்டு, உங்களுடைய தரிசனம், அம்ருத மயமான பேச்சுக்கள், குளிர்ந்த அணைத்தல், கடாக்ஷ வீக்ஷண்யங்கள், ஆகியவைகளால் ஸந்தோஷப் படுத்தப்பட்ட நாங்கள் பிரஹ்லாதன், தியாகராஜர், துளசி தாஸர், பரதன், லக்ஷ்மணன், விபீஷணாதிகள் மாதிரி தங்களுடைய ஸௌந்தர்ய, ஸுகுமார, தொடுவதற்கும் ஸுகமாய் ஸர்வ ஸுகந்தமானதும் தாமரை புஷ்பத்தின் நிறம், வாசனை, காந்தி, எல்லோராலும் எவ்விதத்தாலும் போற்றப்படும் காமயமான; என்று புகழப்படும் தங்களுடைய திவ்ய மங்கள விக்ரஹங்களை த்ருவமாக அடையப்பெறுவேனாக. ஹே ஸ்ரீதேவி, அகிலலோக மாதரம் அஸ்மத் மாதரம் அசரண்ய சரண்யாம் அனன்ய சரணம் சரணமஹம் பிரபத்யே.]

எங்குப் பார்த்தாலும் ராவணமயமாகவிருந்தது. பத்துத் திக்குக்களிலும் கோடிக்கணக்கான ராவணர்கள் ஓடிவந்தார்கள். கோரமாக கர்ஜித்துக்கொண்டு, கடூரமான வார்த்தைகளையும், யுத்தத்தில் பயப்படக்கூடிய ஆயுதங்களையும், சப்தங்களையும் பெருவாரியாக செய்துகொண்டு யாவராலும் காணப்பட்டார்கள். அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் ஸகல தேவதைகளும் (விருத்ராசுரனைக் கொன்ற) மஹேந்திரனும் நடுநடுங்கி, தங்களுக்குள் பரஸ்பரம் சொல்லிக்கொண்டார்கள். "இப்பொழுது, ஜயத்தில் நாம் ஆசையை விட்டுவிடுவோம். நாம் ஓடிப்போய்விடலாம்," என்று அவர்கள் சொல்லிக் கொண்

டிருந்தார்கள். (601)

"ஒரே ஒரு ராவணன் ஸகல தேவர்களையும் ஜயித்தான்; இப்பொழுது பல ராவணர்கள் தோன்றியிருக்கும்போது, நம்கதி என்ன ஆகும்? நாமெல்லோரும் ஒளிந்துகொள்வதற்கு, பர்வ தங்களின் குஹைகளில் இடம் ஏற்பாடு செய்து கொள்ளலாம், நம்மையும் ராவணர்கள் துறத்தி வருவதற்குமுன் நாம் ஏற் பாடுகளைச் செய்துவிடலாம்," என்று சொல்லிக் கொண் டார்கள். அப்பொழுது அந்த தேவக் கூட்டங்களில் இருந்த பிரும்மா, சம்பு, முனிகணங்கள், திரிகால ஞானரிஷிகள், எவர் களுக்கு பிரபு, புருஷோத்த மராமனுடைய வீரபிரதாப மகிமைகள் முழுவதும் ஓரளவு தெரியுமோ, அவர்கள்கூட மனம் கலங்கினர்கள். ஆனல் பகவானின் லீலேகளை முற்றும் அறிந்தவர்களாக அந்தவிடத்தில் அசைவற்றவர்களாக ஆர் வத்துடன் பகவான் ராமசந்திரன் என்ன செய்யப்போகிறர், என்று ஆவலுடன் காத்திருந்தார்கள். (602)

[*தியானம்*

பரமேஸ்வரா, நாராயண பிரபோ, மஹாலக்ஷ்மி சமேத ரங்கநாதா, ரங்கநாயகா, ஓம் நமோ பகவதே ஸ்ரீமந் நாராயணஸ்ய சரணௌ சரணம் பிரபத்யே. ஸ்ரீமதே நாராயணய நம:, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே விஷ்ணவே நம: மஹா லக்ஷ்மி அம்மா, உனது ஸ்வரூபம் இயற்கையாகவே சந்திரனைப் போல குளிர்ச்சியையும் ஆனந்தத்தையும் தரக் கூடியது. பரிபூர்ண பிரும்மமே, உன்னுடைய திருமேனி பரிபூர்ண ஆனந்தமய ரஸமானது. உன்னுடைய யசஸ் ஸர்வ சராசரங்களாலும் ஸர்வ லோகங்களிலும் போற்றப்படுவதால், அம்மா, தாயே நீ யஸஸ்ஸினல் ஜ்வலிக்கிறய். பகவானுடைய ஸஹதர் மசாரிணியே, நாராயணப்ரியே, நீயே ஸர்வ லோகங் களிலும் பிராப்யமாகவும் பிராபகமாகவும் அடையப்படுகிறய், அதனல்தான் பிரும்மா, ருத்ரன், மஹேந்திரன், ஸர்வதேவர்கள், ஸர்வசராசரங்கள் ஆகிய எல்லோரும் உன்னுடைய பொற் பாதங்களை தேவஜுஷ்டாம் என்கிற நாமத்திற்கு பொருள்படும் படி தங்களுடைய ஸம்ருத்தியைப் பெருக்குவதற்கு அருகதை ஆகிறர்கள் அம்மா. திருவனந்தாழ்வான்மீது வீற்றிருக்கும்

போக சயனி, உன் ஆனந்தப் புணர்ச்சியின் இன்பத்தைப் பருகும் விஷ்ணுவாகிற நாராயணன் உன் ப்ரீதிக்கு விஷயமாகவும் ஆகின்ருன் அன்ரே? அதனுல்தானே, தேவி, ஸ்ரீவிஷ்ணுவை எப்பொழுதும் பகைப்பவர்களான அசுர ஜனங்களை விட்டுவிட்டு வெகு சீக்கிரத்தில் நீ நழுவி விடுகிருய். உன்னை உதாராம் என்று பலதடவைகள் ஆளவந்தார் சொல்லியமாதிரி, அடிக்கடி அடிக்கடி நானும் சொல்லுகிறேன் அம்மா. எனது அஞ்சலி பரத்திருல் கண்கள் கலங்கும் உன்னை, இவ்வுலகத்திலும் வேறு உலகங்களிலுமுள்ள ஐஸ்வர்ய போக போக்கியங்களை அஞ்சலி செய்பவனுக்குக் கொடுத்தும், உன் காருண்யத்திருலும் கிருதக்ஞையிருலும் அம்மா, இவனுக்குத் தகுந்தபடி நான் ஒன்றும் செய்யவில்லையே என்று நீ லஜ்ஜைப்படுகிருய். தாயே, இதென்ன ஒளதார்யம், சொல் அம்மா, என்று பட்டர் அருளிச் செய்திருக்கிருர். தாமரை உட்காயில் உட்கார்ந்து கொண்டு உன்னைச் சுற்றி காலசக்ரம் வட்டம் போடுவதாலும், உனது ஆக்ஞையை சக்கிரத்தாழ்வான் ஸதா நிறைவேற்ற சித்தமாயிருப்பதால், உன்னை நான் பத்ம நேமி என்று அழைக்கிறேன். ஹே லக்ஷ்மி, உன்னை வந்து அடைபவர்களின் துயரங்களை அறுத்து, அவர்களது அநிஷ்டங்களைப் போக்கி, ஸதா சுபாஸ்ரயமாக விளங்கும் பகவான் நாராயணருடைய திருவடிகளில் என்னைச் சேர்த்து, எனது நாராயண பக்தியை வளர்த்து, என்னை அருள்பாலிக்க வேண்டும். பத்மகரே, பத்மாஸனே, பத்மாலயே, உன்னுடைய பத்ம முத்ரா உன்னைச் சரணமடைந்தவர்களின் அநிஷ்டங்களைப் போக்கி, அலக்ஷ்மித்வம் என்கிற ப்ராபய்ய ப்ராபக விரோதிகளை நாசம் செய்கிறது. எனக்கு வேறு புகல் இல்லாமல், நம்மாழ்வார் சொல்லியபடி ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி, வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம் தெழி குரலருவித் திருவேங்கடத்து, எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே; பிறவித் துயரற ஞானத்துள் நின்று, துறவிச்சுடர் விளக்கம் தலைப் பெய்வார்; அறவனை ஆழிப்படையந்தணனை மறலியை யின்றி மனத்துவைப் பாரே என்று அநுஸந்திக்கும் என்னைப் பரிவுடன் பார் அம்மா. என் பக்கத்தில் ஸதா விற்றிருந்து அனுக்ரஹி அம்மா. என்னைவிட்டு, எனது அலக்ஷ்மித்வம் உனது கருணையிருல்

விலகட்டும் அம்மா. என் பாபங்களையும் பயங்களையும் போக்கி, நாராயண திருவடிகளில் சேர யோக்யதையாக என்னைச் செய் அம்மா. என் தியான மூர்த்தியே, உன்னை ''சரணமஹம் பிரபத்யே,'' என்று அடிக்கடி சொல்கிறேன். எனது தீனத் தன்மையைப் புரிந்து, என் வார்த்தைகளைத் தயவு செய்து கேளு, அம்மா கேளு.]

அந்த மஹானுபாவர்களுக்கு பரந்தாமனுகிற சீதா ராமனுடைய பிரதாபங்கள் முற்றிலும் தெரியும். அதனுல் அவர்கள் நிர்பயத்துடன் அசைவற்று தங்களது ஸ்தானங்களில் அமைதியுடன் இருந்தார்கள். வானரங்களும் கரடிகளும் நிஜமாகவே அவ்வளவு ராவணர்களையும் உயிருடன் இருப்பதாக நம்பி, மஹா பயத்தை அடைந்தார்கள். அதனுல் ராகவனிடம் சரணமடைந்தவர்களாக, ''ஹே கிருபாளு, நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பயத்துடன் தீனக்குரலுடன் கத்திக்கொண்டு, ரணகளத்திலிருந்து அவர்கள் புறம்காட்டி ஓடினுர்கள். அத்யந்த பலவான்கள், ரண பிரியர்கள், யுத்தத்தில் தேர்ச்சிபெற்ற ஹனுமான், அங்கதன், நீலன், நளன் மாத்திரம் சண்டைசெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கபடரூபம் கொண்ட ராவணர்களை திராக்ஷைப் பழத்தைக் கசக்கிப் பிழிவதைப் போல, கபட பூமியில் உற்பத்தி செய்யப்பட்ட ராவணர்களை, அழித்தார்கள். (603)

ஸுரர்களும், வானரர்களும் படும் அவஸ்தைகளைக் கண்ட பிரபு கோஸலாதீஸர், ரகுராமன், சாரங்கதன்வா தனது கோதண்டத்தை வளைத்து, ஒரே பாணத்தினுல் மாயையை அழித்து, பல ராவண உருவங்களையும் அழித்துக் கொன்றுர். (604)

க்ஷணபரத்தில் ராவணனுடைய மாயை முழுவதும் அழிக்கப்பட்டது. ரவி உதயமானபின்பு அந்தகார இருட்டுமுழுதும் அழிவதுபோல, ராவணனுடைய சகல மாயைகளும் அழிந்தன. ஒரே ஒரு ராவணன் யுத்த பூமியில் இருப்பதைக் கண்ட தேவர்களுக்கு, ஆனந்தம் தாங்க முடியவில்லை. பிரபுவின் மீது அவர்கள் புஷ்பவர்ஷங்களைச் செய்தனர். (605)

என் பிரபு மஹாக்ருபாளு, பிறர்படும் துக்கங்களை தனது கஷ்டங்களைப்போல பாவிக்கும் உதாரர் ஓடிப்போய், தனது

திருக்கரங்களால் ஒவ்வொரு வானரத்தையும் அழைத்தார். அவரால் அழைக்கப்பட்ட வானரங்கள், ஒன்று மற்றொன்றை அழைத்துக்கொண்டு, யுத்தகளத்திற்கு திரும்பி வந்தன. பிரபுவின் ரணபலத்தைக்கண்டு மிக்க உத்ஸாஹத்துடன் கரடிகளும் வானரங்களும் திரும்பி ஓடி வந்தன. அவைகள் வரும்போது வெகு உத்ஸாஹத்துடன் குதித்துக்கொண்டு ஓடி வந்தன.

(606)

[*தியானம்*

ஆராவமுதே, நாராயணு, கடபயாதி பிரயோகங்களால் சீதாராம என்கிற இருபெயர்களாகிற 54எண்ணிக்கைகொண்ட இரு நாமங்களே, நீங்கள் சீலம், வயது, யௌவனம், அழகு, ஸம்பத் முதலியவைகளால் சமமாகவும் சிறந்து விளங்குகிறீர்கள். இருந்தாலும் "அஸிதே க்ஷணு" என்கிற காரணப் பெயர்கொண்ட சீதையின் காருண்ய கடாக்ஷங்களின் பெருமை சொல்லமுடியாதபடி இருக்கின்றனவே. மஹாலக்ஷ்மி, ஸூர்யன் போன்றவளே, எனது கர்மத்தால் நான் உண்டானேன்; என்று வாதித்துக்கொண்டு, தாய் தந்தையர்களைத் தள்ளிவிட்டு, அதர்மத்தில் "நான் பெரியவன்," "நான் செய்வது, சொல்வதுதான் தர்மம்," என்று சொல்லி நடக்கும் சோபைகெட்ட உள்ளிருக்கும் அழுக்கையும், பாஹ்ய விரோதிகளான காமம், க்ரோதம், லோபம், மோஹம் ஆகிய கடும் வினைகளால் ஏற்படும் பிராப்ய விரோதிகளையும் அழிப்பவளே, மாயையினால் சூழப்பட்டு, அன்யதா ஞானம் (ஒன்றை வேறொன்ருக நினைப்பது) உன்னைவிட பெரும் தனம் என்று வேறொன்றை நினைப்பது, ஆகிய ஸகல விக்னங்களையும் போக்கும் ஆதித்ய ரூபியாகிற வைஷ்ணவியே, அமரர்க்கு அமுது ஈதத ஆதிக் கொழுந்தே, அம்மா நீதானே புண்ணியசாலிகள் நிலைபெற்று நிற்கும் ஸத்பதாசாரத்திற்கு மார்க்கதரிசியாக விருக்கிறாய். வனஸ்பதிகளுள் மிக்கச்சிறந்த ஸ்ரீ பில்வநிலையே, உனது ஸங்கல்பத்தினால் அல்லவோ ஸ்ரீபலம் என்று சொல்லப்படும் நாராயண திருவடிகளை உன்னை வணங்கிய சேதனனுக்கு அருளிவிக்கிறாய். தபஸ் என்று சொல்லப்படும் உன்னைப்பற்றிய நினைவுகள், ஸ்துதிகள், நமஸ்காராதிகள், அர்ச்சனையுடன் கூடின நைவேத்யங்கள் ஆகிய ஸத்கர்மாக்கள் யாவும் எனது ஸ்வாதந்திரியத்தை அழித்து, உன்னால் பல தட

வைகளில நிரூபிக்கப்பட்ட கிருபையினுல் நான் பகவானுடைய பாதங்களில் நமஸ்கரிக்கும் பாரதந்திரியம் கொண்ட ஜீவன், எனது மார்க்கம் ஸதா ஆசார்ய உபதேசத்திஞல் சம்பாதிக்கப் பட்டதும்,உனக்கும் யேற்பட்டதுமான அனன்யார்ஹ சேஷத்வம் என்கிற விரததீக்ஷை முதலியவைகளை, நீதான் அம்மா மிக்க கருணையுடன் ஸ்வீகரித்து, ஏபாவம் பரமே ஏழுலகும், ஈபாவம் செய்து அருளாலளிப்பாரார், மாபாவம் விட அரற்குப் பிச்சை பெய், கோபாலக் கோளரி ஏறின்றியே, என்று அனுசந்திக்கும் என்னை, உங்களை பரதத்வமாக வரித்த என்னை, ரக்ஷிக்க வேண்டும். என்னுடைய விரோதிகளான மதம் முதலிய அலக்ஷமிகளை நாசம் செய்ய வேண்டும். அன்யதா சரணம் நாஸ்தி, த்வமேவ சரணம் கத;, சரணுகததீனர்த்த பரித்ராண பராயணே, ஸர்வ ஸ்யார்த்தி ஹரே, தேவி நாராயணி நமோஸ்துதே", என்று சொல்லும் என்னிடம் ஓடிவா அம்மா. துர்க்காதேவி, எனது பாப பயங்களை அபஹரித்து, சுபமான கீர்த்தியையும் கதியையும் அளிக்கவேண்டும். அம்மா திரியம்பகே, உனது ஸங்கல்பம் அன்ரோ. சுபங்களை அறிவிக்கும் காலம். காலம், வேறுபடவும், உனது ஸங்கல்பம் அன்ரோ? தேவேந்திரனிடம் நீ அசுரர்களை விட்டு வலிய வந்தாயே, அதுமாதிரி தேவி, பகவதி, நித்யானபாயினி, அகிலலோக ஜகன்மாதாவே, என்னிடமும் சந்தோஷத்துடன் நீ வலிய வரவேண்டும். என்னுல் பூஜிக்கப்பட வேண்டும். நான் வசிக்கிற இடத்தில் நீயும் கூடி இருக்கவேண்டும். உன்னுடன் கூடி இருப்பவர்களும் உனது ஸங்கல்பத்தை அடுத்தவர்களும் எட்டாவது மஹிஷியான ஜயாதேவியுடன் கூடிய ஏழு லக்ஷ்மிகளும் உங்களது தர்மத்தில் உறுதியுள்ள என்னை, தேவர்களிடம் வசிப்பேன் என்று வந்தாயே, கோமாதாவிடம் வந்தாயே, அதுபோலக் கருதி என்னுடன் வசிக்கவா. அம்மா பகவதி, மதுகைடப ஹாரிணி, அம்மா பகவதி ஓடிவா.]

தேவதைகள் புஷ்பங்களை வர்ஷித்துக்கொண்டு அஞ்சலி பந்தத்துடன் நாராயண பரர்களாக ஸ்ரீ சீதாராமனை ஸ்தோத்திரம் செய்வதைக் கண்டான் ராவணன். அவனுக்கு பயத்திஞல் க்ரோதம் ஏற்பட்டது. தேவதைகளை அவன் அண்ணுந்து

பார்த்தான். "அடே மூர்க்கர்களே, என்னைத் தனியாக விடப்பட்ட ஒருவனாக எண்ணி விட்டீர்களா! நீங்கள் எப்பொழுதும எனக்கு அடங்கி பயந்து, நடந்தவர்கள், என்னால் உதைக்கப் பட்டு என்னை நம்பி வாழுபவர்கள் என்பதையும் மறந்து கொண்டு, எனது முன்பே ஸ்ரீ ராமனைப் புகழ்கிறீர்களா; என்று கர்ஜித்துக்கொண்டு, கிரோதபரனாக, தேவர்களின்மீது பாய ஆகாசத்திலே தாவினான். (607)

தேவதைகள் மிக்க பயத்துடன் ''ஹா ஹா'' காரம் செய்து கொண்டு, ஓட ஆரம்பித்தார்கள். ராவணன் மீண்டும் கதறினான், ''துஷ்டர்களே, என் முன்பு நீங்கள் எவ்விதம் தப்பி ஓட முடியும்? எங்கு போனாலும உங்களை நான் விடப்போகிற தில்லை.'' அவ்விதம் செல்லும் ராவணனையும் தேவதைகளின் வியாகுலங்களையும் கண்ட அங்கதன் தானும் மேலே எழும்பி, ராவணனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, ராவணனை மேலே போகவிடாமல் தடுத்து, சிறிது நேரத்தில் பூமியின்மீது அவனைக் கீழே தள்ளினான். (608)

வாலிஸுதனான அங்கதன் ராவணனைப் பூமியில் உருட்டித் தள்ளி, கால்களால் உதைத்து, சிறிது நேரத்தில் பிரபுவினிடம் ஓடிவந்தான். ராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். பயங்கரமான கர்ஜனை செய்தான். தசகண்டங்களால் எழுப்பப்படும் சப்தங்கள் மிக்க கடோரமாக விருந்தன. பத்துக் கைகளில் விற்களைத் தரித்துக்கொண்டு மற்ற பத்து கைகளினால் அஸ்திரங்களைப் பூட்டி, பாணவர்ஷங்களை ராவணன் பொழிய ஆரம்பித்தான். அவனுடைய அஸ்திர வர்ஷத்தை தாங்க முடியாமல் எதிரிகளின் வீரர்கள் ஓட ஆரம்பித்தார்கள். ஸகல யுத்த வீரர்களும் காயமடைந்து, அதி வியாகுல மடைந்தபோது, ராவணன் தனது பாஹுக்களின் பலத்தைக்கண்டு, தனக்குள் சந்தோஷம்கொண்டு அட்டஹாஸம் செய்தான். (609)

அந்த சமயம் பார்த்து, பிரணதார்த்தி ஹரனாகிற ரகுபதி ராவணனுடைய சிரங்களையும், புஜங்களையும், தனுஷ்ஷுகளையும் வெட்டித் தள்ளினார். அவைகள் அறுபட்டுவிழ, அவைகள் மீண்டும் முளைத்தன. புதிது புத்தாக அவைகள் முளைக்கும் போது, ஆச்சர்யமாக விருந்து. அந்த காக்ஷி, தீர்த்த பிரதேசங் களில் செய்யப்படும் பாபங்கள் பல தடவைகளாகப் பெருகுவது

போல, [திருப்பதி திருமலையில் செய்யப்படும் பாபங்கள் மஹா பாதகங்களாக விருத்தி அடைவதுபோல,] அவைகளும் விருத்தி அடைந்தன. (610)

சத்ருவின் சிரங்களும் புஜங்களும், புதிது புதிதாக வளர்ந்து வருவதைக் கண்ட கரடிகளும் வானரங்களும் மிக்க பயந்தவர் களாகவும், கிரோத மூர்ச்சிதர்களாகவும் ஆனார்கள். இந்த மூர்க்கன் அழிபடப்படாதவனைப்போல இருக்கிறானே, என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் அதிக கோபத்தினால் அவனைப் பிடிக்க ஓடிவந்தார்கள். (611)

[*தியானம்*

பிரபோ நாராயணா, ஓம் நமோ பகவதே மஹானுபாவாய மஹா புருஷாய மஹா விபூதபதயே நம: ஸ்ரீமதே நாராயணாய நம:. ஸமஸ்த பரிதாராய ஸ்ரீமதே நாராயணாய நம:. தேவி, தாரித்ரியதுக்க பய ஹாரிணி, ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா, நாராயணி, ஓடிவா, அம்மா, என் சமீபத்திலிருக்க தாமதமின்றி ஓடிவா. பராசராதிகள் உன்னைத்தானே வித்யை யாகிற ஆத்மவித்யை, யக்ஞ வித்யை (கர்மகாண்டம்) உபா ஸனம் என்கிற மஹா வித்யை, இந்திரஜாலம் எனப்படும் குஹ்ய வித்யை, இன்னும் பலவித ஸகல வித்யைகளாகவும், அவை களின் அனுஷ்டானமும் என்று சொல்லுகிறார்கள். நீதானே ஐஸ்வர்யங்களுக்கும் அவைகளால் உண்டாகும் கீர்த்திகளும் ஆகும். உன்னுடைய திருவருள் கிடைத்தால், புண்யசாலி களுக்கு கிடைக்கும் நல்ல பதமும், நல்ல வழியும் நிலைபெற்று விளங்கும். தக்க நெறியும் கிடைக்கும். உனது ஸங்கல்ப கடாக்ஷத்தாலே, தேவி, மனிதர்களும் நாகர்களும் யக்ஷர்களும், ஸம்பத்து நிறைந்தவர்களாகவும், நல்ல மனது உடையவர்களாக வும் இருக்கிறார்கள். பசுக்கள் நிறையப் பால் கொடுப்பதும், ஒருவனிடமும் கடுஞ் சொல் ஏற்காமல் இருப்பதும், எல்லா மனோ பிஷ்டங்களையும் அளிக்கத்தக்கதும் இந்திரன் முதலிய தேவர்கள், பிரும்மா, மஹேசர் ஆகியவர்கள்கூட அவரவர் களின் தம்பதிகள் சகிதம், உனக்குச் செய்ய வேண்டிய பூஜை யைப் பிராம்மண ஸதஸ்ஸிலிருந்து கொண்டு செய்கிறார்கள், படிக்கிறார்கள்; அதனால் இஷ்டபூர்த்தியுடன் அவர்கள்

உன்னையும், உனது கிருபையால் நாராயணனுடைய திருவடித் தாமரைகளையும் அடைகிறார்கள். ஸம்பத்திற்கும் ஆபத்திற்கும் உதவுகிறவளே, என்னை லக்ஷ்மீவானாகவும், லக்ஷ்மீ வர்த்தனனாகவும் செய்வது உனது கடமை என்று நீ மஹா கிருபையுடன் நினைக்க வேண்டும். பசி, தாஹம், மலம், அமங்களமான ஸர்வ தோஷங்களையும், ஜ்யேஷ்டாதேவி ஆகிய யாவையும் என்னிடத்திலும் என் கிரஹத்திலிருந்து நாசம் செய்ய வேண்டும். கிருஹம், வயல், தோட்டம் முதலிய விபூதிகளைத் தடுப்பவளும், தனம், தான்யம், ஸ்வர்ணம் முதலியவைகளை வரவொட்டாமல் தடுக்கும் ஜ்யேஷ்டா தேவியை நீ மனம் உவந்து விலக்க வேண்டும். ஹரிபகவானைப் பஜிக்கும் என்னை பாவங்களிலிருந்து விலகினவனாகச் செய்ய வேண்டும்.]

வாலிபுத்ரனாகிற அங்கதன், மாருதி, நளன், நீலன், வானர ராஜனாகிற சுக்ரீவன், த்விவிதன் ஆகிற பலசீலர்களை ராவணன்மீது விருக்ஷங்களை வீசி எறிந்து, பர்வதங்களையும் சுழற்றி அவன்மீது எறிந்தார்கள். ராவணனோ அவைகளை தனது கரங்களால் பிடித்து அவைகளாலேயே வானரங்களை அழித்துக் கொன்றான். (612)

வானரங்களில் சிலர் நகங்களால் ராவணனுடைய உடலை கிழித்தார்கள். சிலர் அவனை உதைத்தார்கள். ஆனால் அவர்களால் அவனுடன் நிரந்தரமாக யுத்தம் செய்ய முடியவில்லை. அதனால் அவர்கள் அவனை அடித்துவிட்டு ஓடி மறைந்து கொள்வார்கள். அங்குள்ள யாவராலும் ராவணனைக் கொல்லப் பட முடியவில்லை. அப்பொழுது நளனும், நீலனும் ராவணனுடைய சிரங்களில் ஏறி உட்கார்ந்து கொண்டு, அவர்களுடைய நகங்களால் அவனுடைய நெற்றியைக்கீறி காயம் செய்தார்கள். (613)

[*தியானம்:*

மஹாலக்ஷ்மி நாராயணா, ராமாசீதா, அம்மா, நித்யபுஷ்டே, ஸர்வ ஸுகந்தப்ரியே, கோரோசனை முதலிய வாசனை திரவியங்களாலும், இன்சொல்லாலும், மதுரமான கவிதையாலும், ஆராதிக்கத் தகுந்தவளே, இனிப்பும் மதுரமான பசுக்களின் கோமயத்திலும் வீற்றிருக்கும் மஹாலக்ஷ்மி, என்னால் ஆராதிக்கத் தகுந்த நீ என்னுடைய பாபங்களை மறந்து, இயற்கையாகவுள்ள

உனது கிருபையினுல் என்னிடம் பிரகடனப் படுத்திக்கொள்ள வேண்டும். கந்தத்தைத் த்வாரமாக (காரணமாக) உடைய வளே, நீ யாவராலும் அவமதிக்கப்படாத துராதர்ஷை. ஸகல ஜீவராசிக்கும் அன்னமாகிற பரமாத்மாவைப் போல ஸர்வ ஸம்மதமாகவும், நித்ய புஷ்டையாகவும், விளங்குகிருய். ஸம்ருத்தி என்று சொல்லப்படும் கரீஷம், கோமயாதிஷ்டமான தேவதையான மஹாலக்ஷ்மி அம்மா, பசுக்களின் கூட்டங்களைப் போல நிறையப்பெற்ற அருள்பாலை உடையவளே, நீதானே அம்மா எனக்கும், ஸர்வபூதங்களுக்கும் ஈஸ்வரி; அலக்ஷ்மி என்று சொல்லப்படும் கலகத்தை ஆதார பூதமாகக் கொண்ட தரித்ரத்வமும் என்னைவிட்டு உனது அருளால் நீங்கட்டும். ஜனங்களின் ஞானேந்திரியங்களுக்கும் புலப்படாத நிலையி லிருப்பவளே, யமநியமங்களுடன் விஷ்ணு பக்தர்களிடம் ஓடி வருபவளே, நீ என்னிடம் பிரகடனப்படுத்திக்கொண்டு ஸாந் நிதியம் செய்ய ஓடிவருவாய் அம்மா. ஹே ஸந்தோஹ லக்ஷ்மி, மோக்ஷலக்ஷ்மி என்று சொல்லப்படும் உன்னுல் அல்லவா மரீசி முதலியவர்கள் உயர்ந்த பதவியை அடைந்திருக்கிருர்கள். எப்பொழுதும் வாஸுதேவரிடம் பக்தியுள்ளவனும் உங்களைப் பற்றின ஞானத்தையும் தியானத்தையும் முக்கியமாகக் கொண்ட என்னிடம் உனது திருமாளிகை என்று நினைத்துக்கொண்டு, மனோன்மணியாக நித்யவாஸம் செய்து கொள். அம்மா, உன் அபிப்பிராயத்தின் படி நடக்க ஸித்தமாயிருக்கும் என்னிடம், பரதேவதே, எனது வாக்கு காரியம், மனம் ஆகியவைகளால் மிக சிரத் தையோடு யாசிக்கப்பட்டவளாக, ஸத்யமாக ஒருவித விகார மின்றி என்னிடம் வசிக்க வர வேண்டும்; பசுக்களின் ஸம்ருத்தி, கிரஹம், கோசம், சரீரம், களத்திரம், புத்ரபுத்ரி வர்க் கங்கள், ஸுஹிருத் வர்க்கங்கள், ஆகியவைகளை விபூஷண மாகக் கொண்டு, ஸத்வ குணத்தோடும் ஸத்ய சௌசத் தோடும் சீலாதி குணங்களால் உங்களை ஸதா மகிழவைக்கும் என்னிடம் வசித்துக்கொண்டு, உங்களுக்கு அடங்கின எங்களைவிட்டு ஒருபோதும் த்யாஜ்யம் செய்ய வேண்டாம் என்று பிருர்த்தித்துக் கொள்கிறேன், ஹே தேவி, லக்ஷ்மி தேவி, கிருபையுடன் என்னிடம் சந்தோஷமடைய வேண்டும்.]

ராவணனுடைய தலைகளிலிருந்து உதிரம் ஆறுகப் பெருக ஆரம்பித்தது. அதைப் பார்த்த ராவணன் ஹ்ருதயத்தில் நஷ்டபலன் துஷ்டனுக, மஹா சோகத்தை அடைந்தான். தனது கைகளால் அந்த வானரங்களைப் பிடிப்பதற்கு ராவணன் முயன்ருன். அவனுல் அந்த வானரங்களைப் பிடிக்க முடிய வில்லை. அவைகள் ஒவ்வொரு கையிலிருந்து மற்ருெரு கைக்குத் தாவின. இரு வண்டுகள் கமல வனத்தில் ஒவ்வொரு தாமரையிலிருந்து மற்ருென்றுக்கு தாவுவது போலத் தோன்றின. (614)

உடனே அதிக்ரோதம் கொண்டவனுக, ராவணன் அவைகளைத் தாவிப் பிடித்தான், மிக்க கெட்ட எண்ணத் துடன் அவைகளைச் சுழற்றி பூமியில் ஓங்கி அடிக்க விரும் பினுன். அப்போது அந்த இரு வானரங்களும் அவனுடைய புஜங்களைப் புறட்டி, வளைத்துத் திருகி, அவனுடைய பிடியி லிருந்து தப்பி ஓடி விட்டார்கள். அவனுடைய ஏமாற்றத்திற்கு அளவில்லை. அதனுல் மிக்க க்ரோதம் கொண்டவனுக, பத்துக் கைகளாலும் பத்து விற்களால் தீவிரமான பாணங்களைப் பூட்டி அவர்களைக் காயப்படுத்தினுன். (615)

சாயந்திர வேளை, ஹனுமான்ஜி போன்ற ஸகல வானர வீரர்களும் மூர்ச்சை அடைந்தார்கள். அவனுக்கு ஸந்தோஷம் தாங்க முடியவில்லை. ஸமஸ்த வானர வீரர்களும் மூர்ச்சை அடைந்ததைப் பார்த்த ரணதீரனுன ஜாம்பவான் மிக்க வேகத் துடன் ரணத்தில் விருப்பமுள்ளவராக ஓடிவந்தார். (616)

ஜாம்பவானிடம் எந்த கரடி சேனைகள் இருந்தனவோ, அவைகளும் பர்வதங்களையும் விருக்ஷங்களையும் எடுத்துக் கொண்டு, ராவணனிடம் கொக்கரித்துக்கொண்டு ஓடி வந் தார்கள். பலவானுன ராவணன் மிக்க க்ரோதம் கொண்டவ னுய் அநேகம் கரடிகளை கைகளால் பிடித்து, பூமியின்மீது எறிந்து அடித்துக் கொன்ருன். (617)

ஜாம்பவான் தன்னுடைய சேனை நாசம் அடைவதைக் கண்டு மிக்க கோபம் கொண்டவராக ராவணனை மார்பில் ஓங்கி அடித்தார். (618)

ஜாம்பவானின் உதை மிக்க பிரசண்டமாக விருந்தது. ராவுணன் மிக்க வியாகுலம்கொண்டு ரதத்திலிருந்து கீழே

விழுந்தான். அவனுடைய இருபது கைகளிலும் கரடிகள் அகப் பட்டுக்கொண்டு தவித்தன. அவைகளைப் பார்த்தால் இருட்டில் தாமரை மலர்கள் மூடிக்கொண்ட சமயம் வண்டுகள் மதுவைக் குடித்துவிட்டு, மலர்களில் சிறைப்பட்டுக் கிடப்பவை போல விருந்தன. ராவணன் மூர்ச்சித்து கீழே விழுந்திருப்பதைக் கண்ட ஜாம்பவான் மீண்டும் அவனை உதைத்துவிட்டு பிரபுவி னிடம் வந்தார். இரவு முழுவதும் வந்துவிட்டபடியால் ராவண னுடைய சாரதி, அவனை மூர்ச்சை தெளியவைத்து, ரதத்தில் அமர்த்திஞன். (619)

வானரங்களும், கரடிகளும் மூர்ச்சை தெளிந்த பின்பு பிரபுவினிடம் ஓடி வந்தார்கள். அதேமாதிரி ராக்ஷஸர்களும் பய பீதிகொண்டு ராவணன் அருகே வந்து நின்ருர்கள். (620)

மாஸ பாராயணம்—26வது நிறுத்தம்.

[*தியானம்*

கால சக்கிரத்தை மோதிரமாகக் கொண்டு, உதய சூர்யன் மாதிரி பிரகாசிக்கும் காயத்ரி தேவதையே, என் மஹாலக்ஷ்மி அம்மா, சீதா தேவி, ராமா சீதா, வாஸுதேவ மஹிஷி, உங்களை நான் லோகமாதாவாகவும் பிதாவாகவும் மாத்திரமல்ல; ஜகன் மாதாவாகவும் ஜகன் பிதாவாகவும் அல்லவா நான் ஸ்வீகரிக்கிறேன். பகைவரை வெல்லும் ராமபிரான் கடற்கரையில் தர்ப்பங்களை விரித்து பாம்பின் உடலைப் போன்ற தனது கரங்களை தலையணையாகக்கொண்டு, கைகளைக் கூப்பி கிழக்கு முகமாய் ஸமுத்திர ராஜனது வரவை எதிர்பார்த்து பள்ளிகொண்டானே, யாருக்காக என்று உனக்குத் தெரியாதா? பெரிய ஆபத்துக்களை அடைந்த தேவர்களுக்கு ரக்ஷகனுக விருக்கும் என் கோதண்டராமன், தர்ப்பசயனபள்ளி ராமன், மன பொறுமையுடன் ஆறு இரவுகள் உண்ணு விரதம் கொண்டானே, உனக்கு இல்லாமல் வேறு யாருக்கு அது என்று நீயே சொல். மிக்க புகழை அடைந்த சமுத்திர ராஜன் நாராயண பதம் என்கிற சீதாராம தியானத்தை அடைந்தானே; ஸேதுவை அமைத்து சமுத் திரத்தின் அகலத்தை அளந்தானே, யாருக்காகச்

செய்தானே - அந்த அசகாய காரியம் உன்னை அடைவதற் கின்றி வேரு யாருக்காக - அதைச் சொல்லமாட்டாயா? அன்று என் குருவான தேவரிஷி நாரதர் லக்ஷ்மியை அடைய விருப்பமுள்ள மஹேந்திரனிடம் என்ன சொன்னார்? அப்போது, "ஹே இந்திரா, நாரத மஹரிஷியுடன் கூடிய நீ ஸ்வர்க்கத்தை அடைந்து தேவர்களால பூஜிக்கப்படுவாய்," என்று மஹாலக்ஷ்மி சொல்லியபோது, அந்த மஹேந்திரனும் உன்னுடைய அபிப்பிராயங்களையும் உனது ப்ரீதிக்காகச் செய்ய வேண்டிய காரியங்களையும் உனது வாக்குக்களால் சொல்லப் பட்ட எல்லா வசனங்களையும் மனத்தால் தெரிந்து கொண் டவனுக ஆனுன். தேவர்களால் பார்க்கப்படும் பௌருஷமுள்ள வருமான நாரத மஹரிஷியானவர் அங்கு வந்திருக்கும் மஹரிஷிகளின் மங்களகரமான வரவை லக்ஷ்மி தேவிக்குச் சொன்னார். நாராயணப்ரியே, அப்பேர்பட்ட மஹா தேவியை ஸ்ரீ ஸூக்தங்களாகிற மனஸ: காமம ஹதிம் வாச: ஸத்ய ம சீமஹி, பசூனும் ரூபமன்னஸ்ய மயி ஸ்ரீ: ச் ரயதாம்யச: என்று சொல்லும் என்னை, ஹே வாஸுதேவ மஹிஷி, நீங்கள் ஸ்வீகரிக்க வேண்டும் என்று பல தடவைகள் நமஸ்கரித்து விண்ணப்பம் செய்கிறேன். மனத்திஞல் விரும்பப்பட்ட பொருள்கள், மனஸ் ஸங்கல்பத்திஞல் யேற்படும் பொருள்கள், வாக்கிஞல் யாசிக்கப்படும் பொருள்கள், பசுக்களின் ஸம்ருத்தி, அன்னங்கள், ஸம்ருத்திகளுக்குக் காரணமான யசஸ்ஸையும் எல்லாம், உங்களது ஆஸ்ரயத்திஞல் எல்லா வற்றையும் லக்ஷ்மி நாராயணப்ரீதியையும் ஸத்யமாக நாங்கள் அடைவோமாக. நாங்கள் அவைகளை அடைவதற்கு நீங்கள் கிருபை செய்ய வேண்டும். கர்தம பிரஜாபதியின் புத்ரியே, எங்கள் நம்பியே, நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு நாராயணு வென்னும் நாமமே, பார்த்தனுக்குச் சொன்ன சொற்களால் உங்களை அறிந்து விஷ்ணுசித்தர் சொல்லியதுபோல, கடல் வண்ணன் கழலிணை காண்பார்களே என்று உங்களை வந்து அடைகிறேன். தயை செய்.]

அன்று ராத்திரியே திரிஜடை சீதையிடம் சென்று ஸ்ரீ ராமவிஜயத்தைப் பற்றிய எல்லா விருத்தாந்தங்களையும் ஒன்றுவிடாமல் சொன்னுள். (அக்னிக்குத் தோழனும்,

அழகிய மணமும், சுக ஸ்பர்சமுள்ளவனும் எல்லா இந்திரியங்களுக்கும் சுகத்தைக் கொடுக்கக் கூடியவனும் தேவர்களின் வழியில் நிற்கும் வாயு பகவானைப் போல ராமா சீதா வழியில் நின்ற ஆஞ்சநேயரை முன்னிட்டு காத்துக் கிடக்கும்) சீதை கோதண்டராமனின் வீர பிரதாபங்களை ஒன்றையும் விடாமல் உபஹரித்தாள் திரிஜடை. சீதையின் ஸந்தாபம் அதிகரித்தது. சத்ருவாகிற ராவணனுடைய சிரங்களும் புஜங்களும் வளர்ந்து அதிகரிக்கும் விருத்தாந்தங் களைக் கேட்ட சீதை மிக்க பயம் கொண்டாள். (621)

உபவாஸத்தினால் இளைத்த சீதையின் மனம் மிக்க கவலையை அடைந்திருந்தது. அவளுடைய ஆசைகளும், கவலைகளும் அதிகரிக்க அவளுடைய முகம் மலினமாகவும், தீனமாகவும் காணப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பின்பு திரிஜடையை நோக்கி, சீதா மீண்டும் சொன்னாள், "மாதா, ஏன் ஒன்றும் சொல்ல மாட்டேனென்கிறாய்? என்ன நடக்கப் போகிறது? ஸம்பூர்ண விஸ்வத்திற்கு துக்கத்தைக் கொடுக் கும் இந்த பாபி எவ்விதம் அழிக்கப் படுவான்?" (622)

"என் பிரபு ரகுபதி சிரங்களை வெட்டியும், பாணங்களால் அவனை அடித்தும், ராவணன் கொல்லப்படுகிறதாக இல்லை. என் விஷயத்தில் ஸர்வத்தையும் படைத்து நடத்திவைக்கும் பிரும்மாவாகிற விதாதா எல்லாவற்றையும் விபரீதமாகச் செய் கிறார். நான் மிக்க அபாக்யவதி. என்னுடைய துர்பாக்கியம் தான் என்னை பகவானுடைய சரண கமல பாதங்களிலிருந்து விலக்கியது. அதே துர்பாக்கியத்தினால் என் பிரபு கிருபாவேச ராக ராவணனை இதுவரையில் உயிர் வாழ வைத்திருக்கிறார்." (623)

"எனது கொடும் வினை கபடமான கனகமய மாயா மிருகத்தை ஸ்ருஷ்டித்தது. அவருடைய மாயையின் சூழ்ச் சியினால் என்னை அந்த மாயா மானின்மீது ஆசையுறும்படி செய்தது. விதி என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு பகவா னுடைய நித்ய ஸம்பந்தத்தை விலக்கி, என்னைத் தூண்டி வைத்து, நிரபராதியானவனும், ராமனுடைய நிழல் போன்ற மஹாத்மாவாகிற ராமானுஜனை (லக்ஷ்மணனை) கடும் சொற்க ளால் தீண்ட வைத்தது. நான் நிஜமாகவே மஹா பாபி, நான்

பூமியில் வாழுவதற்கு அருகதையில்லே. [ஸ்ரீ ராம கைங்கர்யம் செய்யும் மஹா பாக்யம் பெற்றவனும், ஸ்ரீ ராமனுக்குக் காட்டில் பணிவிடை செய்வதற்காகவே ஸ்ரீரங்க நாதனைப் பூஜித்து, அதன் பயனாக ஸுமித்திரையால் பெறப்பட்டவனும், நண்பர்களுக்கு உதவி யளிப்பதில் ஆவல் கொண்டவனுமான லக்ஷ்மணனை நிந்தித்தபடியால் நான் பகவானிடம் அஸஹ்ய அபசாரம் செய்துவிட்டேன். கடும் வசனங்களால் லக்ஷ்மணனை நிந்தித்த நான் பிரபுவை புண்படுத்திவிட்டேன். காலனே மிருக உருவாகக் கொண்டு அல்ப பாக்யமுள்ள என்னை மோஹிக்கச் செய்து, ராமனைப்போல ஏக பத்னி வ்ரதமுள்ள லக்ஷ்மணனை நான் கடிந்து பேசிவிட்டேன்.''] (624)

(''தர்மம் ரக்ஷிக்கும் என்று சொல்லப்படும் உலக வார்த்தை என் விஷயத்தில் வீணாகி விட்டதென்று நினைக்கிறேன்.) ராமனைத் தவிர வேறு தெய்வத்தை அறியாத என்னை பிரபு மீண்டும் சோதிக்கிறார். நர வ்யாக்ரரான ரகுபதியைப் பிரிந்துவிட்டு, அக்னி பாணத்தினால் ஏற்படும் தாபங்களால் நான் மீண்டும் கொளுத்தப்படும்போது பலதடவைகள் நினைத்து வருந்தும்படி இருக்கும் நான், பொறுமையுடன் ஸ்ரீராமனின் மடியில் படுக்கும் நல்ல காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் எனக்கு, சோதனையாக மீண்டும் என்னை வாழவைக்கிறாரே. என்னைக் ''காக்கும் தெய்வம்'' ஸ்ரீராமனுடையது என்று நம்பி வாழ்ந்து வந்த என்னை மீண்டும் சோதிப்பதுபோல, ராவணன் மாண்டுபோக மாட்டேன்கிறானே, இது என்னுடைய துர்பாக்கியத்தைத் தவிர வேறு என்னதான் இருக்க முடியும்? நான் இன்னும் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பதும், தாக்ஷிண்யத்தினால் அந்த கொடும் ராவணனையும் உயிர் வாழவைக்க விரும்பும் பொறுமை விரதம் கொண்ட ராமன், என்னை விட்டுப் பிரிந்து துக்கத்தையும் அடையாமல் ஸர்வ புருஷார்த்தங்களையும் ராவணனுக்குக் கொடுப்பதற்கு சித்தமா யிருக்கிறார்போலிருக்கின்றது! விதாதாவான என் பிரபு, அவரிடம் ஆசை கொண்ட என்னை நாசத்தை அடையவொட்டாமல் தடுத்து, ராவணனிடம் ஹிருதயத்தை வைத்தவராக, அவனுடைய உபவாஸம், தபஸ், ராம நினைவினாலே ராமநாமத்தை ஜபித்து, அதே ஸ்மரணையினால் பயந்து, நடுங்கிக்கொண்டிருக்

கும் ராவணனை என் பிரபு, எனது ஸ்வல்ப பாக்கியத்தின் மகிமையினுல் வாழச் செய்ய விரும்புகின்ருர்போ லிருக்கின்றதே. (இதிலிருந்து சீதை ஸ்ரீராமனை பஜித்தோ, அல்லது அவருடைய நாமத்தை ஜபித்தோ, கடைக்காலத்தில் விரோத பாவத்துடன் வந்தாலும் சரி, ஸ்ரீ ராமனே கதியென்று நம்பினவர்களுக்கு மோக்ஷமாகிற பரம புருஷார்த்தையும் ஸ்ரீராமன் கொடுக்க தயங்க மாட்டார் என்று சொல்லுகிறது போல துளசிதாஸர் சீதையின் வாக்யமாகச் சொல்லுகிருர்). இல்லாதபோனல், பரம அபராதியான ராவணன் இவ்வுளவுகாலம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு வேறு காரணம் என்ன இருக்கக் கூடும்? எனது துர்பாக்கியம்தான் அவனுடைய உயிர் வாழ்வதற்கும் ராமனுடைய கிருபையாகிற பொறுமைக்கும் காரணமாகத் தோன்றுகிறது.'' (625)

இவ்விதமாக மைதிலி, ஜனகாத்மஜா, பல பிரகாரங்களால் ஸ்ரீராமனுடைய கிருபையை நினைத்துக்கொண்டு அழுத வண்ண மிருந்தாள். [சீதையினுடைய பாதங்களில் கெட்ட எண்ணத்துடன் வணங்கிய ராவணனிடமும் கருணை என்கிற வியாஜத்தினுல் பொறுமை விரதம் பூண்ட என் பிரபு புருஷோத்தமராமன், கிருபா நிதான், ஸகலத்தையும் அறிந்து கொண்டவராக, ஜானகியின் பிரார்த்தனைகளையும் ஏற்றுக் கொண்டதாக விளங்கினுர். ஸுரர்களின் கஷ்டங்களைப் போக்க, ஸங்கல்பித்த ஸ்ரீ ராமன் ஜானகியின் வில்லாபங்களின் அர்த்தத்தையும் நன்கு உணர்ந்தார்.] அந்த சமயம் திரிஜடை சொல்ல ஆரம்பித்தாள். ''ஹே ராஜகுமாரி, நன்ருகக் கேள். நீ கவலையை விடு. தேவதைகளின் சத்ருவாகிற ராவணன் மார்பில் அடிக்கப்பட்டால், அவன் நிச்சயமாக மரித்துப்போவான். அவனுக்கு நிச்சயம் மரணம் ஏற்படும்.'' (626)

''ஆனுல் பிரபு ராமன் அவனுடைய மார்பைத் தவிர மற்ற இடங்கள் எல்லாவற்றிலும் பாணம் போடுவதால் அவன் இறக்கவில்லை. அவனுடைய மார்பை அடிப்பதற்கு அவருக்கு இஷ்டமில்லை. இதற்குக் காரணம், தாயே, ஜகன்மாதா, ஜகஜ் ஜனனி, ஜானகி, தாங்கள் அவனுடைய ஹ்ருதயத்தில் ஸதா ஸாந்நித்யம் செய்துகொண்டு வசிக்கிறீர்கள்.'' (627)

[தியானம்

ஹே ஜனக நந்தினி, பீஷ்ம புத்ரி, க்ஷீராப்தி கன்யா, ப்ருகு புத்திரி, கர்த்தமப்ரஜா பதியின் புத்திரி, விஷ்ணு சித்த குலநந்தினி; ஹே மஹாலக்ஷ்மி ஸமேத ஸ்ரீமந் நாராயணா, உங்களை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். அம்மா குலநந்தினி, நீ நாராயணரிடம் மட்டும் முழு அன்புடன் வேறொன்றிலும் மனம் செலுத்தாமல் சரீரம் எடுத்து வாழ்கிறாய். "ஏனெனில் மிகப் பெரிய தர்மமும், பிராம்மணர் களிடத்தில் அன்பும், யாவரும் விரும்பத்தக்க ஸர்வ யோக்யதையும் நாராயணரிடத்தில் இருக்கின்றன. அவரைத் தவிர மற்றவிடங்களில் நான் இவ்வாறு சரீரத்தோடு இருப்பதில்லை; இவ்வாறு நான் பேசவும் முடியாது; எவ னிடத்தில் என் கருத்தினால் நான் இருக்கிறேனோ, அவன் புண்யம், புகழ், பொருள், இன்பம், எல்லாவற்றிலும் மேலாகிறான்," என்று பீஷ்மரின் புத்ரியான ருக்மிணியிடம் நீ சொன்னாயே, அதையே தான் என் ஆசாரியரான நாரதரும் பீஷ்மரும் அடிக்கடி எனக்கும் தர்ம புத்திரருக்கும் சொல்லி யிருக்கிறார்கள். நாராயண பதம் என்கிற உங்கள் இருவர் களுடைய சேர்க்கை ஆனந்தம் இருக்கிறதே, தேவி, தேவேசா, விநாச பயமில்லாததாகவும், ஒரு காரணத்தால் உண்டாகாத தாகவும், தனக்குத்தானே பிறப்பிடமாகவும், அவித்யை அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம், என்கிற ஐந்து கிலேசங்களால் உண்டாகும் பயத்தால் சூழப்பட்டதாகவும், விருப்பு வெறுப்பு முதலிய த்வந்தங்களிலிருந்து விடுபட்ட தாகவும், முக் குணங்களிலிருந்து விலகியதாகவும், ஐந்து பூதங்கள் இந்திரியங்களும் மனமும் புத்தியும், பிராணவாயுவும் கர்மங்களும், அவைகளின் வாசனையும், அவித்யையும் இவைகளால் சொல்லப்படும் புரியஷ்டகம் என்னும் எட்டுக் கால்களால் விடப்பட்டதும், அறியப்படும் வேத்யன், அறிவு, அறிகிறவன் என்கிற மூன்று தன்மைகளிலிருந்து விடு பட்டதும், திருஷ்டி, ஸ்ருதி, மதி. அனுமானம் என்று சொல் லப்படும் மனத்தால் அறியப்படும் விக்ஞாதி ஆகிய அறிவுகளால் அறியப்படாத விஷயமாகவும், காரணங்க ளில்லாத அஜர் என்று சொல்லப்படுவதும், சோகமில்லாத

பரிபூர்ண ஆனந்தத்தைக் கொண்டு அச்யுத பதங்கள் எனப் படும் சீதா ராம பதமே. ஹே மஹா லக்ஷ்மி, சீதே, உனக்கும் உன் சிஷ்யர்களான நம்மாழ்வார், மார்க்கண்டேயர், ப்ருகு, ஜனகர், விஷ்ணுசித்தர், என் போன்ற நாரத சிஷ்யர்களுக்கும் முடிவான அம்ருதமாக விளங்குகின்றன. அதனால் காலத் தினால் ஜீர்ணமடையாத ஸ்தானமாகிற உங்கள் பதங்கள் சோகப்படாத உத்தம ஸ்தானமாக கருதப்படுகிறது. மற்ற எல்லா பதங்களும், அஷ்டதிக் பாலர்கள், சுக்ரன், பிரஹஸ்பதி, மருத்துக்கள், விஸ்வே தேவர்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், வஸுக்கள், ஸாத்யர்கள், அஸ்வினி தேவர்கள், இதர தேவர்க ளுடைய ஸ்தானங்களும், நாகலோகம் போன்ற ஸ்தானங்களும் பரமாத்மாவாகிற உங்களுடைய அஜிதை என்று சொல்லப் படும் வைகுண்ட ஸ்தானத்தை அபேக்ஷிக்க நரகங்கள் என்று கருதப்படுகின்றன,'' என்று சொல்லப்படுகின்றதே. பத்ம வர்ணு, பத்ம மாலினி, ஸர்வ ஜகன்மாதாவாகவும், தாமரை மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷீராப்தி தனயா, தன்வந்திரி ஸேவித அம்ருதா, கர்த்தமௌ ப்ரஜா பூதா, கேசவ நம்பியின் பிரியே, காகுத்ஸனின் செல்வி, விஷ்ணுசித்தரால் கொடுக்கப் பட்ட அடைக்காய் அமுதுண்ட மாதவா, பட்டர்பிரான் கோதையே, சீரணிந்த செங்கண்மால்மேல் சிந்தை பெறும் என் னைக் கடாக்ஷித்து எங்களிடம் வாசம் பண்ணும்படி அனுக்ர ஹிக்க மாட்டீர்களா? என்னுடைய குலத்திலும் புத்ரன், புத்ரி, பௌத்ரன், தாயாதி, ஸம்பந்தி, ஸுஹ்ருத் முதலியவர்களிடத் திலும் நித்ய வாஸம் செய்து அருள வேண்டும்.]

''அம்ருதே, ஜனக நந்தினி, அம்மா, நீ வசிப்பதால் அல் லவோ என் பிரபு காகுத்த ராமன் உனக்கு கோபம் வராம லிருக்க, அருள் கொண்டு, உன்னை வணங்கிய ராவணனிடம் மிக்கப் பொறுமையுடன் இருந்து, அவனுக்குத் தன் பதமாகிய ஸ்ரீ சீதாராம, (நாராயண லக்ஷ்மி பதத்தை) அளிக்க விரும்பு கிறான். ஜானகி நிவாஸம் செய்யும் ராவணனுடைய மார்பு, ''எனது மார்பல்லவோ'' என்று ஸ்ரீவத்ஸமறுவன் நினைக்கிறான். அம்மா, அந்த ராமன் நினைக்கிறான். ''எனக்கு அவன் வேண் டியவனாக அல்லவோ அவன் ஆகிறான்.'' என்றால் அளிக்கப் பட வேண்டிய பரம புருஷார்த்த லாபத்தை அவன் அடைய

ஸர்வ யோக்யனுகிருன். என்னிடம் நாராயணி ஆகிய நீ சரீரத்தோடு வசிப்பதாலும், எனது உதரத்தில் சதுர்தச புவனங்களும் வாழ்வதாலும், ஜானகியைப்பற்றிய நினைவால் ராவணனுடைய உடம்பும் ஆத்மாவும் அம்ருத மயமாகவும், ப்ராணங்களால் அழிக்க முடியாதபடி நித்ய வாஸம் செய்வதற்கு அவன் குலத்தின் பூஷணமாகவல்லவோ விளங்குகிருன். தேவி ஜானகி, உனது பெருமைகள், காருண்யம், தயை, க்ருபாவேசங்கள் அனந்தமாக விருக்கின்றன. பரிபூர்ணி, அதனுல் பகவான் ராமச்சந்திரனுடைய பாணங்கள் ஜானகியைத் தரித்து வாழும் ராவணனைக் கொல்ல விரும்பவில்லை; (நீயோ பதினன்கு புவனங்களையும், அவைகளை ஆளும் தேவர்களையும், தேவ மாதர்களையும் வாழ விரும்ப நினைக்கிருய். அதனுல் உன் நினைவு கொண்ட ராவணனை, உனது சங்கல்பமின்றி ஸ்ரீராமன் கொல்ல விரும்பவில்லை. இதை உன்னுடைய பிரபாவம் என்று நான் தெரிந்துக்கொண்டு, உன்னை ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். தேவி, ஓம் ஸத்தாயை நம: என்று சொல்லி உன்னை நமஸ்கரிக்கும் என்னை காருண்ய பாவத்துடன் ரக்ஷி, அம்மா.'') என்று திரிஜடை (என் சார்பிலும்) சொல்ல ஆரம்பித்தாள். ஜானகி, (பத்மபத்ர நிபேக்ஷணு, ஸர்வலோக ஜனனி, அப்ஜ ஸம்பவை,) ஸ்ரீ தேவி, நிமிர்ந்து தனது பத்மாக்ஷங்களால் விஷ்ணுவக்ஷஸ்தலத்திலிருந்து திரிஜடையைப் பார்த்தாள். (ராவணனைப் பலதடவைகள் ராமனிடம் ''மித்ர பாவத்துடன் செல்,'' என்று அப்யஸித்துச் சொன்ன பத்ம சுந்தரி, ராமனின் தர்மபத்தினி, ராமனுடன் ஸஹதர்மசாரிணி என்று கூப்பிடப்படும் மஹா உத்தமி), சரணுகதர்களின் சிரமத்தைச் சொல்லாமலே உணரும் மஹா உதார மனம் படைத்த சீதை, தனது பத்ம நேத்ரங்களால் இரண்டு துளி கண்ணீர்களை விட்டாள். பாவம், ராவணனுடைய கதி இவ்விதமா நேர வேண்டும்? என்று தனக்குள் எண்ணிய மஹாலக்ஷ்மி தனது முகப் பார்வையை பூமியிலிருந்து எடுத்து நிமிர்ந்து பார்த்தாள். மீண்டும் சோகத்தால் கவரப்பட்ட சீதை தனக்குள் ஒருதடவை சிரித்துக் கொண்டாள். கொஞ்ச நேரம் கழிந்தபின்பு, மனம் நொந்த சீதையிடம் திரிஜடை மீண்டும் சொன்னுள். ''சுந்தரி, எதிரி

மாண்டு விடுவான்: உன்னுடைய மகத்தான சந்தேகத்தை விட்டுவிடு, நான் உனக்கு ரகசியத்தைச் சொல்லி விடுகிறேன்.'' (628)

"ராவணனுடைய சிரங்கள் அறுபட, அறுபட, உன்னைப் பற்றிய த்யானமும் அவனுடைய தலையிலிருந்து தப்பிவிடும். அப்பொழுது நல்ல தருணம் பார்த்து, என் பிரபு, மஹா ஸர்வக்ஞர், ராமன் அவனை மார்பில் அம்புகளால் அடித்து விடுவார். அதனால் அவன் மரித்துப் போவான். இது உனக்குத் தெரியுமே. ஸ்ரீ ராமன் யாவருடைய மனத்திலும் வசிக்கும் அந்தரியாமி யாச்சுதே.'' (629)

இவ்விதம் சொல்லிவிட்டு, சீதையை பலதடவைகள் சமாதானம் செய்துவிட்டு, திரிஜடை தன்னுடைய கிரஹத்திற்குத் திரும்பினள். ஸ்ரீ ராமனுடைய பத்னியாகிற சீதைக்கு திரிஜடையினால் சொல்லப்பட்டதையும், இயற்கையாக கருணை உள்ளம்கொண்ட ராமனையும் ஒருதடவை நினைத்துப் பார்த்தாள். (வனத்திற்கு வந்த சமயம் "ஹே சீதே, உன்னைவிட்டு வார்த்தைகளாலும் பிரியமாட்டேன்,'' என்று வாக்குக் கொடுத்த ராமனைவிட்டு அவள் பத்து மாதங்களுக்குமேல் பிரிந்து வாழ்ந்தாள்.) அப்பேற்பட்ட சீதையின் கணவனாகிற ராமன் ராவணனிடமும், தனக்காகக் காட்டும் பரிவை நினைத்து, வருந்துபவளாக, "ஐயோ, தாமரைக் கண்கள் கொண்ட என் பிரபுவினிட மிருந்து இன்னும் எவ்வளவுகாலம் பிரிந்து வாழ வேண்டுமோ," என்று நினைக்க அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்கள் பெருகி வழிந்து ஓடின. அவளுடைய விரஹதாபங்கள் அதிகரித்தன. (630)

[*தியானம்*

சிவமங்கள மூர்த்தே, உமா மஹேஸ்வரர்களின் ஐக்ய தத்வமே, ஸ்கந்தனை அம்பிகையுடன் பார்க்கும் விருஷபத்வஜரே, நந்தகோபனின் வாயில் காப்பானே; ராமானுஜரால் "தைஸ்த்யருடைய அனுமதியின் பேரில் வைகுண்டத்தில் நுழைகிறேன்'' என்று சொல்லப்படும் ஜய விஜயர்களே, குமுதன், குமுதாக்ஷன் போன்ற கணங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். ஆஞ்சநேயா, உன்னை வணங்கிவிட்டு,

உனது அனுமதியின்பேரில் அல்லவா, நான் சீதாராம ஸந்நிதியில் நுழைய வேண்டும். மங்களத்தை உண்டு பண்ணும் இந்திரன், பிரஜாபதியே, நீங்கள் இருவர்களும் மோக்ஷத்வாரம் எனப்படும் வைகுண்டத்தின் காப்பாளர்கள் ஆகிறீர்கள். உங்களுடைய பரமானுக்ரஹத்தினால் அல்லவா, நான் துருவ நாராயண பதத்திற்குப் போக முடியும். ஹே சீதே, மஹாலக்ஷ்மி, ஸுரர்களுக்கும் அஸுரர்களுக்கும், நாக, கந்தர்வ ராக்ஷஸர்களுக்கும், யக்ஷர்களுக்கும், கின்னரர்களுக்கும் நீயும் உனது பரம மங்கள தெய்வமான ஸ்ரீராமனும் ஹிதத்தைச் செய்பவர்கள். பதினோரு ருத்ரர்கள், ஏழு மருத்துக்கள், அஷ்ட வசுக்கள், த்வாதச ஆதித்யர்கள் இவர்களில் மேலாக விளங் கும் நாராயண மஹாலக்ஷ்மியே, சேடன் திருமறுமார்பன் கிடந்து திருவடியால் மலைபோல ஓடுஞ் சகடத்தை உதைத்த உங்கள் திருவடிகளின் பெருமைகளை நான் உரைக்கப் போகுமோ? மனத்தில் படுத்திருக்கும் ஆத்மாவே, சப்தத்தில் புதைந்து கிடக்கும் அர்த்த பிரும்மமே, ஹே சீதே, சிறந்த மனிதன், ஸ்திரி எதைச் செய்கிறார்களோ, அதன்படி உலகம் செய்யத் துடங்குகிறது. அந்தக் காரணத்தால் ஜகன்மாதா வாகிற நீ உலகத்தை நிலைபெறச் செய்கிறாய். இல்லாவிடில் தர்மம் ஸங்கீர்ணமாகிவிடும். தர்மம் ஸங்கீர்ணமானால், உலகம் நசித்துவிடும் என்கிற பரம ஞானத்தினால், புத்திக்கும், க்ஷேத் ரக்ஞனுக்கும் உள்ள ஒற்றுமையைப்போல விளங்கும் ராமசீதா ஸம்பந்தம், நாராயணனுடைய திருவடிகள் என்னைவிட்டு ஸதா அகலாமலிருக்க வேண்டும். நாராயணனுக்கு இருப்பிடமான ஜலங்கள், நெய், தேன், எண்ணெய் முதலான ஸ்நேக வஸ் துக்களை என் கிரஹத்தில் உண்டுபண்ணி, தேவரீர் எங்கள் வீட்டில் நித்ய வாசம் செய்ய வேண்டும். அகிலாண்டேஸ்வரி, ஸர்வ யோக ஹ்ருதய நாராயணி, மஹாலக்ஷ்மி, என்னை புத்ர பௌத்ராதி குலத்தில் நீ வசிக்கும்படி செய்யவேண்டும். எங்கள் குலமானது பவித்திரமாக்கப்பட்டு ஸம்ருத்தியுடன் விளங்க வேண்டும். சிக்லீதன் என்று சொல்லப்படும் உனது வாசற் காப்பவனை முன்வைத்து நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்து, உங்களுடைய ஸந்நிதிக்கு அழைத்து வரப்படுகிறேன். ஆத்ம திருஷ்டி உடையவனும், சாந்தனும், கர்மத்தைச் செய்வ

தால் ம்ருத்யுவை விலக்கிக் கொண்டவனும், வித்தையினால் மோக்ஷ ரூபத்தைத் தியானிக்கிறவனும், பொறுமையின்றி வரும் உன் புத்ரனைப் பார். கல்யாணி, கருத்த விழியுள்ள கண்களை உடையவளே, ஒருக்கால் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுபவளே, நீ உனது தாஸர்களிடம் கோபத்தாலோ, அறியாமையாலோ கோபமற்ற பர்த்தாவான வஸிஷ்டருக்குச் சமமான அருந்ததியைப்போல, ஸுமத்யமா என்று சொல்லப் படும் சீதே, உனது தாசர்களைக் காப்பாற்றாமல் விடுவதில்லை. ராமா, சீதே, உங்கள் சரணங்களே எங்கள் தஞ்சம்.]

மஹாலக்ஷ்மியின் உருவான சீதை நீடித்து துக்ககரமாக விளங்கும் ராத்திரியையும் அந்த உத்தமமான ராத்திரியில் சஞ்சரிக்கும் பரிபூர்ண சந்திரனையும் பார்த்து பலவிதமாக நிந்தித்தாள். தனக்குள் ஒருமுறை சொல்லிக்கொண்டாள். "ஹே ராத்திரியே, யுகத்திற்குச் சமமாக ஊர்ந்துகொண்டு போகிறாயே. உனக்கு என்னிடம் கருணையில்லையா? பூர்ண சந்திரனுக்கு ஒப்பான முகத்தை உடைய என் சீதை, சாமான்க ளின் சுமையால் ஜலத்தில் அழுத்தப்படும் ஓடத்தைப்போல துக்க பாரத்தால் இறுகப்பட்டவளாகக் காணப்பட்டாள். (ஸ்வச்சமான காந்தியை உடைய என் பரதேவதை, அப்பழுக் கில்லாத ஆகாசம் போன்ற என் சீதை, அன்னம் நீலமான நிறத்தையுடைய ஜலத்தில் பிரவேசிப்பதுபோல, ராம துக்க ஸாகரத்தில், விஸ்லேஷ துக்க சமுத்திரத்தில், குளிர்ந்த கிரணங்களை உடைய சந்திரனைப்போல பிரவேசித்தாள்.) அவ ளுடைய மனம் மலிந்து சோகத்தின் எல்லையை அடைந்த ஓடம் போல விருந்தது. (அப்பேற்பட்ட சீதைக்கு வாயு புத்ரரான ஆஞ்சநேயரை முன்வைத்து நான் ஆயிரம் நமஸ்கா ரங்கள் செய்கிறேன்.) (631)

எப்பொழுது அதிபயமும் அதிபயங்கரமுமான ராம திருஷ் ணையும் சீதைக்கு ஏற்பட்டதோ, அந்த மஹா பாக்யவதியின் அழகு வாய்ந்ததும், வளைந்து இமை மயிருடன் புருவ வரிசை யுடையதும், பக்கத்தில் வெண்ணிறமுள்ளதும், ஓரத்தில் கருணையினால் சிவந்ததுமான இடது கமல நயனம் மத்ஸயத் தினால் ஜலத்தில் தண்டில் அடிக்கப்பட்ட சிவந்த தாமரைப் பூப்போல துடித்தது. யானை துதிக்கையைப் போன்றதும்,

பெருத்ததும் சேர்ந்ததுமான இரண்டு துடைகளில் ஒன்றுனதும் மிக்க பாக்யம் பெற்ற ராமனுல் அனுபவிக்கப் பட்டதும் வெகு காலம் சேர்ந்திருந்ததுமான இடது துடையானது துடிப்பதின் மூலம் அவளுக்கு ஸ்ரீராமன் முன்னிலையில் இருப்பதாகச் சொல்லியது. அதே விதமாக அவளுடைய கரமும் துடித்தது. இவ் விதமாக மங்களத்தைத் தரும் பல சகுனங்கள் தங்களுக்கு உலகில் பெருமை யேற்பட வேண்டுமென்று சீதையிடம் அடைந்தன. முன்பு நல்ல பலன்களைக் கொடுத்தவைகளும் மற்றும் பலவித மங்களங்களைச் சூசிவிக்கும் சகுனங்களால் நன்கு க்ஷேமங்களை அறியும்படி செய்யப்பட்டவளான சீதை தீர புத்தியினுல் மீண்டும் சங்கல்பித்தவளாக, கிருபாளு ரகுவீரனுடைய ஆஸ்ரித தர்ம பரிபாலனத்தை நினைப்பவளாக (கண்ணுக்குத் தெரியாமலிருந்த விதையானது மழைகாலத்தினுல் முளைத்தது போல,) நனைந்த ராம ஹ்ருதயத்தினுல் மீண்டும் ராமனை சந்திப்போம் என்கிற சந்தோஷத்தை அடைந்தாள். (கோவைப்பழம் போன்ற உதட்டை உடையவளும் அழகிய கண்கள் புருவம், கேசத்தின் நுனிகள் இவைகளை உடையவளும், வளைந்த இமை மயிர்களை உடையவளும், மிக்க வெண்மையான பல் வரிசைகளை உடையவளுமான அந்த சீதாபஜ முகத்தை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன் லோகமாதா, ஜகன்மாதா, அகிலாண்டேஸ்வரி, நீயும் ராமனும் என்னிடம் பரிபூர்ண கிருபையுடன் இருக்க வேண்டும். என்று பலதடவைகள் நான் பிரார்த்திக்கிறேன்.) (632)

இங்கே நடு நிசியில் ராவணன் மூர்ச்சையிலிருந்து விடுபட்டான். தனது சாரதி தன்னை யுத்த பூமியிலிருந்து எடுத்து வந்தவனைக் கண்ட ராவணன் மிக்க கோபத்துடன் சாரதியைப் பார்த்துச் சொன்னான். "ஹே மூர்க்கா, ரண பூமியிலிருந்து ஏன் என்னை அழைத்துக்கொண்டு வந்திருக்கிருய்? அடே அதமனே, என்ன தைரியம் உனக்கு இருக்கிறது? என்ன கெட்ட காரியம் உன்னுல் செய்யப்பட்டிருக்கிறது? மந்தமதி படைத்தவனே, உன்னுடைய அசட்டு தைரியத்தை நான் நிந்திக்கிறேன்," (633)

சாரதி உடனே ராவணனுடைய கால்களைக் கட்டிக் கொண்டு பலவிதமாக அவனை சமாதானப் படுத்தினுன்.

காலைப்பொழுது விடிந்தது. ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு ராவணன் மீண்டும் யுத்தத்திற்கு கிளம்பினான். தசமுகங்கள் கொண்ட ராவணன் மீண்டும் யுத்த களத்திற்கு வந்து விட்டதைக் கண்ட வானர கரடிகள் கனமான பயத்தினால் வெளியேறிப் போனார்கள். எங்கு பார்த்தாலும் அவர்களுடைய பயங்கரமான சப்தங்கள் கேட்கப்பட்டன. (634)

தங்கள் கைகளில் பருத்த பாறைகளையும் விருக்ஷங்களையும் எடுத்துக்கொண்டு மிக்க க்ரோதத்துடன் வானர கரடி வீரர்கள் பற்களைக் கடித்துக்கொண்டு யுத்தம் செய்வதற்கு ஓடி வந்தார்கள். (635)

[*தியானம்*

ஹே ராஜ ராஜேஸ்வரி, மஹாலக்ஷ்மி அம்மா, தாயே, மஹா ஸங்கல்பே, உன்னை நான் ராமனுடன் சேர்ந்து காடோப கூடமாக சிவசக்தியைப் போல பிரியா வடையாகப் பார்க்கிறேன். அனந்தபோகினி, சீதாராமா, ஹரிவல்லபே, உங்களுடைய செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திலிருக்கும் ஹிருஷீகேசா, ஸாம்ராட், விராட், ஸ்வராட், அவ்வாயைத் தவிர நான் அறியேன் மற்ற அருளே. நாராயண் ப்ரியே, புஷ்கர க்ஷேத்திரத்தில் சதுரானனன், காயத்ரி, சரஸ்வதி, சாவித்திரிகளால் ஆராதிக்கப்பட்ட புஷ்கரிணி, தயையினால் நனைந்த திருவுள்ளத்துடன் அன்று ரெங்க நாச்சியார் ராமானுஜனையும் ஆளவந்தாரையும் பட்டரையும் பார்த்தது போல, என்னையும் எங்கள் குலத்தையும் கடாக்ஷிக்க வேண்டும். ராக்ஷஸ குலத்திற்கு அபயம் கொடுத்த வைஷ்ணவி, உன்னைத்தானே யஷ்டி, புஷ்டி, துஷ்டி, என்று சொல்லுகிறார்கள். பரமேஸ்வரி, ராஜலக்ஷ்மி, ராஜ்ய வல்லபே, நீதானே பத்ம மாலினி. பிங்களை என்று சொல்லப்படும் பொன் நிறமுள்ளவள்; ஸுவர்ணம் என்று சொல்லப்படும் தங்கத்தினால் செய்யப்பட்ட பூஷணங்களை அணிந்துகொண்டு இருக்கும் கனக பூஷணி; சந்திரனையும் சூர்யனையும் சேர்த்து ஒரு மிக்க குளிர்ச்சியும், காந்தியும் உள்ள பரதேவதையே, எங்களைப் பார் அம்மா. சரணாகத வத்ஸலே, "அறியேன் மற்றருள் என்னை யாளும் பிரானார், வைத்தேன் மதியால் எனதுள்ளத்

தகத்தே'' என்று உங்கள் பாதங்களை அர்ஜுனன் போலவும், கோமாதாவின் வத்ஸங்களைப் போலவும் விழுந்து விழுந்து நமஸ்கரிக்கும், பிரதக்ஷணம் செய்யும் எங்களைப் பாருங்கள். ஹே ஸித்த லக்ஷ்மி, விஷ்வக்ஸேனரே, ஜாதவேதஸே, பெருமாளையும் ஆஸ்ரிதர்களையும் திருப்தி செய்து வைத்து, தானும் ஆனந்தமடையும் லக்ஷ்மி, எங்களை விட்டுப் பிரியாமல், எங்களது குறைகளை நினையாமல் நித்ய வாஸம் செய்ய வேண்டும், என்று பிரார்த்திக்கும் எங்களைப் பார் அம்மா. அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கை யுறை மார்பா, ஸ்ரீநிவாஸா, ஸ்ரீதரா, நீங்கள் இருவர்களும் சகல சேதனர்களையும், அசேதனர்களையும் உய்விக்க வல்லவோ பூமியில் அவதரிக்கிறீர்கள். நீங்கள் பிரஸன்னமானால் நாங்கள் திருப்தி அடைகிறோம். அனபகாமினி, நாங்கள் உங்கள் அடிமை, தாஸர்கள். உங்களுடைய கிருபையினால் தங்கம், பசுக்கள், வேலைக்காரர்கள், குதிரைகள், மனைவி, புத்திர, புத்திரி, பௌத்ராதிகள், நாராயண பதங்கள் ஆகிய எல்லாவற்றையும் அடைவோமாக. அப்பேற்பட்ட லக்ஷ்மி நாராயணா, நீங்கள் எங்களைவிட்டுப் பிரியாமலிருக்கும்படி, உங்கள் திருஷ்டி கோசரத்தில் இருக்கும்படி செய்ய வேண்டும். லக்ஷ்மி, ஹிரண்யே, ஜாதாவேதோ, புருஷா.]

மிக்க பயங்கரமான ஸ்வபாவமுள்ளவர்களும், கொடிய எண்ணம் கொண்ட வானர கரடி சைன்யங்கள் ஓடிவந்து கைகளில் பாறைகளை சுமந்து கொண்டு ராக்ஷஸர்களையும், ராவணனையும் ஆக்ரோஷத்துடன் தாக்கினார்கள், அவர்களுடைய கோபம் எல்லை மீறி யிருந்தது. அவர்களுடைய தாக்குதலைப் பொருத ராக்ஷஸ வீரர்கள் பயந்து கொண்டு ஓடத் தலைப்பட்டார்கள். பலவான்களான அந்த வானர கரடி வீரர்கள் சிறிது நேரத்தில் சகல ராக்ஷஸர்களையும் அடித்துத் துரத்திவிட்டு, ராவணனைச் சூழ்ந்துக் கொண்டார்கள். அவனை பலவிதங்களாலும், பல திக்குக்களிலும், பல கோணங்களிலும் அடித்துத் துன்புறுத்தினார்கள். அவர்களுடைய நகங்களால் அவனுடைய உடலைக் கிழித்து, அவனை வியாகுலப்படுத்தினார்கள். (636)

ராவணன் வானர கரடி வீரர்களின் கை ஓங்கியதைக்

கண்டான். தனக்குள் சிந்தித்தவனாக, ஒரு முடிவுக்கு வந்தான். திடீரென்று ராவணன் அந்தர்தியானம் அடைந்து விட்டான். மாயையைப் பிரயோகிக்க ஆரம்பித்தான். (637)

பயங்கரமான மாயையினால் அநேக கொடிய ஜந்துக்களைப் பிரகடனப்படுத்தினான். அந்த நேரத்தில் வேதாளங்களும் பூதப் பிசாசங்களும் கரங்களில் தனுஷ்பாணம் ஏந்திக்கொண்டு நானா பிரகாரமாக ஓடி வந்தார்கள். (638)

யோகினிகள், யாதுதானங்கள் ஒரு கையில் வாளையும் மற்றொரு கையில் மனிதனின் கபால ஓடுகளையும் ஏந்திக் கொண்டு, அப்போது உற்பத்தியாகும் புதிய ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டும், நாக்கினால் நக்கிக்கொண்டும் ஆனந்தக் களிப்பினால் நாட்டியம் ஆடிக்கொண்டும், பாட்டுக்கள் கீதங்கள் பாடிக்கொண்டும் எங்கும் காணப்பட்டார்கள். (639)

அவர்களால் எங்கு பார்த்தாலும் "பிடியுங்கள், கொல்லுங்கள்," என்கிற கோரமான சப்தங்கள் செய்யப்பட்டு, கேட்கப்பட்டன. நான்கு திசைகளிலும் அந்த கோரமான சப்தங்களால் நிறம்பப்பட்டு, அந்தவிடம் மிக்க பயங்கரமாகவிருந்தது. அவைகள் வாய்களைத் திறந்துகொண்டு, வானரர்களையும் கரடிகளையும் முழுங்குவதற்காக ஓடி வந்தன. அவைகளைப் பார்த்த வானரங்கள் பயந்துகொண்டு ஓட ஆரம்பித்தன. (640)

வானரங்களும் கரடிகளும் எந்த எந்த திசைகளில் ஓடினார்களோ, அந்தத் திசைகளில் நெருப்பும் அக்னியும் காணப்பட்டது. வானரங்களும், கரடிகளும் பயம்கொண்டு கதற ஆரம்பித்தார்கள். அதற்குமேல் ராவணன் அவர்களின்மேல் மணலினால் மழையைப் பெய்வித்தான். (641)

வானர கரடி வீரர்கள் ஓடுவதைப் பார்த்து ராவணன் மீண்டும் பலமாகக் கர்ஜித்தான். அந்த ரணகளத்தில் ஸகலர்களும், சுக்ரீவனும், லக்ஷ்மணனும் உள்பட பயமடைந்து மூர்ச்சித்தார்கள். (642)

"ஹா ராம், ஹா ரகுநாத்," என்று தீனமாக அழைத்தார்கள் வானர யுத்த படர்கள். அவர்கள் கைகளைப் பிசிந்துகொண்டு செய்வது ஒன்றும் தெரியாமல் தீனமாகக் கதறினார்கள். இந்த விதமாய் ராவணன் சகல வீரர்களுடைய பலத்தை உடைத்து

விட்டு, இன்னொரு மாயையை ராவணன் பிரயோகித்தான். (643)

[தியானம்

அம்மா மஹாலக்ஷ்மி, ராமசீதா, ஸர்வ பூதஸ்திதே, ஸாக்ஷிணி!, லக்ஷயாமி ஸுபாஸுபம், எல்லா ஜீவராசிகளையும் நேரே காண்பவளாய் அவர்களுடைய நன்மை தீமைகளை சிந்திக்கிறேன்; லக்ஷயதீதி லக்ஷ்மி; என்கிறபடி சகல சேதனருடைய நன்மை தீமைகளை நீ சிந்திக்கிறபடியாலே, "லக்ஷ்மி'' என்று அழைக்கப்படுகிறாய், லக்ஷ்மியாகிறாய், "லக்ஷதர்ஸதே,'' "லக்ஷ ஆலோசிதே,'' என்கிறதாது பொருளாகும்படி நீதானே அம்மா, விஷ்ணுவுக்குச் செல்வியாக விருப்பவள்; இப்பேற்பட்ட அர்த்தங்களுக்கு நிரூபணமாக ராமஸந்நிதியில் ராமவலது தொடையில் உட்கார்ந்திருக்கும் உன் முன், உன் அனுக்ரஹத்துக்காக சரணமடைந்திருக்கும் என்னைப் பார் அம்மா. பகவானைப் போல உனக்கும் அனுக்ரஹ சக்தித்வம் பொதுவாக விருக்கிறது. உங்கள் காக்ஷி அல்லவே எனக்கு வேண்டும். அம்மா லக்ஷ்மி, உனக்கு சேதனர்களைக் காக்க வேண்டும் என்கிற தயை பரிபூர்ணமாக விருக்கிறது. ஜகத் காரணத்வம், ஸேஷித்வம், ப்ராப்யத்வம், முக்திபலப்ரதத்வம், ஸர்வ வியாபகத்வம் உனக்கு, ஹே சீதே, இருப்பதால் உன்னை நான் ஈஸ்வரியென்று மதிக்கிறேன். வேதாந்த தேசிகர் உன்னை பரமேஸ்வரி என்று அடிக்கடி சொல்லுகிறார். அவர் வழியே நடந்துவரும் என்னைப் பார். அம்மா. நீ இயற்கையாகவே பகவானை அனுசரித்து, அவனுக்கு மனோனுகூலையாக விருப்பது, பகவானுடைய ஸ்ரீயப்பதித்வத்தை அல்லவோ மேன்மை படுத்துகிறது. ஈஸ்வரத்வம் இரண்டு பேருக்கும் பொதுவானது. பகவானுடைய ஈஸ்வரத்வம் கர்மத்தை அனுசரித்துச் செல்லக்கூடியது, ஆனால் உனது வழியோ, தேவி, தயையைப் பின்பற்றியதாக விருக்கிறது. ஞானம், ஆனந்தம் இவைகளில் ஒற்றுமை உடையதாக விருக்கிறது; ஜகத் காரணத்வம், சேஷித்வம், ஸரண்யத்வம், விபுத்வம் ஆகியவைகளிலும் ஒற்றுமை உள்ளதாக விருக்கிறது. அதனாலேதான் என் ஆசார்யரான

தேசிகர் ஞானு நந்தாத யத்யந்த ஸாம்யாதி ஜகஜ்ஜனகத்வ சேஷித்வ ஸரண்யத்வாதி ஸாம்யாச்ச ஸாம்யகிராம் நிர்வா ஹோவ்யக்த:, என்று நியாஸ ஸிந்தாஞ்சலியில் அருளிச் செய்கிருர். அவ்வித மிருக்கும்போது பரபிருஹ்மத்வம் பகவானைப் போல உனக்கிருப்பினும், நீ இயற்கையாகவே பார தந்திரிய வ்ரதம்கொண்டு பகவானுடைய மேன்மையை வெளிப்படுத்துவதால், உனக்கு பரபிரஹ்மத்வமும் பகவானைப் போல அலங்காரமாக விருக்கிறது. அதனுல்தான் என் ஆசார்யரான பட்டர், வால்மீகி போன்றவர்கள், உன் கண் விழிப்புக்கு பகவானின் கண் விழிப்பு ஈடாவதில்லை என்று ஸாதிக்கிருர்கள். ஹே அஸிதேக்ஷ்ணு, சுபாஸ்ரயம் என்று சொல்லக்கூடிய உங்களுடைய திருவடிகளை ஆஞ்சநேயர் அர்ஜுனன் போலவும், உமாமஹேஸ்வரரகள் போலவும் நான் சரணமடைந்திருப்பதை நீங்கள்தான் ஸ்வீகரிக்க வேண்டும்.]

ராவணன் தோஷமற்ற பல ஹனுமார்களை மாயையினுல் உற்பத்தி செய்தான். அவர்கள் கைகளில் பாறைகளை வைத் திருந்தார்கள். அவர்கள் ராமனைச் சூழ்ந்துகொண்டு நான்கு புரங்களிலும் அவரை இருகச் சூழ்ந்து கொண்டார்கள். (644)

அவைகள் வால்களை உயரக் கிளப்பிக்கொண்டு பற்களைக் கடித்துக்கொண்டு, வாய்விட்டு கூப்பிட்டுக்கொண்டு, "பிடி யுங்கள், கொல்லுங்கள், உயிருடன் விட்டுவிடாதீர்கள்," என்று கத்திக் கொண்டிருந்தார்கள். அவைகளுடைய வால்கள் நான்கு திசைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கொடிகளைப் போல வீசிக் கொண்டிருக்கும் அந்த வால்களின் நடுவே, என் பிரபு கோஸல ராஜரான ஸ்ரீ ராமன் காணப்பட்டார். (645)

அந்த ஆஞ்சநேயக் கூட்டத்தின் நடுவே கோஸல ராஜன் ஸ்ரீ ராமன் அழகான ஸ்யாம சரீரத்துடன் வெகு அழகான சோபையுடன் காக்ஷி அளித்தார். அழகான ஒரு பெரியதமால விருக்ஷம் நான்கு புரங்களிலும் அநேக இந்திர தனுஷ்களால் (வான விற்களால்) சூழப்பட்டு என் பிரபு நீலமேக ஸ்யாமளன் வெகு சோபையுடன் காக்ஷி அளித்தார். பிரபுவினுடைய சுந்தரமான சோபைகளைக் கண்ட தேவர்கள் ஒரு சமயம் சந்தோஷப்பட்டவர்களாகவும், மற்ருெரு சமயம் வருத்தத்

திஞல் பீடிக்கப்பட்டவர்களாகவும், காணப்பட்டார்கள். அவர்களையுமறியாமல்,'' ஜய மங்கள கோஸல ராஜருக்கு மங்கள ஜயங்கள் ஏற்படட்டும்; ஜயங்கள், ஜயங்கள் ஏற்படட்டும்;'' என்று கோஷித்த வண்ண மிருந்தார்கள். என் பிரபு சரணுகத வத்ஸலன் மஹாவீரன் ரகுவீரன் ஒரே அஸ்திரத்திஞல் ஒரே நிமிஷத்தில் ராவணனுடைய மாயைகளை அழித்தார். (646)

மாயைகள் அழிந்தபின்பு வானரங்களும், கரடிகளும் சந்தோஷம் கொண்டு, பரிவதங்களைப் பெயர்த்துக் கொண்டு, ஓடி வந்தார்கள். ஸ்ரீராமன் பாண சமுஹங்களால் மீண்டும் ராவணனை யுத்தத்தில் முறியடித்து, அவனுடைய தலைகளையும் புஜங்களையும் அறுத்தார். அவைகள் அமோகமாக பூமியில் சிதறிக்கொண்டு விழுந்தன. ராமராவண யுத்தத்திற்கு சமமாக ராமராவண யுத்தமே என்று சொல்லும்படி அவ்வளவு விஸ்தாரமாகவும், உவமைக்கு மீறியதாகவு மிருந்தது. அந்த யுத்த சரித்திரம் அநேக கல்ப கோடிகாலம் பாடி கீர்த்தனம் செய்யப்பட்டாலும், அநேக கோடி ஆதி சேஷரிகளாலும் சரஸ்வதி தேவிகளாலும், நிகம சாஸ்திர புராணங்களால் வர்ணிக்கப்பட்டாலும், அநேக கவிகள் வரப்பிரஸாதம் பெற்றும்கூட அந்த யுத்த வர்ணனைகளின் முடிவுகளை அடைகிறதில்லை, அடைய முடியாது; (647)

என் பிரபு துளசிதாஸர் அந்த மஹா உத்தமமான சரித்திரத்தை, ரகுவீரனுடைய வீர பிரதாபங்களை, கோதண்டஹஸ்தனின் ஆச்சர்யகரமான செயல்களை ஸ்வய ஆனந்தத்தால் விவரித்துச் சொன்ஞர். மந்த புத்தி என்று தன்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டு, என் பிரபு மஹாகவி துளசிதாஸர் விவரித்தார். தன்னை ஒரு ஈமாதிரி நினைத்துக்கொண்டு, அந்த ஈ ஆகாயத்தில் தனது புருஷார்த்தத்திற்காக எவ்வளவு தூரம் உயர எழும்ப முடியும் என்று சொல்லிக்கொண்டு; அவர் முழு மதியுடன் பகவத் கிருபையை பிரார்த்தித்துக் கொண்டு ராமராவண யுத்தத்தின் முக்ய பகுதிகளை என் போன்றவர்களுக்கு விவரித்துச் சொன்ஞர். அப்பேற்பட்ட மஹா கவியியான துளசி தாஸருக்கு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். [ஆனந்தத்தாலும் க்ருதக்ஞையுடன் துடித்துக் கொண்டிருக்கும் என்னை சீதாராம ஹ்ருதயம் கொண்ட

துளசிதாஸர் காப்பாற்ற வேண்டும்.) (648)

[*தியானம்*

கமலலோசனி, "ஸ்ரீராமன் தங்களுடைய பெருமையை முழுவதும் அறிந்தும், நீங்கள் இருக்கும் இடத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால் தங்களை இந்திரன் இந்திராணியைப்போல சீக்கிரம் அழைத்துச் செல்லவில்லை." என்கிற மாருதியின் வசனங்களை ஞாபகப் படுத்திக்கொண்ட சீதே, மஹாலக்ஷ்மி அம்மா, என் பரதேவதே, ஸந்தியாதேவி, உன்னை உபாஸித்ததுடன் உன்னை உபாயமாக வைத்து, லக்ஷ்மீபதியான நாராயணனை அடைவேன். அம்மா, வாஸுதேவ மஹிஷி, உனது புருஷகார பெருமைகளை வேதங்களில் சொல்லியபடி நான் முழுவதும் அறிகிறேன். உருக்கின தங்கம் போன்ற பிங்களையே, ஸ்வர்ண ஸ்ரஜை, ரஜதஸ்ரஜாம், ஹரிணி, ரெங்க ராஜ மஹிஷி, அன்று இவ்விதம் பலதடவை புகழ் ஸ்துதி செய்த குபேரனுக்கு ஆதியில் பெருஞ் செல்வத்தை அளித்தாய். உன்னை நாங்கள் ஸந்துஷ்டி செய்வதால், இயற்கையாகவே பகவானுக்குப் பாரதந்திரியம் வ்ரதம் கொண்டு வாழும் நீ, பகவானுடைய மனத்தில் என்னை நிலைநிற்கச் செய்கிறாய், பத்ம பலாயதாக்ஷி. கஞ்ச லோசனி, என் காமாக்ஷி, ராமதர்ம ஸ்வரூபி, நீயும் பகவானும் ஒருவருக்கொருவர் தாரகராய் இருப்பதால், பரம புருஷனான பகவான் விஷ்ணு என்றால் ஆராதிக்கப் படுகிறார். நீங்கள் இருவர்களும் அவதரித்த பின்பு ஆஸ்ரிதர்களுக்கு ஸம்சார துக்கத்தை கல்லிப் பெயர்த்து யெடுப்பதால், வைகானர் என்று சொல்லப்படுகிறீர்கள். புருஷ சப்தத்தினால் அறியப்படும் மஹா நாராயணரே, க்ஷேத்ரக்ஞரே, எல்லாவற்றிற்கும் முன் செல்லுபவரே, உங்கள் இருவர்களுடைய இயற்கையான ஸ்வரூப குணம் என்னவென்றால் முக்தர்களுக்கும், உங்கள் விஷயங்களில் ஈடுபாடு என்னும் பேரானந்தத்தைக் கொடுப்பதால் அல்லவோ. ஹே ஜாத வேத, விஷ்ணு பத்னி, சீதாராமா, திருவுக்கும் திரு, திரு நின்ற பக்கமே திறவிது, திருவில்லாத் தேவர் தேவராகார்கள், கருணையையே வடிவாக்கி எடுத்த அகில ஜகன்மாதாவான சீதை இல்லாவிடில் என் புருஷோத்தம ராமன் பரமபுருஷனாக

வும், ஸர்வ ரக்ஷகனுகவும் ஆவானே? அவாப்த ஸமஸ்த காமனுன எம்பெருமானை உனது அருளின்றி என்னுல் அடைய முடியுமோ? அத்தனுகி யன்னையாகி ஆளுமெம் பிரானுமாய் புகுந்து நம்முள் மேவினர், ஏழை நெஞ்சமே, எத்தினுல் இடர் கடல் கிடத்தி என்று ஹேய ப்ரத்ய நீகனையாலே அஸ்ப்ருஷ்ட ஸம்சார கந்தராய், பலவகைப்பட்ட ஜன்மங்களைப் போக்கி, நித்ய ஸம்சாரிகளாகத் திகழும் நம்மை நித்யஸூரிகளாகக் கொள்ளும் உங்களுடைய கருணையை நாங்கள் எவ்விதம் வர்ணிப்போம்? ஸர்வஹிதமே, உங்களுடைய விரதம். அநாமயம், நாராயணம் என்று உங்களை சிந்தனை செய்யும் எங்களை ஸர்வவித பந்துவாக எங்களுடைய தண்மையையும், உம்முடைய பெருமைகளையும் நினைத்துப் பாராமல், எங்களுடைய ஸர்வ பரத்தையும் ரக்ஷிக்கும் பொறுப்பையும் நீங்களே ஸ்வயமாக ஏற்று லங்கைக்கு எழுந்திருந்து ராவணனையும், விபீஷணனையும், ராக்ஷஸ குலத்தையும் ஆட்கொண்டதுபோல, எங்களிடமும் நீங்களே ஏறிட்டுக்கொண்டு, ஹேயமான எங்களிடமும், உள்ளே புகுந்து, ஒரு நீராகப் பொருந்தி, ரக்ஷிக்க வேண்டும். ஹே பிரபோ, புருஷோத்தம ராமா, சீதா, துளசிதாஸ ப்ரியா, ராமானுஜ ப்ரியா, எங்களை ரக்ஷிக்க வந்த உங்களுடைய கருணை பெருக்குகளை, அமிர்த தாரைகளை நான் எவ்விதம் வர்ணிப்பேன்? நம்முடைய ஹிதம் எது என்று நான் அறிவேனே? நான் ஸர்வக்ஞனே? அல்லது பிரபோ, பிராட்டியே? நீங்கள்தான் ஒன்றும் தெரியாதவர்களோ? எங்களது ஹிதத்தை பிரவர்த்திப்பதற்கு நான் ஸர்வ சக்தனே? நீங்கள்தான் அசக்தர்களோ? ஸ்வாமி, தேவி, நாங்கள் எந்த விதத்தில் யோக்யர்கள்? நீங்கள் அல்லவோ உங்கள் மேன்மையைப் பாராமல் தாழ்ந்து நின்று, அன்று அர்ஜுனனுடைய தேர்தட்டில் இருந்தது போலவும், அதன் பின்பு யுத்தம் முடிந்த பின்பு அர்ஜுனனை ரதத்திலிருந்து முதலில் கீழே இறக்கி வைத்த கண்ணு, நீங்கள் எங்களை உபகரிககாமல் போனுல் "எத்தாலே நீ துக்க ஸாகரத்தில் கிடக்கிறது" என்று சொல்லி அல்லவோ, எங்களுடைய பாப விமோசனங்களைச் செய்து பரிக்ரஹிக்க வேண்டும். நாராயணு, வாஸுதேவா, விஷ்ணே, புருஷோத்தம ராமா சீதா.]

துளசிதாஸர் மீண்டும் சொல்லுகிறார் "என் பிரபு புருஷோத்தம ராமன் கருணையையே கவசமாக உள்ளவன். ராவணனுக்கு மனம் தெளியும்படி ஸர்வ சங்கல்பனான என் பிரபு, அவனுடைய மதம் பிடித்த சிரங்களையும், புஜங்களையும் அடிக்கடி வெட்டித் தள்ளினார். அப்படியும் ராவணனை மரிக்கவில்லை. அவனுடைய மனமும் தெளியவில்லை, லீலா மாத்திரம் பிரபு அவனுடைய பிணக்கும் ஜீவனுடன் போராடிக் கொண்டிருந்தார். (கருணா காகுத்ஸன், நாரத ஆஞ்சநேய ராமானுஜாதிகளால் அடிக்கடி ஸேவிக்கப்படும் புருஷன்,) பிரபு ராமன், சுரர்களான தேவதைகள், ரிஷி கணங்கள், சித்த ஜனங்கள் ஆகியவர்களின் மன, தேக கிலேசங்களைப் பூர்ணமாக அறிந்துகொண்ட ஸர்வக்ஞர் தனக்குள் வியாகுல மடைந்தவராகக் காணப்பட்டார். (649)

ஒன்றல்ல, ஒருதடவையல்ல, பல சிரங்களின் ஸமுதாயங்களை பல தடவைகள் அறுத்துத் தள்ளி என் பிரபு கோதண்ட ராமன், சார்ங்கதன்வா, அந்த ரண களத்தை ராவணனுடைய சிரங்களாலும், வெட்டுண்ட கைகளாலும் நிரப்பினார். அவருடைய லீலையினால், ஒவ்வொரு தடவையும் சங்கநிதி, பத்மநிதி தனத்தைக் கக்கும்போது தனேஸ்வரனாகிற குபேரன் மிக்க சந்தோஷத்தை அடைவானோ, அதைப்போல ஒவ்வொரு தடவையும் பிரபு சந்தோஷத்தை அடைந்தார். ராவணனோ மாண்டபாடில்லை. ஆனால் பிரபுவோ இவனுடைய மதம் தணியவில்லையே என்று மன ஸங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். அதனால் அவருக்கு விசேஷமாக பரிஸ்ரமம் ஏற்பட்டது. வீர பாஹுவான ஸ்ரீராமன் தற்செயலாக விபீஷணனின் ஓரம் பார்த்துவிட்டார். (அர்ஜுனனைப்போல திருவடிகளில் நின்று கொண்டிருக்கும் விபீஷண ஆழ்வானை என் பிரபு பார்த்து விட்டார்.) (650)

அந்தக் காட்சியைக் கண்ட பரமசிவன் உமையைப் பார்த்துச் சொன்னார், "என் பிரிய உமா, எவருடைய இச்சையினால் காலபைரவர் தமது கடமையைச் செய்கிறாரோ, எவருடைய ஸங்கல்பத்தினால் காலமே மரித்துவிடும் என்கிற பயத்தினால் ஸர்வ லோகங்களும், காலமும் அடங்கி, நடந்து வாழ்கின்றதோ, அப்பேற்பட்ட ஸர்வ ஸ்வதந்தரரான என் பிரபு நாரா

யணன் தனது சேவகனுகிய விபீஷணனுடைய எண்ணங்களை அறிய விருப்பம் கொண்டவர்போல நாடகம் செய்தார். (பக்த பிரியன், சரணுகத வத்ஸலன், பக்த சாஸனங்களின்படி நடக்கும் எளிமை உள்ளம் படைத்த நாராயணன், அகில ஹேய ப்ரத்யனீசன், அவாப்த ஸமஸ்த காமன் இதுவரை விபீஷணனுக்காகப் பொறுமை விரதம் பூண்டிருந்தார்.) அப்பொழுது விபீஷணன் ஸர்வ ஸங்கதியாகன், பகவானின் பரிஸ்ரமத்தையும் பொறுக்கமாட்டாமல், தேவியின் க்லேசங்களேயும், தேவ, ரிஷி, கின்னர, யக்ஷ, நாகர்களின் பதி பத்னிகளின் க்லேசங்களேப் பொறுக்க முடியாதவனுக, பிரபுவினிடம் வார்த்தைகளே ஸமர்ப்பித்தான்; "பிரபோ, ஸர்வக்ஞரே, ஸஹஸ்ர சீரிஷா புருஷரே, ஆயிரம் முடிகளேயும், கண்களேயும், பாதங்களேயும் உடைய திருவிக்ரம விராட் நாராயணு, சராசரங்களுக்கு நாயகனே, பிரணதபால், ஸுர முனிகளுககு சுகத்தைக் கொடுக்கும் ஸுக தாயகரே, தயவு செய்து கேளும்." (651)

[தியானம்

ஹே பரம புருஷா, மஹா நாராயணு, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணுய நம: ஹே பிரபோ, புருஷா, புருஷோத்தமா, என்னேத் தயவுசெய்து பார் அப்பா. துருவன் மார்க்கண்டேய நாரதாதி மஹரிஷிகளால் சூழப்பட்டிருக்கும் என்னேப் பார். ஹே நாத, பிரஹ்லாதன் உன்னேப் பார்த்து அன்று கதறினமாதிரி, ஆயிரக்கணக்கான யோனிகளில் நரன் பிறந்தபோதிலும், ஸத்யஸங்கல்பா, ஆர்த்திகல்பா, அச்யுதா, ராமாசீதா, மஹாலக்ஷ்மி பிரியா, ஸதா உன்னேவிட்டுப் பிரியாமல் இருக்கக்கூடிய அச்யுத பக்தியை வரமாகக் கேட்டும் என்னேப் பார். அப்பா, என்னேப் பார். விஷய போகங்களில் ஈடுபடும் அவிவேகிகள் எப்பொழுதும் எவ்விதம் விஷய போகங்களில் ஈடுபட வேண்டும் என்று ஆசை கொள்வார்களோ, அதைப் போல உன்னேயும் உன் பிராட்டியையும் ஸதா அனுஸ்மரணே பண்ணிக்கொண்டு, உங்கள் பாதங்களே விட்டு ஒரு க்ஷணமும் நாரதாதி ரிஷிகள் மாதிரியும் உமா மஹேஸ்வரர்கள் சதுரானனும், சரஸ்வதியும், இந்திரன் இந்திராணியும் நம்மாழ்வார், ராமனுஜன், பரதாதி சஹோ

தரர்கள் ஆஞ்சநேயர், கருடன், அனந்தன் விஷ்வக்ஸேனர் குஹர், ஓங்கார ரூபமான ஏகதந்தர், வேதவியாஸர் பராசரர், சௌனகர், சுகர் ஸனகாதிகள் ஆகியவர்கள் வழிகளிலும் தியாகராஜ, துளசிதாஸர், ஸ்யாமா சாஸ்திரி, தீக்ஷதர் போன்ற நாதயோகிகளின் ஹ்ருதயத்தில் ஊர்ந்து வரும் என்னைப் பாருங்கள். ஹே கோவிந்தா, பச்சாமாமலை போல் மேனி உள்ள திருவரங்கா, என் வேங்கடவரதரே, நீர் தானே பூமி, ஜலம், அனலன், வாயு, ஆகாயம், மனது, புத்தி, அஹங்காரம், மூலப் ரகிருதி இவை எல்லாவற்றிற்கும் என்ன ரூபம் உள்ளதோ, அப்பேற்பட்ட ரூபமுள்ள புருஷனே எல்லாவற்றிலும் வியா பித்தும் இவற்றில் நின்றும், மிகத் தொலையிலும் அப்பால் இருக்கும் ஆதி நாராயணனே, எனது ஆதிப்பிரானே ஆயிரம் தடவைகள் பிராட்டி ராமனுஜன் ஸந்நிதியில் நமஸ்காரம் செய்கிறேன். ஹே, ஸஹஸ்ராக்ஷா, ஸஹஸ்ரபாத், பக்தர்களின் அம்ருதமே, நீர் அடியார்களின் தோஷங்களைக் கவனிப்பவ ரல்லர். அவர்கள் இச்சைப்படுவதை அளிக்கும் துருவ நாராயணு, உம்மைப் பார்க்கவோ, அறியவோ, துதிக்கவோ, யாவரால் முடியும்? கணக்கற்ற ரூபங்களையும் கணக்கற்ற கல்யாண குணங்களின் சொத்துக்களைப்போல ராசிச் கொத் துக்களை உடைய புருஷா, சுத்தர், சூக்ஷ்மர், அகில வியாபி, பிரதானம் என்று சொல்லக் கூடியதற்கும் பரமாக விளங்கும் உம்முடைய புருஷ ரூபம் இருக்கிறதே, அந்த பரம புருஷ ரூபத்தின் அகில ஹேயப்ரத்யனீக கல்யாண குணங்களை விவரித்து யாவராலும், பல கல்ப கோடி காலங்களிலும் எடுத் துச் சொல்ல முடியாதோ, அப்பேற்பட்ட புருஷனுக்கு, புருஷ ஏவேதம் ஸர்வம், என்று சொல்லி நான் ஆயிரம் நமஸ்கா ரங்கள் செய்கிறேன். 'யோ அந்த: பிரவிஸ்ய மம வாசமி மாம் ப்ரஸுப்தாம் சஞ்சீவியத் யகில சக்த ஏர:, ஸ்வ ஏம் நா அன்யாம் ஸ்ச ஹஸ்த சரண ஸ்ரவணத்வ ஏ தீன் ப்ராணுன் நமோ பகவதே புருஷாய துப்யம் என்று உங்களுடைய மங்கள சரணங்களில் படிந்திருக்கும் என்னைப் பாரும், ஹே பிரபோ, எங்களைக் கடாக்ஷியும்.]

''ஸ்வாமி (தங்களுக்குத் தெரியாததா? இவன் ஸதா பிராட்டியை நினைத்துக் கொண்டிருப்பதால்), இவனுடைய

மனதில் அம்ருதம் வாசம் செய்கிறது. இவனுடைய நாபி குண்டலத்தில் அம்ருத கலசங்கள் இருக்கின்றன. ஹே நாதா, அவைகளின் பலத்தால் ராவணன் இதுவரை உயிருடன் விடப்பட்டிருக்கின்றான்.'' பிரபு கிருபாளு, விபீஷணனுடைய அர்த்த புஷ்டியுள்ள வசனங்களைக் கேட்டார். மேதாவியான பிரபு காலவரை தேசவரையும் மற்றதாகிய மகிமைக்கு உதவியாக இயற்கையினால் அமைந்த ஸர்வக்ஞத்வத்தை உடைய என் பிரபு, விக்ரமர், (வேத மூர்த்தியான கருடனை வாஹனமாகக் கொண்டு சஞ்சரிக்கும் பிரபு) ரகுநாதன், ஆபத்ஸகர், சிரித்துக்கொண்டு தனது கைகளில் பயங்கரமான ஒரு பாணத்தை எடுத்தார். (652)

எங்குப் பார்த்தாலும் அசுபமான சகுனங்கள் தோன்ற ஆரம்பித்தன. அநேக கழுதைகள், நரிகள் நாய்கள் ஊளையிட ஆரம்பித்தன. ஜகத்திற்கு அசுபத்தைத் தெரிவிக்கக்கூடிய ஆந்தை முதலிய பக்ஷிகள் கத்த ஆரம்பித்தன. எங்கு பார்த்தாலும் ஆகாயத்தில் பல கேதுக்கள் ஏககாலத்தில் தோன்றி, உத்பாதம் விளைவிப்பவைப் போல, தங்களை பிரகடனப்படுத்திக் கொண்டன. (653)

அந்த பாணம் அவருடைய கைகளுக்கு வந்ததும் பத்து திக்குகளிலும் தாஹம் எடுப்பது போல அக்னி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. ஆகாயத்தில் சூர்ய கிரஹணம் இல்லாமல், ரவி மூடப்பட்டான். (காலசக்கிரம் பயத்துடன் சுழன்று கொண்டு எங்கும் பயத்தையும் பகவானுடைய கோபத்தையும் அறிவித்துக் கொண்டு, யாவருடைய மனத் திலும் இருள் சூழ்ந்ததுமாதிரி யிருந்தது.) அந்த தருணம் மந்தோதரி என்கிற மஹாஸதியின் மனத்தில் அவளையு மறி யாமல் பயம் ஏற்பட்டது. மூர்த்திகளாகிற அர்ச்சா மூர்த்தி களின் கண்களிலிருந்து கண்ணீர்கள் வழிந்து கொண் டிருந்தன. (654)

பூமியில் பக்தர்களின் வசனங்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் அர்ச்சாவதார மூர்த்தி பிரதிமைகள் தீர்க்கமாக அழ ஆரம் பித்தன. ஆகாயத்தில் வஜ்ர பாதங்கள் யேற்படலாயின. வாயு பகவான் அதி உஷ்ணமான காற்றினால் பிரசண்ட வேகத்

துடன் சென்று கொண்டிருந்தார். அவருடைய கதிக்கு ஏற்ப பூமி நடுநடுங்க ஆரம்பித்தது. மேகங்கள் ரத்தத்தைக் கக்கின. மயிர்களும், தூசிகளும் மழையைப்போல எங்கு பார்த்தாலும் பெய்ய ஆரம்பித்தன. இந்த விதமாக என்ன விதமான அமங்களங்கள் அசுபமான சகுனங்கள், உத்பாதங்கள் ஏற்பட வேண்டுமோ, அவைகள் எல்லாம் விவரிக்க முடியாதபடி தோன்ற ஆரம்பித்தன. அவைகளை முழுவதும் யாரால் விவரிக்க முடியும்? அப்பேற்பட்ட உத்பாதங்களைக் கண்டு ஸுரர்களும் மஹரிஷிகளும் அதி வியாகுல மடைந்து, பகவானுடைய கோபத்தைத் தணிப்பதற்கு சாந்தி பாடங்களாகிற ஜய மங்கள ஸ்துதிகளைக் கானம் செய்தார்கள். "ரகு நந்தனுக்கு ஜய மங்களங்கள் ஏற்படட்டும்," என்று பலமாக உத்கோஷித்துக் கொண்டு அஞ்சலி பந்தத்துடன் தேவர்கள் மிக்க பயபீத மடைந்தவர்களாக ஸ்துதி செய்ய ஆரம்பித்தார்கள். பிரபு மஹா கிருபாளு, சத்ய ஸங்கல்பர், தீனபந்து, சரணுகத வத்ஸலர், கோவிந்தர், ரகுபதி, அந்தப் பாணத்தை வில்லில் பூட்டினர். (655)

காதுவரையிலும் தனுஷ்ஷின் நாணை இழுத்து நாராயணரின் அம்சரான ரகு நாயகர் முப்பத்து ஒன்று பாணங்களை பிரயோகித்தார். ஸ்ரீ ரகு நாயகனின் பாணங்கள் கால சர்ப்பங்கள் மாதிரி பறந்து தாவிச் சென்றன. (656)

ஒரு பாணம் ராவணனுடைய நாபியிலிருக்கும் அம்ருத கலசங்களை வற்ற அடித்தது. மற்ற முப்பது பாணங்கள் மிக்க ரோஷத்துடன் ராவணனுடைய இருபது புஜங்களையும், பத்துத் தலைகளையும் அறுத்தன. கைகளும், தலைகளும் அறுபட்ட பின்பு, அவைகள் அந்த பாணங்களால் வெகு வேகமாக எடுத்துச் செல்லப்பட்டன, தலைகளையும் புஜங்களையும் யிழந்த ராவணனுடைய பூத உடல் பூமியில் நடனம் செய்ய ஆரம்பித்தது. (657)

அந்த முண்டம் மிக்க, பிரசண்ட வேகமாக ஓடும்போது பூமி நடுங்கியது. அப்பொழுது பிரபு ஒரு பாணத்தினுல் அந்த உடலை இரு துண்டங்களாகச் செய்தார். ராவணன் மரித்து விட்டான். மரணம் அடையும் சமயம், அந்த மஹா பாக்யவான் "ராமன் எங்கே? நான் அவனை யுத்தத்திற்கு அழைத்து

சண்டைபோடுவேன். அவனைச் கொல்வேன். அந்த சீதாராமன் எங்கே?'' என்று சொல்லிக் கொண்டு, கர்ஜித்துக் கொண்டு, கோரமான மரணத்தை ராவணன் அடைந்தான். அவனுடைய ஆத்மா கோதண்ட ராமனுடைய பாணங்களால் அமைதியை அடையப் பெற்றது. (658)

பத்துத் தலைகள் கொண்ட ராவணனுடைய இரு துண்டங் களாக்கப்பட்ட பூத உடல் பூமியில் விழும்போது பூமி நடு நடுங்கியது. சமுத்திரங்கள், நதிகள், பத்து திசைகள், அஷ்ட திக்கஜங்கள் பர்வதங்கள் ஒருதடவை எழும்பி பயத்தினால் நடுங்கி அமைதியை யிழந்தனவாகக் காணப்பட்டன. ராவண னுடைய இரு துண்டங்கள் அநேக கரடிகளையும் வானரங் களையும் நசுக்கிக் கொண்டு பூமியின் மீது விழுந்தன. (அந்த கோதண்ட ராமனுக்கு நான் ஆயிரம் தடவைகள் நமஸ் கரிக்கிறேன்.) (659)

[*தியானம்*

பிரபோ, ராமா சீதா, மாயோனே, மானமே உருவெடுத்து வந்திருக்கும் மூர்த்தியே, ஸௌலப்யாதி குணங்களால் தமது பக்தர்களான தேவர்களுக்கு கீழ்படிந்து அவர்களுடைய ஆக்ஞைகளை நிறைவேற்றும் மானதரே, உன்னை அண்டினவர் களுக்கு அனுக்ரஹம் செய்யும் முறை இவ்வளவென்று வரை யறுக்கக்கூடாதபடி ஸ்வபாவம் உள்ளதன்றோ? ஹே அமேயாத்மா, மாநாதீதரே, உம்முடைய மகிமைகளை நாங்கள் எவ்விதம் வர்ணிப்போம்? நீரே ப்ருத்வி ஆகிற பூதங்களுக்கும் கந்தாதிகளுக்கும் அவைகளின் குணங்களுக்கும் புத்தி முதலிய பதின் மூன்று காரணங்களுக்கும், பிரதானம் என்று சொல்லப் படுவதற்கும், அதற்கு மேலே இருக்கும் புருஷன் என்கிற ஜீவாத் மாவுக்கும், அவனுக்கு மேலிருக்கும் ஸநாதன மானவரும், சாஸ்வதரும், பரம புருஷன் என்று சொல்லப் படுபவர் நீர் அன்றோ? ஹே பர பிரும்ம புருஷா, அகில பிரும்மாண்ட நாயகா, ஸர் வாத்மன், நாராயணா, உம்முடைய லக்ஷணம் அன்புபாறுதிகளால் நன்கு வளர்ந்து வரும் மாந்தர்க்கு மோக்ஷத்தை அளிக்கும் ஆற்றல் அன்றோ? உம்முடைய மகிமைகள் மிக்க அனந்தமாகும். சகல சேதன

அசேதன வஸ்துக்கள் உம்முடைய சக்தியின் ஒரு துளியான அம்சம் அன்ரே? நீர்தானே ஆனந்தம்; ஞானம் என்று சொல்லப்படும் அழிவற்ற ஆதிஅம்சோதி. உம்முடைய நிஜமான உருவம் பரமபதமாகிற வைகுண்டத்தி லிருக்கிறது. உம்முடைய உருவங்கள்தானே தேவர்கள், மனி தர்கள், விலங்கு, தாவரம்; இந்த பிரபஞ்சமும் சேதனு சேதன மும் உள்பட அவரவர்களின் கர்ம பலத்திற்கு யேற்ப, அவர்கள் அந்தந்த யோனியில் பிறக்கிருர்கள். அத்யதிஷ்ட தசாங்குலம் என்னும்படி ஸம்பூர்ண பிரும்மாண்டங்களிலும் வியாபித்து நின்று தச குணங்களாகிற மஹா பிரமாணத்துடன் விளங்கும் புருஷன் நீர்தானே? ஹே புருஷோத்தம ராமா, சீதா, வைகுண் டத்திலிருக்கும் நித்ய ஸூரிகள் உம்முடைய போக ரஸங்கள். பிரகிருதி, மஹத் அஹங்காரம், ஐந்து பூதங்களும், ஐந்து தன் மாத்திரைகளும், பதினொரு புலன்கள், ஜீவாத்மா எனப்படும் இருபத்து ஐந்து தத்வங்களின் அபிமான தேவதைகளாய், உமக்கு திரு ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவு மிருக்கின் றன. உம்மை அண்டின பக்தர்கள் பகவத் அனுபவம் எனப் படும் உம்முடைய திவ்ய திருமேனியை அனுபவித்துக்கொண் டிருப்பதும் உமக்கு அனுகூலமான கைங்கர்யங்களைச் செய்து கொண்டிருப்பதும், உம்முடைய ப்ரீதியையே பரம ப்ரீதியாக நினைத்துக்கொண்டு வாழ்வதுதானே. பகவத் ஸங்கல்பமாக வாழும் உமது பக்தர்கள் உமக்கு ஒன்றே பலவிதமாக, ராமா னுஜர் மாதிரி கைங்கர்யம் செய்து உகப்பது அன்ரே? ஹே திரிபாத அம்ருத மூர்த்தியே, பரம புருஷா, வாஸுதேவா, ஸங்கர்ஷணரே, பிரத்யும்னரே, அநிருத்தரே உமக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.]

ராமனுடைய அஸ்திரங்களால் கவரப்பட்ட ராவண னுடைய சிரங்களும், புஜங்களும் மண்டோதரியின் முன்பு கீழே வைக்கப்பட்டன. அதற்குப் பின் அந்த ராமபாணங்கள் ஜகதீஸ் வரரான ஸ்ரீராமனிடம் (என் பரம புருஷனிடம்) சென்றன. அந்த மஹத்தான பாணங்கள் ராமனுடைய அம்புறாத் தூணி யில் நுழைந்து விட்டதைப் பார்த்த தேவகணங்கள் ஆனந்தம் தாங்காமல் துந்துபி முதலிய மங்கள வாத்யங்களை வாசித் தார்கள். (660)

ராவணனுடைய பெரும் தேஜஸ் பிரபுவினுடைய முகத்தில் புகுந்தது. இதைக்கண்ட மஹேஸ்வரரான சம்பு, பிரும்மா ஆகியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். பிரும்மாண்டங்கள் முழுவதிலும் பகவானுக்கு ஜய, ஜய என்கிற மங்கள சப்தங்கள் கேட்கப்பட்டன. பிரபல புஜதண்ட ஸ்ரீரகுவீரனுக்கு ''ஜயங்கள் ஏற்படட்டும்;'' என்கிற மங்கள ஜயகோஷங்கள் எங்கு பார்த்தாலும் கேட்கப்பட்டன. (661).

தேவக் கூட்டங்களும், முனிவர்களின் கூட்டங்களும் நான்கு திசைகளிலிருந்தும் புஷ்ப மாரி பெய்தார்கள். அவர்கள் ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்கள். ''ஜய க்ருபாளு, முகுந்தனுக்கு ஜயங்கள் ஏற்படட்டும். ஜய முகுந்த, ஜய ராம, ஜய சீதா. (662)

(பாஞ்சராத்ரர்களினுல்) ''முகுந்தா'' என்று பிரார்த்திக்கப் பட்ட ராமா, நாராயணு, ஜய கிருபாகந்தா, ஜய முகுந்தா, (ராகம், த்வேஷம், ஹர்ஷம், சோகம், ஜன்மம், ம்ருத்யு ஆகிய இரட்டைகளை அபஹரிக்கும்) ஹரிபகவானே, உம்மை சரண மடைந்து அல்லவோ, நாங்கள் சுகம் ஆனந்தம் அடைய வேண்டும். முராரி, ராவணுரி, ''துஷ்டர்களை அழிப்பதற்காக நான் யுகந்தோறும் அவதாரம் எடுக்கிறேன்,'' என்று சொல்லிக் கொண்டு அவதரிக்கும் பஞ்சாயுதா, காரணத்திற்கு காரண மாகவும், பக்தர்களுக்கு பலம் சித்திக்க காரணமாக விருக்கும் பரம ஹேதுவே, உம்முடைய ஸ்வரூபம் பொறுமையும், கருணையும்தானே. உம்முடைய விபவ ஐஸ்வர்யங்கள் மஹாலக்ஷமி தானே. (ஹே பகவன் நாராயணு, வாஸுதேவா, ஆதிபுருஷா, மஹானுபாவா,) பரம மங்கள் பரம கல்யாண பரம காருணிக மூர்த்தியே, (கேவல ஜகத்தாதாரா, லோகநாதா, ஸர்வேஸ்வரா, லக்ஷ்மிநாதா) உனக்கும் உன் பிராட்டிக்கும் ஸதா மங்களங்களும், ஜயங்களும் ஏற்படட்டும். தேவர்களுடைய ஆனந்தம், பரிபூர்ண க்லேச நிவாரணத்தினுல் ஏற்பட்டதும், விபவ ஐஸ்வர்யங்கள் கொண்ட பரமாத்மாவைப் பார்த்தபடியாலும், பொங்கி, பொங்கிவர ஆரம்பித்தது. அவர்கள் புஷ்ப விருஷ்டி செய்தவண்ணமாக விருந்தார்கள். மங்கள வாத்யங்களான துந்துபி, நகாடா முதலியவைகளை வாசித்து, ஆனந்தக் களிப்புடன் நாட்டியமாடி, கீதங்கள் பாடி, இன்பமுற்றுர்கள். யுத்த

களத்தில் என் பிரபு ஸ்ரீராம புருஷோத்தமனுடைய சுபாங் கங்கள் விஸ்வ மோஹிதமாக, அதி சோபையுடன் அநேக காம தேவர்களின் ராசிக் கொத்துப்போல, ஏகசுந்தர மூர்த்தி யாக விளங்கினர். (அப்பேற்பட்ட விஜயராகவனுக்கு அனந்த மான நமஸ்காரங்கள் செய்கிறேன். ஜயலக்ஷ்மியுடன் கூடிய கோதண்டராமனுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) (663)

[*தியானம்*

மஹா புருஷா, ராமா, வேதாத்மாக்களான ஸாவித்திரி, காயத்திரி, ஸரஸ்வதி என்பவர்களை ஹ்ருதயத்தில் தாங் கிக்கொண்டிருக்கும் மாதவா, உன்னைத்தானே க்ஷமிணும்வரா என்றும், கருணன்வித: என்றும் பலவிதமாக என் ஆசார் யர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். அப்பா, நீதானே எல்லா பிராணிகளுக்கு இருப்பிடமும், பரம உத்தமமான தேஜஸ் என்று சொல்லப்படுகிறீர். நாராயணா, மஹாலக்ஷ்மியாகிற சீதையை ஸ்ரீவத்ஸமாக தரித்துக் கொண்டிருக்கும் ராமநாரா யணா, கௌஸ்துபம் என்னும் மாமணியைத் தரித்துக்கொண் டிருக்கும், அனுக்ரஹிக்கும் மோக்ஷ நாராயணா, உன்னுடைய அசாதாரண அடையாளங்கள் இந்த இரண்டும் அல்லவோ. தாமரைக் கண்ணா, உம்மை ஆராதிப்பதுதானே பீஷ்மர் தர்ம புத்ரருக்கும், நாரதர் எனக்கும், தியாகராஜர் துளசிதாஸருக்கும், விருத்திராசுரன் மஹேந்திரனுக்கும் சொல்லிய மற்ற எல்லா தர்மங்களாலும் மிகச் சிறந்த ஏக தர்மம். நற்மனம் கொண்டு சந்தோஷத்துடன் பிரஸன்ன முகத்துடன் நீர் பிரகாசித்தால் தானே, மற்றவை யாவும் பிரகாசிக்கின்றன. அளவற்ற கல் யாண குணங்களால், ராமானுஜரால் போற்றப்படும் தேவதைக ளுக்கு தேவதையே, பூதங்களுக்கும் அவ்யயமான பிதாவே, நீர் தானே மஹத் தப:; மஹத் ப்ரும்மம். யோகிகளும் ஸநாதன மான நாரத ஸனகாதிகளாலும், பகவான் வேத வியாஸராலும் போற்றப்படும் ஏக பாராயணமாக விருக்கிறீர். நீரும், பிராட் டியான மஹா லக்ஷ்மியும் சேர்ந்துதானே, ஸர்வ வ்யாபகமாக வும், நித்யர்களாகவும், ஜகன்மாதா பிதாவாகவும், விஷ்ணு பகவானின் அனபாயினி என்று சொல்லப்படும் தேவியாகவும்,

பராசரர் மைத்ரேயருக்குச் சொல்லிய "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம், த்வஜோத்தம," எவ்விதம் விஷ்ணு பகவான் ஸர்வ வ்யாபகமாக விருக்கிறாரோ, அதுபோல அவருடைய பத்னி மஹா லக்ஷ்மியும் அவ்விதமே இருக்கிருள்; என்று சொல்லியபடி, நீங்கள் இருவர்களும் ஆதிப் பிரான், உங்களிடமிருந்து உலகங்கள் முதலிய ஸ்ருஷ்டி, ஸ்திதி உண்டாகி, திரும்பவும் பிரளய காலத்தில் லயமாகின்றன. ஹே ஜகன்னாதா, உங்கள் இருவர்களையும் மங்களகரமான ஆயிர நாமாக்களால் அர்ச்சித்து, ஸ்துதி செய்து, த்யானம் பண்ணி, பக்தியுடன் நமஸ்கரித்து, உங்களுடைய ப்ரேமா பக்தியை வரமாகக் கேட்டு, பிரஹ்லாதன், ஆஞ்சநேயர், தர்மபுத்ராதிகள், ஸஹாதேவன் முதலிய தாஸர்கள், பீஷ்மர், ஆழ்வாராதிகள் முதலிய வைஷ்ணவ ஆர்த்திகள் ஆனந்தித்ததுபோல, ஆனந்தமடைய கிருஷ்ண பூரிதனுகவும், ராமபூர்ணனுகவும் நாராயண தாஸனுக விருக்கும் எங்களை கடாக்ஷிக்க வேண்டும். அம்ருதாம் ஸூத் பவ : என்கிற மந்திரத்தின் பீஜமாகக்கொண்ட விஷ்ணு தேவதையே, திரிஸாமா என்பது ஹ்ருதயமாகவும் ஸர்வதோஷ நிவாரணம் பிரயோசனமாகவும், கௌஸல்யா தேவகி நந்தன: என்பது சக்தியாகவும் இருக்கிறது உம்முடைய ராம நாராயண மந்திரம், உம்முடைய பரஸ்வரூபம் அளவிட முடியாதபடியும், உமமுடைய புகழ் கீர்த்திகள், உத்தம புண்ய ஸ்லோகா, புண்ணிய ஸ்ரவண கீர்த்தன, நம்மாழ்வார் சொல்லியபடி செம்பவளத்திரள் வாயன், ச்ரீதரன் தொல்புகழ் பாடி, கும்பிடு நட்ட மிட்டாடிக் கோகு கட்டுண்டு ழலாதார், தம் பிறப்பால் பயனென்னே சாது ஜனங்களிடையே, என்று உங்களை அனுஸந்திக்கும் எங்களைக் கருணையுடன் கடாக்ஷித்துப் பாருங்கள், பிரபு, ஸ்ருஷ்டி காலத்தில் பிராணிகளின் நன்மைக்காக ஸங்கல்பிக்கும் அநிருத்த நாராயண, நீங்கள்தானே எங்களுடைய அன்னதாதா. அக்னி ஹோத்ரங்கள் முதலிய கர்மாக்கள் வேறு பலனை விரும்பாது பகவத் ஆராதனம் என்று சொல்லப்படும் கர்மாக்கள் முதலியவை உங்களுடைய ப்ரீதிக்காக அல்லவோ ஏற்பட்டிருக்கின்றன. அப்பேற்பட்ட "அச்யுத ப்ரியதாம்" என்று சொல்லும் ஏகாந்திகள் ஸதா உங்களைத் தியானித்து அல்லவோ பரமம்

ஸதானம் யத்தத் பஸ்யந்தி ஸூரய: கத்வா கத்வாநி வர்த்தந்தே சந்திர ஸூர்யாதயோ க்ரஹா: அத்யாபி நநிவர்த்தந்தே த்வாதசாக்ஷர சிந்தகா:, என்கிற பிரமாணத்தின்படி நீர்தானே அர்ச்சராதி மார்க்கம்; தூமராதி மார்க்கத்தையும் ஏற்படுத்தினீர். அப்பேற்பட்ட விராட் ராமனே, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே ராமாய நம: என்று நமஸ்கரிக்கும் எங்களைப் பார், ஹ்ருஷீகேசா, விரஜோ நாராயணு, எங்களை அனுக்ரஹி.]

பகவான் ராமசந்திரனுடைய சிரத்தில் ஜடா முகுடம் பிரகாசித்தது. அதில் அழகான மந்தார புஷ்பங்கள் அமர்ந் திருந்தன. அழகாயும், சீராகவும் கட்டப்பட்டு, மிக்க சோபை யுடன் விளங்கிய ஜடாமுகுடம் (கங்கையைத் தரித்திருக்கும் ஜடாதரனுடைய மணிமுடியைப் போல சந்திர சூடமாக) விளங்கியது. (என் மனத்தையம்) அங்கு கூடியிருந்த தேவர்கள் பிரும்ம ருத்ராதிகள் ரிஷிகணங்களின் மனங்களையும் அபஹரிக்கும் சோபையுடன் விளங்கியது. ஒரு பெரிய நீலகிரி யின்மேல் மின்னலைப்போல விளங்கிக் கொண்டு, நக்ஷத்திர நேமியாக பகவான் ஹ்ருஷீகேசனுக மஹா சோபையுடன் விளங்கினுர். (ஸஹஸ்ர புஜங்கள் கொண்ட விராட்ராமன்) அன்று தன்னுடைய இரு புஜங்களில் கோதண்டத்தையும் பாணத்தையும் தரித்துக் கொண்டிருக்கும் சார்ங்க தன்வாவாக விளங்கினுர். அவருடைய முகத்திலும், உடம்பிலும் ரத்த பிந்துக்கள், வியர்வைத் துளிகளைப்போல பிரகாசித்துக் கொண் டிருந்தன. (தியாகராஜர் அடிக்கடி, அடிக்கடி பார்த்து ஆனந்திக்கும்) அந்த ராமுனி பிரபு ஒரு பெரிய தமால விருக்ஷம் போலவும், அந்த விருக்ஷத்தின்மேல் சுந்தரமாக வீற்றிருக்கும் சிறியதும், சிகப்பு நிறம் கொண்ட பக்ஷிக்கூட்டங்கள் (மஹரிஷிகள் ஸதா பஸ்யந்தி ஸூரய : என்கிருப் போலே) இன்ப ஆனந்த மடைந்தவர்களாக நிஸ்சலபக்தி பூர்ணமாக ஸ்துதி செய்து கொண்டிருப்பது போல காணப்பட்டார்கள். (அப்பேற்பட்ட அநிருத்த நாராயணனை, பிரும்மா ஸாவித்திரி தேவதைகளை முன்னிட்டுக் கொண்டு ஆயிரம் நமஸ்காரங்களை நான் அடிக்கடி செய்கிறேன்.] (664)

பிரபு கேசவ மூர்த்தியின் கிருபா திருஷ்டி அங்கு கூடி

யிருந்த தேவ கணங்களின்மீது விழுந்தது. அந்த கிருபா திருஷ்டி அவர்களுக்கு அபய முத்ரையாக விளங்கியது. கரடிகளும், வானரங்களும், ஸகலரும் ஆனந்தம் கொண்டார்கள். ஜய ஸுகதாமா, ஜய முகுந்தா, என்று அவர்கள் ஸ்தோதிரம் செய்தார்கள். (665)

[*தியானம்*

மஹா புருஷா, நாராயணு, சீதாபதே, ராமா, ஸமஸ்த அணுவுக்கும் அணுவாகவும், ப்ருத்வி முதலிய ஸமஸ்த மிகப் பெரிய ஸ்தூல பதார்த்தங்களுக்கு மஹத்தாகவும் விளங்கும் லோகதாமா, தராதரா, அப்ரகாஸ்ய அபேத்ய ஸர்வருப ஸர்வேஸ்வரா, அனந்தா, அஜரே, அவயயரே, ஆதி பீஜமாகிய நாராயணருக்கு ஆயிரம் நமஸ்காரங்களை பராசரர், வேதவ்யாஸரை முன்னிட்டுச் செய்கிறேன். ஹே விராட் புருஷா, பத்ம நாபரே, படைப்பின் பொருட்டு, ஸங்கல் பித்துக் கொண்ட பரமபுருஷா, நமஸ்காரம். அன்று புத்ரனகிற ருத்ரர் பிரும்மாவிடம் சென்று, படைப்பில் சொல்லப்பட்ட புருஷர்கள் அநேகர்களா, அல்லது ஒருவனே தானு? இவ்வுலகில் எவன் ஸ்ரேஷ்டனுன புருஷனுகவும், புருஷோத்தமனுகவும் இருக்கிருன்? இகத்தில் யார் காரணராகவும் சொல்லப்படுகிறுர்?, என்கிற கேள்விக்கும்; தேவாஸுர யுத்தத்தில் தேவர்கள் பீடிக்கப்படும்போது பகவான் ஒருவர் தோன்றி தேவர்களைக். காப்பாற்றி, அசுரர்களை அழித்த பின்பு அந்தர் தியானம் செய்தபோது, தேவர்கள் அனைவரும் விஸ்மயித்து பிரும்ம தேவரைக் கேட்க, ''பிதாமஹரே, இந்த தேவாஸுர யுத்தத்தில் நாம் யாரால் காப்பாற்றப் பட்டோமோ, அவர் எங்கே, உண்மையில் அவர் யார்?,'' என்று கேட்க, பிரும்ம தேவர் பத்ம நாபரது ஆதிஸ்வருபத்தை தெரிவித்தார். ''உலகங்களுக்கு ஈஸ்வரரும், கல்யாண குணங்கள் நிரம்பினவரும், ஸுரானந்தரும், விபுமீட்யனும் அவரே நாராயணனுமாவார்,'' என்று அவர் சொன்னுர். ''தத்ரய: பரமாத்மா ஹிஸ நித்யம் நிர்குண: (தோஷங்களற்றவர்) ஸம்ருத; ஸஹி நாராயணோ ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹிஸ: நலிப்யதே ஃலைஸ்சாபி பத்மபத்ர மிவாம் பஸா, கர்மாத்மா த்வத்பரோயோ அஸௌ

மோக்ஷபந்தை: ஸயுஜ்யதே'' என்றும்; அஹம் ப்ரும்மா ஆத்ய ஈச: ப்ரஜானும் தஸ்மாத் ஜாதஸ்த்வம் சமத்த: ப்ரஸுத:'' என்றும் பதில் சொன்னர். அப்பேற்பட்ட நாராயணு, பகவான் வேத வியாஸரால், தஸ்யை கத்வம் மஹத்வம் ச ஸ சை க: புருஷ: ஸ்மிருத: என்று சொல்லியபடி, ராம நாராயணு, சாஸ்திரங்களால் சொல்லப்பட்டதும், ஸத்யமும், எல்லா வேதங்களிலும் பிரஸித்தமான புருஷ ஸுக்தத்தில் முனிசிகா மணியான பகவான் வியாஸரால் சுருக்கமாக ஒரே ஒரு புருஷன்தான் அளவற்ற தேஜஸ் உள்ளவராகவும் சொல்லப் பட்டது, அவருடைய அனுக்ரஹத்தால், வைஜயந்தம் என்கிற சிறந்த மலேயில் வசிக்கும் பிரும்மா தனது புத்ரரான ருத்ரனுக்குச் சொல்லிய ஏக புருஷனை நாராயணனே நான் தியானிக்கிறேன். ஹே ரெங்கநாதா, மமநாதா, விராட் புருஷா, புருஷோத்தமா, பல புருஷர்கள் பிரத்யக்ஷமாகக் காணப்படு கிருர்கள். அவ்விதம் பார்க்கக்கூடாத ஒருவரும், ஆதிப் பிரானும், ஆதி நாராயணரும், அன்று பகவானே தனது வாஹனனை கருடருக்குச் சொல்லிய வசனங்களாகிற ''வைநதேயா, எவ்வகையிலாவது நான் பக்தர்களால் அறி யப்பட வேண்டும் என்பதுதான் என் கருத்து; ஆனல் இந்த ஸ்வரூபம் மிகப் பெரியது. எவ்வகையிலும் அறியக்கூடாதது. அடையாளங்களாலும், ஞானத்தில் நிலேபெற்ற பிரும்மருத்ர மஹேஸ்வரி நாரத ஸனத்ஸு ஜ்ரதாதிகள், வேதவ்யாஸர், பராசரர் போன்ற மஹரிஷிகளும் ''நான்'' என்பதையும், பலன் களில் ஆசையையும், உலகப்பற்றையும் விற்றவர்களுமான வித்வான்கள் என்னே அடைகின்றனர், பக்ஷிராஜனே, ஆகையால் என்னிடத்தில் மனம் வைத்து பக்தி செய்யும் நீயும் உலகத்திற்குக் காரணமாயிருக்கும் எனது ஸ்தூல ஸ்வரூபத்தைமட்டும் தான் அறியலாம்;'' என்று சொன்னர். பிரும்மா மீண்டும் பரமேஸ்வரரிடம் சொல்லுகிருர். ''அவர் அநேகம் புருஷர்களுக்கு ஒரே காரணராகவும் சொல்லப் படுகிருர்; அவரை அறிந்தவர்கள் விராட்டும் (அநிருத்தன்), ஸுத்ராத்மாவாகவும் (பிரத்யும்னன்), காரணரும் (ஸங்கர் ஷணன்), நிர்குணரும் (வாஸுதேவன்), எப்பொழுது மிருக்கிற அஜர், அவ்யயர், ஸநாதனமான விஸ்வ

ரூபரை, புருஷரை அடைகிருர்கள். அப்பேர்பட்ட பத்மநாப ருக்கு, சதுர் வ்யூஹம் கொண்ட நாராயணருக்கு பிரும்மா நாரதாதிகளை முன்னிட்டு உமா மஹேஸ்வரர்களை தண்டம் செய்து, நான் ஆயிரம் தடவைகள் நமஸ்காரங்கள் செய்கி றேன். மஹா புருஷ சப்தத்திற்கு அர்த்தப் பொருளாக விளங் கும் நாராயணு, நீயும் மஹாலக்ஷ்மியும் என்னை ரக்ஷிக்க வேண்டும்.]

பதியினுடைய சிரங்களைக் கண்டாள் மந்தோதரி. மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்தாள். அவள் அழுது கொண்டு மூர்ச்சை அடைந்ததைப் பார்த்த அவளுடைய சகிகள் ஓடிப் போய், அவளை வாரி அணைத்து, அவளை அழைத்துக்கொண்டு ராவணன் மரித்துக் கிடந்த ரண பூமிக்கு வந்தார்கள். (666)

தனது பதியின் கதியை நோக்கிய மந்தோதரி பலவிதங் களாகப் புலம்பி அழுதாள். அவளுடைய சகிகளும் ராவண னுடைய உடலைக் கண்டு பலவிதமாக புலம்பி அழுதார்கள். அவர்களுடைய கேசபாசங்கள் விரித்து, தலைமயிர்கள் கட்டப் படாமல், தங்களுடைய தேக ஸ்திதிகளையும் மறந்து, மந்தோ தரியும் அவளுடைய சகிகளும் பலவிதமாக புலம்பினுர்கள். ராவணனை மார்பில் அணைத்துக்கொண்டு, பதியாகிற ராவண னுடைய வீரபிரதாபங்களை ஸ்மரித்துக்கொண்டு பலவிதமாக புலம்பி அழுதார்கள். (667)

அவர்கள் சொன்னுர்கள் "நாதா, உம்முடைய பல வீர்யத் திஞல் பூமியே நடுநடுங்குமே. அக்னி, சந்திரன், சூர்யன் ஆகியவர்கள் உம்முடைய தேஜஸ்ஸின் முன்பு தேஜஸ்ஸை யிழந்தவர்களாக காணப்படுவார்களே; ஆதிசேஷன், ஆதி கூர்மம்கூட உம்முடைய பாரத்தை தாங்க முடியாமல் நடுங்கு வார்களே. அப்பேற்பட்ட மஹத்தான தேஜஸ்ஸுள்ள உம் முடைய பூத சரீரம் இன்று புழுதி படிந்து பூமியில் அநாதை யாக கிடக்கிறதே." (668)

"வருணன், குபேரன், மஹேந்திரன், வாயுபகவான் இவர் களில் எவரும் உம்முடன் யுத்தஸன்முகளுக வருவதற்கு தைரிய மில்லையே. ஹே பிரபோ, உம்முடைய புஜபலத்திஞல் கால னையும் யமராஜனையும் ஜயித்தீரே. ஆனுல் அன்ருே, தாங்கள் அநாதையாக கீழே விழுந்து கிடக்கிறீரே. அந்தோ, எங்கள்

பாபம்." (669)

"உம்முடைய பிரபுத்வம் ஸகல ஜகத்திலும் அதி பிரஸித்த மாக விருந்ததே. உம்முடைய புத்ரர்களும் அதி பலர்களாகவும், உம்முடைய தம்பி முதலிய பரிஜனங்களும் வர்ணிக்க முடியாதபடி பலம் கொண்டவர்களாக விருந்தார்கள். அப்பேற்பட்ட பாஹு பலம் கொண்ட நீங்களும், உம்மைச் சேர்ந்த புத்ரர்களும், பந்துக்களும், பிரபு, நாசமடைவதற்கும், இந்த ஸ்திதிக்கும், அழுது புலம்புவதற்குக்கூட குலத்தில் ஒரு ஸந்ததியும் இல்லாமல் போனதற்குக் காரணம் ஒன்றேதான் இருக்கிறது. ஸர்வ பிதா மஹரான ஸ்ரீராமனிடத்தில் நீர் வைரம் செலுத்தி. அவர் லங்கைக்கு ஸ்வயமாக விஜயம் செய்து, எழுந்தருளியிருக்கும் போதுகூட அலக்ஷ்யமாகவும், விமுகனுகவும் தாங்கள் இருந்தீரே, அதுதான் காரணம்." (670)

"அன்பரே, உம்முடைய வரத்தின் மேன்மையினுல் பிரும்மாவின் ஸகல பிரபாவங்களும், ஸ்ருஷ்டிகளும் அடங்கியிருந்தன. திக்பாலர்கள் உம்மை வணங்கிவிட்டு, ஸதா உம்முடைய ஸமயத்திற்கும், உம்முடைய ப்ரீதிக்கும் முயற்சித் தவண்ணமிருந்தார்கள். ஸ்வாமி, இப்பொழுதோ உம்முடைய சிரங்களையும், புஜங்களையும் நரிகள் சாப்பிட வருகின்றன. இப்பேற்பட்ட கதி உங்களுக்கு வந்திருப்பதற்கும், சகல சராசரங்களுக்கும் பரந்தாமனுகிற ராமனுக்கு தாங்கள் விரோதியாக நடந்துகொண்டு வாழ்ந்தீர்கள். ராமனிடம் விமுகனுக விருப்பவனுக்கு இந்த தீனமான கதியை அடைவது அனுசிதம் இல்லை, அனுசிதம் இல்லை என்று நான் சொல்லி, ஸாதுக்களும் ஆமோதிப்பார்கள்." (அதாவது இந்த கதி உமக்கு உசிதம்தான் என்று நானும், ஸாதுக்களும் ஆமோதிப்போம்) (671)

"பதியே, நீர் காலத்தின் வசமடைந்து மனத்தில் பிடிவாதமாக (ராமனுடைய பரத்வத்தைத் தெரிந்துகொண்டும், சீதை, மாரீசன், ஜடாயு, விபீஷணன், சுக சாரணுதிகள், மால்யவான், புலஸ்தியர், ஆஞ்சநேய அங்கதாதிகளின் உபதேசங்களையும், கும்பகர்ணனுடைய உபதேசத்தையும், காலநேமியின் உபதேசத்தையும் புறக்கணித்து, வாலி, இந்த்ரஜித் கரதூஷணுதி போன்ற மஹாபலிஷ்டர்களின் மரணங்களாலும், மிக்கப் பரந்த

ஸமுத்திரத்தை அணைகட்டி வானர கரடி சேனைகளுடன் வந்த ராமசந்திரனின் மஹத்வத்தை என்னுல் பலதடவைகள் உமக்குச் சொல்லப்பட்டும், அதை ஒப்புக்கொள்ளாமல்,) ஏதோ ஒரு காரணத்தால், பிடிவாதத்துடன் ஜகந்நாதரும், பத்ம நாபரும், அஜரும், விஸ்வேஸ்வரரும், ஸர்வேஸ்வரரும், புஷிகராக்ஷங்கள் கொண்ட புருஷோத்தம ராமனை, ஸ்வாமி, தாங்கள் சாதாரண மனிதன் என்று எண்ணி ஏமாந்துபோனீரோ ? (672)

''நானும் உம்முடைய புருஷார்த்தங்களில் ஹிதகாமியாக விருந்த மேலே சொன்ன சகலரும், ஜகன் மாதாவான சீதையும், பல தடவைகள் இங்கிதமாகச் சொல்லியும், நீர் அதன்படி கேளாமல், தனு புத்ரர்களான தைத்யர்கள் என்கிற வனத்திற்கு அக்னியைப் போல அவதரித்திருக்கும் ஸ்ரீராமனை (அசிந்தனியர், அகிர் தேஸ்யவபு;, ஸர்வ பிராணர், அயோநிஜர், பிதாமஹரான நாராயணன் என்று தெரிந்துகொள்ளாமல், சாக்ஷாத் ஹரிபகவான் என்றும், ஜகத் பிரபு, ஆதி காரணர் என்றும் தெரிந்து கொள்ளாமல், மஹாத் மாக்களான ரிஷிகளால் ஆயிரம் மங்கள நாமாக்களால் சுத்தமான கானத்திஞல் கீர்த்தனம் செய்யப்படும் பகவான் விஷ்ணு வென்று தெரிந்து கொள்ளாமல், ஏமாந்து போனீரோ ? என்னுடைய பிரியதமரே, (படைப்பில் அநேக புருஷர்கள் ஏற்பட்ட போதிலும், அனைத்து லகுமுடைய அரவிந்த லோசனகிற புருஷோத்தமனை, அநேக புருஷர்களுக்கு ஒரே காரணமாகச் சொல்லப்படும் மஹா புருஷனை, யோகிகள் ஸாங்கியர்கள் கர்மங்களில் பற்றுள்ளவர்கள், பண்டிதர்கள், வித்வான்கள், பிரும்ம நாட்டமுள்ள ஆத்மாவை விசாரிப்பவர்கள், அப்படியே ப்ரத்யகாத்மாவை ஒரே ஆத்மாவாகச் சொல்லுகிறவர்களும், நித்யனும் நிர்குணன் என்று சொல்லப்படும் வாஸுதேவ மயமாக விருப்பவனும், ஸர்வாத்மாவான புருஷன் நாராயணரை என்றும் சாஸ்வதமாக, பிரும்மாவும் சிவனும் சகல தேவதைகளும் ஸதா நமஸ்காரம் ஸ்துதி முதலியவைகளால் திருப்தி செய்கிறுர்களோ, அப்பேற்பட்ட பிரபுவை குற்றங்களைப் பாராதவரும் அபராதிகளையும் க்ஷமிக்கும் க்ஷமிணும் வரரும், பொறுமையையும், கருணையையும், சரணுகதி தர்மத்திற்கு ஒரே வார்த்தையால் ''ரக்ஷிக்கிறேன்'' என்று அவரால் அபயம் அளிக்

கப்பட்டால், கடைசிவரையில் பக்ஷபாதியின்றி காப்பாற்றும் சரணுகத வத்ஸலரும், கருணுமயமான ஸ்ரீராமனே நாராயணன் என்று அடையாளங்களாலும் மஹா விஸ்வாசத்தாலும் நம்பி, உத்தம கதியை அடையாமல் ஏமாந்து போனீரோ! பிரபு, சமயத்தை நழுவவிட்டு, மமகாரத்திலும், ஸ்வ அபிமானத்தில் மூழ்கிய விஷய போகிகளைப் போல ஜன்மாவை, கிடைப்ப தற்கரிய விப்ர ஜன்மாவை அடைந்து, வ்யர்த்தமாக்கிக் கொண்டீரோ? ஸ்ரீராமனை நீர் பஜிக்காமல் ஆஸ்ரிதம் செய்யாமல் ஏமாந்து போய்விட்டீரே, ஆம் உமதுஜன்மமும்பிறப்பும் உமக்குத் த்ரோஹம் செய்துவிட்டது. புலஸ்திய குலத்திலும் மஹரிஷி யான விஸ்ரவஸுக்குப் புத்திரராகப் பிறந்ததும், உம்முடைய ராக்ஷஸ குலத்தின் இயற்கை ஸ்வபாவங்களாகிற பரத்ரோஹம், பரஹிம்சை, பரபீடை, ஆகியவைகளால் தாங்கள் பிறந்தது முதற் கொண்டு இதுவரை, கணக்கிட முடியாத பாபங்களையும் பாதகங்களையும் செய்துவிட்டு, உம்மை ஸர்வ அபராதங் களையும் மன்னிக்கும் ராமனிடம் அர்ப்பித்துக் கொள்ளாமல், ஸர்வ உபகார சிந்தனையால் பெருமாளிடம் புருஷகாரம் செய்யும் மஹாலக்ஷ்மியின் அம்சமான சீதையையும் புறக்கணித்துவிட்டு, ஸ்வாமி, சீதாராம பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்காமல், (வண் புகழ் நாரணன் திண்கழல் சேரே சமாதிஷட் குண மயஞகவிருக்கும் ரகூத்தமனை சரணமடை யாமல்) ஏமாந்து அல்லவா போனீர்? இல்லை இல்லை. ஒருக்காலும இருக்காது. நீர் விகாரமற்றவர். (தியாக ராஜாதிகள் பாடிய, ''ராமயனே ஸுமர்மமு ரமயனே ஞர்மமு லஸதமர வருல கப்பேனே, தியாகராஜ ஸன்னுத, என்கிறபடி "ராம" என்கிற நாமத்தின் மிக்க மிக்க மர்மமாகிற ஆனந்தத்தை தேவர்களும் அறிய மாட்டார்களே; மோக்ஷ கதியும் கருணையினல் யேற்படும் உள்ளன்பும், அதன்படியாக உச்சரிப்பதால் யேற்படும் சாந்தியையும் யார் அறிவார்கள்? ஜகத்தை மோஹிக் கக்கூடிய ராமா, உனது எழில்களும், ஸ்வபாவங் களும் எந்த ஜகன்மாதாவாகிற சீதையின் பக்தியென்கிற கூண்டில் கிளி மாதிரி அடைபட்டிருக்கின்றதோ, ஸ்ரீராமா, உனக்கு சமமான தெய்வம் யார் இருக்கக்கூடும்? வரம்ருது பாஷண, ஸுஸ்வர மய பூஷண, நாத பிரும்மானந்த ரஸாக்ருதி,

நீ மாத்திரம் தயை செய்ய ஸங்கல்பித்து விட்டால், எனது பதிக்கு நித்ய ஆனந்தமாகிற உத்தம கதியல்லவா கிடைத்து விடுமே. ஏனென்று கேட்பாயோ, ராமா, நீயோ ஸத்யவ்ரதன். விருப்பு வெறுப்பு ஆகிற த்வந்தங்களிலிருந்து விடுபட்டவன், விகாரமற்றவன், நிராமயன், நிரஞ்சனன், நிர்குணன், அரௌத்ரர். எல்லாவற்றிற்கும் மேலான ஐஸ்வர்யம் இருக்கையிலும் கல்யாண குணங்களின் குளிர்ச்சியினுல் கடுமை தணிக்கப்பட்டு ஸௌம்யமாக விருக்கும் ராமனல்லவோ நீர். பரம உபநிஷத்துக்களால் அறியத்தக்கதும் வெளிப்படையாக புலப்படாததுமான திவ்ய மங்கள விக்ரஹத்தை உடைய குஹயர் அன்றோ நீர். பிராக்ருத குணங்கள் ஒன்றும் பற்றுமலிருக்கும் நிர்குணர் அல்லவோ நீர். கோபத்தை வென்ற ஜிதமன்யு. ஆஸ்ரிதனை கஜேந்திரனுக்கும் விரோதியான முதலைக்கும் உத்தம கதி கொடுத்த ஆதிமூல புருஷரான நாராயணர் அன்ருே நீர்.) (உம்மை அடைந்த விபீஷணன் போன்றவர்களுக்கு உம்மிடம் பக்தி வினயம் ஏற்படுவதற்காக காம க்ரோதங்களை ஒழித்தும், உம்மை அடையாதவரும் விபீஷணனை விரோதித்தவருமான என் பதி போன்றவர்களுக்கும்) உமது கருணையினுல் அனுகூலமான உத்தம கதியைக் கொடுக்கும் ஜிதக்ரோதர் அல்லவோ நீர். அப்பேற்பட்ட பரம அபராதிகளுக்கும் மரணமானுல் வைகுந்தம் என்று சொல்லப்படும் நிஜதாம் கொடுக்கும் பிரும்ம பரமான ராமனை நான் அஷ்ட அங்கங்களுடன் சுக்ருத நமஸ்காரம் செய்கிறேன். ஹே பிரபு, ரக்ஷி, ரக்ஷி என்று கதறுகிறேன்.'' என்று அஞ்சலி பந்தத்துடன் மந்தோதரி சீதையின் பதியாகிற புருஷோத்தம ராமனிடமிருந்து கருணையை வேண்டினுள். (அப்பேற்பட்ட கருணுரஸமான சீதாபதியாகிற ராமன் என்னையும் ரக்ஷிக்கமாட்டீரா? நான் கதறுகிறது உம்முடைய காதுகளில் விழவில்லையா?) (673)

[ *தியானம்*

துளசிபிரியா, நாராயணு, ஆதிபூதமே, யக்ஞ புருஷரே, யக்ஞேசரே, யக்ஞ பதியே, பிரும்மாண்டத்தில் முதலில் தோன்றிய புருஷனுகிய நான்முகனை ஜகத் ஸ்ருஷ்டி

செய்வதற்கு, மாதவா, நீர் ஆக்ஞை செய்தீர். உம்முடைய முகத்திலிருந்து வேதங்களை ஜபிக்கும் வேதியர்களும், தோள்களிலிருந்து ராஜிய பாரம் செய்பவர்களும், துடைகளிலிருந்து வணிகர்களும், பாதங்களிலிருந்து தாஸ்ய வர்க்கத்தினர்களும் தோன்றினார்கள். ஸ்வாமி, அதே மாதிரி, உம்முடைய ஹ்ருதயத்திலிருந்து சந்திரனும், கண்களிலிருந்து சூர்யனும், முகத்திலிருந்து இந்திரனும் அக்னியும், பிராணனிலிருந்து வாயுவும் தோன்றினர். அதே மாதிரி நாபியிலிருந்து அந்தரிக்ஷ லோகமும், சிரஸ்ஸிலிருந்து ஸ்வர்க்கமும் பாதத்திருந்து பூமியும் காதுகளிலிருந்து பல திசைகளும் உண்டாயின. இவ்வாறு யக்ஞம் என்று சொல்லப் படும் பிரபஞ்ச ஸ்ருஷ்டிகளுக்கும் பிரும்மா யக்ஞ பசுவாகவும், நீர் யக்ஞே சராகவும் விளங்கினீர். இவ்விதம் நீர் ஒருவராகவும், பிராட்டியுடன் சேர்ந்து காயத்திரி மந்திரத்தை ஸ்ருஷ்டித்து, ஸஹஸ்ர சிரஸ்ஸுகளையும், ஸஹஸ்ர புஜக்களையும் ஸஹஸ்ர பாதங்களையும் ஸஹஸ்ர கால்களையும் நாஸிகைகளையும் உடைய புருஷராக நீர் விளங்குகிறீர். அப்பேற்பட்ட அனுதியான புருஷர், ஸநாதனர் அறியாத முடியாதபடி, ஒருவரா யிருக்கும் தன்மையை உடைத்தவராக விருக்கிறீர். இதனால் அல்லவோ, ப்ராணே ஸர்வே, ப்ராணே ஸர்வம் பிரதிஷ்டிதம், என்றும், "ஸர்வ" சப்தத்தாலும் அறியப்டுகிறீர், அதனால் அல்லவோ நீர் அர்ஜுனனிடம் "அஹம் ஹி ஸர்வ யக்ஞானும் போக்தா சப்ரபுரேவச" என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறீர், அப்பேற்பட்ட நாராயணனுகிய நீர் பரமாராதனுகவும், விபு மீட்யனுகவும் பரமாத்மாவாகவும், ஸர்வபலப்ரதனுகவும், தத் ஸ்ருஷ்டா, ததேவானு ப்ராவிஸ்ய, ததனுப்ரவிஸ்ய, ஸச்சத் யஸ் சாபவது (தைத்ரியம்) என்று சொல்லும்படி ஸர்வ வியாபகராகவும், ராவணன் போன்ற மஹாத்மாக்கள் உபாஸீத்த அந்தர்யாமியாகவும் இருக்கிறீர். பர பிரும்மத்தின் லக்ஷணம் யாது என்று ஆராயப்போனுல், பிரபு, விபுத்வமும், விபுத்வே ஸதி சேதனத்வம், உமக்கு ஸ்ரீ வத்ஸவக்ஷா நித்ய ஸ்ரீ ரஜய்யः சாஸ்வதோத்ருப" : மானுஷம் ரூப மாஸ்தாய விஷ்ணு: ஸத்யபராக்ரம:, ஸர்வை: பரிவ்ருதோ தேவை : வானரத்வ முபாகதை: ஸர்வலோகேஸ்வர: ஸ்ரீமான்

லோகானும் ஹிதகாம்யயா என்று மந்தோதரி போல பக்தர்கள் உம்மை அந்தர் யாமியாகவும் விபுத்வம் கொண்ட சாக்ஷாத் ஜானகி ராமனுகவும் நேரில் உபாஸித்தாள். அபராதம் செய்தவர்களை "இவர்கள் சபலசித்தர்கள், நம்மை இவர்களால் சரியாக அறிய முடியாது, இவர்களுக்கு நாம் கிருபை செய்யவேண்டும்; ஸமயம் தெரிந்து ஸகலலோக நாயகனுகிற நான் வழி தப்பினவர்களையும் ஸம்ரக்ஷிக்க வேண்டும்; கர்மானுகுணமாக நான் பலனளிக்க முற்பட்டால், இவனை ஸம்ரக்ஷிக்காமல் இருக்க முடியாது; இவனே ராக்ஷஸேஸ்வரன், மஹாபலவான்; ஆனல் இவனே தேவ சத்ரு. மஹாத்மா பல ஸம்பன்னே ராவணே லோக ராவண; மரணுந் தானி வைராணி நிர்வருத்தம் ந: பிரயோசனம்; கிரியதாமஸ்ய ஸம்ஸ்காரோம மாப்யேஷ யதாதவ, த்வத்ஸ காஸான் மஹாபாஹோ ஸம்ஸ்காரம் விதி பூர்வகம், க்ஷிப்ர மர்ஹதி தர்மேணத்வம் பாக பவிஷ்யஸி," என்று விபீஷணனிடம் ராவணனைப் பற்றிச் சொன்னயே, பிரபோ, நீர் ஸஹிஷ்ணுவாகிறபடியால் அவ்விதம் சொன்னீர், வ்யக்த மேஷ மஹாயோகி பரமாத்மா ஸநாதன; அனுதி மத் யன் தனே மஹத: பரமோ மஹான், தமஸ: பரமோ தாதா சங்கச் சக்கிர கதாதர என்று இவ்விதம் சொல்லிய மந்தோதரியின் கண்களுக்கு நீ எவ்விதம் காக்ஷி கொடுத்தாய்? அந்த கருணுமயன். பரிகிரஹர். நிக்ரஹர், வ்யக்ரர், பாப பய நாசனர், என்று சொல்லி ஆனந்திக்கும் என்னிடம் திருஷ்டி கோசரமாக நீ வரமாட்டாயா? ஹே பிரபோ, யக்ஞேசரே, ராம அவதாரத்தில், உம்மைச் சார்ந்த அயோத்யா வாசிகளையும் தோட்டங்களிலுள்ள மரம், புல் முதலியவற்றையும் பரமபதம் சேரும்படி செய்த பரிக்ரஹரே, நாராயணரே, சக்கிரப் பெருமானே, கோதண்டராமா, உனது அருள் அல்லவோ மிக்க ஸ்லாகிக்கத் தக்கது. உம்முடைய நிர்ஹேதுக கிருபையல்லவோ மிக்கப் போற்றத் தக்கது, ராமா சீதா, உங்களை ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.]

["ஹே பகவான், கிருபாஸிந்து, ரகுநாதா உமக்கு ஸமமாக யார் யிருக்கக்கூடும்? ஸர்வ ஸ்வதந்திரரான நீர் பழகினவன் பழகாதவன், மேன்மையானவன் மேன்மையில்லாதவன். யாவ

ரிடத்திலும், சரணம் என்று வேண்டப்பட்டால், வித்யாசமின்றி ஸமமாக கௌரவம் வைக்கும் ஸமரானபடியாலும், அபராதி களிடமும் கருணை காட்டும் ஸஹிஷ்ணுவாக விருக்கிறீர். ரகுநாதா, கிருபாஸிந்து, உம்முடைய பாதங்களைத் தவிர எங்களுக்கு வேறு என்ன கதியிருக்கக் கூடும்? உமக்கு ஸமமாக கிருபாஸிந்து யாரும் இல்லை. உம்முடைய ஸர்வ ஸ்வாமி த்வத்தினால் ஏற்படும் அதி குளிர்ச்சியானதும் மன சந்தோஷத்தினால் ஏற்படும் ஸங்கல்பத்தினாலும், என்னுடைய பதிக்கு ஏகாந்திகள் அடையும் உத்தம கதியை அளிக்கவேண்டும். ஹே பகவான், அந்தர் யாமியே, ஸர்வ சாக்ஷியே, யோகிகளுக்கும் எட்டாத வேத புருஷனே, தமஸ : பரம் என்று சொல்லப்படும் ஹிரண்ய கர்ப்பரே, உம்மிடம் ஐக்யமடைந்த என் பதிக்கு ஸதா உம்மையே நினைத்துக்கொண் டிருக்கும் யோகிகளுக்கும் துர்லபமான உத்தம கதியைத் தர வேண்டும்.] (*தன் பர்த்தாவைப் பார்த்து*) நாதா. அந்த உத்தம கதியை நீர் ஏற்கனவே அடைந்து விட்டிருக்கிறீர்." [அதனால் தான், பிரபோ, நீர் ஒன்றும் பேசாமல் என்னைப் பார்த்துக் கொண்டு, கடாக்ஷித்துக் கொண்டிருக்கிறீர்.] [அப்பேற்பட்ட கிருபாளுவான பிரபுவை நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய் கிறேன்.] (674)

மந்தோதரியின் வார்த்தைகள் பெரிய அர்த்தமுள்ள வச னங்கள். (அந்தர்யாமியாகிற பகவானைப் பூஜை செய்த ராவணனுக்கு, மந்தோதரியின் பக்தி விசேஷங்களை பிரபு பகிரங்கமாகச் செய்ய ஸங்கல்பித்தார். அதனால் அவர் பேசாமலிருந்தார்.) அப்பொழுது ஸுரர்களும் முனி ஜனங்களும் ஸித்த ஜனங்களும், ஸகலருக்கும் சுகத்தையும் ஆனந்தத் தையும் தரும் மந்தோதரியின் வசனங்களைக் கேட்டார்கள். எல்லோருக்கும் ஸர்வ சம்மதமான வசனங்கள். (பதிதர்மத்தை ஒட்டியதும் திரௌபதி தனது பதிகளை கரையேற்றினதுபோல பதிதர்மத்தில் சிறந்து கொடிபோல விளங்கிய மந்தோதரி ஸாதுக்களுக்கு ஒப்புக் கொள்ளும்படி வசனங்களைச் சொன்னாள்.) பிரும்மா, மஹேசர், நாரதர், ஸனகாதி முனி வர்கள் இன்னும் பரமாத்மாவின் நிஜ ஸ்வரூப ஸ்வபாவங் களைப் பார்த்தவர்கள் அங்கிருந்தார்கள். (675)

அந்த ராமனுடைய பத்ம பத்ர லோசனங்கள் கருணை யினால் கலங்கியவைகளாகவும், அவருடைய மிக மேன்மை யான ஹ்ருதயம் அன்பு வசத்தினாலும் தர்மத்திலும் கட்டப் பட்டு, அவர் ரோஹிதராக காணப்பட்டார். அதைக்கண்ட பிரும்மா, மஹேசர் முதலியவர்கள் அத்யந்த சுகத்தை அடைந்தார்கள். அந்த விடத்திலிருந்த விபீஷணன் தனது குலத்திலுள்ள ராக்ஷஸ ஸ்திரிகளின் துக்கங்களைக் கண்டு பொறுக்க முடியாமல், அவனே அவர்களிடம் வந்தான். (676)

அவனுடைய துக்கங்கள் தனது சஹோதரனின் மனை வியின் தீனஸ்திதியைக் கண்டு அதிகமாயின; அவனுடைய துக்கத்தைக் கண்ட பிரபு ராமன் தன்னுடைய தம்பி லக்ஷ்மணனைப் பார்த்து இங்கிதங்களால் ஆக்ஞையிட்டார். லக்ஷ்மணன் விபீஷணனிடம் வந்து அவனை சமாதானப்படுத்தி னான். அப்பொழுது விபீஷணன் பிரபுவினிடம் வந்தான். (677)

பிரபு பரிபூர்ண கிருபாதிருஷ்டியுடன் விபீஷணனை நோக்கினார், மேலும் சொல்ல ஆரம்பித்தார். "எல்லோரும் சோகங்களை தியாஜ்யம் செய்துவிட்டு இப்போது நடக்க வேண்டிய ராவணனுக்கு அந்திம கிரியைகளையும், ப்ரேத ஸம்ஸ்காரங்களையும் செய்யுங்கள்.'' பிரபுவினுடைய ஆக் ஞையை அடைந்த விபீஷணன் தனக்குள் தேசம், காலம் முதலியவைகளை ஆராய்ந்து செய்ய வேண்டிய ப்ரேத ஸம்ஸ்காரங்களை விதிப்படி செய்து முடித்தான். (678)

மந்தோதரி முதலிய ஸகல ஸ்திரிகளும் ராவணனுக்கு திலதர்ப்பணம் முதலியவைகளைச் செய்துவிட்டு ரகுபதியின் கல்யாண குணங்களை ஸ்துதி செய்துவிட்டு, தன்னிருப்பிடத் திற்குச் சென்றார்கள். (679)

[தியானம்

கோவிந்தா, நாராயணா, விஸ்வமித்திரர், உன்னை அந்தர் யாமியாகிய வேதபுருஷனாகவும்,எல்லையில்லாத ஞானத்தினால் கவரப்பட்டும், அதற்கு அப்பால் விளங்கும் மஹா வேத புருஷனாகவும், ஆதித்ய ரூபத்துடன் விளங்கும் கோவிந்த ராகவும் பார்த்தார். அதைப் போல வஸிஷ்டரும் ஸத்ய பராக்ரமம் உள்ள ராமனை வஞ்சனையில்லாத சக்தியை

உபயோகிக்கும் ஸ்ரீராமனை மஹாத்மா வென்றும், மஹாதேஜஸ் உள்ளவன் என்றும் சொன்னார். இன்னும் வாமதேவர், வால்மீகி, அகஸ்தியர் போன்ற மஹரிஷிகள் தவத்திலே காலத்தைக் கழித்த தபோமோக்ஷ பராயணர்கள், ராமனை அடைந்து விட்டால் தர்மலாபம் என்றும், அதுதான் யசஸ், அதுதான் பரமார்த்த லாபம் என்று கருதினார்கள். அதே போல ஆபத்திலும் வசிஷ்டரால் பாடப்பெற்றதும்,புராதனமான புண்யகீதமும் ஹரிபகவானே நினைக்க வேண்டியது என்கிற சிறந்த அறிவினால், கிருஷ்ணை என்கிற திரௌபதி மனத்தில் கோவிந்தனை ஆராதித்து "தேவம் நாராயணம் பிரபும் மனஸா சிந்தயாமாஸ ஆபத்ஸ்வபயதம் கிருஷ்ணம் பிரபிதாமஹம் கோவிந்த த்வாரகா வாஸின், கிருஷ்ணகோபிஜனப்ரிய, கௌரவை: பரிபூதாம் மாம்கிம் நஜானஸி கேசவ, ஹேநாத, ஹேரமாநாத, வ்ரஜநாதார்த்தி நாசன, கௌரவார்ணவ மக்னாம் மாமுத்தரஸ்வ ஜனார்த்தன, கிருஷ்ண கிருஷ்ண மஹாயோகின் விஸ்வாத்மன், விஸ்வபாவன, ப்ரபன்னாம் பாஹி கோவிந்த குருமத்யே அவஸீததிம், இத்யனுஸ்ம்ருத்ய கிருஷ்ணம் ஸா ஹரிம்திரிபுவனேஸ்வரம்....கிருஷ்ணம் சவிஷ்ணும்ச ஹரிம் நரம்ஸ்ச திராணய விக்ரோசதி யாகஞ ஸேனீ," என்று திரௌபதி சரணம் அடைந்து, ஸர்வாத்மாவாக விருப்பவரும், கதிரவன் போன்ற ஒளியுள்ள வரும், பிரகிருதி மண்டலத்திற்கு அப்பால் வீற்றிருக்கும் பரமபுருஷனை, வஸிஷ்டர். விஸ்வாமித்ரர், நாரதர், தேவர்கள், திரௌபதியுடன் கூடிய பாண்டவர்கள் ஆகியவர்களை புறம் வைத்து ரமாபதியான வைகுண்டநாதனை, என் ஜகந்நாராயணனை நான் சரணமடைகிறேன். எனது ரக்ஷையை வேண்டி. வேதாந்த ஞானம் படைத்த அறிஞர்கள் துதிக்கும் ஸ~லபரை நான் ஆஸ்ரயிக்கிறேன். சக்கிரத்தை தரித்திருக்கும் கோவிந்தனை அம்ருத இவபவதி என்கிற மோக்ஷத்திற்கு பக்தியினால் ஆராதிக்கிறேன். அவனை விட்டு எனக்கு வேறு ஒரு கதியுமில்லை. அவனைவிட்டு எனக்கு வேறு ஸாதனமுமில்லை. அவனைவிட்டு எனக்கு வேறு ஒன்றும் பலனில்லை ]

சகல கர்மாக்களும் முடிந்தபின்பு, விபீஷணன் கிருபா ஸிந்துவான ராமனிடமும், தம்பியானவனும் நரஸ்ரேஷ்டனுமான

லக்ஷ்மணனிடம் வந்து நமஸ்கரித்தான். தலைவணங்கின விபீஷணனைப் பார்த்த கிருபாஸிந்து கோவிந்த ராமன் லக்ஷ்மணனை அழைத்து, ஆக்ஞையிட்டார். "லக்ஷ்மணா, நீயும் சுக்ரீவனும், அங்கதனும், நளன், நீலன், ஜாம்பவான், மாருதி இன்னும் அநேக நீதி நிபுணர்களான மந்திரிகளை அழைத்து வைத்துக் கொண்டு, எல்லோரும் சேர்ந்து விபீஷணனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து வையுங்கள்." பித்ருவின் வசனத்தால் கட்டுண்ணப்பட்ட என்பிரபு ரகுநாதன், ஸத்யர், ஒருகாரணமு மின்றி சாஸ்திர விதியென்று மாத்திரம் ஸாத்விகர்களான அதிகாரிகளால் செய்யப்படும் உத்தமமான நிவிருத்தி தர்மத்தை மிக்கப் பிரியமாக அங்கீகரித்த ஸத்ய தர்ம பராயணர், [ரகு குலத்தின் உன்னத கொடியைப் போல விளங்கும் ரகுராமன், வனத்தில் வசிக்கும் ஸத்ய மேதஸ், உள்ளத்திலும் ஆசரணையிலும் உண்மையாக விருக்கும் தன்மையுள்ள எனது குலதெய்வமான சீதாபிராட்டியின் நாயகன்.] ஸ்ரீராமன் விபீஷணனைப் பார்த்துச் சொன்னார்.

"நான் பிதாவின் வாக்கியத்தின்படி நடக்கிறபடியால் நகர பிரவேசம் செய்யமாட்டேன். எனக்குப் பதிலாக என் தம்பி யையும் என் சகாக்களான ,வானரங்களையும் அனுப்பி வைககிறேன்." (அப்பேற்பட்ட ஸத்ய ரூபராக விருக்கும் ரகுராமனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.)

பிரபுவினுடைய ஆக்ஞையை அடைந்த வானரர்கள் அதி சீக்கிரமாக லங்கைக்குச் சென்று விபீஷணனுடைய ராஜ்யாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். மிக்க கௌரவத்துடன் ராஜயமரியாதைகளுடன் அவர்கள் விபீஷணனை லங்கா ராஜ்ய சிம்மாஸனத்தில் அமர வைத்து, லங்கா ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்து முடித்து, அவனை பல விதங்களால் நன்றி உள்ளத்துடன் ஸ்துதி செய்தார்கள். (680)

எல்லோரும் கைகளைக் கூப்பிக் கொண்டு சிரங்களால் வணங்கி, பரம பாகவதனாகிற விபீஷண ராஜனை, ராக்ஷஸேஸ்வரனை வணங்கி, தங்கள் நன்றியைச் செலுத்தினார்கள். அப்பேற்பட்ட பரமபாகவத பிரியனாகிற விபீஷணன் தன் சகாக்களுடன் பிரபு ராமச்சந்திரனிடம் (சுக்ரன் பிரஹஸ்பதி

தாராகணங்கள் புடைசூழ சந்திரன் பிரகாசிப்பது போல), பிரபு ராமச்சந்திரனிடம் வந்து நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்றான். [அந்த ராக்ஷஸேஸ்வரனாகிற விபீஷணன் புடைசூழ்வந்த வானரர்களையும் லக்ஷ்மணனையும் ஸ்ரீராமனையும் நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். பரம பாகவதனான விபீஷணனால் என் மதியை கலங்கவிடாமல் ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ரங்கநாதனின் திருவடி நிழலில் சுக்ருத பிரணமங்களுடன் கூடிய என்னை மிக்க கிருபையுடன் சேர்க்கவேண்டும்.] அதன் பிறகு ரகுவீரன் வானரர்களை அழைத்து மிக்க பரிவு, நன்றி, ஆஸ்ரித வாத்ஸல்யம், பந்து ஜனபிரியம், பிரேமையினால் சுகத்தைத் தரும் வசனங்களை (நான் என்றும் மறக்க முடியாதபடி) கிருபையுடன் சொல்லலானார்: (681)

[தியானம்

தர்மவத்ஸலே, தீனவத்ஸலே, சீதே, என் காமாக்ஷி, உனக்காக பரம புருஷன் கடலை அணைகட்டி, ராக்ஷஸர்களுடன் கூடிய ராவண கும்பகர்ணன் மேகநாதன் போன்ற ராக்ஷஸர்களைக் கொன்று, பரமார்த்தமான உன்னை, என் பிரபு ராமன் லக்ஷ்மணனுடன்கூட வானரர்களின் சகாயத்தினாலும் விபீஷணனுடைய உதவியினாலும் மிக்க சிரமப்பட்டு அடைந்தானே, அதை நினைத்துப் பார்த்தால் அம்ருத மதனத்தைக் கைப்பிடித்த தேவர்கள், அசுரர்கள் பட்ட பரிஸ்ரவத்தைப்போல அல்லவா மஹத்தாக விளங்குகிறது. ஹே சீதே, அநிந்திதாம் தீனாம் நிரானந்தாம் ராக்ஷஸீபி: பரிவ்ருதாம் ஸௌம்யம் தஸ்யாம் முகம் திருஷ்ட்வா, ஹனுமான் விஜய ராமனுடைய வசனங்களைச் சொன்னாரே, அப்பேற்பட்ட காருண்ய மயமான சீதையை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன். ஹே சீதே, ரெங்கநாயகி, ராமனுடைய பரம்தாம் என்று சொல்லப்படும் உத்தமச் சேர்க்கையே, ராமனை கருணையுடன் கூடிய தர்ம வத்ஸலர் என்று சொல்லப்போமானால், நீ தர்மத்துடன் கூடிய காருண்யமாக விருக்கிறாய், ராமன் கர்மத்தின் பலன்களை அளிப்பவனானால், நீ தயையுடன் ராமனுடைய தர்மத்திற்கும் மேன்மையைத் தருகிறாய். அன்று சிம்சுபா விருக்ஷத்தின் அடியில் உன் புத்ரனான ஆஞ்ச

நேயருக்குச் சொல்லிய வார்த்தைகளை நானும் நீயும் நினைத்துப் பார்க்கலாம். ருஷேண கீத: ஸ்லோகோ அஸ்திதம் நிபோத ப்லவங்கம, நபர: பாபமாதத்தே பரேஷாம் பாபகர்மணும். ஸமயோ ரக்ஷிதவ்யஸ்து ஸந்தஸ் சாரித்திர பூஷணு: பாபாணும் வா சுபாணும் வா வதார்ஹாணுமதாபி வா, கார்யம் காருண்ய மார்யேண நகஸ்சித நாபாராத்யதி, லோகஹிம்ஸா விஹாராணும் க்ரூராணும் பாப கர்மணும் குர்வதாமபி பாபானி நைவ கார்ய மஸோபனம்.'' இந்த வார்த்தைகள் உன் நினைவாக விருக்கும் ராமனையும், தர்மமாகிற காருண்யத்தில் ஸ்திரமாக நிற்கச் செய்கின்றன. இப்பேற்பட்ட உத்தம வசனங்களை ஜனகாத்மஜாவான நீ உன் பிதாவிடமிருந்து தெரிந்து கொண்டாயா? ஏனென்று கேட்பாயோ, ஜனகர் பராசர ஸம்வாதமாகிற பராசர கீதையில் முப்புரம் எரித்த சூலபாணியான பரமேஸ்வரரிட மிருந்து ரக்ஷணத்தை வேண்டிய தேவர்கள் இந்திரனுடன் கூடிய ஸப்தரிஷிகள் என்ன உபதேசத்தால் பெரும் பயனை யடைந்தார்கள்? தொடர்ச்சியாக வந்த அசுரத் தன்மையினுல் செய்யப்பட்ட க்ரூரமான பராக்ரமத்தை உடைய அரசர்கள் அசுரர்களுக்கு உரிய கர்மாக்களைச் செய்தனர். அதை அல்லவோ மஹேஸ்வரர் அழித்தார். அந்தக் கர்மத்தினுல் அழிவடைந்த அரசர்கள் மீண்டும் தாம பதத்தில் கருணையுடன் நிலைபெறச் செய்யப்பட்டார்கள். வித்வாணுகிற புருஷன் சாஸ்திரத்தில் ஆராய்ந்து அநாதி ஸித்தமான பிரும்ம ஞானத்தை அடைய வேண்டும். ஹிம்சா ரூபமான கர்மாக்களை விடவேண்டும். தர்மத்திற்காக முறைதவறி கலப்பாக திரவியத்தை அடையக் கூடாது. அது க்ஷேமமாகச் சொல்லப்படுகிறதில்லை. அடக்க முடையவனும், க்ஷத்திரியனும், இஷ்டர்களான உறவினர் களையுமுடையவனுன நீ அடக்கத்துடன் இவ்வாறிருந்து பிரஜைகளையும், வேலைக்காரர்களையும், புத்ரர்களையும், உனது ராஜ தர்மத்தின்படி ரக்ஷி. இஷ்டர்களுடைய ஸ்நேகத் தையும், பகைவர்களுடைய வைரத்தையும் அடையாமல் கல்யாண குணங்களில் பற்றுதல் கொண்டவனுய் ஒரு விதத்திலும் தோஷங்களில் பற்றுதல் இல்லாதவனுக, தர்மாதர் மங்களிலிருந்து நிவிருத்தி அடைந்து மனிதர்கள் அல்லாத

மற்ற பிராணிகளிடத்திலும் தயை காட்டி வித்வானுக எப்பொழுதும் ஆத்ம பூதனுக தீரனுக, தர்ம சீலனுக, பிராணி களுக்கு ஹிம்சை செய்யாமல் எப்பொழுதும் மனமானது சங்கல்பத்தினுல் நீங்கியதாக விருக்கும் புருஷனே, க்ஷேமத்தை அடைகிருன்' என்று எனது ஆசார்யரான பராசரர் ஜனகருக்கு உபதேசித்தார். அப்பேற்பட்ட ஜனக புத்திரியான சீதையை, ராமனின் தயிதையை, பராசரரையும் ஜனகரையும் முன்னிட்டு, நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரித்து, ஜகஜ்ஜனனி, ''என்னையும் ரக்ஷி'' என்று பிருர்த்திக்கிறேன்.]

என் பிரபு தர்ம வத்ஸலன், சீதையாகிற பக்த ரக்ஷகன் பக்தவத்ஸலன், அம்ருதத்திற்கு தகுந்தாற் போல சுகத்தை தரும் வசனங்களைச் சொன்னுர், அந்த வானரங்களும் கரடி களும், விபீஷண சுக்ரீவ மஹா ராஜாக்களும் நன்றி பெருக்கு மயமாக விருக்கும் ராமனைக் கண்டு ஆனந்த மடைந்தார்கள். ராமன் மீண்டும் அவர்களைப் பார்த்துச் சொன்னுர், ''என் தோழர்களே, உங்களுடைய புஜபலத்தினுல நான் பிரபல மானவனும், ஹிம்சையைச் செய்யும் தொழிலுள்ளவனை ராவணனைக் கொல்ல முடிந்தது. தர்ம சீலனை விபீஷணனுக்கு ராஜ்ய லாபமும் கிடைத்தது. இதன் பலனுக சுத்தமானதும் மங்களங்களை நினைத்த மாத்திரத்தில் அளிக்கக்கூடிய புண்ய கீர்த்திகள் மூன்று உலகங்களிலும் நித்யமாகக் கானம் செய்யப்பட்டு, சுத்தமான யசஸ்ஸை நீங்கள் அடைவீர்கள், ஆபத்தில் உதவிய நண்பர்களே, எவர்கள் பரமப்ரீதியுடன் என்னுடன் கூடிய உங்களுடைய மேன்மையான சுப கீர்த்திகளை தினமும் கீர்த்தனம் செய்கிருர்களோ, அவர்கள் மிக்க பயங்கரமானதும் அபாரமாக ஆழமுள்ளதும், ஆபத் துக்கள் நிறைந்ததுமான ஸம்சாரக் கடலையே ஒருவித பரிஸ் ரமமின்றி, சுலபமாகத் தூண்டி விடுவார்கள்,'' என்று என்பிரபு சொன்னுர். (அன்று தியாகராஜர் ஸம்சார நௌகா என்று கீர்த்தனம் செய்தபடி, நம் போன்றவர்களுக்கு பிரபு பரம உபகாரம் செய்தார். அப்பேற்பட்ட விஜயராகவனை தேவர்களின் ஸந்நதியில் ராமானுஜனை புரம் வைத்து நான் நமஸ்கரிக் கிறேன். வேதாந்த ஞானம் படைத்த நான்முகனும், மஹேந் திரனும் நான்கு திசைகளிலுமுள்ள தேவ கணங்களும்

ரிஷிகளும், வித்வான்களும், யாவரும் தம்மைத் துதிக்கும்படி பரம ஸுலபனுக விருக்கும் அந்த பரம புருஷ ராமனே, லக்ஷ்மணனுடன் கூடிய விஜய ராகவனே, பரம ப்ரேமையுடன் எனது ஒரே ஸாதனமாக பக்தியுடன், எனது அமிர்த சுகத் திற்காக நான் பூஜை செய்கிறேன், ஆராதிக்கிறேன். (682)

பிரபுவின் வசனங்களைக் கேட்கும், பிரபுவைப் பார்த்தும் அந்த மஹா பாக்யவான்களான வானர கரடிக் கூட்டங் கள், பகவானுடைய பரம சௌலப்ய வாத்ஸல்யாதி குண விசேஷங்களை அனுபவிக்கிறவர்களாக மட்டற்ற ஆனந்தப் பெருக்கை யடைந்தார்கள். (அவருக்கு நாம் செய்ய வேண் டியது நமது பாரதந்திரியத்தை வெளிப்படுத்தும் நமஸ்கார அஞ்சலிபந்தங்களே, என்று அவர்கள் நினைப்பவர்களாக,) அந்த கரடி வானரபுங்கவர்கள் அடிக்கடி அடிக்கடி (நான்ய : பந்தா அய நாய வித்யதே,) என்று நமஸ்கரித்தார்கள்; (அறியேன் மற்றருள் என்னை யாளும் பிரானுர் வெறிதேயருள் செய்வர் செய்வார் கட்குகந்து சிறியேனுடையச் சிந்தையுள் மூவுலகும், தன் நெறியா வயிற்றில் கொண்டு நின்ருெழிந்தாரே," என்று நான் அவர்களுடன் அனுஸந்தித்து என்னை ஆளும் பிரானுரை நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன்.) (683)

அதன் பிறகு பிரபு ஹனுமாரை அழைத்தார். பகவானுகிற உலகமுண்ட பெருவாயன், [தன் வயிற்றில் கொண்டு நின்ற வண்ணம் நின்றமால், என் தாமோதரன்,] வார்த்தைகளைச் சொன்னுர், "ஹனுமான், லங்கைக்குப் போய் வா. நடந்த சமாசாரங்கள் அனைத்தையும் ஜானகிக்குச் சொல். அவ ளுடைய குசலங்களையும் க்ஷேம லாபாதிகளையும் அறிந்து கொண்டுவா." (684)

அப்பொழுது ஹனுமார் லங்கைக்கு வந்தார். அவர் வந்த சமாசாரத்தைக் கேட்ட ராக்ஷஸ ராக்ஷஸிகள் பயந்துகொண்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். சிலர் அவருக்கு பலவிதங்களாக பூஜை ஆராதனைகளைச் செய்து கௌரவப்படுத்தி, மரியாதை களுடன் வரவேற்றனர், அவரை மிக்க மரியாதையுடன் ஜானகியிடம் அழைத்துச் சென்ருர்கள். (685)

[*தியானம்*

ராமா சீதா, புருஷோத்தம நாராயணு, மஹாலக்ஷ்மி பிரியா, மாதவா, அச்சுதா, உனது பாதங்களில் அநேக நமஸ்காரங்களைச் செய்கிறேன். விபீஷணனிடம் ராக்ஷஸ ராஜ்யத்தைக் கொடுத்தாயே. அதன் சூக்ஷ்மம் என்ன? அத்துடன் அவனுக்கு சிரஞ்சீவிப் பட்டத்தையும் கொடுத்தாயே. அத்துடன் அவனுக்கு ஸ்ரீரங்க விமானத்தையும் கொடுத்தாயே. மந்தோதரிக்கு ஸப்த கன்னிகைகளின் ஸ்ரேயசைக் கொடுத்தாயே. அந்த லங்கா புரியை நீ பார்த்துக்கொண்டு, விபீஷணனையும், மஹா பலி சக்கிரவர்த்திக்கு வாயிற் காப்பாளனுக திரு விக்ரமர் இருக்கிறது போல, பார்த்துக் கொண்டு, குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி, தென்திசை இலங்கை நோக்கி பாம்பணை மேல் பள்ளிக் கொண்டிருக்கும் ஸ்ரீ ரங்கநாதனுடைய மன எண்ணங்கள்தான் என்ன இருக்கக்கூடும்? ஆம். ஒரே எண்ணம்தான். ராவண ஸம்ஹாரத்திற்குப் பிறகு ஸ்வர்க்கத்தில் இந்திரனுக்கு இந்திர பதவியைக் கொடுத்த நீ, பூலோகத்தில் மனிதர்கள் தங்களுடைய நிலைமையை அடைவதற்கும், வர்ணாஸ்ரம தர்மங்களை அனுஷ்டிப்பதற்கும், வேதங்களும் சாஸ்திரங்களும் பூர்வம்போல பிரவிருத்தி அடைவதற்கும், ஸ்வர்க்கத்தில் இந்திரன் நிலைத்து நிற்பதற்கும் பெரிய குலங்களில் ஜனித்தவர்கள்கூட அசுரத் தன்மையை விட்டு தர்ம வழியில் ஊன்றி, ஸர்வ ஹிதகாமியாகவும் பூத தயையுடன் நிலைபெறச் செய்வதற்காகவும் அல்லவோ, என்று நான் நினைக்கிறேன். சூர்யனும், சந்திரனும், கிரஹங்களும் அதனதன் வழிகளில் சென்று, ஜனங்கள் தர்மத்தில் மதியை வைத்து, ஸ்ரேயசின் பொருட்டும், சுகத்தை அனுபவித்துக் கொண்டு வாழ்வதற்காக அல்லவா? நீயும் பற்றுதல் அற்றவனுக, ஞான ரூபியாய், ஸத் பாத்திரமாகிய விபீஷணனிடம் லங்கா ராஜ்யத்தை தானம் செய்தாய். வித்வானுன ராமா, நீ தியாகத்தை ஆத்ம ஹிதமாகவும் செய்கிருய். தாரதம்யமின்றி ஸமமாக எல்லோரிடத்திலும் பழகுவதால், ஸுலபனுகவும், சௌலப்ய சௌசீல்ய குணங்களுடன் நீ பிரகாசிக்கின்ருய். ஆசையையும், லோபத்தையும் வென்று, கோபத்தையும் விலக்கி, அடக்கத்தை மோக்ஷ

வாயிலாகக் கொண்ட நீ பிரும்மமாக விளங்குகிறாய். இது தான் உனது குஹ்யமான ரஹஸ்யம். பொருள்களை தீய வழியில் அடையாமல், உன் மனத்தை தர்மத்தில் கட்டுப் படுத்துகிறாய். மானிட ஜன்மத்தைக் காட்டிலும் மிக மேலானது ஒன்றுமில்லை; தீரனானவன் மோகங்களிலிருந்து விடுபட்டு, ஸத்யத்தைப் படியாக, தன்னை வ்யவஹாரம் செய்துகொண்டு, விகாரமின்றி, ஸாதுத்தன்மையை அடைந் திருக்கிறாய். ராமா, நீரே ஹம்ஸர், நித்யர், ஈஸ்வரர். சரீர மானது கர்மங்களுக்குக் காரணம், அதில் ஸாதுத் தன்மை யானது ஸத்யமாகச் சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்ட ஸாதுவான ராமனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக் கிறேன்.]

ஹனுமான் தூரத்திலேயே ஜானகியை தரிசனம் செய்ததும் நமஸ்கரித்தார், சீதை ரகுபதியின் தூதனாக வந்திருக்கும் ஆஞ்சநேயரை, தனது புத்ரன் வந்து விட்டான் என்று அடையாளங்களால் தெரிந்து கொண்டாள். அவனையு மறியாமல், ஆவல் நிரம்பின சீதாபிராட்டி "என்பிள்ளாய், என்பதி கிருபா நிகேதன் புருஷோத்தம ராமன், அவர் தம்பி யாகிற லக்ஷ்மணன், சேனைகள் சமேதமிருக்கும் சுக்ரிவாதிகள் யாவரும் சௌக்கியமா?" என்று கேட்டாள். (686)

ஹனுமான் பதில் சொல்ல ஆரம்பித்தார், "தாயே, கோஸலாதிபரானவரும், தங்கள் பதியுமான ஸ்ரீராமன் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவுமிருக்கிறார். அவர் தச சீசனாகிற (பத்துத் தலைகள் கொண்டவனுமான) ராவணனை ஜயித்து, விபீஷணனுக்கு அசஞ்சலமான ராஜ்யத்தை தானம் செய்து விட்டு, உங்களுடைய க்ஷேம லாபங்களை விசாரிக் கவும், யுத்தத்தின் முழு விபரங்களையும் தங்களிடம் ஸமர்ப் பிக்கவும் என்னை பிரபு மீண்டும் தூதனாக அனுப்பியிருக்கிறார்." ஹனுமாருடைய வசனங்களைக் கேட்ட மஹாலக்ஷ்மியான சீதாப்பிராட்டி மிக்க ஹர்ஷத்தை (சந்தோஷத்தை) அடைந்தாள். (687)

[*தியானம்*

சீதே, மஹாலக்ஷ்மி, புவனேஸ்வரி, நீதானே பரமாத்

மாவின் ஆதாரசக்தி. குலாங்கனு என்று சொல்லப்படும் நல்ல குலத்தின் பாதி வ்ரத்யம் முதலிய குணங்களுடன் கூடிய வளும், குலத்திற்கு லஜ்ஜை முதலியவற்ருல் மறைந்திருக்கும் குஹ்ய ரூபிணி, நீதானே ஸாம்பவி என்கிற வித்யை; ஹேஜகத்தாத்ரி, ராம வல்லபே, நாராயணனுடைய பிராண நாடியே, உன்னை ஒவ்வொரு குலத்திலும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு வனத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தேகத்திலும் பூஜிக்க வேண்டும்; நீயே பூஜிக்கத் தகுந்தவள். விஷ்ணுவல்லபே, நீயும் பகவானும் காடோபகூடமாகச் சேர்ந்து லீலைகள் புரிவதால், உங்கள் இருவர்களுக்கும் பரமேஸ்வரதத்வம் பொதுவாகவிருக்கிறது. அப்படியிருந்தும், நீ ராமமஹிஷியானபடியால், ஸ்வபிர விருத்தி யாகவே நீ ராமனிடம் பாரதந்திரயம், அனன்யார் ஹஸே ஷத்வம் வ்ரதம் பூண்டவள்போல விளங்குகிருய். சிவனும் சக்தியும் சேர்ந்த சிவமாக, பரம மங்கள மூர்த்திகளாக நீங்கள் எனக்கு விளங்குகிறீர்கள். விஷயபோகங்களில் ஈடுபட்ட மானிடர்களுக்கு நீ துர்லபமாகவும்; ஆத்ம கோயிலில் பூஜை செய்கிறவர்களுக்கு அந்தர் முகஸமாராத்யா வாகவும் நீ விளங்குகிருய். உன்னுடைய ஸம்பந்தத்தால் அல்லவா பிரபுவாகிற நாராயணன் ஸ்ரீவிபாவனர், ஸ்ரீபதி, ஸ்ரீஷோட சாக்ஷரி ரூபமாகவும் விளங்குகிருர். பரா என்கிற வாக்கு ரூபமாகவும், நாத யோகினியாகவுமிருக்கும் பரதேவதே, நீதானே காரணபிந்து. நீயும் பகவானும் சேர்ந்து ஸ்வர்ண பிந்து என்று அழைக்கப்படுகிறீர்கள். அக்ஷரமும் பிந்துவும் அனுஸ்வரமும் கூடிய மந்திரமாகிய பிரணவமாக விருப்ப வர்கள். அநிந்திதே, உன்னுடைய சேர்க்கையினுல் கருமேனித் திருமால் பொன் மேனி கொண்டு, நீங்கள் ஸுவர்ணவர்ணராக விளங்குகிறீர்கள். உங்களுடைய கடாக்ஷ வீக்ஷண்யங்களை எங்கள் மேல் அன்புடன் விழுந்து, நாங்களும் திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன், திகழும் அருக்கனணி நிறமும் கண்டேன்—செருக்கிளரும் பொன்னுழி கண்டேன் புரிசங் கங்கைக் கண்டேன், என்னுழி வண்ணன் பாலின்று, சொல்லி சுக்ருத நமஸ்காரங்கள் செய்கிறேம்.]

தாமரை லோசனங்களை உடைய பிராட்டி [என்

ரெங்கநாயகி பட்டருடைய திருவத்யயன உத்ஸவ ஆரம்பத்தில் எவ்விதம் ஆனந்த கிளின்னேயாக விருந்தாளோ, அதுபோல ஹனுமாரை தன் புத்ரனைப் பார்க்கும் மாதாவைப் போல, அம்ருதத்தைக் கொண்டு வந்த கருடனைப் பார்த்த விநதையைப் போல] என் தாய், ராம கிருபையாகிற சீதா தேவி கிருதகிருத்யனை ஆஞ்சநேயரை அடிக்கடி அடிக்கடி மன ஆத்ம சந்தோஷத்தால் பார்த்துப் பார்த்து ஆனந்திப்பவளாக, தனது உத்தம சரீரத்தின்மீது ராமசேர்க்கை ஏற்படப் போகிற ஆனந்த அம்ருதபாஷ்பங்களால் லஜ்ஜை சந்தோஷம், சொல்ல வொண்ணாத சேர்க்கை ஆனந்தம், பாக்யலக்ஷ்மியாக, ஜயலக்ஷ்மியாக, என் தாய் சீதை அன்று சிம்சுபா விருக்ஷத்தினடியில் விளங்கினாள். விஜயலக்ஷ்மியான சீதை ஸஹஜ பிரியத்துடன், கிருதக்ஞை என்னும் பாப புண்யங்களைப் பார்க்கும் லோசனங்களால், மஹாபிரளய சாக்ஷிணி, தன்னை வந்து நமஸ்கரிக்கும் ஹனுமாரை, தனது குழந்தையைப் போல, அடிக்கடி அனுக்ரஹ உள்ளத்துடன் கடாக்ஷித்தாள். [ஹே புல்வலோசனி, அப்ஜஸம்பவே, ராம கிருபா, என்னையும் அந்த அமிர்த கடாக்ஷங்களால் புஷ்கராக்ஷங்களால் வர்ஷி அம்மா, வர்ஷி. ஹே விமலே, பக்தர்களுக்கு கல்பதருப் போலவும் பாக்யஸார தேனுவாக விருக்கும் நீ என்னை ராஜகோபாலனிடம் சேர்த்துவை அம்மா. அடிக்கடி அடிக்கடி அந்த மஹா பாக்யவானும், வைகாரி புருஷனைப் போல] அடக்கமுள்ள ஆஞ்சநேயரைக் குளிரக் கடாக்ஷித்தாள். அவளுடைய கண்டத்திலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. [நவ சம்பக புஷ்பத்தைப் போல நாஸிகை உடைய சீதாப் பிராட்டி ராமனுடைய லோசனங்களாகிற ஆம்பல் புஷ்பத்திற்கு விகஸிக்கும் சந்திரமா போன்ற ஜானகி,] "ஹே ஹனுமான், உனக்கு நான் என்ன வெகுமதி கொடுக்கக் கூடும்? த்ரைலோகிய ஸாம்ராஜ்யம்கூட மிகமிகச் சிறியதாக விருக்குமே நீ செய்த பரம உபசாரத்திற்கு, இந்த சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டு வந்ததுமன்றி, நீ என்னை என் பதியினிடமும் சேர்த்து வைத்தாயே, உன்னை எவ்வளவு புகழ்ந்தாலும் அந்த புகழ் வார்த்தைகளும் மிகமிக்க சிறியதாக விருக்கும். நான் எனது கடாக்ஷங்களைப் பூர்ணமாகச் செலுத்

தியும், என் மனம் சந்தோஷத்துடன் உன் விஷயத்தில் உதார ஹ்ருதயத்துடன் விருக்கிறது. புத்ரா, உனக்குச் சரியாகக் கொடுக்கக்கூடிய வெகுமதி எனக்கு ஒன்றும் தோன்றவில்லே, நீயே சொல்,'' என்று கேட்டாள். மாதாவின் பிரிய வார்த்தைகளைக் கேட்ட ஹனுமான், வாயுஸுதன் சொன்னார், ''அம்மா, கேளுங்கள். இன்று நான் சந்தேகமின்றி ஸகல ஜகத்திற்கும் அரசனுகிவிட்டேன். தங்கள் கிருபையை நான் அடைந்துவிட்டேன், அகில ஜகம் முழுவதும் அரசனுக விருக்கும் ராமனேயும் தம்பியுடன் தங்களேயும் சந்தேகமின்றி அடைந்து விட்டேன். தங்கள் கிருபையால் ரண பூமியில் சத்ருவான ராவணனை சஹோதர பந்து வர்க்கங்கள் சகிதம் கொன்று, சௌக்யமாக இப்பொழுது தாங்களும் தங்கள் பதி யான ஸ்ரீ ராமனும் தம்பி லக்ஷ்மணனுடன் என் ஹ்ருதயத்தில் ஸதா ஸாந்நித்யம் செய்வதால், தாயே, எங்கு பார்த்தாலும் நிர் விகாரமான ராமம் அநாமயமாக நான் பார்க்கிறேன்.'' (அப்பேற்பட்ட ஆஞ்சநேயர், சீதை, ராகவன் என்னே ரக்ஷிக்க வேண்டும்.) (688)

குழந்தை ஹனுமாரின் வார்த்தைகளைக் கேட்ட ஜானகி மிக்க ஹர்ஷத்துடன் சொன்னாள், ''புத்ரா, என் பிரியனே, ஸகல கல்யாண குணங்கள் உன்னே வந்து அடையட்டும். குணஸம்பன்னனுக ஸகல காலத்திலும் நீ விளங்குவாயாக. ஸ்லாக்யனுகவும் குணத்தை தனமாக உடையவனுகவும், புத்திமானுகவும், குலீனுகவும், சூரனுகவும், விக்ரமம், தேஜஸ் உள்ளவனுகவும், சீலனுகவும், அவகுணங்கள், குணக்கேடுகள் இல்லாதபடி ஸதா காருண்ய மயமாக என்னுல் பூர்ணமாக அனுக்ரஹிக்கப் பட்டவனுகவும், நீ ஸதா விளங்குவாயாக. [உன்னுடைய ஹ்ருதயம் ராம சீதா கைங்கர்யத்தில் ஸதா பிரவர்த்திப்பதாகவும் இருக்கக் கடவது:] ஹனுமான், கோஸ லாதிபதியான ஸ்ரீ ராமசந்திரன், அவருடைய தம்பி அனந் தனுடன் கூட எக்காலத்திலும் உன் விஷயத்தில் பிரஸன்ன மாக இருக்கக் கடவது'' (689)

''என் அருமை புத்ரா, [நீதான் காரியத்தை மிச்சம் வைக்காமல் செய்து முடித்தாய்.] ஏதாவது உபாயத்தினுல், என் பிரபுவின் அழகுவாய்ந்ததும், [கோவைப்பழம் போன்ற

உதடு உள்ளதும், அழகிய குண்டலங்கள் தரித்தவரும்] ஜன்ம தாபங்களைத் தணிக்கும் ஸ்யாமள நிறமுள்ளவரும், பூர்ண சந்திரனைப் போல் விருக்கும் ஸ்ரீராம ரந்திரனுடைய திருமுக மண்டலத்தை எனது பாஷ்ப கண்களுடன் பரிபூர்ண லோசனங்களால் தரிசனம் செய்யப்பெறும் பாக்கியத்திற்கு ஏதாவது உபாயம் செய்வாயாகில், மிக்க உபகாரமாக விருக்கும்,'' என்று ஆவலுடன் சீதா பிராட்டி ஸ்ரீராமனுக்கு தனது ஸந்தேசமாக ஹனுமாரிடம் ஸமர்ப்பித்தாள். அப்பொழுது மஹா வேகமுள்ள ஹனுமார் பிரபு ராமசந்திரனிடம் சென்று அவ்விடம் சீதையின் மனோபிஷ்டங்களை எடுத்துச் சொன்னார். (690)

பானு குலபூஷணன ரகுராமன் ஜானகியின் ஸந்தேசத்தை ஏற்றுக் கொண்டு, யுவராஜனன அங்கதனையும் மஹா ராஜாவான விபீஷணனையும் அழைத்துச் சொன்னார், ''மாருதஸுதனைகிற ஹனுமாருடன் சென்று, ஜானகியை மரியாதையுடன் அழைத்து வாருங்கள்.'' (691)

உடனே யாவரும் ஜானகி யிருக்கும் இடத்திற்குச் சென்றார்கள். ராக்ஷஸ ஸ்திரிகள் அனைவரும் அவர்களுக்கு நமஸ்காரங்கள் செய்தனர். விபீஷணனின் உத்தரவின் பேரில் சீதைக்கு மங்கள ஸ்நானம் செய்து வைத்தார்கள். (692)

அநேகவிதமாக சீதையை அவர்கள் அலங்கரித்தார்கள். அழகான பல்லக்கில் அவளை உட்காரவைத்து, மிக்க மரியாதையுடன் ஸ்ரீராமனிடம் அழைத்துச் சென்றார்கள். மனத்தில் சந்தோஷம் கொண்ட வைதேஹி சுகத்தைக் கொடுக்கும் (மஹா ஸத்வமான) பிரியதமனை, ஸ்ரீராமனை ஸ்மரித்துக் கொண்டு ஆவலுடன் ஸ்ரீராமனிடம் சென்றாள். (693)

[*தியானம்*

ஹே சீதே, மனோன்மணி, நீ ராமனை தரிசிக்கப் போகிறாய். ஹே மைதிலி, ஊடல், கூடல், உணர்தல், புணர்தல் ஆகிற ராம ஸ்நேகத்தை விரும்பிச் செல்லும் நீ அன்று ஆண்டாள் மதுசூதனன் வந்து ''என்னை கைத்தலம் பற்றக் கனாக் கண்டது,'' போலச் செல்கிறாயோ, அல்லது ஹே காமாக்ஷி, மெருகு

கொடுத்த தங்கம் போன்ற ஸ்வர்ண நிறமுள்ளதும், பத்மஸமான கந்தத்தை உடையதும், நீ யில்லாமல் பத்து மாதங்கள் தனித்து நின்ற ராம ஏகாந்தியைப் பார்க்கப் போகிறுயோ – சொல் அம்மா. லஜ்ஜையைவிட்டு, தேவமாதர்களாகிற ராக்ஷஸிகளையும் விட்டு, உனது பிரியரக்ஷக சகிகளையும் தியாஜ்யம் செய்துவிட்டு, விபீஷணனுல் நன்ருக அலங்காரம் செய்யப்பட்ட ராஜகுமாரியாக, பயமும் சோகமும் கலந்த உள்ளத்துடன் ராமலாபத்தை மீண்டும் அடைய எண்ணம் கொண்டு, பிரகடனப் படுத்திக்கொள்ள விரும்புகிருய். இம்மைக்கும் ஏழேழு பிறவிக்கும் பற்ருவான் நம்மையுடையவன் நாராயணன் நம்பி செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி உன்னை அடையக் காண விரும்பும் ராமன் எவ்விதம் இருந்து என்ன ? காதோடுகூடி கன்றுடன் கூடிய தாய்ப் பசுவைப் போல வல்லவா நீங்கள் இருவர்களும் ராஜகோபால வத்ஸங்களாக எனக்குத் தோன்றுகிறீர்கள். தண்டகாரண்யம் புகுந்த தாசரதி ராவணனை வெல்லுவதற்காக கடலைத் தாண்டி புருஷ பிரயத்தனம் செய்து, கூற்றம் மானிடமாய் வந்து தோன்றி, அம்பினுல் அரக்கர்களைக் கொன்று, சீதை என்னும் தெய்வத்தின் கிருபையை அடைய விரும்புகிருர் என்று ராமன் திருநாமம் சொல்லி வருகிருயா அம்மா. உன் மனதில், ராமனுக்கு உன்பால் கொண்டிருக்கும் ப்ரேமை அவருடைய தாயிடமோ, தந்தையிடமோ, மற்றும் வேறு எவரும் ஸ்நேகத்தால் அதிகமாகவோ, ஸமமாகவோ அடையவில்லை, என்கிற மஹா விஸ்வாசம் வளர்ந்து இருக்கிறதா ? கள்ளத்தால் மாவலியை மூவடி மண் கொண்டளந்தான், என்கிற மாமாயனிடம் உனது மனதுக்கினியாளிடம், அன்பையும் பிரேமையும் மாத்திரம் எதிர்பார்த்து வருகிருயா ? ஆம். உனது மனது சங்கல்பத்தின்படித்தானே பகவானும் ஆகிருர் என்கிற நியதியாலே, நின்ற பெருமானுகிற ராகவனை, அன்று துரகவாய் கீண்ட துழாய் முடியாய் நாங்கள் நரகவாய் கீண்டாயும் நீ, நாரத பிரியனுகிற கேசவனை, மனத்தாலும் வாயாலும், வான்குருகூர் பேணும் ராமபாதங்களை யாமுடைய பற்று, என்று நினைத்து, உனது அஸஹ்ய அபசாரமாகிற லக்ஷ்மணனை கடிந்த சொல்லிற்கு, கர்மமடியாக பயனளிக்கும்

எம்பெருமானை அல்லவோ, நீ அடைய விரும்புகிருய். உனது மதுசூதனனை, என்னை தீ மனங் கெடுத்தாய் உனக்கென் செய்கேனென் சிரிதரனே, யானே என்னை அறியகிலாதே, யானே யென் தனதே என்றிருந்தேன், யானே நீ என்னுடைமையும் நீயே, வானே யேத்தும் எம் வானவரேறே, ஹே, நீரே செய்த நெடுஞ்சுடர் சோதி, தேறே லென்னை உன் பொன்னடிச் சேர்த்தொல்லே, வேறே போக எஞ்ஞான்றும் விடலே, என்று நினைத்துக் கொண்டு, அனன்ய கதியாக ஸ்ரீராம சரணங்களை சரணமடைந்து உனது பாரதந்திரியம், அனன்யார்ஹ சேஷத்வத்தையும், உனது ராம விபூதியையும் மீண்டும் அடைய விரும்புகிருயோ? சொல் அம்மா உனது இஷ்டத்தைச் சொல்.]

நான்கு புறங்களிலும் நான்கு பாதுகாப்பாளர்கள் சீதையை ரக்ஷித்துக் கொண்டு சென்ருர்கள். எல்லோருடைய மனத்திலும் சீதைக்கும் ராமலாபமும், ராமனுக்கு சீதையின் ஸ்நேகமும் கிடைக்கப் போகிறது என்கிற உத்ஸாஹம் பொங்கி வழிந்தது. ஜானகியைப் பார்ப்பதற்கு வானரங்களும் கரடிகளும் ஆவலுடன் ஓடி வந்தார்கள். அப்பொழுது ராக்ஷஸர்கள் க்ரோதத்துடன் அவர்களை அடக்க முன் வந்தார்கள். (694)

அப்பொழுது கடுமையை அடைந்த பக்தவத்ஸலனுகிற ரகுவீரன் அந்த கலகலப்பைக் கேட்டு உத்திரவிட்டார். "மித்ரர்களே, சீதையை காலால் நடத்தி அழைத்து வாருங்கள். (தேவதைகளான) வானரங்கள் (ஜகஜ்ஜனனியாகிற) சீதையைத் தாயைப்போல பார்க்கட்டும். (அந்த ஜகன் மாதாவானசீதா பிராட்டியின் கண் வீச்சுக்கள் காயம்படிந்த வானர கரடி வீரர்களின் தேகத்தில் சிறந்த சஞ்சீவினி ஒஷதியைப்போல விழட்டும்,"] என்று சொல்லிக் கொண்டு, பிரபு தனக்குள் சிரித்துக் கொண்டார். [ஸர்வ தீர்த்தகரரான] ரகுநாதன் வானரங்களின் கோஸாயி, நன்றிப் பெருக்குடன் கூடிய வானரங்கள் சீதையைப் பார்க்க விரும்பியதை ஆமோதித்தார். அப்பொழுது அவருடைய மனத்தில் சிறிது கடுமை யிருந்தது. (695)

பிரபுவின் வார்த்தைகளைக் கேட்ட வானரங்களும் கரடி

களும் சந்தோஷம் கொண்டார்கள். ஆகாயத்திலிருந்து தேவதைகள் ராமசீதா ஆகியவர்கள்மீது [தர்மம் முதலியவற்றை உபதேசிக்கும் சாஸ்திரம் அறிந்தவர்களாக எண்ணிக் கொண்டு,] புஷ்பங்களை வர்ஷித்தார்கள். சீதையின் நிஜ ஸ்வரூபம் அக்னியில் மறைந்து கொண்டிருந்தது. இப் பொழுது பிரபு ஸர்வாந்தர்யாமி, ஸர்வ சாக்ஷி, ஜகத்சக்ஷீ [ஸர்வதோமுகர், உக்ரர், பத்ரர், மஹாவீரர், மஹாவிஷ்ணு, கோபத்தால் ஜ்வலிக்கும் வீர்யமுள்ள மஹாபாஹு, நரசிம்மர், ம்ருதியுவுக்கும் மிருத்யுவாகவிருக்கும்] கோதண்டராமன், நிஜ சீதையை வெளி உலகத்திற்குப் பிரகடனப்படுத்த ஸங்கல்பம் கொண்டார். [அப்பேற்பட்ட சீதா ராமனை நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.] (696)

கருணாநிதியான பிரபு இந்தக் காரணங்களால் லீலையாக கடும் வார்த்தைகளை சீதையை நோக்கிச் சொல்ல ஆரம் பித்தார். அதை கேட்ட ஸகல ராக்ஷஸிகளும் விஷத்தைப் போல அந்த வார்த்தைகளை வெறுத்து, வ்யாகுலத்தை அடைந் தார்கள். (697)

பிரபுவின் வசனங்களைக் கேட்ட சீதை தலைவணங்கி, ராமனை நமஸ்கரித்துவிட்டு, அவருடைய ஆக்ஞையை ஏற்றுக் கொண்டாள். மனம், கர்மம் வசனம் ஆகியவைகளில் ராமனின் மனோனுகூலையாகவும் ஸஹதர்மி சாரிணியாகவும், பரம புனிதமான வாழ்க்கையை நடத்தி வந்த ஜனகரின் பெண்ணாகிற சீதை லக்ஷ்மணனைப் பார்த்து வார்த்தைகளைச் சொன்னாள். "லக்ஷ்மணா, என்னை தர்ம வழியில் அழைத்துச் செல். என்னுடைய புனிதமான வாழ்க்கையாகிற தர்ம நெறிக்கு ஆசரணையைப் போல, எனக்கு சகாயம் செய். உடனே நெருப்பை மூட்டி, தயார் செய்." (698)

லக்ஷ்மணன் சீதையின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போய் விட்டான். சீதையின் பிரிவை ராமனும் அவனும் தாங்கவே முடியாது. சீதையின் விரஹதாப வசனங்கள், விவேக பூர்ணமான வசனங்கள், தர்ம யுக்தமாகவும் நீதியை ஒட்டி அனுஸரித்தும் சொல்லப்பட்ட சீதையின் வார்த்தைகள் அவனை கலக்கிவிட்டன. அவனுடைய பரிபூர்ண லோசனங்களி லிருந்து கண்ணீர்கள் வழிந்து கொண்டிருந்தன. அவன் இரு

கைகளையும் அஞ்சலி செய்து கொண்டு சீதையையும் ராமனையும் பார்த்தவண்ணமிருந்தான். ஆனால் அவன் பிரபு விடம் ஒன்றும் சொல்லாமல் பேசாமலிருந்தான். (699)

ராமன் லக்ஷ்மணன் கருணையினால் நனைக்கப்பட்டு அதனால் தடுக்கப்பட்டத்தைப் பார்த்தார். சீதையின் மனோபிப்ராயப்படி நடக்க விரும்பும் ராமனை இங்கிதங்களால் கண்டு கொண்டு, லக்ஷ்மணன் வேகமாக ஓடி அக்னியை வெகு சீக்கிரமாக மூட்டினான். வைதேஹி அக்னி கொழுந்துவிட்டு எரிவதைக் கண்டு, ஹ்ருதயத்தை ஒருங்குபடுத்திக் கொண்டு, மன சந்தோஷத்துடன் பயத்தை த்யாஜ்யம் செய்தாள். (700)

[*தியானம்*

ஹேசீதே, ஜனகரின் செல்வமே, ராமார்த்தம் ராமனே மஹத்தான ஐஸ்வர்யம் என்று ஏகபராயணமாக வாழ்ந்து வந்த உத்தமியே, நீதானே குற்றமற்ற ஸ்வாஹாதேவி. நீதானே சூர்யனுடைய பிரபை. அம்மா நீதானே ரோஹிணியாகிற சந்திரனுடைய காந்தி. நீதானே அருந்ததி என்கிற வஸிஷ்டரின் தவச் செல்வம். உமாதேவியுடன் கூடிய மஹேஸ்வரர் எவ்விதம் தர்மத்திற்கும் ஆசரணைக்கும் சிறந்த உதாரணமாகவும், விமர்சனமாகவும் விளங்குகிறார்களோ, அது போல ராமன் என்கிற தர்ம ஸ்வரூபிக்கு ஆசரணை என்கிற ஸ்திரி தெய்வமாக, சீதே, வைதேஹி, நீ விளங்குகிறாய். உன்னையும், உன்பதியான ராமனையும் அண்டி வாழும் தர்மம், ஆசரணை என்கிறதினால் மஹத்தானதாகவும், அழிவற்ற கீர்த்திகளையும், சுபமானதும் சுத்தமானதுமான கீர்த்திகளையும் அடைகிறது. ஹே ஜனக குமாரி, ராமனின் தவப்பயனாக வந்து அடைந்தாயே, நீ என்ன தர்மத்தை உலகத்தின் நன்மையின் பொருட்டு விமர்சனம் செய்கிறாய்? பொன், கங்கை, சுப்பிரமண்ணிய தேஜஸ், ஆகிய மூன்றையும் ஒருங்கே அணைத்துக் கொண்டு, நீ இந்திரனுடன் கூடிய இந்திராணியைப் போல எல்லாமுமாக விளங்குகிறாய். உன்னுடைய சீல நடத்தைகளை மஹாபாக்யவானான ஆஞ்ச நேயர் நேராக அறிந்து ராமனிடம் தெரிவித்தார். அதைப் போல உன்னுடைய குற்றமற்ற நடத்தையும், பத்னி விரதம்

என்கிற பதி வ்ரதா தர்மத்தை விபீஷணனும், மாசற்ற மங்தோதரியும், ராக்ஷஸ ராக்ஷஸஸ்திரிகளும் வெளி உலகுக்குப் பிரகடனப்படுத்தினர்கள். அப்படியிருந்தும் ராமனின் சோதனைக்கு ஏன் நீ உட்படுத்திக்கொண்டாய்? பக வானைப் போல நீயும் ஸர்வ ஸ்வதந்திரை அல்லவா? உனது இஷ்டத்தினுல்தானே, நீ ராமனை விட்டு ராக்ஷஸிகளை அடைந் தாய். ராமனின் ஸஹதர்மசாரிணி, உன்னுல் காட்டப்பட்ட அடக்கமும், பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு ஆயிரம் தர்மங்களைக் விளக்கிச் சொன்ன பிறகு, கடைசியாக சொல்லப் பட்டதும் ஸ்ரீயப்பதியான நாராயணருடைய பாதங்களை ஆதாரமாகக் கொண்ட ஸ்ரீராம பாதங்களை அல்லவோ சொல்லிலும் மனத்திலும் கர்மத்திலும் அம்மா, நீ விமர்சித்தாய். அன்று உமையை நோக்கி, பிரஸ்னம் செய்த மஹேஸ்வரர், ஸ்திரிரத்னமாகிற பார்வதியைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வரு கின்றன. "உமாதேவி, தர்ம தேவதையே, ஸாத்வியான ஸ்வாஹா தேவி, சுததி, கௌரி துமோர்ணை, அருந்ததி, ருத்தி, ஸாவித்திரி, த்ருதி, முதலியவர்களும் கங்கை, நர்மதை காவேரி, போன்ற தீர்த்தங்களும் இன்னும் உலகில் பதிவிரதைகள் என்று பெயர் பெற்றி ஸ்திரிகள் அனைவரும் உன்னுடன்கூட வசிப் பதாகக் கேள்வி. அவர்கள் ஒத்து நடந்தும், உன்னைப் பூஜித்தும் உலகத்தினுல் பூஜிக்கப்படுகிறார்கள். அதனுல்தான் உன் வார்த்தைகளால் ஸ்திரிதர்மத்தை நான் கேட்க விரும்புகிறேன். அம்மா, நீதானே ஸுரகாரியகாரிணி. லோக ஸந்தானகாரிணி. அதனுல் உன்னைவிட ஸ்திரி தர்மத் தைச் சொல்லுவதற்கு யோக்யதை யாருமில்லை. ஸ்திரி கூட்டம் அனைவரும் உன்னை விடாமல் அனுஸரிக்கிறது. ஸ்திரிகளுக்கு ஸ்திரிகளேகதி. எப்போதும் பசு பசுக்களிடத் திலேயே சேரும். மனிதன் மனிதனில்லாதவர்களிடத்தில் சந் தோஷமடையான். தேவியே, உலகத்தில் இந்த இயல்பு ஆதி காலம் முதல் நடக்கிறது. பெண்ணுல் சொல்லப்படுவது எது வாகிலும் அது பெண்களால் கொண்டாடப்படும். புருஷன் சொல்வது ஸ்திரிகளிடத்தில் அவ்விதம் மதிப்பை அடையாது. அப்பேற்பட்ட அழியாத தர்மத்தைச் சொல்," என்று ஆக்ஞை

செய்யப்பட்ட உமாதேவி பெண்களின் நன்மைக்காகவும், சிவனுடைய விருப்பத்திற்காகவும், தன் சசிக்களிடம் ஆலோசனை செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தான். "பகவானே, ஸ்திரி மனத்தினுலும், வாக்கினுலும், செய்கையாலும் கணவனுக்கு அனுகூலையாகவும், கணவனிடம் பதி விரதா தர்மத்தை நடத்த வேண்டும். ஸுகபாவா, ஸுகவசனு, ஸுவ்ருத்தா, ஸுக தர்சனு, அனன்யசித்தா ஸுமுகி பர்து: ஸா தர்மசாரிணி, ஸா பவேத் தர்ம பரமா ஸாபவேத் தர்மபாகி நீ, பதிஹி தேவோ நாரீணும் பதி: பந்து: பதி: கதி:, பத்யா ஸமா கதிர் நாஸ்தி தைவதம் வா யதாபதி:, பதி ப்ரஸாத: ஸ்வர்கோ வாதுல் யோ நார்யா நவாபவேத், என்று அடக்க சீலையான உமாதேவி ஸர்வ ரிஷிக் கூட்டங்களுக்கு முன்பு விமர்சனம் செய்தாளே. அந்த விமர்சனத்திற்கு "ஹே சீதே, நீ யல்லவோ, உதாரணமாக விளங்குகிறுய். உன்னை அடைந்தல்லவோ பகவானுக்கு ஸ்ரீயப் பதித்வமும், ஸ்ரீவிபுத்வமும், மஹத்தான கீர்த்திகளும் ஏற்படுகின்றது. சீதாயா: மஹத: சரிதம்" என்று சொல்லப்படும், வால்மீகி ராமாயணமும் தியாகராஜரால் பாடப்பெற்ற "மா ஜானகி," என்கிற கீர்த்தனமும், நம்மாழ்வார் பாடிய "என்னுள் திகழும் மணிக்குன்ற மொன்றே ஒத்து நின்றுன் புகழும் புகழ் மற்றெனக்கு மோர் பொருளே," என்பதற்கும்; நித்யம் த்யானபரோ ராமோ நித்யம் ஸோகபராயண: நான்ய சிந்தயதே கிம்சித்ஸது காம வஸம்கத: என்கிற மாருதியின் வார்த்தைகளுக்கும் அர்த்த பூஷணமாக விளங்குகிறுயே. அப்பேற்பட்ட சீதைக்கு, ஜனக புத்ரிக்கு, ராம ஸந்நிதியில் ராமானுஜன் தலைக் கொண்டு, வானரர்கள் விபீஷணன்புடை சூழ நான் ஆயிரம் நமஸ்காரங்களைச் செய்கிறேன். அத்ருதர் ஸ்வத்ருதர், தர்ம விதுத்தமர், திருப்தர், என் கோமளக் கொடியாகிற சீதே," என்று அனு சந்திக்கும் என்னைப் பாருங்கள்.]

லீலா பிரகரணத்தை அடைந்த சீதா தேவி மிக்க பிரபலமடைந்ததும், உத்தம உத்தமமானதும், மஹா புனிதமான வாசனங்களை ராமனை ஆணையிட்டுக்கொண்டு சொன்னுள். (ராம நாமாங்கிதம் என்கிற ராம அங்குலியத்தை அணிந்த வைஷ்ணவி தேவி) சீதை சொன்னுள். "நான் மனத்தாலும், வாக்காலும் கர்மங்களாலும் ஹ்ருதயத்தில் ஏக பராயணமாக ரகுவீரனை

என் ஏகமான கதி என்று நம்பி வாழ்ந்திருந்தேனுகில், வேறு ஒன்றையும் ஆஸ்ரயம் செய்யாமல் என்பதியே தெய்வம் என்று, (பார்வதி தேவியைப் போல நான் வாழ்ந்து வந்திருந்தேனுகில்) ஸர்வ பூதங்களிலும் குற்ற மற்ற ஸ்வாஹா தேவியுடன் வசிக்கும் அக்னி பகவான், மஹா கிருபாளு, என்னை ஸதா காலத்திலும் அறிந்து கொண்டிருக்கும் ஸர்வசாக்ஷி, என்மீது கிருபை கொண்டு, இந்த அக்னியை மலைய பர்வதத்தின் சந்தனம் போல குளிர்ச்சியை அடையச் செய்யட்டும்,'' என்று சொல்லி அக்னியையும், பிரபு ராமசந்திரனையும் பிரதக்ஷணம் செய்தாள். (701)

மைதிலியாகிற ஜானகி பிரபு ஸ்ரீராமனை ஸ்மரித்துக் கொண்டு அக்னி ப்ரவேசம் செய்தாள். எந்த புருஷோத்தம ராமனை ஸதா ஸ்மரித்துக்கொண்டு மஹாதேவர், உமை முதலியவர்கள் வந்தனம் செய்து கொண்டு வாழ்கின்றார்களோ, அந்த உத்தம ராமனிடம் அனன்ய பக்தி, அனன்ய கதி, அசரண்ய சரண்யம் என்கிற உத்தம விரதங்களால் ஆஸ்ரயம் செய்யும் ஜகன் மாதாவான சீதை அத்யந்த ப்ரீதியுடன் ராமனின் ஆக்ஞைக்கு உட்பட்டு, பாரதந்திரிய ஸ்வரூபமாக, அக்னியை அடைந்தாள். [மஹாதேவி, ஸாம்பவி, விஸ்வ காரிணி, ஜகஜ்ஜனனி, ராமதாத்ரி, திரிபுவனேஸ்வரி, மஹா திரிபுர சுந்தரி,] கோஸலாதிபரான ராமனுக்கு ''மங்கள ஜயங்கள் ஏற்படட்டும்'', என்று வாயார புகழ்ந்து கொண்டு, சீதை அக்னியை அடைந்தாள். (கங்கை ஸ்வாஹா தேவியை போல குற்றமற்றவளும், அருந்ததியைப் போல பிரகாசிக்கும்) என் சீதை இவ்விதம் சொல்லிவிட்டு, அக்னியில் ஸ்நானம் செய்தபோது, அந்தப் புகழ்பெற்ற அக்னி மலைய பர்வதத்தில் வீசும் குளிர்ந்த சந்தனக் காற்றைப் போல அதி சீதளமாகவும், மனத்திற்கும் பிடித்தாற் போல குளிர்ந்தும் விளங்கியது. சீதையினுடைய பிரதிபிம்பம், சீதையின் சாயை லௌகிக திருஷ்டியினுல் களங்கமாகச் சொல்லப்படும் ஸ்வரூபம் பிரசண்டமான அக்னியில் எரிந்து சாம்பலாகி விட்டது. பிரபுவாகிற மாமாயனுடைய சரித்திரம் யாவருக்கும் தெரியவில்லை. இது மாமாயனுகிற ராமனுடைய அத்புத லீலை. (எரிந்து விழுந்த கரிக்கட்டையாகிற பரிக்ஷித்தை உயிர்ப்பித்த

கண்ணனின் அதி செயல் போலவும், கெட்ட எண்ணமுள்ள துரியோதனன் தார்திருஷ்டாதிகளுக்கு விஸ்வரூபம் கொண்டு தனது முழு ஸ்வருபத்தை மஹாகிருபையுடன் காட்டிய பர வாஸுதேவன் போல விருக்கும் என் பிரபு, எனது மோஹங் களையும், ராவணனுடைய மோஹங்களையும், அறுத்த முராரி, சுதமாயன், பிரவிருத்தி, நிவிருத்தி தர்மங்களுக்கு சந்தேக மில்லாத அமலமான மதியை உடைய என் பிரபு ராகவன் செய்த அத்புத செயலுக்கு உடந்தையாக விருந்த அதி மானுஷி தெய்வமாகிற சீதாப் பிராட்டியின் ஸ்ரேஷ்டமான தவப்பயன், பேசாமலிருந்ததைப் பார்த்து) அங்கே யிருந்த விஸ்மயித்துப்போன ஸுர சித்த முனிகள் இந்தக் காக்ஷியைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். (அவர்களுக்கும் மாயோனுடைய செயல்கள் புரிபடவில்லை. அவர்கள் ஆகா யத்தில் மேலே என்ன நடக்கப் போகிறது என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.] (702)

அப்பொழுது ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. (ஸ்வாஹாதேவியுடன் கூடிய) அக்னி தேவன் வேதங்களாலும் ஸுக்தங்களாலும் கீர்த்தனம் செய்யப்படுபவனும், ஜகம் முழு வதும் பிரஸித்தமா யிருக்கும் நிஜமான ஸத்யரூபியாகிற ஸ்ரீ சீதா தேவியுடன் ஆவிர் பவித்தார், அவர்கள் அக்னியி லிருந்து வெளிக்கிளம்பினர்கள். க்ஷிரஸாகரனுகிற சமுத்திர ராஜன் தனது மனைவியுடன் இந்திரா என்று சொல்லப்படும் மஹாலக்ஷ்மி தேவியை விஷ்ணு பகவானிடம் எவ்விதம் ஸமர்ப்பித்தானே, (ஆண்டாளை விஷ்ணு சித்தர் ரெங்கநாத னிடம் எவ்விதம் ஸமர்ப்பித்தாரோ,) அதுபோல என் தெய்வ மாகிற சீதாதேவியை ஜனகஸுஜாதாவை பரந்தாம ராமனுக்கு ஸமர்ப்பிதம் செய்தார்கள். மஹாலக்ஷ்மி தேவி எவ்விதம் விஷ்ணு வக்ஷ ஸ்தலத்தை அடைந்து பிரகாசிப்பாளோ, அது போல என் சீதா தேவி ஸ்ரீராமனுடைய இடது பக்கத்தில் விஜய லக்ஷ்மியாக அதி சோபையுடன் பரம மங்கள திருஷ்டிகளுடன் அதிலாவண்ய ராசி கும்பல்கள்போல விருக்கும் ராஜ லக்ஷ்மி போல ராமனுடன் சேர்ந்து விளங்கினுள். (ஸமஸ்த லோகங் களுக்குப் பிதாவாகவும் மாதாவாகவும், விளங்கும் ராமனும் சீதை யும் ஒன்று சேர்ந்ததும், புனர் ஸ்ரீமான் என்று சொல்லும்படி

என்பிரபு ராமன் சீதையுடன் பரம சோபிதமாக லக்ஷ்மணனுக்கும் எனக்கும் விளங்கினார்.) அந்த உமா மஹேஸ்வர தத்வமாக விளங்கும் என் பிரபு ராமனும் சீதையும் அப்போது அலர்ந்த நீலோத்பலம் போலவும், கனக பங்கஜம் போலவும் ஒன்றாகச் சேர்ந்து விளங்கினார்கள். (எந்த பராசராதிகள் தினந்தோறும் கீர்த்தனம் செய்யும் ரதிராகம், லக்ஷ்மி கோவிந்தன், பித்ரு கணம் ஸ்வதா பத்னி சீலாப்ராக்வம்சம் என்று பல விதங்களால் ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அந்த திவ்ய தம்பதிகள் ஒன்றாகச் சேர்ந்து உலகங்களுக்கு மங்களங்களை விளைவிக்க ஹேதுவானார்கள். [அப்பேற்பட்ட ராம சீதா மூர்த்திகளுக்கு ஆஞ்சநேய பராசாரதிகள், அக்னி தேவர், ஸ்வாஹாஸ்வதா தேவிகளை முன்னிட்டு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். என்னை ரக்ஷிக்க வேண்டும் என்று பிரபத்தி செய்கிறேன். ஸ்ரீவத்ஸ்வக்ஷன், ஸ்ரீவாஸன், நித்யஸ்ரீ நித்ய மங்களம். ஸ்ரீதரன் ஸ்ரீகரன் ஸ்ரேயஸ் நாராயணனை நான் அடிக்கடி நாரத வியாஸ பீஷ்மர், வால்மீகி, சுகாதிகளை முன்னிட்டு ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.) (703)

தேவைகளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. பாரிஜாத மந்தார புஷ்பங்களையும், வில்வம், துளசி, முதலியவைகளையும் கனவிருஷ்டிபோல வாரி இறைத்தார்கள். ஆகாயத்தில் எங்கு பார்த்தாலும் தேவக் கூட்டங்கள் நாட்டியம் ஆடிக்கொண்டும் மங்கள கீதங்கள் பாடிக்கொண்டும் ஒரே சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள். கின்னரர்கள் அவர்களுடன் சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள். விமானங்களின்மீது ஏறிக்கொண்டு, (கிருதாசி, ஊர்வசி, ரம்பை, மேனகை, மிஸ்ரகேசி, அலம்புஷை, விஸ்வாசி, பஞ்ச சூடை, திலோத்தமை போன்ற மஹா பாக்யமுள்ள) திவ்ய அப்சரஸ்களின் கணங்கள் நாட்டியம் ஆடி மங்கள கீதங்கள் பாட ஆரம்பித்தார்கள். (704)

ஜனக ஸுதாவான சீதையுடன் கூடிய என் பிரபு ராமசந்திரன் அபாரமான அதி சோபையுடன் பிரகாசித்தார். அந்த உத்தம புண்ய காக்ஷியை மஹா பாக்ய வசமடைந்த வானரோத்தமர்கள் ஜாம்பவான் போன்ற கரடிகள் ஆனந்தக் களிப்புடன் பார்த்து, சந்தோஷம் கொண்டு, ஸுகத்தின் ஸார

மாக விளங்கும் ரகுபதிக்கு, சீதா நாயகனுக்கு ஜயமங்கள கீதங்கள் பாடினார்கள். (அப்பேற்பட்ட சீதாராமனே, லக்ஷ்மண சீதா ராமனே தியாகராஜர் போன்ற உத்தம வாக்கேய காரர்களை முன்னிட்டு நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன்.)

(705)

[*தியானம்*

வால்மீகி த்யாகராஜ துளசிதாஸ பிரியா, ராமா சீதா, சீதா நாயகா, உங்களை அனந்தரம் ப்ரேமை பக்தியுடன் வந்தனம் செய்யும் மஹானுபாவர்களை முன்னிட்டு நான் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். பிரபோ, சீதாபதி, உங்கள் இருவர்களுடைய சந்திரவதனங்களைப் பார்த்துக் கொண்டு வேத சந்தஸ்களாகிற புருஷ ஸூக்த், ஸ்ரீ ஸூக்த, நாராயண ஸூக்த, விஷ்ணு ஸூக்தாதிகளால் மெய் சிலிர்க்கப்பாடி உங்களுடைய சிந்தனைகளிலே ஈடுபட்டு பிரும்மானந்தத்தை அடையும் நாரத, மார்க்கண்டேய, வாமதேவ, வஸிஷ்ட விஸ்வாமித்திர, சப்தரிஷிகளை முன்னிட்டு நான் அர்ச்சிக்கிறேன். ஹே ரகுவரா, ப்ருஹத், ரதந்திரம், வாமதேவம் என்கிற திரிஸாமங்களில் மனத்தைச் செலுத்தி, உங்களுடைய லாவண்ய குவியல்களைப் பார்த்து, ரசித்துக் கொண்டு, தன்ய மூர்த்தினர்களாக இன்புறும் வேத வ்யாஸ, பராசர, சுக பிரும்மத்தை முன்னிட்டுக் கொண்டு நான் பாடி ஆனந்த ஸ்துதி செய்கிறேன். ஹே ஸாமகான லோலா, உமா மஹேஸ்வரர்களாகிற மானஸ வனத்தில் சஞ்சரிக்கும் ஸலில மூர்த்தியே, உங்களுடைய ஸரோஜ பாதங்களில் மனம் என்கிற தாமரையை வைத்து ஸமர்ப்பணம் செய்யும் ஆஞ்சநேய லக்ஷ்மண பரத சத்ருக்னுதிகளை முன்னிட்டு நான் வந்தனம் செய்கிறேன். பதிதபாவனு, பராத் பரமே, நீங்கள்தான் பரமார்த்தம். நீங்கள்தான் நிஜமான நிர்வாணபதம். நீங்கள்தான் ஸ்ரேஷ்டதமமான தர்மம். உங்களுடன் ஸல்லாபம் செய்வதுதான் உத்தமமான தனஸம்பத். உங்களைப்பற்றிய மனத்துடன் ஸ்வரலயாதிராக மூர்ச்சனைகளால் பாடி ஆடி மனம் கசிந்து, மெய் சிலிர்த்து, வைத்த மாநிதியாம் மது சூதனேயே யலற்றி, சித்தம்

வைத்துரைப்பார் திகழ் பொன்னுலகாள்வரே, என்று குருகூர் சடகோபன் சொன்னபடி "வாழும் சோம்பர்களான" தியாகராஜ, ச்யாமா சாஸ்திரி, தீக்ஷிதர் ஆகியவர்களை முன்னிட்டுக் கொண்டு, உங்களுக்கு பலவித உபசார பூஜைகள் ஆராதனை நைவேத்யத்துடன் செய்யும் மஹாபாகவத உத்தமர்களை, முன்னிட்டுக் கொண்டு நானும் ராமார்ப்பணம் என்று ஆராதனை செய்கிறேன். ஹரிகுணங்களே ஜீவனம், ஹரிநாமகதைகளே மணி பூஷணம், ஹரிபகவானின் அத்புத செயல்களே எனக்கு சோபையைத் தரும், மஹத்வம் என்று தாஸ உள்ளத்துடன் வாழும் மஹா பாக்கியவான்களாகிற கருடன அனந்தன் விஷ்வக் ஸேனுதிகளேயும், த்வார பாலர்களையும், நகர பாலர்களையும், க்ஷேத்திர பாலர்களையும் புரம்வைத்து ராமாசீதா, மஹாலக்ஷ்மி நாராயணு, நானும் இன்புறுகிறேன். எப்பொழுதும் அஷ்டாக்ஷரம், த்வயம், சர்மஸ்லோகாதிகளை அனுஸந்தித்துக் கொண்டு, பகவானே பரமபோக்யம் என்று ஸதா நின்ற நிலையாக தெளிவுற்று, கண்ணனையும், ராமனையும், ஆதிப்பிராணுகிற நாராயணனையும், ஆயிரம் பாட்டுக்கள் பாடிய நம்மாழ்வார், நாதமுனிகள், ராமானுஜர். வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள், போல தெளிவுற்ற சிந்தையர்களை புரம் வைத்து, நான் வைஷ்ணவ ரீதியாக ஆயிரம் சுக்ருத பிரேமை என்கிற அஞ்சலி பந்தத்துடன் நமஸ்காரங்களைச் செய்கிறேன். பரம பாகவதர்களான மௌன வ்ரதர்களும், ஜபம், தபம், யக்ஞம் இவைகளில் தேர்ச்சி பெற்ற ஸனகஸநந்தன, ஆதித்யன், சந்திரன், ஸுரகிம்புருஷ, பிரஹ்லாத, நாரத தும்புரு, ஆஞ்சநேயர், பூஸுரர்கள் என்று அழைக்கப்படும் விப்ர ஸ்ரேஷ்டர்கள், பிரும்ம நாட்டமுள்ள ரிஷிகணங்கள், ப்ருகு மார்க்கண்டேயாதிகளின் பரம பாவனமானதும், சாஸ்வத மானதுமான சுகத்தை வாரி அளிக்கும் கமல பதங்களை முன்னிட்டுக் கொண்டு, சீதாராமா, உங்களைத் தியானித்து நமஸ்கரிக்கிறேன். உங்களுடைய நாம வைபவம், பராக்ரம சௌலப்ய, சௌசீல்ய வாத்ஸல்ய குணவிபவங்களை நினைக்க நினைக்க எனக்கும் ஸத் பக்தியையும் ஸந்தர்களுடைய உத்தம ஸம்பத்தையும், உங்களுடைய கல்யாண குணங்களைப் பஜிக்கும் ஆனந்த கீர்த்தனம் செய்யும் மஹாபாக்யம் கிடைக்கப் பெறு

## தேவதைகளின் ஸ்துதி

1. தீனபந்து தயாள ரகு ராயா தேவ கீன்னிஹி
    தேவன்ஹபரதாயா

    விஸ்வ த்ரோஹரத யஹ் கல காமீ நிஜ அக கயஹ
    குமாரககாமி

2. தும்ஹ ஸமரூப ப்ரும்ம அவிநாஸி ஸதா ஏகரஸ
    ஸஹஜ உதாஸீ

    அகல அகுண அஜ அநக அநாமய அஜித அமோக
    சக்தி கருணமய.

3. மீன கமட சூகர் நரஹரீ வாமன பரசுராம
    வபுதரீ

    ஜப் ஜப் நாத சுரன்ஹ துக்கு பாயோ நாநு
    தனுதரி தும்ஹம் நஸாயோ.

4. யஹ் கல் மலின ஸதா ஸுரத்ரோஹி காமலோப
    மத ரத அதி கோஹி

    அதம சிரோமணி தவபத பாவா யஹ் ஹம்ரேம்
    மன விஸ்மய் ஆவா.

5. ஹம் தேவதா பரம அதிகாரீ ஸ்வார்த ரதப்ரபு
    பக்தி விஸாரீ

    பவ ப்ரபாஹம் ஸந்தத ஹம் பரே அப்பிரபு
    பாஹி ஸரண் அனுஸரே.

கிறது. ராமா சீதா, நீங்கள்தானே பாகவத, ராமாயண, கீதை, ஸ்ருதிகள், சாஸ்திரம், புராண இதிஹாஸங்கள் ஆகிய எல்லா வற்றிற்கும் ஸாரம் என்று சொல்லி நிர்தாரணம் செய்த சௌனகாதிகளை புரம் வைத்து, உங்களை அமிர்த பாஷ்பங் களுடன் பாவராக தாளங்களால், ஸத் பக்தியுடன், ப்ரேமை. பாஷ்பங்கள் உதிர, கண்டம் தழுக்க, ராம சீதா பக்தியே சிறந்த பாக்யம் என்று நம்பி வாழ்ந்த துருவன், திக்பாலர்கள், பீஷ்மர், புரந்தர விடலர் ஆகிய மஹான்கள் அனைவரையும் நமஸ்கரித்து, இன்னும் அநேக மஹானுபாவர்களையும் முன் னிட்டு, விக்னேஸ்வரர், குஹப்பெருமாள் ஆகியவர்களை சகா வாகக் கொண்டு, நான் உங்களைத் தஞ்சம் என்று சொல்லிக் கொண்டு, ப்ரேமையுடன் சரணமடைகிறேன். நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.]

அப்பொழுது ரகுபதியின் ஆக்ஞையைப் பெற்றுக் கொண்டு மாதலி சீதா ராம பாதங்களை நமஸ்கரித்துவிட்டு, தனது இருப்பிடத்தை அடைந்தான். அதன் பிறகு தங்கள் காரியம் திருப்தியாக முடிந்ததைப்பற்றி சந்தோஷம் அடைந்த திக்பாலர்களுடன் கூடிய முப்பத்து முக்கோடி தேவர்கள் அவ்விடம் வந்தார்கள். அவர்களுடைய நன்றி கலந்த புகழ் கீர்த்திகள், பரமார்த்த வசனங்களாகவும் ஸ்தவராஜமாகவு மிருந்தன. அவர்கள் பிரேமையுடன் அஞ்சலி செய்து கொண்டு, புகழ ஆரம்பித்தார்கள். (706)

"தீனபந்து, தயாளு, ரகு குலத்தில் ஸ்ரேஷ்டமாக அவ தரித்த மணி பூஷணு, தேவாதிதேவா, எங்கள் மேல் கிருபை கூர்ந்து, திருத்தக்கச் செல்வமும் சேவகமும் கொடுத்து, எங் களுடைய வருத்தங்களையும் தீர்த்து மகிழ்ந்திருக்கும்படி செய் திருக்கிறீர்கள், மாலே மணிவண்ணு, விஸ்வத்திற்கு துரோக சித்தத்துடன் நடந்து வந்தவனும், காமியும், ஸ்வ அபிமானத் துடன் இருந்த ராவணன் தனது பாபங்களாலேயும், கெட்ட வழியில் சென்ற மனம் கர்மாக்களாலும் அழிந்து போனுன்." (707)

"ஸ்வாமி, தாங்களும் தேவியும் ஸமதர்சிகள். ஏற்றவன், இறங்கியவன், பிரபு வேலைக்காரன், மனிதன் மிருகம், பசு பக்ஷி ஆகிற வித்யாஸங்களைப் பாராட்டாத ஸமத்வம பாராட்டும்

கிருபாளுக்கள். நீங்களே பிரும்மாவாகிற நரஸ்ரேஷ்டர். நீங்களே என்றும் சாஸ்வதமாக விருக்கும் ஆதிப்பிரான் அவிநாசி. ஸ்வபாவமாகவே போக்யமாகவும், போக்தாவாகவு மிருக்கிறீர்கள். உங்களிடம் சத்ரு மித்ரன் என்கிற பாகுபாடு கிடையாது. யாவரிடமும் தாங்கள், தாமரை இலையில் உட்கார்ந்திருக்கும் நீர் பிந்துமாதிரி, பற்றுதல் அற்ற மனத்துடனும் உதார ஹ்ருதயத்துடனு மிருப்பவர். உங்களுடைய பரத்வ விபவங்கள் விவரிக்க முடியாதபடி அகண்டமாகவும், கல்யாண குணங்களின் சேர்க்கை ராசிக் குவியல்களாகவும், தோஷங்கள் அற்றவையாகவும், பிராகிருத குணங்கள் ஒன்றும் உங்களிடம் பற்ருமல், அவைகள் யாவற்றிற்கும் அளவு பரிமாணங்களால் உட்பட்டிருக்காதபடி நிர்குணராகவும், மற்றவர்களைப் போல ஜனியாத அஜராகவும், நாராயணராகவும், புருஷன் என்று சொல்லப்படும் இருப்பத்தாருவது தத்வமாகவும், பிரணவத்தின் அகாரமாகவுமிருக்கிறீர். ஹேபிரபோ, உங்களிடம் களங்கம் ஒன்றுமில்லை. எங்களிடம் காணப்படும் தோஷங்கள் கிடையாது. ஜரை, மூப்பு ரோகம், ஜனனம், மரணம், துக்கம் ஆகிய விகாரங்கள் உம்மிடம் கிடையாது. அஜிதை எனப்படும் வைகுண்டத்திற்கு அதிபதியாக விருக்கும் நீர் யாவராலும் தாண்டப்படாதவர். உம்முடைய ஆக்ஞைகளையும் சங்கல்பங்களையும் யாவரும் மீற முடியாது. உம்முடைய வீர்யமும் சக்தியும் கடல் போல ஆழமாகவும் கலக்க முடியாதபடி பரந்துள்ளது, அபராஜிதர், அநாமயர். ஸம்சாரமாகிற பிணியைப் போக்கும் கிருபாளு, கருணாமயர், அமோக சக்தி உள்ளவரும், காலத்தின் வேகத்தால் குன்ருத சக்தியையும் உடைய சாரங்க தன்வா''. (சக்கிரத் தாழ்வானை நடத்தும் கிருஷ்ண பிங்களர்.) (708)

[தியானம்

ராமா சீதா, நாராயணா, மஹாலக்ஷ்மி ஸமேத ஆதிப்பிரானே, உங்களை நான் சுக்ரர், அகஸ்திய, பிரஹஸ்பதி, ஏகதர், த்விதர் திரிதர், மதுரகவியாழ்வார் போன்ற மஹா பாகவதர்களை வணங்கி நான் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறேன், பிரபு, உலகம் என்கிற பூமி தாமரை மலராகவும், அந்த மலரில்

நடுவிலிருக்கும் கர்ணிகை மேரு மலையாகவும், அந்த பத்மத்தில் நடுவிலிருந்து கொண்டு, உலகங்களையும் தேவர்களையும் பலவிதமான பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கும் மானஸ புருஷரான பிரும்ம தேவருக்கும் பிரஜாபதியே, பத்ம கர்ப்பரே, ரத்ன கர்ப்பரே, ஸ்ரீ கர்ப்பரே, பூகர்ப்பரே, நாராயணரே, தாமோதரரே, நான்முகனும் நான் முகமாய் சங்கரனைத்தான் படைத்தான், யான் முகமாய் அந்தாதி மேலிட்டு அறிவித் தேனும் பொருளை சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து, என்கிறபடி, பிரபு, உம்மை வணங்காமல் மரீசி முதலியவர்கள்கூட சிறந்த பதத்தை அடையவில்லை. நீரே மனுவாகவும், ராஜ ரிஷிகளாகிற சிபிச்சக்கிரவர்த்தி, யயாதி, அஷ்டகன், நிருகன், மாந்தாதா, யவனுஸ்வன், ஹரிச்சந்திரன், ஸகரன், மஹாயசஸ் உள்ளனு னரவதன், குரு, ராஜரிஷியான முசுகுந்தன், கக்ஷேயு, கோஸலேஸ்வரனுகிற ஸுதாஸன், ஐலன், நளன், ப்ரதீபன், சந்தனு சாந்தனுவாகிற பீஷ்மர், இக்ஷ்வாகு, அனரண்யன், ப்ருது, பகீரதன், ரந்திதேவன், ஜனகர், ஆகிய ராஜரிஷிகளின் அம்சமாகவும், தர்மம், தானம், தவம் ஆகிற ராஜரிஷிகளின் ஆசரணைகளையும் ஒருங்கே உடைத்தவராக விருக்கிறீர். சிபி மஹாராஜனைப் போலவும், மனுவைப் போலவும், நாரதரைப் போலவும், வாழ்ந்த நீர் சரணுகதி தர்மத்தைப் பெரிதாக உத்தேசித்து ஆஸரயித்தீர். உம்மால் காக்கப்பட்ட ஸகல சேதன சேதனர்களும், பூமியும், தர்மங்களும், சாஸ்வதமாக விளங்குகின்றன. ஹே மஹரிஷிப்ரியா, உம்முடைய கிருபையின்றி எந்த ஜந்துவாவது மங்களத்தை அடைய முடியுமா? ஹே சிவகரனே, ஸ்ரீகரனே, தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் மஹா யுத்தத்திற்கு பின்பு ராஜ்யத்தை க்ஷத்திரிய தர்மத்தினுல் அடைந்ததும், சுகமடைந்தார்களா? அப்பேறபட்ட விஜயர்களான அவர்களுக்கும் நீ குருவாக விருந்து, பீஷ்மர், வியாஸர், நாரதாதிகளால் பலவித தர்மங்களை உபதேசிக்கச் செய்து, அதன் பிறகு நீயும் வைஷ்ணவ தர்மம் என்கிற பழ ரஸத்தைக் கொடுத்தாயே, ஹே ராமா, கிருஷ்ணு, கோவிந்தா, உம்முடைய தயையின்றி அவர்களால் சந்தோஷமாக வாழ முடிந்ததா? ஹே பாண்டவ சகயனே, வானரங்கள் கரடிகளின் நேதாவே, காரொளி வண்ணு, பாரில் நின்பாத மூலம்

பற்றிலேன், பரம மூர்த்தி, கண்ணனே கதறுகின்றேன். ஆரு ளர்களை கணம்மா அரங்கமா நகருளானே, பெருமாளே, கருநீல வண்ணனே, வேதப் பொருளே, நம்மாழ்வார் போன்ற ஆயிரம் தமிழ் பாடிய அருள் மறையின் பொருளே, தியாகராஜரின் தில கமே, ராமானுஜர் என் நெஞ்சில் நிற்கப்பாடி நிறுத்தி, என்னை ஆட்கொண்டு காதல் அடிமை பயனன்றே என்று அன்பனுய் மதுரகவியைப் போலச் சொல்லி, திருத்திப் பணி கொண் டானே. அவனே அடைந்தவர்களுக் கெல்லாம் அன்பன்; அன்பர் என்று நம்பினவர்களுக் கெல்லாம் வைகுந்தம் காண்பித்தானே, அப்பேறபட்ட ஆசார்யத்வம் என்கிற கருணையினுல் பகவத் விஷயத்திலும் துளிர்க்கச் செய்தபின்பு, புஷ்பிதமாக்கி, அனந் தரம் பலபர்யந்த மாக்குமாகிற பாகவத விஷயத்திலும், ஆசார்ய அபிமானம் பெருக, சர்ம பர்வத்திலும் நிலை நிறுத்தி உங்களுடைய ஸ்வரூபத்தை, காருண்யமய பிரபாவத்தை "உத்தாரகம்," என்று சொல்லாமல் என்ன சொல்லக்கூடும்? பிரபு, மணவாள மாமுனிகள் ஸாதித்தபடி, பக்தியில் அசக்த னுக்கு பிரபத்தி, பிரபத்தியில் அசக்தனுக்கு ஆசார்ய அபிமானம் தான் பிரபத்தியைப் போல உபாயந்திரங்களுக்கு அங்கமாய் ஸ்வதந்திரமுமாக விருக்கும். அது போல ஆசார்ய அபிமானம் கொண்ட என்னை, நரரத பிரியனை, ஆசார் யர்களின் வழியில் நடக்கும் ராமானுஜ தாஸனை, ஆண்டாளைப் போல, எவ்வளவு பிறவி எடுத்தாலும் உங்கள் தன்னேடு சேர்க்கையை விரும்புகிறேனே ஒழிய, உங்களுக்கு அடிமை பூண்டு வாழ்வதை ஒழிய, மற்றை நங்காமங்கள் எங்களுக்கு வேண்டாம், பிரபோ, கிருபை செய்யுங்கள். திருவேங்கட முடையானே, அலர்மேல் மங்கையே, எங்கள் ரங்கதாமே, திருமாலிருஞ் சோலையே.]

"பிரபோ, தாங்கள் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம, அவதாரங்களை எடுத்தீர். (தாங்கள் மத்ஸ்யாவதாரம் எடுத்து ஸத்ய வ்ரதன் என்னும் பாண்டிய தேசத்தின் ராஜ ரிஷியை, அகஸ்தியர் சிஷ்யனை, அனுக்ரஹித்தீர். அப் பொழுது நீர் ஸப்த ரிஷிகளுடன் கூடிய ஓடத்தை அவனுக்குக் காண்பித்து, எல்லா ஸ்ருஷ்டிக்கும் ஆதிபிஜங்களை வைத்து, மத்ஸ்ய ரூபியாகிற உம்முடைய கொம்பில் அப்படகைக்

கட்டி, நீர் அதை வஹித்துக் கொண்டு, அண்டகடாஹத்தையும், கடந்து செல்லத் துள்ளி விளையாடினீர். அசுரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட வேதங்களைக் காப்பாற்றிய நைகஸ்ருங்கர் அல்லவோ நீர்.) அதன் பிறகு தேவர்களையும் அசுரர்களையும் துணை கொண்டு மந்திர மலையை மத்தாக்கி, வாசுகியை நாணுக்கி, பாற்கடலைக் கடையும் போது மந்திரகிரி அழுந்திவிட எங்களுடைய வேண்டுகோளால் தாங்கள் பெரியதோர் ஆமை வடிவெடுத்து அம்மலையின் கீழ்சென்று அதனைத் தாங்கினீர். (பாரப்ருத், தேவப்ருக் என்கிற நாமாங்களை அடைந்தீர்.) ஹேஸுர ஹிதரே, ஹிரண்யாக்ஷன் என்னும் கொடிய அசுரனைக் கொல்லுவதற்காக எங்களுடைய பிரார்த்தனைக்கு இணங்கி, மஹாவராக ரூபியாக திருவவதரித்து, கடலினுள் பிரவேசித்து, பாதாள லோகத்தை அடைந்து, அந்த அசுரனைக் கொன்று, மாதவியாகிற பூமிப் பிராட்டியை உம்முடைய ஏகதந்தத்தில் மேலே கிளப்பி வந்தீரே; (யக்ஞவராஹா, யக்ஞேசா, யக்ஞபதியே,) உங்களுக்கு வத்ஸங்களாகிற நாங்கள் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். அதன் பிறகு ஹிரண்யாக்ஷன் கொல்லப்பட்டதை அறிந்த அவன் தம்பியான ஹிரண்யகசிபு உம்மிடம் கோபமடைந்து கோரமான தவம் செய்து அதன் பிரபாவத்தால் பிரும்மாவிடமிருந்து சிறந்த வரங்களைப் பெற்று எங்களை ஹிம்சித்த போது, நீர் பரம பாகவதனுகிற பிரஹ்லாதனை அவன் வயிற்றில் பிறக்கச் செய்தீர். நாரதருடைய சிஷ்யனுன பிரஹ்லாதனைக் காப்பாற்றும் நோக்குடன், பிரஹ்லாத பிரியன் என்கிற வ்யாஜத்தினுல் விஸ்வகர்ப்பராகி, ஸர்வ பக்த பிரியன் என்கிற நாமதேயத்தை அடைவதற்கு ஹேதுவாகிறதும், உருக்கின தங்கம் போன்றவைகளும், கோபத்தால் சுழலுகின்றதும், பீஷணமுமான கண்களை உடையவரும், பிடரி மயிர்களுடைய அசைவால் மறைக்கப்படுகின்ற ஆகாயத்தை உடையதும், விரிந்து பெரிய குகையைப் போல விளங்கும் முகத்தை உடையதும், வாள் போல நீண்டதும், கூர்மையான நாக்கு வெளியில் தொங்கிக் கொண்டு பயங்கரமான இரு தெற்றுப் பற்களை உடையதும், பளபளப்பான கன்னங்களுடனும், குட்டையானதும் பருத்ததுமான கழுத்தை

உடையதும், கோடி பாஸ்கரர்கள் ஏக காலத்தில் வெளிக் கிளம்பினாற் போல ஆகாசத்தை வ்யாபித்த உருவத்தை உடையதும், பெரும் மேகங்களைப் போன்ற அசுர, தைத்ய சைன்யங்களை ஹுங்காரத்தினால் விரட்டுவதும், பக்தர்களுக்கு பத்ரம் செய்யும் நரசிம்ம ரூபத்தை எடுத்துக் கொண்டு ஒரு தூணிலிருந்து அவதரித்த நரசிம்ம மூர்த்தியாவீர். அப்பேற் பட்ட லக்ஷ்மி நாராயணா, உங்களை நாங்கள் நமஸ்கரிக்கிறோம். ஹே விஷ்ணோ, காருண்ய ஸிந்தோ, அப்பொழுது எங்கள் அநிஷ்டத்தைப் போக்குவதற்கு தங்கள் பிடியிலிருந்து நழுவிய அந்த அசுரனை அவன் இஷ்டப்படி உமது இரு துடைகளில் படுக்க வைத்து, அவனுடைய மார்பில் நகங்களைச் செலுத்தி உடலைப் பிளந்து, அவனுடைய வயிற்றிலிருந்து பெருகின ரத்தப் பெருக்கை குடித்துக் குடித்து, கர்ஜனை செய்த அழகிய சிங்கரை, நாங்கள் அடிக்கடி நமஸ்கரிக்கிறோம். அப்பொழுது உம்முடைய அசைதலாலும், மஹாபூமியும், கடல்களும், மலைக் கூட்டங்களும் சிதறிய நக்ஷத்திரக் கூட்டங்களும் கொடுமையான நிலையை அடைந்ததல்லவா? ஆச்சரியம், ஆச்சரியம். அந்த சமயம் சரபம் என்கிற பிராணியையும் கொன்ற நரசிங்கரே, பிருமதேவனின் ஆக்ஞை யினால் பாலகனாகிற பிரஹ்லாதன் பயமில்லாதவனாய் தங்கள் திருவடிகளில் வந்து வணங்க, அவனுடைய ஸ்தோத்ரங்களுக்கு வசப்பட்டு, அவனுடைய தலையில் உம்முடைய பத்ரமான (மங்களகரமான) திருக்கைகளை வைத்து, அவனைத் தடவிக் கொடுத்தீரே, அப்பேற்பட்ட ம்ருத்யுவுக்கு மிருத்யுவான நர சிம்ம மூர்த்தியை, திரியம்பகரை நாங்கள் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறோம். ஹே பிரபோ, உவமையற்று விளங்கும் அழகிய சிங்கப் பிரானே, எங்குமுளனே, ஸர்வதோமுகரே, தங்கள் ஆக்ஞையை தங்கள் பாரிஷதன் அல்லாத வேறு யார்தான் மீறக்கூடும்? நரஹரி, உங்கள் சேவகர்களான எங்கள் மேல் நோக்குதியேல், எங்களுடைய சாபங்களும் பிழை களும் போக்கப்படும். நாங்களும் உய்விக்கப்படுவோம்.)

அதன் பிறகு பிரஹ்லாதனின் பௌத்ரனும், விஷ்ணுவின் த்வேஷியான விரோசனின் புத்ரனுமாகிற மாவலி பிரும்மாவிடமிருந்து வரமாக யாசிக்கப்பட்ட

பிரஹ்லாத விஷ்ணு பக்தியையும், சிந்தையையும் தரும சிந்தனையும் வரமாகப் பெற்ற மாவலி சக்கிரவர்த்தியின் அரசாட்சியில் எல்லோரும் விஷ்ணு பக்தர்களாக ஆனார்கள். தர்மம் குறைவர நடந்தது. அப்போது பிரஹஸ்பதி "நூறு அஸ்வமேதங்கள் செய்த எவனொருவன் மஹேந்திரப் பட்டத்திற்கு வருவானோ, அவனுக்குத்தான் புரோஹிதனாக விஷ்ணு எனக்கு நியமித்திருக்கிறார். இந்திரனை அச்சமுறுத்தி மஹேந்திர பட்டத்தை அபகரித்த மாவலிக்கு நான் புரோஹிதனாக ஆகமாட்டேன்," என்று சொல்லிப்போக, சுக்ராசாரியார் பலிக்கு புரோஹிதராக ஆனார். பிரஹஸ்பதி அதிதி தேவியிடம் சென்று இந்திரனுடைய துக்கச் செய்தியைச் சொல்லி, விஷ்ணுவை ஆராதிக்கச் சொன்னார். பகவான் அதிதி தேவிக்குப் பிரஸன்னமாகி, "அம்மா, நான் உனக்குப் பிள்ளையாகப் பிறந்து, இந்திரனுடைய துக்கத்தைப் போக்குகிறேன்." என்று சோதிவாய் திருவருளச் செய்த வாமனரே, உபேந்திரரே, மாவலி வேள்வியில் இந்திரனுக்காக மூவடி மண்தானம் வாங்கிய உருக்ரமா, ஆகாயத்தை அளாவி நின்ற ஏகபாதரே, கங்கையை உண்டு பண்ணின மஹா தீர்த்தரே, சுக்ராசாரியாரால் தடுக்கப்பட்டும் பலியினால் தானம் செய்யப்பட்டு, அந்த தானத்தின் பிரகாரம் பலியின் முடியில் மூன்றும் அடியாக ஏகபாதம் வைத்த திரிவிக்ரமரே, பலிக்கு அமோகமான வாத்ஸல்யத்தைக் காண்பித்த விஸ்வரூபரே, புண்டரீகாக்ஷரே, ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். அதன் பிறகு உலகத்தில் அழிப்பவர் யாரும் இல்லாமல் கொழுத்துத் திரிந்து கொடுமை இயற்றிவந்த க்ஷத்திரிய வம்சங்கள் யாவற்றையும் நாசம் செய்வதின் பொருட்டு, நாராயண மூர்த்தியாகிற நீர், ஜமதக்னி ரிஷியின் மனைவியான ரேணுகையிடம் இராமனாய், ரிசிகர் குலபூஷணனாக, ப்ருகு புத்ர வம்சத்தில் உதித்த பார்க்கவ ராமனாக அவதரித்தீர். ஸ்வாமி, தாங்கள் ஆததாயியாக அவதரித்த சமயம் தரணிதரரே, பரசுராமரே நீர் காஸ்யபருக்கு பூமியைத் தக்ஷிணையாகக் கொடுத்த க்ரோத்கிருத், அச்சுதரே, கர்த்தாவே, என்கிற பல நாமாக்களை அடைந்தீர். அப்பேற்பட்ட பரசுராம அவதாரம் செய்த உங்களுக்கு நாங்கள் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்

கிறோம். (பிராணதார்த்திஹரரே, ஸர்வக்ஞரே, சுசி, ஊர்ஜிதரே, இந்திரியங்களால் அறியப்பட முடியாத அதீந்திரரே, ஜகந்நாதரே, ஸுரஹிதரே,) எம்பொழுதும் உங்களையே தஞ்சம் என்று பற்றின உங்கள் தாஸர்களாகிற எங்களை துக்கங்களி லிருந்து காப்பாற்றி, அநேக அவதாரங்களை எடுத்து, எங் களுடைய அபீஷ்டங்களை, பூர்த்தி செய்திருக்கிறீர். பரிபூர்ண ராமா, பரம காருணிக உத்தமா, ஸாகேத அதிபா, உன் னுடைய ஸரஸிருஹ முகத்தையும், பங்கயத்தாள் முகத் தையும் ஒரு க்ஷணமும் தரிசனம் செய்யாமல் எங்களால் எவ்விதம் உயிர்தரிக்க முடியும்? பவஜீவன மோசிதா, ஜனக நந்தினியுடன் கூடிய ஸ்ரீதரா, உங்களுடைய அம்ருத கடாக்ஷங் களால் அல்லவோ நாங்கள் எங்களுடைய துக்கங்களை மறந்து ஆனந்தத்துடன் வாழ்கிறோம். முராரி, கோதண்டராமா, உங் களுடைய ரக்ஷையை அனவரதமும் பிரார்த்திக்கும் தேவர் களாகிய எங்களை மஹா ஆபத்துக்களிலிருந்து ஸதா காப்பாற்ற வேண்டும்.'' (709)

''ராவணனையும் அவனுடன்கூட மரித்த ராக்ஷஸர்களையும் தாங்கள் கொன்றுவிட்டு, பச்சாதாபப்படுவது சரியல்ல. பிரபோ, இவன் பாபங்களைச் செய்து, துஷ்டனுக விருந்து மலின ஹ்ருதயத்துடன் லோபத்தினுல் ஸுரர்களுக்கு த்ரோஹம் செய்து வந்தான். இவன் காமம், ஸ்வ அபிமதமாகிற ஸ்வா தந்திரியம், லோபம், மதம், கிரோதம், இவைகளால் மூழ் கடிக்கப்பட்டவனுக, பிறர்களையும் தேவர்களையும் ஹிம்சிக்க லானுன். சுத்த ஸத்வத்திற்கு பரம விரோதமான காமம் லோபம், மதம், க்ரோதம் ஆகியவைகளைக் கொண்ட விஸ்வத் ரோஹியான இவனுக்கும், பிரபு அதமர்களில் மஹா சிரோன் மணியாக விருக்கும் ராவணனுகிற மஹா பாதகனுக்கும் தாங்கள் கிருபை கூர்ந்து நிஜபதமாகிற வைகுண்ட பதத்தை அளித்திருக்கிறீரே, அதன் மர்மத்தை நாங்கள் எவ்விதம் அறிவோம்? அப்பேறபட்டவனுக்கும். உத்தம கதியைக் கொடுத்த மஹா கர்மரே, என்ன பாக்யத்தினுல் இவன் உம் முடைய திருஷ்டி கோசரத்திற்கு வந்திருந்து, உம்முடைய கட்டளையை மீறி நடந்த இவனுக்கும். நிக்ரஹம் என்கிற நிதியைக் கொடுத்து, தெய்வத் தன்மையை பெறும்படி அனுக்

ரஹித்த உம்முடைய லோகசாரங்கத்வத்தைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டுப் போகாமல் · எவ்விதம் இருக்க முடியும்? ஆச்சரியம், ஆச்சரியம் இதுவல்லவோ உமது கிருபையினுல் ஏற்படும் அத்புதம்! (710)

''தீனதயாளு, பக்த வத்ஸலரே, சரணுகத வத்ஸலரே, தேவர்களாகிய நாங்கள் ஸதா உம்முடைய ஆக்ஞையை பரி பாலிக்கும் பாரிஷிதர்களாக விருக்கிறோம். பிரபு உம்மிடம் சொல்வதில் எங்களுக்கு வெட்கம் ஏது? தாங்கள் எங்களை ஒவ்வொரு ஆபத்திருந்தும் காப்பாற்றிய உத்தாரணர் அல்லவோ? அப்பேற்பட்ட பரம தயாளுவாகிய உமக்கு எங் களுடைய மனோ ரதங்களும், எங்கள் பதவிகளில் உள்ள ஆசைகளையும், போகங்களில் விருப்பமுள்ள மனதும் இயற்கை பிரவிருத்தியும் ஸர்வக்ஞராகிய தங்களுக்கு முழுவதும் தெரிந் திருக்கும். ஹே விஸ்வ நாராயணு, உம்மிடம் பக்தி செய்து நிவிருத்தியை அடைவதற்குப் பதிலாக, பிரவிருத்தி தர்ம மாகிற எங்களுடைய பதங்களில் ஆசையுடன் நிலைபெற்ற மனத்தினர்களாக, உமக்குச் செய்ய வேண்டிய பற்றுதலற்ற பகவத் ஆராதனைகளையும் பரமா பக்தி என்று சொல்லப்படும் பாகவத தர்மத்தையும் அனுசரித்தல்லோம். இதனுல் நாங்கள் நிரந்தரமும் தூம மார்க்கத்தில் அகப்பட்டுக் கொண்டவர் களாகி ஜன்ம ம்ருத்யுவாகிற ஸம்சார சுழல்களில் அகப்பட்டுக் கொண்டு, ஸந்ததமும் உம்மிட மிருந்து தூர விலகிப்போய் விடுகிறோம். இப்பொழுது மஹத்தான ஆபத்துக்களிலிருந்து விடுபட்டு மீண்டும் பாக்ய வசத்தால் அர்ச்சராதி மார்க்க மாகிற பிரபுவினுடைய கோமளமான பாத சரணங்களை அடைந் திருக்கிறோம், ஹே ரகுநாதா, நீங்கள்தான் எங்களை பரிபாலிக்க வேண்டும். (தியாகராஜர் சொல்லியது போல, தேவர்கள் சொல்லுகிறார்கள்'' எங்களுடைய சரீரம், உம்முடைய நித்ய வாசஸ்தலம்; ரகுநாதா, ''எங்களுடைய ஸ்திர சித்தம் உங் களுடைய ரத்னமய சிம்மாஸனம் ரகுநாதா, எங்களுடைய உம்மைப்பற்றிய ஸ்வபதத்யானம் உம்முடைய அபிஷேகத் திற்காக வேண்டிய கங்கை ஜலம். ரகுநாதா, எங்களுடைய ப்ரேமை பக்தி உமக்கு வேண்டிய பட்டு பீதாம்பரம். ரகுநாதா, எங்களுடைய கீர்த்தனங்களாகிற உம்முடைய கீர்த்தி

பிரபாவங்கள், சௌலப்ய வாத்ஸல்யாதி குணங்கள் உமக்கும் ஜானகி தேவிக்கும் தேவைப்படக்கூடிய சந்தனம் போன்ற கந்தனங்கள், ரகுநாதா உங்களைப்பற்றிய ஹரிநாம புண்ய ஸ்ரவண கீர்த்தனைகள், நாம ஜபயக்ஞங்கள், ஸ்மரணைகள் ஆகிய எல்லாம் ஸ்வாமி, பாவராக ஸ்வரதாளத்துடன் பாடி ஆனந்திக்கும் பாமாலை, பூமாலைகளாகவும் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை, புஷ்பம், துளசி, பில்வம் மாதிரி உங்களை அர்ச்சிக்கும் ஸாதனங்கள்; ரகுநாதா, தீனரக்ஷகா, நாங்கள் பரம அபராதிகள். பக்தி யோகத்தையோ, கர்ம யோகத்தையோ, ஞான யோகத்தையோ சரிவரச் செய்திலோம். அப்பேற்பட்ட துஷ்கிருதங்கள், கெட்ட பாப, பாதகச் செயல்களை உடைய எங்களுக்கு பிரபத்தி மார்க்கம் இருக்கிறதே, பிரபோ, உமக்கும் ஜனக நந்தினிக்கும் தூபமாகவிருக்கட்டும்; உம்முடைய பாத பக்தி யிருக்கிறதே, உம்மையே அனன்ய கதியாகவும் அனன்ய சரண்யனாகவும், அக்கிசனர்களாகவும் அடைந்த எங்களுக்கு ஸ்வாமி, பிரபத்தி யிருக்கிறதே அது ஸதா எரிந்து கொண்டிருக்கும் நந்தா விளக்காகவும், தீபமாகவும், இருக்கட்டும், தசரத புத்ரா, ரகுநாதா, இப்பேற்பட்ட ஸுபூஜாபலம் உங்களுக்கு நைவேத்யமாகிற போஜனமாக விருக்கட்டும். ரகுநாதா, இப்பேற்பட்ட உபசார பூஜை, ஆராதனைகளால் ஏற்படும் ஆனந்த மிருக்கிறதே, பிரபு, சீதே, உங்களுக்கு ஏலா பத்ரம் ஸுஸம்யுக்தம் தாம்பூலமாக விருக்கட்டும்; உங்களையே பார்த்துக் கொண்டு, தியாகராஜாதிகளைப்போல, சந்தோஷத்துடன் தரிசனம் செய்து கொண்டு, ஸதா ஜீவனம் நடத்தும் எங்கள் வாழ்க்கை, ராமா சீதா, உங்களுக்கு எங்களால் காட்டப்படும் மஹா தீபாராதனைகளாக விருக்கட்டும்; ரகுநாதா, சீதாபதி, பூஜாவிதிகளுடன் ஸ்ரீ வித்யா ககனானந்தாதி, தியாகராஜ, தீக்ஷதர், ஸ்யாமா சாஸ்திரி, ஆகிய மஹா பாகவத உத்தமர்களால் பரம வினயத்துடன் செய்யப்படுவதும், நம்மாழ்வார் நாத முனி ஆளவந்தார், ராமானுஜ பந்தியில் வரும் வைஷ்ணவதாஸ்ய பக்தியுடன் வரும் எங்களை, விழுந்து விழுந்து சுக்ருத பிரணாமங்கள் செய்யும்) தேவர்களாகிற எங்களை மீண்டும் மீண்டும் பரிபாலிக்க வேண்டும், ''ரக்ஷி ரக்ஷி,'' ''பரிபாலய'' ''பரிபாலய,'' என்று தாழ்மையுடன்

பிரார்த்தித்துக் கொள்கிறோம். நீங்கள் செவி கொடுத்து எங்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
(711)

[தியானம்

ராமா சீதா, மஹாலக்ஷ்மி ஸமேத மஹா நாராயணா, பிரபோ, ஜகந்நாதரே, நீர்தான் ஆதிபிதா. பிஜ மவ்யயம். திரிதசஸ் ஸ்ரேஷ்டரே, ஸ்வயம் பிரபோ, உம்முடைய கிருபை யினால் எங்களுடைய அபராதங்களை க்ஷமை செய்ய வேண்டும். உம்முடைய ஸங்கல்பம் விபுத்வம், காலதேச வர்த்தமானங்கள் யாருக்குத் தெரியும்? சபலசித்தம் உள்ள எங்களைக் காருண்யத் துடன் அனுக்ரஹிக்க வேண்டும். ஸகல லோகங்களையும் காப் பாற்றும் கோபிஜன ப்ரியா, லோக நாதா, லோக பர்த்தா, உம் முடைய ஸம் ரக்ஷகத்தில் இருக்கும் எங்களுக்கு உங்களைத் தவிர யார் தஞ்சமாக விருக்கக்கூடும்? ஸத்ய பராக்ரமா, அசகாய சூரா, அனபாய ஸாஹஸா, உன்னுடைய ரூபம் அக்ஷரமாகவும், அனந்தமாயு மிருக்கிறது. பிராட்டியாகிற லக்ஷ்மியின் அவதாரங்களும் லீலைகளும் தேவரீருக்கு ஒத்த தாகவும் இருக்கின்றன. அவ்விதமில்லாத விடில், உம்முடைய லீலைகளும் சுவாரஸ்ய மற்றதாகவும், மஹாகீர்த்தி ஸம்பத் துக்களை அடையாத படியிருக்குமே. திருவுடையான் மணவாளா, திருவேங்கடவா, திருவரங்கத்தே கிடந்தாய், என் கிறபடி பிராட்டியுடன் சேர்ந்த நீ விபவாவதாரங்களிலும் அர்ச்சாவதாரங்களிலும் வ்யூஹம், அந்தரியாமி, வைகுண்டத் திலும் சகல அவஸ்தைகளிலும் பிரியவொட்டாத சேர்க்கை ஸம்பந்தத்தைப் பெற்று மேன்மையாக விளங்குகிறாய். உங்கள் இருவர்களுக்கும் காமமும் க்ரோதமும் முற்றிலும் கிடையாது. உங்கள் இருவர்களுக்கும் பக்தர்களின் மேல் ஏற்படும் பிரேமை அதிசயிக்கத்தக்கது. பொறுமையும் சரணாகதி ரக்ஷகத்வமும் சுத்தஸத்வமும் குற்றமுள்ளவர்களையும் ரக்ஷிப்பது இயற்கை யான ஸ்வபாவ மல்லவோ? இல்லாவிடில் சரயு நதியில் முழுகிய பரிஜனங்களையும், ராக்ஷஸிகளையும் காப்பாற்ற நீங்கள் முன் வருவீர்களா? உங்கள் இருவர்களுடைய மானிட தேகத்தில் காட்டிய நாடகம், காமத்திலும் தர்மத்திலும்

அதிகமான பற்றுதல் கொண்டதாலும், அதனால் யேற்படும் பிரிவும், துன்பமும் விஸ்லேஷ ஸந்தாபங்களும், குற்ற மற்ற வர்களையும், தியாகம் செய்வதும் நிச்சயமாக ஸம்பவிக்கும், என்று பலவாறு மனிதர்களுக்கு விளக்கவல்லவோ நீங்கள் இருவர்களும் மனுஷ்ய அவதாரங்கள் எடுத்துக் காண்பித் தீர்கள். இல்லாவிடில் பிரபோ, ஆத்ம ராமனாகிற தங்களிடம் மனத்தில் விகாரம், கோப தாபங்கள், மனக்லேசங்கள் எவ்விதம் ஏற்படும்? "ராஜ்யம் உனக்கு இல்லை; பரதனுக்கு நாங்கள் முடி சூட்டப்போகிறோம்; நீ காட்டுக்கு பதினான்கு வருஷங்கள் சென்று வா," என்று சொல்லப்படும்போது, உனது முகம் அப்போது அலர்ந்த தாமரையைப் போல விகஸித் திருந்தது, என்று வால்மீகியும் கம்பனும் சொல்லியிருக் கிறார்களே. அதே போல ஹனுமாரால் "தாயே, ராமனிடம் உம்மைச் சேர்த்து விடுகிறேன், ஜனககுமாரி," என்று சொல்லப் படும் போதும்; அக்னி பிரவேசம் என்றாய் உன் சொல்லிற்க் காக செய்யும் போதும், பிற்பாடு லவகுசலர்களின் முன்பு சீதாதேவி, பூமியாகிற மாதவி தேவியைப் பிரார்த்தித்த போதும், பகவானுக்கு என்பிராட்டி மனோனுகூலையாக விருந்தாளே ஒழிய வேறில்லை. அவள் பார தந்திரயத்துடன் கூடிய அனன்யார்ஹசேஷத்வ வ்ரதம் பூண்டு ஸர்வஸ்வ தந்தரரான பகவானை அடைந்தாளே ஒழிய வேறில்லை. அதில் அல்லவோ உங்கள் இருவர்களுடைய சுத்தஸத்வம் நிரூபிக்கப் படுகிறது, நஜீவேயம் க்ஷணமபி, என்று சொல்லக் கூடிய சீதையும், பத்து மாதங்கள் முதலிலும், பிற்பாடு பத்தாயிரம் ஆண்டுகள் பிரிந்தும் வாழ்ந்தாள். ஆனால் பக்தவத்ஸலனான ராமன் லக்ஷ்மணனை விட்டு அரைப் பகல் நேரம்கூட வாழ ஸம்மதிக்கவில்லை. இதிலிருந்து ராமனுடைய தியாகமும் (குற்றமற்ற சீதையையும் லக்ஷ்மணனையும் தள்ளி விடுவதும்,) சிறந்ததாகத் தானிருக்கிறது. இவைகளை எல்லாம் மாய நாடகமின்றி நடத்திக் காட்டிய ராமசீதாவை, கால சக்கிரம் போல, கோதண்டத்தைத் தரித்திருக்கும் கோதண்ட ராமனுக்கும் ஜானகி பிராட்டிக்கும் ஸமமாக யார் இருக்கக் கூடும்? இதனால் தான் சுகர், வால்மீகி, தியாகராஜர், நம்பூதிரி பட்டர் உங்களுக்கு ஸமம் நீங்களே தான் என்று சொல்லு

# பிரும்ம ஸ்துதி

1. ஜய ராம ஸதா சுகதாம ஹரே ரகுநாயக ஸாயக
   சாபதரே
   பவ பாரன தாரன ஸிம்ஹ ப்ரபோ குணஸாகர்
   நாகர் நாதவிபோ.

2. தன் காம அநேக அநூப சவீ குண காவத்ஸித்த
   முனீந்தர கபீ
   ஜஸு பாவன ராவண நாக மஹா கக நாதஜதா
   கரி கோபகஹா.

3. ஜனரஞ்சன பஞ்சன ஸோக் பயம் கதக்ரோத
   ஸதா ப்ரபு போதமயம்
   அவதார உதார அபார குணம் மஹிபார பிபஞ்ஜன
   க்யானகனம்.

4. அஜ வ்யாபக மேக மநாதி ஸதா கருணாகர
   ராம நமாமி முதா
   ரகுவம்ச விபூஷண தூஷண ஹா க்ருத பூப
   விபீஷண தீனரஹா.

5. குணக்யான நிதான அமான அஜம் நிதராம
   நமாமி விபும் விரஜம்
   புஜதண்ட ப்ரசண்ட பிரதாப பலம் கல
   விருந்த நிகந்த மஹாகுஸலம்.

6. வினுகாரண தீனதயாள ஹிதம் சபிதாம்
   நமாமி ரமாஸஹிதம்
   பவதாரன காரண காஜ் பரம் மனஸம்பவ
   தாருண தோஷஹரம்.

7. சரசாப மனோஹரத்ரோண் தரம் ஜலஜாருண
   லோசன பூபவரம்
   சுகமந்திர சுந்தர ஸ்ரீரமணம் மதமார
   முதா மமதா ஸமனம்.

8. அனவத்ய அகண்ட நகோசர கோ ஸப்ரூப
ஸதா ஸப்ஹோ இ நகோ
இதி பேதபதந்தி நதந்தகதா ரபி ஆதப் பின்ன
மபின்ன ஜதா.

9. க்ருத க்ருத்ய விபோஸப் வானரயே நிரகந்தி
தவானன ஸாதரஏ
திக ஜீவன் தேவ சரீர ஹரே தவபக்திம் பிஞ
பவ பூலி பரே.

10. அப் தீன தயாள தயா கரியே மதி மோரி
பிபேத கரீ ஹரியே
ஜேஹி தே விபரீத க்ரியா கரியே துக்கஸோஸுக்
மானி சுகீ சரி ஏ.

11. கல் கண்டன மண்டன ரம்ய சமா பதபங்கஜ
ஸேவித சம்புஉமா
ந்ருப நாயகதே வரதானமிதம் சரணும்புஜ
ப்ரபு ஸதா சுபதம்.

கிறார்கள், அப்பேற்பட்ட ராமா சீதாவுக்கு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.]

ஸுரர்களும், சித்தர்களும் ஸகலரும் அஞ்சலி செய்து கொண்டு பகவானையும் பிராட்டியையும் நமஸ்கரித்துக் கொண்டு அவரவர்களின் ஸ்தானங்களில் இருந்து கொண்டிருந்தார்கள். அந்த காக்ஷியைப் பார்த்த கமலாஸனரான பிரும்மா அத்யந்த பிரேமையுடன், புளகாங்கித சரீரத்துடன், சாவித்திரி மந்திரத்தின் தேவதையான சரஸ்வதியை பக்கத்தில் வைத்துக் கொண்டு (ஸ்ருதி கீதை மாதிரி) பகவானைப் புகழ ஆரம்பித்தார். (712)

''பிரபோ, ராமா, ஸதாளங்களுக்கு சுகத்தை கொடுக்கும் உன் ராம நாம உச்சரிப்பு கொடுக்கட்டும் பிரபோ, துக்கங்களை நாசம் செய்யும் ஹரி பகவானே. ரகுநாயகா, கோதண்டராமா, உங்கள் இருவர்களுக்கும் ஜயங்களும் மங்களங்களும் ஸதா யேற்படட்டும். ஜன்ம மிருத்யு ஆகிற யானைகளுக்கு தாங்கள் சிம்மம் போல விருக்கிறீர். ஜகந்நாதரே, ஸர்வ வியாபகரே, ஆதிதேவா, (அயோ நிஜரான நாராயணு, அஜரே,) தாங்கள் காமம் க்ரோதம் யாதுமற்ற ஸர்வதோஷ ரஹித, சுத்த ஸத்வமான கல்யாண குணங்களின் ராசிக்குவியலாகவும், சமுத்திரமாகவும், அது மாத்திரமில்லை, தாங்கள் ஸர்வ ஸமர்த்தராகவிருக்கிறீர்கள். (சரணுகதர்களையும், பயமடைந்தவர்களையும் காப்பாற்றுவதில் தர்ம ஸ்வரூபியாகவும், ஸர்வ ஜீவராசிகளிடத்திலும் ஸமதர்சனம் என்கிற பாரபக்ஷ மில்லாமையானதும், தாழ்ந்த பிறப்புள்ளவர்களிடத்திலும் ஏகமான சௌலப்ய வாத்ஸல்ய குண ஐஸ்வர்யங்களையும், ஸத்யம் என்கிற ஸர்வபூத ஹிதைஷியாக விருப்பதும், ஸத் புருஷர்களுக்கு உபகாரம் செய்வதும், ஸர்வ ஸமர்த்தர்களாகவும் சொன்ன சொல் தவருத உங்கள் இருவர்களுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை நாங்கள் எவ்விதம் வர்ணிக்கக்கூடும்? (713)

''சீதாராமா, உங்கள் இருவர்களுடைய ரூப லாவண்யங்கள் மனோ ரஞ்சிதமாகவும், பரம ஏகாந்திகளையும் மோஹம் அடையச் செய்விக்கிறதாகவும் அனுத்தமான அழகு குளிர்ச்சி, பிரகாசம், த்யுதி தேஜஸ்களாய் நிறம்பப் பட்டதாகவும், அநேக காம தேவர்களின் மஹத்வங்கள் கொண்ட பரம திவ்ய மங்கள

விக்ரஹங்களாக அமானுஷ்ய அழகுடன் சிறந்து விளங்குகின்றன. உம்முடைய திவ்ய மங்கள விக்ரஹ அழகுகளுக்கு ஏற்ப, கல்யாண குணங்களும் அபாரமாகவும், சித்தர்கள் முனீஸ்வரர்கள், கவிகள் யாவரும் பாவராக ஸ்வர லயங்களுடன் கீர்த்தனம் செய்வதற்குத் தகுந்தபடி யிருக்கின்றன. உம்முடைய சுந்தரமான சரித்திரமும் பரம பாவனமான கீர்த்தி புகழ்களும், விமலமாகவும், அழியாத மாசற்ற சுத்த ஸத்வ கீர்த்திகளாகவும் விளங்குகின்றன. பிரபு, தாங்கள் ராவணன் என்கிற காமக்ரோத லோபமாகிற மஹாசர்ப்பத்திற்கு கருடனைப் போல விருந்து அவைகளை நாசம் செய்து, அவனையும் ஸத்பதத்திற்கு அழைத்துச் செல்லும்படி ஹேதுவாக விருந்தீர்கள்.'' (714)

''லோக விக்ராந்தரே, ஸர்வலோக நாயகா, உம்மை அடைந்த ஆஸ்ரிதர்களை மஹா ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றி அவர்களுடைய பாபசோக பயங்களை அகற்றி, தனது கோபத்தையும்ஸதா அடக்கிக் கொண்டு, ஜிதக் ரோத ராகவுமிருக்கிறீர். அது மாத்திரமா? ஸ்வாமி, ஞானமயம் போதமயம், நித்ய சுத்த புத்த முக்த சச்சிதானந்தமய பரமாத்மாவாகவும் விஸிஷ்டரான ஸாதுவாகவும் ராம முனிவராகவும் காணப்படுகிறீர். ஸ்வாமி, தங்களுடைய இந்த ராம அவதாரம் மிக்க ஸ்ரேஷ்டமாகவும், பரம அபராதியான ராவணனுக்கும் அபயப்ரதானம் கொடுக்க ஸித்தமா யிருக்கிறேன் என்று சொல்லிய உதார ஹ்ருதயத்துடன் கூடிய சிறந்த ஞான ஸ்வரூபியாகவும் யாவரும் உபயோகித்துக் கொண்டாலும் அமுதக்கடல் போல ஒரு நாளும் வற்றிப்போகாத கல்யாண குணஸாகரமாகவும், பூபாரத்தைப் போக்க வந்த உத்தாரணராகவும், மறைந்து மானிடராக அவதரித்தபோதிலும் இந்திர கர்மா என்று சொல்லும்படி ராவணவதத்தால் தம்முடைய பரஸ்வருபத்தை வெளிக் கண்களுக்குக் காட்டும் அபார பரத்வ விபவங்களைக் கொண்ட ஜனார்த்தனராகவும் ''ஞானக் கடல் போல ஆழ்ந்த ஞான ஸ்வரூபியாக விருக்கிறீர்.'' (715)

''நீர் அவதாரம் எடுத்தபோதிலும் அஜர். மற்றவர்களைப் போல ஜனி யாதவர், ஸ்வதந்திர ஸங்கல்பத்தினால் மட்டும் அவதரிப்பவர். ஸாவ வ்யாபகரமான விஷ்ணுபகவான்; எங்களைப் போன்ற பிரும்மாதி தேவர்களாலும் ஏக ஸ்வாமியாக

அறியப்படும் அஜாதி, சாஸ்வதர். எக்காலத்திலும் யௌவனப் பருவமும், தேஜஸ்ஸும், குன்றுததும், நித்யமான துமான திவ்ய மங்கள விக்ரஹத்தை உடையவர். ஸம்ஸார பயங்களிலிருந்து காப்பாற்றும் கருணாமய ரஸமுள்ள ஸ்ரீ ராம சரணங்கள் சந்தோஷத்துடன் நமஸ்கரிக்கிறோம். ஹே பிரபு, ரகுவம்ச பூஷண, கரதூஷணாதிகளை வதம் செய்த பீமபராக்ரமரே, தோஷமில்லாதவரே, நீர் ஆஸ்ரிதனும். தீனனுமாகிற விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தைக் கொடுத்து தர்ம பரிபாலனம் செய்தீர்,'' (716)

''ஹே கல்யாண குணங்களுக்கும், சௌலப்ய, வாத்ஸல்யாதி குணங்களுக்கும் பொக்கிஷமாக விளங்கும் குணநிதான் என்று சொல்லும்படி பொக்கிஷமாக விருக்கிறீர்; பக்தர்கள் விஷயத்தில் உம்முடைய உயர்வை நினையாத அமானி; அதனால் அல்லவோ ஆஸ்ரிதர்களின் இடையூறுகளை விலக்கும் அஜர் என்று சொல்லப்படுகிறீர். ஹிரண்ய கர்ப்பர் முதலிய ரூபங்களாக விருக்கும் விபு. உம்மை அடுத்தவர்களுக்கு குற்றமில்லாத விரஜா மார்க்கத்தைக் காட்டும் விரஜர். மாயைக்கு ஸ்வாமி யாதலால், விகார மற்றவர். உம்முடைய புஜதண்ட பிரதாபங்களும், அமித விக்ரமம் கொண்ட உம்முடைய பிரசண்டமான பலமும் ரொம்ப பிரதாப முடையவை. அப்பேற்பட்ட பலத்தினால் துஷ்டர்களை நிக்ரஹம் செய்வதில் உமக்கே ஏற்ற நிபுணத்வம் பரம க்ஷேமத்தை எல்லோருக்கும் ஸகல புவனங்களுக்கும் விளைவிப்பதாகவு மிருக்கிறது.'' (717)

''உம்முடைய நிர் ஹேதுக கிருபை யிருக்கிறதே, ஸ்வாமி, அது ரொம்ப புகழத்தக்கது. ஒருவித காரணமுமின்றி பூஜை முதலிய சிறிய உபசாரத்தை பரம உபசாரமாக நினைக்கும் நீர், பகவானுக்கு அடிமை பூண்டிருப்பதே ஜீவாத்மாக்களின் இயற்கை என்பதை மறந்து, அவித்யை, மோஹம், லோபாதிகளால் ஸ்வ அபிமானம் அடைந்த ஆத்ம திரோஹிகளுக்குக்கூட (தற்செயலாக என் பெயரைச் சொன்னான், என் ஊரைச் சொன்னான், என்று ஏதாவது ஒன்றைச் செய்வதால்,) அதைப் பெரும் பேருதவியாக நினைத்து, மறக்காமல் ஸதா அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் தயாளு, கிருதக்ஞர்

அல்லவோ தாங்கள்? (ஸுர ஹிதரே, பிராம்மண, கோஹிதரே,) ரமாரமணரே, சீதாபதி, அச்யுதரே,) (நித்யமானதும் நபுனரா வர்த்ததே, என்கிற சப்தத்தால் அறியப்படுவதும், ஸனகாதி யோகிகள் ஸதாபார்த்துக் கொண்டும் தியானித்துக் கொண்டும், புண்ய பாபங்களின் கூட்டங்கள் க்ஷயம் அடைந்த பிறகு, பிரணவர் என்கிற சப்தத்தினுல் அறியப்படும் உமக்கும் ஜீவாத்மாக்களுக்குமுள்ள நித்ய ஸம்பந்தத்தை அறிவிக்கும் பிரணவ மந்திரமே; அதனுல் ஸித்தி பெற்று உமது பாதங்களை வந்து அடையும் தத் விஷ்ணே; பரமம்பதம் என்கிற தங்களுடைய பதத்தை நாங்கள் ஸ்மரிக்கிறேம்.) எங்களுடைய ஸம்சார தாபங்களிலிருந்து விடுபடக்கூடிய ஜகத் ஸேதுவே, தாங்கள் மஹத்திற்கும், அதற்கு காரியமான அஹங்காரத்திற்கும், அதற்கு காரணமான பஞ்சதன் மாத்திரைகளுக்கும் அவைகளின் காரியமான பஞ்ச பூதங்களுக்கும், அவைகளுக்குக் காரணமான பிரும்மாண்டங்களுக்கும் அவைகளுக்கும் காரிய பூதரான பிரஜாபதி, அவருடைய புத்ர பௌத்ராதிகளுக்கும்; அதேமாதிரி ஜகத் காரணமான பிரும்மாதிகளுக்கும் மேல்பட்ட பரமேஸ்வரரே, பிரகிருதியாகிற காரண ரூபத்திற்கும், காரிய ரூபமாகிற ஜகத்திற்கும் மேல் இருக்கும் தங்களை நாங்கள் அடிக்கடி நமஸ்கரித்து எங்கள் மனம், செய்கை, வாக்கு ஆகியவைகளில் தோன்றும் தோஷங்களை நாசம் செய்வதற்காக நாங்கள் உங்கள் இருவர்களையும் அடிக்கடி அடிக்கடி நமஸ்கரிக்கிறேம்.'' (718)

''தாங்கள் கோதண்ட ஹஸ்தனுகவும், பாணத்தை கையில் தரித்துக் கொண்டும், அம்புராத்துணி நிறம்ப பல பாணங்களை மனேஹரமாகத் தரித்துக்கொண்டும், எங்களுக்கு ஸதா ரக்ஷகத்தை கொடுத்தவராகவும் இருக்கிறீர். பிரணதார்த்தி ஹரரே, ஜலத்தில் உண்டாகும் செந்தாமரையைப்போல கண்களை உடையவரே, (தங்களுடைய செங்கண் எங்கள்மீது படும் போது, திங்களும் ஆதித்யனும் சேர்ந்து உதித்தாற்போல, எங்களுடைய பாபங்களும் பயங்களும் நாசமாகின்றன. கருணையினுல் தங்களுடைய கண்கள் கசங்கப்பட்டிருப்பதுபோல விருக்கின்றன.) ராஜ ரிஷிகளில் மிக்க ஸ்ரேஷ்டமான ரகோத்தமா, சுகங்களைக் கொடுப்பதில் கோயில் போலவும்,

அழகான திவ்ய மங்கள விக்ரஹம் படைத்த ஸ்ரீ தேவியின் சுந்தர மணாளனாகவுமிருக்கிறீர். உம்மையும் பிராட்டியாகிற லக்ஷ்மி தேவியையும் ஸ்துதி செய்வதால் அஹங்கார, மமகாரங் களும், துஷ்காமங்களும், தகாதவிடத்தில் ஆசை யேற்படுவதும், பொய்யானதும் துர்பலன்களை அளிக்கக்கூடிய ஸர்வஸ்வத ந்திரத்வம் என்கிற பகவானிடம்கூட பிணக்குதலையும் நாசம் செய்வதாக விருக்கின்றது.'' (719)

"குற்றமற்ற ராமா, எல்லா பிராணிகளுக்கும் நாராயண ராகிய நீர்தான் ஸர்வ வியாபகராகவும், சூக்ஷ்ம ஆத்மாவாகவும் இந்திரியங்களுக்கும் புலப்படாத அதோக்ஷஜராகவும் இருக் கிறீர். ஹே ப்ருஸ்னிகர்ப்பரே, ஸர்வ ஸ்வரூபரே, உலகங்கள் பிரளய காலத்தில் உம்முடைய வயிற்றிலிருந்தன. (நாபிக் கொடியிலிருந்து பிரும்மாவாகிற நான் உண்டானேன்.) எல் லாப் பிராணிகளையும் இயக்கச் செய்பவர் நீர்தானே. அவர் களுக்குள் ஸம்பந்தப்படாமல் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறவரும், ஸாக்ஷியும் நீரோ. அவ்விதமிருந்தும் பிரபு, நீர் மனம் கொண்டு கிருபையுடன் ஸங்கல்பித்தால் திருஷ்டி கோசரத்திற்கு அகப் படுகிறீர். அவ்விதம் கிருபையும் ஸங்கல்பமும் ஏற்படாவிடில் நீர் பரம துர்லபராகிவிடுகிறீர். அதனால் யாவராலும் முழு வதும் உம்மை அறிய முடிகிறதில்லை. உம்முடைய ஸ்வ ரூபத்தை முற்றிலும் அறிந்தவர்கள் உம்முடைய பக்தர்களின்றி வேறு எவர்களுமில்லை. வேதங்கள் அதனால் உம்முடைய நிஜ ஸ்வரூபத்தை வர்ணிக்க முடியாமல் அனுமானமாகவும் அடை யாளங்களால் அறியப்படக்கூடியதாகவும் கோஷிக்கின்றன. இதுமாதிரி புகழ் வசனங்கள் வெறும் கற்பனைகளோ, வீண் பேச்சுக்களோ இல்லை. எவ்விதம் சூர்யனும் சூர்யகிரணங் களால் ஏற்படும் சூடு, பிரபை, வெப்பம் தனித் தனியாகத் தோன்றினாலும், ஒரே வஸ்துவாக ஸ்வரூபநிலையாகத் தோன்று கிறதோ, அதுபோல அனந்தராகிய நீர் எங்கும் வ்யாபகராகவும் ஊடுருவி நின்று ஸகல சேதன சேதனங்களிலும் உலகத்திலும் அமர்ந்திருப்பதாலும் பின்னமாக காணப்பட்டாலும், வாஸ்தவத் தில் பின்னமில்லாத ஒரே ஸ்வரூபமல்லவோ நீர். அதனால் அல்லவோ நீர் விஷ்ணுவாகச் சொல்லப்படுகிறீர்.'' (720)

"வ்யாப்ய நாராயணா, இங்கு உம்முடன் கூடியிருக்கும்

வானரங்கள் மஹா பாக்யவான்கள். கிருதகிருத்யர்கள். உமக்காக வாழ்ந்து உம்முடைய கைங்கர்யத்தை உம்முடைய ப்ரீதிக்காக அர்ப்பணம் செய்த ஸாத்விகதியாக புருஷர்கள், அது மாத்திரமா, ஸ்வாமி, அவர்கள் உம்மிடம் நிரவதிசய பக்தியுடன் ஸதா சந்தோஷத்துடன் உம்முடைய முகபங்கஜத்தை அமிர்த பானம் செய்வதுபோல, ஸதா தர்சனம் செய்துகொண்டு, எங்களைப் போன்ற ஜீவர்களின் திருப்தியைக் காட்டிலும் அதிகமான திருப்தியை அடைந்த மஹா புண்யசாலிகள். அவர்கள் மிக்க மரியாதையுடன் ஸமஸ்த ஸம்ஸ்காரங்களுடன் அல்லவா தங்களுடைய முகமண்டலத்தைப் பார்த்த வண்ண மிருக்கின்றனர். ஹரிபகவானே, எங்களுடைய அமரத்வம் கொண்ட சரீரம், அதிகாரத்வம் கொண்ட ஜீவனம் மிக்க தாழ்ந்ததாகவும், கவலைகள் உள்ள ஜீவன யாத்திரையாகவும் இருக்கின்றது. அவ்வித மிருந்தும், ஸதா உம்மை சரணமடைந்து, வாழும் ஸத் பக்தியுடன்கூடிய வினயத்துடன், அடக்க சீலத்துடன் வாழ்ந்து வரும் ஜன்ம மாகவுமில்லை. அதனால் அன்றோ சம்சார சுழல்களில் நாங்கள் விழுந்து அடிக்கடி தாபப்படுகிறோம்." (721)

"தீனதயாளு, இனிமேலாவது உம்முடைய பரம க்ருபையால் என்னுடைய விபரீதே பேத ஞானத்தையும் அஹங்கார ஸ்வ ரூபத்தையும் போக்கி மிக்க சந்தோஷத்துடன் நானும் உம்முடைய பக்தி கோஷ்டிகளில் சேர்ந்தவன் என்றும்; உம்முடைய பாததூளிகளை ஸதா பஜிக்கும் பாக்கியங்கள் இப்போதும் எப்போதும் ஏற்படுவதற்கு, விபரீத கர்மங்களையும் சங்கல் பங்களையும், துக்கத்தையும், உம்மிடத்திலிருந்து தூர பிரிக்கும் விபரீத மதியையும் ஒழித்து உம்முடைய பரமானந்த ஸ்வரூபத்தை அடைவதற்கு எங்கள் பால் கிருபை செய்ய வேண்டும். ஹே ராம கிருபாளு, சீதா பிராட்டி, முனிமான்யரான உங்களுடைய நிஜபத சுபாஸ்ரயத்தை எங்கள் ஆனந்தத்திற்காக எங்களுக்கு அருள் செய்ய வேண்டும். அதனால் நாங்கள் உம்மை ஆனந்தத்துடன் அடைந்தவர்களாக ஆவோம். உம்முடைய ப்ரேமா பக்தியை அருள்புரிய வேண்டும். (722)

"உலகங்களை ரக்ஷிக்கும் பிரபோ, நீர் துஷ்டர்களை அடக்

க்வும், அவர்களுடைய அஹங்காரங்களையும், துஷ்கிருதங்களையும் நாசம் செய்வதற்காகவும் பூமியின் பாரத்தைப் போக்குவதற்காகவும், பொறுமையை விரதமாகக் கொண்டு அவதரித்திருக்கிறீர். உம்முடைய சுபமான சேஷ்டிதங்கள் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ரமணீயமாக விருக்கின்றன. அச்சுதரே, அதனால் அல்லவோ உம்முடைய பாத பங்கஜங்களை பகவானுகிற சம்புவும் உமையும் ஸதா ஆஸ்ரயித்த வண்ண மிருக்கிறார்கள்! சக்கிரவர்த்தி திருக்குமாரனாக அவதரித்து அரச குலத்திற்கே ந்ருப நாயகமாக விளங்கும் ரகுநாயகா, எனக்கு உங்கள் பாத பங்கஜங்களில் ஸதா கல்யாண தாயகமான அனன்ய பக்தி யேற்பட வேண்டும். என்கிற வரதானத்தை மிக்க கிருபையுடன் கொடுக்க வேண்டும், இதுதான் தங்களிடம் நான் கேட்கும் வரம்,'' என்று பிரும்மா ரகுநாதனின் திவ்ய சரணாம்புஜங்களில் விழுந்து நமஸ்கரித்து அஞ்சலி பந்தத்துடன் பிரார்த்தித்துக் கொண்டார். (அப்பேற்பட்ட பிரும்மாவிற்கும், சீதாராம லக்ஷ்மண, வானர கரடி சைன்யங்களுக்கும், சாவித்திரியை புரம் வைத்து நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) (723)

[*தியானம்*

நாராயணா, ராமா சீதா, காமேஸ்வரி, உனக்கு நமஸ்காரம் உனக்காக வாழ்ந்துவரும் என்னை நீ கட்டிக் காக்காமல், காண பித்துக் கொடுத்தாய். உன் இஷ்டப்படி எல்லாம் நடக்கட்டும். மாதவா ஸுவர்ணஸ்ரஜை, வெள்ளித் தாமரையை அணிந்தவளே, திவ்ய மாலைகளை அணிந்தவளே, உமா கௌரி, நீதான் எனக்குத் தஞ்சம்.]

இந்தவிதமாக பிரும்மா பிரேமையுடன் புளகாங்கித சரீரத்துடன் சீதாராமனுக்கு அநேக நமஸ்காரங்கள் செய்தார். சோபை சமுத்திரமாகிற ஸ்ரீராமனை தரிசனம் செய்துவிட்டு தன்னுடைய பரிபூர்ணமான லோசனங்களில் ஆனந்த பாஷ்பங்களை சொரிந்து கொண்டும், தன் நிலையை மறந்தார். (724)

அந்த சமயம் தசரதர் அவ்விடம் வந்தார். தன் புத்ரனாகிற ராமனைப் பார்த்ததும், அவருடைய கண்களில் கண்ணீர் ஜலம் வழிந்தது. பிரபு தம்பியான லக்ஷ்மணனுடன் அவரை

நமஸ்கரித்தார். பிதாவான தசரதர் அவர்களுக்கு பரம மங்கள ஆசீர்வாதங்களைச் செய்தார். (725)

ராமன் அவரிடம் சொன்னர், "பிரபு, இவைகள் எல்லாம் உங்களுடைய ஸத்ய ஆசரணைகளால் ஏற்பட்ட புண்யத்தின் பிரபாவங்கள். உம்முடைய அனுக்ரஹத்தினல் நாங்கள் ஜயிக்க முடியாத ராக்ஷஸ ராஜனை ஜயிக்க முடிந்தது." ("தந்தை சொல் மிக்க மந்திரமில்லை;" புத்ரன் தகப்பன் சொல் வசனத்தின்படி நடந்து இதுவரை எங்கும் கெட்டதில்லை;) அந்த தர்மத்திற்கு ஏற்ப, புத்ரனின் வசனங்களைக் கேட்ட தகப்பன் அதி ப்ரீதியை அடைந்தார். நேத்ரங்களில் கண்ணீர்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. அவருடைய ரோமாவளியும் தேகத்தில் புலகாங்கிதத்துடனிருந்தது. (726)

பிரபு ரகுநாதன் அவருடைய நிலையைப் பார்த்ததும், பழைய அப்ராகிருதமான அன்பையும் நினைவூட்டிக்கொண்டு, அவருக்குத் தேவையான ஸ்வரூப ஞானத்தை திருடமாகவிருக்கும்படி அளித்தார். சிவன் பார்வதியிடம் சொன்னர், "உமா, தசரதருக்கு பிரபு மோக்ஷமாகிற பதத்தை அளிக்கவில்லை. அவருடைய மனம் பேத ரூப பக்தியில் லயித்திருந்தது. தான் வேறு, பரமாத்மா வேறு என்கிற த்வைத உணர்ச்சியுடன் இருந்த படியால், பிரபு அவருக்கு கைவல்ய ஆனந்தத்தை அளிக்கவில்லை." (727)

"அவரைப்போல ஸகுண உபாஸிகள், (நம்மாழ்வார் சொல்லியபடி மிக்க விறை நிலையும் மெய்யாமுயிர் நிலையும் தக்க நெறியுஞ் தடையாகித் - தொக்கியலும் ஊழ் வினையும் வாழ்வினையுமோதும்,) என்கிறபடி மோக்ஷமாகிற வைகுண்ட பதத்தை அபேக்ஷிக்கிறர்களில்லை. அவர்கள் உபாஸிப்பது, ஜபிப்பது, எல்லாம் மாயை ரஹிதமான சச்சிதானந்த ஸ்வரூபமும் அதன்படி விளங்கும் அத்புதமான கல்யாண குணங்களுடன் கூடிய ஸகுண மூர்த்தியையே. எப்பொழுதும் இன்ப ஆனந்த நிலையில் பரந்தாமனின் அடிகளைப் புகழ்ந்து ஸ்மரித்து நின்றிருப்பதே. பிரபு ராமன் அவருக்கு அப்பேற்பட்ட ஸகுண உபாஸக பக்தியை அளித்தார்." அவ்விதம் அளித்த பிரபுவை தசரதர் அடிக்கடி நமஸ்கரித்து, தன்புத்ரனுடன் மீண்டும் ஏற்பட்ட சேர்க்கையினுல் ஆனந்தம் அடைந்தவராக தேவலோகத்

## இந்திர ஸ்துதி

1. ஜய ராம் ஸோபாதாம் தாயக ப்ரணத விஸ்ராம்
 த்ருத த்ரோண பரஸர சாப் புஜதண்ட ப்ரபல பிரதாப்

2. ஜய தூஷணாரி கராரி மர்தன நிசாசர தாரி
 யஹ் துஷ்ட மாரேஉ நாத பயதேவ ஸகல ஸநாத.

3. ஜய ஹரண தரணி பார மஹிமா உதார அபார
 ஜய ராவணாரி கிருபாள கிஏஜா துதான பிஹால.

4. லங்கேஸ அதி பல கர்வ கியே பஸ்ய ஸுர கந்தர்வ
 முனிஸிதத நர கக நாக ஹடிபந்தஸப் கேம் லாக்

5. பரத்ரோஹ ரத அதிதுஷ்ட பாயோ ஸோ பலு பாபிஷ்ட
 அப் சுனஹீ தீனதயாள ராஜீவ நயண விஸால

6. மோஹி ரஹா அதி அபிமான நஹிகோ மோஹி
 ஸமான்
 அப்தேகி ப்ரபு பதகஞ்ச கதமான் ப்ரத துக்கபுஞ்ச

7. கோஉ ப்ரஹம நிர்குண த்யாவ் அவ்யக்த ஜேஹி
 ஸ்ருதிகாவ்
 மோஹி பாவ் கோஸல பூஷ ஸ்ரீராம் ஸகுண ஸரூப

8. வைதேஹி அனுஜ ஸமேத மம ஹ்ருதய கரஹு நிகேத
 மோஹி ஜானியே நிஜ தாஸ தே பக்தி ரமா நிவாஸ.

9. தேபக்தி ரமா நிவாஸ த்ராஸ ஹரன ஸரண சுகதாயகம்
 சுக தாம ராம நமாமி காம அநேக சவி ரகுநாயகம்
 சுரவ்ருந்த ரஞ்சன த்வந்த பஞ்ஜன மனுஜ தனு
 அதுளித பலம்
 பிரஹ்மாதி சங்கர ஸேவ்யராம நமாமி கருணா
 கோமளம்

10. அப் கரி கிருபா பிலோகி மோஹி ஆயஸு தேஹு
 க்ருபாளு
 காஹ கரௌம் சுனி ப்ரிய வசன போலே தீனதயாள.

திற்குச் சென்றார். (728)

கோஸல தேச அரசனான ஸ்ரீராமன் ஜானகி, தம்பி லக்ஷ்மணனுடன் சேர்ந்திருப்பதைக் கண்ட மஹேந்திரன், இந்திராணி ஆகியவர்கள் பிரபுவின் அத்யந்த சோபைகளைக் கண்டு ஆனந்தித்து, அவர்களை வாய்விட்டு ஸ்துதி செய்ய ஆரம்பித்தார்கள். (729)

[*தியானம்*

ராமா, சீதா நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, நாராயணனே பறை தருவான், காரார் கடலை அடைந்திட்டி யிலங்கை புக்கு ஓராதான் பொன்முடி ஒன்பதோ டொன் றையும் நேராவலன் தம்பிக்கே நீள ரசிந்த ஆராவ முதனைப் பாடிப் பற, அயோத்தி வேந்தனைப் பாடிப்பற, என்று சொல்லி ஆண்டாளையும் விஷ்ணு சித்தரையும் புரம்வைத்து ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். ப்த்ரி நாராயணா, உன்னையும் நரோத்தமனாகிற பிரும்மாவையும், தேவி சரஸ்வதியையும் பகவான் வேத வியாஸரையும் நமஸ்கரித்து, உங்களை நமஸ் கரிக்கிறேன். சசிநிபானனையாகிற சீதை எவ்விதம் ராம தரிசனத்தைப் பெரியதாகக் கருதி, ஆஞ்சநேயரிடம் செய்தி அனுப்பினளோ, அதுபோல தர்ம பதத்திலிருக்கும் எங்களுக்கு ராம சீதா தரிசனம் கிடைக்குமா? அவர்களுடைய பரமப்ரீதி கிடைக்குமா? பாஷ்பங்கள் உதிர, கண்டம் தழுதழுக்க, ப்ரியரே, பர்த்தாவே, க்ஷணந்திரம் ராம தரிசனமில்லாவிடில் உயிர் தரிக்கமாட்டேன், என்று சொன்னளே சீதை, அது போல என்னுடைய ஆர்த்திகளை உம்மிடம் யார் சொல்லு வார்கள்? ஆண்டாளையும், விஷ்ணு சித்தரையும், அர்ஜுன னையும் நமஸ்கரிக்கின்ற எங்களுக்கு கிருஷ்ணன், ராமன், இவர்களுடைய பக்தியும் ப்ரேமையும், க்ருதக்ஞதையும், கிடைக்குமா? ஸதாசார்ய பக்தி கொண்ட எங்களுக்கு எவ் விதம் ஜனகருடைய பெண்ணாகிற சீதையின் திருவருளும், தாஸரதி கௌஸல்யா ராமனுடைய அனுவர்த்தியும் கிடைக்கும்? ஆஞ்சநேயரே, சிவசக்தியின் ஐக்ய ஸ்வரூபமே, தயை செய்ய வேண்டும்.]

"ஜயராம, ஜயசீதா, பரம சோபனமாக விளங்கும் தீப்த

மூர்த்திகளாகிற ராமா சீதா, (ஒருக்காலே சரணம் என்றோர்க்கு அபயம் அளிக்கும் ஸுவ்ரதரான தாசரத ராமா, பிரணதார்த்தி ஹரரே, நீதானே பாவங்களும் அவற்றின் பலன் களும் மிதமிஞ்சி வருந்துவதினால் களைத்துப் போன ஜனங் களுக்கு இளைப்பாறுமிடம்; என்று சொல்லும்படி விஸ்ராமர் என்று அழைக்கப்படுகிறீரே, (ஹ்ருஷீகேசரே,) யாருக்காக ஸ்ரீ கோதண்டத்தையும் பாணத்தையும் தரித்துக் கொண்டிருந் தாயோ, அந்த ஆயுதங்களினால் எங்களையும் ஸதா ரக்ஷிக்க வேண்டும். சார்ங்கதன்வா, உம்முடைய வீர பாஹுக்களான புஜபலங்களும் தேவ கார்யத்துக்கும், எங்களைப் போன்ற தீனர் களுக்கும் உபயோகப்படட்டும். (பிரபல பிரதாபங்களை உடைத்த நரசிம்மா, நரோத்தமா, நாராயணா, மஹாலக்ஷ்மி நாயகா,) சீதாராமா, உங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். உங்களுக்கு ஸதா ஜயங்கள் ஏற்படட்டும்." (730)

"தூஷணனையும், கரனையும் கொன்ற கரதூஷண ஹாரி, உம்முடைய அவதாரம் ராவணனையும் அவனுடன் கூடச் சேர்ந்தவர்களையும் மிகக் கொடிய சித்தமுள்ள ராக்ஷஸர்களை வதைப்பதற்காகவும், பூமியின் பாரத்தைப் போக்குவதற்காக வும் அல்லவோ ஏற்பட்டது. (பரபீடை, பரஹிம்சை, ஆகிய வைகளையே ஜீவனமாகக் கொண்ட) துஷ்ட ராக்ஷஸர்களை தாங்கள் வதைத்தது லோகத்திற்கும், தேவர்களுக்கும் பரம உபகாரமாக விருக்கிறது. (தேவ மாதர்களின் சிறையை விடுவிப்பதற்காக சீதாப் பிராட்டி தன்னையே சிறைப்படுத்திக் கொண்டாளே.) இப்பேற்பட்ட மஹத்தான உபகாரத்தை தேவர்களுக்குச் செய்து, லோக விரோதிகளை களைவதினால் உலகத்திற்கும், தேவர்களுக்கும் க்ஷேமகரமான கார்யங்களைச் செய்வதற்கும் அவதரித்த தேவநாதரே, (விஸ்வபாஹுவே), உமக்கும் சீதாபிராட்டிக்கும் ஸதா மங்கள ஜயங்கள் ஏற்படட்டும். இப்போது நாங்கள் ஸகல பயங்களிலிருந்து விடுபட்டு, நன்றாக ரக்ஷிக்கப்பட்டோம்." (731)

"மாதவா, மாதவீயாகிற பூமி பிராட்டிக்கு அருள் செய்ய வந்த ஜய ஹரண தரணி பார, உம்முடைய ஒவ்வொரு அவ தாரமும் நல்ல வழியில் நிகரற்று விளங்குவதாகவும், உன்

தாஸ்ய பக்தர்களை ஸம்ரக்ஷிக்கவும், உதார மனத்துடன் (ஒழிவில் காலமெல்லாம் முடனும் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டும் என்கிற மனோரதத்தின் படி ஸர்வ தேச ஸர்வகால ஸர்வாவஸ் தோசித) ஸர்வ வித கைங்கர்ய பாக்யங்களைப் பெற்று வாழும் ஸாது வைஷ்ணவர்களை அடிப் படையாக கொண்டதாயிற்றே, அப்பேற்பட்ட அபார மகிமை களைப் பெற்ற உதார ஹ்ருதயமுள்ள சீதாராமனுக்கு ஜயமங்க ளங்கள் நித்யம் ஏற்படட்டும். ஹே கிருபாளு, ராவணாரி, ராக்ஷஸக் கூட்டங்களை அழித்த கோதண்டராமா, சீதாதேவி, உங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம்.'' (732)

''லங்கேசனாகிற ராவணனை ஏன் கொன்றேன் ? என்கிற பச்சாதாபம் மேலிட்டு கருணையினால் கசங்கின சிவந்த செங்கண் திருமாலே, நீர் ராவணனை ஸம்ஹரித்தது தர்ம நியாயமே. லங்கேசனான அவன் அதி பலத்தினால் கர்வ மடைந்து, தேவ கந்தர்வர்களை தன் வசப்படுத்தி, முனிஸித்த மனித, பக்ஷி, நாகக் கூட்டங்களை ஹிம்ஸித்து, ஸகல லோகத் திற்கும் ஸகல படைப்புக்களுக்கும் அசுரத் தன்மையினால் பீடையைச் செய்தனன்.'' (733)

''பரத்ரோஹம் செய்வதில் இந்த துஷ்டனுக்கு பரமானந் தம். (ஆயிரம் பசுக்களின் நடுவே கன்று தனது தாயைத் தேடி அடைவதுபோல, துஷ்ட கர்மமோ, புண்ய கர்மமோ, செய்தவனை அடைகிறது,) அதுபோல இந்த பாபிஷ்டனான ராவணன் தன்னுடைய துஷ்ட செயல்களின் பலனை அடைந் தான். அதனால் தாங்கள் இவனைக் குறித்து வருந்த வேண் டியதில்லை. தீனதயாளு, எங்கள் வார்த்தைகளை தயவு செய்து கேளுங்கள். ராஜீவ நயனா, உமது பக்கத்தில் ஜானகி பிராட்டி சந்திரனோடு சேர்ந்த சித்ரா நக்ஷத்திரம்போல பிரகாசிக்கிறாள். கோதண்டத்தைக் கையிலேந்தி நிற்கும் விசாலவக்ஷ ஸ்தல ராமா, பங்கயக் கண்ணனே, எங்கள் வார்த்தைகளைக் கேளுங்கள்.'' (734)

''தேவேந்திரனாகிற நானும் சில சமயங்களில் ஸ்வாமி, ஸ்வாபிமானமடைந்து அதி மோஹத்தின் வசம் அடைந்து, கர்வத்தினால் என்னைப்போல ஸமமானவன் யார் இருக்கக் கூடும் ?, என்று பிரமை அடைந்திருக்கிறேன். கஞ்சலோசனா,

ஆனால் உம்மைத் தர்சித்த மாத்திரம், உம்முடைய பரம அனுக்ரஹ சங்கல்பத்தினால் என்னுடைய மதமும் நாசமடைந்து, என்னுடைய துக்க சமூஹங்களும் ஸூர்யனைக் கண்ட பனிபோல உம்முடைய அபார காருண்ய ஸங்கல்பத்தினால் விலகி, களிப்புறுகிறேன். நானும், என் பத்னியாகிற இந்திராணியும் வினயமாக உங்களை ஆயிரம் தடவைகள் நமஸ்காரம் செய்து பணிகிறோம்.'' (735)

''தூயமணி வண்ணா, (கஜேந்திரனைப்போல உம்முடைய சில பக்தர்கள், உம்முடைய அனுக்ரஹத்தால் ஏற்பட்ட வாசனைகளாலும், ஞானமும், பக்தியும், நாம ஜப உச்சாரணைகளாலும்,) நிர்குண பிரும்மத்தில் நிலைபெற்றவர்களாக உங்களைத் தியானம், ஜபம், ஸ்துதி முதலியவைகளைச் செய்கிறார்கள். அப்பேற்பட்ட பிரும்மத்தை ஸர்வ ஸ்வரூபமாகவும், அவ்யக்தமாகவும் நிராகார, நிரஞ்சன, முக்குணமற்ற நிர்குண, நிஷ்கலா, ஸாந்தா, நிஷ்காமா, நிருபப்லவா, எனப்படும், அழிவற்றதும், அவித்யை மாயை என்கிற தோஷங்கள் இல்லாத சாக்ஷாத் ஆனந்தம், பர பிரும்மமாகிற நாராயணராக உபாஸிக்கிறார்கள். ஆனால், ஹே பிரபு, கோஸல தேசத்து ராமா, உம்முடைய மானிட தேகத்துடன் விளங்கும் ஸ்ரீராம மூர்த்தியானது சுந்தர ஞானத்துடன் சுத்த ஸத்வமாகிறதும் (அனலோசித விசேஷ அசேஷ லோக சரண்யா, சரணாகத தோஸ்மி தவாஸ்மி தாஸ: என்று சொல்லும்படி) பரமஅபராதியைக் கூடக்காப்பாற்றும் ஸகல கல்யாண குணங்களாகிற சௌலப்ய, வாத்ஸல்ய, சௌசீல்யாதிகளால் பரம பாவனத்வம் பண்ணுகிறதாக விருக்கிறது. அப்பேற்பட்ட ஸகுண ரூபமாக விருக்கிறதே, அந்த சுத்த ஸத்வ ஸகுண ஸ்வரூபியாகிற பரம மங்கள மூர்த்தியான ஸ்ரீராமா சீதா மூர்த்திகளுக்கு, நாங்கள் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம்.'' (736)

[*தியானம்*

ஹே பிரபோ, (மனோ வாக்கு காயம் இவைகளால் அனாதி காலமாக பிரவிருத்தி தர்மத்தில் ஈடுபாடுகளை உடைய எங்களுக்கு அக்ருத்யகரண, க்ருத்யா கரண, பகவத் அபசாரம், பாகவத அபசாரம், அஸஹ்ய அபசாரம், நானாவித அனந்த

அபசாரங்களை தாங்களும் சீதா பிராட்டியும் கிருபை கூர்ந்து பொறுத்தருள வேண்டும்; காம, க்ரோதம், லோபம் இவைகளால் தூண்டப்பட்டு ஆரப்த கார்யான், அனாரப்த கார்யான், க்ருதான், க்ரியமாணுன், கரிஷ்யமாணுன் ஆகிற ஸர்வவித பாபதோஷங்கள் நிரம்பின காரியங்களையும் பரிபூர்ண க்ஷமையுடன், ஸ்வாமி, மன்னித்து அருள வேண்டும். அது மாத்திரமில்லை. பிரபு, அனாதிகாலமாகத் தொடர்ந்து வரும் எங்கள் பாபவாசனைக் கூட்டங்களையும், விபரீத ஞானத்தையும், பரமாத்ம விஷயமாகிற உம்மிடத்தில் ஏற்பட வேண்டிய தாஸ்யத் தன்மையையும் ஜகத் ஸம்சார, பாகவத விஷயங்களிலும், தாஸ்யத் தன்மையையும், ஹித காம்யத்தையும், அடைவதற்குப் பதிலாக, விபரீத விருத்திகளையும், கர்மங்களையும் ஏற்கனவே நடந்தவை, இப்போது நடக்கிறவை, இனி வரப்போகும் கர்மாக்களையும் பரிபூர்ண க்ஷமையுடன் மன்னித்து அருள வேண்டும். ஸ்வாமி, அது மாத்திரமில்லை, இன்னமும் கேளுங்கள். பிரபோ, மதீய அனாதி கர்ம ப்ரவாஹ ப்ரவிருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதான கரீம் விபரீத ஞான ஜன்னீம் ஸ்வ விஷயா யாஸ்ச போக்யபுத்தே; ஜனனீம் தேஹேந் திரியத்வேன போக்யத்வேன ஸூக்ஷ்ம ரூபேணச அவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம் தாஸபூதம் சரணு கதோஸ்மி தவாஸ்மிதாஸ: இதிவக்தாரம் மாம் தாரய, என்று சொல்லி, தங்களையும் பிராட்டியையும் ஸகுண ராம சீதாவாக நமஸ்கரிக்கும் எங்களை ரக்ஷித்தருள வேண்டும்.

நாராயணு, ராமா சீதா, மஹாலக்ஷ்மி பிரியா, லக்ஷ்மணனுடன் கூடிய சீதாராமபிரானே, நாகணைமிசை நம்பிரான் சரணேசரண். நமக்கு என்று வாழ விரும்பும் என்னைப் போன்றவர்களுக்கு. உங்களது கருணை ஸ்வரூபம் தெரிந்ததும், ஒரு விசேஷ பொருளை அடைவதற்கு என்ன விரதம் கொள்ள வேண்டும்; எதைபற்ற வேண்டும், எதைவிட வேண்டும் என்று தெரிந்திருக்கவேண்டும். நோன்பு நூற்பவர்களான ஆண்டாள் போன்றவர்களும், பரதன் போன்ற தவசீலர்களும், சத்ருக்னன், தர்ம புத்ரன் போன்றவர்கள், மெய் விரதமாகிற பாகவத கைங்கர்யத்தைச் செய்தார்களே, அது போல நானும் ஏதாவது ஒன்றை ஸதாசார்ய உபதேசத்தினுல் பற்ற வேண்டும். பாஞ்ச

ராத்திரத்தில் சொல்லப்பட்டபடி மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்தூ நாம் ஸம்ஸாரே பத தாமத: லக்ஷ்மீ: புருஷகார நிரிதிஷ்டா பரமா ஷிபி மமாபி சமதம் ஹ்யேதஞ் நான்யதா லக்ஷணம் பவேத், என்கிறபடி லக்ஷ்மி நாராயணு, உன்னை அடைவதில் லக்ஷ்மி யானவள் பரம ரிஷிகளாலே புருஷகார த்வத்தில் நியமிக்கப் பட்டிருக்கிருள்; எனக்கும் இதுவே இஷ்டம்; வேருன உபாயம் என்கிற ஆதாரமில்லை. அகலகில் லேன்னிறையு மென்று அலர் மேல் மங்கையுறை மார்பா, மூன்றூ உலகங்களிலும் புகழ்பெற்ற ராமா சீதா, என்னையும், நம்மாழ்வாரையும் லக்ஷமணனையும் ஆள்வானே, நிகரலமரா் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே, உனக்கு ஸர்வக்ஞர், அந்தர்யாமி, ஸர்வ பூதஸ்திதா் என்கிற பட்டங்களுக்கு யேற்ப, எனக்கு வேறு புகல் உன்னடி கீழே அமர்வதைத் தவிர தெரியாது என்று நீங்கள் அறிய மாட்டீர்களா? ஸ்ரீ ஸ்தவ, ஸ்ரீ குணரத்ன கோஸ, ஸ்ரீ ஸ்துதி, சதுஸ்லோகி, கத்யத் த்ரயாதிகளாலும், ராமாயணத்தில் லக்ஷ்மியாகிற சீதையை முன்னிட்டே இளைய பெருமாள், திருவடி, விபீஷணன் ஆகியோர்கள் காரியஸித்தி அடைந்தனர். இவளைக் க்ரம மாகப் பற்ருத படியாலே, சூர்ப்பனகை மூக்கறுப்புண்டாள்; தமயனுகிற ராவணன் வதம் அடைந்தான்; என்கிறபடி புருஷகாரத்வம் என்று சொல்லப்படும் சரண்யத்வம்தானேநான் பற்ற வேண்டிய விரதம், இந்தப் பெருமை வேதங்களில் சொல் லப்பட்டிருக்கிறதே. லக்ஷ்மி தந்திரத்தில் ஸ்ரீ: சப்தத்திற்கு அனுசந்திக்கப்பட்ட வசனங்களாகிற "அடியாருடைய தீனச் சொல்லைக் கேட்கிறேன்; அவர்களுடைய பாவத்தை போக்கடிக்கிறேன். அவர்களுடைய குணங்களை பெருக்கு கிறேன்," என்று சொன்னுயே, ஹேசீதா பிராட்டி, பகவானுடன் கூடிய உன்னைத் தவிர நான் அனன்ய உபாயத்வம், அனன்ய உபேயத்வம், அனன்யதைவத்வம் காணேனே. ஒருவித அனுஷ்டானமும் இல்லாத எனக்கு அக்ஞானத்தாலே வரும் விஷயங்களும் அடிக்கழஞ்சு பெறும் என்று மணவாள மாமுனிகள் சாதித்தபடி, எனக்கு பிரதிபந்தகங்கள் அழிந்து செய்யாதனச் செய்யோம் என்கிறதற்கு பரதனையும், அர் ஜுனனையும் உதாரணங்களாகக் கொண்டு, லக்ஷமணனுடன்

கூடிய சீதாராமனையே, ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந் தொழிந்தாய், நீங்களும் வாத்ஸல்ய பூதர்களாக, பிறர்களுக்கு ஹிம்சை செய்யமாட்டோம், என்கிற விரதம் பூண்டு பகவத் வைபவம், பாகவத கைங்கர்யம், ஆசார்ய அபிமானம் இவை களையே பிரதானமாகக் கொண்டு மஹா லக்ஷ்மியே, ராமனுடன் லீலா சயனத்தில் பள்ளிகொண்டிருக்கும்சீதையே, ராமனை வஞ் சித்து தேவமாதர்களைக் காப்பாற்ற நோக்கம் கொண்டு, மாயா மிருகத்தைக் கேட்ட அதிரம்யே, சாரங்கபாணியை ஸர்வதா சரணம் அடைந்திருக்கும் என்னைப்பார், அம்மா. எனது விஷயத்தில் உனது நாயகனுடன் நீ செய்யும் பிரணய கலகமும், பகவானுடைய கார்ப்பண்யமும், கஸ்தூரி திலகனுடையவியக்த மானதும், விசாலமான கீர்த்திகளை உடைய செய்கைகளும் என்னிடம் வஞ்சகமாக யேற்பட வேண்டாம். உங்களுடைய தாழ்ந்த முக கிருபையுடன் கூடிய புஷ்டியான பார்வைகள் உங்களுடைய பாதங்களில் சரணமடைந்திருக்கும் என் மீது தயையுடன் விழவேண்டும். என்னைச் சேர்ந்தவர்களையும் உய்யச் செய்ய வேண்டும்.]

["ஹே வைதேஹி, ஜிக்ஞாஸு அனுஷ்டானங்களில் தேர்ச்சிபெற்ற ஜனகர், விஷ்ணு சித்தர், மார்க்கண்டேயர் க்ஷீராப்திராஜன், ப்ருகு, கர்த்தம பிரஜாபதி ஆகியவர்களுக்கு புத்ரியாக, அவதரித்த லக்ஷ்மி, மாதவி, ராமானுஜா, செய்யாதன செய்யோம் என்கிற ஸத்விரதத்தைக் கொண்ட லக்ஷ்மணா, பல ராமா, ஹலாயுதரே, உங்களை தியானித்து அருள்பெற்று, புருஷ காரத்தினாலே அல்லவோ நாங்கள் பிராட்டியுடன் கூடிய ஸ்ரீராமனை அடைய வேண்டும்.] சீதாராமன் லக்ஷ்மணன் கோயில் கொண்டு எங்கள் ஹ்ருதயத்தை சீதாராமா லக்ஷ்மண நிகேதனம் என்று சொல்லும்படி வாழச்செய்ய வேண்டும். ஜானகி ராமா, ஸ்வாமி (ராமானுஜன் காட்டிய வழியிலும், பரதன், அர்ஜுனன், ஜனகர், விஷ்ணு சித்தர் காட் டிய ஆசரணைகளாலும், அடக்கப்பட்டு வரும்) என்னையும் எங் களையும் (உங்களைச் சேர்ந்த திருவடியின் ரேகையைப்போல) தாஸர்கள் என்று ஸ்வீகர்த்துக்கொண்டு, லக்ஷ்மண ராம சீதா, என் ரமா நிவாஸனே, (பாம்பணைமேல் பள்ளிகொண்ட ரங்க நாயகி ஸமேத ரங்கநாதா, அலர்மேல் மங்கைஉறைமார்பா; ஹரி

வக்ஷஸ்தலே, கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா,) நீங்கள் வாய் திறந்து எங்களை ஸ்வீகரித்து உங்களுடைய அனுமத்தம ஸ்ரீ: என்று சொல்லப் படும் உங்கள் பக்தியை (பிரஹ்லாதன், நாரதர், வால்மீகி, துருவன், அம்பரீஷன் போன்றவர்களுக்குக் கொடுத்த மாதிரி) எங்களுக்கும் கொடுத்தருள வேண்டும்.'' (737)

''லக்ஷ்மண ராமா சீதா, ரமா நிவாஸா, ஸ்ரீநிவாஸா, சரணு கதர்களான எங்களுக்கு பாபத்தையும், பயத்தையும் போக்கி, (பிரஹ்லாதன் துருவன் ஆஞ்சநேயர் கருடாதிகளுக் குக் கிடைத்த) உங்களுடைய ஸ்பர்சம், தலையின் மேல் திருக்கரங்களை வைத்து அனுக்ரஹ சித்தத்துடன் உய்யக் கொள்ளும் அன்பும் பிரேமையும் எங்களிடம் ஸதா இருக்க வேண்டும். (ஸ்ரீதாமன் என்று சொல்லப்படும் உங்களுடைய அமுதச் சுவையை ஆராவமுதத்தை எங்களுக்குக் கிடைக்கும் படி செய்யவேண்டும். ஸ்ரீதரா, ஸ்ரீவத்ஸ மார்பா,) ரகு குலத் திற்கு ஸ்ரீநிதியாக விளங்கும் ராமா, நாங்கள் உங்களை ஆயிரம் சுக்ருத நமஸ்காரங்கள் செய்கிறோம். ரகுநாயகா, ஆயிரம் கோடி மன்மதர்கள் சேர்ந்து ஒருங்கே வந்தாலும் அவர்கள் அழகில் உனக்கு ஈடு ஆக மாட்டார்கள். காமேஸ்வரியாகிற சீதையுடனும் (ஸித்த ஸங்கல்பனுகிற) லக்ஷ்மணனுடன் கூடிய சீதாராமனுடைய பேரழகும் குளிர்ந்த காருண்யம் படைத்த அன்பு திருஷ்டிகளும், (மணிக்கு ஒளி போலவும், மலருக்கு மணம் போலவும் அமுதத்துக்குச் சுவை போல விருக்கும்) இயற்கையாகவுள்ள அப்ராகிருதமான ஸம்பந்தச் சேர்க்கையின் பிரபாவங்கள் அன்றோ? (அப்பேற்பட்ட ரகு நாயகனை தியாகராஜ, நாரத, வேதவியாஸ, பராசராதிகளை முன்னிட்டு, சுகர் போல) நாங்கள் ஆயிரம் தடவைகள் நமஸ்கரிக்கிறோம். தேவர்களால் சூழப்பட்டிருக்கும் ராமா, கோதண்டராமா, நீயும் உன் பிராட்டியும் உன் தம்பியும் எங்களை மோஹிக்கும்படி ரஞ்சனம் செய்கிறீர்கள். எங்களுடைய ஹ்ருதயம் பொய்யில்லாமல் உங்களிடம் பக்தியை அடைந்து, (நின் பாத பங்கயமே தலைக்கணியாய், தாள் கண்டு கொண்டு என் தலை மேற் புனைந்தேனே, என்று) உங்களை நமஸ்கரித்து சரணமடைந்தோம். எங்களுடைய த்வந்தங்களை

(ஜன்ம ம்ருத்யு, சுகம் துக்கம் ஆகிய இரட்டைகளை) நாசம் செய்யும் பிரபோ, "நான் மனிதன்" என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்," என்று தன்னைப் பற்றி சொல்லிக் கொண்ட (ஆத்மானம் மானுஷம் மன்யே தசரதாத்மஜம்) ராமா, (கோக்களுக்கு கோக்களே சரணம் என்கிற நியதியைப் போலவும், ஸ்திரிகளுக்கு ஸ்திரிகளே சரணம் என்கிற சம்பு உமையின் வாக்யங்களைப் பற்றிச் சொன்னது போலவும், மனிதர்களுக்கு மனிதனே உய்விப்பது போலவும்) மானிட தேகத்தை ஸ்வ சங்கல்பமாக ஏற்றுக் கொண்ட ராமா சீதா, லக்ஷ்மணா, அதுளித பலம் கொண்ட பீம பராக்ரமா, பிரும்மா, உமா மஹேஸ்வரர்கள் வணங்கும் கருணா மயமான ராமசீதா, லக்ஷ்மணா, நீங்கள் கோமளமான உள்ளத்துடன் எங்களிடம் கிருபை பாலிக்க வேண்டும். உங்களை ஆயிரம் தடவைகள் நானும் இந்திராணியும் நமஸ்கரிக்கிறோம்," என்று மஹேந்திரனும் சசிதேவியும் நமஸ்கரித்தார்கள். அத்துடன் ஸகல தேவர்களும் தேவ ஸ்திரிகளும் நமஸ்கரித்தார்கள். (அவர்களை முன்னிட்டுக் கொண்டு நான் சீதாராமனுக்கு ராமாநுஜ ஸந்நிதியில் ஆயிரம் சுக்ருத நமஸ்காரங்களைச் செய்கிறேன்.) (738)

"ஹே ராமா, சீதா, கிருபாளு, (எங்களை அன்று ஒரு நாள் கடாக்ஷித்து அம்ருதத்தை அடைவதற்கு க்ஷீராப்தியை அடையச் செய்தீர். அப்போது அம்ருத ஸஹஜையான லக்ஷ்மி உண்டானாள். அவள் விஷ்ணு வக்ஷ ஸ்தலத்தில் எழுந்தருளி எங்களுடைய சாபங்களையும் பாப பயங்களையும் போக்கினீர்களே, அதுபோல இப்போதும் நாங்கள் உங்களை சரணமடைந்திருக்கிறோம். உங்களுடைய கடாக்ஷ வீக்ஷண்யங்களால் எங்களை ஸதா ரக்ஷிக்க வேண்டும்," என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.) எங்களை ஸுரேந்திரர்களாக தாங்கள் நியமித்து என்ன ஸேவா கைங்கர்யங்களில் ஈடுபடச் செய்ய விரும்புகிறீரோ, அவைகளில் இன்னமும் எங்களை தாங்கள் கிருபையுடன் நியமிக்க வேண்டும். [உபேந்திரரே, விஷ்ணோ, பிரஹ்லாதனைக் காப்பாற்றின நரசிம்மரே] எங்களை நீங்கள்தான் ஸம்ரக்ஷிக்க வேண்டும், என்று [என் குலகுருவான] இந்திரனும் இந்திராணியும் [நாரத வசனங்களால் ஆவிர் பாவித்த

பூலோக] சீதாராமனை லக்ஷ்மணனை முன்னிட்டு சரணமடைந்து புகழ் ஸ்துதிகளைச் செய்தார்கள். தீனதயாளு, கிருதக்ஞர், பக்த பராதீனர், என் பிரபு ஸ்ரீ சீதாராமன் இந்த வார்த்தைகளை ஸ்வீகரித்துக் கொண்டு பதில் பேசலானார். (739)

"தேவராஜா, [சசீதேவி, தேவர்களே, தேவ பத்னிகளே] கேளுங்கள். மஹேந்திரனே, எங்களுக்காக உயிர் துறந்தவர்களும், ராக்ஷஸர்களால் அடித்துக் கொல்லப்பட்டு, இந்த ரண பூமியில் மரித்துக் கிடக்கும் வானரங்களையும் கரடிகளையும் உயிர்ப்பிக்க வேண்டும். எங்களுக்காக அவர்கள் பிராணனையும் தியாகம் செய்தவர்கள் அன்றோ? ஸுரேஸா, ஸகலரையும் வாழவிக்கும் ஸுஹ்ருதயம் படைத்தவனே, (தர்மக்ஞனே, தண்ட நீதியில் நிபுணனே,) இவர்களுக்கு உயிர் பிச்சை கொடு." (740)

'காகபுசுண்டி கருடனிடம் சொல்லுகிறார். ஹே கருடரே (ஸர்வ ஸாமர்த்தியமுள்ள என் பிரபு, ராஜரிஷிகளான நாபாகன், கவாக்ஷன், போன்ற மஹா அடக்க சீல விரதமுள்ள ராமன், "நான் பெரியவன், நான் எதைச் செய்தாலும் செய்வேன்", என்கிற மமதையை விட்டுவிட்டு, ஸுர ரக்ஷணத்திற்காகவும், மானிடர்களின் நன்மைக்காகவும் அவதரித்த மஹா நாராயணன், தர்ம புத்தியுடன் ராஜ விஸ்வாஸம் கொண்ட சேவகனைப் போல, உபேந்திரனைப் போல, ஸர்வ சக்தியுள்ள, மஹா விஷ்ணு, மஹேந்திரனை, வானரர்களுக்கும் கரடிகளுக்கும் ஹிதம் செய்வதற்காக வரம் வேண்டினார்.) இப்பேற்பட்ட பிரபுவின் வசனங்களின் மர்மங்களை இந்திரனும் நம்மாலும் முழுதும் அறியப்படுமோ? மிக்க ஆச்சர்யகரமாகவும், குஹ்யமாகவும், தன்னை பரவஸ்து என்று காட்டாமல் மறைத்து வைத்துக் கொள்ளும் மஹா பிரபாவங்களை உடைய மாயனாகிற ராமனுக்கே ஏற்றவை. ஞானிகள் முதற் கொண்டு பிரபுவின் மர்ம ரகசியங்களை அறிய முடியாதபடி அகாதமாகவும், ஆழமாகவு மிருக்கின்றன. பிரபு திரிபுவனத்தையும் அழித்துவிட்டு மீண்டும் உயிர்பிக்க சக்தியுள்ள அபாம் நிதி. இந்த வார்த்தைகள் இந்திரனுக்குப் பெருமையையும், கீர்த்திகளையும் கொடுப்பதற்காகச் சொல்லிய வார்த்தைகள் என்று நீ அறிந்து கொண்டாயா? பிரபு, பக்தவத்ஸலன், கிருபாளு,

என்று நீ தெரிந்து கொண்டாயா?'' (அப்பேற்பட்ட ராம நாராயணனை, கருடன், காகபுசுண்டி, மஹேந்திரன் இந்திராணியை முன்னிட்டு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். (741)

[தியானம்

லக்ஷ்மணனால் ஆராதிக்கப்பட்ட சீதாராமா, உங்களை ஏன் பரப்ரும்மம் என்று சொல்லுகிறார்கள்? ப்ருஹத் ப்ரே ஹயதி தஸ்மாத உச்யதே பரம் ப்ரும்ம, ப்ரு ஹத்வாத் ப்ரும் ஹணத் வாஸ்ச குண யோகாஸ் ச சார்ங்கிணி, தஸ்மின்னேவ ப்ருஹ்ம சப்தோ முக்ய வ்ருத்தோ மஹாமுனே, என்கிறபடி நாராயணா, நீதானே மஹத் ப்ருஹத் ஸமஸ்த பூதங்களுக்கும் ஆதி பூதம் என்று சொல்லப்படுகிறீர், உமக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம், உம்மைத் துதித்து அல்லவோ நாங்கள் ஐஸ்வர்யம், முக்தி எனப்படும் இருவகை நன்மைகளைப் பெற வேண்டும். உம்மைவிட உயர்ந்த பொருளோ பரம புருஷார்த்தமோ இல்லை. ''ஸத்யம், ஸத்யம் புனஸ் ஸத்யம், கை தூக்கிக் கொண்டு உத்கோஷிக்கிறேன். வேத சாஸ்திரத்திற்கு மேலான சாஸ்திரமுமில்லை. கேசவருக்கு மேலான தெய்வமுமில்லை,'' என்று வியாஸாதிகள் கோஷிக்கிறார்களே, ராமா, சீதாநாயகா, இந்த வசனங்கள் உம்மைப் பற்றியல்லவோ கோஷிக்கின்றன. ஆயிரம் மங்கள நாமாக்களை உடைய விஷ்ணோ, திருவிக்ரமா, சங்கு, சக்கிரம், கதை, வாள், சார்ங்கம் என்கிற பஞ்சாயுதங்களையும், வைஜயந்தி என்கிற வன மாலையையும் தாமரைப் புஷ்பத்தையும் தரித்துக் கொண்டிருக்கும் பரமபத நாராயணா, வானரங்கள், கரடிகள் ஆகிற தேவக் கூட்டங்களால் சூழப்பட்டிருக்கும் சீதாராமா, லக்ஷ்மணா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே ராமசந்திராய நம: என்று சொல்லி நமஸ்கரிக்கிற எங்களை கடாக்ஷிக்கவேண்டும். புண்டரீகனே, ஓம் நமோ நாராயணாய என்கிற அஷ்டாக்ஷரமும், சீதை ராமனைப் பற்றிய ஷடாக்ஷரமும், அம்பிகையுடன் கூடிய சதாசிவ மந்திரமாகிய ஷோடசாக்ஷரியும், இருபத்து நான்கு அக்ஷரங்களை உடைய காயத்திரி மந்திரமும், ராமானுஜர்

அருளிச் செய்த த்வய மந்திரமும், சர்ம ஸ்லோகமும், நான்கு வேதங்களின் ஸாரமாக விருக்கின்றன. ஷடாக்ஷரனே, ஓம் நமோ பகவதே விஷ்ணவே நம:, த்வாதசாக்ஷரமாகிற ஓம் நமோ பகவதே வாஸு தேவாய நம: என்கிற இரு மந்திரங் களும் கர்வத்தால் விளைந்த அக்ஞானத்தில் அழுந்தி நின்று கரையேறத் தெரியாமல் தத்தளிக்கும் என் போன்ற ஜீவர் களுக்கு வலம்புரிச் சங்கம் போன்ற உருவமுடைய பிரண வத்தில் அகாரம் என்கிற அக்ஷரத்தின் பொருளாகவிருக் கிறீர். வேதாந்த தேசிகரால் பல முறை எனக்கு உபதேசிக்கப் பட்ட, காவலென்ற அகரத்து அவ்வாய்க் கருத்துறக் காண்மினீரே, என்கிற வாக்கியத்தின்படி ஸர்வத்தையும் ரக்ஷிக்கும் தன்மை அகாரத்தில் அவ் என்கிற வினைப்பகுதி யடியாக என் மனதில் பதியும்படி அறிந்து கொண்ட மஹா பூதமே, உம்மை ஏகாக்ஷரம் என்று சொல்லி நாரதர், விஷ்வக் ஸேனரை முன்னிட்டு ஆயிரம் தடவைகள் நான் நமஸ்கரிக் கிறேன், நாராயணு, உம்முடைய முதல் ஸங்கல்பம் ஆர்த்த ரக்ஷணமல்லவோ? அந்த பக்தர்களைக் காப்பாற்றும் விஷயத் தில் பனிப்பட்டு சாய்ந்த மூங்கில் போலக் குன்றி, நீ அவர் களிடம் தாழ்ந்து போகிருய். "என் முடி மேல் அடி வைக்க வேண்டும்," என்று சொல்லிய மாவலி சக்கிரவர்த்திக்கும் திருக்கச்சி நம்பி சர்ம ஸ்லோகத்தின் மர்மத்தை பதினெட்டா வது தடவை ராமானுஜருக்கும் அறிவிக்கும் போதும், உறங்கா வில்லி தாஸரிடம் விபீஷண சரணுகதியின் சாராம்சத்தை ராமானுஜர் சொல்லியபோதும், உறவேல் நமக்கு இங்கு ஒழிக்கஒழியாது, என்கிற பிரணவ அர்த்தத்தைச் சொல்லிய ஆண்டாளுக்கும், திருவிக்ரம, ராமகிருஷ்ண அவதாரங்களில் கரிய திருமேனி வாட நீ அலைந்து திரிந்தாயே, அதுவல்லவோ விமர்சனமாக உன் காரியத்தை தலைக்கட்டுகிறது. ஹே உத்தமா, பருத்த முலைகளைக் கொண்ட கறவைப் பசுவின் வள்ளல் தனத்தைக் கொண்ட சீதாராமா, உங்களுடைய நாம ஸங்கீர்த்தனமல்லவோ தேக ஆத்ம பிரமைகளை ஒழிக்கும்; கால க்ரமத்தில் அனன்யார்ஹ சேஷத்வத்தையும், அனன்ய சரண்யத்தையும், அனன்ய போக்யத்தையும் ஆகிற ஆகார த்ரய ஞானம் உண்டாகும். இதனுல் அல்லவோ, நாரதரும்

ஹரி சரணங்களை மனதில் தரித்துக் கொண்டும், பிரணவத்தின் வக்ர துண்டமாக விளங்கும் விஷ்வக் ஸேனரும், உங்களுடைய தாரகங்களை நினைவுறுத்திக் கொண்டு, ஸதா உங்களுடைய பொற் பாதங்களை பகவத் குணனுபவத்தில் ஈடுபட்டு, பரம புருஷார்த்த ஸம்பத் உள்ள வர்களாக விளங்குகிருர்கள். அப்பேற்பட்ட பாகவத உத்தமர்களை முன்னிட்டு நாங்கள் உங்களை ஆயிரம் தட வைகள் நமஸ்கரிக்கிறோம். வேதாத்மாவாகிற கருடனையும் காகபுசுண்டியையும் நமஸ்கரித்து உங்களை வந்து அடை கிறோம்.]

"இந்திரனுல் உடனே அம்ருதம் பொழியப்பட்டது. கரடி களும், வானரங்களும் உயிர் பெற்று எழுந்தனர். ஸகலரும் மிக்க சந்தோஷம் கொண்டு எழுந்திருந்தார்கள். (பிரணவத் தின் முதல் அக்ஷரமாகிற அகாரத்தின் பொருளாக விளங்கும் சீதாராமனிடம் அவர்கள் மீண்டும் ஸம்பந்த சேர்க்கையைப் பெற்றனர்,) அந்த உறவேல் ஒழிக்க முடியாத ஸம்பந்தத்தை நித்ய ஸ்ரீ, நித்ய மங்களமாகப் பெற்றனர். (அப்பேற்பட்ட பாகவத பக்தர்களுடன் கூடிய சீதாராம லக்ஷ்மணனை நான் மஹேந்திரன், இந்திராணி, ராமானுஜனை புரம் வைத்து ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) இதில் ஆச்சரியமான விஷயம் இதுதான். ரண களத்தில் இரு தரப்பிலும் யிருந்தவர்களுக்கும் ஸர்வ தேஹிகளுக்கும் ஆத்மாவாகிற சூரிய நாராயணன் ஸர்வ ஔஷத ரஸங்களை உறிஞ்சிக் கொண்டு, பார பக்ஷமின்றி, அவைகளை மீண்டும் வர்ஷங் களாகப் பொழிகிருரே, அதுபோல, பகவானுகிற இந்திரனுல் பாரபக்ஷமின்றி அம்ருதவர்ஷம் பொழியப்பட்டது. பகவத் ஸங்கல்பத்தால் வானரர்களும், கரடிகளும் உயிர்பெற்று எழுந் தார்கள். பகவானுடனும் பிராட்டியுடனும் பிணங்கிய ஜீவர்க ளாகிற ராக்ஷஸர்கள் உயிர் பெற்று எழவில்லை." [ஹே மனஸே, இன்னமுமா உனக்கு சந்தேகம்? பர பிரும்மமாகிற ராமனையும் சீதையையும் ஆராதிப்பதே சிறந்த கர்மம், என்று உனக்குப் புரியவில்லையா? வால்மீகி, தியாகராஜ, சுக, ஸனக ஸநந்தன திகளால் ஆராதிக்கப்படும் வேத நாராயணனே, உனக்கு கதி என்று உனக்குப் புரியவில்லையா? தியாகராஜரின் மனோரமண,

கோபிஜன வல்லபா, முனிவர்களுக்கும் கம்ஸனுக்கும் ராவண மாரீசாதிகளுக்கும், கோபிகைகளுக்கும், நம்மாழ்வாருக்கும் ஜாரா சோரனாக விருந்த ரபாநிவாஸா, ஸாகேத ஸதநா, நீ திருவிக்ரமனாகவும், விஷ்ணுவாயும், ஸர்வ வ்யாபகனாகவும், ஹரிசரணங்களைத் தரித்து நடமாடும் நாரத விஷ்வக் ஸேனாதி களுக்கும், தியாகராஜரிடமும், நம்மாழ்வாரிடமும், அந்தர் யாமியாக ஹ்ருதயத்தில் வாழ்ந்து வந்தாயே, அதுபோல என் மனதிலும் கோயில் கொண்டு தூரவிலகி நில்லாமல் அருகே என்னிடமும் ஸதா வசித்து வா அம்மா. அப்பா. வாருங்கள்.] (742)

ஏன் தெரியுமா ராக்ஷஸர்கள் உயிர் பெற்று எழவில்லை? அந்த மஹா பாக்யவான்களான [மாரீசன், கம்சன்] ராவணா திகளைப் போல பயத்தினால், "ராமா," "ராமா," என்று சொல்லி, ராமா காரத்தினால மரிக்கும் தருணம் மனம் ஒருமைப் பட்டு அவாகள் உயிரை இழந்தார்கள், அதனால் அவர்கள் முக்தர்களின் பாக்யத்தை அடைந்து சீதாராமப் பேறு பெற்று பவசாகரத்தைத் தாண்டி விட்டார்கள், [ஸமஸ்த பூதங் களுக்கும் ஆதி பூதமாக விருக்கும் நாராயண திருவடிகளை அவர்கள் அடைந்து விட்டார்கள். இது வல்லவோ பகவத் நிர் ஹேதுக கிருபையினால் ஏற்பட்ட ஆச்சர்யமும், பிராட்டியை நினைத்து அவளால் புருஷகாரம் செய்யப்பட்ட அவர்களுடைய பாக்ய பிரபாவங்கள்,] ஆனால் தேவர்களின் அம்சங்களான ஸகல வானர கரடிகளும் பகவானுடைய லீலைகளை அனுபவிப் பதற்காகவும், பகவானுக்குக் கைங்கர்யம் செய்யப் பிறந் தமையால், ரகுநாதனுடைய சங்கல் பத்தினால் அவர்கள் உயிர் பெற்று எழுந்தார்கள்," [அப்பேற்பட்ட நிர் ஹேதுக கிருபை கொண்ட ராம சீதாவை ராமானுஜனை முன்னிட்டும், மணவாள மாமுனிகளையும் முன்னிட்டும் நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். ரகோத்தமா, ஆஸ்ரிதர்களுக்கு நல்வாழ்வு கொடுப்பவனே, என்னையும் உன் பக்த கோஷ்டிகளுடன் சேர்த்துக் கொள்.) (743)

"என் பிரபு ராமனைப் போல தீனர்களுக்கும் பரம அபராதி களுக்கும் ஹிதகாரியாக யார் இருக்கக்கூடும்? (என்னைப் போன்ற மஹா பாபாத்மாக்களுக்கும் சீதாராமனே கதி.

என்னைப் போன்ற மதம், அஹங்காரம் படைத்தவர்கள் மனத்துடன் கூடிய பஞ்சேந்திரியங்களை வசம் செய்யாதவர்களுக்கும் தியாகராஜ சியாமா சாஸ்திரி தீக்ஷிதரைப் போல நிஜ பக்தி செய்யாதவர்களுக்கும் புகல் ராமனே அன்றி வேறு யாருமில்லை, என்று நம்பி வாழாதவர்களுக்கும் எப்படி சித்தி கிடைக்கப் பெறும்? அதனால் அல்லவோ சீதாராமனுடைய புகழ் மும்மூர்த்திகளுக்கும் கிடைக்கப் பெறாத புகழ் கீர்த்திகளாக விளங்குகின்றன. ஹேராமா சீதா, ஸர்வ சுத்த ஸத்வமாக விருக்கும் தெய்வமே, உனக்கு ரோஷம், கோபம், க்ரோதம் ஏதேனும் உண்டா? ரகுராமா, பக்தர்களையும் அபராதிகளையும் பாரபக்ஷமின்றி உன்னுடைய திருஷ்டி ஸம்பந்தத்தினால் ஸம்சயமில்லாததும் ஸர்வ ஸம்மதமாக ஓரளவு ஒப்புக் கொள்ளப்படும் உத்தம கதியைக் கொடுத்தாயே, அதன் மர்மத்தைச் சொல். உன் ராம நாம பிரபாவமா, உனது நிர்குண ஸ்வரூபமா? உன் ரூபமா, உனது கல்யாண குணங்களா அல்லது ஸகுண ஸ்வரூபத்தின் காருண்ய திருஷ்டிகளா? இதன் மர்மங்களை நாரத, தியாகராஜ, விஷ்வக்ஸேனாதிகள் அல்லவோ அறிவார்கள். நம்மாழ்வார் பாதையில் வரும் எனக்கு உங்கள் தரிசனமும் காருண்யமும் எப்போது அப்பா கிடைக்கும்? தயை செய்ய மாட்டீர்களா? ராவணனுக்கும், ராக்ஷஸர்களுக்கும் கிடைத்த ஸுக்ருதங்களாவது கிடைக்குமா? என் பிரபு ஸர்வ தீன ரக்ஷகன். புருஷோத்தம ராமன் நிச்சயமாக காம க்ரோதா க்ரோதாதிகளாகிற ஷட் ஊர்மிகள் நிறைந்த மஹா பாதகர்களையும் காப்பாற்ற சக்தி உள்ளவன்.) பரம அபராதிகளான ராவண, மாரீசர்களையும் காம க்ரோத பாபங்களிலிருந்து விடுபடச் செய்தவன். அது மாத்திரமா, அவர்களுக்கு ஸ்ரேஷ்டமான யோகிகளுக்கும் கிடைக்கப் பெறாத உத்தம கதியைக் கொடுத்தவன். (அப்பேற்பட்ட சீதாராமன் என்னையும் காப்பாற்ற வேண்டுமென்று ஆயிரம் தடவைகள் நமஸ்கரித்து சரணம் என்று புகல் அடைந்திருக்கும் தீனர்களையும் ரக்ஷிக்க வேண்டும்,'' என்று பிரார்த்திக்கிறேன்.) (744)

அந்த புருஷோத்தம ராமனுக்கு கற்பக பாரிஜாத துளசி பில்வதளம், மல்லிகை, மந்தார புஷ்பங்களை வாரி இறைத்தார்

கள் தேவர்கள். தேவர்கள் தங்களது பத்னிமார்களுடன் விழுந்து நமஸ்கரித்து, பிரார்த்தனைகள் செய்து கொண்டார்கள், அதன் பிறகு அவர்கள் தங்கள் விமானங்களில் ஏறிக்கொண்டு தங்களது இருப்பிடத்தை அடைந்தார்கள். இதுதான் சமயம் என்று அறிந்து கொண்ட உமா மஹேஸ்வரர்கள் (தம்புரா சகிதம் பத்ம மலருடன்), சீதாராமனிடம் ஓடி வந்தார்கள். (ஸர்வ ஸ்ரேஷ்டமான ஆபரணங்களை அணிந்து கொண்ட உமா கௌரி, ஜகந்நாயகி, தன் பதியான மஹேஸ்வரருடைய ஆனந்த பக்திகளைக் கண்டு மெய் சிலிர்ப்பவளாக அவளும் ஆனந்தம் அடைபவளாக, காணப்பட்டாள். அதுபோல புலித் தோலை அணிந்த சம்புவும், கங்காதரனுகவும், நாகபூஷண னுகவும், ராம நாமம் என்கிற பஸ்மத்தினுல் அலங்கரிக்கப் பட்டவராக, என் பிரபு புராரி, திரிதச ஸ்ரேஷ்டர், மஹேஸ்வரர், ஸர்வ பூதேசர், பகவான், பூதபவ்ய பவோத்தமர், நாரத வேத வ்யாஸாதிகளால் புகழப்படும் தர்மக்ஞர், விருஷ ப்ரியர், ஸ்தாணு, ஊர்த்வரேதஸ், திரியக்ஷர்; திரியம்பகர், காமாங்க ஹரரி, தக்ஷயக்ஞப்ரமதனர், சூலபாணி, ஸகலலோக பாலர் களால் வணங்கப்படும் குஹ ஜன்மபூ: லோக பாலேஸர் அவ் விடம் வந்தார்கள். அப்பேற்பட்ட நிஜராம நிகேதனுகிற பார் வதி பரமேஸ்வரர்களை குஹனைப்புரமாக வைத்து நமஸ்கரித்து விட்டு, சீதாராமா லக்ஷ்மணனை நான் ஆயிரம் மங்கள கீதங்களை பாவராக ஸ்வர லயத்துடன் பாடி ஆனந்திக்கிறேன். அவர் களே எனக்கு சீதாராமன் வாழ்ந்த கனக பவனம், அவர்களே துளசி பிரியனுகிற எனக்கு அருள் செய்ய வேண்டும்.) (745)

[திப்யானம்

ரெங்கநாதா, பத்மநாபா, நீ ஒவ்வொரு அவதாரத்திலும் உலகத்தையும் பக்த ஜனங்களையும் வாழ வைப்பதற்குத்தானே அவதரிக்கிருய். ஆழி மழைக்கண்ணு, முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுபோல, உமா மஹேஸ்வரர்களை யும், நாரதரையும், ஆஞ்சநேயரையும், பார்த்து மகிழவைக்கி ருயே, அதுபோல என்னிடம் கருணை காட்டமாட்டாயா? உங்களு டைய அடிச் சோதியாகிற தாமரை மலரை எங்களுக்குத் தர மாட்டாயா? எங்களுடைய அறுவினை களைத் தீர்க்கும் திரு

வரங்கத்து அம்மானே ரெங்கநாயகியின் மணாளா, ராமாசீதா, கேசவாவென்று உங்களை அழைக்கும் என்னிடம் தயை செய்ய மாட்டாயா? நான்கு வேதங்களும் புகழும் கமல நயனா, கார் மேக வண்ணனே, நாரணனே, எம்மானே, நீதானே ஆதி காரணன். தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து, தானே யுண்டுமிழ்ந்து தானே யாள்வனே, திருவேங்கடவா, மாதவன் என்று உன் நாமம் புகழும் என்னைப்பார் அப்பா. அமரர்க்கு முதல்வனே, திருமாலிருஞ்சோலையானே, நம்மாழ்வாரைப் பாடிப் புகழும் என்னையும் அன்று ராமானுஜனை அருள் செய்தது போல அருள் செய்வாயே. அன்று விஷ்ணு சித்தருக்கு பூரண பொற்குடம் பூரித்துக் கொடுத்த நாராயணா, ராம முனியே, நான்முகன், முக்கண்ணப்பன், உமை, சரஸ்வதி, இந்திராணி தொழும் கமல முதற் கிழங்கே, உன் திருமார்வந்து மாலை நங்கை வாசம் செய்யும் அணி அரங்கைப் பணிந்து நிற்கும் என்னை க்ஷமிக்க மாட்டாயா? நம்மாழ்வார் நாத முனிகள் பரத சத்ருக்னாதிகள் புகழும் கருமாணிக்கமே, என் கள்வா, நாரதர், தியாகராஜ, வால்மீகி, தீக்ஷதர், ஸ்யாமா சாஸ்திரி வேத வியாஸர் வழியில் ஊர்ந்து வரும் அர்ஜுன சிஷ்யனை என்னைப் பார். என் ஆருயிரே, உங்களை நான் அடைந்துவிட்டு, பிரஹ்லாதன் துருவனைப்போல உங்களை நான் போகவிட்டேன். மார்க்கண்டேய மஹரிஷியிடமும் சுக்ர, அகஸ்திய, பிரஹஸ்பதி யிடமும் நீங்கள் காட்டிய அன்பும், மாயம் என்னைப் பீடிக்காமல் திர விரும்புண்ட நீரதுபோல என்னுருயிரை ஆரப் பருக எனக்கு ஸதா ஆராவமுதனாக வேண்டும். அனன்ய போக்யத்வம், அனன்யார்ஹ சேஷத்வம், அனன்ய சரண்யத்வம், என்கிற மூன்றுவித ஆராவமுதாய், எனது ஆவியை யின்னுயிரை உனக்கே என்று ஆத்ம நிவேதனம் செய்யும் வேதாந்த தேசி கரின் உண்மை சிஷ்யனும், பொய்யில்லாத மணவாள மாமுனி களையும் புகழும் உன் அன்பனைக் கடாக்ஷி. அவாவற்று வீடு பெற்ற குருகூர் சடகோபனின் நீதி நெறியில் பிறந்து வாழும் உயர்ந்த வைஷ்ணவர்கள் உன்னை உயர்வறவுயர் நலம் உடை யவன் யவனவன் மயர் வறமதி நலம் அருளினன் யவனவன் அயர் வறுமமர்கள் அதிபதி யவனவன், துயரறு சுடரடி தொழு தெழென் மனனே, என்று உன்னைப் புகழ்கிறார்களே. அப்பேற்

பட்ட உன் கழல்களை அடைந்திருக்கும் எனக்கும் ஜன்ம சாபல்யம் கொடு.]

"[என் பிரபு துளசி தாஸரின் நாதர்] உமா மஹேஸ்வரர் பரமப்ரீதி கொண்டு, பிரேமை அஞ்சலியுடன், நளின புஷ்க ராக்ஷங்களில் சுமக்க முடியாத ஆனந்த கண்ணீர் சுமைகளைத் தாங்கிக்கொண்டு, புளகித மனம், சரீரம், ஆத்மாவுடன் ஓடி வந்தார்கள், அவர்களுடைய கண்டத்திலிருந்து வார்த்தைகள் வெளிவர திணறின. பரம வினய ஸம்பத்துள்ள ஜடாதரன், திரிபதகாதரன், திரிபுராரி அதிக்ரமித்த உணர்ச்சி வசமடைந்து சீதாராமனிடம் தனது பிரியா விடையான உமையுடன் ஸ்துதி செய்ய ஆரம்பித்தார். (746)

"ஹே ரகுகுல நாயகா, எங்களை ரக்ஷிக்க வேண்டும். கமல புஷ்பங்களைப் போல விருக்கும் திருக்கரங்களில் சாரங்கம் என்னும் கோதண்டத்தையும், பாணத்தையும், தீனர்களைக் காப்பாற்றும் விஷயத்தில் ஸதா தரித்துக் கொண்டு விளங்கும் ஸுதன்வா, உமக்கும் சீதா பிராட்டிக்கும் நாங்கள் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். எங்களை ரக்ஷிக்கும்படி ஆயிரம் தடவைகள் பிரார்த்திக்கிறோம். ராமதிவாகரனே, மஹா மோஹம் என்று சொல்லப்படும் கனமான மேகக் கூட்டங் களுக்கு பிரசண்டமான வாயு மூர்த்தியாக விருக்கும் பிரபோ, சந்தேகம், பிரமை, விபரீத ஞானம் ஆகிற மஹா வனங்களுக்கு பிரளய கால அக்னியைப் போல, எரிவதற்கு எவ்வளவு போட்டாலும் போதுமென்பது இல்லாமல், மேன்மேலும் எரித்துக் கொண்டிருக்கும் அழியாத சக்தியை உடைய அநலரே. தேவதைகளுக்கும், பிராம்மணர்களுக்கும் பிரும்ம நாட்டமுள்ள வர்களுக்கும், ரஞ்சனம் செய்யும் அஞர்தி நிதனராக எக்காலமும் யெளவன பருவமாகவும், பிறப்பு, மூப்பு முதலிய மாறுதல்கள் யில்லாத நித்ய திவ்ய மங்கள விக்ரஹத்தை உடைய தீப்த சுடரே, உமக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம்." (747)

"உம்முடைய நாமாக்கள் ஆயிரக் கணக்காக விருக்கின்றன. ஆகையால் நீர் நிர்குண பிரும்மம். அது போல உம்முடைய கல்யாண குணச் செல்வங்கள் அழகாகவும் கோடிக் கணக்காகவும் அகாதமாகவு மிருக்கின்றன. உம்முடைய திவ்ய மங்கள விக்ரஹம் அபார காருண்ய, வாத்ஸல்ய, சௌசீல்யு

## உமா சம்பு ஸ்துதி

1. மா மபி ரக்ஷய ரகுகுல நாயக
த்ருத பர சாப ருசிர கர ஸாயக
மோஹ மஹா கன படல ப்ரபஞ்ஜன
ஸம்சய பிபின அநல சுர ரஞ்சன

2. அகுண ஸகுணகுண மந்திர சுந்தர ப்ரமதம
ப்ரபல ப்ரதாப திவாகர
காம க்ரோத மதகஜ பஞ்சான ணபஸஹீ
நிரந்தர ஜன மன கானன

3. விஷய மனோரத புஞ்ச கஞ்சபன
ப்ரபல துஷார உதார பாரமன
பவ வாரிதி மந்தர பரமம் தர
பாரய தாரய ஸம்ஸ்ருதி துஸ்தர.

4. ஸ்யாம காத்ராஜீவ பிலோசன தீனபந்து
ப்ரணதார்த்தி மோசன
அனுஜ ஜானகீ ஸஹித நிரந்தர பஸஹீ ராம
ந்ருப மம உர அந்தர
முனி ரஞ்ஜன மஹி மண்டல மண்டன
துளசி தாஸ ப்ரபு த்ராஸ பிகண்டன.

5. நாத ஜப்ஹிம் கோஸல புரீம் ஹோஇஹி
திலக தும்ஹார
க்ருபா ஸிந்துமைம் ஆஉப் தேகன் சரித உதார்.

சுந்தர அங்கங்களுடன் அழகாக விளங்குகிறீர், பரத்வம், சௌசீல்யாதி வாத்ஸல்யம் ஆகிய குணங்களில் நம்பிக்கை யற்ற பிரமை ரூபிகளுக்கு, அவித்யை, அஹங்காரம், மாயை முதலிய குணங்களுக்கு வசப்பட்ட அவிவேக புருஷர்களுக்கு, அந்தகார இருட்டை நாசம் செய்யும் பிரபல பிரதாபமுள்ள ஞான சூர்யனே, ஞானதிவாகரனே, உம்மைப் பஜித்தால் அல்லவோ மனிதர்கள் காமக்ரோத, மதமாத்ஸர்யம், லோபம் முதலிய கஜங்களை நாசம் செய்யும் சிம்மம் போல விளங்கு வார்கள். ஹே சுத்த ஸத்வ ரூபியே, உம்மைப் பரதத்வமாக பஜிக்கும் எங்களை அனுக்ரஹித்து, எங்கள் ஹ்ருதயக் கோவிலில் நிரந்தரமாக எழுந்தருளி ஆட்சிப் பீடம் செய்யுமாறு நாங்கள் பிரார்த்திக்கிறோம். ஹே அருணஸகுண குண மந்திர ஸுந்தர "திவாகரா," (748)

"விஷய போகங்களாகிற கமல வனத்தில் பிரவர்த்திக்கும் எங்கள் மனதை, அந்த தாமரைக் காடுகளை நாசம் செய்யும் பிரபல மார்கழி மாதத்தின் மூடு பனிமாதிரியாக விருந்து, ரக்ஷித்து அருள வேண்டும், மிக்க உதார மனத்துடன் எங் களுடைய அபராதங்களை க்ஷமித்து அருள் பாலிக்க வேண்டும். வேங்கட வரதா, ஸம்சார பவமாகிற கடலை மந்திரா சலத் துடனும் வாசுகியின் சகாயத்தினுலும் நீலக் கடல் கடைந்த கோல மலர்ப் பாவைக்கு அன்பா, உங்களைப் பெற்று இனிக் காலத்தை வீண் போக்காமல் உங்களுடைய தாள்களைப் பற்றி எங்களுடைய அருவினைகள் அகல, சுடர் ஞானத்துடன் [அன்று குருகூர் சடகோபன் சொல்லியது போல, அவாவறச் சூழ்ந்தாயே என்கிறபடி] எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டீரே, உங்களைத் தொழுது கொண்டிருக்கும் எங்களுக்கு சம்சார பாப பயங்களை ஒழித்து உங்களுடைய அன்பர்களாக செய்து கொள்ள வேண்டும்." (749)

"ஸ்யாம சுந்தரா, ராஜீவ நயனு, ஸ்ரீ ஹரி, (சேஷ நாராயணு), தீனபந்து, (ரெங்கநாயகி ஸமேத ரங்க நாதா), உம்முடைய தயையுள்ள அருள் நோக்குக்களை எங்கள்மீது விழச் செய்ய வேண்டும். வேத சாஸ்திரங் களிலும் வைஷ்ணவ கிரந்தங்களிலும் உம்மை ஆஸ்ரித

கல்பதரு, பிரணதார்த் திஹரன், சரணாகத தர்மத்தை ஆஸ்ரயம் செய்யும் சங்கட மோசனன் என்றும் பலவிதமாகப் புகழ் கிறார்களே. அப்பேற்பட்ட தசரத ராமா, நீ உன் தம்பியான லக்ஷ்மணனுடனும், பிராட்டியான ஜானகியுடனும் எங்கள் ஹ்ருதயத்தில் நித்ய வாஸம் செய்ய வேண்டும். ஸரஸிருஹ நயனா, சக்கிரவர்த்தி ராமா, பூபால சூடாமணி, ஸஜ்ஜன ஜீவனா, சக்கிரவர்த்தி ராமா, எங்கள் ஹ்ருதய புண்டரதத்தில் சதாநித்ய கோயில் கொண்டு வாழவேண்டும். (துளசி பிரியா, நாரதர், வால்மீகி. தியாகராஜர் போன்றவர்களேயும் விஸ்வாமித்திர, வஸிஷ்ட, கௌதம, காஸ்யப, அகஸ்திய பரத்வாஜ, யாக்ஞ்யவல்கிய ஆகிற மஹா முனிவர்களேயும் சந் தோஷிக்கும் பிரபோ, முனிரஞ்சனரே, [சுக்ரர், மார்க்கண் டேய பிரஹஸ்பதிகளுக்கும், சுகருக்கும், தர்ம புத்ராதி பாண் டவர்களுக்கும்) ஆனந்தம் கொடுத்த தீனரக்ஷகா, (காக புசுண்டி, கருடன் விஸ்வக்ஸேனர் குஹன் போன்றவர்களுக்கு நித்யதாரகமாக விளங்கிய] பிரபோ, ராஜாதி ராஜா, [ரதி ராஜ சதலாவண்யா,] துளசிதாஸ பிரியா, உங்களுடைய தயை இல் லாமல் இந்த ஜன்மம் எதற்காக விருக்க வேண்டும்? ஹே பிரபோ, (தசரத ராமா, காவேரி ரங்கா, சேஷாசல நாயகா, வரத பிரபோ,) ரகுநாதா, எங்களே ரக்ஷிக்க வேண்டும். உங்களே தர்சனம் பாக்யம் பெற்ற மஹானுபாவர்கள், உங்கள் நாம ஜபங் களேச் செய்யும் மஹா யோகிகள், தங்கள் பாப பயங்களேப் போக்குவதற்கு எவ்விதம் ஆஸ்ரயிப்பார்களோ, அது போல உங்களே ஆஸ்ரயிக்கும் எங்களுக்கும் உங்களுடைய கருண வாத்ஸல்யத்தையும், ரக்ஷகத்தையும் ஸதா கொடுக்க வேண்டும்.'' (750)

''ஜானகி நாதா, கோஸலபுரி ராஜா, உமக்காக கோஸல தேச ராஜ பட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. கிருபாசிந்து, ராம முனி வேஷதரா, உம்முடைய உதார லீலேகளாகிற ராஜ்ய பட்டாபிஷேக வைபவங்களேப் பார்ப்பதற்கு மீண்டும் நாங் கள் அயோத்திக்கு வருகிறோம்.'' (751)

இவ்விதம் பாமாலே பூமாலே சூட்டி ஆனந்த கீர்த்தனம் செய்த மஹா வாக்கேயக்காரர்களான உமா சம்புவைப் பார்த்தார் என் பிரபு சீதாராமன். பரம வினயங்களுடன் அதி

வாத்ஸல்யத்துடன் புகழ்ந்து தாஸ உள்ளம் கொண்ட மஹா கருணை மூர்த்திகள், (எனக்கு ஆத்ம குருக்கள். ஆஸ்ரித கல்பதருக்கள், கபர்தின், நாக பூஷணன், லலிதா பரமேஸ்வரி, திரிபுர சுந்தரி, ஸாம்ப சதாசிவன்) உத்கிருஷ்டமான வாக்குக்களால் ராமனையும் சீதையையும், அனுஜனை லக்ஷ்மணனுடன் கூடிய தாசரதி ராமனை பலவிதமாகப் பாடி ஆடி மனம் கசிந்து தங்கள் யிருப்பிடமாகிய கைலாஸத்திற்கு தனது பரிவாரங்களுடன் சென்றார். அதன் பிறகு பிரபுவினிடம் பரம பாகவத ஸ்ரேஷ்டனை விபீஷணன் வந்தான். பிரபுவை அவன் வணங்கி பிரேமாஞ்சலியுடன் மிருதுவானதும் மதுர மானதுமான குரலில், வினய ஸம்பத்துக்களுடன் பிரகாசிக்கும் ராக்ஷஸ ராஜன் (சாரங்கபாணியாக விருக்கும் ரெங்காநதனைப் பார்த்து அடி பணிந்து) வார்த்தைகளை ஸமர்ப்பிக்கலானான். [அப்பேறப்பட்ட ரங்கநாயகி சமேத ரங்கநாதனுக்கு, சேஷாசல நாயகனுக்கு உமா மஹேஸ்வரர்களைப் பணிந்த நான் விபீஷணனை புரம் வைத்து ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். கிருபாஸிந்து என்னையும் எங்களையும் ரக்ஷிக்க வேண்டும் என்று பக்தியுடன் பிரார்த்திக்கிறேன்.] (752)

[*தியானம்*

திருவேங்கடத்தானே, நாராயணா, ரெங்கநாயகி ஸமேத ரெங்கநாதா, எனது ஆருயிரே, என் ஆவிக்கு ஒரு பற்றுக் கொம்பு நீதானே இருக்கிறாய். உன் அருளின்றி நான் அதை அறிவேன்? நீயே சொல், நீதானே நம்மாழ்வாரால் காணப்பட்ட அம்பர நற்சோதி. நீதானே ராமானுஜன் காட்டிய பிரமன், ஹரன். ராமுனியே, கூசாமல் உன்னைத்தானே ஆராவமுது என்று சொல்லுகிறேனே. புண்டரீகாக்ஷா, நீதானே கோல வராகம் பெருமான். ஹே முதல் தனிவித்தே, பெரிய பெருமாள் மெய்ப் பதங்களை நினைத்து வாடி வதங்கி தன்னை ஸமர்ப்பித்துக் கொண்டானே. அந்த ராக்ஷஸ ராஜனை விபீஷணனை புரம் வைத்து நான் சரணமடைகிறேன். ராமானுஜன் காட்டிய சதுர்வ்யூஹம் எனப்படும் பரம காருணிக பரப் பிரும்மமும், பரம காரணத் பரப்ரும்மாகிற வாஸுதேவ ஸ்வரூபமும், ஸங்கர்ஷணரும், பிரத்யும்னரும், அதற்குப் பின் ஏற்பட்ட அநிருத்த

நாராயணனும் நீதானே. திரி குணங்களின் ஸம்பந்தம் பெற்ற க்ஷேத்ரமாகிற சரீரத்தில் வசிக்கும் புருஷா, நாராயணு, என்று பாஞ்சராத்திரங்களில் புகழப்படும் பரமாத்மா, தர்மபுத்ரர், விபீஷணன், பிரஹ்லாத நாரதாதி, துருவன், மார்க்கண்டேய, நம்மாழ்வார், பராசராதிகளாலும், வைஷ்ணவ பாகவத பிரபன்னர்களாலும் எனது பூர்வாசார்யர்களாலும், பிரபன்ன வித்யையினுல் பஞ்சராத்திர விதிப்படி சரணமடைந்தவர்களைக் காப்பாற்றும் காவேரி ரங்கநாதா, இவ்வுலகில் கண்ணனைக் காட்டிலும் ஒரு ஆசார்யன் மூலமாகத்தான் எம்பெருமானை அடைய வேண்டும், என்கிற உறுதியால் நம்மாழ்வாரை, மதுரகவி ஆழ்வார் ஆஸ்ரயித்தது மாதிரியும், ராமானுஜரை, திருவரங்கத்து அமுதனுர் ஆஸ்ரயித்தது போலவும், ஸதாசார்ய திருவடிகளே தமக்கு உத்தாரண தாரக போஷகம் போக்யம் என்று கொண்டு இடைவிடாது கைங்கர்யம் செய்து, பகவத் பக்தியினுலும், ஆசார்ய பக்தியினுலும் உலகுக்கு நல்வழி காட்டிய பூர்வாசார்யர்களை புரம் வைத்து, நான் உங்களை பிராட்டியுடன் கூடிய பெரிய பெருமாளின் மெய்ப்பதங்களை சரணமடைந்திருக்கிறேன். உங்கள் அடிக்கீழ் என்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கருத்த கண்களை உடைய சீதா பிராட்டியே, அபராதம் செய்த காகா சூரனையும் ராக்ஷஸிகளையும் ஹனுமாரிட மிருந்து காப்பாற்றி, விபீஷணனையும் சரணம் என்னும் வார்த்தையைச் சொன்ன பிறகு ரக்ஷித்த ராமனுடைய கோஷ்டியானது உன்னுலே சிறிதாக்கப்பட்டது. அப்பேற்பட்ட சாந்தையான சீதா மங்கள மூர்த்திக்கு ஆயிரம் நமஸ்காரங்களைச் செய்கிறேன். ரங்கநாதரே, என் பிராட்டி உமக்கு ஏற்ப, தக்க அவதாரத்தை லீலையிலும் செய்து உமக்கு பெருமையை விளைவிப்பதாக விருக்கிருள். ரெங்கராஜா, வரதராஜா, த்வய மந்திரத்தை அனுஸந்திக்கும் என்னிடம் கருணை காட்ட வேண்டும். சரணம் என்று சொல்லும் எங்களை ரக்ஷிக்க வேண்டும்.]

"பிரபு, ஸாரங்கபாணி, எனது பிராதாவான ராவணன் தன்னுடைய குலத்தையும் தனது ராக்ஷஸ வம்சத்தையும் படை சேனைகளுடன் கொன்று போகும்படி செய்துவிட்டான். இந்தச் செய்கையினுல், பிரபு, திரிபு வனங்களிலும் தங்களுடைய சுத்த

மானதும் விமலமான புகழ் கீர்த்திகளை விஸ்தாரமாக பரவும்படி செய்துவிட்டான். இப்பொழுது நான் தீனனுகி விட்டேன். பாப மலினுகிவிட்டேன். ராக்ஷஸ குலத்திற்கு பாபக்கேடான செய்கையைச் செய்துவிட்டேன். ஜனங்கள் என்னை ஏசி ராக்ஷஸ குலத்ரோஹி என்று சொல்லும்வகைச் சொல்லிற்கும் மெய் சாக்ஷியாகி விட்டேன். பிரபோ, இகத்திலும் பரத்திலும் வாழவைக்கும் உதாரரே, உம்மிடம் ஒரே மதியால் சரண மடைந்து, உம்மையே பரம் என்று சொல்லப்படும் உத்கிருஷ்டமான ஸம்பத்தை என்றும் சாஸ்வதமாக அடைந்திருக்கும் என்னை பரிபூர்ண காமராக என்னிடம் கிருபை செய்ய வேண்டும், என்னை பாப பயங்களிலிருந்து ரக்ஷிக்க வேண்டும்.'' (753)

''ரெங்காநாதரே, ஜானகி நாதா, லக்ஷ்மி நாயகா, என்னுடைய கிருஹத்தையும், குலத்தையும் புனிதமாக்க வேண்டும். லங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு, எனது கிரஹத்திற்கு அதிதியாக எருந்தருளி தங்களுடைய சிரமங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். கிருபாளு எனது பொக்கிஷங்கள் கிருஹம், ஸம்பத்துக்கள் யாவையும், ஒருவித களங்கமின்றி பிரஸன்ன மனத்துடன் தங்களுடைய பாதங்களில் ஸமர்ப்பித்திருக்கிறேன். அவைகளை வானரங்களுக்கு தங்கள் இஷ்டப்படி வினியோகம் செய்யவேண்டும்.'' (754)

''என்னை ஸகல விதத்தாலும் உன்னைச் சேர்ந்தவன் என்று ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும். என்னையும் தங்களுடன் அயோத்யாபுரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.'', என்று வணக்கத்துடன் விபீஷணன் விக்ஞாபித்துக் கொண்டான். தீனதயாளு, என் பிரபு, மிருது பாஷணன் விபீஷணனுடைய வசனங்களைக் கேட்டார். அவருடைய இயற்கையானதும் கோமளமான மனம் அதிகமாக கசக்கப்பட்டு, அவருடைய விசாலமான நேத்ரங்களிலிருந்து கண்ணீர்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. (ஆம். என் பக்தன் சொல்லுவது வாஸ்தவம்தான், என்று உணரும்படி அவருடைய செய்கைகள் இருந்தன. பரம புருஷோத்தமன், அன்று சஹாதேவனின் பக்திக்கு வசப்பட்டது போல, இன்று ராக்ஷஸ ராஜனின் பக்திக்கு கட்டுண்டப்பட்ட மாயனுக விளங்கினுன். அப்பேற

பட்ட பக்தவத்ஸல ராமனே, கிருஷ்ணனே, விபீஷணன், சஹாதேவன் ஆகியவர்களை முன்னிட்டு சரணமடைகிறேன்.]
(755)

ஸ்ரீ ஸத்யவ்ரத ராமன் பதில் சொன்னார், "ஐயா, தம்பி விபீஷணு, நீ சொல்வது போல, உன்னுடைய ஐஸ்வர்ய பொக்கிஷங்கள் என்னுடையவை என்று சொல்வது மிக்க ஸத்யம் தான். இப்பொழுது என் பிரிய பரதனின் ஞாபகம் எனக்கு வந்து கொண்டிருக்கிறது. ஒரு நிமிஷம் ஒரு கல்பத்தைப் போல நீண்டதாகவும் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்."
(756)

"என் அருமைத் தம்பி, பரதன் ராஜரிஷியைப் போல தபஸ்வியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு, நிரந்தரமும் பலஹீனமாக மலினமான ஆகாரம், உட்கொண்டு, கடுமையான நியமம் முதலியவைகளால் ஸதா என்னை ஸ்மரித்துக் கொண்டு, ஜபம் செய்து கொண்டு, இருக்கிறான் பிரிய சகா, என் நிலைமையையும் யோசித்துப் பார், ஏதாவது உபாயம் செய்து எங்களை சீக்கிரமே அயோத்தி சேரும்படி செய்யவேண்டும். அவனைவிட்டு இனி அரைக்ஷணமும், பிரிந்திருப்பது மிகவும் கொடுமையாக விருக்கும்." (757)

"நான் காலம் கடந்து அயோத்திக்குச் சென்றால், என்னுடைய நிஜ பிராதாவை உயிருடன் தரிசிக்க முடியாது." அப்பொழுது பிரபுவின் பரத நினைப்பு அவரை புளகாங்கிதமடையச் செய்தது. அவருடைய சரீரம் வரப்போகும் இன்பச் சேர்க்கையால் ஆனந்தத்துட னிருந்தது. (758)

ஸ்ரீ ராமன் மீண்டும் சொல்ல ஆரம்பித்தான். "விபீஷணு, நீ கல்பம்வரை ராஜ்யத்தை அரசு ஆண்டு வா, மனத்தில் ஸதா என்னை ஸ்மரித்துக் கொண்டு, அதன் பிறகு ஸாதுக்கள் வந்து சேரும் என்னுடைய வைகுண்ட பதத்திற்கு நீயும் வந்து சேருவாய், கவலைப்படாதே." (759)

விபீஷணன் பிரபு ராமனுடைய வசனங்களைக் கேட்டு, சந்தோஷம் கொண்டான், கிருபாதாம். பகவானுடைய பாத சரணங்களை வைஷ்ணவ ரீதியில் சரணமடைந்து நமஸ்கரித்தான். இதைக்கண்டு வானரங்களும் கரடிகளும் சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் பிரபுவின் சரணங்களில் விழுந்து,

நமஸ்கரித்து நிர்மல கீர்த்திகளை உடைய ராமனை பல விதங்களால் புகழ ஆரம்பித்தார்கள் (760)

[*தியானம்*

சீதாராமா, மஹா லக்ஷ்மி சமேத நாராயணு, ஜானகி மனோஹரா, ரகுகுல திலகா, ராஜீவ பவாதி வந்த்யா, ராஜீவ நயனு, நாரத தியாகராஜ துளசி முனி ஜன பூஜிதபத ராமசந்திர புண்ய மூர்த்தியே, ஆஸ்ரித ஜனவாத்ஸல்யைக ஜலதே, பிரபு, நீதான் எங்களுடைய அபராதங்களை பூர்ணமாக மன்னிக்க வேண்டும். ஆரித்திகல்பா, ஸகலேதரவிலக்ஷணு, ஆபத்ஸகா, ஸ்ரீமந் நாராயணு, நீதானே எங்களுக்கு அசரண்ய சரண்யன், அனன்ய சரண : த்வத் பாதார விந்த யுகளம் சரணமஹம் பிரபத்யே, என்று சொல்லி த்வய மந்திரத்தை அனுஸந்தானம் செய்து நமஸ்கரிக்கும் எனக்கு ரக்ஷணம் நீங்கள் அளிக்க வேண்டும். 'மாமேவ அனுத்தமாம் கதிம்' என்று நம்பி வாழும் ஞானியை எனக்குப் பிடிக்கும் என்று சொன்னுயே; பரபக்தி பரஞான பரம பக்தியை ஏக ஸ்வபாவமாக வேண்டும் எங்களை நீதானே ரக்ஷிக்க வேண்டும். அகிலலோக ஜகன் மாதரம், அஸ்மன் மாதரம், அசரண்ய சரண்யாம் அனன்ய சரண : சரணமஹம் பிர்பத்யே, என்று பெரிய பிராட்டியை சரண மடைந்து உன்னை வந்து அடைந்திருக்கும் ராமானுஜ வேதாந்த தேசிகாதிகளின் சிஷ்யனுக விருக்கும் எங்களுக்கு, அறு லோசித விசேஷா சேஷலோக சரண்யனே, ரக்ஷணம் தர வேண்டும் என்று பிரார்த்திக்கும் எங்களைக் கட்டிக்காக்க வேண்டும். கேவலம் மதீயயைவ தயயா, மத் ப்ரஸாத லப்த மச்சரணுரவிந்த யுகளங்களை காந்திகாத் யந்திக பரபக்தி பரஞான பரம பக்தியுடன் மதேசானு பவ: கிங்கரோ பவ, என்று ராமானுஜர் அருளிச் செய்தாரே, அது போல எங்கள் பரம பக்திக்கு உன் வாயினுல் ஸித்திக்கட்டும். மாசுச; என்று நீ அர்ஜுனனுக்குச் சொன்னுயே; அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி, யேதத் வ்ரதம் மம, என்று கடற்கரையில் ராமனுக விபீஷணனுக்கு அபய பிரதானம் செய்தாயே. இவ்விதம் உன் ஞான ஸம்பந்தமாக தர்சனம் செய்யப்பட்ட எங்களிடமும் தயை செய்ய மாட்டாயா? ஸ்ரீ தாம், ராமபதம்,

வேங்கட பதம், தயித ரங்கதாம் என்கிற ராமபதம், என்று சொல்லப்படும் ரெங்கநாயகி ஸமேத ரங்கநாதா, என்னை நீதானே காப்பாற்ற வேண்டும். வெல்ல முடியாத விஷய போகங்களில் அமிழ்ந்து போன எங்களுக்கு மேன் மேலும் பாபங்களும் பயங்களும் ஸம்பவிக்கின்றன, அவைகளைக் கண்டும் நான் பயப்படவில்லை. உனது அனுபவத்தை அவைகள் தடுக்க முற்பட்டு விடுமே என்கிற பயம்தான் என்னைத் தவிக்கச் செய்கிறது. நீ என்ன செய்ய வேண்டும்? என்று என்னைக் கேட்பாயோ? இவன் நம்மைச் சேர்ந்தவன், இவனுக்கு நம்மைவிட்டால் வேறு நாதன் கிடையாது, என்று நீயும் பிராட்டியும் ஸங்கல்பித்து, அதைச் செயல் முறையில் உண்மையாக்க நிறைவேற்ற முயல வேண்டும். தயாதந, ஜகத்பதே, தயிதரங்கா, ஸர்வ ஸ்வாமியே, ரங்கதாமா, நீ காக்க நினைத்துவிட்டால் அதை மறுத்து யார் என்ன சொல்லக்கூடும்? ஹே விபு, எனது நிலையை நன்ருகத் தெரிந்து கொண்டு அருள வேண்டும். அத்ரைவ ஸ்ரீ ரங்கே ஸுகமாஸ்வ, என்று திருவாணை யிட்டாயே. அப்பேற்பட்ட உனது ஆணையின்படி எனது ஆசார்யர்களின் கடாக்ஷத்தினுல் நானும் என் பரிவாரங் களும் விசேஷமான மணம் கொண்டு, பயத்தை விடுவிக்கும் ராமபத்ர மூர்த்தியை, ஜானகி, லக்ஷ்மண சகிதம் நமஸ் கரிக்கிறோம். விபீஷணனே, வானரங்களே, கரடிகளே, ராம ஜானகி லக்ஷ்மண சகாக்களே, நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.]

உடனேயே விபீஷணன் தனது ராஜ மாளிகைக்குச் சென்ருன், அநேக உத்தமமான ரத்ன முத்து மணிகளை யும் ஆபரணங்களையும் எடுத்துக் கொண்டு, அத்துடன் புஷ்பக விமானத்தில் அவைகளை அமர்த்தி, ராமபத்ர மூர்த்தி யிடம் வந்து சேர்ந்தான். அந்த புண்யமான புஷ்பக விமா னத்தை ராமனின் முன் ஸமர்ப்பித்து, விபீஷணன் கைகளைக் கட்டிக் கொண்டு, ராம ப்ரீதி ஒன்றையே பரம ப்ரீதியாகவும், ஸ்வயமேக அனுபவமாயும், வரமாக வேண்டி நின்ருன். (கேவலம் ராம பக்தியையே அனன்ய பிரயோசனமாக வேண்டி நிற்கும் விபீஷணனைப் பார்த்தார் பிரபு ராமபத்ர மூர்த்தி. கிருபாஸிந்து, இயற்கையாகவே அன்புள்ளவன், பக்த

வத்ஸலன், இப்போது மேன்மேலும் கிருதக்ஞை கொண்டவ ளைகப் பூரித்து பரிபூர்ண காமரான ஜானகி ராமன், ஸர்வ தாபத்ரயங்களையும் அழிக்கும் அபீதி ஸ்தவன், பகவானையும் பிராட்டியையும் ராமானுஜனையும் பார்த்து நின்ற விபீஷணனைக் குளிரக் கடாக்ஷித்தார். அனுலோசித விசேஷ அசேஷலோக சரண்யனை ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி,) ரகுகுல திலகன், ஏக பக்தியுடன் விளங்கும் விபீஷணனைக் கட்டித் தழுவிக் கொண்டு அவனுடைய தாஸ்ய பக்தியை கைங்கர்ய சேவைகளை ஸ்வீகரிப்பது போல சிரித்துக் கொண்டு பதில் சொன்னார். (761)

''பிரியசகா, விபீஷனா, இந்த புஷ்பக விமானத்தில் ஏறு. ஆகாயத்திற்குப் போய் விமானத்திலிருக்கும் வஸ்திர ஆபரணங்களை மழை மாதிரியும் புஷ்பவர்ஷம் மாதிரியும் பூமியில் வர்ஷி,'' என்று ஆக்ஞையிட்டார். அதன் பிரகாரம் ராம கிங் கரனை விபீஷணன் விமானத்தில் ஏறி ஆகாயத்திற்குச் சென்று, வஸ்திரங்களையும் ரத்ன மணி முத்துக்களையும் பூமியில் வர்ஷம் செய்தான். (அப்பேற்பட்ட பரபக்தி, பரஞானம், பரம பக்தி கொண்ட பாகவத ஸ்ரேஷ்டனை விபீஷணனை நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) (762)

யார் யாருக்கு எந்த அபிப்ராயம் இருந்ததோ, அந்த மனோவாஞ்சையின் படி அங்கு கூடியிருந்த வானரங்கள், கரடி கள் அவைகளை பூமியிலிருந்து பொறுக்கி எடுத்துக் கொண்டார் கள். ரத்ன மணிகளை தங்கள் வாய்களில் போட்டுக் கொண்டார்கள். (அவைகளைச் சாப்பிடும் நைவேத்யங்கள் என்று எண்ணிக்கொண்டு, வாய்களில் போட்டுக் கொண் டார்கள்.) அவைகள் போக்யத்திற்குத் தகுந்தது இல்லை என்று கண்டவுடன் அந்த வானரங்களும், கரடிகளும் வாயி லிருந்து அவைகளை உமிழ்ந்து விட்டார்கள். இதைக் கண்ட ஸ்ரீதேவியான ஜானகியும், ராமானுஜனும், பிரபு ராமபத்ர மூர்த் தியும் பரம கௌதூகலத்துடன் கிருபை பரிபூர்ணமாக பரிமளித் துக்கொண்டு, சிரித்துக் கொண்டார்கள். (அவ்விதம் வானரர் களிடமும், கரடிகளிடமும் கருணை காட்டிய ராமபத்ரா, ராகரஹிதா, ஸ்ரீ ராமா சீதாலக்ஷ்மணா, என்னிடமும் அதே சுகந்தமான கிருபையைக் காட்டமாட்டேன்கிறாயே.

உன்னையும், உன் சேவகர்களையும் நான் அவமதித்து விட்டேன் என்று நினைக்கிறாயா? சரணாகத வத்ஸலா, உன்னுடைய தாரக நாமத்தை அல்லவோ நான் நம்பினேன், பராத்பரா, தியாகராஜ ஹ்ருதய நிவாஸா, ஸ்ரீ ரங்கதாமா, ரங்கேஸ்வரா, ரங்கப்ருத்விபதே, துளசி பிரியா, ரமாநிவாஸா, உன்னையே வேதாந்த தேசிகன், ராமானுஜாதிகளால் காட்டப் பட்ட வழியில் அனன்ய கதியாக வந்திருக்கும் எங்களுக்கு செற்றோற்கு வெப்பம் கொடுக்கும் விமலா, இரவு பகலாக உன் நினைவாகவிருக்கும் எங்களையும் உங்கள் பொருளாக ஸ்வீகரிக்க மாட்டாயா? தசரத நந்தனா, என்னிடம் இந்த பராமுகம் வேண்டாம். அப்பா, அம்மா தயை செய்ய வேண்டும்.) (763)

எந்த பரம மங்கள மூர்த்தியை முனி ஜனங்களும் வேதங் களும் அறியமுடியாமல் திணறி, இப்பேற்பட்ட அதிசயிக்கத் தக்க அகில ஹேயப்ரத்யனீக கல்யாண குணங்கள் உள்ள வரும், அவாப்த ஸமஸ்த காமனாகவிருக்கும் சீதாராமனை ராமானுஜாதிகளால் ஸ்வபாவமாகவே ஏக பக்தியினாலும், விசேஷ ஞானத்தினாலும், ஐஸ்வர்யங்களாலும் பூஜிக்கப் பட்டு, ஸந்ததமும் ஆராதிக்கப்படுகிறார்களோ, அந்த பரம கருணாமூர்த்திகளான சீதாராம மூர்த்திகள், பக்த ஜன கல்பதரு; (ராமபக்தியையே ஸாம்ராஜ்யம் என்று நினைக்கும் படி ஆச்சர்யமாக அற்புதமாக, ஸகலருக்கும் பிதா மாதாவாகவும், சகல சராசரங்களும் பூஜிக்க வேண்டிய குருவும், மஹானும் அவர்களே என்று ஞானபூர்வமாக அறியும்படி, பக்தி விலாஸங்களுடன் அறியும்படி) எனது கிருபாஸிந்து, (நாரத ரிஷியின் பிரபுவாகிற) ஸ்ரீ ராமன் சீதையுடன் பலவிதமான விநோதமான லீலைகளை வானரங் களின் முன்பு செய்து காண்பித்தார். (764)

அவைகளைப் பார்த்து ரசித்த பரம மங்கள மூர்த்தியான பவர் தனது பத்னியான உமையிடம் சொன்னார், "உமா, பகவான் ராமசந்திர மூர்த்தியை அடைவதற்கு பல மார்க்கங் கள் இருக்கின்றன. யோக முறைகள், ஜப முறைகள், தான முறைகள், தவ சித்திகள், யக்ஞங்கள், விரதங்கள், உப வாஸங்கள், இன்னும் அநேக நியமங்களுடன் கூடிய அநேக

வழிகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் செய்த பிறகும், அனன்ய பிரயோசனமாக ராம கிருபை, ராமானுபவம், ராமானுவர்த்தி யாவும் சுலபமாக கிடைப்பதில்லை. ("அர்த்த பஞ்சகம் என்று சொல்லப்படும் ஸ்வரூப விரோதிகளானதும், பகவானுக்கும் தனக்கும் உள்ள உறவை பிரிக்க முடியாத ஸம்பந்தம் என்று அறியாமல் தன்னைப் போன்ற சுழலுகின்ற மற்ற ஜீவர்களையும் சாஸ்வதமான உறவு என்று எண்ணியும்; ஆத்மாவுக்கும் உடலுக்குமுள்ள தன்மைகளையும் அறியாமல் புலன்களின் வாயிலாகக் கிட்டும் போகங்களே நிலைபெற்றன என்று எண்ணியும்; பூர்வாசாரியர்களால் வெண்ணெயைப் போல திரட்டி சாப்பிடுவதற்கு சுலபமாகச் செய்யப்பட்ட ஸித்தாந்தங்களில் ஸந்தேகத்தைக் கொண்டு, ஜீவர்கள் தடுமாறி தகாத வழியில் சென்று தங்கள் முக்திக்குத தடைகளையேற்படுத்திக் கொள்கிறார்களே; அப்பேற்பட்டவர்களை என் பிரபு ஜனார்த்தனர், ஆஸ்திகர்களின் ரக்ஷணத்திற்கு விரோதம் செய்யும் சத்ருக்களை அழிக்கும் கிருபாஸிந்து, மெய்யருள் செய்திடுந் திருமால், வேழமலை மேயவன், பொன்னருள் செய்திடும் நாகமலை நாயகன், ஸகல பல தாயகன், தன்னை வந்து ஆஸ்ரயித்த சேதனனை அன்று ராமானுஜன் காட்டினாரே, அனன்ய பிரயோசனாகாதே அனன்யார்ஹ சேஷ பூதனாகான; அனன்யார்ஹ சேஷ பூதனாகாதே அனன்ய ஸரணனாக மாட்டான். அனன்ய ஸரணனாகாதே அதிகாரி புருஷனாக மாட்டான்.) அதுபோல, அனன்ய பக்தி என்று சொல்லப்படும் பரபக்தி பரஞான, பரமபக்தியின்றி, ராமப்ரீதியை அடைய மாட்டான். என் பிரபு ஸ்ரீராமன் அப்பேற்பட்டவர்களிடம் அதிக கிருபா பூர்ணராகவிருக்கிறார்." (அப்பேற்பட்ட நிஷ்களங்க ப்ரேமை பக்தி கொண்ட உமா மஹேஸ்வரர்களை முன்னிட்டுக் கொண்டு, ராமதம்பதிகளை ராமானுஜனுடன் சேர்ந்து ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன. இவர்கள் என்னிடமும் தயா பூர்ணமாக விருக்க வேண்டும்.) (765)

கரடிகளும் வானரங்களும் வித விதமாக வஸ்திர பூஷணங்களைத் தரித்துக் கொண்டு ரகுபதியினிடம் வந்து "பிரபோ, எங்களையும் ரக்ஷிக்க வேண்டும்." என்று சொல்லி

சரணம் அடைந்தார்கள். அநேக ஜாதி ரீதிகளின்படி அலங்கரிக்கப்பட்ட வானரங்களையும் கரடிகளையும் கோஸலாதிபரான ஜானகிராமன் கண்டு சிரித்துக் கொண்டார். அடிக்கடி அடிக்கடி அவர்களை கடாக்ஷித்துக் கொண்டு அந்த ராம தம்பதிகளும் லக்ஷ்மணனும் சிரித்துக் கொண்டனர். (766)

என் பிரபு ஜானகிராமன் வெகுகாலமாக தங்கள் திருவடிகளை சேவிக்கின்றவர்களும், சக்தியற்ற சபல மனமுடைய வானரங்களையும் கரடிகளையும் பார்த்து பூர்ண ஆனந்தத்துடன் தயையைக் காட்டி அவர்களை கடாக்ஷித்தார். (ரகுராமன், புருஷோத்தம ராமன், கர்த்தா, போக்தா, ஜனுர்த்தன, என்று சாஸ்திரங்கள் சொல்லும்படி, நீயே இயற்றி, நீயே பார்த்து, நீயே சந்தோஷிக்க வேண்டியது,) அன்று வேதாத்மாவான கருடன் நாக பாச விமோசனத்தின் போது, சொன்னரே ''ஹே வேத ஸ்வரூபியான ஜானகி மனோஹரா, எல்லா வகைப் பற்றுதல்களையும் கைவிட்டு, உனது திருவடிகளையே தஞ்சம், என்று பற்றிய சேதனர்கள் உன்னைப் போல நித்யராகும்படி அவர்களுக்கு அப்ராகிருதமாகிய திவ்ய சரீரத்தையே அன்றி உனது வாழ்நாளையும் அவர்களுக்கு அளிக்கின்றாயே, நீ அங்ஙனம் அளித்த பின்பு, உன் திருவுருவுக்கு அழிவும், வாழ்நாட்களுக்கு அவதியுமின்றி காலவரையறைக் கடந்து நிற்கின்றாயே; உன் தேக போஷணைக்காக தானியம் தனம் வஸ்திரம், பூஷணம், காண் பூமி முதலிய பல்வகைப் பொருள்களையும் வேண்டுமே என்று பாதுகாக்கின்றாயில்லை; யாதேனும் உன் பொருளில் இச்சையும் வைக்கிறாயில்லை; இப்படி பசையற்றிருந்தும், பல்லாயிரக் கோடி அண்டங்களிலுமுள்ள அகில சராசரங்களுக்கும் நீயே தாரக போஷகமாயிருக்கிறாய்; அந்த ஆத்மாக்களுக்குள் அந்தர்மியாமியாகவுமிருக்கிறாய். ஐம்புல உணர்வும், மன உணர்வும் உயிருணர்வும், இவைகளுக்கும் காரணமாக அதீதப் பட்டிருக்கின்ற என்னைப் போன்ற பிரும்ம சாக்ஷாத்காரமானது, அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த ஸ்வரூபமாய் இருக்கின்றதென்றும், தத்துவ நியதி பண்ணிக் கருதி, குரு ஸ்வானுபவங்களாய்

ஐயந்திரிபற உணரும் மெய்யுணர்வாக விளங்குகின்றாயே, அப்பேற்பட்ட புருஷோத்தம ராமனுக்கு, கம்பராழ்வரை முன்னிட்டு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) அந்த புருஷோத்தம ராமன், மிருதுபாஷணன், மதுர பாஷணன் பூர்வபாஷணன் அப்போது கிருதக்ஞதை பூர்வமாக உத்தமச் சொற்களைச் சொல்ல ஆரம்பித்தார். "சஹோதரர்களே உங்களுடைய பாஹு பலத்தின் ஆதரவினால் ராவணன் கொல்லப்பட்டான்; அதன் பலனாக விபீஷணனுக்கு ராஜ திலகம் கிடைத்தது. நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்." (767)

"இப்பொழுது என் கார்யம் மிச்சமின்றி பூர்ணமாகி விட்டது. இனி நீங்கள் தாமதம் செய்யாமல் உங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லலாம், எப்பொழுதும் என்னை நினைத்துக் கொள்ளுங்கள். யாவருக்கும் பயம் வேண்டாம்;" என்று பரம சௌசீல்ய வாத்ஸல்யத்துடன் லோகநாதராகிற ஜகத்பதி என் ராமன் சொன்னார். பிரேமைக் கொத்துப் போல பிரகாசிக்கும் என் பிரபு ராமமூர்த்தியின் வசனங்களை ஸகல வானரங்களும், கரடிகளும் கேட்டனர். அவைகள் அஞ்சலி பந்தத்துடன் அதி பிரேமை வசமடைந்து, வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தார்கள். (768)

[தியானம்

கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்று பால் சோர நனைத்தில்லம் சேறாக்கும் நற் செல்வனாகிய பரதனுக்கு பூர்வமாக ஜனித்தவனே, என் ராமா, உன்னுடைய ராம பக்தி ஸாம் ராஜ்யம் இருக்கிறதே, அது ரொம்ப பரந்ததாகவும், ஸ்மரிப்பதற்கும் பார்ப்பதற்கும், பிரும்மானந்தத்தைத் தருகிறது உன்னுடைய ஸம்யோக ஞானமும், ஸ்வானுபவமும், ஏக பக்தி ரஸத்துடன் சால அனுபவிக்கப்படும் உன்னுடைய லீலா ஸ்ருஷ்டி, ஜகத் திரய ரக்ஷகமும் கோலாஹலமுடைய தியாகராஜாதிகள் ஆனந்த கீர்த்தனம் செய்யும்போது, என் மனது நம்மாழ்வாரைக்கண்ட மதுரகவி ஆழ்வாரைப் போல சந்தோஷத்தால் பூரிக்கிறது. நாராயணா, மஹாலக்ஷ்மி பிரபோ, ராமானுஜா,

ஸ்ரீ ரங்கசாமியின் பக்தி எவ்வளவு மஹத்வம் வாய்ந்தது, என்று அறிய முடிகிறது அப்பா. ஸத்யகாமா, புண்டரீகாக்ஷா, உன்னைத் தவிர எனக்கு கதி வேறு யாரும் இல்லை என்று உங்களுக்குத் தெரிந்தும், தயையும் கிருபையையும் என்மீது செலுத்தமாட்டீர்களா? உங்களுடைய ராஜஸேவை என்கிற பாதுகாப்புத் தொழில் எப்போது கிடைக்கும்? நான் உன்னைச் சேர்ந்தவன், அபார கருணாம்புதே, அனுலோசித விசேஷா சேஷலோக சரண்ய, பிரணதார்த்தி ஹர, ஆஸ்ரித வாத்ஸல்யைக் மஹோததே, ஸ்ரீமான், காகுத்ஸ ராமா, என்று சொல்லி வணங்கிடும் என்னை எவ்வளவு காலம் பொறுக்க வைக்கத் திட்டமிட்டிருக்கிறாய்? நாராயணா, புருஷோத்தமா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே ராமாய நம: என்றும், ஸ்ரீ ரங்கநாத மமநாத, என்று சொல்லி நமஸ்கரிக்கும் என்னை ரக்ஷித்தருள மாட்டாயா? சண்டிகை என்று சொல்லப்படும் வைஷ்ணவி, உன் நாம தேவரூபத்தை பஸ்மம், திருப்புண்டிரங்களாக அலங்காரம் செய்து கொண்டிருக்கும் என்னை உன் அருளால் அடைக்கலம் கொள்ளுவாயே. வாரண வெற்பில் மழை முகில் போல நின்ற மாயவனே, பிரபத்தி என்னும் முறைக்கு தியானம், உபாஸனம், தர்சனம் என்கிறுப் போலே, தியாகம், ஆத்ம நிக்ஷேபம், நியாஸம் எல்லாம் உன்னை ஒன்றையேதானே குறிக்கிறது. ரங்கபதே, வைகுண்டபதே, நான் உனக்குக் தாஸன்; உன் பக்தனுக்குத் தாஸன், உனது பாதங்களில் என் மனதை வைத்து, ராமானுஜாதிகளைப் போல, நித்யம் கிங்கர வாண்யஹம் நதுபுன: குர்யாம் கதர் யாஸ்ரயாம், என்கிறபடி உன் கைங்கர்யம் செய்யும் பேறு பெறுவேன்; ரங்கபதே, ஓம் என்கிற பிரணவத்தில் பிறர்க்கு உரித்தாகாத சேஷத்வத்தை நினைப்பேன், உன்னுடைய விபவ ஐஸ்வர்யங்களாகிற ஆத்ம குணத்தையும், ஸ்வரூப தர்சனத்தையும் நினைப்பவனாக, உன் ஸேவை ஸம்பத்தை மீண்டும் மீண்டும் அடைவேன். ஆசார்யன் மூலம் உபதேசிக்கப்பட்ட த்வயத்தை ராமானுஜரின் ஆக்ஞையினாலும், உனது ஆக்ஞையினாலும் தினமும் அனுஸந்திப்பவனாக என் நிஜ ஸ்வரூபத்தை அடைவேன். எல்லாப் பற்றையும், ரங்கநாதனே, மமநாதா உன்னுடைய நிரவதிக தயையினால் உண்டான ஞானபக்தி

பிரபத்தி விகாஸத்தை உடையவனுக, ரங்கபதி ஸாம் ராஜ்யம் என்கிற பக்தி ஸாம்ராஜ்யத்தில் உன்னை அனுபவிப்பதையே, த்வத் போகை கஸ்வபோகம், எனது போகமாக உடையவனுய் திகழ்வேன். ரங்க ராமானுஜா, அழகிய மணவாளா, அமலனுதி பிரானே, முனி வாஹன போக்யமே, எனக்கு உன் பாதங் களையும் உதர பந்தனம் செய்யப்பட்ட மஹா தோற்றத்தையும், திருமார்பையும், செவ்வாய்ச் சிறுமருங்கில் நப்பின்னை நங்காய், ஸ்ரீ கௌஸ்துபமே, வாட்ட முட்ட என் கண்களுக்கு உங்கள் மேனி ஸம்பந்தம் கொடுக்க மாட்டீர்களா? மஹா அபராதியான எனக்கு, உமையும் மஹேஸ்வரர்களும், பிரும்மா சரஸ்வதி, இந்திரன்,இந்திராணி, திக்பாலர்கள் அவர்களின் மஹிருஷிகள், தேவமாதர்களுடன் கூடிய தேவர்கள், முனிகணங்கள், வான ரங்கள், கரடிகள் கண்டு சேவை செய்து மஹானுபவத்தைப் பெற்ற பாகவத உத்தமர்களுக்குக் கிடைத்த பாக்யம் எனக்கே கிடைக்குமா? சஞ்சலமான மனத்தை உடைய எனக்கு அப்பா, ராம பக்தி யென்னும் கிருபை கிடைக்குமா? மஹா லக்ஷ்மி, பூமியில் சீதையாக அவதரித்ததும், அவர்களுக்குச் சேவை செய்வதற்காக பரத லக்ஷ்மண, சத்ருக்ன, ஆஞ்ச நேயாதிகள் அவதரித்ததும், ராமா, ரங்கேஸ்வரா, உனக் காகத்தானே. சொல்ல மாட்டீர்களா? திருக்கமல பாதம் வந்து என் கண்ணிலுள் புகுந்த நிமலா, நின்மலன் நீதி வானவன் நீண்மதிள் அரங்கத் தம்மானே.]

"பிரபோ, தாங்கள் எதைச் சொல்லி ஆக்ஞை இடுகிறீரோ, அந்த வசனங்களில் நாங்கள் இன்புறுவோம், ஆனல் ஒன்று பிரபோ, உவந்த உள்ளத்தினுய் எங்கள் விக்ஞாபனம் ஒன்றை முழுமதிக் கொண்டு செவி சாய்க்க வேண்டும். ரகுநாத்ஜி, தாங்கள் விண்ணவர்கோன் பணியும் திரைலோக்ய ஸர்வேஸ்வரன். நாங்களோ ஜாதியிலோ சஞ்சல புத்தியுள்ள வானரங்கள், அநாதர்கள் சகாயமற்ற தீனர்கள். அவ்விதமிருந்தும் தாங்கள் தங்கள்சேவைக்காக எங் களை ஸ்வீகரித்தீர்கள்.(கொண்டல்வண்ணு,எங்கள்கோவலனே, எங்கள் அமுதமாகிற உங்களைக் கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணுவே. உம்மை விட்டு எங்களுக்கு வேறு கதி கிடையாது. ஹே நாத, மமநாத, வெண்ணெய் உண்ட

வாயா, எங்கள் சிந்தை கவர்ந்த கள்வா, எங்களை எப்பொழுதும் அடிமைகளாக ஏற்றுக் கொண்டு, உய்யக் கொள்ள வேண்டும். தங்களுடைய நீண்டவப் பெரியவாய கண்கள் எங்களைப் பேதமை செய்கின்றனவே. அமரர்க்கரிய வாதிப் பிரானே, நாராயணா, உன்னுடைய செவ்வரியோடிய நீண்ட பங்கஜாக்ஷங்களால், நீலமேனி ஐயா, எங்களுடைய நெஞ்சில் நிறை கொள்ள வேண்டும். எங்களைக் கிருதார்த்தர்களாக்க வேண்டும்) (769)

அமலனாதிப் பிரான், என் பிரபு லஜ்ஜையின்றி வாய் விட்டு, கள்ளம் கவடு இன்றிச் சொல்லிய வானரங்களின் வசனங்களைக் கேட்டார். அந்த வானரங்களும் கரடிகளும் மீண்டும் சொல்ல ஆரம்பித்தன. "பிரபு, (உங்களுடைய ஸ்வரூபம் மாத்திரமில்லை; உங்களுடைய குணோத்தமமான செய்கைகளும் எங்களை மீண்டும் மீண்டும் அடிமையாக்குகின்றனவே. மஹாக்ருதக்ஞை பூர்வமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் எங்களுக்கு மமதையை உண்டு பண்ணுவது போலிருக்கின்றன.) கல்பதரு, எங்கேயாவது சிறிய ஜந்துக்கள், கொசுக்கள் போலவிருக்கும் எங்களால் பக்ஷி ராஜாவாகிற கருடனுக்கு ஹிதம் செய்யக் கூடுமா? எங்களை தீனர்களாக விட்டு விட்டால், நாங்கள் யாரிடம் புகல் கொள்வோம்?". பிரபு ராமன் வானரங்களும், கரடிகளும் தன்னுடைய ஸம்பந்தத்தை நித்யமாக விரும்பும் பாகவத உத்தமர்களைப் போல, வருந்தி வாடி நிற்பவர்களும், பிரேமையினால் இனி நேரப் போகிற பிராட்டி எம்பெருமானுடைய பிரிவினால் வரப்போகும் துக்கவிஸ்லேஷங்களை வாய்ச் சொல்லினாலேயே பொறுக்க மாட்டாதவர்களாகக் கண்டார். (ராமா, சீதா, லக்ஷமணா, உங்களை அந்த வானரங்களையும் கரடிகளையும் முன் வைத்து சரணமடைகிறேன். என்னையும் கிருதார்த்தனாக்க வேண்டும், பிரபோ.) அந்தக் கரடிகளும் வானரங்களும் தன்னை விட்டுப் பிரிய மனமில்லாமலிருப்பதைக் கண்டார் ஸ்ரீராமன். (770)

(அன்று ராமதர்சனத்தை விட்டுப் பிரிந்த பிரஹ்லாத பக்தியை உடைய தியாகராஜர் எவ்விதம் கதறினாரோ, அது போல) அந்த வானரங்களும், கரடிகளும் புலம்பி அழுதன.

ராம கிருபைக்கு நாங்கள் பாத்திரம் ஆனோம்", என்று இறு மாந்திருந்தோமே, ராமதயையினால் பேற்படுவதும் அன்னை ஜானகியுடன் பிரபு பேசுவதை நாங்கள் மனம் குளிர்ந்து நிரந்தரமாகக் கேட்கப் பேறு பெற்றிலோமே, நிகரற்ற உன்னத சீதாராம கிருபையை அடைய எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றனவே, என்று நினைத்து வருந்திய வானரங்கள், கரடிகள் பிரபுவின் ஆக்ஞையை ஸம்மானிப்பவர்களாக, மன் மதனைப் போல விளங்கும் ஜானகி ராமனின் மங்கள மாதவ ரூபத்தைத் தங்கள் ஹிருதய கோசத்தில் தரிப்பவர்களாக அதி வினயத்துடனும், மிக்க வியாகுலத்துடனும் ராமசீதா லக்ஷ்மண னிடம் விடை பெற்றுக் கொண்டு, தங்கள் இருப்பிடம் சென் றார்கள். (771)

வானரங்களுக்கு அரசனான சுக்ரீவ மஹா ராஜன், நீலன், ஜாம்பவான் என்கிற கரடிகளின் அரசன், அங்கதன், நளன், ஹனுமான், விபீஷணன் இன்னும் வானர கரடிகளின் சேனாதி பதிகள் மாத்திரம் தங்கினார்கள். (772)

அவர்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லை, பிரேமை யினால் கலக்கப்பட்டு, (நேத்ரங்களில் பாரம் கொண்ட கண்ணீர் களுடன் பிரஹ்லாதன் ஹரியை விட்டுப் பிரிந்தால் எவ்விதம் கஷ்டப்படுவானோ, அது போல) அவர்கள் சங்கடப்பட்டார்கள். (தியாகராஜர் போன்ற மஹான்கள் ராம தர்சனத்தைக் கண்ட வுடன் இமைகளைக் கொட்டுவதற்கு எவ்விதம் மறந்து போவார்களோ, அது போல) மஹா பாக்யமுள்ள அந்த வான ரங்கள் ராமசீதா அமுதைக் கண்ட, கண்ட கண்களால் மீண்டும் கண்டு கொண்டு, வணங்கிக் கொண்டு, அந்த ஆராவ முதத்தைப் பருகிக் கொண்டு, வேட்கை தீராமல், இவற்றைத் தவிர்க்கவும் முடியாது, எங்கள் ஏக்கமும் தீராது; அனைத் திற்கும் ஸாரமான ராமசீதா திருவடித் தாமரைகளை ஹ்ருதயா காசத்தில் தரித்துக் கொண்டு அந்த தீப்த சுடர்களைப் பார்த்த வண்ணமாக விருந்தார்கள். (அவர்களை நான் ஆயிரம் நமஸ் காரங்கள் செய்கிறேன். (773)

[*தியானம்*

ராமா சீதா, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீ மதே நாராயணாய

நம: நாராயணு, மஹாலக்ஷ்மி பிரபோ, என்குல நாதரே ஸ்ரீ ரங்க வேங்கட நாரயணு, நீதான் எனக்கு குலதைவம், பிரபோ, நீதானே ஆளவந்தாருக்கும் எனக்கும் குலதனம். நீதானே மமபோக்யம், மம மாதரம், மம பிதரம், மம ஸர்வம். பிரபோ, வைகுண்டபதி, விஷ்வக்ஸேனரிடம் ஒப்புவிக்கப் பட்ட ராஜ்ய பாரத்தையும், அனந்த, கருடன் போன்ற அநேக கோடி பரிசரியர்களால் சூழப்பட்ட பரமபத நாராயணு, ப்ரமவ்யோம சப்தங்களினுல் சூழப்பட்ட ஸ்ரீ பதி நாராயணு, வாக்குக்கும், மனதுக்கும் அகோசரமாக விருப்பவனும், உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே, ராமா சீதா, உன் புகழ் கீர்த்திகளை யாராவது முழுவதாகப் போற்றக்கூடுமா? ஸனக, பிரும்மா, சிவன் முதலியவர்களால் ஸ்மரிக்க முடியாத ஸ்வபாவதி ஐஸ்வர்யங்களை உடைய ஸ்ரீ சீதாபதே, நித்ய சித்தர்களால் சூழப்பட்டிருக்கும் ராமா சீதா, "கதாஹம் பகவத் பாதாம்புஜத்வயம், சிரஸா ஸங்கிரஹீஷ்யாமி; பகவத் பாதாம்புஜ த்வ்ய பரிசர்யாய, பரிசர்யாகரண யோக்ய; ததேக போக: தத் பாதௌ பரிசரிஷ்யாமி," என்று தங்களை ஆத்ம ஸமர்ப்பணம் செய்த ஸாத்யர்கள் மாதிரி என்னைப் பார்க்க மாட்டாயா? உம்முடைய பாரிஷத கண நாயகர்களாலும், த்வாரபாலர்களாலும், கிருபையினுலும், ஸ்நேகத்தாலும், அனுக்ரஹிக்கப்பட்டு உம்முடைய பக்தனின் தாஸ உள்ளத்தைப் புரிந்து கொண்டு, மூலமந்திரங்களாகிற அஷ்டாக்ஷரம், ஷடாக்ஷரம், த்வாதசாக்ஷரம் த்வயம், ஷோடசாக்ஷரம் இத்யாதிகளை அனுசரித்துக் கொண்டிருக்கும் ஏகாந்த பக்தியுள்ளவர்களும் கைங்கர்ய பாக்யத்திற்காக பரிகிரஹம் செய்து கொள், என்று நமஸ்கரித்து, யாசித்து, ஆத்ம ஸமர்ப்பணம் செய்தவர்களாகிற என்னை, என் பரிவாரங்களுடன் ஸ்வீகரிக்க மாட்டீர்களா? ஸஞ்சீவினி போலவிருக்கும் ராமா சீதா, அதிப்ரேமையுடன் எங்களை வரவேற்க மாட்டாயா? ஸர்வம் நாராயணுய ஸமர்ப்பயாமி, என்று சொல்லும், கிருதாஞ்சலியுடன் இருக்கும் எங்களை கடாக்ஷிக்க மாட்டாயா? அத்யந்த ஸாத்வியின் வினயத்துட னிருக்கும் எங்களுடைய சேஷத்வத்தை ஸர்வதேச, ஸர்வ கால, ஸர்வாவஸ்தைகளிலும் மிச்சமில்லாமல் அங்கீகரிக்க,

மாட்டாயா? பஞ்ச சயனம் எனப்படும் அழகு, குளிர்ச்சி, மென்மை, பரிமளம், வெண்மை ஆகிய குணங்களுடன் சேர்ந்த மெத்தென்னவிருக்கும்படி துளிர், மலர், பஞ்சு மெல்லிய கம்பளம், பட்டு போன்றவைகள் தோற்கும்படியிருக்கும் நாகசயனத்தின் மேல் படுத்துறங்கும் வித்தா, ஸ்ரீ வத்ஸ மென்னும் மார்பா, மலர் மார்பா, ஸ்ரீயாசகிதம் இருக்கும் தத்வமே, உங்கள் கிருபையைச் சொல்லும்போது, "அவனைப் பெறுவதற்கு நானு நோம்பு நோற்பேன்? வேணுமாகில் அவன் தானே நோற்று வருகிறுன்," என்று சொல்லுமாப் போலே; கன்றுக்கிரங்கிச் செல்லும் தாய்ப் பசுவைப் போல, கதிருக்கு போஷிக்க மழை ஜலங்கள் ஆகாயத்திலிருந்து விழுவது போல, உமையைத் தேடிச் சிவபெருமானும் சென்றது போல, நீயல்லவோ இன்று பரதனைத் தேடிப் போகிற மாதிரி என்னிடமும் வரவேண்டும். ஹே அம்ருத ஸாகரா, என்னுடைய ஸர்வ அவயவங்களும் உங்களுடைய சுக ஸ்பர்சத்தினுல் சுபத்தை அடைய வேண்டும். லக்ஷமணு, நீயும் உறங்காது என்னிடம் வரவேண்டும்.]

என் பிரபு ரகுராய் அவர்களுடைய அதிசய ப்ரீதியைப் பார்த்தார், (இவர்கள் நம்முடைய நித்ய சூரிகள் அன்ருே? இவர்கள் நமது ஸம்பந்தத்தை ஒவ்வொரு பிறவியிலும் வேண்டுகிருர்கள். நமது உறவையும் அன்பினுல் செய்யப்படும் கர்மாக்களையும்; அந்தரங்க கைங்கர்யங்களையும், ஸமர்ப்பித்து, சதா அடிமை பாவத்துடனும் இவர்கள் இருப்பவர்கள் அன்ருே? அவாப்த ஸமஸ்த காமனுகிற நான் இடைச்சேரியில் பசு மேய்க்கப் பிறந்தது போல இந்த வானரங்களையும் நிறைவாளர்களாக பண்ணப்பிறந்த அவதாரம் ராம அவதாரமன்ருே; இவர்களுக்கு ஸாத்யோ பாயங்களை ஒழித்து; ஸித்த உபாயத்தை ஸ்பீகரிக்க வேண்டும்; நற்கருமம் இல்லை; அறிவு முதலிய யோக்யதையுமில்லை; மூலஸுக்தமான ராமகுண பூர்த்தியின் அனுஸந்தானமுமில்லை; ஸம்பந்த உணர்ச்சி யிருக்கிறது; என் கையாலே இவர்களால் செய்யப்பட்ட மஹா அபராதங்களுக்கும் க்ஷமை செய்ய வேண்டும்; உபாய பூதனுகிற என் பக்கலிலே உபேயத்தை அபேக்ஷிக் கையுமாகிற அந்த ஆறு அங்கங்களால் நான் இவர்களுக்கு அருள் புரிய வேண்டும். இரங்க

வேண்டும்; இவர்களை அங்கீகரித்தால் எனக்கு குறைவு ஒன்றும் யேற்படாது. நாராயணு என்னும் நாமத்தைச் சொல்லுபவர் களைப் போல, என் சிறுபெயரான ராமநாமத்தை அழைத் தனர்களே, பொருத்தருள வேணும் என்று பிருர்தித்தார்களே, நான் ஒன்றையும் எதிர்பாராமல் இருக்கும்போது, என்னை "இறைவா," என்று கூப்பிட்டார்களே, நாங்கள் அடிமை செய்வோம், என்று சொல்லி பலதடவைகள் எனக்கும் என் பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்தார்களே. இப்பேறபட்ட கைங்கர்யத்தில் பிராப்ய விரோதிக்கழிகை யாவதான மற்றை நங்காமங்கள் மாற்ருென்றிக்கை, இதர விஷய விருப்பங்களில் ஆசையைத் தவிர்த்து இருக்கிருர்களே, இவர்களைப் பரிக்ரஹம் செய்யாத போனுல் அனர்த்தம் நமக்கே, இவர்களுக்கு அல்ல என்று) குறைவு ஒன்றுமில்லாத சீதாராமன் நித்ய ஸுரிகளைப் போலவிருக்கும், அவர்களை ஸ்வீகரித்தார். (அப்பேறபட்ட லக்ஷ் மண ஜானகி ராமனுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்,) என் பிரபு கோசலராமன் அவர்களை புஷ்பக விமானத்தில் தன் னுடன் மெத்தென்ற பஞ்ச சயனத்தின் பக்கம் சேர்த்துக் கொண்டான். அவருடைய மனம், நாரதர், ப்ருகு போன்ற விப்ர சரணங்களில் ஈடுபாட்டை அடைந்திருந்தது. அவர்களைத் த்யானித்து நமஸ்கரித்துவிட்டு வடக்கு திசையாகிற குபேர னுடைய ஸர்வ மங்களதிக்கை நோக்கி என் பிரபு ஸ்ரீராமன், (பரதன், கௌஸல்யா, சுமித்திரா, கைகேயி இவர்கள் நினை வுடன்) அயோத்திக்குப் புறப்பட்டார். (774)

அவர்கள் ஏறிக்கொண்ட புஷ்பக விமானம் கோலாஹலத் துடன் புறப்பட்டது. குபேரனுடைய விமானம் நாளுவிதமான சௌகரியங்களுடன் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஜயரகுவீரா, ஜயசீதா, ஜய லக்ஷமணு, ஜய ஹனுமான், ஜய சுக்ரீவ, ஜய விபீஷண என்கிற மங்கள த்வனிகள் கேட்கப்பட்டன. அந்த புண்யமான விமானத்தில் அழகிய சிம்மாஸனம் ஒன்று மனோஹரமான அழகுடன் உச்சஸ்தானத்திலிருந்தது. என் பிரபு (வைகுண்டபதி, ஸ்வயாப்ரபயா, பிரகாசிக்கும் ரமாபதியான நாராயணர் ஸ்ரீ தேவியுடன் ஸமஸ்த பரிசரியர்களால் சூழப்பட்டு, பிரகா சிப்பது போல) சீதையுடன் ராமன் பிரகாசித்தார். (775)

(சேஷ போக சயனத்தில் வீற்றிருக்கும் மஹாலக்ஷ்மியுடன் கூடிய நாராயணன் எவ்விதம் விஷ்வக்ஸேன வைநதேயாதி களால் சேவிக்கப்பட்டு அதிகோமள ஹ்ருதயத்துடன் விளங்கு வாரோ, அதுபோல) என் பிரபு சீதாராமன் (ஸ்ரீமதே ராமாய நம: என்று சொல்லும்) நித்ய கிங்கரர்களான விபீஷண ஹனுமான் சுக்ரீவாதி பாரிஷதர்களால் சூழப்பட்டு லக்ஷ்மண னுடன் கூட பிரகாசித்தார். (அவருடைய ப்ரபுத்த முக்த அம்புஜ சாருலோசனங்கள், சுசியான கோமள கண்டம், ஜடாமுடி, அநேக தேவ புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட தேகம், ஆஜானுபாஹுக்கள், புண்டரீக ஸத்ருச சரணயு களங்கள், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத திவ்ய ஆனந்தங் களோடு அதி அத்புதமாக விளங்கின.) என் ராமன், என் தாய் சீதையுடன் பரம சோபிதமாக லக்ஷ்மணனுடன் கூட விளங்கினா. (அப்பேற்பட்ட ராம சீதா லக்ஷ்மணனை நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) அவர்களைப் பார்த் தால் மேரு பர்வதத்தின் கொடுமுடியில் ஸ்யாம நிறமுள்ள மேகம் மின்னலுடன் பிரகாசிப்பது போலிருந்தது. அந்த விமானம் வெகு வேகமாய் சென்று கொண்டிருந்தது. தேவதைகள் பாரிஜாத கல்பதரு புஷ்பங்களை அதி ஆனந்தத் தால் அவர்கள் மீது வர்ஷித்துக் கொண்டிருந்தார்கள். (776)

மந்த மாருதம் சீதளமாகவும், சுகந்தமாகவும் மெதுவாக வீசிக் கொண்டு, மூன்று வித தாபத்ரயங்களை அழித்துக் கொண்டு, இன்ப வெள்ளத்தை வீசிக் கொண்டிருந்தது. ஸாகரம், குளம், குட்டைகள், நதிகள் பூர்ணமாக வெள்ளப் பெருக்குகளுடன் காணப்பட்டன. நான்கு புறங்களிலும் மங்களமான சகுனங்கள் ஏற்படலாயின. மனம் யாவருக்கும் பிரஸன்னமாக விருந்தது. ஆகாயத்தில் பூர்ண சந்திரன் (மிருக சீரிஷ நக்ஷத்திரத்தில் இருப்பது போல) நிர்மலமாக விருந்தது. நான்கு திசைகளும் நிர்மலமாக விருந்தன. (777)

ரகுவீரன் தன் பத்னியாகிற சீதையை நோக்கிச் சொன்னார். "சீதே, ரணபூமியைப் பார். இந்த இடத்தில் லக்ஷ்மணன் இந்திரஜித்தைக் கொன்றான். (மேகநாதன்

என்கிற ராவணபுத்ரன் இந்திரனேயே வென்றவன்). இந்த இடத்தைப் பார். ஹனுமானும் அங்கதனும் சேர்ந்து கொன்ற ராக்ஷஸ வீரர்கள் கும்பல் கும்பலாக கிடக்கிறார்கள்." (778)

"இந்த இடத்தைப் பார். இந்த இடத்தில் கும்பகர்ணனும் ராவணனும் ஆகிற இரு சஹோதரர்களும் கொல்லப் பட்டார்கள். இவர்களால் தேவதைகளும் முனிவர்களும் மிகவும் ஹிம்சிக்கப்பட்டார்கள்." (779)

"இதோ பார். இவ்விடத்தில் உனக்காக ஸேதுவை அணை கட்டி, சுகத்தைத் தரும் என்னுடைய ஈஸ்வரரான பகவான் சிவபெருமானை லிங்கமாக ஸ்தாபித்தேன். இந்த விடத்திற்கு நாம் இருவரும் சென்று சேர்ந்து கிருபாநிதியாகிற சம்புவை, மஹாதேவரைப் பூஜிப்போம்" என்று சொல்லி பகவான் ராமச்சந்திரன் ஜானகியுடன் விமானத்திலிருந்து கீழே இறங்கி, ராமேஸ்வர லிங்கத்தை அர்ச்சித்துப் பூஜை செய்தார். (அப்பேற்பட்ட ராமலிங்கத்திற்கு நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செயகிறேன்.) (780)

[*தியானம்*

மஹாதேவா, ஸ்ரீ ராமேஸ்வரா, லிங்கமூர்த்தியே, ஸ்ரீ மதே ருத்ராய நம:, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீ மதே சிவாய நம:, வல்லபா வல்லபனாகிற மஹா கணபதிக்கும், மயில் வாகனனும் வள்ளி, தேவயானை நாயகனுமாகிற குஹனுக்கும் மாதா பிதாக்களான பத்ரமூர்த்தியே, கங்காதரா, அனந்தரே, உமா மஹேஸ்வரர்களே, உங்களுக்கும் உங்கள் பரிவாரங்களுக்கும், நந்தி பிரமத கணங்களுக்கும் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். சம்பு, சித்சபேசா, கபர்தின், நீலலோஹிதரே, புஜங்க பூஷணா, த்ரயி மூர்த்தியே, அகோர மூர்த்தியே, வ்ருஷபாருடரே, தில்லையம்பலமே, உமக்கு நமஸ்காரம். கைலாஸபதி, உமாபதி, நாதரூப சுந்தரி, ஸச்சிதானந்த விக்ரஹமே, மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹா சரஸ்வதி, என் சிவகாம சுந்தரி, உங்களுக்கும் உங்கள் பரிவாரங்களுக்கும் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறோம். காமாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி, ஸர்வஜன பிரியே, கமலாக்ஷி, நீதானே சுத்த வித்யை. ஹே சக்ரேஸ்வரி, நீதானே சதுர்

வித்யை, அன்னபூர்ணேஸ்வரி, நீங்கள் தானே ராம மந்திரத்தின் பிரபாவத்திஞல் புக்தி முக்தி பலத்தைக் கொடுக்கிறீர்கள்; பராசக்தியுடன் கூடிய பரமசிவ மூர்த்தியே, நீங்கள் தான் ஸ்ரீ சித் சபேஸ்வரஸ்வாமி, பிரம்ம விஷ்ணு பிரியர், திரிகுணங்கள், ஓங்காரம் எனப்படும் பிரணவம்; ஜடாதரா சாம்பசிவா, பிரபோ, சக்ரேஸ்வரர்களே, ஸாம்ப சதாசிவா, பரம புருஷார்த்தமாகிற ஸ்ரீ யப்பத்யின் பக்தியையும் ஸர்வ லோக சரண்யனுய், சரணுகத வத்ஸலனுய், பசுர் மனுஷ்ய இத்யாதிகளின்படி சீதாராம லக்ஷ்மண ஸம்பந்தத்தை எனக்கு ஸதா அருள வேண்டும். உங்களுடைய நிருபாதிக தாஸ்யத்திலே நித்ய புத்தியுடன் இருக்க ஸங்கல்பிக்க வேண்டும். ஸர்வ ஸ்வதந்திரனுனவனும், ஸர்வ ஸ்வாமியுமாகிற நீங்கள் சேஷ வ்ருத்தி விரோதி ஸ்வரூபம் அழியச் செய்ய வேண்டும். பரம பிராப்யமான உங்களுடைய கைங்கர்ய அனுவர்த்தி, மெய் நின்ற ஞானமும், பொல்லா வொழுக்க மழுக்குடம்பு மாவாது, என்கிறபடி ஸம்சார மூலமான பிராந்தி ஞானமும், அதனடியாக வந்த ரஜஸ்தமஸ் பிரகாரமான பிரகிருத் தோஷமும் இவை மற்றுமுள்ள ஹேயங்களுக்கு எல்லாம் உபலக்ஷணமாக விருக்கும் சந்தேகம்,ஸம்சயம் முதலியவைகளை அழித்து, அவாவறச் சூழ்ந்தாய் என்னும்படி நான் அவாவற்று வீடு பெருமளவும் எனக்கு மெய் நின்று கேட்டருள வேண்டும்; அபிமுகனுக விருக்க வேண்டும்; ஹே அந்தர்யாமியே, ஹ்ருஷிகேசா, என் அழுக்கு உடம்புக்குள்ளே வசிக்கும் எம்மானே, நீ தூங்காமல் விழித்திருந்து என் விரோத ஸ்வபாவங்களை அழித்து, மாறன் விண்ணப்பஞ் செயதபடி, பிறவி வேண்டாதபடி ஸ்வபிராப்தியை அடைவிக்கச் செய்ய வேண்டும். அவ்விதம் பிறவி எடுத்தால், உலகத்தார்களை வாழும்படியாகவும், உங்களுடைய ஸம்பந்தச் செல்வத்தைப் பெற்று இன்புற்று வாழ வேண்டும். உமா மஹேஸ்வரர்களே, தயை செய்ய வேண்டும். சித்சபேசா, கிருபை செய்.]

சீதையுடனும், லக்ஷ்மணனுடனும் வானர பிரமுகர்களுடனும், ஸ்ரீ புருஷோத்தம ராமன், என் பிரபு கிருபாஸிந்து, புஷ்பக விமானத்தில் சென்று கொண்டு, எங்கு எங்கு அவர்கள்

சிரம பரிகாரம் செய்வதற்குத் தங்கினுர்களோ, அந்த உத்தம ஸ்தானங்களிலுள்ள, விபவ அர்ச்சாவதார மகிமைகளை, பிரபு எல்லாவற்றையும் விஸ்தாரமாக சீதா பிராட்டிக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். [விருஷசைல நாதருடைய வாசஸ்தலத்தையும், சிதம்பரத்தையும், கோனேரி வாழ் வேங்கடமலையையும் என் பிரபு ஜானகிக்குக் காண்பித்துக் கொண்டு, அவைகளின் மஹாத்மியங்களையும், ரங்கதாம் என்று சொல்லப்படும் காவேரி ரங்கனுடைய மஹிமை பிரதாபங்களையும், வைகை நதியின் மேலிருக்கும் கல்யாண மீனுக்ஷிசுந்தரேஸ்வரருடையே மஹாத்மியங்களையும், திருமாலிருஞ் சோலைமலையின் அழகையும் ஒன்று விடாமல் சொல்லிக் கொண்டு வந்தார்.] (781)

புண்யமான புஷ்பக விமானம் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தது. வெகு சீக்கிரத்தில் அது தண்டகவனத்தை அடைந்தது. அந்த விடத்தில் அகஸ்திய மாமுனிவர் ஆவலுடன் முனி நாயகர்களுடன் வசித்துக் கொண்டிருந்தார். அவர்களை நமஸ்கரித்துவிட்டு, என்பிரபு சீதா நாயகன், மாதவராமன் ஒவ்வொரு இடமாகக் காண்பித்துக் கொண்டு வந்தார். (782)

ஒவ்வொரு இடத்திலும் மஹரிஷி பிரியனுன முனிராஜ வேஷதர ராமன் மஹாரிஷிகளை தரிசித்துக் கொண்டு, அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு சித்ரகூடத்திற்கு எழுந்தருளினுர். ஜகதீசனுன ராமன் அங்கு வசிக்கும் பாக்யமுள்ள ராமதாஸர்களை வணங்கிவிட்டு, [அவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட சந்தனம், புஷ்பம், ஆகாரம் முதலியவைகளை ஸ்வீகரித்துக்கொண்டு அவர்களையும் சந்தோஷப்படுத்தி,] வெகு சீக்கிரமாக அயோத்தியை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். (783)

அதன் பிறகு பிரபு ஜானகிக்கு கலியுகத்தின் கல்மஷங்களை நாசம்செய்யும் யமுனு நதி தீரத்தைக் காண்பித்தார். யமுனையில் ஸ்நானம், தர்பணம் செய்த ராம சீதா தம்பதிகள் மனத்தில் சந்தோஷத்தை அடைந்தார்கள். அதன் பிறகு அவர்கள் தேவ நதியான கங்கையை தரிசனம் செய்தார்கள். ஸ்ரீராமன் சீதையைப் பார்த்து, ''சீதே இந்த புனிதமான கங்கா தேவிக்கு நமஸ்காரம் செய்'', என்று ஆக்ஞைசெய்தார். அதன்படி சீதை கங்கா தேவியை நமஸ்கரித்து, தனது விரதத்தைப் பூர்த்தி பண்ணி,

புண்ணியவானைப் போல, அந்த உத்தம நதியை க்ருதக்ஞை யுடன் சந்தோஷிப் பித்தாள். [அப்பேற்பட்ட கங்காதேவியை நானும் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன். கிருதக்ஞை யுடன் வணங்கி ஆராதிக்கிறேன்.] (784)

அதன் பிறகு ராமலக்ஷ்மண சீதா வானர பிரமுகர் களுடன் "தீர்த்தராஜம்," என்று சொல்லப்படும் பிரயாகைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த உத்தம சங்கத்தைத் தரிசனம் செய்து, சாதாரண மானிடர்கள் கோடிக் கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட மஹாபாதகங்களை எவ்விதம் பிரயாகை தீர்த்தத்தின் தரிசனம், ஸ்நானம், ஆராத னம், தானம், விப்ரபோஜனம் இத்யாதிகளால் நாசம் செய்து சந் தோஷிப்பார்களோ, அதைப்போல மஹாசந்தோஷத்தை அடைந் தார்கள். சாதுக்களின் ஸங்கமத்தைச் சேர்ந்த அந்த திரி வேணி க்ஷேத்ரமானது பரம பாவனமாக விளங்கியது. அந்த க்ஷேத்ரத்தை தர்சனம்செய்து சோகங்களை ஒழித்து, பரம சந் துஷ்டியை அடைந்தார்கள். ஹரியினுடைய மெய்ப்பதம் எனப் படும் வைகுண்ட பதத்திற்கு ஏணியைப்போல விளங்கும் அத் யந்த பாவமைான திரிவேணியின் சங்கமதீர்த்ததில் ஸ்நானம் செய்து, பிரபு ராமசந்திரன் அயோத்யா புரியை ஸ்மரித்துக் கொண்டு, அதனுடைய பிரபாவங்களை ஜானகிக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். இவ்விதமாக மூன்று விதமான ஆதி ஆத் மிக, ஆதிதை விக, ஆதி பௌதிக தாபங்களை ஒழிக்கும் மகிமை களை வாய்ந்ததும், பவரோகம் எனப்படும் சம்சார சுழல்களில் விழுந்து நசித்துப் போகும் சேதனர்களைக் காப்பாற்றும் பிரபா வம் வாய்ந்ததுமான உத்தம அயோத்யா புரியைப் பிரபு ராமச் சந்திரன் சீதைக்கும் லக்ஷ்மணனுக்கும் காட்டினார். (785)

அந்த உத்தம க்ஷேத்ரமாகிற அயோத்தியைக் கண்டதும் கிருபாளு ராமசந்திரன் சீதை சகிதம், நமஸ்காரம் செய்தார். அவர்களுடைய புஷ்கராக்ஷங்களில் ஆனந்த புளகாங்கிதத் தினாலும், (பரத சத்ருக்ன, கௌசல்யா கைகேயி, சுமித்திரா ஸ்நேக லாபத்தினால் ஏற்படப் போகிற இன்பச் சேர்க்கையின் ஆனந்தங்களையும் ஸ்மரிக்கிறவர்களாக,) அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர்கள் அம்ருத தாரைகளாகப் பெருகி

வழிந்து கொண்டிருந்தன. அவர்களுடைய ஆனந்தம் அயோத்தியையும், சரயு நதியையும் நெருங்க நெருங்க அதிகரித்தது. அடிக்கடி அடிக்கடி மனம் விட்டுச் சொல்லும்படி அவர்கள் அதி ஆனந்தத்தை அடைந்தார்கள். (786).

அதன் பிறகு பிரபு ராமச்சந்திரன் திரிவேணிக்கு மீண்டும் எழுந்தருள, ஸங்கம தீர்த்தத்தில் ஜடாதரனை ராமன் சீதையுடனும், லக்ஷ்மணனுடனும் ஸ்நானம் செய்தார். அவர்களுடைய ஆனந்தம் பன்மடங்கு அதிகரித்தது. வானரர்களுடன் பிரபு பிராம்மணர்களை உபசரித்து அநேக வித தானங்களை அவர்களுக்குச் செய்தார். (787)

அதன் பிறகு பிரபு ஹனுமாரை அழைத்து வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தார். "நீ ஒரு பிரும்மசாரி வேஷத்தை அணிந்து கொண்டு, அயோத்யாபுரிக்குச் செல், பரதனுக்கு என்னுடைய க்ஷேம விலாசங்களைப்பற்றிச் சொல். அவனுடைய க்ஷேம விலாசங்களையும் அறிந்து கொண்டு வா." (788)

அதி சீக்கிரமே வாயு குமாரனை ஹனுமான்ஜி அயோத்திக்குச் சென்றார். அந்த சமயம் பிரபு பரத்வாஜருடைய ஆஸ்ரமத்திற்கு மீண்டும் எழுந்தருளினார். அநேக வித உபசார பூஜைகளை மஹா முனிவரான பரத்வாஜர் திவ்ய தம்பதிகளுக்குச் செய்தார். அவர் ஆதி நாராயண தம்பதிகளை விசேஷமாக அர்ச்சித்து ஸ்துதி செய்தார். (789)

பிரபு ராமன் சீதை லக்ஷ்மணனுடனும் கைகளை குவித்துக் கொண்டு, பரத்வாஜருடைய திவ்ய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார். அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு அவர்கள் மீண்டும் குஹப் பெருமான் வசிக்கும் இடத்தை வந்து அடைந்தார்கள். பெருமாள் வந்தார் (அத்திகிரி பெருமாள் வந்தார்) என்கிற சமாசாரத்தைக் கேட்ட குஹன் பரிவாரங்களுடன் ஓடி வந்தான். தன் சகாக்களை ஓடங்களைத் தயார் செய்வதற்காக "ஓடம் எங்கே? ஓடம் எங்கே?" என்று பல முறைகள் ஆக்ஞை செய்த வண்ணமிருந்தான். (அப்பேற்பட்ட கருணாமூர்த்தியான ராம லக்ஷ்மண சீதா மூர்த்திகளை குஹப் பெருமானை முன்

னிட்டு, நான் ஆயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேன்.) (790)

[தியானம்

ஹே ராமா சீதா, நாராயணு, மஹாலக்ஷ்மி, பிரபோ, லக்ஷ்மணுக்ராஜா, பரதாக்ராஜா, உங்களை சத்ருக்னனேயும், ஆண்டாள் போன்ற விரதம் கொண்ட பரதனையும் முன்னிட்டு நான் சரணமடைகிறேன். பரதா, கௌஸல்யா தேவியே, நீங்கள் என்ன விரதம் நோற்றீர்கள்? அதை எனக்குச் சொல்லக் கூடாதா? யஸ்த்வயாஸஹ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விஞ, உன்னுடன் கூடியிருந்தால் ஸ்வர்க்கம். உன்னை விட்டுப் பிரிந்திருந்தால் நரகம் என்று சொல்லி பிரஹ்லாத, தியாகராஜர் மாதிரி விருந்த சீதா ஆஞ்சநேய பக்தியை நான் எவ்விதம் வர்ணிப்பேன்? ராமானுபவம் நாராயணுனுபவம் என்கிற அம்ருத ஸாகரத்தில் மூழ்கின வைஷ்ணவ ஆழ்வார்களும், சொன்னுர்களே, அதுபோல தன் உடம்பை பரதனுக்கும் லக்ஷ்மணனுக்கும் சீதைக்கும் ஆஞ்ச நேயாதிகளுக்கும் தந்தால் எங்களுக்கு உன் பேச்சையாவது தரலாகாதோ? கந்தம் கமழும் குழலி, சீதையுடன் ராமன் சேர்ந்து பரிமளிக்கும் வாசனை எனக்கு தெரிகிறதே. பரசுராமனை வென்று, அவர்கைகளிலிருந்த வில்லை வாங்கி, அதன் பின்பு மணமாலையை ஜானகிக்கும் போட்ட ராமசந்திரமூர்த்தி, துளசிதாஸ பிரியா, திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்று பொய்கையாழ்வார் சொன்னது போல, காணக்காணெனை விரும்பும் கண்கள் என்று சொல்லும்படி ராமசந்திரனுடைய சீதா ஸம்பந் தத்தை, உங்களுடைய நாமங்களைச் சொல்லி, நாராயணு வென்று சொல்லும் என்னை அனுகிரஹக்கமாட்டீர்களா? தண்துழாய் மார்பா, கருமாமுகில் வண்ணு, கார்கடல் நீல வண்ணு, பரதன் ஞான யோக, நிஷ்டனுகவும் காலவிளம்பத் தினுல் பக்தி பிரபத்தி யோகத்தில் விஸ்வாஸம் கொண்டு, ராம பாதுகைகளின் ஸம்பந்தச் சேர்க்கையால் மனம் உறுதிபெற்று, கைங்கர்யங்களை எம்பெருமானுடைய உகப்பிற்காகவே செய்து, பதினுன்கு ஆண்டுகள் கழித்தானே, ஆச்சர்யம். நியம நிஷ்டை விரதம் கொண்ட ஆண்டாளைப் போல பரதனும் நியம

நிஷ்டை விரதங்களுடன் எம்பெருமானிடமுள்ள ப்ரீதியை வர்தித்தான். அதை உணர்ந்த ராமன், கல்யாண குண ஸம்பூர்ணன், அன்று தேர்த் தட்டில் நின்று அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் இருபத்து நான்கு தத்வங்களைக் காட்டிலும் பிரகிருதி பெரிது; பிரகிருதியை விட ஜீவாத்மா பெரிது; திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்து, சிறந்த வீடான மோக்ஷத்தைப் பெற்ற முக்தர்களைக் காட்டிலும் எட்டுச் சிறந்த குணங்களை உடைய நித்ய ஸூரிகள் பெரிது; அவர்களைக் காட்டிலும் பரமாத்மா எல்லாவற்றிலும் பெரிது என்று தானே தன்னைப் புற்றிச் சொன்னனே, அதுமாதிரி அல்லவா ஆஞ்சநேயர் பரதனிடம் ராம சீதா ஆக மனத்தையும், ராமனுடைய பரத்வத்தையும், சீதையினுடைய மஹத்வத்தையும் விளக்கிச் சொல்ல சொல்ல ஸ்ரீராமனால் அனுப்பப் பட்டாரோ? நுண்ணறிவுள்ள ஆஞ்சநேயர், கருடனைப்போல சீதாராம ஆகமனத்தை பரதனுக்குத் தெரிவித்தாரே, அந்த ஹனுமான் என்னிடம் துளசியைப் போல வரமாட்டாரா? நீர் அனுக்ரஹம் செய்தால்தான் ஸ்ரீராமனும் சீதையும் எனக்கு அனுக்ரஹம் செய்வார்கள். மஹா வீரா, சங்கட மோசன ஹனுமான், எனது வசனங்களைக் கேட்டு, ராம பாதங்களில் ஆசை வைத்த என்னிடம் ஓடி வாரும்.]

அவ்வளவு சொல்லித் தீர்க்கு முன்பே, புஷ்பக விமானம் கங்கையைத் தாண்டி குஹனிருக்கும் அக்கரைக்கு வந்து சேர்ந்தது. பிரபுவின் ஆக்ஞைப்படி எல்லோரும் கங்கைக் கரையில் வந்து தங்கினார்கள். அப்பொழுது சீதா தேவி கங்கா தேவிக்குப் பூஜை ஆராதனைகளைச் செய்தார்கள். தேவலோக நதியான கங்கைக்கு சீதை நமஸ்கரித்து, அவளுடைய சுபமான ஆசீர்வாதங்களைப் பெற்றாள். பரமசந்தோஷத்தை அடைந்தாள். (791)

கங்காதேவி மனத்தில் திருப்தி அடைந்தவளாக சீதைக்கு சுபமான ஆசீர்வாதங்களைச் செய்தாள். கங்கையும் சீதையும் சந்தோஷமடைந்தார்கள். (792)

கங்காதேவி உத்தமமான ஆசீர்வாதங்களை, மங்களா சாஸனமாக ராமசீதா தம்பதிகளுக்கு அளித்தாள். "ஹே சுந்தரி, உன்னுடைய மணவாழ்க்கை ராமனுடன் அகண்டமாகவும்

பிரிவின்றி பலகாலங்கள் நீடித்திருக்கவேண்டும். உங்கள் இருவர்களுடைய காடோப கூடமான சேர்க்கை உங்களுக்கும் எங்களுக்கும் மங்களங்களை பலகாலம் கொடுக்கட்டும்.'' என்று பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூராயிரம் பல்லாண்டு, (வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு என்று) பன்முறை மங்களா சாஸனம் செய்தாள். பெருமாள் பிராட்டி கங்கையில் இறங்கினதைக் கண்டு குஹன் வெகு வேகமாக ஓடிவந்தான். மஹா பிரேமையுடன் ஓடிவரும் குஹப்பெருமானைக் கண்ட சீதாராம் தம்பதிகள் பரம சந்தோஷத்தை அடைந்து, அவனை வாரி அணைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய சேர்க்கை ஆனந்தம் யாவருக்கும் பரிபூரணமாக விருந்தது. (793)

பிரபுவையும் ஜானகியையும் கண்ட குஹன் ஆனந்த அம்ருத சாகரத்தில் (பேயாழ்வாரைப் போல, மூழ்கின்றவனுக, தண்துழாய் மார்பனை என் பிரபு சீதாராமனை) அடிக்கடி தண்டனிட்டு, சுக்ருத பிரணுமங்களைச் செய்தான். அவனுடைய சரீரத்திலிருந்து, பரஞ்சோதியைக் கண்ட ஆனந்தப் பெருக்கு எடுத்து ஓடியது. (தனக்கு நிஜபக்தி தெரியவில்லை, என்று வாடி வதங்கி பரிதபிக்கும் தியாக ராஜாதிகளுக்கு வழிகாட்டியாக விருந்த குஹப்பெருமானுடைய பரம ப்ரீதியை,) என் பிரபு சீதாபதி ரகுராய் அதிக ஆனந்தப் பெருக்கால் அவனை இறுகக் கட்டித்தழுவி பன்முறை ஆனந்தமடைந்தார். (பரம பாபாத்மாவாகிற எனக்கு ஸ்ரீராமா, தியாகராஜ குஹ ஆஞ்சநேயாதிகளுக்குக் கிடைத்த பரம பாக்யம் கிடைக்குமா ?) (794)

[ தியானம்

ராமா, ஸுரபாலா, கஜராஜ ரக்ஷகா, உன்னை அனுபம குணம்புதி என்று தியாகராஜர் சொல்கிறரே. உன்னையே நம்பி ஜீவனம் நடத்தும் என்னை அரை நிமிஷமாவது வாரி அணைத்துக் கட்டிக் கொள்ளமாட்டாயா ? மஹீபதி, நான் உன்னை அடைவதற்கு யாரிடம் முறை செய்யவேண்டும் ? அதையாவது சொல். ஜனகரின் ஜாமாதாவே, உன் நாயகியின் தாயாரோ, பூம்ப்பிராட்டியோ நான் பூமியில் உன் பாதங்களை சரணமடைந்து கிடக்கும்போது, உன்னிடம் என்னைப்பற்றிச

சொல்லாமல் ஜடமாகவிருக்கிருளே. என்னிடமா, உங்கள் மாய ஜால லீலா வேடிக்கைகளேக் காட்டவேண்டும் ? நீ ஸகல லோக நாயகன், இவ்வளவு கபடத்துடன் இருக்கலாமா? ஸ்வப்பனத்திலும் நினேவிலும் கோசரமான திருஷ்டி பதத்திலும் இவ்வளவு கோபமா உன்னிடம்? ராஜ குலத்தில் உதித்த மஹா லக்ஷ்மியின் அம்சமான திரௌபதிக்கு கணக்கற்ற பட்டுப் பட வைகளேக் கொடுத்து அவளுடைய மானத்தை ராஜசபையில் காப்பாற்றிய கோவிந்தா, தியாகராஜ துளசிதாஸ, சியாமா சாஸ் திரி, தீக்ஷதர்களால் அச்யுத பதங்களே நாடிய சங்கீத மார்க்கத் தில் ஊர்ந்துவரும் நாதோபாஸகனுன என்னிடம் பரிவுகிடை யாதா? குஹப்பெருமானே, ஸ்கந்தனே நீதான் அப்பா சரணம்]

[ராம கிருபை என்னும் சரீர ஸ்பர்சம், ராமானுபவம், அது வும் ஜானகியுடன் காடோப கூடமாகச் சேர்ந்த ராமனுடைய நித்யானந்தம், ராஜாதி ராஜ ரகுகுல, தினமணி, என்று சொல் லும்படி, பட்டாபிஷேக ராமசந்திரன் ரமாதேவியுடன் கூடிய விஷ்ணு பகவான், எவ்வாறு உலகங்களே தர்ம சக்கிரத்துடன் நடத்துவாளுே, அதுபோல கிருபையுடன் ராஜ்ய பாரம் செலுத்தப் போகும்) தசரத மைந்தன் என் பிரபு ஸ்ரீ சீதாராமன் குஹனே அணேத்துக் கொண்டு தனது பக்கத்தில் உட்கார வைத்து அவனுடைய பூர்ண க்ஷேம விலாஸங்களே குறைவின்றி விசாரித்தான். பரம வினயத்துடன் குஹன், பகவான் பிராட்டி லக்ஷ்மணன் பக்கம் உட்கார்ந்து கொண்டு, ஸகல விருத்தாந்தங்களேயும் சொன்னுன். (அத்துடன் என் பிரபு கந்தன் உமையைப் புகழ் பெற்ற ஆனந்த கீர்த்தனம் செய்வது போல,) கங்கா புத்ரனுகிற குஹன் பிராட்டி பெருமானுடைய பதாப்ஜங்களேப் பிடித்துக்கொண்டு (ராம த்வய மந்திரத்தை அனுஷ்டித்துக் கொண்டு,) புகழ ஆரம்பித்தான். "பிரபோ, (நாராயணு, ரங்கேசா) தங்களே இன்று நான் மீண்டும் தரிசித்தேன். (ஆசார்யன் மூலமாக த்வயத்தை அடைந்து, நான் ஸ்வரூப லாபத்தை அடைந்தேன். என் பாவங்கள் கழிந்தன.) தங்களுடைய அனுத்தமமான பாத பங்கஜங்களின் சேர்க்கை ஸம்பந்தத்தைப் பெற்றேன். (புதிய சரீரம் எடுத்த வனேப் போல உங்களேச் சேர்ந்தவனுக ஆகிவிட்டேன். உங்களுடைய அபார தயவினுல் உண்டான ஞான

விகாஸத்தை அடைபவனுக, உங்களை அனுபவிப்பதே ஸர்வ போக்யம். த்வத் க்ருதே மாம் குருஷ்வ," "உங்கள் பொருட்டே தாஸனுகச் செய்து கொள்ள வேண்டும்," என்று வேதாந்த தேசிகர் ரங்கநாதனைப் பார்த்துச் சொன்னுரே, அதைப்போல, என் குஹப் பெருமான் சொல்ல ஆரம்பித்தான்.) "ஸ்வாமி, உங்கள் இருவர்களுடைய காடோப கூட மான சேர்க்கையாகிற தங்களுடைய பாதாப்ஜங்களை பிரும்மா சங்கரர் போன்று உத்தம பக்தர்கள் ஸதா விரும்பிய வண்ணம் இருக்கிருர்களே, அவைகளை நான் மீண்டும் இன்றும் தரிசனம் செய்கிறபடியால் சுக ஆனந்தங்களை மீண்டும் அடைந்தேன். சுந்தர, தசரத நந்தன, நான் இப்போது பிரும்மானந்தத்தை அடைகிறேன். பூர்ண காமரே, (காமேஸ்வரரே, போக ஸயனு,) நான் ஸந்ததமும் விரும்புவது இந்த ஆனந்தம்தான். (யோகினுதா, பாகவத ப்ரியா, உங்கள் கருணையினுல் ஸதா, ராம சீதா, உங்கள் ஸம்மதத்தின் பேரில், உங்களுடைய பதாப்ஜங்களை ஸந்ததமும் இடைவிடாது அடைந்து முறைப்படி பூஜிக்க வேண்டும். உங்கள் கருணையினுல் துஷ்டர்களின் சேர்க்கையின்றி காசிபதியான சங்கர பகவானுல் நிஜ பக்தியுடன் பூஜிக்கப்படும் உங்களுடைய சரண கமலங்களில் ஆசை வைத்து அர்ச்சிக்க வேண்டும். ரங்கேஸா, ஸ்ரீசா, உங்களையே ஒரு மதியுடன் ஒரு தெய்வமாகக் கொண்டு என் ஹ்ருதய கோசத்தில் அமரச் செய்து த்யாகராஜாதிகளைப் போல, ஏகம் பராயணம் என்று நம்பி, ஹ்ருதயார விந்தமுன நின்னுஞ்சி, தானே பிரும்மானந்த மனுபவிஞ்சி, என்று தியாகராஜர் சொன்னது போல, உங்கள் நினைவில் நான் பிரும்மானந்தத்தைப் பரிபூர்ணமாகப் பெற வேண்டும். பிரபு கல்யாணராமா, சீதாதேவி, கிருபை செய்ய வேண்டும். உங்களையே தோணியாக வைத்து, ஸுரவிருந்த பூஸுரர்கள் ஸர்வ சாஸ்திரங்களின் சாரம் என்று எவ்விதம் உங்களையே கருதுகிருர்களோ, அதைப்போல, ராமா, நானும் ஸம்சார தாபங்களை விலக்கி, உன் பலத்தினுல் நிஜ புருஷார்த்தத்தை அடைய வேண்டும்.) ஞானகிராமா, தசரத நந்தனு, ராமா, அடிக்கடி உங்களை நமஸகரிக்கிறேன்." (795)

இவ்விதம் சொல்லிக்கொண்டு, நமஸ்கரிக்கும் குஹனை

என் பிரபு, நீச ஜாதியில் பிறந்தவன், வேடன் என்றும் பாராமல் (அறிவொன்றுமில்லாத ஆய்ச்சிகளைப் கண்ணன் நேசித்தது போல) தன் சொந்தத் தம்பியான பரதனைப் போலவும், பாரபக்ஷமின்றி தன் ஹ்ருதயத்தோடு அணைத்துக் கொண்டு இன்புறுத்தினர். என் ஆசார்யரான துளசிதாஸர் சொல்லுகிருர், "நான் மதிமந்தம் உள்ளவன். ஸ்வாமி, உம்மிடம் மோஹ வசத்தால் ஆக்ரமிக்கப் பட்டவனுக விருக்கிறேன். என்னையும் என் பிரபு தன்னிடம் அழைத்து அணைத்துக் கொள்ள வேண்டும். ராவணன் போன்ற பிரபல சத்ருக்களைக் கொன்ற சரித்திரத்தை எழுதி, என்னையும் பரம பாவனமாக்கிக்கொண்டு, "ஸதா ஆசையுடன் ஸ்ரீசீதாராம பதங்களை ஆஸ்ரயிக்கிறவன்," என்று என்னை ஸ்வீகரிக்கவேண்டும். (இப்பேற்பட்ட புனிதமான ராவண வதம் முதலிய சரித்திரத்தை எழுதி, எனக்கு ராமசீதா பதாப்ஜங்கள் மீது ஆசையை வளர்த்த மஹா பிரபுவான துளசிதாஸருக்கு அநேக நமஸ்காரங்கள் செய்கிறேன்.) இந்த மஹா புண்யமான சரித்திரம் காமாதி தோஷங்களைப் போக்கி, மெய் அறிவாகிற நிஜராம சீதா பதத்தை அளிக்கிறது. தேவதைகளும் ஸித்தர்களும் முனிவர்களும் ஆனந்தத்துடன் இந்த பரம பாவனமான சரித்திரத்தைப் பாடி ஆனந்தக் கீர்த்தனம் செய்து கொண்டு, இன்பமாக ஸ்வரராக லய பாவத்துடன் காலத்தைக் கழிக்கிருர்கள். (796)

ராவண யுத்தத்தில் ராம விஜயம், சீதையின் விஜயமாகிற புண்ய சரித்திரத்தை எந்த உத்தம பாகவதர்கள் பக்தி சிரத்தையுடன் கேட்கிருர்களோ, கேட்பிக்கிருர்களோ, அவர்கள் பகவான் சீதா ராமசந்திரமூர்த்தியின் அருளினுல் நித்ய விஜயத்தையும், மெய் அறிவாகிற விவேகத்தையும் பகவத் விபூதி ஐஸ்வர்யங்களையும் சுலபமாக அடைகிருர்கள். (797)

இந்த மஹா உத்தமமான சரித்திரம் கலிகாலத்தின் கல்மஷங்களைப் போக்கி, சீதாராம பக்தியில் ஈடுபடச் செய்கிறது. ஹே மனஸே, நீ தீர ஆலோசனை செய். இது வரையிலும் நீ துர்விஷயங்களில் ஈடுபட்டு, (ராஜாதிராஜ, ராஜஈச, நிரஞ்சன, நிருபம, ராஜவதன தசரத பாலனுகிற)

ஸ்ரீ சீதாராமனை மறந்துவிட்டு, காலத்தைக் கழித்து விட்டாய். இந்தக் கலிகாலம் பாபங்களைக் கொண்ட பொக்கிஷம் என்று இன்னமும் நீ தெரிந்து கொள்ளவில்லை. (துளசிதாஸ தியாக ராஜாதிகளால் வணங்கப்பட்ட) ஸ்ரீ ரகுநாதனுடைய நாம ஜபத்தைத் தியாகம் செய்துவிட்டு, ஆதரவற்றவனாக, ஏன் வாழ விரும்புகிறாய்? ராமநாமமே, உனக்கு தாரகம் போஷகம் என்று தெரிந்துகொள். இதைத் தவிர சிறந்த மந்திரமோ, தந்திரமோ வேறு எது இருக்கக்கூடும்? (மனத்தை ஸ்வாதீனப் படுத்தி ராம நாமத்தை ஜபிப்பவன், தன்னையே தேகமாக நினைத்துக் கொள்ளாதவனாகி, ராமனையே ஸர்வமாக நினைத்து வாழ்பவன்; அவனை மாயைகளாகிற ஸம்சாரம் என்ன செய்யும்? அவனுக்கு ராம நாமமே கிரஹஸ்தாஸ்ரமம் போன்ற நான்கு வித ஆஸ்ரம தர்மங்கள் அல்லவா? அவனுக்கு ஸம்சார சுழல்களாகிற பிறப்பு இறப்பு என்கிற தொல்லைகள் ஏன் யேற்படும்? அவனுக்கு விஷய போகங்களில் இச்சை எவ்விதம் ஏற்படும்? கம்பன், துளசிதாஸ தியாகராஜாதிகளைப் போன்ற ராம பக்தர்களைக் கண்டும், கேட்டும், பல தடவைகள் அவர்களால் உபதேசிக்கப்பட்டும், ஹே கொடும் நெஞ்சமே, ஏன் ராமதாரக நாமாவை தெரிந்து கொள்ள மாட்டேன்கிறாய்? ராமா, ராமா, ராமா,) (798)

*மாஸ பாராயணம்—27வது நிறுத்தம்.*

*ஸ்ரீமத் ராம சரிதமானஸ்ஸில்*
*ஸகல கலிகாலத்து கல்மஷங்களைப் போக்கும்*
*ஆறுவது சோபானம் முற்றிற்று.*

*லங்கா காண்டம் முற்றிற்று.*

---

## பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 2 | 9 | மாங்திரம் | மாத்திரம் |
| 2 | 10 | ரகுவிரன் | ரகுவீரன் |
| 4 | 2 | சிவபாரவதி | சிவபார்வதி |
| ,, | 32 | நீரகுணர் | நிர்குணர் |
| 6 | 4 | அகளிகிறீர்கள் | அளிக்கிறீர்கள் |
| 13 | 32 | ஸபத | ஸப்த |
| do | do | அதரி | அத்ரி |
| do | 34 | அனுகாஹதகினுல் | அனுக்ரஹத்தினுல் |
| 14 | 22 | அளிப்பேன் (17) | அளிப்பேன்.'') (17) |
| 16 | 23 | உதவுபோ | உதவுமோ |
| 19 | 9 | மஹாகார்யம | மஹாகார்யம் |
| 21 | 11 | ஸவரூபம் | ஸ்வரூப |
| 23 | 12 | ஸதயத்தில் | ஸத்தியத்தில் |
| 28 | 31 | அவன் | அவள் |
| 31 | 7 | ரஹோபபேக்ஷாம் | ரக்ஷோபேக்ஷாம் |
| 32 | 26 | ஸாதுஹத் | ஸாதுஹ்ருத் |
| 32 | குறிப்பு | கேசவ | நாராயண |
| 35 | 12 | விபரங்களே | விவரங்களே |
| do | 15 | அவனிடமிருக்க | அவளிடமிருக்க |
| 38 | 18 | நாரதஸநநிதியில் | நாரதஸந்நிதியில் |
| 43 | 12 | ஐகய | ஐக்ய |
| do | 25 | தவய | த்வய |
| 47 | 15 | சரியவல | சரியல்ல |
| 49 | 19 | லக்ஷமி | லக்ஷ்மி |
| do | 20 | தரிககிருள் | தரிக்கிருள் |
| do | 30 | சாவிததிரி | சாவித்திரி |
| 51 | 4 | குணடலங்கள் | குண்டலங்கள் |
| 52 | 29 | அஜாகரதை | அஜாக்ரதை |
| 53 | 31 | ஏகமாகததான் | ஏகமாகத்தான் |
| do | do | இருக்கிறேன் | இருக்கிருன் |
| 54 | 22 | பார்க்கவில்லேயே | பார்க்கப்படவில்லேயே. |

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 63 | 34 | இலஙகைககுப் | இலங்கைக்குப் |
| 67 | 19 | புதரன் | புத்ரன் |
| 68 | 26 | அவா் | நஞ்சீயர் |
| 74 | 26 | சிநதித்து | சிந்தித்து |
| ,, | ,, | சிநதனேயிளுல் | சிந்தனேயிளுல் |
| ,, | 33 | உனககு | உனக்கு |
| 75 | 14 | கோபததுடன் | கோபத்துடன் |
| ,, | 24 | அப்பேறபட்ட | அப்பேற்பட்ட |
| ,, | 26 | பாகயம் | பாக்யம் |
| 75 | 5 | மறுக்கிருய் | மறுக்கிருய் ? |
| 78 | 8 | சுகரீவனேச | சுக்ரீவனேச் |
| 79 | 25 | குணங்களேயே | குணங்களேயே புகழ்ந்து |
| 81 | 7 | ஏழும் | எழும் |
| 81 | 21 | நலலி | நல்ல |
| 82 | 23 | விடுவித்தான் | விடுவித்தான்." (151) |
| 84 | 3 | ஓடத்தைச் ஒரு யானே | ஓடம், ஒரு யானேயை |
| 85 | 10 | ஹருநவேதியளுகச் | ஹருத்வேத்யளுகச் |
| ,, | 18 | வணங்கமுடியானே | வணங்காமுடியானே |
| 89 | 16 | விபிஷண | விபீஷண |
| ,, | 28 | சுர்க்க | கர்க்க |
| 94 | 11 | எனது | உனது |
| 95 | 19 | ஸ்தத : | ஸ்தித : |
| 96 | 5 | இருப்பிடமாகிஒன் | இருப்பிடமாகிருன் |
| 99 | 11 | சர்ம | கர்ம |
| 99 | 27 | பகவத | பகவத் |
| 100 | 23 | விரதமாக | பெரிதாகப் |
| 102 | 4 | ஆகிரறன் | ஆகிறேன் |
| 106 | 12 | போகிறது | போகிறது. |
| 107 | 19 | பழுத்தைப் | பழத்தைப் |
| 113 | 34 | சிம்மாஸததில் | சிம்மாஸனத்தில் |
| 116 | 1 | தபஸ்ஸூயம் | தபஸ்ஸூம் |
| 116 | 2 | ராஜஸ்ஸூம் | ராஜஸூயயாகம் |
| ,, | 20 | கொண்டு | கொண்ட |
| ,, | 24 | மநதோதரி | மந்தோதரி |
| ,, | 26 | சொன்ஞன | சொன்ஞள் |
| 117 | 15 | விட்டார்கன் | விட்டார்கள் |
| 120 | 18 | வக்ஷ்மி | லக்ஷ்மி |
| 121 | 20 | தணடம் | தண்டம் |

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 122 | 8 | ஸுவெலெ | ஸுவேலெ |
| 123 | 33 | delete புகழும் | --- |
| 124 | 8 | மணிமுகுடங்களை | மணிமுகுடங்களை |
| 129 | 25 | ஸ்வமாகிற | ஸ்வரூபமாகிற |
| 130 | 32 | சொல்லிக்தொண்டான் | சொல்லிக் கொண்டான் |
| 132 | 34 | அகுளும் | அருளும் |
| 133 | 1 | யரிகிரஹ | பரிக்ருஹ |
| 134 | 3 | கரபு | கரடி |
| ,, | 4 | வானத | வானர |
| ,, | 12 | தாங்கி | தாக்கி |
| ,, | 32 | துரத்திக் | துறத்திக் |
| 135 | 27 | பகதியில்லெ | பக்தியில்லெ. |
| 136 | 20 | அவடய | அவருடைய |
| 145 | 18 | இருககிருரோ | இருந்தாரோ, |
| 147 | 14 | வனேர | வானர |
| 148 | 1 | உணர்த்தியக் | உணர்த்திய |
| ,, | 11 | விஷபங்களையும் | விஷயங்களையும் |
| 149 | 3 | நாபாயணருடைய | நாராயணருடைய |
| 153 | 9 | இவன் | இவர் |
| 155 | 30 | முக்தூத்மாவாய் | முக்தாத்மாவாய் |
| 157 | 31 | பலமான் | பலமான |
| 164 | 13 | கஙஞ்சம் | நெஞ்சம் |
| 165 | 30 | மல | பல |
| 167 | 24 | தினஸ்திதியை | தீனஸ்திதியை |
| 168 | 18 | பிரதிபத்தி செய்து | பிரபத்திசெய்த |
| 169 | 17 | செய்யும் | செய்துவைக்கும் |
| 174 | 17 | வந்துக்கொண்டி | வந்து கொண்டிருந்தார். |
| 175 | 25 | அனுஸரணையாக | அனுசரணையாக |
| 178 | 34 | பணி | பனி |
| 181 | 14 | ஹருதயத்தில் | ஹ்ருதயத்தில் |
| 182 | 22 | விசஸித்து | விகஸித்து |
| 183 | 21 | வேண இம் | வேண்டும் |
| ,, | 27 | கொண்டான் | கொண்டார் |
| 187 | 33 | [அண்ணு | அண்ணு |
| 191 | 23 | பெருக்கும் | பெருகும் |
| 194 | 17 | விகனித்த | விகஸித்த |
| 195 | 16 | வாமாமா | வாமா |
| 199 | 30 | என்கிற | Delete |

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 211 | 15 | அப்கபாழுது | அப்பொழுது |
| 212 | 3 | முன் | முனி |
| 213 | 8 | திரோதாகைஸ்வரி | திரோதானகரீஸ்வரி |
| 213 | 27 | சுரத்ருத | கரத்ருத |
| 215 | 17 | உடையரும் | உடையவரும் |
| 216 | 34 | ஸாக்ஷினியாகிற | ஸாக்ஷிணியாகிற |
| 217 | 12 | சோபதமாக | சோபிதமாக |
| 219 | 26 | விஸ்வாசமும் | விஸ்வாஸமும் |
| 256 | 9 | சைகளில் | கைகளில் |
| ,, | 24 | விழுந்தனர் | விழுந்தன. |
| 257 | 31 | செய்ய | செய்யப் |
| 262 | 6 | பரம் | பரம |
| 267 | 3 | நமஸ்கர்க்கிறேன் | நமஸ்கரிக்கிறேன்.) |
| 271 | 23 | விசாலகான | விசாலமான |
| 272 | 1 | ஜகத்பரியனுக | ஜகத்ப்ரியனுக |
| 277 | 7 | ஆருத | ஆராத |
| 278 | 22 | துறைகளைப் | நுரைகளைப் |
| 280 | 18 | அநேகப் | அநேகம் |
| 283 | 22 | இக்ஷிவாகு | இக்ஷ்வாகு |
| 284 | 17 | ரு | delete |
| ,, | 20 | இக்ஷவாகு | இக்ஷ்வாகு |
| 285 | 9 | விரும்புகிருய் | விரும்புகிருயா? |
| 285 | 22 | ரு | delete |
| 288 | 8 | அவர்கனையும் | அவர்களையும் |
| 289 | 13 | சாஹியை | காக்ஷியை |
| 291 | 7 | நிஷித்தந்தாலும் | நிஷித்தத்தாலும் |
| ,, | 22 | அவஹரிக்கையும் | அபஹரிக்கையும் |
| ,, | 34 | மென்மேலும் | மேன்மேலும் |
| 292 | 3 | ,, | ,, |
| ,, | 14 | ரங்கபத்தி | ரங்கபதி |
| 295 | 9 | களைபும | களையும் |
| 295 | 32 | செய்ய | அடைய |
| 297 | 4 | பகிலாக | பதிலாக |
| ,, | 29 | அடைய வேண்டும், | அடைய வேண்டும் |
| 300 | 6 | ஏழும்பி | எழும்பி |
| 302 | 18 | கால்தண்டத்தை | காலதண்டத்தை |
| 304 | 16 | லீலேகனேச் | லீலேகளைச் |
| ,, | 28 | விருப்பவனே | விருப்பவளே |

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 308 | 10 | விருத்தி தெவியே, | விருத்திதேவியே. |
| ,, | 23 | ம்ானினி | மானினி |
| 310 | 12 | பர்வாராய | பரிவாராய |
| 314 | 4 | பிரபத்யோ | பிரபத்யே |
| 315 | 24 | ஈதத | ஈத்த |
| 316 | 18 | ஸங்கல்பம் | ஸங்கல்பம் வேறுபடும் |
| 322 | 22 | கூப்பி | கூப்பிக் |
| 326 | 6 | கொடுக்க | கொடுக்கத் |
| 334 | 13 | பிரியா வடையாக | பிரியாவிடையாக |
| 335 | 19 | ஜாதாவெதோ | ஜாதவேதோ |
| ,, | 29 | சூழ்ந்துக் | சூழ்ந்து |
| 337 | 15 | அல்லவே | அல்லவோ |
| 339 | 8 | பரிவதங்களைப் | பர்வதங்களைப் |
| ,, | 12 | யுத்தத்திற்கு | யுத்தத்திற்குச் |
| 347 | 7 | விழுமபோது | விழும்போது |
| ,, | 19 | களுக்ளு | களுக்கு |
| 350 | 21 | தர்மங்களாலும் | தர்மங்களிலும் |
| 352 | 1 | ஸதானம் | ஸ்தானம் |
| 353 | 10 | அவயயரே | அவ்யயரே |
| 354 | 7 | ஸீரக்தத்தில் | ஸூக்தத்தில் |
| ,, | 24 | விற்றவர்களுமான | விட்டவர்களான |
| 355 | 33 | அன்றோ | இன்றோ |
| 357 | 5 | புஷிகராக்ஷங்கள் | புஷ்கராக்ஷங்கள் |
| 357 | 15 | ளாமல் | ளாமல் |
| 369 | 5 | ஆராதிக்கிறேன் | ஆராதிக்கிறேன்) |
| 372 | 13 | பாரதநிதிரயம் | பாரதந்திரியம் |
| 373 | 30 | உபசாரத்திற்கு | உபகாரத்திற்கு |
| 375 | 3 | ஸ்ரீ ராம ரந்திரனுடைய | ஸ்ரீ ராமசந்திரனுடைய |
| 377 | 15 | சீதைக்கும் | சீதைக்கு |
| 380 | 20 | பெற்றி | பெற்ற |
| 381 | 15 | ஸ்ரீ விபத்வமும் | ஸ்ரீ விபவத்மும் |
| ,, | 19 | நின்றான் | நின்றாள் |
| ,, | 30 | வாசனங்களை | வசனங்களை |
| 385 | 10 | புருஷஸூகத் | புருஷஸூக்த |
| 386 | 1 | { தேவதைகளின் ஸ்துதியில் தளாள | தயாள } |
| 386 | 15 | அனுஸநிதித்துக் | அனுஸந்தித்துக் |
| 389 | 12 | உளளன | உள்ள |

| பக்கம் | வரி | For | Read |
|---|---|---|---|
| 389 | 13 | னரவதன் | ரைவதன் |
| 396 | 3 | கந்தனங்கள் | கந்தங்கள் |
| 396 | 15 | அககிசனர் | அகிஞ்சனர் |
| 400 | 30 | ''ஞானக் கடல் | ஞானககடல் |
| 403 | 16 | நீரோ | நீரே. |
| ,, | 11 | வேண்டும். | வேண்டும் |
| 406 | 12 | புலகாங்கித | புளகாங்கித |
| 417 | 27 | எங்களை | எங்களைக் |
| 419 | 18 | லக்ஷ்மணனை | லக்ஷ்மணனே |
| 420 | 3 | ரபாநிவாஸா | ரமாநிவாஸா |
| 421 | 23 | க்ரோதா | delete |
| 426 | 12 | பிரபோ | பிரபோ,] |
| 427 | 26 | வராகம் | வராகப் |
| 428 | 7 | பஞ்சராத்திர | பாஞ்சராத்திர |
| 431 | 25 | மதேசானுபவ : | மதேகானுபவ : |
| 431 | 26 | எங்கள் | எங்களுக்கு |
| ,, | 27 | பரமபக்திக்கு | பரமபக்தி |
| 435 | 16 | ஆஸ்திகர்களின் | ஆஸ்ரிதர்களின் |
| ,, | 20 | சேதனனே | சேதனனே, |
| 439 | 11 | மஹிருஷிகள் | மஹிஷிகள் |
| 447 | 2 | புத்தி | புததி |
| ,, | 17 | பிரகிருத் | பிரகிருதி |
| 448 | 19 | மஹாரிஷிகளை | மஹரிஷிகளை |
| ,, | 31 | கங்கையை | கங்கையைத் |
| 453 | 21 | அவனே | அவனே |
| ,, | 31 | பூம்பிராட்டி | பூமிப்பிராட்டி |